மேவருலா

கலாக்ஷேத்திரம்

அடையாறு

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலைய வெளியீடு-6

கவிச் சக்கரவர்த்தியான ஒட்டக்கூத்தர்

இயற்றிய

மூவருலா

பழைய வுரை குறிப்புரைகளுடன்

அத்யக்ஷர் :

ஸ்ரீமதி ருக்மிணிதேவி அவர்களால்

பதிப்பிக்கப் பெற்றது

நந்தன ஹு கார்த்திகை மீ

அடையாறு 1952 சென்னை-20

இரண்டாம் பதிப்பு—1952.

(உரிமை பதிவு)

THE MADURA TAMIL SANGAM

விலை ரூ. 4-0-0

ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்), 65, திருப்பள்ளித் தெரு, சென்னை-1.

பொருளடக்கம்

1. இந்நூலின் உரையில் எடுத்தாண்டுள்ள நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப் பகராதி ... iv

2. பிழையும் திருத்தமும் ... vi

3. இரண்டாம் பதிப்பின் முகவுரை ... vii

4. முதற்பதிப்பின் முகவுரை ... ix

5. நூலாசிரியர் : ஒட்டக்கூத்தர் வரலாறு ... xvi

6. பாட்டுடைத் தலைவர்களின் வரலாறு ... xxiii

7. விக்கிரம சோழனுலா மூலமும் குறிப்புரையும் ... 1-80

8. குலோத்துங்க சோழனுலா மூலமும் பழைய வுரையும், குறிப்புரையும் ... 81-206

9. இராசராச சோழனுலா மூலமும் குறிப்புரையும் ... 207-294

10. அரும்பத முதலியவற்றின் அகராதி ... 295-330

இந்நூலின் உரையில் எடுத்தாண்டுள்ள நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப் பகராதி

அகநா - அகநானூறு
அடிக் - அடிக்குறிப்பு
அடியார் - அடியார்க்கு நல்லார்
அரும்பத - அரும்பதவுரை
அழகர் கிள்ளை - அழகர் கிள்ளை விடுதூது
இராசராச - இராசராச சோழனுலா
இ - வி - இலக்கண விளக்கம்
இறை - இறையனு ரகப்பொருள்
ஈட்டி - ஈட்டி யெழுபது
உத்தர - இராமாயணம். உத்தர காண்டம்.
ஐங் - ஐங்குறுநூறு
கந்த - கந்தபுராணம்
கம்ப - கம்பராமாயணம்
கலி - கலித்தொகை
கலிங்கத் - கலிங்கத்துப் பரணி
களவியற் - களவியற்காரிகை
காஞ்சிப் - காஞ்சிப் புராணம்
குமர - குமர குருபரசுவாமிகள் பிரபந்தங்கள்
கு - ரை - குறிப்புரை
குலோத். உலா - குலோத்துங்க சோழன் உலா
குறிப் - குறிப்பு
குறுந் - குறுந்தொகை
சங்கர - சங்கர சோழனுலா
சிலப் - சிலப்பதிகாரம்
சிற் - திருச்சிற்றம்பலக் கோவை
சிறுபாண் - சிறுபாணாற்றுப் படை
சீவக - சீவக சிந்தாமணி
சுந்தர - சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்
சூடா - சூடாமணி நிகண்டு
சூளா - சூளாமணி
சோழ - சோழமண்டல சதகம்

தக்க - தக்கயாகப் பரணி
தஞ்சை - தஞ்சை வாணன் கோவை
தண்டி - தண்டியலங்காரம்
தமிழ்நா - தமிழ் நாவலர் சரிதை
தமிழ்விடு - தமிழ்விடுதூது
திருக்காளத்திப் - திருக்காளத்திப் புராணம்
திருக்குற்றுலப் - திருக்குற்றுலப் புராணம்
திருநா - திருநாவுக்கரசு நாயனுர் தேவாரம்
திவ் - நாலாயிர திவ்யப் பிரபந்தம்
திருவா - திருவாசகம்
திருவாய் - திருவாய்மொழி
தே - தேவாரம்
தொண்டை - தொண்டைமண்டல சதகம்
தொல் - தொல்காப்பியம்
ந - நச்சிணுர்க்கினியம், நச்சிணுர்க்கினியர்
நம்பி - நாற்கவிராச நம்பி அகப்பொருள்
நள - நளவெண்பா
நற் - நற்றிணை
நன் - நன்னூல்
நாலடி - நாலடியார்
நீதிநெறி - நீதிநெறி விளக்கம்
நெடுநல் - நெடுநல் வாடை
நைடத - நைடதம்
பட்டினப் - பட்டினப்பாலை
பதிற் - பதிற்றுப்பத்து
பரி - பரிபாடல்
பரிமேல் - பரிமேலழகர்
ப - ரை - பழையவுரை
பி - ம் - பிரதிபேதம்
பிரபு - பிரபுலிங்க லீலை
புறநா - புறநானூறு
பு. வெ - புறப்பொருள் வெண்பாமாலை
பெரிய - பெரிய புராணம்
பெரியதிரு - பெரிய திருமொழி

பெரியாழ் - பெரியாழ்வார் திருமொழி
பெருங் - பெருங்கதை
பெருந் - பெருந்தொகை
பேர் - பேராசிரியர்
பொருந - பொருந ராற்றுப்படை
மணி - மணிமேகலை
மதுரைக் - மதுரைக் காஞ்சி
மதுரைக்கலம் - மதுரைக் கலம்பகம்
மயிலை - மயிலைநாத ருரை
முத் - முத்தொள்ளாயிரம்
முதற்றிருவந் - முதற் றிருவந்தாதி
முருகு - திருமுரு காற்றுப்படை
மேற் - மேற்கோள்
விக்கிரம - விக்கிரம சோழனுலா
வி - பா - வில்லிபுத்தூ ராழ்வார் பாரதம்
S. I. I. - South Indian Inscriptions

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
80	81	திருமாலோ	திருமாலே
85	30	தொடிதோட்	தொடித்தோட்
148	2	யரவையும்	யாவையும்
169	30	பாலாதாப	பாலாதப
190	3	எனினுஒன்றும்	எனினும் ஒன்றும்
207	7	புறந்தோன்	புரந்தோன்
242	8	சிறிசோறுஞ்	சிறுசோறுஞ்

உ

கணபதி துணை

இரண்டாம் பதிப்பின் முகவுரை

இந்நூலின் முதற் பதிப்பு, பழையவுரை, குறிப்புரை விசேடக் குறிப்பு, பாடபேதங்கள், அரும்பத முதலியவற்றின் அகராதி முதலியவற்றுடன் 1946-ஆம் ஆண்டு ஸ்ரீ. S. கலியாண சுந்தர ஐயரவர்களால் இந்நூல் நிலைய 6-வது வெளியீடாகப் பதிப்பிக்கப் பெற்றது.

இப்பதிப்பு, சிலாசாஸன ஆராய்ச்சி வாயிலாகக் கிடைத்த மற்றும் பல சரித்திரக் குறிப்புக்கள், பிறகுறிப்புக்கள், விரிவான அரும்பத முதலியவற்றின் அகராதி முதலியன சேர்க்கப் பெற்றும், சில அவசியமான பாடபேதங்களும் திருத்தங்களும் அமையப் பெற்றும் உள்ளது.

சோழவமிச சரித்திர ஆராய்ச்சி வல்லுநரும், சிலாசாஸனங்களை ஆராய்வதில் மிகுந்த தேர்ச்சி பெற்றவரும், இந்நூல் நிலையப் பதிப்பாசிரியருமான ஸ்ரீ. L. ஸ்ரீநிவாஸ ஐயரவர்கள் இதனைப்பதிப்பித்துள்ளார்கள். இந்நூல் நிலையத்துப் பண்டிதர் வியாகரண சிரோமணி, ஸ்ரீ. தி. இராமானுஜம் ஐயங்கார் அவர்கள் வழக்கம் போலவே மிகுந்த விருப்பத்துடனும் ஊக்கத்துடனும் இதன் பதிப்பாசிரியருக்கு உடனிருந்து உழைத்து உதவி வந்தார்கள். இவர்கள் இருவர்களுடைய அன்புகலந்த உழைப்புக்கு இந்நூல்நிலையம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தேசபாஷைகளின் தலைமை ஆசிரியர் ஸ்ரீ. வி. மு. சுப்பிரமணிய ஐயர். M.A. அவர்கள் முற்பதிப்பிற்கு உதவியது போலவே இதற்கும் தமது பல வேலைகளுக்கிடையே விருப்புடன் ஒப்புநோக்கித் திருத்தங்

களைச் செய்து உதவினார்கள். அன்னார்க்கு இந்நூல்நிலையத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பதிப்பு வேலையை விரைவாகவும் திருத்தமாகவும் செய்துதந்த சென்னை, இரத்தினம் (பிராஞ்சு) அச்சுக்கூடத்தார்க்கும் என் நன்றி உரித்தாகுக.

அடையாறு
15—11—52

ரா. விசுவநாதன்
கௌரவ அமைச்சர்

உ

கணபதி துணை

முகவுரை

சடைகெழு மகுடந் தண்ணிலா விரிய
வெண்ணிலா விரிதரு தரளக்
குடைநிழல் விடைமேற் கொண்டுலாப் போதும்
குறிப்பெனே கோங்கிண ரனைய
குடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந்
துக்கசெஞ் சுடர்ப்படு குவையோங்
கிடைகெழு மாடத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

(கருவூர்த் தேவர் திருவிசைப்பா)

உலாவென்பது தமிழ் மொழிக்குரிய பலவகைப் பிரபந்தங்களுள் ஒன்று; பாட்டுடைத் தலைவன் உலாவருதலைச் சிறப்பித்துப் பாடப்படுதலின் இஃது இப்பெயர் பெற்றது; உலா - பவனி. இந்தப் பிரபந்தம் உலாப் புறமெனவும் வழங்கும். இது கலிவெண்பாவால் இயற்றப்படும்; தலைவன் வீதியிற் பவனி வருகையில் அவ்வீதியிலுள்ள பேதை முதற் பேரிளம் பெண் ஈறான ஏழு பருவப் பொதுமகளிரும் அவனைக் கண்டு காமுற்றதாகப் பாடப்படுவது.

காப்பியங்களில் அவற்றின் தலைவர்கள் உலாவரும் காட்சிகளைப் புனைந்து அமைத்தல் கவிமரபு. முடி புனைந்தும், மணம் புரிந்தும், வெற்றி பெற்றும் அத் தலைவர்கள் உலாவரும் செய்தியைப் பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய தமிழ்க் காவியங்கள் அழகு பெறக் கூறுகின்றன. தலைவன் உலா வருவதாகக் காப்பியங்களிற் சுருக்கமாக அமைக்கப்படும் செய்தியையே பொருளாகக் கொண்டு விரிவுபெற அமைந்த பிரபந்தமே உலாவாகும். தலைவன் பெயர் கூறப் படுதலாலும் அவனைக் கண்டு மகளிர் மாத்திரம் காதல் கூர்ந்த செய்தியை உரைப்பதாலும் இது புறப்பொருளைச் சார்ந்த பெண்பாற் கைக்கிளையுள் அடங்கும்; பாடாண்திணைக் குரியது

மாம்; இதற்கு ஆதாரம், "ஊரொடு தோற்றமு முரித்தென் மொழிப" (தொல். புறத். 30) என்பது குலோத்துங்க சோழனுலா உரையாசிரியர் கருத்து.

தத்தம் புலமைத்திறத்துக்கு ஏற்றபடி கருத்துக்களைத் தொடர்பு பெற அமைத்து விரித்துத் தாம் வழிபடும் தெய்வங்கள்மீதும், தம் ஆசிரியர்மீதும், தம்மை ஆதரித்த உபகாரிகள் மீதும் பல புலவர்கள் உலாக்களைப் பாடியிருக்கின்றனர். சேரமான்பெருமாள் நாயனர் இயற்றிய ஆதியுலாவும், தத்துவராயரால் இயற்றப்பட்ட ஞான விநோதனுலாவும், ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்ட மூவருலாவும் இம்மூன்று வகைக்கும் முறையே உதாரணங்களாக விளங்குவன.

தலைவர்கள் தத்தமக்குரிய ஊர்திகளில் பவனி வந்ததாகக் கூறுதல் பண்டை மரபென்பதை ஆதியுலா முதலியவற்றிற் காணலாம். ஸ்தல சம்பந்தமான உலாக்களில் பெரும்பாலன தலைவர்கள் திருத்தேரில் உலாவந்ததாகவும் ஒரே நாளில் ஏழு பருவமகளிரும் தரிசித்ததாகவும் கூறுகின்றன. ஏழு பருவ மகளிருக்கேற்ப ஏழு நாட்களில் தலைவர் ஏழுவகை வாகனங்களில் வந்ததாகச் சொக்கநாதருலா உரைக்கின்றது. தலைவர் பட்டத்து யானையிற் பவனி வந்ததாக மூவருலா கூறுகின்றது.

பாட்டுடைத் தலைவருடைய பெருமை, நீராடுதல், அப்பால் தத்தமக்குரிய ஊர்திகளிற் செல்லுதல், உடன்வருவோர், பலவகை மகளிர் குழாங்கள் அவரைத் தரிசிக்கக் காத்திருந்து பின் தரிசனம் செய்து காமுறுதல் ஆகிய இச் செய்திகள் உலாவின் முற்பகுதியாக அமையும். அதன்பின் முறையே பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் ஏழுபருவ மகளிரின் இயல்புகளும் விளையாட்டுக்களும், அவர்கள் தலைவரைத் தரிசித்தலும் அதனால் உண்டான விளைவுகளும் கூறப்படும்.

இந்த அமைப்பு எல்லா உலாக்களுக்கும் பொதுவாயினும் அவ்வந்நூலாசிரியருக்கே உரிய நடையின் அமைப்பிலும் காலப்போக்கில் உண்டான கருத்துக்களிலும் வேறுபாட்டைக்

காணலாம். இவ்வேறுபாட்டு நலமே எத்தனை உலாக்களைப் படித்தாலும் சலிப்பு உண்டாகாமைக்குக் காரணமாகின்றது.

தனித்தனியே உள்ள பல்வேறுபட்ட பொருள்களை யுடைய செய்யுட்களாலாகிய தொகுதிபோலன்றித் தொடர்ந்த பொருளுடையதாய் ஒரே நெடும்பாட்டால் இயலுதலின் இதனைத் தொடர்நிலைச் செய்யுளுள் ஒன்றாகவே கருதல் தகும். சிறுகாப்பிய வரிசையில் வைத்து எண்ணுதற்கு ஏற்ற தகுதிகளும் இதன்பால் உள்ளன.

புற நிகழ்ச்சிகளை வருணித்தலைக் காட்டிலும் அகத்து நிகழ்ச்சியாகிய காமவுணர்ச்சியை வருணித்தல் அரிது; ஆதலின், "பேசு முலாவிற் பெதும்பை புலி" என்று ஒரு தனிப் பாடல் கூறும்.

மூவருலாவாகிய இது கவிச் சக்கரவர்த்தியாகிய ஒட்டக் கூத்தரென்னும் புலவர் பெருமானால் விக்கிரம சோழன் மீதும், அவன் மகனாகிய இரண்டாங் குலோத்துங்க சோழன்மீதும், அவன் மகனான இரண்டாம் இராசராச சோழன்மீதும், தனித்தனியே இயற் றப்பட்ட மூன்று உலாக்கள் அடங்கியது. இம்மூன்று உலாக் களும் முறையே 342, 387, 391 கண்ணிகளையுடையன, கலி வெண்பாவில் ஒரெதுகை அமைந்த இரண்டடிகளைக் கண்ணி யென்றல் மரபு; இது, "முன்னா யகரிலவன் மூதுலாக் கண்ணி தொறும், பொன்னா யிரஞ்சொரிந்த பூபதியும்" (சங்கர சோழ னுலா) என்னும் கண்ணியால் அறியப்படும். ஒவ்வொரு நூலின் இறுதியிலும் ஒவ்வொரு வெண்பா அமைந்துள்ளது; குலோத் துங்க சோழ னுலாவில்மட்டும் ஒரு கட்டளைக் கலித்துறையும் சேர்ந்துள்ளது.

இவ்வுலாக்களில் சோழர்களுடைய குலத்தொன்மை, தலை வர்பெருமை, பள்ளியெழுதல், நீராடி அலங்காரம் செய்து கொள்ளல், பட்டத்து யானையின்மீது அமர்தல், உடன் வரு வோர், குழாங்கள், அவர்கள் கூற்று என்பன முதலிலும், ஏழு பருவ மகளிருடைய உணர்ச்சிகளும், செயல்களும், விளையாட் டுக்களும் தலைவர்களைக் கண்டு காமுற்றதும், அவர்கள் அருள்

செய்ததும் ஆகிய இந்நிகழ்ச்சிகள் பின்பும் கூறப்படுகின்றன. தலைவன் உருவத்தைக் கிழியில் வரைதல், பந்து அம்மானை ஆடல், விறலி தலைவன் பெருமையைப் பாடுதல், மதுவை அருந்துதல், தலைவன் நிறத்துக்கு ஏற்ப உடுத்தல், பூணல், பூக் கொய்தல், நீராடல், கழங்காடல், சிற்றில் இழைத்தல் முதலிய விளையாட்டுக்கள் ஆகிய இவ்ற்றைக் காணலாம்.

குலோத்துங்க சோழனுலாவிற்கு மட்டும் பழைய உரை யொன்று உள்ளது; அது பதவுரையும் விசேடவுரையுமாக அமைந்துள்ளது; உலாவிற்குரிய இலக்கண அமைதியை நன்கு விளக்குவது; புறப்பொருள் வெண்பா மாலையுட் கூறப்படும் பெண்பாற்கைக்கிளைத் துறைகளுள் இன்னது இன்னபருவத் திற்குரியதென்று தெள்ளிதின் விளக்குவது; தொல்காப்பியம், பரிபாடல், பெருங்கதை முதலிய நூல்களிலிருந்து இவ்வுரை யாசிரியர் மேற்கோள்கள் காட்டியுள்ளார். இவர் தக்கயாகப் பரணியுரை யாசிரியரோ அவரைப் போன்ற வேறொருவரோ என்பது விளங்கவில்லை; இவர் பெயரும் தெரியவில்லை. குலோத்துங்க சோழனுலாவுக்கு எழுதிய உரையின் குறிப் பால் இவர் ஏனையிரண்டு உலாக்களுக்கும் உரையியற்றி யிருக்கலாமென்று எண்ண இடமுண்டாகின்றது.

மூன்று உலாக்களிலு முள்ள சரித்திரக் கூறுபாடுகளை நன் ருகத் தெரிந்து குறிப்பு எழுதுவதற்கு உதவியாக இருந்தது, சென்னைச் சர்வ கலாசாலை இந்திய சரித்திரப் பேராசிரியராகிய ஸ்ரீமான். க. அ. நீலகண்ட சாஸ்திரிக ளவர்கள் வெளியிட்ட "சோழர்கள்" என்னும் நூலாகும்.

நூலாசிரியர் வரலாறும், பாட்டுடைத் தலைவர்கள் வர லாறுகளும் இதன் பின்னே சுருக்கமாக எழுதிச் சேர்க்கப்பட் டுள்ளன.

இப்பதிப்பிற்குக் கிடைத்த கையெழுத்துப் பிரதிகளின் விவரம்:

விக்கிரம சோழனுலா

யாழ்ப்பாணத்து நல்லூர், சதாசிவப் பிள்ளையவர்கள் பிரதி 1
தொழூவூர் வேலாயுத முதலியாரவர் ,, 1
மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயரவர்கள் வீட்டுப் ,, 1
திருநெல்வேலிச் சாலிவாடீசுவர ஓதுவாரவர்கள் ,, 1
சென்னை இராசாங்கத்துக் கையெழுத்துப் புத்தகசாலைப் ,, 1
திருவாங்கூர்ச் சிலாசாஸன பரிசோதகராக இருந்த
ஸ்ரீமான் து. அ. கோபிநாத ராவ் அவர்கள் ,, 1
கோட்டுசேரி. நாராயணசாமி ஐயரவர்கள் ,, 1
கும்பகோணம் ஸப்கலெக்டர் ஆபீஸ் சிரஸ்தேதார்
முத்துஸாமி பிள்ளையவர்கள் ,, 1
கும்பகோணம் வாணாதுறை சாகேதராம பிள்ளையவர்கள் ,, 1
மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயரவர்கள் ,, 1

இவற்றுள் தொ. வேலாயுத முதலியாரவர்கள் பிரதியில் 'வெகுதானியஹு மாசிமீ 4உ சாலிவாகன சகாப்தம் 1740-இ மேற்செல்லா நின்றதில் நிறைவேறியது. கி. பி. 1818. காவை சின்னசாமி எழுதியது' என்ற வாக்கியங்கள் காணப்படுகின்றன.

குலோத்துங்க சோழனுலா

திருவாவடுதுறை யாதீனத்துப் புத்தகசாலை மூலப் பிரதி 1
மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயரவர்கள்
வீட்டு உரைப் பிரதி 1

இவ்வுரைப் பிரதியின் ஈற்றில் 'அகரு-ஆம் ஆண்டு கார்த்திகைமீ 10உ சோமவாரத்திநுள் குலோத்துங்க சோழனுலாவுரை முற்றும். பற்றமடைச் சிதம்பர நாதன் எழுதி முற்றும். கணபதியே நம:' என்னும் வாக்கியங்களும், மூலப் பிரதியின் ஈற்றில் 'பிரமாதிஹு சித்திரைமீ 14உ எழுதி நிறைவேறியது' என்னும் வாக்கியமும் காணப்படுகின்றன.

இராசராச சோழனுலா

திருவாவடுதுறை யாதீனத்துப் புத்தகசாலைப் பிரதி 1
மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயரவர்கள் ,, 1
தொழூவூர் வேலாயுத முதலியாரவர்கள் ,, 1

மூன்றும் பிரதியின் ஈற்றில் 'பிரமாதிஸூ வைகாசிமீ 14உ எழுதி நிறைவேறியது. சகாப்தம் 1741இ மேற்செல்லு' என்ற வாக்கியம் காணப்படுகிறது.

செந்தமிழ்ப் பத்திரிகை 24-ஆம் தொகுதியில் வெளிவந்த குலோத்துங்க சோழனுலாவில் முதற்கண்ணியின் பின், "பார் மேவு, பூமகள் கேள்வன் புயல்வண்ண னுந்தியில், நாமகள் கேள்வனு நான்முகனும்-கோமகனாய், ஆங்கவர்க்குக் காசி பனு மவன் பின்னவனும், ஆங்கதற்பி னுதித்த னின்னருளால்-ஓங்கி" என்னும் இரண்டு கண்ணிகள் அதிகமாகக் காணப் படுகின்றன.[1]

என் தந்தையாரவர்கள் கும்பகோணத்திலிருந்த காலந் தொடங்கியே மூவருலாவைப் பதிப்பிக்க எண்ணிப் பல பிரதி களையும், அவற்றிற்கு இன்றியமையாத இலக்கியம் சரித்திரம் சம்பந்தமான பலவகைக் குறிப்புக்களையும் ஆராய்ச்சிசெய்து தொகுத்து வைத்திருந்தார்கள். அக்குறிப்புக்களும், பிரதிகளை ஒப்புநோக்கிக் குறித்துவைத்திருந்த பாடபேதங்களும் இப் பதிப்பு இவ்வளவு திருத்தமாக வெளிவருதற்கு முக்கிய ஆதாரமாக இருந்தன. பலவகையான வேலைகளால் இப் பதிப்பை அவர்களே வெளியிட இயலாமற் போயிற்று. இதற்குமுன் மூவருலாவின் பல பதிப்புக்கள் வெளிவந்துள் ளன. உரையோடு கூடிய பதிப்பு ஒன்றும் வெளி வராமையால் படிப்பவர்களுக்கு உபயோகமாகுமென்று கருதி இப்பதிப்பை வெளியிடலானேன்.

அடையாற்றில் என் தந்தையாரவர்கள் பெயரால் ஒரு நூல் நிலையம் அமைந்திருப்பதை அன்பர்கள் அறிவார்கள். அந்நூல்நிலையத்தின் வெளியீடாகவே இது பிரசுரமாக வேண்டுமென்று அடிக்கடி எனக்கு ஊக்கமளித்துவந்த அந்நூல் நிலயத்தின் அத்தியக்ஷகராகிய ஸ்ரீமதி ருக்மிணி தேவியாரவர்க

---

1. இராசராசனுலாவில் உள்ள 362-74 கண்ணிகள் முன் வெளி வந்த ஸ்ரீ. அ. கோபாலையர் பதிப்பிற் காணப்பெறவில்லை. அவை கிடைத்த பல பிரதிகளில் உள்ளமையாலும், பொருட்டொடருக்கு ஏற்றமையாலும் சேர்க்கப்பெற்றன.

ளுடைய பெருந்தகைமையையும், சிறந்த தமிழபிமானத்தை யும் மிகவும் பாராட்டுகிறேன்.

இப்பதிப்பின் செலவுக்காக நன்கொடையளித்த திருவாங் கூர் ஸமஸ்தானத்துக்கும், திருவாங்கூர் ஸர்வ கலாசாலையாருக் கும் மிக்க நன்றி பாராட்டுகின்றேன்.

என் தந்தையாரவர்களிடம் பல வருஷங்கள் பாடங்கேட்டு அவர்களுடனிருந்து நூற்பதிப்பு முறையில் நன்குபழகியவரும், திருப்பனந்தாள் காசிமடத்து 1000 ரூ. தமிழ்ப் பரிசை முதலிற் பெற்றவரும், சென்னை கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் முதல் தமிழாசிரியருமான ம-ள-ள-ஸ்ரீ வி. மு. சுப்பிரமணிய ஐயரவர்கள் B. O. L. இந்நூலுக்குக் குறிப்புரை முதலியன எழுதுவதற்கு மிக்க உதவி செய்தார்கள். அவர்களுடைய அன்புடைமை மறக்கற்பாலன்று.

அவ்வப்போது வேண்டிய ஆலோசனைகளைக் கூறிய அடை யாற்று நூல் நிலையத்து நூற்பரிசோதகர் ம-ள-ள-ஸ்ரீ ச. கு. கண பதி ஐயர் B. O. L. அவர்களுக்கும், அச்சிடுங்காலத்தில் ஒப்பு நோக்குதல் முதலியவற்றிற்கு உதவியாக இருந்த திருவல்லிக் கேணித் தேசியப் பெண்கள் உயர்தரக் கலாசாலை முதல் தமிழ்ப் பண்டிதர் ம-ள-ள-ஸ்ரீ வித்துவான் H. வைத்தியநாதை யரவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாகும்.

என் தந்தையாரவர்கள் தொகுத்து வைத்திருக்கும் மற்ற நூல்களையும் ஒவ்வொன்றாக வெளிவரும்படி செய்வித்தருளும் வண்ணம் ஸர்வேச்வரனைப் பிரார்த்திக்கின்றேன்.

சென்னை }
16-7-46 }

இங்ஙனம்,
S. கலியாணசுந்தரையர்.

ஒட்டக் கூத்தர் வரலாறு

மூவருலாவின் ஆசிரியராகிய ஒட்டக் கூத்தருடைய இயற்பெயர் கூத்தரென்பது; இவர் கூத்த முதலியாரென்றும் வழங்கப்படுவர்; கூத்தரென்பது ஸ்ரீ நடராஜப் பெருமானுடைய திருநாமம். இவர் பிறந்த ஊர் [1]மலரியென்பர்; "மலரி வருங் கூத்தன்" (தண்டி. சூ. 49. மேற்.) [2] இவர் அம்பர் நாட்டைச் சேர்ந்தவர்.

இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் வடமொழி நூல்களிலும் பயிற்சி மிக்கவர். செய்யுளியற்றும் ஆற்றல் இவர்பால் மிகச் செவ்வனே அமைந்திருந்தது. வடமொழியிலுள்ள பலவகையான சொற்களையும் தொடர்மொழிகளையும் தாம் இயற்றும் செய்யுட்களில் உரிய இடங்களில் அமைத்துப் பாடுவர். அவ்வாறமைப்பதில் இவருக்கு மிகுந்த ஊக்கமும் பிரீதியுமுண்டு; பல மாணுக்கர்கட்குப் பாடஞ் சொல்லும் இயல்பினர்; சிவபக்திச் செல்வம் வாய்ந்தவர். இவர் இன்னராதல் இவரியற்றிய வேறு நூல்களாலும் இவ்வுலாக்களாலும் விளங்கும்.

இவர் விக்கிரமசோழன் காலத்தில் அவனுடைய ஆஸ்தான பண்டிதராகவும், குலோத்துங்கனுக்கு வித்தியா குருவாகவும் அவனுக்கும் அவன் குமாரன் இரண்டாம் இராசராசனுக்கும், ஆஸ்தான பண்டிதராகவும் இருந்து அவர்களுடைய அவைக்களத்தை அலங்கரித்துப் பல புலவர்களை ஆதரித்துப் பல நூல்களை இயற்றியும் இயற்றுவித்தும் விளங்கினர். அக்காலத்தில் அம்மூவருள் ஒவ்வொருவர் மீதும் ஒவ்வோருலாவும் குலோத்துங்க சோழன் மீது ஒரு பிள்ளைத் தமிழும் இயற்றினர். இவரிடத்துப் பேரன்புற்ற அம்மூவருள் ஒருவன் இவருக்கு அரிசிலாற்றங்கரைக்கண் ணுள்ளதாகிய ஓரூரை அளித்தான்; இவர் பெயரால் அது [3] கூத்தனூர் என்று இக்காலத்து வழங்கப்படு

---

1. மலரி: திருவெறும்பியூரின் பழையபெயர்; சாஸனக்கவி சரிதம், பக். 68.

2. நல்லுரைக் கோவை, III, 12.

3. இது தஞ்சாவூர் ஜில்லா பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்து அருகிலுள்ளது.

கின்றது. இவர் கலைமகளுடைய திருவருள் பெற்றவராதலின், அவ்வூரில் அத்தேவியின் திருவுருவத்தைப் பிரதிஷ்டிப்பித்துக் கோயிலெடுப்பித்து வழிபட்டு வந்தனர். இஃது, "ஆற்றங் கரைச் சொற்கிழத்தி வாழியே" (தக்க. 813) என்பதனால் விளங்கும்; இத்திருக்கோயில் இன்றும் நல்ல நிலைமையில் உள்ளது.

தன்மீது இவர் பாடிய உலாவிலுள்ள ஒரு கண்ணியை ஒட்டி ஒரு செய்யுள் இயற்றும்படி விக்கிரம சோழன் கேட்க அவ்வாறே விரைந்து பாடினமையால் இவர் ஒட்டக்கூத்த ரென்னும் பெயர்பெற்றா ரென்பர். பந்தயம் வைத்துப் பாடுத லில் சிறந்தவராதலின் இப்பெயர் பெற்றாரென்றும் கூறுவர்; ஒட்டம் - பந்தயம். இவர் கைக்கோளர் என்னும் செங்குந்தர் மரபினர் என்று இவரியற்றியதாகக் கூறப்பெறும் ஈட்டியெழு பது என்னும் நூலால் அறியப்பெறுகின்றது.

விக்கிரம சோழன் இவருக்கு ஒரு சமயம், யானை, காளம் முதலிய வரிசைகளை அளிக்க இவர், "இவ்விருதுகளைப் பெறு தற்கு யான் உரியனல்லேன்" என்று, "பெருக்கத்து வேண்டும் பணிவு" என்பதற்கு இணங்கத் தம்முடைய பணிவைத் தெரி வித்தனர். இவை தமிழ் நாவலர் சரிதையிலுள்ள "இடுக்கட் புண்படு", "பத்துக்கொண்டன" (118, 119) என்னும் செய் யுட்களால் விளங்கும்.

இராசராசனுலாவைப் பாடி அரங்கேற்றியபொழுது இவ ருக்கு அவ்வரசன் ஒவ்வொரு கண்ணிக்கும் ஆயிரம் பொன் விழுக்காடு பரிசில் வழங்கினான். இது, "தெள்ளித்தம், முன்னு யகரிலவன் மூதுலாக் கண்ணிதொறும், பொன்னா யிரஞ் சொரிந்த பூபதியும்" (சங்கர சோழனுலா), "கூட, னராதிபன் கூத்தனெதிர் நண்ணியோர் கண்ணிக், கொராயிரம்பொன் னீந்த வுலாவும்" (தமிழ் விடு தூது) என்பவற்றால் அறியப்படும்.

இவரை ஆதரித்தவர்கள் மேற்கூறிய மூவரே யன்றித் திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பி, காவிரிப்பூம்பட் டினத்திலிருந்த உபகாரிகளாகிய வீரர் சிலர், புதுவைக் காங்கேயன், திரிபுவனச் சோமனென்னும் செல்வர்களுமென்று தக்கயாகப்

பரணியாலும் அதனுரையாலும் பிறவற்ருலும் விளங்குகின்றது.

தக்கயாகப் பரணியின் இறுதியில், "ஆக்கம் பெருக்கு மடந்தை வாழியே" (813) என்று திருமகளை வாழ்த்தியிருத்தல் சோழர் முதலியோரால் நன்கு ஆதரிக்கப்பெற்று மேன்மேலும் செல்வம், புகழ், மதிப்பு ஆகிய இவற்றை இவர் மிகுதியாக அடைந்து யாதுங் கவலையின்றி வாழ்ந்துவந்தன ரென்பதைப் புலப்படுத்துகின்றது.

இரண்டாம் இராசராச சோழன் காலத்தில் முதுமைப் பிராயம் அடைந்திருந்த இவர் உடற்றளர்ச்சி யுற்றிருந்தாரேனும் அறிவில் தளர்ச்சியுறவில்லை. மூவருலாவில் இராசராச சோழனுலா ஏனையிரண்டினும் அளவாலும் சுவையாலும் மிக்கிருத்தலும், தக்கயாகப் பரணியின் அமைப்பும் இதனை அறிவிக்கும்.

இவர் காலத்திலிருந்த புலவர்கள் நம்பிகாளியார், நெற்குன்றவாண முதலியார் முதலியோர். கம்பரும் புகழேந்தியும் இவர் காலத்தினரென்பது சிலர் கொள்கை; அதற்குத் தக்க ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

இவர் சயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப் பரணியை, "பாடற் பெரும் பரணி தேடற் கருங்கவி கவிச்சக்ரவர்த்தி பரவச் செஞ்சேவகஞ் செய்த சோழன் றிருப்பெயர" (குலோத். பிள்ளைத். 14) என்று பாராட்டி யிருத்தலால் அவர்மீது இவருக்குள்ள மதிப்பும் பிறபுலவர்களைப் பாராட்டும் அருங்குணமும் விளங்கும்.

இவர் உலக இயல்பைக் கடந்து வருணனைகளை அமைப்பதால் [1]கௌடப்புலவ ரெனப்படுவார். இது தக்கயாகப் பரணி

1. வடமொழியில் செய்யுள்நடை, கௌடீ, வைதர்ப்பீ, பாஞ்சாலி என மூவகைப்படும். கௌடீ என்பது, மிடுக்கான ஓசையமைந்த சொற்களும் பொருளும் செறிந்து வருவது, இந்தக் கௌடீரீதியை மேற்கொண்டு ஒட்டக்கூத்தர் கவிபாடும் இயல்பினராதலின் இவரைக்கௌடப் புலவர் என்பர். கௌடீ—கௌடதேசத்தார் மேற்கொள்ளும் செய்யுள் நடை,

யுள் 29, 37, 85-ஆம் தாழிசைகளாலும், பூதகணங்களின் செயல்களை விரித்துக் கூறும் பகுதியாலும் உணரலாகும். செய்யுள் இயற்றும் ஆற்றலில் அக்காலத்துள்ள கவிகளுட் சிறந்து விளங்கினமையால் [1]கவிராக்ஷஸனென்றும், [2]கவிச்சக்கரவர்த்திகளென்றும், [3] சக்ரவர்த்திகளென்றும் அரசனுற் காளம் என்னும் விருது பெற்றமையால் [4]காளக்கவி யென்றும், இருமொழி நூல்களுள்ளும் இன்றியமையாதனவற்றைச் செவ்வனே அறிந்து அவற்றை நன்கு புலப்படுத்திச் செய்யுள் செய்யும் திறமை வாய்ந்திருந்தமையின் [5]சருவக்ஞ கவி யென்றும் இவர் வழங்கப் படுவர்.

இவர் பரணியில் தேவியைப் பற்றிக் கூறுவனவெல்லாம் பெரும்பாலும் [6]யாமள சாஸ்திரக் கருத்துக்களைப் பின்பற்றியன வென்று தெரிதலால் இவருக்கு அந்நூல்களிற் பயிற்சி யுண்டென்றும், சைன முதலிய பிறசமயங்களைப் பற்றிய செய்திகளையும் பரிபாஷைகளையும் எடுத்தாளுதலின் அச்சமய நூல்களை அறிந்தவரென்றும் சொல்லலாம்.

மூவருலாவையன்றி இவர் இயற்றியனவாக இப்பொழுது தெரியவரும் நூல்கள் :—அரும்பைத் தொள்ளாயிரம், ஈட்டி யெழுபது, காங்கேயன் நாலாயிரக் கோவை, குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ், தக்கயாகப் பரணி என்பன. அன்றியும் இவர் அவ்வப்பொழுது செய்தனவாகச் சில செய்யுட்கள் தமிழ் நாவலர் சரிதை முதலியனவற்றிற் காணப் படுகின்றன. தக்கயாகப் பரணி 776-ஆம் தாழிசை உரையினுல் விக்கிரம சோழன்மீது அவனது கலிங்க வெற்றியைக் குறித்து ஒரு பரணி இவராற் பாடப்பெற்றதென்று தெரிகின்றது;

---

1. சோழமண்டல சதகம், 93, மேற்.
2. தக்க. 813-4 மூலம், 536, 776, உரை.
3. தக்க. 457 உரை.
4. தக்க. 70, உரை, விசேடக் குறிப்பு.
5. தக்க. 433, உரை.
6. யாமளசாஸ்திரம் : சக்தி பூஜையைப்பற்றி விளக்கும் ஒரு தாந்திரிக நூல் ; தக்க. 136. உரை.

ஷி நூல் 13-ஆம் தாழிசையுரையில் உரையாசிரியர், “என்றூர் தாமே” என்று சுட்டிக்காட்டிய, “முத்தின் கனங்குழையை யுங்குமிழை யுங்கதுவி முட்டுங் கருகயல்க ளின்கடை யடங்குவன” என்பதும், சிலப்பதிகார உரையில் அடியார்க்குநல்லார் காட்டிய மேற்கோள்களுள் பரணித்தாழிசைகளாகக் காணப் படும், “மோடி முன்றலையை வைப்ப ரேமுடி குலைந்த குஞ்சியை முடிப்பரே, ஆடி நின்றுகுரு திப்புதுத் திலத மம்மு கத்தினி லமைப்பரே’, “மண்ணிறுளற வறுத்ததங்கடலை வைத்த பீடிகை வலங்கொள, விண்ணி ஞகியதன் யாகசாலைதொறு மீளவுஞ் சிலர் மிறைப்பரே” என்பவைகளும் அப்பரணியி லுள்ளன போலும்.

“சென்று செவியளக்குஞ் செம்மைய வாய்ச் சிந்தையுள்ளே நின்றளவி லின்ப நிறைப்பவற்றுள்—ஒன்று, மலரிவருங் கூந்த லார் மாதர்நேர்க் கொன்று, மலரிவருங் கூத்தன்றன் வாக்கு” என்ற தண்டியலங்கார மேற்கோட் செய்யுளால் இவர் வாக்கு நயத்தை அக்காலத்தார் நன்கு மதித்தன ரென்பதும், இவரால் பாராட்டப் பெற்ற புலவர்களுள் அத் தண்டியலங்கார மேற்கோளாசிரியரும் ஒருவரென்பதும் விளங்குகின்றன.

தக்கயாகப் பரணியிலும் இவரியற்றிய வேறு நூல் களிலும் அமைந்துள்ள பிரயோகங்களை உற்றுநோக்குகையில் இவர் சைவ சமயத்தில் மிக்க பற்றுடையவரென்பது தெளி வாகும்.

துர்க்கா பரமேசுவரி கலைமகளைநோக்கி ஆளுடைய பிள்ளையாருடைய கதையைச் சொல்லும்படி கட்டளையிட்டு அங்ஙனமே சொல்லிய கலைமகளை மனமுவந்து தன் அருகில் வீற்றிருக்கும்படி அருளியதாகக் கூறியிருப்பதும், தக்கயாக சங்காரத்தைக் கூறும் ஏனைய நூல்களில் வீரபத்ர தேவர் கலைமகளுடைய நாசியை அரிந்ததாகக் காணப்படும் செய்தி யைக் கூருதொழிந்ததும், வாழ்த்தில், “ஆற்றங் கரைச்சொற் கிழத்தி வாழியே” என்று பாராட்டியிருப்பதும் இவருக்குக் கலைமகள்பா லுள்ள பெரும் பக்தியைப் புலப்படுத்தும். இவர் தமிழ்ப் பரமாசாரியராகிய அகத்தியரிடத்து மிக்க பக்தியுடையவர்;

தக்க. 40, 233, 624-ஆம் தாழிசைகளைப் பார்க்க. இரு மொழியி லும் வல்லவரா யிருப்பினும் வீரபத்ர தேவர் போர்க்கோலங் கொண்டெழுந்த காலத்தில் தும்பை மாலையை அணிந்து கொண்டதாகக் கூறப்புகுந்த இவர், "பொதியில்வாழ் முனி புங்கவன் றிருவாய் மலர்ந்த புராணநூல், விதியினல்வரு தும்பைமாலை விசும்புதூர மிலைச்சியே" (தக்க. 624) என்று கூறியதாலும் அகத்திய முனிவரை, "ஒரு தமிழ் முனிவரன்" என்றும், பொதியின் மலையை, "தமிழ்க் குன்று", "தமிழ்ப் பொதியில்", (ஷை 539, 489) "செய்ய தமிழ் முழங்கத் தெய்வப் பொதியிலாய்" (இராசராச. 67) என்றும் பாராட்டிய தாலும் "கோக்குந் தமிழ்க்கொத் தனைத்தும் வாழியே" "வாழி தமிழ்ச்சொற் றெரிந்த நூற்றுறை வாழி தமிழ்க்கொத் தனைத்து மார்க்கமும், வாழி திசைக்கப் புறத்து நாற்கவி" என்று வாழ்த்தியதாலும் தமிழ் மொழியிலும் அதன் வளர்ச்சி யிலும் இவர் அதிகப் பற்றுடையவரென்பது விளங்கும்.

கடவுள் வாழ்த்தில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை வாழ்த்தியிருத்தலாலும், அவர் கதையைக் கோயில் பாடியதிற் புகுத்தி விளங்கப் பாராட்டி யிருத்தலாலும் தனிப்பாடலில், "முத்துப்பந்தரி னிற்குங்குருளை" என்று போற்றி யிருத்த லாலும், பிறவற்றாலும் இவருக்கு அவர்பால் இருந்த சிறந்த பக்தி வெளியாகின்றது.

இவர் நன்றியறிவிற் சிறந்தவர்; இந்நூலில் பொது வாகச் சோழர்களைச் சிறப்பித்தும், சிறப்பாகத் தம்மை ஆதரித்த சோழர்களைப் பலபடப் பாராட்டியும் காவிரிப்பூம் பட்டினத் திருந்த உபகாரிகளையும், பல்லவராயனென்று பட்டம் பெற்ற நம்பிப் பிள்ளையையும் நல்ல சந்தர்ப்பத்தி லெடுத்துச் சிறப்பித்தும் இருப்பதால் இது தெளிவாகும்.

போர்செய்யச் சென்ற வீரபத்ர தேவர் காஞ்சியில் சிவபெருமானுக்கு நிழல் செய்யும் மாமரத்தின் பல்லவத்தை அணிந்தனரென்று கூறியிருத்தலால் காஞ்சீபுரத்தில் இவருக் கிருந்த பேரன்பு விளங்கும்.

இவருடைய வரலாறுகள் விரிக்கிற் பெருகுமாதலின் இன்றியமையாத சில வரலாறுகளும் தக்கயாகப் பரணியாலும் இவ்வுலாக்களாலும் அறியப்பட்ட செய்திகளுமே இங்கே தெரிவிக்கப்பட்டன.

இவ்வுலாக்களிற் கூறப்பட்ட சோழர்களது வமிசாவளி வருமாறு:—

குலோத்துங்க சோழன் I
|
விக்கிரம சோழன்
|
குலோத்துங்க சோழன் II — ஆளுடைய நாச்சியார்
|
இராசராச சோழன் II

பாட்டுடைத்தலைவர்களின் வரலாறு

I. விக்கிரம சோழன்

உலா மூன்றனுள் முதலுலாவின் தலைவனான விக்கிரம சோழன் முதற் குலோத்துங்கனுடைய குமாரர்களுள் நாலாமவன் போலும். இவன் அன்னையின் பெயர் மதுராந்தகி யென்பது. இவன் கி.பி. 1118 ஜூன்மீ 29உ யன்று பட்டமெய்தினன் என்பர். இவன் ஜன்ம நட்சத்திரம் உத்திராடம். இவன் தன் தந்தையோடு சேர்ந்தே சோணாட்டை ஆண்டுவந்தவன்.

இவனுடைய மெய்க்கீர்த்திகளுள் சிறியது 'பூமாது புணர்' அல்லது 'பூமகள் புணர' என்றும்; பெரியது, "பூமாலை மிடைந்து" என்றும் தொடங்குகின்றன. பெரிய மெய்க்கீர்த்தி இவன் ஆட்சியின் பிற்காலத்தில் இவன் சிதம்பரத்தில் இயற்றிய திருப்பணிகளையும், அமைத்த நிபந்தங்களையும்பற்றிய பகுதி புதிதாக இடையே அமைக்கப்பட்டு விளங்குகின்றது.

தக்கயாகப்பரணி யுரையால் இவன்மீது ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்ட பரணியொன்று உண்டென்று தெரிகின்றது. இப்போது அது கிடைக்கவில்லை. இது குலோத்துங்க சோழனுலா, 28; இராசராசனுலா 27 ஆம் கண்ணிகளால் விளங்கும்.

சளுக்கிய விக்கிரமாதித்தன் VI இறந்த பின் வேங்கி நாட்டிலிருந்த தெலுங்கத் தலைவர்கள் மேலைச் சளுக்கியருடைய தலைமையில் அடங்கியிருப்பதினும் சோழர் ஆதிக்கத்தின்கீழ் இருப்பதைப் பெரிதும் விரும்பினரென்றும், கங்க நாட்டிலும் விக்கிரம சோழனுடைய சேனாதிகாரி ஒருவன் சுகதூரில் ஒரு கோயிலும், மத்திவால பேசிரக் என்னுமிடத்தில் ஒரு விமானமும் கட்டியதாகவும் சாஸனங்கள் கூறுதலால் அந் நாடுகளிலும் இவன் சோழ ஆதிக்கத்தை மீண்டும் நிலை நாட்டினனென்பது அறியப்படும்.

இவனது ஆறும் ஆட்சியாண்டில் தென்னார்க்காடு வட ஆர்க்காடு ஜில்லாக்களில் பெரும் பகுதியான நிலப்பரப்பு வெள்ளத்தால் அழிவுற்றதால் பெரிய உணவுப் பஞ்சமும் கஷ்டமும் விளைந்தனவென்று தெரிகிறது; 87 of 1900, 50 of 1903; S. I. I. Vol. 7. No. 496.

கி. பி. 1128-இல் விக்கிரம சோழன் தன்குல தெய்வமாகிய ஸ்ரீ நடராஜப்பெருமானுக்குத் தன் வருவாயிற் பெரும்பகுதியைக் கோயிலிற் புதிய கட்டடங்கள் கட்டுவதிலும், பற்பல பொருள்களை அளிப்பதிலும் செலவிட்டனன். இந் நிகழ்ச்சி இவனது 11-ஆம் ஆட்சியாண்டுத் தொடக்கமான சாஸனங்களில் பொறிக்கப்பட்டுள்ளது. முதற் குலோத்துங்கன் இறுதிக்காலத்தில் * நரலோக வீரனால் திருத்தி யமைத்துத் தொடங்கப்பட்ட திருப்பணிகள் விக்கிரமசோழன் காலத்தில் நிறைவேறின வென்று ஊகிக்கலாம். பிற்காலத்துச் சாஸனங்களில் ஸ்ரீ நடராஜப்பெருமானுடைய வெளிப்பிராகாரம் விக்கிரம சோழன் திருமாளிகையென்றும், திருவீதிகளுள் ஒன்று விக்கிரமசோழன் தெங்கு திருவீதியென்றும் கூறப்பட்டுள்ளன. ஸ்ரீரங்கம் கோயிலொழுகு என்னும் நூலில் விக்கிரம சோழன் ஐந்தாம் மதிலும், ஸ்ரீராமன் கோயிலும், அகளங்கன் திருவீதி விக்கிரமசோழன் திருவீதி என்னும் இரு வீதிகளும், வேறு சில கட்டடங்களும் கட்டினனென்பது காணப்படுகின்றது.

இவன் ஆட்சிக் காலத்தில் கங்கைகொண்ட சோழபுரமே தலைநகராக விளங்கிவந்தது. கும்பகோணத்திற்கு அருகிலுள்ளதும், முடிகொண்ட சோழபுரமென்னும் வேறு பெயருடையதுமான பழையாறு, செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள வசாறு என்னும் ஊர்களிலும், காட்டு மன்னார்கோவில் என இப்போது வழங்கும் வீரநாராயண சதுர்வேதி மங்கலத்திலிருந்த அரண்மனையிலும் பற்பல காலங்களில் தன் நாட்டைச் சுற்றிப் பார்வையிட்டபோது இவ்வேந்தன் தங்கியிருந்ததாகத் தெரிதலால் ராஜ்யத்தில் முக்கியமான நகரங்களில் இவனுக்கு அரண்மனைகள் இருந்தனவென்பது அறியப்படும்.

விக்கிரம சோழனது பட்டப் பெயர்களுள் மிகப் பிரசித்தமானது தியாக சமுத்திரம் என்பது. இது சிலாசாஸனங்களிலும் உலாவிலும் காணப்படுகின்றது. இவனது பதினாறும் ஆட்சியாண்டுச் செவ்விலிமேட்டு வடமொழிச் சாஸனத்தில் 'தியாக

---

* விக்கிரம சோழனுலா. கண்ணி-79 குறிப்புரை காண்க.

வாராகரம்', 'அகளங்கன்' என்னும் பட்டங்கள் காணப்படுகின்றன. இவனுக்கு 'முக்கோக்கிழானடி', 'தியாகபதாகை' என்னும் மனைவியர் இருவர் இருந்தனர். இவ்விருவருள் முக்கோக்கிழானடி என்பாள், கி. பி. 1126-27-இல் காலஞ் சென்ற பின் தியாகபதாகையே பட்டத்துப் பெருந்தேவியாக விளங்கி வந்தனள். திருவிடைமருதூர்ச் சாஸனமொன்றில் அகப்பரிவாரத்தோடு, நேரியன் மாதேவியார் என்றொரு மனைவிபெயர் காணப்பெறுகின்றது. அவள் இவன் மூன்றும் மனைவிபோலும்.

கருணாகரத் தொண்டைமான், முனையர்கோன், சோழகோன், கஞ்சைநகர்க் கண்ணனென்னும் மறையோன், சுத்தமல்லன் முடிகொண்டான், வாணகோவரையன் என்னும் மறுபெயர்கொண்ட வாணன், நரலோக வீரன், காடவன், வேணாடர்கோன், அனந்தபாலன், வத்தவன், சேதிராயன், காரானைக் காவலன், நுளம்ப பல்லவன், திரிகர்த்தன் என்னும் தலைவர்கள் உலாவில் இவன் உடன்போந்தவர்களாகக் கூறப்படுகின்றனர். சிலாசாஸனங்களிலிருந்து நரலோகவீரன் மகனான மாதவராயன், செங்கேணி வமிசத்தைச் சேர்ந்த சம்புவராயர், ராஜநாராயணன், சுந்தன் கங்கைகொண்டான், பாண்டிநாடு கொண்டான் என்னும் ஒருவன், ஆனைவாரி யென்னுமிடத்தில் வாழ்ந்த தொண்டை மண்டலச் சளுக்கியரென்பவர் பெயர்கள் அறியப்படுகின்றன.

தெலுங்கு நாட்டிலும் பொத்தப்பி நாட்டை ஆண்ட மகாமண்டலேசுவரன் பெட்டரசன் ராஜேந்திர சோழப் பொத்தப்பிச் சோழன் என்னும் கன்னரதேவன், கொங்கயன், கொள்ளிப் பாகைக்குத் தலைவனான நம்பயன், மஹாமண்டலேசுவரன் கட்டிதேவ மஹாராஜா, யாதவராயர்கள் இவன் ஆட்சிக்குட்பட்ட தலைவர்களாக இருந்தார்களென்பது சாஸனங்களால் அறியப்படுகின்றது.

"கூடிய, சீர்தந்த வென்றெடுத்த கூத்தனுலாச், சூடிய விக்கிரம சோழனும்" (சங்கர சோழனுலா) என்று இவன் பாராட்டப் பெற்றுள்ளான்.

II. இரண்டாங் குலோத்துங்கன்

இரண்டாம் உலாவின் தலைவனான இரண்டாங் குலோத்துங்கன் தன் தந்தையான விக்கிரம சோழனால் கி. பி. 1133-ஆம் ஆண்டில் இளவரசாக நியமிக்கப்பட்டான். இவனது சாஸனங்களின் மெய்க்கீர்த்திகள் 'திருமன்னி விளங்கு', 'பூமியும் திருவும்', 'பூமருவிய திருமடந்தையும்', 'திருமன்னி வளர இருகுவடனைய', 'புகழ்மாது விளங்க', 'வீரமே துணை', 'பூமேலரிவையும்', 'பூமேவி வளர', 'பூமாது வளர', 'திருமகள் சயமகள்', என்பன போன்ற பலவகைகளில் தொடங்குகின்றன. இவையெல்லாம் இவன் ஆட்சிச் சிறப்பை உயர்த்திக் கூறுகின்றனவே யல்லாமல் சரித்திர நிகழ்ச்சிகளுள் ஒன்றையும் கூறவில்லை. சிதம்பரத்தில் இவன் முடி சூடியதாகவோ, அல்லது அந்நகரத்தைப் புதுப்பித்து அழகுபடுத்தியதாகவோ கருதக்கூடிய வண்ணம் இவனது ஒரு சாஸனம் அமைந்துள்ளது. திருப்புறம்பயத்தில் காணப்படும் இவனது ஏழாம் ஆட்சியாண்டுச் சாஸனத்தில் தில்லைநகரத் திருப்பணியும், கோயில் திருப்பணியும் இவனால் இயற்றப்பட்டனவாகக் கூறப்பட்டுள்ளன. உலாக்கள் இவற்றைப்பற்றி மிக விரிவாகக் கூறுகின்றன. இச்செய்திகள் தக்கயாகப் பரணியிலும், இராசராச சோழனுலாவிலும் சுருக்கமாகச் கூறப்படுவதாலும், விக்கிரமசோழன் சாஸனங்களிலும் தில்லைத் திருப்பணி கூறப்படுவதாலும் திருப்பணி விக்கிரமசோழன் காலத்தே தொடங்கப்பெற்றுக் குலோத்துங்க சோழன் பட்டத்துக்கு வந்த சில ஆண்டுகளுக்குப்பின் முடிவுற்றதாகக் கருதுவதற்கு இடமுண்டு.

போர்ச்செய்தி ஒன்றும் சாஸனங்களில் கூறப்படாமையால் இவனாட்சி அமைதி நிலவியதாக இருந்ததென்று சொல்லலாம். தில்லைக் கோவிந்தராஜப் பெருமாள் இவனால் எடுத்தெறியப்பட்டதாக உலாவும் தக்கயாகப் பரணியும் கூறுகின்றன. இவனால் ஆதரிக்கப்பட்ட புலவர்கள் ஒட்டக்கூத்தரும் சேக்கிழாரும் ஆவர்: கூத்தர் இவனுக்கு வித்தியா குருவாகவும் விளங்கினர். கங்கைகொண்ட சோழபுரமே இவனது தலைநகராக விளங்கிவந்தது. இவன் தனது மூன்றும் ஆட்சியாண்டில் விக்கிரமசோழபுரத்து அரண்மனையில் வாழ்ந்துவந்ததாக ஒரு

சாஸனம் கூறுகின்றது. திருமழபாடிச் சாஸனத்தால் இவனுக்கு இருமனைவியர் இருந்தனரென்பது அறியப்படும். அவருள் முக்கியமானவள் புவனமுழுதுடையாள் என்னும் தியாகவல்லி; மற்றொருத்தி மலாடர் குலத்தைச் சேர்ந்த முக்கோக்கிழானடி யென்பாள்.

இவன் கொண்ட பட்டங்களுள் மிகவும் பிரசித்தமானது அநபாயனென்பது உலாவினாலும், பெரிய புராணத்தாலும் திருமந்திர வோலையான அநபாய மூவேந்தவேளா னென்பவன் பெயரமைதியாலும் விளங்கும். அனேக ஊர்கள் இவனால் அநபாயநல்லூரென்று வழங்கப்பட்டன. பேரம்பலம் பொன் வேய்ந்த பெருமாள், திருநீற்றுச் சோழன், எதிரிலிச்சோழன், கலிகடிந்த சோழன் என்பன இவனது வேறு பட்டப் பெயர்கள்.

இவன் தந்தை காலத்தைப் போலவே இவன் காலத்தும் இவன் கீழ்த் தலைவர்களும் பலதானங்கள் அளித்த செய்தி சாஸனங்களால் தெரியவருகின்றது. அவர்களுள் முக்கியமானவர்கள் நாலாயிரவன் அம்மையப்பன், அம்மையப்பன் கண்ணுடைய பெருமாள், திருமாணிகுழிப் பக்கத்தைச் சேர்ந்த சிறு பகுதியைக் காத்துவந்த பல்லவத் தலைவனும், குலோத்துங்க சோழக் காடவராயனென்னும் மறு பெயருடையவனுமான மோகனாட்கொல்லி என்பவர்கள். இவர்களுள் மோகனாட்கொல்லி சில ஆண்டுகளுள் உயர்நிலையை யடைந்தானென்பது திருநாம நல்லூர், திருவதிகை, விருத்தாசலம் முதலிய பற்பல இடங்களில் பல பெயர்களோடும், பட்டங்களோடும் இவன் பெயர் காணப்படுவதால் அறியப்படும். இவன் திருநாம நல்லூர், திருவதிகை முதலிய இடங்களிலுள்ள ஆலயங்களுக்குப் பொன்னாபரணங்களும், பல தானங்களும் செய்து அளித்ததோடு விருத்தாசலத்தில் இறைவன் மஹாஸ்நபனத்தின் பொருட்டு ஏழிசைமோகன் என்ற ஒரு மண்டபம் கட்டினானென்றும், படிப்படியாக இவன் பட்டப்பெயர்களும் உயர்வடைந்தனவென்றும் அவ்விடங்களிற் காணப்படும் சாஸனங்கள் கூறுகின்றன. இவன் பரம்பரையில் தோன்றிய கோப்பெருஞ் சிங்கனே பிற்காலத்தில் சோழ சாம்ராஜ்யத்தை

நிலைகுலையச் செய்தவன். ராஜராஜ மகத நாடாள்வான் என்னும் வாணகுலத்தலைவன், திருக்கோவலூரைச் சூழ்ந்த சேதி நாட்டை ஆண்ட மலையமான்களுள் விக்கிரம சோழச் சேதிராயன், அவன் மகனான விக்கிரமசோழக் கோவலராயன், கிழூர் மலையமான் குலோத்துங்க சோழச் சேதிராயன் என்பவர் மலையமான்களுட் சிலர், தமிழ்நாட்டுச் சிற்றரசர்களுள் அடிக்கடிக் கூறப்படும் வேறு இருவர், நுளம்பனும் அதியமானும் ஆவர். சீயகங்கன் என்னும் கங்கர் குலத் தலைவன் காளஹஸ்திக் கோயிலுக்குத் தானம் அளித்ததாகக் கூறப்படுகின்றான். குலோத்துங்க சோழ யாதவராயனென்னும் கட்டிதேவன் கோயிலில் தபஸ்விகளுக்கும், பிராமணர்களுக்கும், ஏனையோருக்கும் உணவளித்தற்கு ஒரு கிராமத்தைத் தானம் செய்ததாக ஒரு சாஸனம் கூறும்.

இவன் கி. பி. 1150-ஆம் ஆண்டுவரையில் ஆண்டதாகத் தெரிகிறது.

இவன்மீது ஒட்டக்கூத்தருக்கு உள்ள பேரன்பு உலா, பிள்ளைத் தமிழ் என்னும் இரண்டு பிரபந்தங்கள் பாடியிருத்தலால் விளங்கும். இது, "பாடிய, வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டுமவன், பிள்ளைத் தமிழ்மாலை பெற்றோனும்" (சங்கர சோழனுலா, 24 5) என்பதனாலும் வலியுறுகின்றது.

III. இரண்டாம் இராசராசசோழன்

மூன்றும் உலாவின் பாட்டுடைத் தலைவனும் தக்க யாகப் பரணியை ஆக்குவித்தோனும் ஆகிய இரண்டாம் இராசராச சோழன் என்பவன் அநபாயனென்று சிறப்பிக்கப்படுபவனும் ஸ்ரீபீடங்கண்ட பெருமாளென்று தக்கயாகப் பரணி யுரையாசிரியரால் குறிப்பிடப்படுபவனும் தில்லையம்பலம் பொன் வேய்ந்து அங்கே பல திருப்பணிகளைச் செய்வித்தவனுமாகிய இரண்டாங் குலோத்துங்க சோழனுடைய திருக்குமாரனவன். சோழேந்திர சிம்மன், கண்டன், வரோதயன், வீரோதயன்,

ராஜகம்பீரன், எதிரிலிச் சோழன், நெறியுடைச் சோழன், திரிபுவன சக்கரவர்த்திகள் கோநேரின்மை கொண்டான் என்னும் பட்டங்களை உடையவன் ; ஒட்டக்கூத்தர் பாடிய உலாவைப் பெற்ற பெருமை வாய்ந்தவன் ; அவரால் வரராசராசனென்று சிறப்பிக்கப் பெற்றவன்.

இவன் கி. பி. 1146-ஆம் ஆண்டில் சிங்காதன மேறினன், "பூமருவிய புவிமாதும்", "பூமருவிய பொழிலேழும்". "புயல் வாய்த்து வளம்பெருக", கடல் சூழ்ந்த பாரேழும்" எனத் தொடங்கும் மெய்க்கீர்த்திகள் இவனுக்குண்டு.

இவனுக்குப் புவனமுழுதுடையாள், தரணி முழுதுடையாள், உலகுடை முக்கோக்கிழானடிகள், அவனி முழுதுடையாள், தென்னவன் கிழானடிகள் என ஐவர் மனைவியரிருந்தனரென்பதும், அவர்களுள் புவனமுழுதுடையாள் இவன் பட்டத்துத் தேவி யென்பதும் இவனது மெய்க்கீர்த்திகளால் விளங்குகின்றன. இவன் காலத்தில் காவிரிப்பூம் பட்டினம், தஞ்சை, பழையாறை, கங்கைகொண்ட சோழபுரம், உறையூரென்பன தலைநகர்களாக இருந்தன. இராசராசனுலாவில் அரசன் புகார் வீதியில் உலாப்போந்தானெனக் குறிப்பிடப்படுவதாலும், வேறு சில ஆதாரங்களாலும் காவிரிப்பூம்பட்டினமும் இவனுடைய தலைநகராகச் சிறந்திருந்ததென்று தெரிகின்றது.

தன்குல தெய்வமான ஸ்ரீ நடராஜப் பெருமானிடம் விசேஷ பக்தி பூண்டவன் ; "தொல்லைத் திருமரபிற் கெல்லாந் தொழுகுலமாம், தில்லைத் திருநடனஞ் சிந்தித்து" (இராசராச. 47.) இவனுடைய முன்னோர் சிலரால் அனுதரவு செய்யப்பட்டுவந்த வைணவ சமயத்தை மீண்டும் தன் நிலை யடையச் செய்தனன் ; "விழுந்த வரிசமயத்தையு மீளவெடுத்து" (இராசராச மெய்க்.).

இவன் காலத்து ஒருவகைப் போரும் நிகழவில்லையாதலின், நாடு மிகவும் அமைதியாக இருந்தது. இவனுடைய அரசாட்சியின் தன்மையும், இவன் குடிகளைக் காத்துவந்த இயல்பும் கீழ்க் கண்டவாறு இவன் மெய்க் கீர்த்தியிற்

பாராட்டப்பட்டுள்ளன : " ஆதியுகங், கொழுந்துவிட்டுத் தழைத் தோங்கக் கோடாதறங்குளிர் தூங்க, மாரிவாய்த்து வளஞ்சுரக் கத் தாரணியோர் பிணி நீங்க, நல்லோர்தங் கற்புயர, நான் மறை யோர் தொழில்வளர, எல்லோருந் தனித்தனியே வாழ்ந்தன மென மனமகிழ்ந்து, ஒருவருட னொருவர்க்கு மொன்றினுட னொன்றுக்கும், வெருவருபகை மனத்தின்றி விழைந்து காத லுடன்சேர, இந்திரன்முதற் றிசாபால ரெண்மரு மொருவடி வாகி, வந்தபடி தரைநின்று மனுவாணை தனிநடாத்தி......... தந்தையிலோர்க்குத் தந்தையாகியுந் தாயிலோர்க்குத் தாயாகி யும், மைந்தரிலோர்க்கு மைந்தராகியு மன்னுயிர்கட் குயிராகி யும்.........அரசியற்கை முறை நிறுத்தி."

சிலாசாஸனங்களினால் இவன் காலத்தில் சில சில தலங் களில் இலகுளீச பாசுபதர், வாமமதத்தார், சைவர், வைணவர் முதலிய பல சமயத்தினரும் கவலையின்றி வாழ்ந்திருந்தன ரென்பது அறியப்படும். இன்னும் பல தலங்களில் பல திருப் பணிகள் இவனால் இயற்றப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத் தக்கது, கும்பகோணத்திற்கு அடுத்து இப்பொழுது தாராசுரம் என்று வழங்கும் ராசராசபுரத்தில் இவ்வேந்தன் அமைத்த சிற்பச் சிறப்புக்களால் மேம்பட்ட சிவாலயமும் ஆகும். திருப்பனந்தாளிலிருந்து ஸ்ரீ தாடகேச்சரத்து நாயகர் தீர்த்தங்கொடுக்கக் கொள்ளிடத்துக்கு எழுந்தருளுதற்காக ஒரு சாலை அமைக்கப்பெற்று, அது இவன் பேரால் [1] 'ராஜகம்பீரன் திருவீதி' என்று வழங்கப்பட்டதென்பதும்[2] திருப்பாலைத்துறை யுடைய மகாதேவருக்குச் சில நிலங்கள் வழங்கப்பட்டன வென்பதும் அந்நிலங்கள் உள்ள இடத்திற்கு ராஜகம்பீர நல்லூரென்னும் பெயர் வைக்கப்பட்டதென்பதும் குறிப் பிடத் தக்கன.

இவன் ஒருசமயம் துலாபுருட தானம் செய்தனன். அப் போது அக்காட்சியைக் கண்டு களித்து ஒட்டக்கூத்தர், "தொழுகின்ற மன்னர்" (தமிழ்நா. 124) என்ற தொடக் கத்தையுடைய செய்யுளைப் பாடினர்.

---

1. Annual Report of Epigraphy, No. 45 of 1914.
2. A. R. No. 440 of 1012.

இவன் தமிழில் மிக்க விருப்பமுடையவ னுதலால் பல புலவர்களை ஆதரித்து வந்ததோடு கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரை மிக்க மரியாதையோடு உபசரித்து வேண்டிய வற்றை யெல்லாம் உதவிப் பாதுகாத்து வந்தான். இவன் காலத்தில் ஒட்டக்கூத்தர் முதுமையுடையவராக இருந்தன ரென்று தெரிகின்றது. ஒரு சமயத்தில் ஆதனத்திலிருந்து எழும் பொழுதோ நடக்கும் பொழுதோ அவர் தளர்ச்சியுறுவது கண்டு அவருக்கு இம்மன்னர்மன்னன் கைகொடுத்துத வினுன். அப்போது அப்புலவர் சிகாமணி மிக மகிழ்ந்து, "கொலையைத் தடவிய வைவே லரக்கர் குலமடியச், சிலையைத் தடவிய கையே யிதுசெக தண்டத்துள்ள, மலையைத் தடவிய விந்தத் தடவி மலைந்த வொன்னுர், தலையைத் தடவி நடக்குங் கொல் யானைச் சயதுங்கனே" (தமிழ்நா. 134) என்று இவன் கையைச் சிறப்பித்துப் பாடினுர். இவ்வரிய செயலால் இவ்வர சன் அப்புலவரிடத்தில் வைத்திருந்த பேரன்பும், எளியனுக இருந்த தன்மையும் புலப்படுகின்றன. அவர், தன்மீது பாடிய உலாவை அரங்கேற்றுகையில் ஒவ்வொரு கண்ணிக்கும் ஒவ்வோராயிரம் பொன் வழங்கினுன். தக்கயாகப் பரணியின் கடவுள் வாழ்த்திலும் இறுதிவாழ்த்திலும் இடையிலும் அவராற் பலவாறு பாராட்டப்பெற்றனன்.

தனது சபையிற் பல புலவர்கள் கூடித் தமிழ்ச் சுவையை எடுத்துப் பாராட்ட அவற்றை விரும்பிக் கேட்டு மகிழ்ந்து வீற் றிருக்கு மியல்பின னுதலின், "செய்ய தமிழ் முழங்கத் தெய்வப் பொதியிலாய்" (இராசராச. 67) என்று செந்தமிழ்ப் பரமா சாரியராகிய அகத்திய முனிவரும் தமிழ்ச்சங்கமும் இருந்த பொதியின் மலையாக இவன் அவை உருவகிக்கப்பட்டிருத்த லும், இயலிசை நாடகமாகிய முத்தமிழும் செழித்தோங்க அவற்றில்வல்ல புலவர்களைப் பாதுகாத்து வந்தமையால் "முத்தமிழ்க்குந் தலைவன்" (இராச. மெய்க்.) என்று பாராட் டப் படுதலும் இவனுக்குத் தமிழ்மொழியின் பாலுள்ள பேரன்பைத் தெரிவிக்கின்றன.

இவனுடைய காலத்தில் மகா சாமந்தனுக இருந்தவன் ஒட்டக்கூத்தரால் தக்கயாகப் பரணியில் பாராட்டப்பட்ட

திருச்சிற்றம்பல முடையான் பெருமாள்நம்பி யென்பவன். திருமந்திர வோலைக்காரனாக இருந்தவன் இராஜாசிரயப் பல்லவராய னென்பவன்.

சில நாடுகள் ஊர்கள் முதலியவற்றின் பெயர்கள் இவன் காலத்தில மாற்றப்பட்டு வழங்கின. அவற்றுட் சில, ராஜகம்பீரன் வளநாடு, உலகுடை முக்கோக்கிழானடி வளநாடு, ராஜகம்பீர நல்லூர், இராசகம்பீரன் திருவீதி முதலியன. ராஜகம்பீரன் மலையெனப் பெயரிய மலையும் ஒன்றுண்டு. கும்பகோணத்தை அடுத்துள்ள தாராசுரம் என்று இப்பொழுது வழங்கிவரும் இராசராசபுரத்தில் இவ்வேந்தனால் கட்டப்பெற்றதும், அரிய சிற்பச் சிறப்புகளால் அமைந்தது மான சிவாலயத்தின் முன்மண்டபம் இவனது பெயரால் இராசகம்பீர மண்டபம் எனப் பெயர் பெறும்.

இவனுக்கு வழங்கிய ஏனைய பெயர்கள் இராச கம்பீரன், இராச புரந்தரன், கண்டன், கண்ணன், கனகளபன் குலதீபன், சனநாதன், சொக்கப்பெருமாள், தெய்வப்பெருமாள், வர ராச ராசன், வீரதரன், வீரோதயன்.

இம் மன்னர்பிரான் கி. பி. 1173-ஆம் வருஷம் வரையில் இருந்தானென்று தெரிகின்றது.

சங்கரசோழனுலா ஆசிரியர் இவனை, "தெள்ளித்தம், முன்னு யகரிலவன் மூதுலாக் கண்ணிதொறும், பொன்னு யிரஞ்சொரிந்த பூபதியும்" (கண்ணி, 25-26) என்று பாராட் டிக் கூறியுள்ளார்.

ஸ்ரீ

கணபதி துணை

விக்கிரம சோழனுலா

1. சீர்தந்த தாமரையாள் கேள்வன் திருவுருவக்
கார்தந்த வுந்திக் கமலத்துப்—பார்தந்த
2. ஆதிக் கடவுட் டிசைமுகனு மாங்கவன்றன்
காதற் குலமைந்தன் காசிபனும்—மேதக்க
3. மையறு காட்சி மரீசியும் மண்டிலஞ்சேர்
செய்ய தனியாழித் தேரோனும்—மையல்கூர்
4. சிந்தனை யாவிற்கு முற்றத் திருத்தேரில்
மைந்தனை யூர்ந்த மறவோனும்—பைந்தடத்

குறிப்புரை

1. *சீர்தந்த*: இது விக்கிரம சோழனென்னும் பெயருக்குப் பொருத்தமான மங்கல முதன்மொழி. *தாமரையாள் கேள்வன்* - திருமால்; *தாமரையாள்* - திருமகள். *திருவுருவக்கார்* - அழகிய உருவமாகிய மேகம். *பார்தந்த* - பூமியைப் படைத்த.

(பி - ம்.) 'திருவுருவாம்', 'திருவுதரக்'

2. ஆதிக்கடவுளாகிய திசைமுகன். ஆங்கவன்: ஒருசொல். *குலமைந்தன்* - சிறப்பமைந்த மைந்தன். *மேதக்க* - மேன்மைபொருந்திய.

3. *மையறு காட்சி* - குற்றமற்ற அறிவையுடைய; *காட்சி*-தோற்றமும் ஆம். *மண்டிலம்* - வட்ட வடிவம். *செய்ய* - சிவந்த. *தனியாழி* - ஒற்றைச் சக்கரம். *தேரோன்* - தேரையுடைய சூரியன்; குலோத். உலா, 1; இராசராச. 2.

(பி - ம்.) 'மண்டிலஞ்'

4. *சிந்தனை* - கவலை. *முற்ற* - முடியும்பொருட்டு. *மறவோன்* - வலியோன்; நீதியைத் தளரா வலிமையுடன் நிலைநாட்டினானாதலின்; இவன் ஆதிமனுவல்லன்; அந்த வைவசுவத மனுவினும் வேறானவன். இவன் மனுநீதிகண்ட சோழன்; 'மெய்ம்மனுப், பெற்ற நீதியுந் தன்பெயராக்கினான்', 'தொன்மனுநூல் தொடை மனுவால், துடைப்புண்டது' (பெரிய புராணம். திருவாரூர்ச். 14,37.); குலோத் : உலா - 2; இராசராச. 3; கலிங்கத். இராசபாரம். 10.

(பி - ம்.) 'திருத்தேருள்' 'ஊர்ந்த மனுவோனும்'

5. தாடு துறையி லடுபுலியும் புல்வாயும்
கூடநீ ரூட்டிய கொற்றவனும்—நீடிய

6. மாக விமானந் தனியூர்ந்த மன்னவனும்
போக புரிபுரந்த பூபதியும்—மாகத்துக்

7. கூற வரிய மனுக்கொணர்ந்து கூற்றுக்குத்
தேற வழக்குரைத்த செம்பியனும்—மாறழிந்

---

5. ஆடுதுறையில்-நீராடுந் துறையில். அடுபுலி - கொல்லும்கொடிய புலி. புல்வாய்-மான். கொற்றவன்: மாந்தாதா; குலோத். உலா. 7; இராசராச. 5; கலிங்கத். இராசபாரம். 12; கம்ப. 1. குலமுறை. 5.

6. மாகவிமானம் - தெய்வ விமானம். தனியூர்ந்த - பிறர் எவர்க்குமில்லாத தனிச்சிறப்புடன் ஊர்ந்துசென்ற. இந்திர விமானம் ஊர்ந்த சோழன் என்று ஒருவன்பெயர் சோழ ராஜாக்கள் சரிதம் என்னும் பழைய நூலில் காணப்படுகிறது எனக் கலிங்கத்துப்பரணி இராசபாரம்பரியம் உரையில் ஸ்ரீ. வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். போகபுரி - அமராவதி. பூபதி - அரசன். இவன் முசுகுந்த சோழன்: குலோத். உலா. 4; கலிங்கத். இராசபாரம். 12. கம்ப.: 1. குலமுறை; 6. மாகத்து - தேவலோகத்தில்.

(பி - ம்.) 'விமானந்தனை' 'மன்னவனப்' 'போக புவிபுரந்த பூபதியு மியாகத்துக்'

7. மனு - மந்திரம். தேற - தெளியும்படி. செம்பியன் - சோழன்; இவனைப் பெருநற்கிள்ளி என்பர் குலோத். உலாப். பழைய உரையாசிரியர்; குலோத். உலா. 6; கலிங்கத். இராசபாரம். 15. மாறு - பகைமை,

8. தோடி மறலி யொளிப்ப முதுமக்கட்
சாடி வகுத்த தராபதியும்—கூடார்தம்

9. தூங்கு மெயிலெறிந்த சோழனு மேல்கடலில்
வீங்குநீர் கீழ்கடற்கு விட்டோனும்—ஆங்குப்

---

8. மறலி - யமன். முதுமக்கட்சாடி வகுத்தவன்; சுரகுரு; இவனை நாபாகன் என்பர் குலோத் உலாப் பழைய உரையாசிரியர்; குலோத். உலா-12. உரை ; 'அணிபெற வெழுதிய வழகிய குரைகவி னுட்செறி மட்சாடி, குடிபுக முடிபுனை சுரகுரு வழிமுதல் கொட்டுக சப்பாணி' குலோத். பிள்ளைத். 39) ; 'சித்தமகிழ்ந் தீனமறச் செங்கோ னடத்தநமன், உத்தமனென்றங்கா ளுயிர்கொடுபோ காமையினால், மொய்த்த முதியோர்க்கு முதுமக்கட் சாடிபல, வைத்தகுல தீபனே மன்னுகோ மன்னுகோ' (திருவெண்காட்டுப் புராணம், சத்திய நல்விரதச். 9.) முதுமக்கட்சாடி : வயது முதிர்ந்து நடமாட்ட மில்லாது வலிகுறைந்த முதுமக்களை ஒரு பெரிய சாடியுள்வைத்துக் காப்பாற்றுவது பண்டை வழக்கம் எனத்தெரிகிறது. இது பிணங்களை அடக்கஞ்செய்து மேலே கவிழ்க்கும் சாடியினும் வேறானது. மறலி ஒளித்தது, சுரகுருவின் ஆற்றலுக்கு அஞ்சி. தராபதி - உலகுக்குத் தலைவன்: அரசன்; தரா - தரை ; இவனை மிருத்யுஜித் என்று திருவாலங்காட்டுச் செப்புப்பட்டயம் கூறும். கூடார் - பகைவராகிய அசுரர்.

(பி - ம்.) 'மறலியொழிய' 'யொளிய'

9. தூங்குமெயில் - ஆகாயத்தில் திரியும் மதிள்களாகிய கோட்டை ; 'திறல்விளங் கவுணர் தூங்கெயி லெறிந்த, விறன்மிகு முரசின் வெல்போர்ச் சோழன்' (தொல். களவு. 11. ந. மேற்.) ; குலோத். உலா: 13 ; புறநா. 39; பழமொழி. 155; சிலப். 3:29. அம்மானைவரி; மணி. 1: 3. இவன் தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன் என்பவன். விட்டோன் : ஸம்ஹர்ஷண சக்கரவர்த்தி என்பவன் ; இவனை ஸமுத்ரஜித் என்றும், இவன் மேல் கடலையும் கீழ் கடலையும் ஒன்றுசேர்த்த அருஞ்செயல்புரிந்து ஓர் அரசகுமாரியை மணம்புரிந்தனன் என்றும் கன்யாகுமரிச் சிலாசாஸனம் கூறும்; குலோத். உலா. 14; இராசராச. 14. கலிங்கத். இராசபாரம். 16

(பி - ம்.) 'கீழ்கடலில்'

10. பிலமதனிற் புக்குத்தன் பேரொளியா ளுகர்
குலமகளைக் கைப்பிடித்த கோவும்—உலகறியக்

11. காக்குஞ் சிறுபுறவுக் காகக் களிகூர்ந்து
தூக்குந் துலைபுக்க தூயோனும்—மேக்குயரக்

12. கொள்ளுங் குடகக் குவடூ டறுத்திழியத்
தள்ளுந் திரைப்பொன்னி தந்தோனும்—தெள்ளருவிச்

---

10. பிலம்-பாதாள வுலகம். கோ - அரசன். சூரவாதித்த சோழன் என்பான் நாகலோகஞ்சென்று நாகராஜகுமாரி காந்திமதி என்பாளை மணந்து அங்கிருந்து வெற்றிலைப்பயிரைச் சோழநாட்டிற்குச் கொண்டு வந்தான் என்று தெரிகிறது ; செவ்வந்திப் புராணம். உறையூர்ப் புராணம். இவன் கரிகாலனின் புதல்வனுன கிள்ளிவளவனின் வேறுனவனும், காலத்தால் முற்பட்டவனும் ஆவன். வெற்றிலைக்கு நாகவல்லி என்னும் வடமொழிப் பெயர் உள்ளமை நோக்குக; பெரும்பாண். 29—37. ந. உரை. இச்சரித்திர வரலாறு வேறு பெயர்களுடன் நாகைக்காரோணப் புராணத்திலும், வடமொழியில் தாலவன புராணமென்னும் திருப்பனந்தாள் புராணத்திலும் கூறப்பெற்றுள்ளன.

11. தூக்குந் துலை - புறுவைவைத்து நிறுத்த தராசு. மேக்கு - மேலே. தூயோன் : சிபிசக்கரவர்த்தி ; இவனைச் சிபிச்சோழன் என்பர் தமிழ் நூலோர், குலோத் - உலா. 17 ; இராசராச. 6 ; கலிங்கத் ; இராசபாரம் 13. புறநா. 37, 39, 43, 46 ; சிலப். 20: 52, 23: 58. 27: 166-8'.

(பி - ம்.) ‘ துலைப்புக்க ’

12. குடகக் குவடு - குடக மலையை. பொன்னி - காவிரியை. தந்தோன்-சிவூகன் ; குலோத். உலா, 15 ; இராசராச. 15, 85. தெள்ளருவி-தெளிந்த அருவிகளையுடைய. இவனைக் காவிரிச் சோழன் என்று சோழ ராஜ சரித்திரமும், கவேரராஜன் என்று சிலப்பதிகாரமும், காந்தமன் என்று மணிமேகலையும் கூறுவதோடு, திருவாலங்காட்டுச் செப்புப்பட்டயம் சித்திராதன் என்றுகூ றுகிற்கும் ; குலோத். உலா. 15 ; இராசராச, 15 ; கலிங்கத். இராசபாரம். 15.

(பி - ம்.) ‘குடகைக் ’

13. சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியும்—இன்னருளின்

14. மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனும்—மீதெலாம்

15. எண்கொண்ட தொண்ணூற்றின் மேலு மிருமூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலனும்—கண்கொண்ட

16. கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றம்
காதலாற் பொன்வேய்ந்த காவலனும்—தூதற்காப்

---

13. சென்னி - சிகரத்தில். புலியேறு இருத்தி - புலிக் கொடியை நாட்டி. கிரிதிரித்து-மேருமலையைத்திரியச் செய்து ; 155 ; இராசராச. 17. கரைகண்ட பூபதி: கரிகாலன்; குலோத், உலா, 18; "தொக்க கலியின்மூ வாயிரத்துத் தொண்ணூற்றில், மிக்க கரிகால வேந்தனுந்தான் - பக்கம், அலைக்கும் புகழ்ப்பொன்னி யாறுகரை கண்டான், மலைக்கும் புயத்தானும் வந்து,'' (சோழமண்டல. மேற்.); 'கரிகாலக் கரை' (திருச்செந்துறைச் சாஸனம்.) இவன் கரிகாலன்.

14. பொய்கை கவி கொண்டு - பொய்கையார் பாடிய களவழி நாற்பதைக் கொண்டு. வில்லவன் - சேரமான் கணைக்காலிரும்பொறை; குலோத். உலா, 20 ; இராசராச. 18 ; "பாடிய பொய்கை களவழி கேட்டுப் பழம்படியேபடிப் படிந்து, வாடிய பொறைய னைச்சிறை விட்ட மன்னவ னொரு திருமருகன்" (குலோத். பிள்ளைத். 103) ; "சேரமான், தன்னடிக் கண்டு தளைவிடுத்தா யேழ்தளையுன், பொன்னடிக்குண் டென்பதென்ன புத்தியோ" (தமிழ் விடுதூது, 88-9.) பார்த்திவன் : கோச் செங்கட் சோழன் என்னும் சோழன் செங்கணன் ; கலிங்கத். இராசபாரம். 18. மீதெலாம் - மார்பு முழுவதும்.

(பி - ம்.) 'தளைவிடுத்த' 'மீதெல்லாம்', 'ஈதல்லால்'

15. எண்கொண்ட - மதித்தல் கொண்ட. தொண்ணூற்றாறு புண் கொண்டவன் ; குலோத். உலா, 21 ; இராசராச. 19. விஜயாலய சோழன் பல பெரும்போர்களில் எதிர்த்துப் பகைவர்களை ஒடுக்கிய வீர வாழ்க்கையைக் கொண்டவன். இவனே தொண்ணூற்றாறு புண்கொண்ட வீரன்.

16 தேறல் - சிவபெருமான். குனிக்கும் - கூத்தாடும். திருமன்றம்-சிற்றம்பலம். பொன் வேய்ந்த - பொன்னோடுகளை வேய்ந்த. காவலன் : இவன் முதற் பராந்தகன், இவன் முதலாம் ஆதித்தன், என்று நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி (65) கூறும். தூதற்கா-மேலாடையைக் களையும்படி சேரனால் அவமதிக்கப்பட்ட தன் தூதன்பொருட்டு.

(பி - ம்.) 'கோதிலாத் தெற்குக்'

17. பண்டு பகலொன்றி லீரொன் பதுசுரமும்
கொண்டு மலைநாடு கொண்டோனும்—தண்டேவிக்
18. கங்கா நதியுங் கடாரமுங் கைக்கொண்டு
சிங்கா தனத்திருந்த செம்பியனும்—வங்கத்தை
19. முற்று முரணடக்கி மும்மடிபோய்க் கல்யாணி
செற்ற தனியாண்மைச் சேவகனும்—பற்றலரை
20. வெப்பத் தடுகளத்து வேழங்க ளாயிரமும்
கொப்பத் தொருகளிற்குற் கொண்டோனும்-அப்பழநூல்
21. பாடரவத் தென்னரங்க மேயாற்குப் பன்மணியால்
ஆடரவப் பாய லமைத்தோனும்—கூடல

---

17. பண்டு - முற்காலத்தில். ஈரொன்பது சுரம் - பதினெட்டுக் குறும்புகள்; குலோத். உலா, 24; இராசராச. 21. மலைநாடு - சேரநாட்டை. கொண்டோன்: முதல் இராசராசன். தண்டு ஏவி - சேனையை யனுப்பி.

(பி - ம்.) 'ஈரொன்பது சிரமும்' 'தண்டினால்'

18, கடாரம் - மலேயாவிலுள்ள 'கெடா' என்னும் நாடு. செம்பியன்: இராஜேந்திர சோழன் என்னும் கங்கைகொண்ட சோழன். வங்கத்தைமுற்றும் - காந்தளூர்ச்சாலை என்னும் இடத்தில் இருந்த சேரர் கப்பற் படை முழுவதையும்; குலோத். உலா, 25, உரை; வங்கதேசத்தை என்றலும் ஆம்.

(பி - ம்.) 'கடாரமுங் கைவரக், கங்கா புரிபுரந்த கற்பகமும்'

19. மும்மடி - மூன்றுமுறை. கல்யாணி - சளுக்கியருக் குரிய தலைநகரான கல்யாண புரம். சேவகன்: இராஜாதிராஜன். பற்றலரை - பகைவரை. வெப்பத்து-கோபத்தையுடைய. வேழங்கள் ஆயிரம்-ஆயிரம் யானைகளை; இவ்விதம் கூறுதல் ஒரு மரபு; "கண்ட நாயகர் காக்கு நவிலையில், கொண்ட வாயிரங் குஞ்சர மல்லவோ" (கலிங்கத். 385.)

(பி - ம்.) 'மும்முடி போய்க் கல்யாணம்' 'தனி யானைச்'

20. கொப்பத்து - கொப்பம் என்ற ஊரில்; இவ்வூர் கிருஷ்ணாநதிக் கரையிலுள்ள ஒரு தீர்த்தமென்றும், தற்காலத்தில் 'கித்ராபூர்' என வழங்கும் ஊராயிருக்கலாம் என்றும் கூறுவர்; (சோழர்கள். பக். 307); இராசராச. 24. கொண்டோன்: இராசேந்திரன். அப்பழநூல் என்றது வேதத்தை.

21. பாடுஅரவம் - ஓதப்படும் ஓசையையுடைய; அரங்கத்திற்கு அடை. அரங்கமேயாற்கு - அரங்கநாதருக்கு. அரவப்பாயல் - சேஷசயனம். அமைத்தோன்: இராஜமகேந்திரன்; இவன் பெயரால் ஸ்ரீரங்கத்தில் இராஜமஹேந்திரன் திருவீதி என ஒரு பிராகாரம் உள்ளது.

(பி - ம்.) 'கூடலர்', 'கூடலார்'

22. சங்கமத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் கெண்ணிறந்த
துங்கமத யானை துணித்தோனும்—அங்கவன்பின்

23. காவல் புரிந்தவனி காத்தோனு மென்றிவர்கள்
பூவலய முற்றும் புரந்ததற்பின்—மேவலர்தம்

24. சேலைத் துரந்து சிலையைத் தடிந்திருகால்
சாலைக் கலமறுத்த தண்டினான்—மேலைக்

---

22. கூடல சங்கமம்: இது துங்கபத்திரையும் கிருஷ்ணாநதியும் கூடுமிடத்திலுள்ள ஒரூர் (சோழர்கள். பக். 321.) பரணி-பரணி யென்னும் நூல். துங்கம் - உயர்வு. துணித்தோன்: வீரராஜேந்திர சோழன்; இராசராச. 25. வீரராசேந்திரன் பரணிகொண்ட வரலாறு தெரியவில்லை. அப்பரணி நூல் இறந்துபட்டது போலும்.

(பி - ம்.) 'சங்கமத்தைக்' 'துங்கமத்த'

23. அவனி காத்தவன்; அதிராஜேந்திரன்; இவன் அதிககாலம் ஆளாமல் இறந்தனன் ஆதலானும், இவன் ஆட்சியில் குறிப்பிடத்தக்க அருஞ்செயல் இன்மையாலும், அவனி காத்தவன் என்று பொதுப்படக் கூறினர். மேவலர்தம் - பகைவருடைய.

(பி - ம்.) 'முற்றும் புரிந்தவனும் மேவலார்'

24. சேல் - பாண்டியருக்குரிய மீனக்கொடி. சிலை - சேரருக்குரிய விற்கொடி. இரு கால் - இரண்டு முறை. சாலைக்கலம் - சாலை என்னு மிடத்திலிருந்த கப்பற் படை; கலம் - மரக்கலம். சாலை திருவனந்தபுரத்தைச் சார்ந்த ஒரு துறைமுகம். இது காந்தளூர்ச்சாலை எனப்படும். முதல் இராசராச சோழனைப்போல முதற்குலோத்துங்க சோழனும் இக்காந்தளூர்ச்சாலைக் கலமறுத்த செய்தி, தென்னிந்திய சாஸனங்களால் அறியலாம். தண்டு - படை. தண்டினான்: இவன் முதற் குலோத்துங்கன்; இவன் பாண்டியரையும் சேரரையும் வென்றமை, "விட்ட தண்டினின் மீனவ ரைவரும், கெட்ட கேட்டினைக் கேட்டிலை போலுநீ", "போரின் மேற் றண்டெடுக்கப் புறக்கிடும்,சேரர் வார்த்தை செவிப்பட்ட தில்லையோ", "வேலைகொண்டு விழிஞ மழித்ததுஞ், சாலை கொண்டதுந் தண்டுகொண் டேயன்றோ" (கலிங்கத். 380-82) என்னும் தாழிசைகளால் விளங்கும். "மீனவர் நிலைகெட வில்லவர் குலைதர" என்ற முதற் குலோத்துங்கனது மூன்றும் மெய்க்கீர்த்திப் பகுதியும் இதனை வலியுறுத்தும். இதுமுதல் 27ஆம் கண்ணிமுடிய விக்கிரமசோழன் தந்தையாகிய முதற் குலோத்துங் சோழன் சிறப்புகள் கூறப்படுவன.

(பி - ம்.) 'சிலையைக் கடிந்து'

25. கடல்கொண்டு கொங்கணமுங் கன்னடமுங் கைக்கொண்
டடல்கொண்ட மாராட் டரசை—உடலை

26. இறக்கி வடவரையே யெல்லையாத் தொல்லை
மறக்கலியுஞ் சுங்கமு மாற்றி—அறத்திகிரி

27. வாரிப் புவனம் வலமாக வந்தளிக்கும்
ஆரிற் பொலிதோ ளபயற்குப்—பார்விளங்கத்

---

25. மேலைக் கடல்கொண்டு - மேல்கடலைத் தனக்கு உரிமையாகக் கொண்டு. கொங்கணம் - வடகன்னடம்; இது சங்க நூல்களில் 'கொண்கானம்' என வழங்கும். கன்னடம் - தென்கன்னடம். கன்னட தேசத்தரசர்களுக்கும் சோழர்களுக்கும் பகைமை இருந்து வந்ததென்பது 'சோழனுடைய ஐசுவரியத்தின் பெருமை கண்டு சகியாதே வெம்பித்திரியும் கன்னட ராசனான சந்த்ர கௌரிவல்லபன் யுத்தம் செய்ய, அவனைக் கலியாணபுரத்தினின்றும் தாக்க, அவனும் தூரப்புண்டு விந்தாடவியிற் சென்று புக' (தக்க. 62, உரை) என்னும் பகுதியால் அறியப்படும். மாராட்டரசை - பெரிய ராஷ்டிரகூடர்களுக்கு அரசனை; 72.

(பி - ம்.) 'அடல்கொண் டமரா டரச ருடலை' 'மாரட்டரசை'

26. வடவரை - இமயமலை. எல்லையா - தன் நாட்டிற்கு எல்லையாக. மறக்கலி - கொடுமையுடைய செருக்கை; கலி - துன்பமும், வறுமையும் ஆம். சுங்கமும் மாற்றி - பரதாழ்வான் முதலாக வந்த சுங்கத்தையும் தவிர்த்து: தவிர்த்தவன் முதற் குலோத்துங்க சோழன்: குலோந். உலா, 26; இராசராச. 26. இதனால் முதற் குலோத்துங்கனுக்குச் சுங்கம் தவிர்த்த குலோத்துங்க சோழ தேவர் என்ற பெயருண்டாயிற்று. அறத்திகிரி - தருமத்தை வளர்க்கும் ஆக்ஞாசக்கரம்.

27. வாரிப் புவனம்-கடலை எல்லையாக உடைய உலகத்தை. வலமாக வருதல் ஒரு மரபு; 'குணகடல் பின்ன தாகக் குடகடல், வெண்டலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப, வலமுறை வருதலு முண்டென்று (புறநா. 31 : 13-5); 'வங்க மறிகடல் சூழெழு பார்வலம் வந்த மனுகுல சோழனை' (வி. பா, 17-ஆம் போர். 66.) ஆரிற்பொலி - ஆத்திமாலையால் விளங்கிய. அபயற்கு - முதற்குலோத்துங்க சோழனுக்கு. அபயன் கலிங்கத். 2, 13, 16.

(பி - ம்.) 'வாரித் திகிரி' வலமாகத் தந்தளிக்கும்,'

28. தோன்றியகோன் விக்கிரம சோழன் றொடைத்தும்பை
மூன்று முரசு முகின்முழங்க—நோன்றலைய

2 . மும்மைப் புவனம் புரக்க முடிகவித்துச்
செம்மைத் தனிக்கோ றிசையளப்பத்—தம்மை

30. விடவுட் படுத்து விழுக்கவிகை யெட்டுக்
கடவுட் களிறு கவிப்பச்—சுடர்சேர்

31. இணைத்தார் மகுட மிறக்கி யரசர்
துணைத்தா ளபிடேகஞ் சூடப்—பணைத்தேறு

---

28. தொடைத்தும்பை - தும்பை மாலையை அணிந்த. மூன்று முரசும் - வீர முரசும், நியாய முரசும், தியாக முரசும்; 121, 272; மண முரசுடனே ஏனை யிரண்டு முரசென்பாருமுளர்; புறநா. 58: 12, உரை. முகில் முழங்க - மேகத்தைப் போல ஒலிக்க. வாத்தியங்களுக்கும் போருக்குரிய பூவைச் சூட்டுதல் மரபு: "பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக், குருதி வேட்கை யுருகெழு முரசம்" (புறநா. 50 : 4-5); "நினது, தாம முரசு" (294) என்பர் பின். நோன்தலைய - வலிய இடத்தையுடைய.

(பி - ம்.) 'முரச முகில்'

29. மும்மைப் புவனம்-தமிழ் நாட்டின் மூன்று பிரிவுகள். இதனாற் சில சோழ அரசர்கள் திரிபுவன சக்கரவர்த்திகள் என்று வழங்கப்பெறுவர். மும்மை எண்ணின் மேல் நின்றது. "ஒருமைச் செயலாற்றும்" (குறள், 835) என்பதுபோல. திசை அளப்ப - எட்டுத் திசைகளையும் தனக்கு உள்ளாக்க. தம்மை என்றது திசைகளை.

(பி - ம்.) 'முடிசூடிச்,' 'முடிசூட்டிச்' 'தம்முள் விட'

(30.) விட உட்படுத்து - மிகவும் உள்ளே அடக்கி. விழுக்கவிகை - சிறந்த குடை. எட்டு கடவுட்களிறு-எட்டுத் திசைகளிலுமுள்ள தெய்வத் தன்மை பொருந்திய யானைகளை. கவிப்ப - உள்ளே அடக்க; "காத்துக் குடையொன்று லெட்டுத் திசைகவித்த, வேத்துக் குலகிரியின் மேருவே" (330.)

(பி - ம்.) 'விடவுட் படுத்த' 'களிறும்'

31. இணைத்தார் மகுடம் - இரண்டு மாலைகளை யணிந்த கிரீடத்தை; என்றது சூடும் பூவையும் அடையாளப்பூவையும்; "கண்ணியுந் தாரு மெண்ணின ராண்டே" (தொல். மரபு. 79.) இறக்கி - நீக்கி. அரசர்-மற்ற சிற்றரசர். துணைத்தாள் அபிடேகம் - விக்கிரம சோழனது இரண்டு கால்களாகிய கிரீடத்தை; "பலர்முடிமேல், ஆர்க்குங் கழற்கா லனகன்"(69-70) பணைத்து ஏறு - பெருத்து மேற்கிளம்பும்.

(பி - ம்.) 'சூட்டப்'

32. நீராழி யேழு நிலவாழி யேழுந்தன்
போராழி யொன்றாற் பொதுநீக்கிச்—சீராழி

33. மேய திகிரி கிரிமே கலையல்குல்
தூய நிலமடந்தை தோள்களினும்—சாயலின்

34. ஓது முலகங்க ளேழுந் தனித்துடைய
கோதில் குலமங்கை கொங்கையினும்—போதில்

35. நிறைகின்ற செல்வி நெடுங்கண் களினும்
உறைகின்ற நாளி லொருநாள்—அறைகழற்கால்

---

32. நீராழி எழும்-கடல்களேழும். நிலவாழியேழும்-எழு தீவுகளும்; ஆழி - மண்டலம். கடலேழு, பூமி எழு: குலோத். உலா, 150 - 51, போராழி ஒன்றால் - போரைச் செய்யும் தனது சக்கரம் ஒன்றால், பொது நீக்கி - மற்ற அரசருக்கும் பொது என்பதை விலக்கி; 58; "பொதுமட்க, வாங்கெயி னேமி வரையாக மண்ணாண்டு" (குலோத். உலா, 12-3.) சீராழி - சிறப்புற்ற புறக்கடல்.

(பி - ம்.) 'சீராரும்'

33. மேய - அப்பாலுள்ள. திகிரிகிரிமேகலை - சக்கரவாளகிரியாகிய மேகலையையணிந்த. நிலமடந்தை தோள்களில் இருத்தல்; "தடமுலைப் பார்மடந்தை தன்னுடனே தோளிற், சுடர்மணிக் கேயூரஞ் சூழ" (46.) சாயல் - அழகு.

(பி - ம்.) 'விரிமேகலை'

34. உலகங்களேழும் தனித்துடைய குலமங்கை : விக்கிரமசோழன் தேவியின் பெயர்; இவள் பெயர் தியாகபதாகை என்று வழங்கும்; 39;

இந்த உலா விக்கிரம சோழனது ஆட்சியின் பிற்பகுதியில் ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்றது. அவன் முதன்மனைவியும் பட்டத்துத் தேவியுமான முக்கோக் கிழானடி என்பாள், அவன் ஆட்சியின் ஐந்தாறு ஆண்டுகளுக்குள் இறந்திருக்கவேண்டும்; (S. I. I. III பக். 181-2) ஆதலின், இக்கண்ணியில் கூறப்பெறும் உலகங்களேழுடைய குலமங்கை அவனது இரண்டாவது மனைவியும், பின் பட்டத்துத்தேவியுமான, தியாக பதாகை என்பவளே ஆவள். கண்ணிகள், 39, 40 இல், உலகமேழுடைய பெண்ணணங்கு, பெண் சக்கரவர்த்தி என்று கூறிப்பிட்டுள்ளவையும் மேற் கூறிய தியாகபதாகையையே குறிப்பனவாம்.

35. போதில் நிறைகின்ற செல்வி : திருமகள்.
(பி - ம்.) 'நாளி ளொருநாள்'

36. தென்னர் திறையளந்த முத்திற் சிலபூண்டு
தென்னர் மலையாரச் சேறணிந்து—தென்னர்

37. வரவிட்ட தென்ற லடிவருட வாட்கண்
பொரவிட்ட பேராயம் போற்ற—விரவிட்ட

38. நித்திலப் பந்தர்க்கீழ் நீணிலாப் பாயலின்மேல்
தொத்தலர் மாலைத் துணைத்தோளும்—மைத்தடங்

---

36. தென்னர் - பாண்டியர். திறையாக அளந்த முத்து. மலை - பொதியில் மலை. ஆரச்சேறு - சந்தனக் குழம்பை ; "தன்கடற் பிறந்த முத்தி னாரமும், முனைதிறை கொடுக்குந் துப்பிற் றன்மலைத், தெறலரு மரபிற் கடவுட் பேணிக், குறவர் தந்த சந்தி னாரமும், இருபே ராரமு மெழில்பெற வணியும்" (அகநா. 13: 1-5); "கோவா மலையாரங் கோத்த கடலாரம், தேவர்கோன் பூணாரந் தென்னர்கோன் மார்பினவே" (சிலப்.17: உள்வரி வாழ்த்து.)

(பி - ம்.) 'சேறளைந்து'

37. தென்னர் வரவிட்ட தென்றல் என்றது பாண்டிநாட்டிலுள்ள பொதியில்மலையில் தோன்றி வடக்கே செல்லுதல் பற்றி; "மலையத் தோங்கி மதுரையின் வளர்ந்து, புலவர் நாவிற் பொருந்திய தென்றல்", "புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பிற், பொதியிற் றென்றல் போலா தீங்கு, மதுரைத் தென்றல் வந்தது காணீர்" (சிலப். 13: 25 - 6, 130-32.) பேராயமென்றது மகளிரை; "இன்னகை யாயமோ டிருந்தோற் குறுகி" (சிறுபாண். 220) ; 'இவர் அரசனுக்குப் பாட்டாலும் கூத்தாலும் வார்த்தையாலும் மகிழ்ச்சியைச் செய்யும் மகளிர்' (பொருந. 84-5, ந), விரவிட்ட - கலந்த.

(பி - ம்.) 'போராயம் போற்ற' 'வரவிட்ட'

38. நிலாப் பாயல் - நிலாவைப் போன்ற வெண்மையான படுக்கை. பாயலின் மேல் எய்திய (40) என இயைக்க. தொத்து அலர்மாலை - பூங்கொத்துக்கள் அலர்ந்த மாலையை அணிந்த. துணை - இரண்டு ; இதனைக் கண்ணோடும் முலையோடும் கூட்டுக.

(பி - ம்.) 'பாயன்மேற்'

39. கண்ணு முலையும் பெரிய களியன்னம்
எண்ணு முலகங்க ளேழுடைய—பெண்ணணங்கு

40. பெய்த மலரோதிப் பெண்சக்ர வர்த்தியுடன்
எய்திய பள்ளி யினிதெழுந்து—பொய்யாத

41. பொன்னித் திருமஞ் சனமாடிப் பூசுரர்கைக்
கன்னித் தளிரறுகின் காப்பணிந்து—முன்னை

42. மறைக்கொழுந்தை வெள்ளி மலைக்கொழுந்தை மோலிப்
பிறைக்கொழுந்தை வைத்த பிரானைக்—கறைக்களத்துச்

---

39. தோளும், கண்ணும், முலையும் பெரிய என்றது இவை பெருத்திருத்தல் உத்தம இலக்கணம் என்பதுபற்றி; "அகலல்குல் தோள் கண்ணென மூவழிப்பெருகி" (கலி. 108 : 2.) களியன்னம் என்றது அன்பின் மிகுதிக்குக் கூறியது; "ஆதரம் பெருகு கின்ற வன்பினு லன்ன மொத்தும்" (சீவக. 189.) உலகங்க ளேழுடைய பெண்ணணங்கு : உலக முழுதுடையாள்; 34 குறிப்.

40. ஓதி - கூந்தலையுடைய. பெண் சக்ரவர்த்தி: பட்டத்துத் தேவி; இவள் 34 ஆம் கண்ணியிற் குறிப்பிட்ட தியாகபதாகை என்பவள். பட்டத்துத்தேவியைப் பெண் சக்ரவர்த்தி என்றல்; : குலோத். உலா, 31, உரை; "பெண் சக்ரவர்த்தி முகத்திரண்டு, விழியும் புருவமு மாகியிப் போதுன்னை வெல்கின்றவே" (தமிழ் நாவலர் சரிதை, 145.) பள்ளி - இங்கே துயில்.

(பி - ம்.) 'உடனெழுந்து'

41. பொய்யாத (40) பொன்னி - பருவம் பொய்த்தலில்லாத காவிரியாற்றின்; "வான்பொய்ப்பினுந் தான்பொய்யா, மலைத்தலைய கடற் காவிரி" (பட்டினப். 5-6.); 'தவாநீர்க் காவிரிப்பாவை' (மணி. 3 : 55.) பூசுரர் - அந்தணர். கன்னித் தளிர் அறுகு - இளைய தளிராகிய அறுகின். அறுகு : மங்கலப் பொருள்; காப்புப் பொருள்களில் ஒன்றுமாம்; "அறு கெடுப்பா ரயனுமரியும்" (திருவா. திருப்பொற் சுண்ணம். 5); "அறுகு வெண் மலரளாய வாசநீர்" (சீவக. 2428.)

(பி - ம்.) 'பொன்னித்துறை மஞ்சனம்' 'புதுமஞ்சனம்' 'முன்னர்'

42. மோலி : மௌலி என்பதன் விகாரம். கறை - நஞ்சு. களம் - கழுத்து.

(பி - ம்.) 'மௌலிப் பிறைக்'

43. செக்கர்ப் பனிவிசும்பைத் தெய்வத் தனிச்சுடரை
முக்கட் கனியை முடிவணங்கி—மிக்குயர்ந்த

[அலங்காரங்கள் செய்துகொள்ளுதல்]

44. தானத் துறைமுடித்துச் சாத்துந் தகைமையன
மானக் கலன்கள் வரவருளித்—தேன்மொய்த்துச்

45. சூழு மலர்முகத்துச் சொன்மா மகளுடனே
தாழு மகரக் குழைதயங்க—வாழும்

46. தடமுலைப் பார்மடந்தை தன்னுடனே தோளிற்
சுடர்மணிக் கேயூரஞ் சூழப்—படரும்

47. தணிப்பில் பெருங்கீர்த்தித் தைய லுடனே
மணிக்கடகங் கையில் வயங்கப்—பிணிப்பின்

---

43. செக்கர்ப்பனிவிசும்பு என்றது சிவந்த நிறமுடைமை பற்றி; "செவ்வா னன்ன மேனி" (அகநா. கடவுள். 8); "செக்க ரீசனை யொத்தது" (கந்த. குமாரபுரி. 3.) கனி - கனிபோல் இன்பமளிப்பவர். 42-3 ஆம் கண்ணிகளிற் சிவபெருமானை வணங்கியமை கூறப்பட்டது.

(பி - ம்.) 'செக்கர்த் தனிவிசும்பைத்'

44. தானத்துறை - தானத்தின் கூறுபாடுகள். சாத்தும் தகைமையன - தான் அணிந்து கொள்ளும் பெருமையை யுடையனவாகிய. மானக்கலன்கள் - பெருமையையுடைய ஆபரணங்களை. தேன் - வண்டு.

(பி - ம்.) 'தானத் தொழின்முடித்து' 'தகைமையென', 'தகைமையால்' 'மானற் கலன்கள்'

45. மலர் முகத்து - தாமரைமலரைப் போன்ற முகத்தில். சொன்மாமகள் - சரசுவதி; 3 : 367. மகரக்குழை தயங்க - மகரகுண்டலம் விளங்க.

46. பார்மடந்தை தன்னுடனே - பூமியாகிய பெண்ணோடு. அரசர் தோளில் பூமி இருப்பதாகக் கூறுதல் மரபு; "மண்முழுது மோங்கிய, கொற்றப் புயமிரண்டாற் கோமா னகளங்கன், முற்றப் பரித்ததற்பின்" (58 9.) கேயூரம் - தோள்வளை. படரும் கீர்த்தி என்க; "கொழுந்தோடிப் படர்கீர்த்திக் கோவேந்தன்" (கம்ப. 1.5 : 59.)

47. கீர்த்திமகள் கையிலிருப்பதாகக் கூறியது கொடையினாற் புகழ் பெறுதல் பற்றி. தணிப்பு - குறைவு. வயங்க - விளங்க. பிணிப்பின் - ஆசையினால்.

(பி - ம்.) 'பணிப்பின்', 'பணிப்பெண்'

48. முயங்குந் திருவுடனே முந்நீர் கொடுத்த
வயங்கு மணிமார்பின் மல்க—உயங்கா

49. அருங்கொற்ற மாக்கு மணங்கி னுடனே
மருங்கிற் றிருவுடைவாள் வாய்ப்பப்—பொருந்திய

50. அண்ணற் படிவத் தரும்பே ரணியணிந்து
வண்ணத் தளவில் வனப்பமைந்து—கண்ணுதலோன்

51. காமன் சிலைவணக்க வாங்கிய கட்டழகு
தாம முடிவணங்கத் தந்தனைய—காமருபூங்

---

48. திரு - லக்ஷ்மி. முந்நீர் : இங்கே திருப்பாற்கடல். மணி - கௌஸ்துபம். உயங்கா - வருந்தாமல்.

(பி - ம்.) 'வயங்கா', 'முயங்கா'

49. கொற்றம் ஆக்கும் அணங்கு : துர்க்கை. துர்க்கை ஆயுதத்தில் இருத்தல் ; "தன்னிடத்து உறையும் கொற்றவையுடைய கோபத்தின் மிகுதியினாலே தான் விளங்கும் அச்சம் தோன்றும் நெடிய வேலினையும்" (சிறுபாண். 94, ந.) மருங்கு - இடை. 45 முதல் 49 முடிய உள்ள கண்ணிகளில் சொன்மகள் முதலியவர்கள் அரசன் அங்கங்களில் அமைந் திருப்பதாகக் கூறப்பெற்றுள்ளது.

(பி - ம்.) 'கொற்ற மார்க்கும்' 'வாய்ப்பத் திருந்திய'

50. அண்ணற்படிவத்து - சிறந்த தன்வடிவத்தில். பேரணி ; 170. அளவில் வண்ணத்து வனப்பு அமைந்து - அளவில்லாத நிறங்களை யுடைய பேரழகு அமைந்து. வனப்பு - பல உறுப்பும் திரண்டவழிப் பெறும் அழகு ; தொல். செய்யுள். 235, பேர். கண்ணுதலோன் - சிவபெருமான்.

(பி - ம்.) 'வண்ணப் படிவத்து', 'அண்ணற் பருவத்து' 'வனப் பமைத்து'

51. காமன் சிலை வணக்க - தன் தவத்தைக் கலைக்கும் பொருட்டு மன்மதன் சிலையை வளைக்க. கண்ணுதலோன் வாங்கிய கட்டழகு ; கட்டழகு - மிகுதியான அழகு. தாமமுடி வணங்கத் தந்தனைய - கண்ணுத லோன் காமனிடமிருந்து வாங்கிய அவன் கட்டழகை விக்கிரமன் அக் கண்ணுதலோனைத் தன் தாமமுடியினால் வணங்க, அச்சிவபிரான் அவனுக்குத் தந்தருளியது போல. தாமமுடி - மாலையணிந்த கிரீடம் ; தாமம் : ஒளியுமாம்.

(பி - ம்.) 'சிலைவாங்க' 'முடிபுனையத்', 'முடிவணங்கித்' 'தாமருசீர்த்'

[பட்டத்து யானை]

52. கோலத் தொடும்பெயர்ந்து கோயிற் புறநின்று
காலத் ததிருங் கடாக்களிறு—ஞாலத்துத்

53. தானே முழங்குவ தன்றித் தனக்கெதிர்
வானே முழங்கினுமவ் வான்றடவி—வானுக்

54. கணியு மருப்பு மடற்கையு மின்மை
தணியும் யமராச தண்டம்—தணியாப்

55. பரிய பொருங்கோ டிணைத்துப் பணைத்தற்
கரிய தொருதானே யாகிக்—கரிய

---

52. காமருபூங் கோலத்தொடு - விருப்பம் மருவிய அழகிய அலங்காரத்தோடு. பெயர்ந்து - அலங்கார மண்டபத்தினின்றும் நீங்கி. கோயிற்புறம் - அரண்மனைக்கு வெளியே. காலத்து - தனக்குரிய காலத்தில். கடாக் களிறு - மதத்தையுடைய ஆண்யானை ; இஃது அயிராபதம் என்று கூறப்படும் ; "பாழி யயிரா பதப்பகடும்", "பரிக்கு மயிரா பதமே", "அயிரா பதமேசீ யன்றே" (272, 289, 304.) அரசர் ஏறும் யானையை அயிராவணம் என்றலும் மரபு ; "ஆம்பான் மயிர்வேய்ந் தயிராவண மேறி னானே" (சீவக 3046.)

(பி - ம்.) 'காலத்திருக்குங்'

53. வான் - மேகம்.

(பி - ம்.) 'தனக்கெதிரே', 'தனக்கெதிர' 'வானிற்'

54. அணி - ஓடை முதலியன. மருப்பும் கையும் இல்லாமையால் ; கை - துதிக்கை. தணியும் - தன் கோபம் தணியும். யமராஜதண்டம் போன்றது.

(பி - ம்.) 'அடர்க்கையுமன்றித்'

55. பரிய - பருத்த. பணைத்தற்கு - தன்னிடமிருந்து பகைவர் தப்புவதற்கு ; "பணையே பிழைத்தல் பெருப்பு மாகும்" (தொல். உரி. 41) ; "அமர்க்க ணமா னருநிற முள்காது, பணைத்துவீழ் பகழி" (நற். 165 : 1–2.)

(பி - ம்.) 'பெருங்கோ டணைத்துப்', 'பெருங்கோ டிணைத்துப்' 'புணைத்தற்குரிய' 'யாகிப் பெரிய'

56. மலைக்கோ டணைத்து மடித்திடியக் குத்தும்
கொலைக்கோட்டு வெங்கால கோபம்—அலைத்தோட

57. ஊறு மதந்தனதே யாக வுலகத்து
வேறு மதம்பொறா வேகத்தால்—கூறொன்றத்

58. தாங்கிப் பொறையாற்றாத் தத்தம் பிடர்நின்றும்
வாங்கிப் பொதுநீக்கி மண்முழுதும்—ஓங்கிய

59. கொற்றப் புயமிரண்டாற் கோமா னகளங்கன்
முற்றப் பரித்ததற்பின் முன்புதாம்—உற்ற

60. வருத்த மறமறந்து மாதிரத்து வேழம்
பருத்த கடாந்திறந்து பாயப்—பெருக்கத்

---

56. மலைக்கோடு - மலையின் சிகரங்கள். அலைத்து ஓட. கால கோபம் - யமனது கோபமே ஓர் உருவெடுத்தது போன்றது ; முன் 54 யமராச தண்டம் என்றதும் நோக்குக.

(பி - ம்.) 'மலைக்கோ டிணைத்து', 'மலைக்கோ டடித்து', 'மலைக் கோ டடைய'

57. தனது என்றது விக்கிரம சோழனது பட்டத்து யானையை. வேறு மதம் பொறா வேகத்தால் - வேறு யானைகளின் மதத்தைப் பொறுக்காத கோபத்தால்; யானை வேறுயானையின் மதங்களைப் பொறாமை : "பாத்த யானையிற் பதங்களிற் படுமத நாற, காத்த வங்குச நிமிர்ந்திடக் கால்பிடித் தோடிப், பூத்த வேழிலைப் பாலையைப் பொடிப்பொடி யாகக், காத்தி ரங்களாற் றலத்தொடுந் தேய்த்ததோர் களிறு" (கம்ப. 1. வரைக் காட்சி. 6.) கூறு ஒன்ற - தம்முடைய கூறு பொருந்த.

(பி - ம்.) 'மதன்றனதே' 'மதம் பெறா' 'கூறொன்றால்'

58. பொறையாற்றா - சுமத்தல் முடியாத. தத்தம் பிடர் - திக்கு யானைகளின் கழுத்து. பொது நீக்கி : 32. மண்முழுதும் புயமிரண்டால் பரித்ததற்பின் என இயைக்க ; 288-9.

(பி - ம்.) 'பொறை நீக்கி' 'வாங்கிப் பொறையை மனமுழுதும்'

59. அகளங்கன் : 256. பரித்தல் - தாங்குதல்.

(பி - ம்.) 'பரிப்பதற்கு முன்புதாம்'

59-60. முன்புதாம் உற்ற வருத்தம் - அகளங்கன் உலகத்தைத் தாங்குவதற்கு முன்பு தாமடைந்த வருத்தம். மாதிரத்து வேழம் - திக்கு யானைகள். கடாம் - மதம். மதம் பொறாவேகத்தால் சுவடு பிடித் தோடி (61.) என்று கூட்டுக.

(பி - ம்.) 'வருத்த மதமறந்து', 'வருத்த முறமறந்து' 'கடாந் திளைத்துப்'

61. துவற்று மதுரச் சுவடுபிடித் தோடி
அவற்றி னபரங்கண் டாறி—இவற்றை

62. அளித்தன னெங்கோமா னுதலா லின்று
களித்தன வென்றுவக்குங் காற்று—நெளித்திழிய

63. வேற்றுப் புலத்தை மிதித்துக் கொதித்தமரில்
ஏற்றுப் பொருமன்ன ரின்னுயிரைக்—கூற்றுக்

64. கருத்து மயிரா பதநின் றதனை
எருத்தம் பிடிபடியா வேறித்— திருத்தக்க

---

61. துவற்றும் - தூற்றும்; "தூஉ யன்ன துவலை துவற்றலின்" (மலைபடு. 361.) மதுரச்சுவடு - இனிமையான மதத்தின் சுவட்டை. சுவடு என்றது மணத்தை. அபரம் கண்டு - தோற்றோடினமையால் அவற்றின் பின்புறத்தைப் பார்த்து; அபரம்; சீவக. 806, 2154. ஆறி - கோபந்தணிந்து.

(பி - ம்.) 'சுவடு மிதித்' 'னவரங்கண்'

62. இவற்றை அளித்தனன் என்றது திக்கு யானைகள் சுமந்த உலகைத் தாமொருவனே தாங்கி அவற்றின் வருத்தத்தைத் தீர்த்தமை பற்றி. களித்தன : களித்தவை திசையானைகள். யானைக்குக் காற்று உவமை: முருகு. 82, அடிக்.

(பி - ம்.) 'உவக்குங் காலி'

63. நெளித்தலும் இழிதலும் வேற்றுப் புலத்தின் தொழில். வேற்றுப் புலத்தை - பகையரசாது நாட்டை. பொரும் மன்னர் - போர் செய்யும் பகையரசாது.

(பி - ம்.) 'கொதித் தமருள்' 'பொதுமன்னர்'

64. கூற்றுக்கு அருத்தும் - யமனுக்கு உண்பிக்கும். அயிராபதம்: பட்டத்து யானையின் பெயர்; 52, குறிப்.; 'அகளங்கா வுன்ற னயிராபதத்தின், நிகளங்கால் விட்ட நினைவு' (தமிழ் நாவலர் சரிதை, 126.) பிடிபடியா - பெண்யானை படியாக உதவ. நின்றதனை - வந்து நின்றதை. கோயிற்புறம் நின்று அதிரும் களிறுகிய (52), அயிராபதம் நின்றதனைப் பிடிபடியா ஏறி என இயைக்க;

(பி - ம்.) 'அயிராவதம்' 'இருத்தும் படிபிடியா', 'இருத்திப் பிடிபடியா'

65. கொற்றக் கவிகை நிழற்றக் குளிர்ந்திரட்டைக்
கற்றைக் கவரியிளங் காலசைப்ப—ஒற்றை

66. வலம்புரி யூத வளைக்குல மார்ப்பச்
சிலம்பு முரசஞ் சிலம்பப்—புலம்பெயர்ந்து

67. வாட்படை கொட்ப மறமன் னவர்நடுங்கக்
கோட்புலிக் கொற்றக் கொடியோங்கச்—சேட்புலத்துத்

[உடன் வருவோர்]

68. தென்னரு மாளுவருஞ் சிங்களருந் தேற்றுதகை
மன்னருந் தோற்க மலைநாடு—முன்னம்

---

65. கொற்றக் கவிகை - அரசுரிமைக்குரிய குடை. இளங்கால் அசைப்ப - மெல்லிய காற்றை வீச. ஒற்றை வலம்புரி : 256.

(பி - ம்.) 'கவரிகளின்'

66. வலம்புரி ஊத அதன் பின் மற்ற சங்குகள் ஊதப்படுதல்: குலோத். உலா, 84; இராசராச. 49. "ஒருவலம்புரி தழங்கொலி முழங்கியெழவே, உடன் முழங்கு பணிலம் பலமுழங்கி யெழவே" (கலிங்கத். 283.) சிலம்புமுரசம் - ஒலிக்கும் மூன்று முரசங்கள். சிலம்ப - ஒலிக்க. புலம்பெயர்ந்து - தம்முடைய நாட்டைவிட்டு நீங்கி.

(பி - ம்.) 'வளைக்குலங்கள்' 'புலம்பயில்', 'புலப்பெயர்', 'புலம்பெயர'

67. வாட்படை கொட்ப - வாளையேந்திய சேனை சுற்றிவர. கொடி ஓங்க - கொடி மேலாக விளங்க. சேட் புலத்து - நெடுந்தூரத்திலுள்ள.

(பி - ம்.) 'வாட்படை தோற்ற' 'னவர் நெருங்க'

68. தென்னர் - பாண்டியர். மாளுவர் - மாளுவதேசத்தவர். சிங்களர் - இலங்கையரசர். உதகை மன்னர் - குடகு நாட்டரசர்; குலோத். உலா, 24; இராசராச. 21; கலிங்கத். 201. மலைநாடு - சேரநாடு. தென்னர் முதலியோர் சோனுக்குத் துணையாயிருந்த அரசர் போலும்.

(பி - ம்.) 'தென்னவரு மாளவருஞ் சிங்களருங் கொங்கணத்து, முன்னவருந்' 'மலை நாடர்', 'மலை நாட்டார்'

69. குலையப் பொருதொருநாட் கொண்ட பரணி
மலையத் தருந்தொண்டை மானும்—பலர்முடிமேல்

70. ஆர்க்குங் கழற்கா லனகன் றனதவையுள்
பார்க்கு மதிமந்த்ர பாலகரிற்—போர்க்குத்

71. தொடுக்குங் கமழ்தும்பை தூசிமுனைநெடுஞ் சூடக்
கொடுக்கும் புகழ்முனையர் கோனும்—முடுக்கரையும்

---

69. குலைய - அழியும்படி. பரணி மலைய - பரணியென்னும் நூலைச் சூடும்படி; மலைதல்: சூடுதல், 'பாணர் தாமரை மலையவும்' (புறநா. 12); 'வேங்கையொடு தொடுத்த விளங்கு விறன்மாலை, மேம்பட மலைதலும்' (சிலப். 25 : 139.) தொண்டைமான் - கருணாகரத் தொண்டைமான்; முதற் குலோத்துங்க சோழன் ஆட்சியில் இவன் கலிங்கம் எறிந்தவன். இவனே விக்கிரம சோழன், ஆட்சியிலும் இருந்து, பாண்டிமண்டலம், ஈழமண்டலம், மலைநாடு என்னும் சேரமண்டலம், மாளவதேயம் இவற்றை வென்று சோழ ஆட்சிக்கு உட்படுத்திய பெரும் போர்த்தலைவன்; இவன் பிற்காலத்தில் பாண்டி மண்டலத்துப் பிரதிநிதியாக இருந்தவன் என்று அறியப்படுகிறது; S. I. I. 262 of 1929. பலர் - பல் அரசர். முடிமேல் - தம்முடைய முடிமேல்.

(பி - ம்.) 'பலமுடிமேல்'

70. ஆர்க்கும் கழற்கால் - சூடிக்கொள்ளும் கழலையணிந்த காலையுடைய. அனகன் - பாவமற்றவன்: விக்கிரமசோழன்; 299, 306. மதிமந்த்ர பாலகரில் - இயற்கையறிவையுடைய மந்திரிமாருள்.

(பி - ம்.) 'கழற்கா லபயன்' 'பார்க்குமதி மந்திர பாலகரிற்'

71. தூசு - ஆடை. போருக்குச் செல்வோர் புதிய ஆடை உடுத்தல்; "வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇ.........செருமுக நோக்கிச் செல்கென விடுமே" (புறநா. 279 : 8-11.) முனையர்கோன் - முனையதரையன். ஆனை வாரி தொண்டைமண்டல முனைய தரைய பல்லவராயன் என்றொரு அரசியல் அதிகாரி, விக்கிரமசோழன் ஆட்சியில் இருந்தவன்; S. I. I. 378 of 1913. இவனைப்பற்றிய மற்றை வரலாறுகளைத் : தமிழ் நாவலர் சரிதையிற் காண்க. முடுக்கர் - கண்டர்.

(பி - ம்.) 'தொடுக்கப் புனைதும்பை', 'தொடுத்துச்', 'சூடிக், கொடுத்த', 'கொடுத்துப் புனைமுனையர்'

72. கங்கரையு மாராட் டரையுங் கலிங்கரையும்
கொங்கரையு மேனைக் குடகரையும் - தங்கோன்

73. முனியும் பொழுது முரிபுருவத் தோடு
குனியுஞ் சிலைச்சோழ கோனும் - சனபதிதன்

74. தோளுங் கவசமுஞ் சுற்றமுங் கொற்றப்போர்
வாளு வலியு மதியமைச்சும் - நாளுமா

75. மஞ்சைக் கிழித்து வளரும் பொழிற்புரிசைக்
கஞ்சைத் திருமறையோன் கண்ணனும் - வெஞ்சமத்துப்

---

72. கங்கர்: இவர்களுடைய ராஜதானி தலைக்காடு; இப்பரம்பரையில் வந்தவனே நன்னூல் செய்வித்த சீயகங்கன். மாராட்டர்: 25. கொங்கர் - கொங்கு நாட்டிலுள்ளவர். குடகர் - குடக நாட்டார்.

(பி - ம்.) 'மாறுட்டரையுங்'

73. முனியும் பொழுது - கோபிக்கும் பொழுது. முரி புருவத் தோடு குனியும் - வளைகின்ற புருவத்தோடு தானும் வளையும்; குனிதல் சிலையின் தொழில். சனபதி - சோழர்களுக்குப் பெயர்; நரபதி, சனநாதன் என்பனபோல; தக்க. 9, உரை. சோழகோன்: இவன் விக்கிரம சோழனது சிற்றரசர்களுள் ஒருவன்; சிறந்த போர் வீரனுமாவன்; (S. I. I. விருத்தாசலம் சாஸனம்.) 63 of 1918.

(பி - ம்.) 'முரிபுருவக் கோடு'

74. தோள் - கை; "தோளுற்றொர் தெய்வந் துணையாய்த்துயர் தீர்த்த வாறும்" (சீவக. 10.) சுற்றம் - மந்திரச் சுற்றம். மதியமைச்சு - இயற்கை யறிவையுடைய மந்திரி. நாளும் ஆம் கண்ணன் என இயைக்க.

(பி - ம்.) 'வாளும் புலியும்' 'மதியமைத்து' 'நாளுமாய்'

75. மஞ்சை - மேகத்தை. வளர்தல் பொழிலின்தொழில். புரிசை- மதிலையுடைய. கஞ்சை-கஞ்சாநகரம் என்று இப்பொழுது வழங்குகின்றது; இது கஞ்சாறு நகரம் என்பதின் மரூஉ போலும். அங்ஙனமாயின், அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான மானக்கஞ்சாறர் என்பார் இவ்வூரினர் என்று தெரிகிறது. கஞ்சை - கஞ்சாறு; 'மலைசெய் மதிற் கஞ்சை மானக்கஞ் சாறெனும் வள்ளலே' (நம்பியாண்டார் நம்பி, திருத்தொண்டர் திருவந்தாதி: 13.); கஞ்சாறு நகரம்; S. I. I. 139 of 1926. வெஞ்சமத்து - கொடிய போரில்.

(பி - ம்.) 'பெரும்புரிசை' 'வெஞ்சமரில்'

76 புல்லாத மன்னர் புலாலுடம்பைப் பேய்வாங்க
ஒல்லாத கூற்ற முயிர்வாங்கப் - புல்லார்வம்

77. தாங்கு மடமகளிர் தத்தங் குழைவாங்க
வாங்கு வரிசிலைக்கை வாணனும் - வேங்கையினும்

78. கூடார் விழிஞத்துங் கொல்லத்துங் கொங்கத்தும்
ஓடா விரட்டத்து மொட்டத்தும் - நாடா

---

76. புல்லாத மன்னர் - பகையரசாது. ஒல்லாத கூற்றம் - முன்பு அவ்வரசரைப் பார்த்தற்கும் இயலாத யமன்.

(பி - ம்.) 'ஒல்லார்தம் கூற்றம்' 'புல்லார்தம்'

77. புல்லார்வம் தாங்கும் - நீடித்திராத அன்பைத்தாங்கிய. மட மகளிர் - பகையரசருடைய தேவியர். குழைவாங்க - காதணியைக் கழற்ற; மிக்க ஆர்வமுடைய பத்தினி மகளிர் தம் கணவர் இறப்பத் தாமும் உடனே இறப்பர் ஆதலின் இதனைப்புல்லார்வம் என்றார்; காதணியும் மங்கலநாணைப் போன்ற சிறப்புடையதாதலின், கணவனையிழந்த மகளிர் அதனையும் களைதல் மரபு; குலோத். உலா, 4; " மாற்றரசர் மணிமுடியுந் திறலுந்தேசும் மற்றவர்தங் காதலிமார் குழையுந் தந்தை, காற்றளையு முடன்கழல வந்து தோன்றி " (பெரிய திருமொழி 4. 4 : 1.) வாங்கும் - வளைக்கும். வாணன் - சுத்தமல்லன் முடிகொண்டான் அல்லது வாண கோவரையன் என்னும் பெயருடைய தலைவன் என்பர்; இவன் கருணாகரத் தொண்டைமானுடன் சென்று கலிங்கப்போர் நடத்திய படைத்தலைவருள் ஒருவன்; கலிங்கத். காளிக்குக். 54. இவனது விசேடச் சிறப்புக்களை, ஸ்ரீ. மு. ராகவ ஐயங்கார், எழுதிய கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி. பக். 23-24, பார்க்க. இவன் மனைவி ஏலவார்குழலி என்பவள்; இவள், கி. பி. 1120-இல், திருவரத்துறைக் கோயிலில் நந்தாவிளக்கு வைத்தாள்; சோழர்கள், Vol. 2 ; பக். 69. வேங்கை - வேங்கிநாடு.

(பி - ம்.) 'மடமாதர்'

78. கூடார் - பகைவராது. விழிஞம்: மலை நாட்டிலுள்ள ஊர். கொல்லம்: 87. கொங்கத்து - கொங்க ராஜ்யத்து. இரட்டம் - இரட்டபாடி; ராஷ்டிரகூடமென்பர். ஒட்டம் - ஒட்ரதேசம். இராடத்தும் என்ற பாடத்திற்கு, லாடதேசம் என்று கொள்க.

(பி - ம்.) 'ஓடா விராடத்தும்'

79\. தடியெடுத்து வெவ்வே றரசிரிய வீரக்
கொடியெடுத்த காலிங்கர் கோனும் - கடியரணக்
80\. செம்பொற் பதணஞ் செறியிஞ்சிச் செஞ்சியர்கோன்
கம்பக் களியானைக் காடவனும் - வெம்பிக்

79\. காலிங்கர்கோன் - இவன் நரலோக வீரன்; அரும்பைகிழான் பொன்னம்பலக் கூத்தன் என்றுங் கூறப்பெறுவன். இவன் செய்த திருப்பணிகளும் வீரச் செயல்களும், சிதம்பரத்திலும் திருவதிகையிலு முள்ள சாஸனத் தமிழ்ப்பாட்டுக்களால் விளங்கும். இவன் மணவில் காவலன். இவன் முதற் குலோத்துங்கனது தலைமை அமைச்சனாகவும், சிறந்து விளங்கிப் பல புகழும் பட்டங்களும் எய்தியவன்; சிதம்பரம், திருவதிகை (S.A.) முதலிய ஸ்தலங்களில் பல திருப்பணிகள் செய்தவன்; இவன் முதற் குலோத்துங்கனது சேரபாண்டியப் போர்களிற் படை தாங்கிச் சென்று வெற்றி பெற்றவன்; S. I. I. 405 of 1930 & 374 of 1908. கடியரணம் - காவலையுடைய அரண்.

(பி - ம்.) 'அடியெடுத்த'

80\. பதணம் - மதிலுள் மேடை. செறி இஞ்சி - நெருங்கிய மதில். காடவர் பல்லவருள் ஒருவகையார். வெம்பி - கோபங்கொண்டு; விலக்கிய (81) என்பதனோடு இயையும். விக்கிரம சோழன் தந்தையாகிய முதற் குலோத்துங்கன் தேவியருள், காடவன்மாதேவி என்று ஒருத்தி பெயர் காணப்படுகின்றது; S. I. I. 111 of 1912. அவள் இக்காடவன் மகள் போலும். புகழேந்திப்புலவர் செஞ்சியர்கோன் ஒருவன் மீது, *ஒருகலம்பகம் பாடியதாகத் தொண்டைமண்டல சதகம் 63-வது பாட்டால் தெரிகின்றது. அக் காடவர் கோனுக்குக் கொற்றந்தை என்பது இயற் பெயர் என்பதும் அப்பாடலால் அறியலாம். இனி, புகழேந்தியார் ஒட்டக்கூத்தருக்குச் சமகாலத்தவர் ஆதலின், அக்காலத்துச் செஞ்சியர் கோனாக இருந்த காடவன், விக்கிரம சோழன் காலத்தும் விளங்கிய அவனது சிற்றரசர்களுள் ஒருவன் போலும்.

(பி - ம்.) 'பதணச் செறியிஞ்சி' 'கடாயானைக் காடவனும்'

* இக்கலம்பகப் பாடல்களுள் ஒன்றென,
"நையும் படியென்னுங்கொற்ற நங்கோன் செஞ்சி வரைமீதே
ஐயம் பெறநுண் ணிடைமடவா யகிலின் றூப முகிலன்று
பெய்யுந் துளியோ மழையன்று பிரசத் துளியே பிழையாது
வையம் பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை நாட்டாரே".
என்ற செய்யுளை, மகாவித்வான். ஸ்ரீ. ரா. ராகவ ஐயங்கார் அவர்கள், செந்தமிழ்த் தொகுதி II. பக். 401-இல் குறிப்பிட்டுள்ளார். இவ்வாலாறு தொண்டைமண்டல சதகம், 17-வது செய்யுளிலும் காண்க.

81. கலக்கிய வஞ்சக் கலியதனைப் பாரில்
விலக்கிய வேணாடர் வேந்தும் - தலைத்தருமம்

82. வாரிக் குமரிமுதல் மந்தா கினியளவும்
பாரித் தவனனந்த பாலனும் - பேரமரில்

83. முட்டிப் பொருதார் வடமண்ணை மும்மதிலும்
மட்டித்த மால்யானை வத்தவனும் - அட்டையெழக்

---

81. கலியதனை - கலியின் கொடுமையை. வேணாடு - திருவாங்கூர் இராச்சியத்தின் தென் பகுதி; 'திருவடிராச்சியம்' என வழங்குமென்பர். தலைத்தருமம் - சிறந்த தருமத்தை.

(பி - ம்.) 'வஞ்சக் கலியாணர்,' 'வஞ்சிக் கலியானைப் போரில்' 'வஞ்சிக் களியரணர்', 'வஞ்சிக் களியரணை' 'தலைத்தரும வாரி'

82. வாரிக்குமரி முதல் - குமரிக்கடல் முதல். மந்தாகினியளவும் - கங்கை நதி வரையிலும். பாரித்தவன் - நிறைத்தவன். அனந்தபாலன்: இவன் சேனாபதி பேராவூர்நாட்டு இளங்காரிக் குடையான், சங்கரனம் பலங்கோயில் கொண்டான் அனந்தபாலன் என்னும் பெயருடையவன் என்றும், இவனால் திருவாவடுதுறையில் அறச்சாலைப்புறமாகச் சில நிலங்கள் விடப்பட்டன என்றும் தெரிகிறது; சோழர்கள், Vol. II. 8 Part 1, பக். 70; S. I. 1. 158 of 1925.

(பி - ம்.) 'பாரமரில்', 'ஆரியரில்', 'ஆரமரில்'

83. முட்டி - தாக்கி. வடமண்ணை - வடக்கேயுள்ள 'மான்யகேதம்' என்னும் ஊர் என்பர்; கலிங்கத். 202. மும்மதில் - புறமதில், இடைமதில், உள் மதில்; பதிற். 16, உரை. மட்டித்த: இது மர்த்தித்த என்பதன் சிதைவு; வர்த்தனை, வட்டணை என வந்தாற் போல்வது. மதிலை மட்டித்தது யானையைக் கொண்டு; இது 'ஊரெரித்த நெருப்பனை' (சிற். 137, பேர்.) என்பதைப் போன்றது. வத்தவன் - வத்த நாட்டரசன். அட்டை எழ - கவந்தங்கள் எழுந்து ஆட; தொல். புறத். 16, ந.

(பி - ம்.) 'முட்டிப் பொருத வடமன்னர்'

84. காதிக் கருநாடர் கட்டரணங் கட்டழித்த
சேதித் திருநாடர் சேவகனும் - பூதலத்து
85. முட்டிய தெவ்வர் சடைகட்ட மொய்கழல்
கட்டிய காரானைக் காவலனும் - ஒட்டிய

---

84. காதி - கொன்று. கட்டரணம் - மிக்க காவலையுடைய கோட்டை ; கட்டரணம் வல்லவன் ; நக்க. 237. அடிக். சேதித்திருநாடர் சேவகன் - மலையமான் : சேதிநாடு திருக்கோவலூரைத் தலைநகரமாகக் கொண்ட மலைநாடு ; மலையமான்களுக்கும் சோழர்களுக்கும் சங்ககால முதற் கொண்டே நட்பிருந்து வந்ததென்பது 'சேரமான் மாந்தரஞ் சேரலிரும் பொறையும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியும் பொருத வழிச் சோழர்க்குத் துப்பாகிய தேர்வண் மலையனை' (புறநா. 125.) என வரும் தொடரால் அறியப்படும். தென்னார்க்காடு ஜில்லா கீழூர் என்னும் இடத்தில் விக்கிரம சோழன் ஆட்சி 5-ஆம் ஆண்டில் மலையமான் விக்கிரம சோழ சேதிராயன் என்னும் ஓர் அதிகாரியின் பெயா குறித்த சில சாஸனங்கள் காணப்படுகின்றன. S. I. I. Vol. VII. பக். 915; 349 of 1921.

(பி - ம்.) 'காதித்திருநாடர்' 'காட்டரணம்' 'திருநாடர் செல்வனும்'

85. முட்டிய-போர் செய்த. சடைகட்ட-தப்பியோடுதற்கு முனிவர் போலத் தோன்றச் சடையைக் கட்டிக்கொள்ளும்படி ; "செங்குட்டுவன் றன் சினவலைப் படுதலும், சடையின ருடையினர் சாம்பற் பூச்சினர், பீடிகைப் பீலிப் பெருநோன் பாளர், பாடு பாணியர் பல்லியத் தோளினர், ஆடு கூத்த ராகி யெங்கணும், ஏந்துவா ளொழியத் தாந்துறை போகிய, விச்சைக் கோலத்து வேண்டுவயிற் படர்தர" (சிலப். 26 ; 224-30.) ; தோற்ற கலிங்கவீரர், தப்பிப் பிழைக்கத் தவசிகள் போல மாறு வேடம் புனைந்து சென்றமை காண்க ; கலிங்கத். போர் பாடியது : 63-6. கழல் கட்டிய என்றது, போர்தோறும் வீரக்கழல் கட்டிக்கொள்ளுதல் வழக்க மாதல் பற்றி ; 'காலன புனைகழலென்பது, வீரத்துக்கும் வென்றிக்கும் கட்டின ; போர் தோறும் வென்று கட்டின எனவுமாம்' (புறநா. 100 ; 1, உரை.) கழல் கட்டிய : "கடுங்கண் மறவன் கழல்புனைந்தான் காலை, நெடுங்கடைய நேரார் நிரை" (பு. வெ. 2.) காரானை : இப்பெயருள்ளது கச்சியூர் நாட்டைச் சேர்ந்த ஓர் ஊரென்று காஞ்சீபுரம் சாஸனம், 468 of 1919 கூறுகின்றது. பிற்காலத்தில் 'காரானை விழுப்பரையர்' என்பா ரொருவர் மாறவர்மன் சுந்தர பாண்டியனுடைய வாயிற் புலவராக விளங் கியவரென்பது பாண்டி நாட்டுப் பெருச்சிகோயில் என்ற ஊரிலுள்ள சிவாலயத்துச் சாஸனத்தால் அறியப்படுகின்றதென்பர் ; (சாஸனத் தமிழ்க் கவிசரிதம், 105.) 'காரானை விழுப்பரையன் மடல்' என்னும் நூல் ஒன்றும் உண்டு. ஒட்டிய - வஞ்சினம் கூறிய.

(பி - ம்.) 'மொய்கழல்கால் கட்டிய காரானை காவலனும்'

86. மான வரச ரிரிய வடகலிங்கத்
தானை துணித்த வதிகனும் - மீனவர்தம்

87. கோட்டாறுங் கொல்லமுங் கொண்ட கொடைநுளம்பன்
வாட்டார் மதயானை வல்லவனும் - மோட்டரணக்

88. கொங்கைக் குலைத்துக் குடகக் குவடிடித்த
செங்கைக் களிற்றுத் திகத்தனும் - அங்கத்து

---

86. மான அரசர் - பெருமையுடைய அரசர். இரிய - கெட்டோடும்படி. கலிங்கம் யானையிற் சிறந்ததென்பர். அதிகன் : இவன் நெடுமானஞ்சியின் பரம்பரையில் வந்தவன் போலும். இவனும் கலிங்கப்போரில் ஈடுபட்ட போர்ப்படைத் தலைவருள் ஒருவன். மீனவர்தம் - பாண்டியருடைய.

87. கோட்டாறு : இவ்வூர் இக்காலத்தில் நாகர்கோவில் என வழங்கும். நுளம்பனாகிய வல்லவன். நுளம்பன் ; இவன் கொடை நுளம்பன் என விசேடிக்கப் பெறுவதால், ஈகையிற் சிறந்தவனாகவேண்டும். இப்பெயருடையான் ஒருவன் தக்கயாகப்பரணியில் ; " கட்டரணம் வல்லவனை நடைகொண்டார் காவிரிப்பூம், பட்டினமும் பாடாதார் பசியன்ன பசியினமே " (237) என்று கூறப்படுகிறான். வாள்தார் - வாளாலுண்டான தழும்பின் மாலையையுடைய ; வாட்டு ஆர் எனப்பிரித்து, வாட்டுதல் ஆர்ந்த என்னலுமாம் ; வாள்தார் - வாள்வீரர் அடங்கிய படை என்னலும் பொருந்தும் ; தார் - சேனை ; " தாரொருடுங்கல் செய்யாதது " (கம்ப. 2 : 2 : 13.) வாட்டானை - வாட்படை ; 2 : 379. மோடு - பெருமை. கோட்டரணம் என்ற பாடத்துக்கு மலைகளாகிய இயற்கையரணையுடைய என்று கொள்க ; 'கோடுறழ்ந் தெடுத்த கொடுங்க ணிஞ்சி என்றது மலையுள்ள இடங்களிலே அம்மலைதானே மதிலாகவும் மலையில்லாத இடங்களில் மதிலே அரணாகவும் இவ்வாறு மலையொடு மாறுபட எடுத்த வளைந்த இடத்தையுடைய புறமதில் என்றவாறு' (பதிற். 14 : 1, உரை.)

(பி - ம்.) 'குடைநுளம்பன்', 'குடனுளம்பன்' 'வாட்டா மதயானை' 'கோட்டரணக்'

88. கொங்கை-கொங்குநாட்டை. குடகக் குவடு-குடகு நாட்டிலுள்ள மலைச் சிகரங்களை. இடித்தல் யானையின் தொழில். திகத்தன்-த்ரிகர்த்தன் ; 'வெண்ணெய்த் திரிகர்த்தன்' என்னுமொருவன் பெயர் கம்பராமாயணத்தில் வந்துள்ளது. அங்கத்து - அங்கநாட்டையுடைய.

(பி - ம்.) 'குடகு குவடொடித்த', 'குடகைக் குவட்டிடித்த', 'குடகக் குவடடித்த' 'த்ரிகர்த்தனும்' 'அங்கவன்பின்'. 'அங்கவனும்

89. வல்லவனுங் கோசலனு மாளுவனு மாகதனும்
வில்லவனுங் கேரளனு மீனவனும்—பல்லவனும்

90. என்னும் பெரும்போ ரிகல்வேந்தர் மண்டலிகர்
முன்னு மிருமருங்கு மொய்த்தீண்டப்—பன்மணிசேர்

[குழாங்கள்]

91. சோதி வயிர மடக்குஞ் சுடர்த்தொடியார்
வீதி குறுகுதலு மேலொருநாள்—மாதவத்தோன்

---

89. வல்லவன்: வல்லபன் என்பதன் மரூஉப் போலும்; வல்லபன் - சாளுக்கியன். கோசலன் - கோசலநாட்டரசன். மாகதன் - மகதநாட்டரசன்; "பூகதனுகிய வன்றே பகைவரெல்லாம் போற்றவளர்ந் துலகாளப் புனைந்த மௌலி, மாகதனும் வில்லெடுத்து" (வி-பா. திரௌபதி மாலையிட்ட. 52.) வில்லவன் கேரளன் என்பவர் சேரரில் இருவகையார் போலும். பல்லவன் இரண்டாம் இராசராசன் காலத்துக் கூறப்படுகின்ற குளத்தூரார் குடிப்பிறந்த பல்லவராயனென நம்பிப்பிள்ளையின் முன்னோன் போலும்; தக்க. 236, உரை.

90. வேந்தர் - முடியுடையரசர். மண்டலிகர் - சிறுமண்டலங்களை யாளும் குறுநில மன்னர்.

(பி - ம்.) 'பெரும் பேரிகல்', 'பெரும்பெயர்களெண்ணிலி மண்டலிகர்', 'பெரும்பெயரி லியல்வேந்தர்' 'பன்மணிச் சோதி'

91. சோதி - ஒளி. வயிரத்தைத் தன் ஒளியினுல் அடக்கும்: அடக்குதல் தொடியின் தொழில், தொடியாரென்றது பரத்தையரை. மேலொருநாள் - கிருஷ்ணுவதாரத்தில். மாதவத்தோன் - நாரதமுனிவன். இக்கண்ணி, இ. வி. பாட்டியல், 98, மேற்.

(பி - ம்.) 'அடர்க்குஞ் சுடர்க்குழையார்'. 'சுடர்க்கொடியார்' வீதியிலே தோன்றுதலும்'

92. சார்ந்த பொழுதனகன் றன்னை யறிவித்த
பூந்துவரை யந்தப் புரம்போன் றும் - ஏந்திப்
93. பரக்குங் கலையல்குற் பாவையரே யாணை
புரக்குந் திருநாடு போன்றும் - வரக்கருதா
94. ஏனை முனிக்குறும்பு கொல்ல விகன்மாரன்
சேனை திரண்ட திரள்போன்றும் - கானலங்
95. கண்டன் மணற்குன்றத் தன்னக் கணம்போன்றும்
கொண்டலின் மின்னுக் குழாம்போன்றும் - மண்டும்

---

92. அனகன் - கண்ணபிரான். பூந்துவரை - அழகிய துவாரகையிலுள்ள. இக் கண்ணியிலுள்ள வரலாறு, பாகவதம், 10-ஆம் கந்தம், பதினாறாயிரம் திருவிளையாட்டுரைத்த அத்தியாயத்தால் விளங்கும். ஏந்தி - உயரவேண்டிய இடம் உயர்ந்து. 'அனங்கன்றன்னை' என்ற பாடத்திற்கு அனங்கனுடைய அம்சமாகிய பிரத்யும்னன் தன்னை' என்றுபொருள் கொள்ளவேண்டும்; பிரத்யும்னன் காணாமற் போயிருந்து பின்னர் வந்தபோது, துவாரகாபுரி அந்தப்புரத்து, உருக்குமிணிதேவி முதலிய மடந்தையர் பெருமகிழ்வுற்ற செய்தி; ஸ்ரீ பாகவதம். தசம ஸ்கந்தம். அத்யாயம், 55.

(பி - ம்.) 'அனங்கன் றன்னை'

93. கலை - மேகலை; துகிலுமாம். பாவையரே - பெண்களே. ஆணை புரக்கும் - ஆணை செலுத்தும். திருநாடு: "எண்ண லாகத்துப் பெண்ணுல கேய்ப்ப", "விண்ணுறை தேவரும் விழையும் போகத்துப், பெண்ணுறை யுலகம்", "பொன்னியற் புரிசையோர் பெண்ணுறை பூமி" (பெருங். 1. 42 : 181, 3. 14 : 3-4, 24 : 58); இதனை மணித்தீவம் என்பர். வரக் கருதா - தன் வழியிலே வரக் கருதாத.

(பி - .ம்) 'தானைபுரக்கும்' 'வரற்கரிதாம்'

94. முனிக் குறும்பு - முனிவர்களாகிய பகைவர்களை. இகல்மாரன்- மாறுபாட்டையுடைய மன்மதன். சேனை - மகளிர்; "செல்வப்போர்க் காமன் சேனை செம்மன்மே லெழுந்த தன்றே" (சீவக. 458.) கானல் - கடற்கரைச் சோலையிலுள்ள.

(பி - ம்.) 'இயன்மாரன்'

95. கண்டல் மணற்குன்றத்து - தாழையையுடைய மணற்குன்றுகளில். அன்னக்கணம் - அன்னப் பறவைகளின் கூட்டம்; [கம்ப. 4. பம்பைப் . 4.] கொண்டல் - நீருண்டமேகம். மின்னுக்குழாம் - மின்னலின் தொகுதி.

96. திரைதொறுந் தோன்றுந் திருக்குழாம் போன்றும் [ராய்
வரைதொறுஞ் சேர்மயில்கள் போன்றும் - விரைவின
97. இந்து நுதல்வெயர்ப்ப வெங்கணுங் கண்பரப்பிச்
சிந்தை பரப்பித் தெருவெங்கும் - வந்தீண்டி
98. உத்தி சுடர வொளிமணிச் சூட்டெறிப்பப்
பத்தி வயிரம் பரந்தெறிப்ப - முத்தின்
99. இணங்கு மமுத கலசங்க ளேந்தி
வணங்கு தலையினராய் வந்து - கணங்கொண்டு
100. பார்க்குங் கொடுநோக்கு நஞ்சுறைப்பக் கிஞ்சுகவாய்
கூர்க்கு மெயிறுவெறுங் கோளிழைப்ப - வேர்க்க

---

96. திரை - அலை. வரை - மலை. விரைவினராய் - இவனைக் காண வேண்டுமென்னும் இராக வேகத்தை யுடையவராய். வரையில் மயில் சேர்தல். 253; சூளா. அரசியல். 270.

(பி - ம்.) 'திரைதோறும்' 'வரைதோறும்'

97. இந்து நுதல் - பிறையைப் போன்ற நெற்றி. நுதல் வியர்த்தல்: 'பொறிநுதல் வியர்த்தல்' என்னும் மெய்ப்பாடு. ஈண்டி - நெருங்கி.

(பி - ம்) 'திசையெங்கும்'

98. உத்தி - தெய்வஉத்தி என்னும் ஆபரணம். சுடர-பிரகாசிக்க. சூட்டு - உச்சிக்கொண்டை. எறிப்ப - பிரகாசிக்க. பத்தி - வரிசை. முத்தின் - முத்துக் கச்சோடு.

(பி - ம்.) 'சூட்டெரியப்'

99. இணங்கும் - பொருந்திய. அமுதகலசங்கள் - நகில்கள்; தக்க. 41. உரை. வணங்கு தலையினராய் வந்து என்றது நிலத்தை நோக்கி வருதல்பற்றி.

(பி - ம்.) 'தலைவிரிய', 'தலையிரிய'

100. கொடுநோக்கு - கொடுமையான பொதுநோக்கம். நஞ்சு உறைப்ப - விஷத்தைத் துளிப்ப. மகளிர் விழிக்கு நஞ்சு: தக்க. 28. கிஞ்சுகவாய் - முள்ளுமுருங்கைப் பூவைப்போன்று சிவந்த வாயில். வெறுங் கோள் இழைத்தல் என்றது கருத்து ஒன்றுமில்லாமல் சிரித்தல்பற்றி.

(பி - ம்.) 'கொடுநோக்கம்' 'எயிறுபெருங்', 'எயிறுபெறுங்', 'எயிறுபற்றுங்', 'எயிறுபற்றுங்' 'இழைப்பப் போக்க'

101. வரைகொ ணெடுமாடக் கீணிலையின் மல்கி
உரக வரமகளி ரொப்பார் - விரல்கவரும்
102. வீணையும் யாழுங் குழலும் விசிமுழவும்
பாணி பெயர்ப்பப் பதம்பெயர்த்துச் - சேணுயர்
103. மஞ்சிவரும் வெண்பளிக்கு மாடத் திடைநிலையில்
விஞ்சையர் மாத ரெனமிடைவார் - அஞ்சனக்
104. கண்ணிற் சிறிது மிமையாத காட்சியும்
மண்ணிற் பொருந்தா மலரடியும் - தண்ணென்ற
105. வாடா நறுஞ்செவ்வி மாலையுங் கொண்டழகு
வீடா நிலாமுற்ற மேனிலையிற் - கூடி

---

101. வரைகொள் - மலையின் தன்மையைக் கொண்ட. கீழ்நிலை - கீழேயுள்ள தளம். உரகவரமகளிர் - மேன்மையான நாகலோகத்து மகளிர். விரல் கவரும் - விரலினால் விரும்பி வாசிக்கும்.

(பி - ம்.) 'கீணிலைமேல்', 'கீழ்நிலையின்'

102. வீணை வேறு யாழ் வேறு; "வேய்ங்குழல் விளிகொ ணல்யாழ் வீணையென் றினைய நாண" (கம்ப. 4 : அரசியற். 3.) விசிமுழவு - வாராற்கட்டிய மத்தளம். பாணி பெயர்ப்ப-தாளத்தைப் பெயர்த்துச் செய்ய. பதம் பெயர்த்து-சதி மிதித்து. சேணுயர்-ஆகாயத்திலுயர்ந்த.

(பி - ம்.) 'பாணியும் பொற்பப்', 'பாணி பெயரப்' 'நீணிலா'

103. மஞ்சு - வெண் மேகம். இவரும் - ஏறி விளங்குகின்ற. விஞ்சையர் மாதர் - வித்தியாகர மகளிர். வெண்பளிக்கு மாடத்தில் நிற்றலால் வித்தியாதர மகளிருக்கு ஒப்பாயினர்; "வெள்ளிவே தண்டத் தங்கண் வீவிறென் சேடிப் பாலில்......வெள்ளிவேற் கலுழவேகன் வேதண்ட வேந்தர் வேந்தன்" (சீவக. 546); "வெள்ளி மால்வரை வியன்பெருஞ் சேடி.... ..விஞ்சை வீரன்" (சிலப். 6 : 1-4.)

(பி - ம்.) 'மஞ்சிவர் வெண்பளிங்கு' 'இடை நிலையே', 'இடைநிலையின்', 'திடை மலையில்' 'அஞ்சன வேற்'

104. (பி - ம்.) 'தண்மலர்', 'தண்ணென்று'

105. செவ்வி - அழகு. கண்கள் இமைத்தலும், அடிகள் பூமியிற் படிதலும், சூடியமாலை வாடுதலும் மானிடர்க்கியல்பு; "கண்ணிமைத்த லாலடிகள் காசினியிற் றோய்தலால், வண்ண மலர்மாலை வாடுதலால்" (நள. 1 : 153.) வீடா - நீங்காத. நிலா முற்றமாகிய மேல்நிலையில்,

(பி - ம்.) 'கொண்டங்கு'

106\. உருவி னொளியி னுணர்வி னுரையிற்
பொருவி லரமகளிர் போல்வார் - அருகணைந்து

[குழாங்களின் கூற்று]

107\. சீரள வில்லாத் திருத்தோ ளயன்படைத்த
பாரள வல்ல பணைப்பென்பார் - பாருமின்

108\. செய்ய வொருதிருவே யாளுஞ் சிறுமைத்தோ
வைய முடையபிரான் மார்பென்பார் - கையிரண்டே

109\. ஆனபோ தந்த முருகவே ளல்லனிவன்
வேனல்வேள் கண்டீ ரெனமெலிவார் – யானெண்ணும்

110\. எண்ணுக் கிசைய வருமே யிவனென்பார்
கண்ணிற் கருணைக் கடலென்பார் - மண்ணளிக்கும்

106\. உருமுதலிய நான்கினாலும் தெய்வமகளிர் போல்வார். பொருவில் - பிறமகளிர் ஒப்பாகாத.

உரக வரமகளி ரொப்பாரும் (101) விஞ்சையர் மாதரென மிடைவாரும் (103) அரமகளிர் போல்வாரும் அருகணைந்து (106) எனஇயைக்க.

(பி - ம்.) 'உருவி லொளியி லுணர்வில்'

107\. தோளின் பணைப்பு பூமியின் அளவையும் கடந்ததென்பது கருத்து; பணைப்பு - பெருப்பு, செழிப்பு; "பாரள வல்ல பணைத்தோ ளளவு" (சிலாசாஸனப் பாட்டு.)

(பி - ம்) 'சீரளவல்ல' 'பரப்பென்பார்' 'பாருமிவன்', 'பாருமிவண்'

108\. ஒரு திரு என்றது திருமகளை. மார்பு சிறுமைத்தோ என்றது மார்பு மற்ற மகளிரும் தமக்கு இடமாகக் கொள்ளும் பெருமையுடையது என்பது கருத்து.

(பி - ம்.) 'ஆளுஞ் சிறுமையதோ'

109\. கை இரண்டே..... முருகவே ளல்லன்: "அந்தரத்துக், கோழி யானென்னின் முகமொன்றே கோதையை, ஆழியா னென்றுணரற் பாற்று" (தொல். உவம. 32, பேர். மேற்.) வேனல் வேள் - வேனிற் பருவத்தைத் தனக்குரிய காலமாகக்கொண்ட மன்மதன்.

(பி - ம்.) 'ஆனபொழுதம்ம' 'வேனில்' 'மெலிவார் மானனையார்'

110\. எண்ணுக்கு - கருத்திற்கு. வருமே: ஏகாரம் வினா.

(பி - ம்.) 'எண்ணுக் கியைய வருமோ விவு'

111. ஆதி மனுகுலமிவ் வண்ணலான் மேம்படுகை
பாதியே யன்று லெனப்பகர்வார்—தாதடுத்த
112. கொங்கை பசப்பார்தங் கோல்வளைகள் காப்பார்போல்
செங்கை குவிப்பார் சிலர்செறிய—அங்கொருத்தி

[பேதை]

113. வந்து பிறந்து வளரு மிளந்திங்கள்
கொந்து முகிழாக் கொழுங்கொழுந்து—பைந்தழைத்
114. தோகை தொடாமஞ்ஞை சூடுண்டு தோற்றவன்மேல்
வாகை புனைய வளர்கரும்பு—கோகுலத்தின்
115. பிள்ளை யிளவன்னப் பேடை பிறந்தணிய
கிள்ளை பவளங் கிளைத்தகிளை—கள்ளம்

---

111. ஆதிமனுகுலம்: 4; "ஆதித்தன் குலமுதல்வன் மனுவினையா ரறியாதார்" (கம்ப. 1: குலமுறை. 1.) அண்ணலான்......பாதியேயன்று; "பாதிம் முழுதும் மிவற்கேபணிகேட்ப மன்னோ" (கம்ப. 1. அரசியற். 9.); முழுவதும் ஆம் என்றபடி. தாது - பூந்தாது.

112. கோல்வளைகள் - திரண்ட வளைகளை; சித்திர வேலைகள் அமைந்த வளையல்களை என்றலும் ஆம். காப்பார்போல் - கைகளை விட்டுக் கழலாமற் காப்பவர் போல; காமவிகாரத்தால் மகளிர் உடல் மெலியக் கைவளையல்கள் கழலும் என்பது நூல் வழக்கு; "வாங்குவளைக் கையார் வதனமதி பூத்த". (நள. 1. 20.) செங்கை குவிப்பார் - சிவந்த கைகளைக் குவித்து வணங்குவாராய்.

(பி - ம்.) 'பசப்பார்தம்'

113. இளந்திங்கள் என்றது பிறை; "குளிராத திங்கட் குழவி" (குலோத். உலா, 125.) கொந்து - பூங்கொத்து; (146.) முகிழா - அரும்பாத. பைந்தழையாகிய தோகை,

(பி - ம்.) 'திங்கட் கொந்து' 'கொந்து முகுளாக்'

114. தோகை தொடாமஞ்ஞை - தோகை முளைக்காத இள மயில்; பேதையின் கூந்தல் முடிக்கும்படி கூடாத இளமைத் தன்மை பற்றி; "கூழைச்சுருண் முடிக்கக் கூடுவதுங் கூடாதாம், ஏழைப் பருவத் திளம்பேதை" (குலோத். உலா, 127.) சூடுண்டு தோற்றவன் - சிவபெருமானால் எரிக்கப்பெற்றுத் தோற்ற மன்மதன்; எழுவாய். மேல் வாகை புனைய - பிற்காலத்தில் வெற்றிமாலையைச் சூடுவதற்கு.

(பி - ம்.) 'கொடாமஞ்ஞை', 'கோகிலத்தின்'

115. கோகுலத்தின் பிள்ளை - குயிற் குஞ்சு; "கோகுலமாய்க் கூவுநருமாகுல மாகுநரும்" (பரி. 9: 56.) பிறந்தணிய - மிக இளைய; "பிறந்தணிய கிள்ளை" (இராசராச. 116.)

116. தெரியாப் பெருங்கட் சிறுதேற ருயர்ப்
பிரியாப் பருவத்துப் பேதை – பரிவோடு

117. பாவையு மானு மயிலும் பசுங்கிளியும்
பூவையு மன்னமும் பின்போதக்—காவலன்

118. பொன்னிப் புகார்முத்தி னம்மனையுந் தென்னாகை
நன்னித் திலத்தி னகைக்கழங்கும்—சென்னிதன்

119. கொற்கைக் குளிர்முத்த வல்சியுஞ் சோறடுகை
கற்கைக்கு வேண்டுவன கைப்பற்றிப்—பொற்கொடியார்

---

116. பெருங்கட் சிறுதேறல் - பெரிய கண்ணையுடைய சிறிய தெளிவு; தேன் என்றலும் ஆம்; பெருங்கள்ளினது சிறிய தெளிவு என்றும் ஒரு பொருள் தோற்றியது. தாயர் என்றது ஐவகைத் தாயரை; அவர்கள், ஈன்றதாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய் எனப்படுவர். தாயரைப் பிரியாத.

117. பாவை - பேதையின் விளையாட்டுப் பொருள்களுள் ஒன்று; இதன்மேலுள்ள அன்பின் மிகுதியால் இதனை முதலிற் கூறினர்; 139; "இது வென் பாவை பாவை" (ஐங். 375.) பின்போத - தனக்குப் பின்னேவர.

(பி - ம்.) 'மானும் பயிலும்'

118. புகார் - காவிரிப்பூம் பட்டினம். நாகை - நாகபட்டினம். நகைக்கழங்கு - ஒளியையுடைய கழற்சிக்காய்; நித்திலமாகிய கழங்கு என்க. சென்னிதன் - சோழனது.

119. வல்சி - அரிசி. நித்திலத்தின் வல்சி: "தேறலுலை, வாக்குங் குடக்கூன் குழிசியிலம் மதுவார்த் தரித்த நித்திலத்தின், வல்சிபுகட்டி" (குமர. 25.) சோறடுகை கற்கைக்கு - சிற்றில் இழைத்துச் சிறு சோறு சமைத்தலைக் கற்பதற்கு. பொற்கொடி ஆர் - அழகிய கொடிகள் நிறைந்த. பேதை (116), போதக் (117), கைப்பற்றி (119) வீதி புகுந்து விளையாடும் எல்லைக்கண்.

(பி - ம்.) 'குளிர்முத்தின் கோலமணி வல்சியும்' 'சோறடவும்', 'சொற்றாய்கைக்' 'பொற்றொடியாள்', 'பொற்றொடியார்'

120. வீதி புகுந்து விளையாடு மெல்லைக்கண்
ஆதி யுகம்வந் தடிக்கொள்ள—மேதினிமேல்
121. ஊன்று கலிகடிந்த வுத்துங்க துங்கன்றன்
மூன்று முரச முகின்முழங்க—வான்றுணைத்
122. தாயர் வரவந்து தாயர் தொழத்தொழுது
தாயர் மொழிந்தனவே தான்மொழிந்தாள்—சேயோன்
123. படியின் மதியும் பகலவனுந் தோற்கும்
முடியி லொருகா லுமூளா—வடிவில்
124. மகிழ்ந்து மலராண் மலர்க்கண்ணு நெஞ்சும்
நெகிழ்ந்த திருநோக்கி னேரா—முகிழ்ந்து

---

120. ஆதி யுகம் - கிருத யுகம், "வேதமு மெய்மையு மாதியுகம் போலத் தலை சிறப்ப வந்தருளி" (விக்கிரம. மெய்க்கீர்த்தி.); "ஆதியுகம், கொழுந்துவிட்டுத் தழைத்தோங்க" (இரண்டாம் இராசராசன் மெய்க்கீர்த்தி); "உரவிப் பெருங்கலித் துன்பங்கள் போய்முத லூழியின்பம், வரவிப் படிதன்னை வாழ்வித்த வாணன்" (தஞ்சை. 286.)

(பி - ம்.) 'ஏல்வைக்கண்' 'மேதினியில்'

121. ஊன்றுகலி - அழுந்திய கலியை. கடிந்த - தவிர்த்த; 26, 156. உத்துங்கதுங்கன் - உயர்ந்தவர்களுக்குள் உயர்ந்தவன்; 342. மூன்று முரசு: 28, குறிப்; முரசமுகில்-முரசாகிய மேகம்: இரு பெயரொட்டும் ஆம்; முகிலைப்போல முழங்க. வான்துணை - சிறந்த துணையாகிய.

(பி - ம்.) 'கலிகடந்த வுத்துங்க சோழன்றன்' 'மூன்று முரச முழங்குதலும்' 'வான்றுணையாத்'

122. தாயர்: 116, குறிப். தாயர் தொழத் தொழுது: "புக்கார், வணங்க வணங்கி வழுத்த வழுத்தி" (குலோத். உலா, 129-30); "ஓகைய ராகி யுலப்பில் பலகோடித், தோகைய ரோடத் தொடர்ந்தோடித் - தாகந் தணியத் தணியத் தமரும் பிறரும், பணியப் பணியப் பணிந்தாள்" (இராசராச. 128-9.) சேயோன் - முருகக்கடவுள் போன்ற சோழனது.

123. படி - ஒப்பு. மூளா - சேராவாய்; பின் வருவனவற்றிற்கும் இவ்வாறே எதிர்மறைப் பொருள் கொள்க.

(பி - ம்.) 'படியின் மதியின்'

124. மலராள் - திருமகளது. நெகிழ்ந்த திருநோக்கில் - நெகிழ்வதற்குக் காரணமான பார்வையில். கண்ணும் நெஞ்சும்: 129. முகிழ்ந்து - அரும்பி; முகிழ்ந்து சிரித்தல் - புன்சிரிப்புக் கொள்ளல்,

(பி - ம்.) 'மகிழ்ந்த' 'நோக்குநேரா'

3

125. சிரிக்குந் திருப்பவளச் சேயொளியூ டாடா
விரிக்குந் திருநிலவின் வீழா—பரிக்கும்
126. உலகம் பரவுந் திருப்புருவத் தோடா
திலக முகாம்புயத்துச் சேரா—பலவும்
127. திசையை நெருக்குந் திருத்தோளிற் செல்லா
இசையுந் திருமார்பத் தெய்தா—வசையிலாக்
128. கைம்மலரிற் போகா வடிமலரின் கண்ணுரு
மெய்ம்மலர்ப் பேரொளியின் மீதுரு—அம்மகள்
129. கண்ணு மனமுங் கழுநீர்க் குலமுழுதும்
நண்ணுந் தொடையன்மே னட்செய்ய—உண்ணெகிழா
130. வம்மின்க ளன்னைமீர் மாலை யிதுவாங்கித்
தம்மின்க ளென்றுரைப்பத் தாயரும்—அம்மே
131. பெருமானை யஞ்சாதே பெண்ணமுதே யாமே
திருமாலை தாவென்று செல்வேம்—திருமாலை

---

125. சேயொளியூடு - சிவந்த ஒளியில். திருநிலவு என்றது சிரிப்பை.

126. பரிக்கும் உலகம் - விக்கிரம சோழன் தாங்கும் உலகம். திலக முகாம்புயத்தில் - திலகத்தை யணிந்த முகமாகிய தாமரையில்.

(பி - ம்.) 'புருவத் தோரா'

127. பலவும் திசையை நெருக்கும் - திசைகள் பலவற்றையும் நெருக்குகின்ற. வசைஇலா - பழிப்பில்லாத.

(பி - ம்.) 'மணிமார்பத்' 'வசையுரு'

128. பேரொளி : கரியநிறம் ; 187. அம்மகள் - பேதை.

(பி - ம்.) 'கைம்மலரிற் போதா வடிமலரிற் கண்ணுரு' 'மீதூரா'

129. கழுநீர் - கழுநீர்ப்பூ ; குலோத். உலா, 115. தொடையல்மேல் - மாலையினிடத்தே. நாட்செய்ய - ஆரம்பஞ்செய்ய. உள்நெகிழா - மனம் நெகிழ்ந்து. கண்ணும் மனமும் : 124.

130. மாலையிது - இந்தக் கழுநீர்மாலையை கழுநீர்மாலை : 225 ; 2 : 76, 176. அம்மே என்றது பேதையை விளித்தது.

(பி - ம்.) 'அன்னையீர்' 'மாலையது வாங்கி'

131. பெருமானை அஞ்சாதே - விக்கிரம சோழனுக்கு அஞ்சாமல் ; "தேயத்தார், மன்னனை யஞ்சாதே" (குலோத். உலா, 209-10.)

(பி - ம்.) 'செல்வோம்'

132. யாங்கொள்ளும் வண்ண மெளிதோ வரிதென்னத்
தேங்கொள்ளு மின்சொற் சிறியாளும்—ஆங்குத்தன்
133. மார்வத்துக் கண்ணினீர் வாரப் பிறர்கொள்ளும்
ஆர்வத்துக் கன்றே யடியிட்டாள்—சேர
134. இருத்தி மணற்சோ றிளையோரை யூட்டும்
அருத்தி யறவே யயர்த்தாள்—ஒருத்தி

[பெதும்பை]

135. மழலை தனது கிளிக்களித்து வாய்த்த
குழலி னிசைகவர்ந்து கொண்டாள்—நிழல்விரவு
136. முன்னர் நகைதனது முல்லை கொளமுத்தின்
பின்னர் நகைகொண்ட பெற்றியாள்—கன்னி

---

132. என்ன - என்று தாயர் சொல்ல. தேம்கொள்ளும் - இனிமையைக் கொண்ட. சிறியாள் - பேதை.

133. மார்வத்து - மார்பில். மார்பம் என்றசொல் 'மார்வம்' என்றும் வழங்கும்; "ஆர்வமாளுநா ரணரனேகர்தம், மார்வ மாளுமா நவ்வி வவ்வியே" (தக்க. 500); "மார்விற்றிருவிற் பொலி மாலையினுன்" (கம்ப. 3. சரபங்கர். 9); "கான்மடங்கா மார்வத்தார் காணவிரும் பினர்மேல், நான்மடங்கா மார்வத்தார் நாடு" (திருவேங்கடமாலை, 45.) பிறர் - மற்றப் பருவத்து மகளிர். ஆர்வத்துக்கு - காதலுக்கு. அடியிட்டாள் - தொடக்கஞ் செய்தாள்.

(பி - ம்.) 'ஆர்வத்துக் கின்றே'

134. சேர இருத்தி - மற்றமகளிரை ஒன்றாகச் சேரும்படி இருக்கச் செய்து. இளையோரை - இளைய மகளிரை. ஊட்டும் அருத்தி - உண்பிக்கும் ஆசையை. அறவே அயர்த்தாள் - முழுவதும் மறந்தாள்.

(பி - ம்.) 'ஊட்டி யருத்தி நடுவே'

135. மழலை - மழலைச் சொற்களை. குழல் - புல்லாங்குழல். நிழல் - ஒளி.

(பி - ம்.) 'வாய்ந்த', 'வாய்க்கும்' 'இசைகவர்ந்து கொள்வாள்' 'நிழல்வரவு'

136. முன்னர் - பேதைப்பருவத்து. நகை - அரும்புகளை. தனது முல்லை என்றது பெதும்பை வளர்த்த முல்லைக் கொடியை; "எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த, முற்றிழையாள் வாட முறுவலிக்கும்" (தண்டி. 48, மேற்.) நகை கொண்ட - பற்களைக்கொண்ட,

(பி - ம்.) 'முன்னை நகை' 'பின்னை நகை'

137. மடநோக்கந் தான்வளர்த்த மானுக் களித்து
விடநோக்கம் வேலிரண்டிற் கொண்டாள்—சுடர்நோக்கும்

138. தானுடைய மெய்ந்நுடக்கந் தன்மா தவிக்களித்து
வானுடைய மின்னுடக்கம் வாங்கினாள்—பூநறும்

139. பாவைகள் பைங்குர வேந்தப் பசுங்கிளியும்
பூவையு மேந்தும் பொலிவினாள்—மேவும்

140. மடநடை யன்னப் பெடைபெறக் கன்னிப்
பிடிநடை பெற்றுப் பெயர்வாள்—சுடர்கனகக்

141. கொத்துக் குயின்ற கொடிப்பவள பந்தத்தின்
முத்துப் பொதியுச்சி முச்சியாள்—எத்திறத்தும்

---

137. கன்னி மடநோக்கம் - இளைய அறியாமையோடு கூடிய பார்வையை. வளர்த்த மான் : 117. விடநோக்கம் - விஷம் போன்ற பார்வையை; கம்ப. 2. சித்திர. 8. வேல்இரண்டு என்றது இரு கண்களை; வேலுக்கு விடம் பூசுதல் உண்டு; கம்ப. 2. கைகேசி சூழ்வினைப் : 64. சுடர் நோக்கும் - சூரியனை நோக்குகின்ற.

(பி - ம்.) 'மானுக்கு விட்டு' 'விடநோக்க வேலிரண்டு'

138. மெய்நுடக்கம் - உடம்பின் துவட்சியை. தன் மாதவிக்கு - தான் வளர்த்த மாதவிக் கொடிக்கு ; மாதவி - குருக்கத்தி. வானுடைய மின்னுடக்கம் - மேகத்தினுடைய மின்னலினது துவளுதலை. வாங்கினாள்- தான் வாங்கிக்கொண்டாள்.

(பி - ம்.) 'தண் மாதவிக்கு' 'பூ நாறும்'

139. பூநறும்பாவைகள் - அழகிய மணமுடைய பாவைபோன்ற பூக்களை. குரவின் பூவைப் பாவை யென்றல் மரபு; 117. பூவை - நாகணவாய்ப்புள் ; 117.

140. அன்னம் : முன்தான் வளர்த்தது ; 117. கன்னிப்பிடி நடை- இளைய பெண்யானையின் நடையை. பெயர்வாள் - நடப்பாள்.

141. சுடர் கனகக் கொத்து - ஒளிவிடுகின்ற பொன்னின் தொகுதியிலே. பவள பந்தத்தின் - பவளமாகிய காலில். உச்சி முச்சியாள் - உச்சிக் கொண்டையை யுடையவள் ; "வார்குழற்கு மாடடைந்து, கொண்டல் சொரிமுத்தின் கொண்டையும்" (குலோத். உலா, 229.) எத்திறத்தும் - எல்லாவகையினும்.

(பி - ம்.) 'பந்தத்து'

142. வீரவேள் போல்வாரை வீட்டி விழுத்தவர்மேல்
மாரவேள் கண்சிவப்ப வாய்சிவப்பாள்—நேரொத்த

143. கோங்க முகையனைய கொங்கையா டன்கமுத்தாற்
பூங்கமுகை யிப்போது பொற்பழிப்பாள்—பாங்கியரும்

[கனாக் கூறுதல்]

144. தாயரும் போற்றுமே தானே துயிலெழுந்து
பாயல் புடைபெயர்ந்து பையச்சென்—றியாயே

145. தளரு மிடையொதுங்கத் தாழுங் குழைத்தாய்
வளரு மொருகுமரி வல்லி—கிளரும்

146. கொழுந்து மளவிறந்த கொந்துங் கவினி
எழுந்து கிளைகலிப்ப வேறித்—தொழுந்தகைய

---

142. வீரவேள் போல்வாரை - வீரத்தையுடைய முருகக் கடவுளைப் போன்ற ஆடவரை. வீட்டி - கொன்று. விழுத்தவர்மேல் - சிறந்த தவத்தை யுடையவர்மேல். மாரவேள் - மன்மதன். கண்சிவப்ப - போர் செய்யும்படி. வாய் சிவப்பாள் : 139. நேரொத்த - மிகவும் ஒத்த.

143. கோங்கமுகை - கோங்கரும்பு. பூங்கமுகை - பொலிவுள்ள கமுக மரத்தை. பொற்பழிப்பாள் - அழகைச் சிதைப்பாள்.

(பி - ம்.) ‘இப்போதே’

144. போற்றுமே - எழுப்பாதபடி. பாயல்புடைபெயர்ந்து - படுக்கையினின்றும் எழுந்து. யாயே : விளி.

145. குழைத்தாய் - தளிர்களையுடையதாகி. குமரி வல்லி - இளைய பூங்கொடி ; “குமரி வாழையின் குருத்தகம் விரித்து” (சிலப். 16 : 42.)

(பி - ம்.) ‘யிடையொதுங்கித்’

146. கொழுந்து - மிக இளைய தளிர். கொந்து - பூங்கொத்து ; 113. கவினி - அழகு பெற்று. கிளைகலிப்ப - கிளைகள் தழைக்கும்படி.

(பி- ம்.) ‘சினைகளிப்ப’, ‘சினைகவிப்ப’

147. கொங்குடைய பொன்னடருஞ் சென்னிக் கொழுங்கோங்கின்
பங்குடைய மூரிப் பணையணைந்து—தங்குடைய

148. வண்டு முரல மணநாற வைகுவது
கண்டு மகிழ்ந்தேன் கனவிலெனக்—கொண்டு

149. வருக வருக மடக்கிள்ளை முத்தம்
தருக தருகவெனத் தாயர்—பெருக

150. விரும்பினர் புல்லி விரைய முலைவந்
தரும்பின வாகத் தணங்கே—பெரும்புயங்கள்

151. புல்லி விடாத புதுவதுவை சென்னியுடன்
வல்லி பெறுதி யெனவழுத்தும்—எல்லை

152. அரச னபய னகளங்க னெங்கோன்
புரசை மதவரைமேற் போத—முரசம்

153. தழங்கு மறுகிற் றமரோடு மோடி
முழங்கு முகின்மாட முன்றிற்—கொழுங்கயற்கட்

---

147. கொங்கு - தேன். உடைய - பூ மலர்வதால் உடைந்து. பொன் அடரும் கோங்கு - கொங்கு செறிந்ததுபோல் விளங்கும்கோங்கு. சென்னி - உச்சியையுடைய. மூரிப்பணை அணைந்து - வன்மையையுடைய கிளையைச் சேர்ந்து. தங்குடைய - அக்கிளையில் தங்குதலுடைய.

(பி - ம்.) ‘கொழுங்கொம்பின்’ ‘பணையணைந் தங்குடைய’

148. முரல - ஒலிக்கும்படி. குமரிவல்லி கவினி, எறி, அணைந்து, முரல, நாற வைகுவது கண்டு மகிழ்ந்தேனென முடிக்க. கனவு : 164-5.

(பி - ம்.) ‘வைகுமது’

149. மடக்கிள்ளை : விளி. ‘வருகவருக’, ‘தருக தருக’ என்னும் அடுக்குகள் மகிழ்ச்சிபற்றி வந்தன. பெருக விரும்பினர்-மிக விரும்பியவராய்.

(பி - ம்.) ‘தாயர் விரவி’

150. புல்லி - தழுவிக்கொண்டு. ஆகத்து அரும்பின - மார்பிலே தோன்றின.

151. பெரும்புயங்கள் புல்லி விடாத-சோழனுடைய பெரிய தோள்களைத் தழுவிக்கொண்டு பின்பு விடாமைக்குக் காரணமான; “புல்லி விடாஅப் புலவியுள்” (குறள், 1324.) புதுவதுவை - புதிய மணம். சென்னியுடன் - சோழனோடு. வல்லி : விளி. வழுத்தும் எல்லை - சொல்லுகின்ற சமயத்தில்.

152. அகளங்கன்-விக்கிரம சோழன் பெயர் ; 59, 182, 209, 256, 284 ; இப்பெயர் இவன் தந்தைக்கும் உண்டு ; கலிங்கத். பேய்முறை. 7. புரசை - யானைக் கழுத்திலிடும் கயிறு ; “புரசை யானையின் வீதியிற் போகவும்” (கம்ப. 5. சூடாமணி. 36.) மதவரை - யானை ; இது அயிராபதம் என்னும் பட்டத்து யானை ; 52, 64, 272, 289, 304.

154. பொன்னென வெல்லா வழகும் புனைவதொரு
மின்னென வந்து வெளிப்பட்டு—மன்னருயிர்
155. உண்டாற் றியவேங்கை வைக்க வொருதிருக்கைச்
செண்டாற் கிரிதிரித்த சேவகனைத்—தண்டாத
156. வேகங் கெடக்கலிவாய் வீழ்ந்தரற்றும் பார்மகளைச்
சோகங் கெடுத்தணைத்த தோளானை—ஆகத்துக்

---

153. தழங்கு - ஒலிக்கின்ற. மறுகில் - வீதியில். தமரோடும் - சுற்றத்தாரோடும். முழங்குதல் முகிலுக்கு அடை. முகில் மாடம் - மேகங்கள் வந்து படிந்துள்ள மாடம்; மேகத்தைப்போன்ற குளிர்ந்த மாடம் எனினும் ஆம்; மலைபடு. 484; பெருங். 3-16; 27.

(பி - ம்.) 'மணிமாட,' 'நெடுமாட',

154. பொன் என - திருமகளைப் போலவும். மின் என - மின்னல் எனவும். மன்னர் உயிர் - பகையரசருடைய உயிரை.

(பி - ம்.) 'புனைந்ததொரு'

155. உண்டாற்றிய வேங்கை - உண்ட புலிக்கொடியை; உண்டாற்றிய: ஒரு சொல்; 'ஒறுத்தாற்றும் பொறுத்தாற்றும் என்பன ஈண்டு ஒரு சொல் நீர' (குறள், 579, பரிமேல்.) செண்டால் - செண்டு என்னும் ஆயுதத்தால். கிரி - மேரு மலையை. சேவகன் - வீரனை கரிகாற் சோழன். விக்கிரம சோழனுடைய முன்னோருள் ஒருவனது செயலை இவன்மேல் ஏற்றிக் கூறினர். செண்டால் கிரிதிரித்தது: "கச்சி வளைக் கைச்சி காமக்கோட் டங்காவல், மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன் - கைச்செண்டு, கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான், செம்பொற் கிரிதிரித்த செண்டு" (சிலப். 5: 95-8, அடியார். மேற்.); "செண்டு கொண்டுகரி காலனொரு காலிலிமயச் சிமய மால்வரை திரித்தருளி மீளவதனைப், பண்டு நின்றபடி நிற்கவிது வென்று முதுகிற் பாய்புலிப்பொறி குறித்தது மறித்த பொழுதே" (கலிங்கத். இராசபாரம். 1.); 'பொன்மலை இவனதாதற்குக் காரணம் மகாமேருவின் அடிமுதல் முடிகடை சோழர்களால் எழுதப்பட்ட புலிப்பொறியே யாதலாலும், கரிகாலன் கைச்செண்டால் திரித்தான் என்னும் கதை உண்டாதலாலும், (தக்க. 185, உரை); "இலங்குவேற் கரிகாற் பெருவளத்தோன், வன்திறற் புலி யிமையமால் வரைமேல் வைக்க வேகுவோன்" (பெரிய. திருக்குறிப்புத் தொண்ட. 85.); செண்டு: மகாமகோபாத்தியாயர். டாக்டர். உ. வே. சாமிநாத ஐயரவர்கள் எழுதிய செண்டலங்காரர் என்ற கட்டுரையைப் பார்க்க; நினைவுமஞ்சரி, I. 3வது கட்டுரை.

156. தண்டாத வேகம் - தணியாத வலிமை. கலிகெடுத்தவன்; 26, 121. ஆகத்து - மார்பிலுள்ள.

(பி - ம்.) 'வீழ்ந்தரற்றப்' 'கெடுத்தெடுத்த'

157. கொங்கை பிரியாத வீறேடுங் கோகனக
மங்கை பிரியாத மார்பானை—அங்கமலக்

158. கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயும்
செய்ய கரிய திருமாலைத்—தையலும்

159. கண்டகண் வாங்காள் தொழமுகிழ்த்த கைவிடாள்
மண்டு மனமீட்கு மாறறியாள்—பண்டறியாக்

160. காமங் கலக்கக் கலங்கிக் குழல்சரியத்
தாமஞ் சரியத் தனிநின்ருள்—நாமவேற்

---

157. வீறு - வீற்றுத் தெய்வம்; 'திரு - முலைமேற் ருேன்றும் வீற்றுத் தெய்வம்' (சிலப். 2 : 69, அடியார்.); 'தம்மேல் உறையும் வீற்றுத் தெய்வம் இருப்பிடமாக இருக்கப்பட்டுச் சுணங்கு பரந்தன' (சீவக. 171, ந.); "அகிற், சேற ணிந்த முலைத்திரு மங்கைதன், வீற ணிந்தவன் மேனியின் மீண்டவே" (கம்ப. 1. ஆற்றுப். 2.) கோகனக மங்கை - திருமகள்; கோகனகம் - தாமரை.

158. கையும்........செய்ய திருமால்: "கண்ணும், திருவடியுங் கையுந் திருவாயுஞ் செய்ய, கரியவனை" (சிலப். 17 : படர்க்கைப் பரவல், 2.) விக்கிரம சோழனுலாப் பாடிய காலத்தில் இரண்டு கண்ணியை ஒரு பாட்டாகப் பாடென்றபோது பாடியது என்ற தலைப்பின் கீழ் உள்ள பாடலில் இக்கண்ணி முதலிரண்டடிகளாகக் காணப்படுகின்றது (தமிழ் நாவலர் சரிதை, 120.) திருமாலை - சோழனை.

159. வாங்காள் - மீண்டு வருவித்துக் கொள்ள முடியாதவளாய். முகிழ்த்த - குவித்த. மண்டும் மனம் - சோழன் மேல் மிக்குச் செல்லுகின்ற மனத்தை. மாறு - விதத்தை.

160. பண்டு அறியாக்காமம் - முன் பேதைப் பருவத்தில் அறியாத காமம். குழல் சரிய என்றது 'கூழை விரித்தல்' என்ற மெய்ப்பாட்டைக் குறிக்கும்; 'தொல். மெய்ப். 14; 'சரிந்துவீழ் குழல்கள் தாங்கார்' (கம்ப. 1. உலாவியற் : 2.); 'காரிருள்போற் சோரும் புரிகுழலைத் தாங்கும்' (நள. 1 : 121.) தாமம் சரிய - மாலைகள் நழுவ. தனிநின்ருள் - நாண முதலாகிய குணங்கள் நீங்கத் தனியளாய் நின்ருள்; குலோத். உலா, 286. நாமவேல் - அச்சத்தைச் செய்யும் வேலையுடைய; நாம் என்னும் உரிச்சொல் ஈறு திரிந்து நின்றது; "நாமநீர் வைப்பில்" (குறள், 149.)

161. சேரனு மீனவனுஞ் சேவிப்பச் செம்பியரில்
வீரனு மவ்வெல்லை விட்டகன்றான்—மாரனும்

162. தக்குத் தகாதாளை யெய்து தரைப்படுத்தப்
புக்குத் தொடைமடக்கிப் போயினான்—மைக்குழல்

[மங்கை]

163. மங்கைப் பருவத் தொருத்தி மலர்பொதுளுங்
கங்கைப் புளினக் களியன்னம்—எங்கோனை

164. மன்னவனை மன்னர் பிரானை வரோதயனை
தென்னவனை வானவனைச் செம்பியனை-முன்னொருநாள்

165. கண்ட பெதும்பைப் பருவத்தே தன்கருத்தாற்
கொண்ட பரிவு கடைக்கூட்ட—புண்டரிகச்

---

161. மீனவன் - பாண்டியன். சேவிப்ப - தன்னை வணங்கி வர. செம்பியரில் வீரன் . சோழர்களில் சிறந்த வீரனாகிய விக்கிரம சோழன்.

162. தக்குத் தகாதாளை - காமத்திற்குச் சிறிது தகுதியுடையவளாய் முழுதும் தகுதியில்லாத பெதும்பையை ; "எந்திழையுந், தக்க தகாத வறியாத் தரத்தறிவோ" (திருவாரூருலா, 248-9.) தரைப்படுத்தப் புக்கு - தரையிலே விழுத்தப் புகுந்து. தொடை மடக்கி - அது முடியாமையால் தான் தொடுத்த அம்பை மடக்கி. மைக்குழல் - மேகத்தைப் போன்ற கூந்தலையுடைய.

(பி - ம்.) 'தரைப்படுத்துப்' 'தொடைமடக்கிப் போமெல்லை'

163. மலர் பொதுளும் - மலர்கள் நெருங்கிய. புளினம் - மணற் குன்று. கங்கை......அன்னம் : "மேவிப்பூங் கங்கையுள் விழைந்த வன்னமே" (சீவக. 1017.)

164. மன்னர் பிரானை - சக்கரவர்த்தியை. வரோதயன் - சிறந்த பிறப்பையுடையவன். தென்னவன் - பாண்டியன். வானவன் - சேரன். தமிழ் நாடு மூன்றையும் ஆண்டமைபற்றி இவ்வாறு கூறினார் ; திரிபுவன சக்கரவர்த்தி என்று சாஸனங்களில் கூறப்பெறுவதுங் காண்க.

165. கண்ட - கனவிலே கண்ட , கண்டது ; 159. பரிவு - காதல். கடைக் கூட்ட - முடிவு போக்க.

(பி - ம்.) 'பருவத்துத் தன் கருத்தில்', 'பருவத்துருவத்துக்'

166. செய்ய வடிமுதலாச் செம்பொன் முடியளவும்
மைய லகல மனத்திழைத்துக்—கையினல்

167. தீட்டுங் கிழியிற் பகற்கண் டிரவெல்லாம்
காட்டுங் கனவு தரக்கண்டு—நாட்டங்கொண்

168. டியாதொன்றுங் காண திருப்பாள் பொருகளிற்றில்
தாதொன்றுந் தொங்கற் சயதுங்கன்—வீதி

169. வருகின்ருனென்று மணியணிகள் யாவும்
தருகென்ருள் வாங்கித் தரித்தாள்—விரிகோதை

170. சூடினுள் பைம்பொற் றுகிலுடுத்தாள் சந்தனச்சே
ருடினு டன்பே ரணியணிந்தாள்—சேடியர்

---

166. மையல் அகல - மயக்கம் நீங்கும்படி. மனத்து இழைத்து - மனத்திலே எழுதி.

(பி - ம்.) 'அகலா மனத்தெழுதிக்'

167. தீட்டும் கிழி - எழுதிய துணிப் படத்தில். பகற் கண்டு - தலைவனைப் பகலிலே பார்த்து; பகலிற்கிழியிலும், இரவிற் கனவிலுந் தரக்கண்டு. ஒப்பு : 190.

(பி - ம்.) 'தரக் காணுங்கால்'

168. யாதொன்றும் - வேறு எப்பொருளையும். இருப்பாள் : மங்கை. பொருகளிற்றில் - போர் செய்கின்ற யானையின்மேல். தாது - மகரந்தம். தொங்கல் - ஆத்திமாலையை அணிந்த. சயதுங்கன் - வெற்றியினல் உயர்ந்தவன்; இப்பெயர் இவ்வேந்தன் தந்தையாகிய முதற் குலோத்துங்கனுக்கும் உண்டு; (கலிங்கத். காப்பு. 8, இராசபாரம். 34.)

(பி - ம்.) 'பொருகளிற்றுத்'

169. விரிகோதை - மலர்ந்த மாலையை.

170. பொற்றுகில் - பொன்னுடை. சந்தனச் சேறு - சந்தனக் குழம்பை. பேரணி - மதாணி; 50; "மதாணியான பேரணிகலப் பதக்க முடைய மார்பினள்" (தக்க. 105, உரை.) சேடியர் - பணிமகளிர்.

[மங்கை தன்னையே ஐயுறுதல்]

171. காட்டும் படிமக் கலத்துக் கமலத்தை
ஓட்டும் வதனத் தொளிமலர்ந்து—கேட்டு

172. விடைபோ மனங்கன்போல் வேல்விழிக டாமும்
படைபோய் வருவனபோற் பக்கம்—கடைபோய்

173. மறித்து மதர்மதர்த்து வார்கடிப்பு வீக்கி
எறிக்குங் குழைக்காதிற் கேற்றும்—நெறிக்கும்

174. அளக முதலாக வைம்பாற் படுத்த
வளர்கருங் கூந்தன் மலிந்துங்—கிளர

175. அரியன நித்திலத்தி னம்பொற் றொடித்தோள்
பரியன காம்பிற் பணைத்தும்—தெரியற்

---

171. படிமக்கலத்து - கண்ணாடியில்; "பூமபடிமக்கலம் பொற்படிமக்கல மென்றிவற்றால்" (நே. திருநா.) கமலத்தை ஓட்டும் வதனம் - தாமரைப் பூவைப் போன்ற முகத்தில்; ஓட்டும்: உவம வுருபு; அழகில் தோற்று ஓடச்செய்யும் என்னலும் ஆம்.

(பி - ம்) 'கலத்திற் கலாமதியை'

172. விடைபோம் - விடைபெற்றுச் செல்லுகின்ற; 300. படைபோய் வருதல் - போர்மேற்சென்று வருதல்; தக்க. 241. பக்கம் கடைபோய் - பக்கத்திலும் இறுதியிலும் போய்.

(பி - ம்.) 'பக்கம் புடைபோய்'

173. வார் கடிப்பு வீக்கி - நீண்ட குதம்பை என்னும் காதணியையணிந்து. எறிக்குங் குழை-ஒளியை வீசும் குழையை அணிந்த; "மையார் கடிப்பிணையும் வார்குழையுங் களைந்திடுவார்" (சீவக. 295.) நெறிக்கும் - வளைந்த.

(பி - ம்.) 'மிகமதர்த்து.' 'குழைகாதி லேற்றி'

174. அளகம் முன்நெற்றி மயிர். ஐம்பாற்படுத்த - ஐந்து வகையாகச் செய்யும்படி; ஐம்பால்: பு. வெ. 223, உரை. மலிந்தும்-தழைத்தும்.

(பி - ம்.) 'மலிந்தும் மிளிர'

175. நித்திலத்தின் அம்பொற்றொடித்தோள் - முத்துக்கள் பதிக்கப்பெற்ற அழகிய பொன்னாலாகிய வளையையணிந்த தோள். பரியன காம்பின் - பருமையுடையனவாகிய மூங்கிலைப் போல. பணைத்தும் - பெருத்தும். மூங்கிலும் முத்துப் பிறக்கும் இடங்களில் ஒன்றாதலின் முத்துத் தொடியை யணிந்த தோளுக்கு அதனை உவமை கூறினார்.

(பி - ம்.) 'நித்திலத் தம்பொற்'

176. சுவடு படுகளபத் தொய்யில்சூழ் கொங்கை
குவடு படவெழுச்சி கொண்டும்—திவடர

177. முந்துங் கலையல்குன் மூரித் தடமகன்றும்
நொந்து மருங்கு னுடங்கியும்—வந்து

178. மிடையும் புதுவனப்பு விண்ணோரும் வீழ
அடையுந் தனதுநக்கண் டஞ்சிக்—கொடையனகன்

179. பண்டறியு முன்னைப் பருவத் துருவத்துக்—
கண்டறியு மவ்வடிவு காண்கிலேன்—பண்டறியும்

180. முன்னை வடிவு மிழந்தேன் முகநோக்கி
என்னை யறிகலன்யா னென்செய்கேன்—தன்னை

---

176. தெரியல் சுவடுபடு - மாலையினுடைய சுவடு உண்டான. களபத் தொய்யில் - சந்தனக் குழம்பால் நகிலில் எழுதப்பட்ட கொடி முதலிய கோலங்கள். குவடுபட - மலைச்சிகரங்கள் தோற்கும்படி. திவள்தர-விளங்கும்படி; துவள என்னலும் ஆம்.

(பி - ம்.) 'தொய்யில்வாழ் கொங்கை' 'கொண்டுந் திவடாமம்', 'திவடாது'

177. முந்தும் - அல்குலுக்கு அடை. கலை - மேகலை. மூரித்தடம்-பெருமையுடைய உயர்ந்த இடம். மருங்குல் நொந்து நுடங்கியும் - தனக்கு இடமில்லாமையால் இடை வருந்தித் துவண்டும்.

178. மிடையும் - நெருங்குகின்ற. புது வனப்பு - முன் பருவங்களி லில்லாத புதிய திரண்ட அழகு. விண்ணோரும்: உம்மை உயர்வு சிறப்பு. வீழ - விரும்பும்படி. அனகன்: தலைவன் பெயர்.

(பி - ம்.) 'கொடியனகன்'

179. முன்னைப் பருவத்து - பேதை பெதும்பையாகிய பருவங்களில். உருவத்து - உடம்பில். அவ் வடிவு - அந்த அழகை; வடிவு உருவமும் ஆம்.

180. என்னை யறிகலன் யான்; "கானவர் தாந்தினை கொய்த னரோ கண்ட கண்ணலவோ, தேனமர் வண்டினங் காள்கிள்ளை காள் செழுங் கானைவிட்டுப், போனவன் றானல்லவோ நெடுங்கானிப் புனமல் லவோ, கானவன் றானல்ல வோசொல்ல வேண்டுங் நடுக்கண்டதே" (தனிப்பாடல்.) தன்னை - விக்கிரம சோழனை. 171-180. கண்ணிகள் மங்கை தன்னையேதான் அறியாத நிலைமையை விளக்குவன.

(பி - ம்.) 'வடிவம்' 'அறிகிலே னென்செய்கேன்'

181. வணங்கி வருவ தறிவ னெனவந்
திணங்கு மகளி ரிடைநின்—றணங்கும்

182. இறைவ னகளங்க னெங்கோன் குமரித்
துறைவ னிருபகுல துங்கன்—முறைமையால்

183. காக்குங் கடல்கடைந்த கைம்மலரு முந்திமலர்
பூக்கு முலகளந்த பொற்கழலும்—நோக்கும்

184. திருக்கொள்ளு மார்பமுந் தெவ்வேந்த ரெல்லாம்
வெருக்கொள்ளு மூரித்தோள் வெற்பும்—உருக்கும்

---

181. அறிவன் - சோழன் அறிவான். இணங்கு மகளிர் - தன்னை ஒத்த பெண்கள். அணங்கும் - மங்கையும்.

(பி - ம்.) 'அறிவல்' 'அறிகுவென் முன்வந்து', 'அறியலேன்முன் வந்து'

182. அகளங்கன் - விக்கிரம சோழன். குமரித் துறைவன் - குமரித் துறைக்குத் தலைவன். நிருபகுலதுங்கன் - அரசர்களிற் மேம்பட்ட சோழன்.

183. காக்கும் - தான் காக்கின்ற; கடல் கடைந்த - பாற்கடலைக் கடைந்த; "தோளிணையாற், கோழியிற் சோழ குலத்தொருவன் முன் கடைந்த, ஆழியிற் கொண்ட வரம்பையரும்" (இராசராச. 72); "கடல் கலக்க வெழு மின்னமுது தன்னையொருவன், கடவுள் வானவர்க ளுண்ண வருள் செய்த கதையும்" (கலிங்கத். 190); "உரைகுறுக நிமிர்கீர்த்தி யிவர்குலத்தோ ருருவன்காண், நரைதிரைமூப் பிவைமாற்றி யிந்திரனு நந்தாமல், குரைகடலை நெடுவரையாற் கடைந்தமுது கொடுத்தானும்" (கம்ப. 1. குலமுறை. 4.); கடல் கடைந்ததும், உலகளந்ததுமான திருமால் செயல்களைச் சோழன்மேல் ஏற்றிக் கூறியது; கடல்கடைந்த பிருதுலாக்ஷன் என்னும் சூரியகுல மன்னன் செயலை இச்சோழன்மேல் ஏற்றியது, அரசரைத் திருமாலாகக் கொள்ளும் முறைபற்றியும் ஆம். பூக்கும் - பெற்ற. நோக்கும் - தன்னையே நோக்குகின்ற.

(பி - ம்.) 'பூங்கழலும்,' 'பூமலரும்'

184. திருவைக் கொள்ளும் மார்பத்தையும். தெவ்வேந்தர் - பகையரசர். வெருக்கொள்ளும் - அஞ்சுதற்குக் காரணமான. மூரி - வன்மை. உருக்கும் - கண்டவர் மனத்தை உருகச் செய்கின்ற.

185. மகரக் குழைக்காது மாதரார் மாமை
நுகரப் புடைபெயரு நோக்கும்—துகிரொளியை

186. வெளவிய கோல மணிவாயு மெப்பொழுதும்
செவ்வி யழியாத் திருமுகமும்—எவ்வுருவும்

187. மாறுபடா வண்ணமுந்தன் வண்ணப் படிவத்து
வேறு படுவனப்பு மெய்விரும்பித்—தேறும்

188. பிறையாம் பருவத்துப் பேருவகை யாம்பல்
நிறையா மதிக்கு நெகிழ்ந்தாங்—கிறைவனைக்

189. கண்டு மனமு முயிருங் களிப்பளவிற்
கொண்டு பெயர்ந்தது கொல்யானை—பண்டு

---

185. மாதரார் மாமை - மகளிருடைய பேரழகை ; 231 ; மாமையின் தன்மை; "நீர்வள ராம்பற் றூம்புடைத் திரள்கால், நாருரித் தன்ன மத னின் மாமை" (நற். 6 : 1-2) என்பதனால் அறியப்படும். நுகர - உண் ணும்பொருட்டு. நோக்கும் - பார்வையும். துகிரொளியை - பவளத்தின் ஒளியை.

(பி - ம்.) 'மாதரார் மானம்'

186. எப்பொழுதும் செவ்வி யழியா - துன்பக் காலத்திலும் அழகு கெடாத ; இது, "மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும், இத்தி ருத் துறந் தேகென்ற போதினும், சித்தி ரத்தி னலர்ந்தசெந் தாமரை, ஒத்தி ருந்த முகத்தினை யுன்னுவாள்" (கம்ப. 5. காட்சி. 20) என்னும் செய்யுளை நினைப்பிக்கின்றது.

187. மாறுபடா வண்ணமென்றது சோழனுடைய மேனியின் தன் மையை. வேறுபடு வனப்பு என்றது உறுப்பின் வேறுபாட்டை. மெய் விரும்பி - மனத்தின் கண்ணே விரும்பி ; இதய உணர்ச்சியோடு விரும்பி.

(பி - ம்.) 'வண்ணமவ் வண்ணல்', 'வண்ணமிவ் வண்ணல்', 'வண்ணமு மண்ணல்'

188. பேருவகை ஆம்பல் - பெரிய உவகையையுடைய ஆம்பல்மலர். நிறைஆம் மதிக்கு - கலைகளால் நிறைந்த பூரண சந்திரனுக்கு. நெகிழ்ந் தாங்கு - மலர்ந்தாற்போல. இறைவனை - சோழனை.

(பி - ம்.) 'தேறிற் பிறையாம் பருவத்துட்' 'நிறைவாம் மதிக்கு'

189. பண்டு - விக்கிரம சோழனைக் காண்பதற்குமுன். கொல் யானை கொண்டு பெயர்ந்தது.

(பி - ம்.) 'பண்டை'

190. நனவு கிழியிற் பகற்கண்டு நல்ல
கனவு தரவிரவிற் கண்டு—மனமகிழ்வாள்

191. தீட்ட முடியாத செவ்வி குறிக்கொள்ளும்
நாட்ட முறங்கா மையுநல்க—மீட்டுப்

192. பெயர்ந்தா டமர்தம் பெருந்தோள் களில்வீழ்ந்
தயர்ந்தா ளவணிலையீ தப்பாற்—சயந்தொலைய

[மடந்தை]

193. வெந்து வடிவிழந்த காமன் விழிச்சிவப்பு
வந்து திரண்டனைய வாயினாள்—அந்தமில்

194. ஓலக் கடலேழு மொன்றா யுலகொடுக்கும்
காலக் கடையனைய கட்கடையாள்—ஞாலத்தை

---

190. நனவு - விழித்திருக்கும் நிலையில். கிழியில் - தான் தீட்டிய படத்தில்; 167. மகிழ்வாள் : மங்கை.

(பி - ம்.) 'தரவிரவு'

191, தீட்ட முடியாத - ஓவியருக்கும் எழுத முடியாத. செவ்வி - அழகை. குறிக்கொள்ளும் - தமக்கு இலக்காகக் கொள்ளும். நாட்டம் - கண்கள். உறங்காமையும் - தூக்கமில்லாமையையும். சோழனைக் கண்ட கண்களே இப்பொழுது உறங்காமையையும் கொடுத்தன என்பது கருத்து; "கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய், தாங்காட்ட யாங் கண் டது" (குறள், 1171.) மீட்டு - தன் மனத்தை மீட்டு.

(பி - ம்.) 'குறிகோளும்', 'குறிகொள்ள - வாட்டமுறங்காமையு நல்க', 'உறங்காமையை மீட்டும்'

192. பெயர்ந்தாள் - திரும்பிவந்தாள். அயர்ந்தாள் - சோர்ந்தாள். சயம் தொலைய - மற்றவரை வென்ற வெற்றி நீங்குதலால்.

193. கண்ணி. 193: 142. அந்தமில் - முடிவில்லாத.

194. ஓலக்கடலேழும் - ஓசையையுடைய எழு கடல்களும். ஒன்றாய் - ஒன்றாகக் கூடி. உலகொடுக்கும் - உலகங்களை அழிக்கும். காலக் கடை - யுகத்தின் முடிவு. காலக்கடை கண்ணுக்கு; "ஓலக் கடனெருப்பி னுலகேழு முருகும், காலக் கடையினுங் கொடியகட் கடைகளே" (தக்க. 81.) ஞாலத்தை வீட்டி - உலகத்தை அழித்து.

(பி - ம்.) 'காலக் கடலனைய', 'காலக் கடலன்ன'

195. வீட்டி வினைமுடிக்க வெங்கால தூதுவர்கள்
கோட்டி யிருக்குங் குவிமுலையாள்—நாட்ட
196. வடிவின் மருங்குலாண் மாரனைப்போன் மேலோர்
முடிவி லுணர்வை முடிப்பாள்—கடிதொடிந்து
197. போகா தொழியா திடையென்று போய்முடியல்
ஆகாமை கைவளரு மல்குலாள்—பாகாய

[பந்தாடுதல்]

198. சொல்லி யொருமடந்தை தோழியைத் தோள்வருந்தப்
புல்லி நிலாமுற்றம் போயேறி—வல்லிநாம்
199. சேடிய ரொப்ப வகுத்துத் திரள்பந்து
கோடியர் கண்டுவப்பக் கொண்டாடி—ஓடினல்

---

195. வினை முடிக்க - தம் தொழிலை நிறைவேற்ற. கோட்டியிருக்கும் - கூட்டமாக இருக்கும். நாட்ட - நாட்டுவதற்கு.

196. வடிவுஇல் மருங்குலாள் - வடிவமில்லாத இடையையுடையாள். மாரனைப் போல் - மன்மதனைப் போல. மாரனைப்போல் நாட்ட வடிவில் மருங்குலாள் எனக்கூட்டுக. இடைக்கு மன்மதன் உவமை; உரு தோன்றுமைபற்றி; "பாரிலிடைக் கரவும் பைங்கொடியும் பூங்கொம்பும், மாரனுடம்பும்" (உவமான சங்கிரகம், 10.) மேலோர் - முனிவருடைய. உணர்வை - அறிவை. கடிது - விரைந்து.

(பி - ம்.) 'கடிதோடிப்'

197. போகாதொழியாது - போய்விடும்; அதன் நுண்மை பற்றியும் தாங்கும் கொங்கை முதலியவற்றின் பாரம் பற்றியுமாம். முடியலாகாமை - முடிவில்லாதபடி. கைவளரும் - பக்கங்களில் இடமகன்று வளரும்; கை-பக்கம்; 230; 'இருகையு மிரைத்து மொய்த்தார்' (கம்ப. 2. 3 : 83.)

198. பாகாய சொல்லி - தேன்பாகைப்போன்ற சொல்லை யுடையாளாகிய. ஒரு மடந்தை - ஒப்பற்ற மடந்தைப் பருவத்தாள். புல்லி-தழுவி. நிலாமுற்றம் - நிலவொளி பரவும் மேற்றளப். வல்லி: விளி.

199. ஒப்ப வகுத்து - இரண்டு திறத்திலும் சமமாகப் பிரித்து. கோடியர் - கூத்தர்; (குலோத். உலா, 305; 'கோடியர் தலைவ கொண்டதறிந்' (பொருந. 57.) ஓடினல் - யான் தோற்றால்; "ஓடாததானை" (சீவக. 7.); 'ஓடாததானை நளனென் றுளனொருவன்' நள. 1. 18.)

(பி - ம்.) 'கண்டிருப்பக்' 'ஆடினல்'

200. என்மாலை நீகொள்வ தியாங்கொள்வ தெங்கோமான்
தன்மாலை வாங்கித் தருகென்று—மின்னனையாள்

201. வட்டித் தளகமுங் கொங்கையும் வார்தயங்கக்
கட்டிக் கனபந்து கைப்பற்றி—ஒட்டிப்

202. பொருதிறத்துச் சேடியர்தம் போர்தொலையத் தானே
இருதிறத்துக் கந்துகமு மேந்திப்—பெரிதும்

203. அழுந்து தரளத் தவைதன்னைச் சூழ
விழுந்து மெழுந்து மிடைய—எழுந்துவரி

204. சிந்த விசிறு திரையி னுரையூடு
வந்த வனச மகளேய்ப்ப—முந்திய

---

200. கொள்வது : வியங்கோள் ; "கொள்ளப் படாது மறப்ப தறிவிலென் கூற்றுக்களே" (சிற். 87.) எம் கோமான் மாலை : 209. மின்னனையாள் : மடந்தை.

(பி - ம்.) 'யான் கொள்வதென்' 'தரிலென்று பொன்னனையாள்'

201. வட்டித்து - சபதம் செய்து ; 217 ; 'வெந்நிடு வார்போற் போவர் வட்டித்து விளித்து மீள்வர்" (திருவிளை. அங்கம்வெட்டின. 17.) அளகம் - முன்னெற்றியில் சுருண்டு தொங்கும் மயிர் ; 174. பந்தாட அளகத்தைக் கட்டுதல் ; "கன்னிக் கூழை, பொன்னிணைற் புடையெடுத் தியாத்து", (பெருங். 1. 34 : 192-3.) வார் - கச்சு. கனபந்து - மிக்க பந்துகளை.

(பி - ம்.) 'வட்டித்த கொந்தளமும்'

202. ஒட்டிப் பொரு திறத்து - பந்தயம் வைத்து விளையாடுகின்ற போது. தானே - தான் ஒருத்தியாகவே. இருதிறத்துக் கந்துகமும் - இரண்டு வகையாருடைய பந்துகளையும்.

203. அழுந்து தரளத்து அவை - பதித்த முத்துக்களாற் செய்யப் பட்ட அப்பந்துகள். மிடைய - நெருங்குதலால். உவரி - கடல் ; இங்குப் பாற்கடலைக் குறித்தது.

(பி - ம்.) 'அழுந்துற தாளத்து', 'அழுந்துறு தானத்து,' 'அழுந்து பூந்தாரமவை தன்னைச் சூழ', 'எழுந்து தரளத் திவைதன்னைச்'

204. விசிறு - வீசுகின்ற. திரை - அலை. வனசமகள்-தாமரையிற் றோன்றிய திருமகள் ; 2 : 69. எய்ப்ப - ஒப்ப. தன்னைச் சூழவுள்ள முத்துப் பந்துகளுக்குப் பாற்கடலும், அவற்றின் நடுவேயுள்ள மடந்தைக்குத் திருமகளும் உவமை.

(பி - ம்.) 'விசிறுந் திரையின்'

205. செங்காந்த ளங்கை சிவக்குஞ் சிவக்குமென்
றங்காந்து தோள்வளைக ளார்ப்பெடுப்பத்—தங்கள்
206. நுடங்குங் கொடிமருங்கு ணைந்தசைந்த தென்றென்
றடங்குங் கலாப மரற்றத்—தொடங்கி
207. அரிந்த குரலினவா யஞ்சீ றடிக்குப்
பரிந்து சிலம்பு பதைப்ப—விரிந்தெழும்
208. கைக்கோ விடைக்கோ கமல மலரடிக்கோ
மைக்கோல வோதியின்மேல் வண்டிரங்க—அக்கோதை

204-5. முந்திய - முற்பட்ட : பந்தாடுதற்குக் கை இன்றியமையாத தாகலின் இவ்வாறு கூறினர். செங்காந்தளங்கை - செங்காந்தட் பூவைப் போன்ற உள்ளங்கை. அங்காந்து - வாய் திறந்து. தங்கள் என்றது, மருங்குல் தங்களுக்கு உரிய இடமானதுபற்றி.

(பி - ம்.) 'அங்காந்த'

206. நுடங்கும்-அசையும். கொடி மருங்குல் - கொடியைப்போன்ற இடை. அசைந்தது - முன் இருந்த தன்மை கெட்டது; 'அசைவென்பது பண்டை நிலைமை கெட்டு வேறொரு வாறாகி வருந்துதல்' (தொல்.மெய்ப்.5, பேர்.) அடங்குகலாபம் - இதுவரையிலும் ஓசையில்லாமல் அடங்கியிருந்த மேகலைகள் ; கலாபம் - பதினாறுமணி வடங்களாலான ஓர் அணி.

(பி - ம்.) 'நொந்தொசிந்த தென்று'

207. அரிந்த குரலினவாய் - மெல்லிய குரலையுடையனவாய். அஞ்சீறடிக்கு - அழகிய சிறிய பாதங்களுக்கு. பரிந்து - அன்புற்று. அடி பெயர்த்து ஓடிப் பந்தாடுவதால் பாதங்கள் நோமேயென்று சிலம்புகள் பதைப்ப. கலாபமும் (206.) சிலம்பும் தம் இருப்பிடங்களுக்கு உண்டாகும் கேட்டை உணர்ந்து அரற்ற, பதைப்ப. விரிந்து எழும் - விரல்கள் விரிந்து புறப்படுகின்ற.

(பி - ம்.) 'பரிந்த' 'விரிந்த மலர்க்'

208. மைக்கோல ஓதியின் மேல் - மையைப்போன்ற அழகை யுடைய கூந்தலின்மேல் : "மையுக் கன்ன மொய்யிருங் கூந்தல்" (மதுரைக். 417) ; மை - மேகமெனினும் ஆம். இரங்க - இரங்குவதுபோல ஒலிக்க. வண்டு இரங்கியது, கையும், இடையும் அடியும் வருந்துதல் கண்டு; ஓகார இடைச்சொற்கள் இங்குத் தெரிநிலைப் பொருளில் வந்தன;' 'அலகோ வில்லா வந்தண ரேயோ வறமேயோ, உலகோ வானோ வும்பர் கொலோவீ துணரேமால்' (கம்ப. 1. மிதிலைக் : 29); 'கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ, நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ' (நள. 3: 92); ஐயமும் ஆம். அக் கோதை - மாலைபோன்ற அம்மடந்தை.

12500 1

209. பந்தாடி வென்று பருதி யகளங்கன்
சந்தாடு தோண்மாலை தாவென்று—பைந்துகிற்

210. றானை பிடித்தலைக்கும் போதிற் றனிக்குடைக்கீழ்
யானைமேல் வெண்சா மரையிரட்டச்—சேனை

211. மிடையப் பவளமு நித்திலமு மின்ன
அடையப் பணிலங்க ளார்ப்ப—புடைபெயர

212. வார்ந்து மகர வயமீன் குலமுழுதும்
போந்து மறுகு புடைபிறழச்—சேர்ந்து

---

209. பருதி அகளங்கன் - சூரியனைப் போன்ற ஒளியையுடைய விக்கிரம சோழன்; "செஞ்ஞா யிற்றுக் கவினை மாதோ" (புறநா. 4: 16.) பருதி குலத்து அகளங்கன் என்றலும் ஆம்; அகளங்கன்: 152. சந்தாடு தோள் மாலை-சந்தனத்தை அளைந்த தோளில் அணிந்த மாலையை. தா என்று - தோழியை வாங்கித் தா என்று; 200.

210. பைந்துகிற்றானை பிடித்து - பசிய துகிலாகிய ஆடையைப் பிடித்து. அலைக்கும்போது - துன்புறுத்தும் சமயத்தில். தனிக் குடைக் கீழ் - ஒப்பற்ற குடையின்கீழ்; என்றது மற்ற அரசர் குடைக்கு முன்னே சோழன் குடை விளங்குதல்பற்றி; "சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும், அறத்துவழிப் படூஉந் தோற்றம்போல, இருகுடை பின்பட வோங்கிய வொருகுடை, உருகெழு மதியி னிவந்துசேண் விளங்க" (புறநா. 31: 1-4.) இரட்ட - மாறி அசைய.

(பி - ம்.) 'போதிற் சயதுங்கன்'

211. பவளம் - மகளிருடைய உதடு. நித்திலம் - அவருடைய பற்கள். அடைய - முழுவதும். பணிலங்கள் - சங்குகள். புடைபெயர - பக்கத்தில் பெயரும்படி.

212. வார்ந்து - நீண்டு. மகரவயமீன் - சுறுவாகிய வன்மையையுடைய மீன்; என்றது மகளிருடைய கண்களை; "இகல்விழி மகரமு மம்மகரம் பொரு விருமகரமு மாட" (மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ், 17.) மகரம் புடைபெயர்ந்து பிறழும் தன்மையுடைமையால் கண்ணுக்கு ஆகு பெயராயிற்று.

(பி - ம்.) 'மறுகும் வயமீன்', 'மகளிர் வயமின்' 'மறுகும்படி பிறழ' 'மறுகின்புடை புரளச் சேர்ந்த'

213. பதலை முழங்கப் பகட்டேற்றி விட்ட
மதலையர் முன்னர் மலிய—விதலையராய்த்
214. தாழுந் தொழிலிற் கிளைபுரக்கத் தன்னடைந்து
வாழும் பரதர் மருங்கீண்ட—வீழுந்திக்
215. கன்னியு நன்மதையுங் கங்கையுஞ் சிந்துவும்
பொன்னியுந் தோயும் புகார்விளங்க—மன்னிய
216. செங்கோற் றியாக சமுத்திர நண்ணுதலும்
தங்கோ மறுகிற் றலைப்பட்டுத்—தங்களில்

---

213. பதலை. ஒருவகை வாத்தியம்; "பதலை யொருகண் பையென வியக்குமின்" (புறநா. 152 : 17) ; "பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்" (குறுந். 59 : 1.) பகட்டு ஏற்றிவிட்ட - யானையின்மேல் ஏற்றிவிட்ட. மதலையர் - மைந்தர் ; மதலை (பி - ம்.) - ஒருவகைக் கப்பல் ; "மகரமால் கடலையல்லாற் சிறுகய மதலை சேரா" (சூளா. அரசியற் 42.) ஒரு வகை வாத்தியமும் ஆம் ; புறநா. 152 : 18. விதலை - நடுக்கம்

(பி - ம்.) 'மதலைகண்'

214. கிளை - சுற்றத்தாரை. பரதர் - கூத்தர் ; போர்க்களம் பாடும் பொருநரும் ஆம் ; பரதவர் என்னும் வேறு பொருளும் தோற்றியது. வீழ் உந்தி - விரும்பப்படும் சுழிகளையுடைய.

(பி - ம்.) 'தண்டடைந்து'

215. கன்னி - குமரிநதி. புகார் - ஆற்றுமுகம் ; "புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்" (புறநா. 30 : 12) ; காவிரிப்பூம் பட்டினம். கண்ணிகள் 211-216 முடிய, புகார்த் துறைமுகச் சிறப்பமைந்த சிலேடை. இது, கன்னி முதலான நதிகள் தங்களைத் தூய்மை செய்துகொள்ளப் பொன்னி நதியில் வந்து படிகின்றன என்னும் புராண வரலாற்றை உட்கொண்டது.

(பி - ம்.) 'தோயப்புகார்'

216. தியாக சமுத்திரம் : விக்கிரம சோழன் பட்டங்களுள் ஒன்று ; இப்பெயருடைய ஊரொன்று கும்பகோணத்தின் பக்கத்திலுள்ளது. 'இவ் வூர் விக்கிரம சோழன் பட்டப்பெயரைக் கொண்டது : திருக்கோடி காவல் கோயில் தியாக சமுத்திரம் என்று பெயரிடப்பட்டது' (சோழர்கள், Vol. 2. பக். 631) ; 331.

210-16. இக்கண்ணிகளில் விக்கிரமசோழனைத் தியாகசமுத்திரம் என்னும் அவனுடைய பட்டப் பெயருக் கேற்பக் கடலாக உருவகம் செய்திருப்பது பாராட்டற்குரியது. கோ மறுகு-இராசவீதி. தலைப்பட்டு-தண்டு,

217. ஒட்டிய வொட்ட முணராதே தோள்வளையும்
கட்டிய மேகலையுங் காவாதே—கிட்டித்

218. தொழுதா ளயர்ந்தா டுளங்கினாள் சோர்ந்தாள்
அழுதா ளொருதமிய ளானாள்—பழுதிலாக்

219. காக்குந் துகிலு மிலங்கு பொலன்கலையும்
போக்கு நிதம்பம் புனைகென்று—வீக்கும்

220. மணிக்கச்சுந் தம்முடைய வான்றூசுங் கொங்கை
பணிக்கக் கடைக்கண்கள் பாரா—அணிக்கமைந்த

221. குன்றுத நித்திலக் கோவையும் பொன்னிறத்த
பொன்றுத பட்டும் புனைகென்று—நின்று

---

217. தங்களில் ஒட்டிய ஒட்டம் - மடந்தையும் அவளுடைய சேடியரும் தம்முள் செய்த பந்தயம்; 199-200. 'ஒட்டினே னுன்பணைய மோதென்ன', (நள. உ. 45.) தோள்வளையும் மேகலையும் உடல் மெலிந்தமையால் நழுவின என்பது கருத்து. கிட்டி - விக்கிரம சோழனை நெருங்கி.

218. துளங்கினாள் - நடுங்கினாள். ஒரு தமியளானாள் - நாண்முதலான குணங்கள் நீங்க மிகத் தனித்தவளானாள்; 160.

219. கலை - மேகலை. போக்கும் நிதம்பம் - இழந்த அல்குல். புனைகென்று - அணிந்துகொள்ளுகவென்று. வீக்கும் - கட்டிய.

220. மணிக்கச்சு - இரத்தினங்கள் கோக்கப்பெற்ற முலைக்கச்சு; பொலன்கச்சு 244. வான்றூசு - சிறந்த உத்தரிய ஆடை; கச்சும் தூசும் கொங்கைக்கு; 'கச்சிட்டுக் கட்டுவது கொங்கைகள் தாம் காணமல்; துகிலிட்டு மறைப்பது அவற்றைப் பிறர் காணமல்' (தக்க. 83, உரை.) கொங்கை பணிக்க - நகில்கள் நிதம்பத்துக்கு அளிக்க பாரா - பார்த்து. அணிக்கு அமைந்த - ஆபரண மாதற்குப் பொருந்திய.

(பி - ம்.) 'தன்னுடைய வான்றூசும்' 'படைக் கண்கள் பாரி லணிக்கமைந்து'

221. நித்திலக் கோவை - முத்துமாலை; என்றது கண்ணீர்ப் பெருக்கை; "பண்பட்ட மென்மொழிப் பைந்தொடி கொங்கை பரக் கவைவேற், கண்பட்ட முத்த வடங்கண்டுங் காக்கிலன் காடவர்கோன்" (பெருந். 902.) பொன்னிறத்த பட்டு என்றது பசலையை.

(பி - ம்.) 'நித்திலத்த கோவையும்'

222. கொடுத்தன கொங்கைகளுங் கொண்டன தானும்
அடுத்தனர் தோண்மே லயர்ந்தாள்—கடுத்துக்

223. கவரு மனங்களுடன் கைகலந்த தன்றித்
தவரு முதுகிளவித் தாய—ரவரெங்கும்

224. கூசினார் சந்தம் பனிநீர் குழைத்திழைத்துப்
பூசினா ராலி பொழிந்தெழுந்தார்—வீசினார்

225. இட்டார் நிலவி லிளந்தென்ற லுங்கொணர்ந்து
சுட்டார் குளிரி தொடுத்தணிந்தார்—விட்டாரோ

---

222. கண்கள் நித்திலக்கோவையையும் பட்டையும் கொடுத்தன. கொங்கைகளும் கோவையையும் பட்டையும் கொண்டன. தானும் - மடந்தையும். அடுத்தனர் - பக்கத்திலுள்ளாரது. கடுத்து - சினங்கொண்டு.

(பி - ம்.) 'அடுத்தன தோன்றாமல்,' 'அடுத்தன தோண்மேல்' 'தடுத்துக்', 'எடுத்துக்'

223. கவரும் - உயிரைக் கவரும். தவரும் = தவறும்; எதுகை நோக்கித் திரிந்தது. முதுகிளவி-முதுமையினால் தளர்ந்த சொல்லுடைய. தாயர் - ஐவகைத்தாயர்; (16.)

(பி - ம்.) 'கைகலந்த போரில்'

224. கூசினார் - மனம் நடுங்கினார். சந்தனத்தைப் பனி நீரிலே குழைத்து. ஆலி - நீர்த்துளியை; "ஆலிவெந்து", "ஆலியுங் கடிதிற் புலர்ந்து" (தக்க. 176, 184.) வீசினார் - ஆடையினால் வீசினார். சாமரை, விசிறி முதலியன கொண்டு வீசினார் என்றலும் ஒன்றும்.

(பி - ம்.) 'சாந்து பனிநீர்' 'பொழிந்தொழிந்தார்'

225. நிலவில் இட்டார், இளந் தென்றலும் கொணர்ந்து சுட்டா ரென்றது மடந்தைக்குத் தென்றல் துன்பம் செய்தல் பற்றி; "இளந் தென்றலை வட வானல மென்னும்" (சங்கரநயினார் கோயி லந்தாதி, 9.) குளிரி - கல்லாரம்; பரி. 11 : 103, உரை; குளிரி - செங்கழுநீர்; பெருங். உ. 18 : III; நீர்ப்பூடுமாம. விட்டாரோ என்றது அவற்றின் மேலும் துன்பஞ் செய்தார் என்பது குறிப்பெச்சம்,

(பி - ம்,) 'குளிரி தொடுத்தெடுத்தார்,' 'குளிரத்தொடுத் தணிந் தார்'

226. பள்ள மதனிற் படரும் பெரும்புனல்போல்
உள்ள முயிரை யுடன்கொண்டு—வள்ளல்பின்
227. ஓதை மறுகி லுடன்போன போக்காலிப்
பேதை நடுவே பிழைத்தொழிந்தாள்—மாதரில்

[அரிவை]

228. வாரி படுமமுத மொப்பாண் மதுகரஞ்சூழ்
வேரி கமழ்கோதை வேறொருத்தி—மூரித்தேர்த்
229. தட்டுஞ் சிறுகப் பெருகி மரகதத்தாற்
கட்டுங் கனபொற் கலாபாரம்—பட்டும்
230. துகிலுங் கரப்பச் சுடர்பரப்பக் கைபோய்
அகல்கின்ற வல்கு லரிவை—இகலி
231. ஒருக்கி மருங்குகடிந் தொன்றினைவந் தொன்று
நெருக்கிய மாமை நிரம்பித்—தருக்கி

226, பள்ளத்திற் படரும் புனல்: "தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும், பள்ளமெனுந் தகையானை" (கம்ப. 1. குலமுறை: 21;) 'பள்ளநீர் வெள்ளமன்ன பரதனை' (கம்ப, 2. திருவடி சூட்: 118,) உள்ளத்தையும் உயிரையு முடன்கொண்டு. வள்ளல் - சோழன்.

(பி - ம்.) 'பரியும் பெரும் புனல்' 'உள்ளவுயிரை' 'வள்ளல் பிரான்.

227. பேதை என்றது மடந்தையை; பருவப்பெயரன்று.

(பி - ம்.) 'போதுமறுகில்'

228. வாரி - பாற்கடல். மதுகரம் - வண்டுகள். வேரி - தேன்; இருவேரி யெனலுமாம். கோதை - மாலையை யணிந்த. மூரி - வன்மை.

(பி - ம்) 'அமுதை யொப்பாள்'

229. கலாபாரம் - மேகலை.

(பி - ம்) 'மரகதத்திற்' 'பெருகு மரகதத்தால்' 'கலாபமும்', 'கலாபாரப்'

230. பட்டும் துகிலும் - தானணிந்த பட்டாடையும் துகிலாடையும். கரப்ப - தம் ஒளி மறையும்படி. சுடர் பரப்ப - பச்சை யொளியைப் பாவச்செய்ய. கலாபாரம் சுடர் பரப்ப என்க. கைபோய் - கைகடந்து அகன்று; இடமகன்று என்னலும் ஒன்றும். இகலி - மாறுபட்டு.

231. ஒருக்கி - நுணுகச் செய்து. கடிந்து - விலக்கி. மாமை - பேரழகு; (185).

(பி - ம்.) 'நெருக்கியமைய'

232. இடங்கொண்டு மின்னுக் கொடியொன் றிரண்டு
குடங்கொண்டு நின்றதெனக் கூறத்—தடங்கொண்

233. டிணைத்துத் ததும்பி யிளையோர்க ணெஞ்சம்
பிணைத்துத் தடமுகட்டிற் பெய்து—பணைத்துப்

234. பெருமை யுவமை பிறங்கொலிநீர் ஞாலத்
தருமை படைத்ததனத் தன்னம்—கருமை

235. எறித்துக் கடைபோ யிருபுடையு மெல்லை
குறித்துக் குழையளவுங் கொண்டு—மறித்து

236. மதர்த்து வரிபரந்து மைந்தர் மனங்கள்
பதைத்து விழநிறத்திற் பட்டுத்—ததைத்த

237. கழுநீர் மலரின் கவினழித்து மானின்
விழிநீர்மை வாய்த்த விழியாள்—முழுதும்

---

232. இரண்டு குடமென்றது நகில்களை. தடங்கொண்டு - மார்பினிடத்தைக்கொண்டு,

233. இணைத்து - ஒன்றுக்கொன்று ஒப்பாகி. நெஞ்சம் பிணைத்து - மனத்தைக் கட்டி. முகடு - உச்சி. பணைத்து - பெருத்து.

234. உவமை - மற்றவற்றிற்குத்தான் உவமையாதல். அன்னம் - நடையால் அன்னம்போல்வாள்.

(பி - ம்.) 'பிறங்குநீர் ஞாலத்து'

234-5. கருமை எறித்து - கரிய நிறத்தை வீசி. இருபுடையும் - இரண்டு பக்கங்களிலும். குழையளவும் கொண்டு - காதணியினளவும் தனக்குரிய இடமாகக்கொண்டு; "குழைபொருது நீண்டு குமிழ்மேன் மறியா, உழைபொருதென் னுள்ளங் கவரா - மழைபோல், தருநெடுங் கைச் சென்னி தமிழ்நா டனையார், கருநெடுங்கண் போலுங் கயல்" (தண்டி. 33, மேற்.) மறித்து - மூக்கின்மேல் தாவி.

236. மதர்த்து - வன்மைகொண்டு. வரி-இரேகைகள். விழ - விழும்படி. நிறத்திற் பட்டு - உயிர் நிலையிலே தைத்து; 'நல்லார் கொழுங்கயற் றடங்கண் போலும், அம்புகொண்டு" (சீவக. 439.) ததைத்த - கையால் வலிய அலர்த்திய, இதழ்கள் அடர்ந்த.

(பி - ம்.) 'ததைத்துக்'

237. கழுநீர்மலர் கண்ணுக்கு உவமை: "கழுநீர் மலர்க்கண்ணாய்" (திணைமொழி ஐம்பது, 11); "கழுநீ ருண்கட் கடையி னோக்கி" (பெருங். 1. 40 : 43.) நீர்மை - தன்மை; என்றது மருட்சியை. 234-37. கண்ணிகள் கண்களின் சிறப்பு.

(பி - ம்.) 'கழுநீ ரிதழின்'

238. நெறிந்து கடைகுழன்று நெய்த்திருண்டு நீண்டு
செறிந்து பெருமுருகு தேக்கி—நறுந்துணர்

239. வார்ந்து கொழுந்தெழுந்த வல்லியாய் மாந்தளிர்
சோர்ந்து மிசையசைந்த சோலையாய்ச்—சேர்ந்து

240. திருவிருந்து தாமரையாய்ச் சென்றடைந்த வண்டின்
பெருவிருந்து பேணுங் குழலாள்—பொருகளிற்றின்

241. வந்து மறுகி லொருநாண் மனுகுலத்தோன்
தந்த பெரிய தனிமைக்கண்—செந்தமிழக்

---

238. நெறிந்து - நெளிப்புடையதாகி. கடை குழன்று - இறுதிப் பக்கம் சுருண்டு. நெய்த்து - எண்ணெய் பூசப்பெற்று. பெருமுருகு - பெரிய வாசனையை. தேக்கி - நிரம்பவுண்டு. 238 : "எண்ணெயு நானமு மிவை மூழ்கி...கண்ணிருண்டு நெறிமல்கிக் கடைகுழன்ற கருங்குழல்கள்" (சீவக. 164.) நறுந்துணர் - மணமுடைய பூங்கொத்துக்கள்.

(பி - ம்.) 'நெறித்துக்' 'நிறத்துணர்'

239. வார்ந்து - நீண்டு. வல்லி - கொடி. மாந்தளிரைத் தலையிற் சூடுதல் : தக்க. 625. கூந்தலுக்குச் சோலை : "ஏலத் திமிரக் குழற்கா வில்" (திருவிளை. 3 : 2); "சொற்செறிந்த வம்புலாஞ் சோலையன்ன கூந்தலாள்" (தஞ்சைப் பெருவுடையாருலா, 151.)

(பி - ம்.) 'வாய்ந்து' 'கொழுந்தெழுந்து' 'மாந்தளிரைச்' 'அசைந்து'

240. திரு இருந்து - சீதேவி என்னும் ஆபரணம் இருக்கப்பெற்று; "செந்திருவுந் திங்களும் பூவுந் தலைசிறப்ப" (தண்டி. 33, மேற்.) மலர்களை அணிந்தமையால் 'வண்டுகளுக்கு விருந்தளிக்குங் குழலாள்' என்றார். 238-40 கண்ணிகள் குழலின் சிறப்பு.

(பி - ம்.) 'திருவிருந்த' 'சென்றிருந்த' 'பொருகளிற்று'

241. மறுகு - வீதி. ஒருநாளென்றது முன் பருவத்தில் வந்த நாளை. மனுகுலத்தோன் - வைவசுவத மனுவின் வழிவந்த சோழன்; மனுநீதிச் சோழனது குலத்தில் உதித்தவன் என்னலும் ஆம். செந்தமிழக் கோன் : 'தமிழப் பல்லவதரையர்' (நன். 224, மயிலை. மேற்.) என்பதைப் போன்றது.

(பி - ம்.) 'மனு குலக்கோன்' 'செந்தனிக்கோற்'

242. கோனே கவர்ந்தெம்மைக் கொண்டனன் வந்தெமக்குத்
தானே தரிற்றருக வென்பனபோல்—பூநேர்
243. இணைக்கையுந் தோளு மிடுதொடிக ளேந்தா
துணைக்கண் டுயிற்றத் துயிலா—மணிக்கூந்தல்
244. போது மறந்தும் புனையா பொலங்கச்சு
மீது படத்தரியா வெம்முலைகள்—சோதி
245. அடுக்குங் கனபொற் றுகில்பேணு தல்குல்
கொடுக்குந் தெருணெஞ்சு கொள்ளா—தெடுக்கும்
246. கருப்புச் சிலையனங்கன் கையம்பால் வீழும்
நெருப்புக் குருகி நிறைபோய்—இருப்புழிப்
247. பாடிய பூவைக்கும் யாதும் பரிவின்றி
ஆடிய தோகைக்கு மன்பின்றிக்—கூடிய

---

242. எம்மை யென்றது பின்னே வரும் தொடிகள் முதலிய வற்றை. தானே என்றது விக்கிரம சோழனை. பூநேர் - தாமரைப் பூவையொத்த.

(பி - ம்.) 'கவர்ந்தெதம்மைக்' 'கொண்டன வெங்களுக்கு'

243. இணைக்கை - இரண்டு கைகள். துணைக்கண் - இரண்டு கண்கள். மணிக் கூந்தல் - நீல மணியைப்போன்ற கூந்தல்; "மணியறைந் தன்ன மாவீ ழோதி", "நீல மாமணி நிமிர்ந்தியன் றன்ன, கோலங் கொண்ட குறுநெறிக் கூழை" (பெருங். 2. 7 : 17, 15 : 90 - 91.)

(பி - ம்.) 'இடுதொடியு மேந்தாள்' 'துயிலாள்' 'மணக்கூந்தல்', 'பிணிக் கூந்தல்'

244. மறந்தும் புனையா என்றது மங்கலமாகச் சில மலர்கள் அணிதலையும் செய்யா என்றபடி; நெடுநல். 54, ந. தரியா-பொறுக்க மாட்டா.

(பி - ம்.) 'போதை' 'புனையாப் பொலங்கச்சு' 'படத்திரியா'

245. சோதி அடுக்கும் - ஒளி பொருந்திய. பேணு து - உடுத்தலை விரும்பாது. தெருள் - தெளிவு.

(பி - ம்.) 'கலை பேணுது' 'துகில் பெறு' 'ஒடுக்கும்'

246. அனங்கன் - மன்மதன். நெருப்பு என்றது காமத்தழல்; "கண்டர வந்த காம வொள்ளெரி" (குறுந். 305 : 1.) நிறை-மனத்தை ஒருவழியில் நிறுத்துதல். இருப்புழி - இருக்கும் சமயத்தில்.

(பி - ம்.) 'நெருப்புக் கருகி'

247. பூவைக்கும் - பூவையினிடத்தும். யாதும் பரிவின்றி-சிறிதும் அன்பில்லாமல். தோகைக்கும் - மயிலினிடத்தும். கூடிய - தன்னிடம் வந்து பேசக்கூடிய.

248. கிள்ளைக்குந் தம்மிற் கிளரு மிளவன்னப்
பிள்ளைக்கு மாற்றாள் பெயர்ந்துபோய்க்—கொள்ளை

249. பயக்கு மலர்க்குரவப் பந்தர்ப் படப்பை
நயக்கு மிளமரக்கா நண்ணி—வயக்களிற்று

250. மன்னன் குலப்பொன்னி வைகலு மாடுதிரால்
அன்னங்கா ணீரென் றழிவுற்றும்—சென்னி

251. பெருகும் புகாரடையப் பெற்றீரான் மற்றைக்
குருகுகா ளென்று குழைந்தும்—கருகிய

252. நீலக் குயிலினங்கா ணீர்போலுஞ் சோணாட்டுச்
சோலைப் பயில்வீ ரெனத்துவண்டும்—பீலிய

---

248. கிள்ளைக்கும் - கிளிப் பிள்ளையையும். இளவன்னப் பிள்ளைக்கும் - இளைய அன்னப் பார்ப்பையும். ஆற்றாள்-சமாதானம் செய்யாளாய். கொள்ளை - மிகுதியாக. 247-48 கண்ணிகளில் அரிவை வளர்க்கும் பறவைகள் கூறப்பெற்றன.

(பி - ம்.) 'மடவன்னப்', 'களியன்னப்'

249. பயக்கும் - கொடுக்கின்ற. பந்தர்ப் படப்பை - பந்தராக விளங்கிய தோட்டத்தையுடைய; "இடுமுட் படப்பை" (புறநா. 197 : 10.); "மூன்றின் முஞ்ஞையொடு முசுண்டை பம்பிப், பந்தர் வேண்டாப் பலர் தூங்கு நீழல்" (புறநா. 320 : 1-2; 'பட்டமென் கமுகோங்கு படப்பை' (கம்ப. 1. நாட்டுப். 26.) நயக்கும் - விரும்பத்தக்க. இளமரக்கா-பூஞ்சோலை.

(பி - ம்.) 'பைந்தாட் படப்பை', 'பந்தர்ப் படாகை'

249-50. வயக்களிற்று மன்னன் - வலிய யானையையுடைய விக்கிரம சோழன். குலப்பொன்னி - சோழன்குலக்கொடியாகிய காவிரி. வைகலும் - நாள்தோறும். சென்னி - சோழன்.

251. புகார் - காவிரிப் பூம்பட்டினம். குருகு - நாரை.

(பி - ம்.) 'மற்றும், 'மாற்றிக்' 'கருதரிய'

252. நீர்போலும் - நீங்கள்போலும். சோணாட்டுச் சோலை - சோழ நாட்டிலுள்ள சோலைகளில். துவண்டும் - மெலிந்துவாடியும். பீலிய - தோகையையுடைய.

(பி - ம்.) 'ஞாலத்துப்'

253. பேரியன் மஞ்ஞை பெறுதிராற் கொல்லியும்
நேரியுஞ் சேர வெனநெகிழ்ந்தும்—நேரியன்

254. தண்டுணர்ப்பே ராரம் பலகாலுந் தைவந்து
வண்டுகாள் வாழ்வீ ரெனமருண்டும்-தொண்டிக்கோன்

255. மன்றன் மலயத்து வானருவி தோய்ந்தன்றே
தென்றல் வருவ தெனத்திகைத்தும்—நின்றயர்கால்

256. மன்னர்க்கு மன்னன் வளவ னகளங்கன்
முன்னர்ப் பணில முழங்குதலும்—மின்னிற்போய்ப்

257. பேணுந் திருமடனு மென்றும் பிரியாத
நாணும் பெருவிருப்பா னல்கூரக்—காணுங்கால்

---

253. பேரியல் - பெரிய மென்மையை யுடைய. மஞ்ஞை : விளி. கொல்லியும் நேரியும் சேரப் பெறுதிர் ; கொல்லியும் நேரியும் சோழனது மலைகள். நேரி - உறையூருக்குத் தெற்கேயுள்ள ஒரு மலை ; 271. மயில்கள் மலையில் வசிப்பன : 96. குறிப். நேரியன் - சோழன்.

(பி - ம்.) 'சேர்வீரென'

254. தண் துணர்ப் பேராரம் - குளிர்ந்த கொத்தாகிய பெரிய ஆத்தி மாலையை ; ஆரம் : 273. தைவந்து - தடவி. தொண்டிக்கோன் - தொண்டியென்னும் ஊருக்கு அரசன் ; தொண்டி : கீழ் கடற்கரையிலுள்ள ஓரூர் ; இது சோழர்க்குரியது (சிலப். 14 : 106-12. அடியார்.)

(பி - ம்,) 'தண்டுழாய் மாலை', 'தண்டுளை வாம்பல்' 'வாழ்ந்தீரென' 'தெண்டிரைக்கோன்'

255. மன்றல் - சந்தன மரத்தின் மணத்தையுடைய. மலயத்து - பொதியில் மலையிலுள்ள. வானருவி-வானிலிருந்து விழும் அருவி; வாளருவி (பி-ம்.) - வாளைப் போன்ற வெள்ளிய அருவி ; "வாள்வனப் புற்றவருவி" (ஐங். 312); "வாணிறங்கொண்ட வருவித்தே" (கலி. 32 : 11.) நின்று அயர்கால் - நின்று சோரும் சமயத்தில்.

(பி - ம்.) 'வாளருவி' 'நின்றயர்வாள்'

256. அகளங்கன் : 59. பணிலம் - சங்கு. மின்னிற்போய் - மின்னலைப் போல விரைந்து சென்று.

(பி - ம்.) 'தன்னிற் போய்ப்' 'முன்னர்ப் போய்ப்'

257. மடன் - கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை; இது மகளிர் நாற்குணங்களுள் ஒன்று. என்றும் பிரியாத நாண்: "பெண்பாலவர்கட் கணியாய்ப்பிரி யாத நாணும்" (சீவக. 1967) நல்கூர-குறைய.

258. ஏய்ப்ப வெதிர்வந் திரவி யுருவவொளி
வாய்ப்ப முகபங் கயமலர்ந்தாள்—போய்ப்பெருகும்

259. மீதா ரகலல்குல் வீழ்கின்ற மேகலையும்
போதாத வண்ணம் புடைபெயர்ந்தாள்—சோதி

260. குழைய நடுவொடுக்குங் கொங்கையுந் தோளும்
பழைய படியே பணைத்தாள்—பிழையாத

261. பொன்னித் துறைவன் பொலந்தார் பெறத்தகுவார்
தன்னிற் பிறரின்மை சாதித்தாள்—சென்னிக்குப்

262. பாராண் முலையாலும் பங்கயத்தா டோளாலும்
வாரா விருப்பு வருவித்தாள்—ஓராங்கு

---

258. ஏய்ப்ப - இவளுக்கொட்ப. இரவி - சோழன்; "சோதி யிரவி கரத்தா னிரவொழிக்கும்" (தண்டி. 78, மேற்.); சூரியனென்றும் வேறொரு பொருள் தோற்றியது. இரவியைக்கண்டு பங்கயம் மலர்ந்தது; இரவி சோழனும், பங்கயம் அரிவை முகமும்.

(பி - ம்.) 'பொருவொளி' 'போய்ப்பெயர', 'போய்ப்பெயரும்'

259. அல்குல் புடைபெயர்ந்தாள்: சினைவினை முதலொடு முடிந்தது; அல்குலில் வீழ்கின்ற மேகலை என்னலும் ஆம்.

(பி - ம்.) 'மீதூர் கலையல்குல்'

260. நடு - இடை. பணைத்தாள்-பெருத்தாள்; அல்குல் கொங்கை தோள் இவை மூன்றும் பெருத்திருத்தல் உத்தம இலக்கணம்: 38 - 9. பிழையாத - பருவத்திற் பொய்யாமல் வெள்ளம் வருகின்ற. பிழையாத பொன்னி; 40-41; "வாழிய வற்றாத காவிரி" (தக்க. 812); 'வான் பொய்ப்பினுந் தான்பொய்யா, மலைத்தலைய கடற்காவிரி' (பட்டினப். 5-6); 'தவாநீர்க் காவிரிப்பாவை' (மணி 3: 56.)

(பி - ம்.) 'நடுவொதுங்குங்', 'நடுவொதுங்கக்'

261. பொன்னித் துறைவன் - சோழன். தன்னிற் பிறரின்மை - தன்னையன்றி வேறு சிலர் இல்லாமையை. சென்னிக்கு - சோழனுக்கு.

262. பாராள் - பூமிதேவி. பங்கயத்தாள்-திருமகள்; 33. ஓராங்கு-ஒருபெற்றிப்பட; "ஓராங்கு மலைந்தன பெருமநின் களிறே" (புறநா. 46: 19.)

(பி - ம்.) 'வாராத வின்பம்' 'வருவித்தாள் ஓரணங்கு'

[தெரிவை]

263. கோது விரவாக் கொழும்பாகு கொய்தளிரீன்
போது புலராப் பொலங்கொம்பு—மீது

264. முயலா லழுங்கா முழுத்திங்கள் வானிற்
புயலா லழுங்காப் புதுமின்—இயல்கொண்

265. டெழுதாத வோவிய மேழிசைய வண்டு
கொழுதாத கற்பகத்தின் கொம்பு—முழுதும்

266. இருளாக் கலாபத் திளந்தோகை யென்றும்
தெருளாக் களியளிக்குந் தேறல்—பொருளால்

267. வருந்தக் கிடையாத மாணிக்கம் யார்க்கும்
அருந்தத் தெவிட்டா வமுதம்—திருந்திய

268. சோலைப் பசுந்தென்ற றாது வரவந்தி
மாலைப் பொழுதுமணி மண்டபத்து—வேலை

---

263. கொழும்பாகு - கொழுவிய கரும்பின் பாகு. தளிரீன் - தளிரை ஈனுகின்ற. போது புலரா - மலர்கள் வாடாத. பொலங்கொம்பு - பொன்னாலாகிய கொம்புபோல்வாள்.

(பி - ம்,) 'கொய்தளிரின்'

264. மீது முயலால் - தன் மீதுள்ள முயல்போன்ற கறையால். அழுங்கா - ஒளி கெடாத. புயலால் - மேகத்தால்.

265. எழுதாத - ஓவியர்களால் எழுதப்படாத. ஏழிசை - ஸப்த ஸ்வர பேதங்கள். கொழுதாத - குடையாத; 'கொழுதிவண் டிமிருந் தாரான்' (நைடத. சுயம்: 165.) கற்பகத்தின் கொம்பு: "கற்பகத்தின் பூங்கொம்போ" (பெரிய. தடுத்தாட்கொண்ட. 140.)

(பி - ம்.) 'வோவ மெழுசிறைய' 'கற்பகத்தின் கொந்து'

266. கலாபத்து - தோகையையுடைய. இளந்தோகை - இளைய மயில் போல்வாள். தெருளாக்களி - தெளிய முடியாத மயக்கம். தேறல் - தெளிவு, தேன்.

(பி - ம்.) 'இளந்தோகை யார்க்கும்'

267. (பி - ம்.) 'அமுதம் பொருந்திய'

268. மணிமண்டபத்து - மணிகளாலாகிய மண்டபத்தில். வேலை - கடலைப் போல.

(பி - ம்.) 'தாது வர வந்த மாலைப்பொழுதின் கண்'

269. விரிந்த நிலாமுன்றில் வீழ்மகரப் பேழ்வாய்
சொரிந்த பனிக்கற்றை தூங்கப்—பரிந்துழையோர்

270. பூசிய சாந்தங் கமழப் பொறிவண்டு
மூசிய மௌவன் முருகுயிர்ப்பத்—தேசியப்

271. பேரிசை யாழ்ப்பாணன் பேதை விறலியொடும்
சேர வினிதிருந்த செவ்விக்கண்—நேரியும்

[தசாங்கம்].

272. கோழியும் வேங்கையு முப்பணையுங் கோரமும்
பாழி யயிரா பதப்பகடும்—ஆழியான்

---

269. விரிந்த - பரப்பையுடைய. நிலாமுன்றில் - நிலாமுற்றத்தில். மகரப்பேழ்வாய் - மகரத்தின் வாயைப் போலப் பெரிய வாயினின்றும்; "நிலவுப் பயன்கொள்ளு நெடுவெண் முற்றத்துக், கிம்புரிப் பகுவா யம்பண நிறையக், கலிழ்ந்துவீ ழருவிப் பாடுவிறந்து" (நெடுநல். 95-7); "திருந்து வாய்ச்சுறவ நீர்கான் ஞெய்யென, பெருந்தெரு வுதிர்தரு பெய லுறு தண்வளி" (நற். 132 : 2–3); "காதுதாழ், வான்மகர வார்குழை யாய் மாதவர்க் கூணீந்தான், தான்மகர வாய்மாடத் தான்" (ஏலாதி, 43.) உழையோர் - பக்கத்திலுள்ள மகளிர்.

(பி - ம்.) 'நிலா முன்றிலின் கண்' 'மணிக்கற்றை' 'பரிந்திளை யோர்', 'பரிந்திணையோர்'

270. மௌவல் - மல்லிகை. முருகு - வாசனை. தேசியம் - இசை வகையில் ஒன்று; தேசிகம் (பி - ம்.) - ஒளி; சீவக. 1480.

(பி - ம்.) 'தேசிகப்'

271. நேரி - சோழனுக்குரிய மலை; 253.

272. கோழி - உறையூர்; 328. வேங்கை : கொடி; இராசராச. 91. முப்பணை - மூன்று முரசுகள் : 28, 121. கோரம் : சோழன் குதிரையின் பெயர்; "ஆரந்தழுவுந் தடந்தோ ளகளங்கன், கோரந் தொழுத கொடிக்கு" (தண்டி. 40, மேற்.) பாழி - வன்மை. அயிரா பதப்பகடு : விக்கிரம சோழன் யானை. அரசர் ஏறும் யானையை ஐராவதம் என்றல் மரபு : சீவக. 3046. ஆழியான் : சோழனைத் திருமாலாகக் கூறியது.

273. சூடிய வாரமு மாணையுஞ் சோணாடும்
காடு திரைத்தெறியுங் காவிரியும்—பாடுகெனக்
274. கூன லியாழெடுத்தான் பாணன் கொதித்தெழுந்து
வேன லரசனுந்தன் வில்லெடுத்தான்—தேனிமிர்
275. தந்திரி யாழ்ப்பாணன் றைவந்தான் றைவந்தான்
வெந்திறன் மாரனுந்தன் வில்லிநாண்—முந்த
276. நிறைநரம்பு பண்ணி நிலைதெரிந்தான் பாணன்
திறன்மதனு மம்பு தெரிந்தான்—விறலியொடும்

---

273. ஆரம் - ஆத்திமாலை. ஆணை - செங்கோல் அதிகாரம். காடு திரைத்து எறியும் - காடுகளைச் சுருட்டி எறிகின்ற. பாடுகென - பாடுக என்று தெரிவை பணிக்க. கண்ணிகள், 171-73, சோழனுக்குரிய தசாங்கம் கூறுவன.

(பி - ம்.) 'சூடிய மாலையும்' 'திரைதிரைக்கும்'' 'திரைத்திருக்கும்', 'திரைத்திரைக்கும்'

274. கூனல் யாழ் - வளைந்த கோட்டையுடைய யாழை. வேன லரசன் - வேனிற் பருவத்துக் கரசனாகிய மன்மதன்; வேனில் வேனலெனவும் வழங்கும்; 109 "இளவேனல் வந்ததா லென்னுங்கொ லின்று, வளவேனற் கண்ணி மனம்" (சிலப். 8 : இறுதிவெண்பா); "தளவேனன் மீதலருந் தாழ்வரைசூழ் நாடற், கிளவேனல் வந்த தெதிர்" (நள. 1. 21.) தேன் நிமிர் - தேனைப்போல நிமிர்ந்த; தேன் இமிர் - வண்டைப்போல ஒலிக்கும் எனினுமாம்.

275. யாழ்நரம்புக்குத் தேனொழுக்கு உவமை: "தீந்தேன், துளக் கறவொழுகி யன்ன துய்யறத் திரண்ட திண்கோல்", தீந்தேன், அணி பெற வொழுகி, யன்ன வமிழ்துறழ் நரம்பி னல்யாழ்" (சீவக. 559,722.) தந்திரி - நரம்பை. தைவந்தான்; தைவரல்: 'இசையை எழுப்பும் எண் வகைச் செயல்களுள் ஒன்று' (சிலப். 7 : 5, அரும்பத.) மாரன் தன் வில் லின் நாணைத் தைவந்தான்; தைவந்தான் - தடவினன்.

(பி - ம்.) 'தந்திரி யாழ்ப்பாணன் றடவந்தான்', 'தந்திரியும் பாணன் றடவந்தான்' 'வில்லிநா ணுந்து'

276. நிறை நரம்பு - நிறைந்த நரம்புகளை அமைத்து. நிலைதெரிந் தான் - ஸ்வர ஸ்தானங்களை ஆராய்ந்தான். அம்பு தெரிந்தான் - தெரிவையின்மேல் எய்வதற்கேற்ற அம்புகளை ஆராய்ந்தான்; "புனைமாண் மரீஇய வம்பு தெரிதியே" (கலி. 39 : 22.)

(பி - ம்.) 'பண்ணி யிசைதெரிந்தான்'

277. பாண ஞெருபாணி கோத்தான் பலகோத்தான்
தூணி தொலையச் சுளிந்துவேள்—மாண
278. இசைத்தன பாண னியாழ்ப்பாணி யெய்து
விசைத்தன வேனிலான் பாணி—விசைத்தெழுந்த
279. வீணை யிசையாலோ வேனிலா னம்பாலோ
வாணுதல் வீழா மதிமயங்காச்—சேணுலாம்
280. வாடை யனைய மலயா நிலந்தனையும்
கோடை யிதுவென்றே கூறினாள்—நீடிய
281. வாரை முனிந்த வனமுலைமேல் விட்டபனி
நீரை யிதுவோ நெருப்பென்றாள்—ஊரெலாம்
282. காக்குந் துடியை யழிக்குங் கணைமாரன்
தாக்கும் பறையென்றே சாற்றினாள்—சேக்கைதொறும்

---

277. ஒரு பாணி - ஒரு பாட்டை. தூணி தொலைய - அம்புப்புட்டிலிலுள்ள அம்புகள் முற்றும் தொலையும்படி. வேள் சுளிந்து பலகோத்தான் என்க; சுளிந்து - கோபங்கொண்டு. பல - பல அம்புகளை.

(பி - ம்.) 'தூணிகுலையச் சுளித்துவேள்'

278. யாழ்ப்பாணி இசைத்தன; பாணி - பாட்டு. வேனிலான் பாணி விசைத்தன; வேனிலான் பாணி-மன்மதனுடைய கைகள். விசைத்தன - வேகங்கொண்டன.

279. வாணுதல் - தெரிவை. வீழா - விழுந்து. மயங்கா-மயங்கி. சேண்உலாம் - நெடுந்தூரத்திலிருந்து உலாவுகின்ற.

(பி - ம்.) 'மனமயங்காச்'

280. வாடை அனைய-வடகாற்றைப் போன்ற குளிர்ச்சியையுடைய. மலயாநிலம் - தென்றற் காற்று. கோடை - மேல் காற்று.

(பி - ம்.) 'மலையா நிலத்தையும்' 'யிதுவென்று'

281. வாரை - கச்சினை. வனம் - அழகு. பனிநீரை நெருப்பு என்றல்: "செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச், சந்தனமென் றூரோ தடவினார் - பைந்தமிழை, ஆய்கின்ற கோனந்தி யாகந் தழுவாமல், வேகின்ற பாவியேன் மெய்" (நந்திக்கலம்பகம், மிகைப்பாட்டு, 15.)

282. துடி - உடுக்கை. துடியை வெறுத்தல்: "கூடலன்னாள், வடிக்கண் ணிரண்டும் வளாநகர் காக்குமவை வேலினர், துடிக்கண் ணிரண்டுங்கங் குற்றலை யொன்றுந் துயின்றிலவே" (இறை. 30, மேற்.) மாரன் - மன்மதன். தாக்கும் பறை - அடிக்கின்ற பறை. சேக்கை தொறும் - தங்கு மிடங்களிலெல்லாம்; சேக்கை - படுக்கையும் ஆம்.

(பி - ம்.) முரசென்றே'

283. வாழு முலகத் தெவரு மனங்களிப்ப
வீழு நிலவை வெயிலென்றாள்—கோழிக்கோன்

284. எங்கோ னகளங்க னேழுலகுங் காக்கின் ற
செங்கோல் கொடுங்கோல் சிலர்க்கென்றாள்—கங்குல்

285. புலருந் தனையும் புலம்பினு ளாங்குப்
பலரும் பணிந்து பரவக்—குலகிரிசூழ்

286. ஆழிப் புவன மடைய வுடையபிரான்
சூழிக் கடாயானை தோன்றுதலும்—யாழின்

[யானையை நோக்கிக் கூறுதல்]

287. இழைக்கு மிசைமுதலா மெப்பகைக்கு மாற்று
துழைக்கு முயிர்தழைப்ப வோடிப்—பிழைத்தனளாய்

---

283. வீழும் நிலவை - விரும்புகின்ற நிலாவை. கோழி - உறையூர்.

284. மு: "நறைகமழ்தார் வேட்டார் நலனணியு நாணும், நிறையு நிலைதளரா நீர்மை - அறநெறிசூழ், செங்கோல னல்லன் கொடுங்கோலன் றெவ்வடுபோர், வெங்கோப மால்யானை வேந்து" (தண்டி. 75, மேற்.) கங்குல் - இரவு.

285. புலருந்தனையும் - விடியுமளவும். பரவ - புகழ. குலகிரி சூழ்தல் புவனத்திற்கு அடை.

(பி - ம்.) 'புலருந்துணையும்'

286. ஆழிப்புவனம் - கடலால் சூழப்பட்ட உலகத்தை. அடைய உடைய - பிறவரசர்க்கும் பொது என்பதின்றி முழுதும் தனக்கே உடைய. சூழி - முகபடாம். கடா - மதம். கடா யானை: 288.

287. இசை முதலான பகைகள்: 279-84-ஆம் கண்ணிகளிற் கூறப்பட்டவை. ஆற்றுது - பொறுக்க முடியாமல். உழைக்கும் உயிர் - வருந்துகின்ற உயிர்; "உழைத்தவல் லிருவினைக் கூறு காண்கிலா, தழைத்தய ருலகினுக்கு" (கம்ப. 4. வாலிவதை: 33.)

(பி - ம்.) 'முதலாவெப்பகைக்கும்' 'உயிர் தளிர்ப்ப,' 'உயிர் களிப்ப'

288. முட்டுந் திகிரி கிரியின் முதுமுதுகிற்
கட்டுங் கடவுட் கடாயானை—யெட்டும்

289. தரிக்கு முலகந் தனிதரித்த கோனைப்
பரிக்கு மயிரா பதமே—செருக்கிப்

290. பொருந்த நினையாத போர்க்கலிங்க ரோடி
இருந்த வடவரைக ளெல்லாம்—திருந்தா

291. விதையம் பொருதழிந்த விந்தமே போலப்
புதைய நடந்த பொருப்பே—சிதையாத

---

288. திகிரிகிரி - சக்கரவாளகிரி. சக்கரவாளத்தில் கட்டப்பட்ட யானைகள்: "துறையடித் ததுபோற் றீராத் தகையவித் திசைக டாங்கும், கறையடிக் கழிவு செய்த கண்டகன்" (கம்ப. 4. வாலிவதை : 132.) கண்ணி, 289 : 58-9. கடாயானை ; 286.

(பி - ம்.) 'திகிரி வரையின்'

289. பரிக்கும் - தாங்கும். அயிராபதம்: 304. செருக்கி - தம் பலத்தையே பெரிதாக எண்ணி இறுமாந்து.

(பி - ம்-) 'உலகைத் தனிதரித்த' 'அயிரா பதமே தரிக்கப்'

290. பொருந்த நினையாத் - சோழனோடு நட்பாகப் பொருந்த எண்ணாத. இருந்த - ஒளித்திருந்த. தோற்ற அரசர், மலை கடல் முதலியவற்றில் ஒளித்தல் மரபு; தக்க. 62, உரை. கலிங்கர் வரைகளில் ஓடி ஒளிந்தமை; கலிங்கத். போர் பாடியது. 58-62.

(பி - ம்.) 'தடவரைகள்'

291. விதையம் - மேரு மலையை. பொருது - பகைத்து. அழிந்த-அகத்திய முனிவரால் அழுத்தப் பெற்று அழிவை யடைந்த. விந்தம் - விந்தியமலை ; கந்த. விந்தம் பிலம்புகு படலம் ; கம்ப. 3. அகத்தியப்: 39. புதைய - தரைக்குள் அழுந்தும்படி. வடவரைகளெல்லாம் புதைய நடந்த என இயைக்க ; இதனால் விக்கிரமசோழன் கலிங்கம் எறிந்து வென்றமை புலனாகும் ; 331. சிதையாத - கெடாத.

(பி - ம்.) 'பொருதழித்த', 'பொருதிகழ்ந்த', 'பொருதிழந்த'

292. திங்கட் குலத்திற்குந் தெய்வப் பொதியிற்கும்
அங்கட் பழங்குமரி யாற்றிற்கும்—தங்கள்

293. படிக்கும் பொருநிருப பன்னகங்கள் வீழ
இடிக்குந் தனியசனி யேறே—கடிப்பமைந்த

294. யாம முரசா லிழந்த நிறைநினது
தாம முரசு தரப்பெற்றேன்—நாம

---

292. திங்கட் குலத்திற்கும் - சந்திர குலத்தின் பெருமையை நாட்டுதற்கும். தெய்வப் பொதியில் - அகத்திய முனிவர் வாழும் தெய்வப் பொதியில் : "செய்ய தமிழ்முழங்கத் தெய்வப் பொதியிலாய்" (இராசராச. 67.) அங்கண் - அழகிய இடங்களையுடைய. குமரியாறு : தமிழ் நாட்டின் தெற்கெல்லையாகிய ஓர்யாறு ; இது நெடுங்காலத்துக்குமுன்னே கடல் கொள்ளப்பட்டதென்பது ; சிலப். 8 : 1-2-ஆம் அடிகளுக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய விரிவுரையால் அறியப்படும். குமரியாறு கடல்கொள்ளப்பட்டு முன் அழிந்ததுபற்றிப் பழங்குமரியாறு என்றார். இந்நதியே கன்னி நதி எனவும் வழங்கும் ; 215.

(பி - ம்.) 'அங்கப்பழங்குமரி'

293. தங்கள் படிக்கும் - தங்கள் நாட்டைப் பெறுவதற்கும். நிருப பன்னகங்கள் - பகை அரசர்களாகிய பாம்புகள். அசனி என்பதற்கேற்பப் பன்னகங்கள் என்றார். இடி பாம்புகளை வீழ்த்தல் ; "இளைய தாயினுங் கிளையரா வெறியும், அருநரை யுருமிற் பொருநரைப் பொறாஅ" (புறநா. 58 : 7-8.) கடிப்பு-குறுந்தடி.

(பி - ம்.) 'நிருபர் பன்னகங்கள்'

294. யாமமுரசால் - யாமந்தோறும் அடிக்கப்படும் முரசால் ; "எடகம்பொதி தார்பொ குந்திய யாம பேரி யிசைத்தலரல்" (கம்ப. 2. கைகேசி சூழ்வினை. 57.) தாமமுரசு - மாலையை யணிந்த முரசு. நாம - அச்சத்தைத் தரும்.

(பி - ம்.) 'பெற்றே நாம,' 'பெற்றே யேம'

295. விடைமணி யோசை விளைத்தசெவிப் புண்ணின்
புடைமணி யோசைப் புலர்ந்தேன்—தடைமுலைமேல்

296. ஆறா மலயக்கா லட்டசூ டுன்செவியில்
மாறாப் பெருங்காற்றான் மாற்றினேன்—வேறாகக்

297. கூசும் பனித்திவலை கொண்டுபோ மென்னுயிர்நீ
வீசு மதத்திவலை யான்மீட்டேன்—மூசிய

---

295. விடைமணியோசை - காளையின் கழுத்திற் கட்டிய மணியின் ஓசை. செவிப்புண் - காதிலுண்டான புண். காதல் வயப்பட்ட மகளிரை விடைமணி ஓசை வருத்தும் என்பது நூல் வழக்கு. இது, மேயச்சென்று மாலையில் வீடு திரும்பிவரும் நிரையிலுள்ள விடையின் மணி ஓசை. இது அம்மாலைப் போதை அறிவிப்பதால் 'மாலை மலருமிந் நோய்' (குறள், 1227.) என்றபடி, செவியிற் புண்போலத் துயரை எழுப்பி வருத்தும். விடை மணி யோசை வருத்துதல் ; "தென்றற்கும் வீணைக்குஞ் சேமணிக்கும்...அயர்ந் தாள்" (இரத்தினச் சுருக்கம், 6) ; "நரையுரு முராறு மரையிரு ணடுநாள், நல்லே றியங்குதோ றியம்பும், பல்லான் றொழுவத் தொருமணிக் குரலே" (குறுந். 190 : 5-7.) நின்புடைமணியோசை - நின்னுடைய இரு பக்கங் களிலுமுள்ள மணிகளின் ஓசையால். புலர்ந்தேன் - தீரப்பெற்றேன். தடை முலை - பெருத்த முலை ; "அம்பணைத் தடைஇய மென்றோள்" (நெடுநல். 149) ; "தடைஇத் திரண்ட நின்றோள்" (அகநா. 218 : 8.)

(பி - ம்.) 'ஓசை புலர்ந்தேன்' 'தடமுலைமேல்'

296. ஆறா மலயக்கால் - வெப்பம் ஆறாத தென்றற்காற்று. சூட்டை மாற்றினேன்.

(பி - ம்.) 'ஊறா மலயக்கால்' 'மாறா மலயத்தால் மாறினேன்'

297. கூசும் - நடுங்கும். பனித்திவலை - பனித் துளிகள். வேறாகக் கொண்டுபோம் - என் உடலைவிட்டு வேறாகப் பிரித்துக் கொண்டுபோம். மதத்திவலை - மதத்துளிகள். மூசிய - நெருங்கிய.

(பி - ம்.) 'வீசுங் கரத்திவலையான்'

298. காருலா மோதக் கடல்முழங்க வந்ததுயர்
நேரிலா நீமுழங்க நீங்கினேன்—பேரிரவில்

299. என்மே லனங்கன் பொரவந்த வின்னலெல்லாம்
நின்மே லனகன்வர நீங்கினேன்—இன்னும்

300. கடைபோக வென்னுயிரைக் காத்தியேல் வண்டு
புடைபோகப் போதும் பொருப்பே—விடைபோய்நீர்

301. ஆட்டுந் தடங்கலக்கின் மாரற் கயில்வாளி
காட்டுந் தடமே கலக்குவாய்—கேட்டருளாய்

---

298. காருலாம் - மேகங்கள் உலாவுகின்ற. ஓதக்கடல் முழங்க - நீரையுடைய கடலொலித்தலால்; ஓதக்கடல்; 'காசினியை ஓதக்கடல் கொண்டொளித்ததோ' (கம்பர் தனிப்பாடல்) கடலொலி வருத்தல்: கம்ப. 1. மிதிலைக். 65; "அறைகடலி னிசையுடனே......நேரிழை நின்றூற்று வளோ" (சாஸனப் பாட்டு.) நேரிலா - தனக்கு ஒப்பு இல்லாத. பேரிர வில் - பிரிவினுல் பெரிதாகத் தோற்றுமிரவில்; "ஊழியிற் பெரிதா ஞழிகை யென்னும்" (பெரிய திருமொழி, 2. 7 : 4); 'ஊழிபலவோ ரிர வாயிற் ரேயென்னும்' (நள. 1 : 108.)

299. அனங்கன் - மன்மதன். அனகன் வர - பாபமில்லாதவனுகிய சோழன் வருதலால்.

(பி - ம்.) 'வரவந்த'

300. கடைபோக - முடிவுவரையிலும். காத்தியேல் - காக்க விரும்புவாயானல். வண்டு புடைபோதல் மதத்தை யுண்ணும் பொருட்டு; "வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்துப், பொறிநுதற் பொலிந்த வயக் களிற் றொருத்தல்" (அகநா. 78 : 3-4.) பொருப்பு-யானை; மலைபோன்ற உருவம் உடைமைபற்றி. விடைபோய் - விடைபெற்றுச் சென்று; 172.

301. தடம் - பகைவர் தடாகம். பகைவர் தடாகங்களைத் தம்மு டைய யானைகளைக் கொண்டு கலக்குதல் புறத்திணை மரபு: "ஒளிறு மருப்பிற் களிறவர, காப்புடைய கயம்படியினை", "கடிதுறைநீர்க் களிறு படீஇ" (புறநா. 15 : 9-10, 16:6.) அயில் வாளி - கூர்மையான அம்பு களை; என்றது தாமரைப் பூவையும், குவளைப் பூவையும். தடம் - தடாகம். தாமரையும் நீலமும் மாரன் கணைகளாதலின், அவை பூக்குந் தடத்தைக் கலக்கு என்றாள்.

302. கார்நாணு நின்கடத்து வண்டொழியக் காமனூர்
போர்நாணின் வண்டே புடைத்துதிர்ப்பாய்—பார்நாதன்

303. செங்கைக் கரும்பொழியத் தின்கைக் கனங்கனூர்
வெங்கைக் கரும்பே விரும்புவாய்—எங்கட்

304. குயிரா யுடலா யுணர்வாகி யுள்ளாய்
அயிரா பதமேநீ யன்றே—பெயராது

305. நிற்கண்டா யென்றிரந்து நின்ரு ணுதலாக
விற்கொண்ட பேரிளம்பெண் வேருெருத்தி—கொற்கையர்கோன்

---

302. கார்நாணும் - மேகம் நாணுகின்ற. நின்கடத்து வண்டு - உன்னுடைய மதத்தில் மொய்க்கின்ற வண்டுகள். போர்நாணின் வண்டு - போரைச் செய்யும் நாணாகிய வண்டுகளை; வண்டுகள் மன்மதன் வில்லின் நாண் என்பது கவிமரபு; "நாரியடுத்த வளிமாலை குலையத் தூர்ந்து" (பிரபு. துதிகதி. 3.) பார்நாதன் - சோழனுடைய; இது ஜனநாதன் என்பதைப் போன்றது.

(பி - ம்.) 'வண்டு புடைத்துகுப்பாய்'

303. செங்கைக் கரும்புஒழிய - சிவந்த கையிலுள்ள கரும்பைத்தவிர; என்றது சோழன் மருதநிலத்து விளைபொருளாகிய கரும்பைக் கையில் ஏந்தியுள்ளான் என்பது கருத்து; "பொன்னி வளநாடு பூஞ்சிலையும்" (337); "சோழ னுறந்தைக் கரும்பினிது" (ஔவையார் பாடல்.) அனங்கனூர் கரும்பென்றது மன்மதன் வில்லாகிய கரும்பை.

304-5. பெயராது நில் - இவ்விடத்தைவிட்டு நீங்காமல் நிற்பாயாக. கண்டாய் : அசை. ஒப்பு : "கொய்தளிர்த்தண்படலைக் கூத்தப் பெருஞ்சேந்தன், வைகலு மேறும் வயக்களிறே - கைதொழுவல், காலைக வண்ணனைக் கண்ணாரக் காணவெம், சாலேகஞ் சார நட" (நன். 396, மயிலை. மேற்.

(பி - ம்.) 'உறவாகி யுள்ளாய்'

305. நுதல் - நெற்றி. விற்கொண்ட - வில்லைக்கொண்ட. கொற்கையர்கோன் - சோழன்.

(பி - ம்.) 'றிறைஞ்சி நின்றாள்'

306. மல்லற் புயத்தனகன் மால்யானைக் கைபோலக்
கொல்லத் திரண்ட குறங்கினாள்—எல்லையில்

307. கோடுங் கொலைகுயின்ற சேடன் குருமணிவேய்ந்
தாடும் படமனைய வல்குலாள்—சேடியாய்த்

308. தம்மை யெடுக்கு மிடைகடிந்த தம்பழிக்குக்
கொம்மை முகஞ்சாய்த்த கொங்கையாள்—செம்மை

309. நிறையு மழகா ணிகரழித்துச் செய்யாள்
உறையு மலர்பறிப்பா ளொப்பாள்—நறைகமழும்

310. மாலை பலபுனைந்து மான்மதச் சாந்தெழுதி
வேலை தருமுத்த மீதணிந்து—சோலையில்

---

306. அனகன் - விக்கிரம சோழன்; 178. யானையின் கை கொல்லுதற்குரியது; "அரும்பனைத் தடக்கை யபராகத் திரம்வாய் வாலெயிறைந்தினுங் கொல்வ" (சீவக. 2154.) கொல்ல - அழகால், கண்டவரைக் கொல்லுவதுபோல வருத்தும் என்றுபொருள் கொள்ளலும் ஒன்றும். குறங்கு - துடை. எல்லையில் கொலை, கோடும் கொலை என்க.

(பி - ம்.) 'புயத்தான்றன்' 'எல்லையிற் கோடும்'

307. கோடும் - நடுவுநிலைமையில் தப்பி வளைந்த. குருமணி - நிறத்தையுடைய மணி. சேடனுடைய படம் என்க.

308. தம்மை - யென்றது கொங்கைகளை. கொம்மை முகம் - குவிந்து வட்டமான முகம்; கொம்மை - பருமையும் ஆம். அறிவுடையோர் பழிக்கு நாணுதல் இயல்பு: "சான்றோர், புகழு முன்னர் நாணுப, பழியாங் கொல்பவோ காணுங் காலே" (குறுந். 252 : 6-8.) செம்மை - சிவந்த நிறம்.

309. நிகர் அழித்து - தனக்கு ஒப்பாதலை அழித்து. பறிப்பாளொப்பா ளென்றது தாமரைமலரைக் கொய்தமை பற்றிக் கூறியது; தனக்குத் தோற்ற திருமகளுடைய இடத்தைத்தான் கைக்கொள்வது போன்றது பேரிளம்பெண் தாமரைப் பூவைக் கொய்தது. நறை - தேன்.

310. மான்மதச் சாந்து - கஸ்தூரிக்குழம்பை. வேலை - கடல்.
(பி - ம்.) 'மான்மதச்செஞ் சாந்தெழுதி'

311. மானு மயிலு மனைய மடந்தையரும்
தானு மழகு தரவிருப்பத்—தேனிமிர்

312. ஊற லிளம்பாளை யுச்சிப் படுகடுந்
தேறல் வழிந்திழிந்த செவ்விக்கண்—வேறுக

313. வாக்கி மடனிறைத்து வண்டு மதினுரையும்
போக்கி யொருத்தி புகழ்ந்துதர—நோக்கி

314. வருந்திச் சிறுதுள்ளி வள்ளுகிரா லெற்றி
அருந்தித் தமர்மே லயர்ந்தாள்—பொருந்தும்

315. மயக்கத்து வந்து மனுதுங்க துங்கன்
நயக்கத் தருங்கனவு நல்கும்—முயக்கத்து

---

311. *மானும் மயிலும் அனைய* - மருண்ட பார்வையால் மானையும் சாயலால் மயிலையும் போன்ற. *மடந்தையர்* - சேடியர். *தேன்இமிர்* - வண்டுகள் ஒலிக்கின்ற.

(பி - ம்.) '*தரவிருப்பாள்*' '*தேனிமிர*'

312. *ஊறல் இளம்பாளை* - ஊறுதலையுடைய இளையபாளையினது. *உச்சிப்படு* - உச்சியில் உண்டான. *கடுந்தேறல்* - கடுப்பையுடைய கள்.

313. *வாக்கி* - வார்த்து. *மடல்* - கள்ளுண்ணும் வாயகன்ற பாத்திரம்; விபூதி மடல் என்பதுபோல. வண்டு மதுவில்வந்து மொய்த்தல்: "*கள்ளைச்சூழ் காளை வண்டு செருச்செயல் காண்ப வொத்த*" (திருவிளை. தருமிக்கு. 167.)

(பி - ம்.) '*வண்டு மதுநுரையும்*'

314. *துள்ளி* - துளியை. *வள்ளுகிரால் எற்றி* - கூரிய நகத்தால் தெறித்து; பருகுமுன் கள்ளின் துளியை யுகிரால் தெறித்தல்; 2 : 343. *தமர்* - ஆயமகளிர் செவிலியர் முதலினோர். *அயர்ந்தாள்*-சோர்ந்து விழுந்தாள்.

315. *மயக்கத்து* - கள்ளுண்ட மயக்கத்தில். *மனுதுங்கதுங்கன்* - மனுகுலத்தில் உயர்ந்தோர்களில் மேம்பட்டோன். *நயக்கத்தரும்* - விரும்பத்தக்க. *கனவு*: 321, 324. *நல்கும்* - கொடுக்கும். *முயக்கத்து* - தழுவுதலின்கண்.

(பி - ம்.) '*மனதுங்க*' '*திருக்கனவு*', '*தருங்கனவு நல்க*'

316. மிக்க விழைவு மிகுகளிப்பு மத்துயிலும்
ஒக்க விகல வுடனெழுந்து—பக்கத்து
317. வந்து சுடரு மொருபளிக்கு வார்சுவரில்
தந்த தனதுநிழ லுறேஞக்கிப்—பைந்துகிர்க்
318. காசுசூ ழல்குற் கலையே கலையாகத்
தூசு புடைபெயர்ந்து தோணெகிழ்ந்து—வாசஞ்சேர்
319. சூடிய மாலை பரிந்து துணைமுலைமேல்
ஆடிய சாந்தி னணிசிதைந்து—கூடிய
320. செவ்வாய் விளர்ப்பக் கருங்கண் சிவப்பூர
வெவ்வா ணுதலும் வெயரரும்ப—இவ்வாறு

---

316. விழைவு - ஆசை. களிப்பு - கள்ளுண்ட மகிழ்ச்சி. இகல - தம்முள் பகைக்க.

(பி - ம்.) 'ஒக்க வரிதின்', 'ஒக்க வெழமுன்'

317. சுடரும் - ஒளிவிடும். பளிக்கு வார்சுவரில் - நீண்ட பளிக்குச் சுவரில். தனது நிழல் - தனது வடிவத்தை. பைந்துகிர் - செவ்வியோடு கூடிய பவளத்தையுடைய; "பவழஞ் சேர்ந்த பல்கா ழல்குலர்" (பெருங். 1. 43 : 146); "நுண்டுகி னுழைந்த வல்குல் பவழமொத் தினிய தொன்றே" (சீவக. 1184.)

(பி - ம்.) 'ஒளிர்பளிக்கு', 'ஒளிப்பளிக்கு' 'பைந்துகிற்'

318. கலையே கலையாக - மேகலையே ஆடையாக; ழுதற்கலை: முதற்குறை. தூசுபுடை பெயர்ந்து - உடுத்த ஆடை பக்கத்தே நீங்கப் பெற்று; காமுற்ற மகளிர் துகில் சரிந்துவீழ்தல்; "சரிந்த பூந்துகில்க டாங்கார்' (கம்ப. 1. உலாவியற் : 2.)

319. பரிந்து - அற்று; "கோதை பரிந்து" (கலி. 51 : 3); "மாலை பரிந்திட் டழுதாள்" (நாலடி. 397.) துணை - இரண்டு. சாந்தின் அணி - சந்தனத்தாற் செய்த அலங்காரம்.

320 விளர்ப்ப - வெண்மை நிறமடைய. சிவப்பூர - சிவப்பு நிறம் பரவ. செவ்வாய் விளர்த்தல் முதலிய மூன்றும் கூடலின்கண்ணும் நிகழ்வன: "வாயிற் சிவப்பை விழிவாங்க மலர்க்கண் வெளுப்பை வாய் வாங்கத், தோயக்கலவி யமுதளிப்பீர்" (கலிங்கத். 61); "குவளை சிவத்துக் குமுதம் வெளுத்த குறையல்லவே" (தஞ்சை. 67.)

(பி - ம்.) 'வெளுப்பக் கருங்கண் சிவப்பேற', 'கருங்கண்ணிணை சிவப்ப' 'வியரரும்ப', 'வியர்வரும்ப', 'வெயர்வரும்ப'

321. கண்டு மகிழ்ந்த கனவை நனவாகக்
கொண்டு பலர்க்குங் குலாவுதலும்—வண்டுசூழ்

322. வேரிக் கமழ்கோதை வேருகத் தன்மனத்திற்
பூரித்த மெய்யுவகை பொய்யாகப்—பாரித்த

323. தாமக் கவிகை நிழற்றச் சயதுங்கன்
நாமக் கடாக்களிற்று நண்ணுதலும்—தேமொழியும்

324. கண்டதுங் கெட்டேன் கனவை நனவாகக்
கொண்டது மம்மதுச்செய் கோலமே—பண்டுலகிற்

325. செய்த தவஞ்சிறிது மில்லாத தீவினையேற்
கெய்த வருமோ விவையென்று—கைதொழுது

---

321. குலாவுதலும் - பெருமையோடு பேசுதலும்.

(பி - ம்.) 'மகிழ்ந்து' 'நனவென்று' 'வண்டுவீழ்'

322. வேரி - தேறல். பூரித்த - நிறைத்த. மெய்யுவகை மையான மகிழ்ச்சி. பாரித்த - விரிந்த.

(பி - ம்.) 'தன் மனத்துள்'

323. தாமக் கவிகை நிழற்ற - மாலைகளையணிந்த வெண்கொற் குடை நிழலைச் செய்ய. சயதுங்கன்; 168 குறிப். நாமம் - அச்சம் மெய்யீற்று உரிச்சொல் ஈறு திரிந்தது. களிற்று - யானையின்மீது. தேமொழி - தேன் போன்ற மொழியையுடைய பேரிளம்பெண்.

324. கண்டதும் - யானையின்மேல் விக்கிரம சோழனைக் கண்டவுடன். கெட்டேன் : இரக்கக் குறிப்பில் வரும் ஒரு சொல்.

325. செய்த தவம் என்றது மலையிற் சென்று யும், பூமியை வலம்வந்தும் செய்த தவம்; சுலோகம் ன லைகடலின் வாளரவின் வெய்ய, தலையிற் பயின் சேர், அம்மாதர் புல்லு மபயன் புயம்புணர, எம்மா த (தண்டி. 59, மேற்.) 'தீவினையேற் கெய்தவருமே தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கா லெய்த (நல்வழி 17.)

(பி - ம்.) 'வருமே யிவனென்று' 'கைதொ

326. தேறி யொருகாலுந் தேறாப் பெருமையல்
ஏறி யிரண்டா வதுமயங்கி—மாறிலாத்

327. தோழியர் தோண்மே லயர்ந்தாளத் தோழியரும்
ஏழுயர் யானை யெதிரோடி—ஆழியாய்

328 மாடப் புகாருக்கும் வஞ்சிக்குங் காஞ்சிக்கும்
கூடற்குங் கோழிக்குங் கோமானே—கூடலர்

329. சாருந் திகிரி தனையுருட்டி யோரேழு
பாரும் புரக்கும் பகலவனே—சோர்வின்றிக்

330. காத்துக் குடையென்று மெட்டுத் திசைகவித்த
வேத்துக் குலகிரியின் மேருவே—போர்த்தொழிலால்

---

326. தேறாப் பெரு மையலேறி - தெளியப்பெறாத பெரிய மயக்கத்தை அடைந்து. இரண்டாவதும் : உம்மை இறந்தது தழுவியது ; 315. மாறிலாத் தோழியர் - தன் கருத்துக்கு மாறுதலில்லாத தோழியர்.

(பி - ம்.) 'பெருமயல்கொண் டேறி'

327. ஏழுயர் யானை - ஏழு முழம் உயர்ந்த யானை ; அல்லது ஏழு உறுப்புக்கள் நீண்ட யானை : "ஏழுயர் போதகம்" (சீவக. 775.) ; "ஏழுறுப்புறத் தாழ்ந்த...மூரி வெங்களியானை" (வி. பா. சூதுபோர்.79.) ஆழி - ஆக்ஞாசக்கரம்.

328. புகார் - காவிரிப்பூம்பட்டினம். கூடல் - மதுரை. கோழி - உறையூர் ; 272. கூடலர் - பகைவர்.

(பி - ம்.) 'பாடலார்', 'பாடலர்'

329. சாரும் - சார்ந்துவந்து வணங்கி ஏவல் கேட்கும். திகிரிதனை - ஆக்ஞா சக்கரத்தை. ஓரேழுபார் - ஏழு தீவுகளை. பகலவன் - சூரியன் ; என்றது இவன் சூரிய வமிசத்தான் ஆதல்பற்றி. சோர்வின்றி - மறதியில்லாமல்.

(பி - ம்.) 'ஈரேழு'

330. எட்டுத்திசை கவித்தது : 30. வேத்துக்குலகிரியில் - அரசர்களாகிய சிறந்த மலைகளுக்குள். மேரு - மேருவைப் போன்றவன்.

331. ஏனைக் கலிங்கங்க ளேழனையும் போய்க்கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே—மானப்போர்

332. இம்ப ரெழுபொழில் வட்டத் திகல்வேந்தர்
செம்பொன் மவுலிச் சிகாமணியே—நம்பநின்

333. பாரிற் படுவன பன்மணியு நின்கடல்
நீரிற் படுவன நித்திலமும்—நேரியநின்

334. வெற்பில் வயிரமும் வேந்தநின் சோணாட்டுப்
பொற்பின் மலிவன பூந்துகிலும்—நிற்பணியக்

---

331. கலிங்கங்கள் ஏழு ; கலிங்கம் ஏழு பிரிவுடையது : “ பாவகன் வளைத்தெழு கலிங்கமும் விழுங்கப் பகட்டணி துணித்தொரு பெரும்பரணி கொள்ளும், சேவகன பங்கனக ளங்கன் மதலாய் ” (குலோத். பிள்ளைத். 88) ; “ கால முற்றி யெழு சாலெனும்படி கலக்கினு னெழு கலிங்கமும் ” (வி. பா. இராசசூய. 58.) ; “ கலிங்க மேழுங் கனவெரி பரப்ப ” (பெருந். 799.) தானை - சேனை. தியாக சமுத்திரம் : விக்கிரம சோழனுடைய பட்டப் பெயர்களுள் ஒன்று ; 216. மானப்போரைச் செய்யும் வேந்தர் என்க.

(பி - ம்.) ‘ மான்போரில் ’ ‘ மாநேமி ’

332. இம்பர் எழுபொழில் வட்டத்து - இவ்வுலகில் ஏழு தீவுகளினுள்ள. மவுலிச்சிகாமணி - கிரீடத்திலுள்ள முடிமணி போல்வான். நம்ப : விளி.

(பி - ம்.) பைம்பொன்னின் ’

333. படுவன - உண்டாவன. நின் கடல் என்றது தென்கடலை. நித்திலம் - முத்து.

334. பொற்பு - பொலிவு. பூந்துகில் - பூத்தொழிலையுடைய ஆடை; பூப்போல் மென்மையும் அழகும் அமைந்த ஆடை என்னலும் ஒன்றும் சோழநாட்டில் ‘ துகிலி ’ என்னும் ஒரூர் சிறந்த ஆடைகள் நெய்யுமிடமாக உள்ளது. நிற்பணிய - உன்னை வணங்க.

335. கொண்டா யிவடனது கொங்கைக் கொழுஞ்சுணங்கும்
தண்டா நிறையுந் தளிர்நிறமும்—பண்டைத்

336. துயிலுங் கவர்ந்ததுநின் தொல்குலத்து வேந்தர்
பயிலுந் திருநூற் படியோ—புயல்வளவ

337. மன்னிய தொண்டை வளநாடு வாளியும்
பொன்னி வளநாடு பூஞ்சிலையும்—கன்னித்

---

335. கொண்டாய் - பேரிளம்பெண்ணிடமிருந்து கொண்டாய். சுணங்கு - பொன்னிறமான தேமல். தண்டா - தடைப்படாத. தளிர் நிறமும் - மாந்தளிர் போன்ற நிறத்தையும். பண்டைத் துயில் - நின்னைக் காணுவதற்குமுன் இருந்த உறக்கம்.

(பி - ம்.) 'தண்டாமரையும்', 'தண்டாமரையின்' 'பண்டத்'

336. தொல்குலம் என்றது சோழர்குலம் படைப்புக்காலம் தொடங்கி மேம்பட்டு வருதல் பற்றி; குறள், 955, பரிமேல். திருநூல் - நீதிநூல். அரசர் ஆறிலொன்று கொள்ள வேண்டியிருப்ப, பேரிளம் பெண்ணிடமிருந்து மணி முதல் துயிலிறுதியாக வுள்ள பல பொருள்களைக் கவர்ந்தமைபற்றி இவ்வாறு கூறினர்; "என்னெஞ்சு நாணு நலனு மிவை யெல்லாம், மன்னன் புனனாடன் வௌவினன் - என்னே, அரவக லல்குலா யாறிலொன் றன்றோ, புரவலர் கொள்ளும் பொருள்" (முத்.) படியோ என்ற ஓகாரம்வினா. பயிலும் திரு நூற்படியோ : "அரக்கரோ ரழிவு செய்து கழிவரேலதற்கு வேறோர், குரக்கினத் தரசைக் கொல்ல மனுநெறி கூறிற்றுண்டோ" (கம்ப. 4. வாலிவதைப் : 79.) புயல் வளவ - மேகத்தைப் போற்கொடுக்கும் சோழ.

(பி - ம்.) 'தொல்குலத்து நீங்கள்' 'படியே'

337. வாளி - அம்பு; என்றது காஞ்சியிலுள்ள மா, திருமுல்லை வாயிலிலுள்ள முல்லை, திருத்தணிகையிலுள்ள கழுநீர் என்பவற்றை. பொன்னிவளநாடு - சோழநாடு. பூஞ்சிலை - கரும்பு. சோழநாட்டுக் கரும்பு சிறந்தது ; 303. குறிப்.

(பி - ம்.) 'வளநாட்டு வாளியும்' 'வளநாட்டுப் பூஞ்சிலையும்'

338. திருநாடு தேருங் குறையறுப்பச் செய்தால்
திருநாண் மடமகளிர் தம்மை—ஒருநாளவ்
339. வேனற் கரசன் விடுமே யவன்சினமிப்
பானற்கண் ணல்லா ளுயிர்ப்பரமே—ஆனக்கால்
340. குன்றே யெனத்தகுநின் கோபுரத்திற் றூங்குமணி
ஒன்றே யுலகுக் கொழிக்குமே—என்றினைய
341. கூறி வணங்கிடு மிவ்வளவிற் கோதையர்மேற்
சீறி யனங்கன் சிலைவளைப்ப—மாறழியக்

---

338. கன்னித்திரு நாடு - பாண்டிய நாடு. தேர்-மன்மதன் தேராகிய தென்றல். குறையறுப்பச் செய்தால் - தலைவியைத் துன்புறுத்தும் குறையில்லாதபடி செய்தால். தொண்டை நாடு, பொன்னிவள நாடு, கன்னி நாடு இவை, உன் ஆட்சிக்கு உள்ளடங்கியவை ஆதலின், நீ, வேனற்கரசன் வாளிகளையும், சிலையையும் தேரையுங் கொண்டு வருத்துங் குறை அறுப்பச் செய்தால், அவன் மகளிர்தம்மை விடுவன் என்பதாம். திரு - சிறப்பைத்தரும். நாண் மடமகளிர் - நாணையும் மடத்தையுமுடைய மகளிர்.

(பி - ம்.) 'குறைவறுப்பச்'

339. வேனற்கரசன் : மன்மதன் ; 274. விடுமே - விடுவான். பானற்கண் நல்லாள் - கருங்குவளை மலரைப்போன்ற கண்ணையுடைய பேரிளம் பெண்ணினது. உயிர்ப்பரம் - உயிரினளவினது ; "ஆவியின் பரமல்ல வேட்கையந்தோ" (திருவாய்மொழி, 10. 3 : 2.)

340. கோபுரத்திற்குக் குன்று உவமை. மணி என்றது ஆராய்ச்சி மணியை ; "வாயிற் கடைமணி நடுநா நடுங்க" (சிலப். 20 : 53) ; "மன்னுயிர் காக்குஞ் செங்கோன் மனுவின்பொற் கோயில் வாயிற், பொன்னணி மணியைச் சென்று கோட்டினுற் புடைத்த தன்றே" (பெரிய. திருவாரூர்ச் சிறப்பு. 27.) உலகுக்கு ஒன்றே ஒழிக்குமே - உலகத்துக்கு ஒரு ஆராய்ச்சி மணியே போதுமே.

(பி - ம்.) 'உலகுக் கொழியுமே', 'உலகிற் கொழியுமே'

341- இவ்வளவில் - இக்காலத்தில். கோதையர்மேல் - மகளிர் மீது. கோதைமேல் (பி - ம்.) - பேரிளம்பெண்ணின்மீது. மாறழிய - பகைவர் அழிய.

(பி - ம்-) 'வணங்குறு மிவ்வளவிற்', 'வணங்கிடு மிவ்வளவும்', 'வணங்கு மிவளளவும்' 'கோதைமேல்' 'அனங்கன் செருப்பெய்ய' 'சிலைவருத்த'

342. குத்துங் கடாக்களிற்றுப் போந்தான் கொடைச்சென்னி
உத்துங்க துங்க னுலா.

[வெண்பா]

கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயும்
செய்ய கரிய திருமாலே—வையம்
அளந்தா யகளங்கா வாலிலைமேற் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாளிம் மான்.

---

342. குத்தும் . கொம்பால் குத்துகின்ற ; "கொங்க ருடல்கிழியக் குத்தியிரு கோட்டெடுத்து, வெங்க ணழலின் வெதும்புமே - மங்கையர் கண், சூழத்தா மம்புனையுஞ் சுந்தரத்தோண் மீனவனுக், கீழத்தா ளிட்ட விறை" (சாஸனப் பாடல்) கொடைச் சென்னி - கொடையால் சிறந்த சோழன் ; "செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்தம், பெருமான் முகம்பார்த்த பின்னர் - ஒருநாளும், பூதலத்தார் தம்மைப் பொருணசையாற் பாராவாம், காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண்" (தண்டி. 21, மேற்.) உத்துங்க துங்கன் - உயர்ந்தோருள் உயர்ந்தவன் ; 121. உத்துங்க துங்கன் கடாக்களிற்று உலாப்போந்தான்.

(பி - ம்.) 'குலச்சென்னி'

(கு - ரை.) கையும்......திருமாலோ : 158 குறிப். ; "கையும் பதமுந் திருவாயுங் கண்ணுஞ் செய்ய கருமுகிலே" (பகவற்கீதை, 11 : 26.) அகளங்கன் - விக்கிரம சோழன் பெயர். இம்மான் தளர்ந்தாள் ; இம்மான்- இத்தலைவி.

(பி - ம்-) 'ஆலிலை மேற்பாயல்' 'தளர்ந்தாளென்'

உ

அத்திமுகத், துத்தமனை
நித்தநினை, சித்தமே.

குலோத்துங்க * சோழனுலா

[முன்னோர் பெருமை]

1. தேர்மேவு பாய்புரவிப் பாசடைச் செங்கமலம்
போர்மேவு பாற்கடற் பூத்தனையோன்—பார்மேல்

(பழையவுரை) தேர்மேவிய பாய்புரவியின் பசுத்த நிறத்தொளியும் விரித்த வெயிலின் சிவந்த நிறனும் என்போலும் எனின், ஆரவாரத்தை யுடைய திருப்பாற்கடலின்கண் பாசடைக்கு நடுவே ஒரு கமலமலர் பூத்ததை ஒக்கும். பூத்தனையோன் - இவன் ஆதித்தன்.

(குறிப்புரை) புரவியாகிய பாசடையில். புரவிகளுக்குத் தாமரை யிலைகளும் சூரியனுக்குத் தாமரைமலரும் உவமை. சூரியன் தேரிற் பூட்டிய குதிரைகள் பச்சை நிறம்; 'பச்சைமா வேழு மேறப்போ யாறு மெய்தினர்' (கம்ப. 1. கையடைப் : 22) ; "தனியாழித் தனிநெடுந்தேர்த் தனிப்பச்சை நிறப்பரியை......விடாய்தணிப்பான் பனிப்பகைவன் பனி செய்வோன் பக்கஞ் சேர்ந்தான்" (வி. பா. வசந்த. 1.)

(பிரதி பேதம்) *'சோழ தேவருலா' 1. 'பாற்கடல் பூத்தனபோல்'

2. மருளப் பசுவொன்றின் மம்மர்நோய் தீர
உருளுந் திருத்தே ருரவோன்—அருளினாற்

(ப - ரை) பார்மேல் (1) சிறந்த பல்லுயிரும் மருளும்படியாக ஒரு பசுவினது மனோதுக்கமானது தீரும்படி உருளும் திருத்தேரையுடைய உர வோன் ; இவன் ஆதி மனுச்சக்கரவர்த்தி.

(கு - ரை) திருத்தேருரவோன் ஆதிமனுவென்பது : இராசராச. 3 ; "அவ்வருக் கன்மக னாகிமனு மேதினிபுரந் தரிய காதலனை யாவினது கன்று நிகரென், றெவ்வ ருக்கமும் வியப்பமுறை செய்தகதை" (கலிங்கத். இராசபாரம். 10) ; "வெய்யோனும், செம்மலைப்பண்டேர்ந்த தேரோனும்" (சங்கர 3.) இவனை ஆதிமனு வழி வந்த வேறொருவன் என்பர் சேக்கிழார் ; பெரிய. திருவாரூர்ச். 37 ; விக்கிரம. 4. குறிப்.

(பி - ம்) 'மருளும் பசு' 'திருத்தேரை யூர்வோன்'

6.

3. பேராப் பெரும்பகை தீரப் பிறவேந்தர்
ஊராக் குலிச விடையூர்ந்தோன்—சோராத்

(ப - ரை) தன் அருளினாலே (2) தேவாரற் பேர்க்க அரிதான பெரிய பகை தீர்வதாகத் தன்னையொழிந்த அரசர் ஊராத வச்சிராயுதத்தையுடைய விடையை ஊர்ந்தோன். குலிச விடை - இந்திரனாகிய இடபம்; ஊர்ந்தோன் - இவன் ககுந்த சக்கரவர்த்தி.

(கு - ரை) இந்திரனாகிய காளையை ஊர்ந்தமை: இராசராச. 10; "இக்குவாகுவுதவும் புதல்வனான வுரவோ னிகலுரஞ்செய புரஞ்சயன் புரந்தரனெனுஞ், சக்குவாயிர முடைக்களிறு வாகனமெனத் தானிருந்து பொருதானவரை வென்றசயமும்" (கலிங்கத். இராசபாரம். 11); "இவர் குலத்தோர், தோன்றலைப்பண் டிந்திரன்காண் விடையேறுய்ச்சுமந்தானும்" (கம்ப. 1. குலமுறை: 3.) ககுத்தனுக்கே புரஞ்சயன் என்ற பெயரும் உண்டு என்பது; விஷ்ணுபுராணம், 4 : 2.

(பி - ம்) 'பேரப் பிறவேந்தர்'

4. துயில்காத் தரமகளிர் சோர்குழைகாத் தும்பர்
எயில்காத்த நேமி யிறையோன்—வெயில்காட்டும்

(ப - ரை) தனது ஆற்றலால் சோர்ச்சி பிறவாமல் (3) துயிலைக் காத்து அரமகளிர் குழைச்சோர்பு காத்து அமராபதி எயில் காத்த நேமிப் படையையுடைய இறையோன்; இவன் முசுகுந்த சக்கரவர்த்தி.

(கு - ரை) முசுகுந்தன்: குமரக்கடவுள் வருமளவும் இவன் இந்திரன் வேண்டுகோளால் தேவலோகத்தைக் காத்திருந்து சோர்வு வாராமல் நீண்டகாலம் தூங்கும் வரத்தைத் தேவர்பால் பெற்றனன்; பாகவதம், 10, முசுகுந்தற் கருள்புரி. 20; கம்ப. 1. குலமுறை: 8; கலிங்கத். இராச பாரம்: 12. குழை - காதணி: இது மங்கலநாண் போன்ற சிறப்புடையது; இதனைக் காத்தலாவது மகளிர் மங்கலம் கெடாமல் நிலவும்படி நிறுத்துதல்; விக்கிரம. 77; "நாந்தேவ ரென்பார் தம்பாவை யர்க்கன்று காதோலை பாலித்த தயவாளர்" (மதுரைக்கலம். 29.) நேமி - ஆக்ஞா சக்கரம்.

5. அவ்வா னவர்கோ னொருமணி யாசனத்தில்
ஒவ்வாம லேத்த வுடனிருந்தோன்—கவ்வை

(ப - ரை) வெயிலைக் காட்டும் (4) கடவுள் மணியாசனத்திலே அவ் வானவர் கோனும் முகந்தாழ்க்கத் தேவவுலகம் பரவ உடனிருந்தவன்; இவன் திலீபன்.

(பி - ம்). 'ஒருமடங்க லாசனத்தில்' 'ஒவ்வாம லொக்க'

6. எழக்குரைக்கும் பேழ்வா யிருங்கூற் றுக் கேற்ப
வழக்குரைக்குஞ் செங்கோல் வளவன்—பழக்கத்தாற்

(ப - ரை) பெரிய வாயினாலே குரைக்கும் ஆரவாரம் (5) மாறக்கூற்றுக்கேற்ப வழக்குரைத்தவன்; இவன் பெருநற்கிள்ளி.

(கு - ரை) கூற்றுக்கு வழக்குரைத்தமை: விக்கிரம. 7. குறிப். சங்கர. 5; கலிங்கத். இராசபாரம். 15. எழ - கெட; நக்க. 720. பேழ்வாய் - பெரிய வாய்; முருகு. 47.

(பி - ம்) 'கூற்றுக்கேற' 'வழக்குரைக்குங் கிள்ளி', 'வழக்குரைத்த கிள்ளிவளவன்'

7. போந்த புலியுடனே புல்வா யொருதுறைநீர்
மாந்த வுலகாண்ட மன்னர்பிரான்—காந்தெரியில்

(ப - ரை) கொலையின் பழக்கத்தாற் (6) போந்த புலியுடனே உறவின் பழக்கத்தாற் போந்த தன்மை போலப் புல்வாய் ஒருதுறையிலே நீருண்ண உலகத்தை யாண்டவன்; இவன் மாந்தாதா.

(கு - ரை) புலியும் மானும் ஒரு துறையில் நீருண்ண ஆண்டமை: விக்கிரம. 5; இராசராச. 5; "ஒரு துறைப் புனல் சினப்புலியு மானுமுடனே, உண்ணவைத்த வுரவோன்" (கலிங்கத். இராசபாரம். 12); "புலிப் போத்தும் புல்வாயு, மொருதுறையி னீருண்ண வுலகாண்டோன்" (கம்ப. 1. குலமுறை: 5); "எம்மறிக்கும் இம்ப ரடுபுலிக்கு மொக்கநீ ரீந்தோனும்" (சங்கர. 3-4); ஏதேனும் ஒரு நிகழ்ச்சியைச் சிறப்பித்துக் கூற விரும்பும் போது மக்கள், 'மனு மாந்தாதா காலங்களில் இப்படி இது நடந்தது' என்று கூறுவது வழக்கு.

(பி - ம்) 'வுலகாண்ட மாந்தாதா'

8. வெந்தா ருயிர்பெற் றுடல்பெற்று விண்ணுள
மந்தா கினிகொணர்ந்த மன்னர்கோன்—முந்திப்

(ப - ரை) மஹாவிருடி கோபத்தாலே (7) வெந்த சகரர் தேவவுலகத்துப் பயனையாள மந்தாகினியைக் கொண்டுவந்த இராசராசன்: இவன் பகீரதன்.

(கு - ரை) மந்தாகினி-வான்கங்கை: விக்கிரம. 82. பகீரதன் கங்கை கொணர்ந்தது: இராசராச. 8; கம்ப. 1. குலமுறை: 9.; விண் - தேவ உலகத்து இன்பம்; ஆகுபெயர்.

(பி - ம்.) 'விண்ணுலகின்' 'மூந்து', 'முந்தப்'

9. பொருதேர்க ளீரைந்தி னீரைவர் போர்பண்
டொருதேரால் வென்ற வுரவோன்—கருதி

(ப - ரை) எத்தேர்க்கும் முற்பட்டுப் (8) பொரத்தக்க தேர்கள் ஈரைந்தின் ஈரைவர் போரை முன்பு ஒரு தேரால் வென்ற உரவோன்; இவன் தசரத சக்கரவர்த்தி.

(கு - ரை) பத்துத்தேர்களை ஒரு தேரால் வென்றமை: இராசராச. 11; 'அவுணர்தேர் பத்தும் வென்றுளேற்கு' (கம்ப. 2. மந்திரப். 19.) சம்பராசுரனே பத்து வீரர்களாகிப் பத்துத்தேர்களில் வந்தனனென்பது ஆனந்த ராமாயணத்திற் காணப்படுமென்பர்.

(பி - ம்) 'பொருதேர் களிறைந்தின்'

10. மலைபத்தும் வெட்டு முருமின் மறவோன்
தலைபத்தும் வெட்டுஞ் சரத்தோன்—நிலைதப்பா

(ப - ரை) மறவோன்-இராவணன். வெட்டுஞ் சரத்தோன்; இராமன்.

(கு - ரை) மலையை வெட்டும் இடி: "மரந்தின்னூஉ வரையுதிர்க்கு, நரையுருமி னேறனையை" (மதுரைக். 62-3.) இராவணன் பத்துத் தலைகளும் பத்துமலைகள் போன்றவை.

(பி - ம்) 'மலைபத்து மெட்டு முருமின்'

11. மீளி தலைகொண்ட தண்டத்தான் மீளிக்குக்
கூளி தலைபண்டு கொண்டகோன்—நாளும்

(ப - ரை) நிலைதப்பா (10) மீளி - பேய்த்தலைப் பெருமங்கலமுடையார். பண்டு கொண்டகோன் - கரிகாற் சோழ சக்கரவர்த்தி.

(கு - ரை) பேய்த்தலைப் பெருமங்கலமுடையார்: "கோட்டை வாசலிற் கூளிதன் பலத்தால், வாட்டமில் வளவனை மலைவறப் பொருதிடும், வடவரச ரைப்பெரு மங்கலமுடையீர், படைபொரு தவசயப் படுத்துமென் றேவலும், காத்தெழு பத்திர காளியா லந்தப், பேய்த்தலை கொண்டு பெரும்படை செயித்தோம்" (சோழமண்டல. 95, மேற்.); "களத்திற் பொலிகா டவன்பணியக் கண்டான் கொண்டான் களவகுப்புத், தளத்திற் பெரிய வடவரசர் தாமே விடும்பேய்த் தலைகொண்டான், உளத்திற் பரவு காளியரு ளுடையான் சோழ னுவப்புடையான், வளத்திற் பெருமங் கலமுடையான் வளஞ்சேர் சோழ மண்டலமே" (சோழமண்டல. 94.) கூளி-பேயினது. பெருமங்கலம் ஏயர்கோன் கலிக்காம நாயனார் ஊர் என்பதும் அவர்குடி "இன்னவாழ்பதி யதனிடையேயர்கோக் குடிதான், மன்னி

நீடிய வளவர் சேனாபதிக் குடியாம்" (பெரிய. ஏயர்கோன். 5) என்பதும் இங்கே ஒப்பிட்டு அறிதற்குரியன. இவன் முதற் கரிகாலன் போலும்.

(பி - ம்) 'மீளிக்கே'

12. பதுமக் கடவுள் படைப்படையக் காத்த
முதுமக்கட் சாடி முதலோன்—பொதுமட்க

(ப - ரை) நாளும் (11) - பல அரசர் காலத்தும். முதுமக்கட் சாடி உளவாதற்கு முதலோன் : இவன் நாபாகன்.

(கு - ரை) பதுமக் கடவுள் - பிரமதேவன். படைப்பு அடைய - ஆக்கப்பட்ட உயிர்கள் முழுவதையும். முதுமக்கட் சாடி : பண்டைக்காலத்திற் பிராயத்தால் முதிர்ந்தவர்கள் துன்பமின்றி இருத்தற்கும், ஆசீவகர்தவஞ் செய்தற்கும், உபயோகப்பட்டு வந்த தாழிகள் இப்பெயரால் வழங்கிவந்தன ; விக்கிரம. 8 ; சங்கர. 6. "தாழி கவிப்பத் தவஞ்செய்வார் மண்ணுக" வாழிய நோற்றனை மால்வரை" (தொல். புறத். 5, ந. மேற்.) ; புறநா. 228, 238, 256, 364; மணி. 6 : 67; தக்க. 376. பொதுமட்க-பூமி மற்ற அரசருக்கும் பொது என்பது இல்லையாகும்படி ; "சினப்போர் வழுதி; தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன்" (புறநா. 51 : 4.5.) மட்க - கெடும்படி : "பருதிகண் மட்கவருமொரு கட்கமே" (தக்க. 162.) நாபாகன் : இவன் அஜனுடைய பிதா ; விஷ்ணுபுராணம் ; இவன் பெயர் சுரகுரு என்று குலோத்துங்கன் பிள்ளைத்தமிழில் காணப்படுகின்றது ; விக்கிரம. 8. குறிப்.

(பி - ம்) 'கடவுட் படைப்பு' 'பொதுமக்கள்'

13. வாங்கெயி னேமி வரையாக மண்ணுண்டு
தூங்கெயில் கொண்ட சுடர்வாளோன் – ஓங்கிய

(ப - ரை) இருட்டவாகு (இக்ஷுவாகு)

(கு - ரை) வாங்கு எயில் நேமி - வளைந்த சக்கரவாளகிரி ; தக்க. 2. தூங்கெயில் எறிந்தது ; விக்கிரம. 9; இராசராச. 13 ; புறநா. 39 : 6; சிலப். 29 : "வீங்குநீர்"; மணி. 1 : 4; பழமொழி. 49; கலிங்கத். இராசபாரம். 17 ; "திறல்விளங் கவுணர் தூங்கெயி லெறிந்த, விறன்மிகு முரசின் வெல்போர்ச் சோழன்" (தொல். களவு. 11, ந. மேற்.) இவனைத் தூங்கெயி லெறிந்த தொடிதோட் செம்பியன் என்று தமிழ் நூல்கள் கூறும். இக்குவாகு இவனிலும் வேறானவன். விக்கிரம. 9. குறிப்.

14. மால்கடற் பள்ளி வறிதாக மண்காத்து
மேல்கடல் கீழ்கடற்கு விட்டகோன்—கோல்கொன்

(ப - ரை) மால் கடற்பள்ளி வறிதாக விட்ட கோன்; சங்கரண (சம்ஹர்ஷண) சக்கரவர்த்தி. மேலைக் கடற்குள்ளே பூமண்டலத் தெல்லை கொள்ளைக்கிடத்தலின் அவ்வெல்லை திருத்தவேண்டிப் பத்துநாள் ஆதித் தனைத் தேகத்திலே தரித்துக் கிரணங்களாலே மேல்கடற் சலத்தை வாங் கிக் கீழ் கடலிலே விட்டகோன்.

(கு - ரை) சூரியன் கடலை வற்றச் செய்தல் : 80. கோல்கொன்று - ஒடக்கோலை வருத்தி ; "கழைநிலை பெறுஅக் காவிரி நீத்தம்" (அகநா. 6 : 6) ; கலிங்கத். இராசபாரம். 16 ; நற். 7: 4.

(உரை) விட்டகோன் : விக்கிரம. 9 ; இராசராச. 14.

(பி - ம்) 'மண்ணுண்டு' 'கோல்கொண்டலை'

15. றலையெறியுங் காவேரி யாற்றுப் படைக்கு
மலையெறியு மன்னர்க்கு மன்னன்—நிலையறியாத்

(ப - ரை.) இவன் சிவகன்.

(கு - ரை.) காவேரியாற்றுப் படைக்கு-காவிரி நதியை வழிப்படுத்து தற்பொருட்டு ; ஆற்றுப்படை - வழிப்படுத்துதல் : முருகு. 24, உரை.

சோழன் தன் கைவாளால் மலைகளை யெறிந்தது : விக்கிரம. 12 ; இராசராச. 85 ; "மலைகொன்று பொன்னிக்கு வழிகண்ட கண்டன், வரராச ராசன்கை வாளென்ன வந்தே" (தக்க. 549) ; 'பண்டு காவேரி யைக் கிழக்கு நோக்கிப் போகவொட்டாது தடுத்த சைய பருவதத்தை நடுவற வெட்டிய சோழன் ராசராசனுடைய திருக்கையிற் பிடித்தருளின வாள்' (தக்க. 549, உரை) ; "சைய, மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள் ளணிநாள் வாழ்த்திக், கொலைச்சிறைதீர் வேந்துக் குழாம்" (தொல். புறத். 36, ந. மேற்.) "காவிரிப்புனல் கொணர்ந்தவவனும்" (கலிங்கத். இராசபாரம். 15) ; இவன் காவேரிச் சோழன் என்போன், இவனை மணி மேகலை' காந்தமன், காந்தன் எனக் கூறும் ; விக்கிரம. 12. குறிப்.

16. தொல்லார் கலிவலையந் தோள்வலைய முன்றிருந்த
வில்லா னடுவுள்ள வெற்பெடுத்தோன்—ஒல்லைக்

(ப - ரை) தோற்றமும் முதலும் தெரியாத (15) கடல்வட்டம் தோளுக்கு வலையமாக முதலில் திருந்த விற்படையாலே இடித்து நடுவுண் டான மலைகளை மாற்றினேன் ; இவன் பிருது சக்கரவர்த்தி.

(கு - ரை) பிருது ; குமாரசம்பவம், 1 : 2-ஆம் சுலோகம். பூமி தோள் வலையமாதல் ; " பண்டளந்த, மண்ணேழும் வாகு வலயமோ " (151.)

(பி - ம்) 'வலயத்தோள் வலையமுந்திருந்த'

17. கொலையே றுடம்படையக் கொய்தாலு மெய்தாத்
துலையேறி வீற்றிருந்த தோன்றல்—தலையேறு

(ப - ரை) உடம்படையக் கொலையேறக் கொய்தாலும் நடுவெய்தாத துலையிலே யேறி அரியாசனத்திருந்த தன்மைபோல வீற்றிருந்தவன் ; இவன் சிபி சக்கரவர்த்தி.

(கு - ரை) அடைய - முழுதும். வீற்றிருந்த - கவலையின்றி இருந்த. சிபி : விக்கிரம. 11; இராசராச. 6: புறநா. 37 : 5-6, 39 : 1-3, 43 : 5-8, 46 : 1-2; சிலப். 20 : 51-2, 23 : 57-8, 29 : 'அம்மானை வரி'; கலிங்கத். இராச பாரம். 13; கம்ப. 1. திருவவதார. 65, குலமுறை. 7; 6. விபீடணன் அடைக்கலப் 110, கும்பகருணன் வதைப். 355 ; குறள், 72. பரிமேல் ; சங்கர. 11.

(பி - ம்) 'வீற்றிருந்த சோழன்'

18. மண்கொண்ட பொன்னிக் கரைகட்ட வாராதாள்
கண்கொண்ட சென்னிக் கரிகாலன்—எண்கொள்

(ப - ரை) கரைகட்ட வாராதாள் ஈழத்துப்பிடாரி.

(கு - ரை) வாராதாள்கண் ; கரைகட்ட வாராதான் என ஆண்பாலாகக் கொண்டு அவனை முகரி என்னும் பெயரினன் எனக் கூறும் ; கலிங்கத். இராசபாரம் : 20 ; தொக்க கலியின் மூவாயிரத்துத் தொண்ணூற்றில், மிக்க கரிகால வேந்தனுந்தான் - பக்கம், அலைக்கும் புகழ்ப்பொன்னி யாறுகரை கண்டான், மலைக்கும் புயத்தானும் வந்து" (பெருந்தொகை, 778) என்பதிலும் ஒரு சோழன் காவேரிக்கு கரை கட்டியமை கூறப்படுதல் காண்க. இவன் இரண்டாங் கரிகாலன்.

(பி - ம்) 'வாராதான்' 'சென்னிக் கனைகாலன்'

19. பணம்புணர்ந்த மோலியான் கோமகளைப் பண்டு
மணம்புணர்ந்த கிள்ளி வளவன்—அணங்கு

(ப - ரை) சேடனுடனே எண்கொள்ளும் (18) ஆயிரம் பணம் புணர்ந்த மோலியினன் ; அவன் உவச்சேனன் என்னும் நாகராசன். அவன் மகளைத் திருமணம் புணர்ந்தவன் கிள்ளியாகிய வளவன்.

(கு - ரை) ஒப்பு: விக்கிரம. 10; இராசராச. 16; " தளவழிக் குகையி னிற் பொதிபிலத்தின் வழியே தனிநடந்துரகர் தங்கண்மணி கொண்டவ வனும் " (கலிங்கத். இராசபாரம். 18); பெரும்பாண். 29-31; ந; மணி. 24: 54-9, 25: 178-9; 29: 3-5; சங்கர. 8. இவன் கரிகாலன் மைந்தன் கிள்ளி வளவன்.

(பி - ம்) 'மௌலியான்'

20. படுத்துப் பொறையனைப் பொய்கைக்குப் பண்டு
கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோன்
—அடுத்தடுத்துச்

(ப - ரை) அணங்கு (19) - நோவு. பொறையன் - சேரன். கொண் டோன் - தஞ்சை விஜயாலயன்.

(கு - ரை) பொறையன் - சேரமான் கணைக்காலிரும் பொறை. களவழி நாற்பதைக்கொண்டவன் சோழன் செங்கணான் என்பது புறநா. 74-ஆம் செய்யுளாலும், 'சோழன் செங்கணானும் சேரமான் கணைக்கா லிரும்பொறையுந் திருப்போர்ப்புறத்துப் பொருதுடைந்துழிச் சேரமான் கணைக்கா லிரும்பொறையைப் பற்றிக்கொண்டு சோழன் செங்கணான் சிறைவைத்துழிப் பொய்கையார் களம்பாடி வீடுகொண்ட களவழி நாற்பது' என்னும் தொடராலும் அறியப்படும்; விக்கிரம. 14; இராசராச. 18; சங்கர. 14; " செய்கை யரிய களவழிப்பா முன்செய்த, பொய்கை யொருவனற் போந்தரமோ.........கொலைச்சிறைதீர் வேந்துக்குழாம் " (தொல். புறத். 36, ந. மேற்.): கலிங்கத். இராசபாரம். 19. இவன் சோழன் செங் கணான்.

(பி - ம்) 'பொய்கைக் கவிக்குக்'

21. சீறுஞ் செருவிற் றிருமார்பிற் றொண்ணூறும்
ஆறும் படுதழும்பி னாகத்தோன்—ஏறப்

(ப - ரை) இவன் இராச ராச தேவன்.

(கு - ரை) இவன் விசயாலய சோழன். விக்கிர. 15. குறிப். இராசராச. 19; சங்கர. 15.

(பி - ம்) 'திருமார்பு தொண்ணூறு' 'ஏறும்' 'ஏறு', 'வேறு'

22. பிரம வரக்க னகலம் பிளந்து
பரமர் திருத்தில்லை பார்த்தோன்—நரபதியர்

(ப - ரை) எல்லாருங்கண்டு ஈடேறும்படி (21) பரமானந்ததாண்டவ மாடும் திருத்தில்லைக் கூத்தனது நியதியாலே காவலான பிரமராக்ஷஸனது

மார்பைப் பிளந்து திருத்தில்லை நடம்பார்த்தோன்; இவன் திரிமுடிச் சோழன்.

(கு - ரை) திரிமுடிச்சோழன் - மும்முடிச்சோழன்; முதல் இராச ராசனுக்கு மும்முடிச் சோழன் என்றபெயர் உள்ளமை சாஸனங்களால் விளங்கும். ஏறப்பார்த்தோன்; இவ்வரலாறு விளங்கவில்லை. ஏறப் பார்த்தோனெனக் கூட்டுக.

(உரை) (பி - ம்) 'இருமுடிச்சோழன்'

23. தாழமுன் சென்று மதுரைத் தமிழ்ப்பதியும்
ஈழமுங் கொண்ட விகலாளி—சூழவும்

(ப - ரை) இவன் கரிகாற் பெருவளத்தான்.

(கு - ரை) மதுரைத் தமிழ்ப்பதி: "தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின், மகிழ்நனை மறுகின் மதுரை" (சிறுபாண். 66-7.) இவன் முதலாம் பராந்தகன்; "வெங்கோல் வேந்தன் தென்னனுடு மீழமுங் கொண்ட திறற், செங்கோற் சோழன் கோழிவேந்தன் செம்பியன்" (கண்டராதித்தர் திருவிசைப்பா, 8); கலிங்கத். இராசபாரம். 23. இவன் கரிகாலன் அல்லன். இவன் மதுரையும் ஈழமுங்கொண்ட கோப்பரகேசரிவர்மன் எனச் சாஸனங்கள் கூறும் முதற் பராந்தகசோழன்.

(பி - ம்) 'மதுரைத் திருப்பதியும்'

24. ஏறிப் பகலொன்றி லெச்சுரமும் போயுதகை
நூறித்தன் றூதனை நோக்கினோன்—வேறுகக்

(ப - ரை) இவன் முடிகொண்ட சோழன். தூதனை நோக்குதல் அவன் சேரன்முன் களைந்த தூசினை இடுகவென்ற குறிப்பு நோக்கு.

(கு - ரை) சுரம் - பாலைநிலம்; இது சேரநாட்டு உள்ளது. "வான வரம்ப னன்னாட் டும்பர், வேன லீடிய வெங்கடறு" (அகநா. 389 : 16-7); "வடக்குப்பெரும்பாலை" (பெருந்தொகை, 2105.) பாலைநிலம் பதினெட்டு என்பர்; விக்கிரம. 17; இராசராச. 21; சங்கர. 17; உதகை : குடமலை நாட்டிலுள்ள ஒரு கோட்டை. அரசரும் அவருடைய தூதர் முதலியோரும் தம்மேலாடையைக் களையாமை மரபு; "போர்வை மடக்கார் பொலியப் புகுதரும், கோயின் மகளிர்" (பெருங். 2. 2 : 230-31.) "தருகதுகி லெனவெழுந்து தங்களைவன் பொடுதுச்சா தனன்சொ லாமுன், வருகவென வரைமார்பின் வாங்காத வுத்தரியம் வாங்கியீந்தார்" (வி. பா. சூதுபோர். 246); 'சீவரம் போர்த்தல் மத்திம தேசத்தாராசார மன்றோ? மூத்தோர் முன் இளையார் போர்வை வாங்குவது போல' (நீலகேசி. 3 : 13, உரை.)

வேருக - மற்ற அரசர்களை வெல்லும் முறையினின்றும் வேருகும்படி. இவன், முதல் இராசராச சோழன். இவ்வேந்தன், தான் அனுப்பிய தூதனைச் சேரன் இகழ்ந்து சிறை செய்தான் என்பது அறிந்து போர்மேற் சென்று, பல சுரங்களையுங்கடந்து, அச்சேரனை வென்று, அவன் நகர் உதகையையும் அழித்துத் தன் தூதனை மீட்டு வந்தவன்; கலிங்கத். இராசபாரம், 20. 'தூதனை' என்ற சொல் தூசினை என்றிருக்கலாம் என்று மகாமகோபாத்யாய, டாக்டர் ஐயரவர்கள் குறிப்பிற் காணப்படுகிறது. தூதனைப்பற்றிய செய்தி மற்றை இரு உலாக்களிலும் இல்லாமை நோக்குக.

(பி - ம்) 'வேறெருக்க' உரை. 'நூலினை'

25. கங்கா நதியுங் கடாரமுங் கைவரச்
சிங்கா தனத்திருந்த செம்பியர்கோன்—எங்கோன்

(ப - ரை) கங்காநதியுங் கடாரமுங் கைவரத் தண்டேவிக் கொள்ளாமல் அவரிருந்த ஆதனம் பேராத ஆதனமென்ற குறிப்பால் அஞ்சனம் போலத் தோன்ற அத்திசை முகமாக விடும் அரியாசனத் திருத்தலால் சிங்காதனத்திருந்த செம்பியர் என்ருர்; கங்கை கொண்ட சோழன்.

(கு - ரை) கடாரம்; மலேயா தீபகற்பத்திலுள்ளதும் இக்காலத்தில் 'கெடா' (kedah) என்று வழங்கப்படுவதுமாகிய தேசம். கங்கை கொண்ட சோழன்; இவன் பரகேசரி வர்மன் இராஜேந்திர சோழதேவன். விக்கிரம. 18; கலிங்கத். 25.

(உரை) அவர் என்றது கங்கைக்கும் கடாரத்திற்கும் உரிய அரசர்களை; அஞ்சனம் - புதையல் முதலியவற்றைக் காணுதற்குரிய ஒருவகை மை.

(பி - ம்) 'கங்கா பதிபுரந்த கற்பகம்' 'கைவாரிச்', 'கைக்கொண்டு'

26. புவிராச ராசர் மனுமுதலோர் நாளில்
தவிராத சுங்கந் தவிர்த்தோன்—கவிராசர்

(ப - ரை) சுங்கந்தவிர்த்த பெருமாள் குலோத்துங்கசோழதேவர்.

(கு - ரை) மனுமுதலோர் நாளிலும் தவிராத சுங்கம்; 'மன்னர் வழிவந்த சுங்கந்தவிர்த்த - ஸ்ரீ பரதாழ்வான் முதலாக வந்த சுங்கந்தவிர்த்த' (தக்க. 775, உரை); விக்கிரம. 26; இராசராச. 26. 'சுங்கந்தவிர்த்து இருள் நீக்கி உலகாண்ட' (சிலாசாசனம்.) இவன் முதற் குலோத்துங்கன். கவிராசர் - கவிச்சக்கரவர்த்தியாகிய சயங்கொண்டார்; "பாடற் பெரும்

பரணி தேடற்கருங்கவி கவிச்சக்கரவர்த்தி பாவச் செஞ்சேவகஞ் செய்த சோழன் றிருப்பெயர" (குலோத். பிள்ளைத். 14.)

(பி - ம்) 'புவிராச ராசன்' 'மனுகுலத்தோர் போனர்' 'போற்றத்'

27. போற்றும் பெரியோ னிவன்பின்பு பூதலங்கள்
ஆற்றுந் திருத்தோ ளகளங்கன்—வேற்றார்

28. விரும்பரணில் வெங்களத்தீ வேட்டுக் கலிங்கப்
பெரும்பரணி கொண்ட பெருமான்—தரும்புதல்வன்

(ப - ரை) 27-8. விக்கிரம சோழ தேவர்.

(கு - ரை) 27. பெரியோன் - முதற்குலோத்துங்கன். அகளங்கன் - விக்கிரம சோழன்; திருவரங்கத்தில் ஒரு வீதிக்கு 'அகளங்கன் திருவீதி' என்பது பெயர்; பூவாளூருக்கு அருகில் அகளங்க நல்லூர் என்ற ஓர் ஊரும், சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்துக்குக் கிழக்கே 'ஸ்வஸ்திஸ்ரீ அகளங்கன் மண்டபம்' என்ற கல் வெட்டுள்ள தூண் ஒன்றும் உள்ளன; 111; விக்கிரம, 59, 152, 182, 209, 256, 284; "வையம், அளந்தா யகளங்கா" (விக்கிரம. இறுதிவெண்பா.) வேற்றார் - பகைவர். 28. விரும்பு கின்ற அரணில். வெங்களத்தில் தீயை வேட்டு; என்றது களவேள்வி செய்ததைக் கூறியபடி; புறநா. 372 : 12. கலிங்கப் பெரும்பரணி: இஃது ஒட்டக்கூத்தரால் விக்கிரமசோழன் மீது பாடப்பெற்றது. "இன்னங் கலிங்கத் திகல்வேந்த ருண்டென்றோ, தென்னன் றமிழ் நாட்டைச் சீறியோ, சென்னி, அகளங்கா வுன்ற னயிரா வதத்தின், நிகளங்கால் விட்ட நினைவு" (தமிழ் நா. 123.) என்னும் ஒட்டக்கூத்தர் பாடலும் இங்கே அறியத்தக்கது; "செருத்தந் தரித்துக் கலிங்கரோடத் தென்றமிழ்த் தெய்வப் பரணி கொண்டு, வருத்தந் தவிர்த்துல காண்ட பிரான் மைந்தற்கு மைந்தனை வாழ்த்தினவே" (தக்க. 776) 'இப்பரணி பாடினார் ஒட்டக்கூத்தரான கவிச்சக்கரவர்த்திகள். பரணி பாட்டுண்டார் விக்கிரம சோழதேவர்' (தக்க. 776, உரை); இராசராச. 27-8. இந்நூல் இப்பொழுது காணப்படவில்லை.

(பி - ம்) 27. 'பெரியோரிவர் பின்பு' 28. 'வெங்களந்தீ' 'பெருமாள்'

[இரண்டாங் குலோத்துங்கன்]

29. கொற்றக் குலோத்துங்க சோழன் குவலயங்கள்
முற்றப் புரக்கு முகில்வண்ணன்—பொற்றுவரை

30. இந்து மரபி லிருக்குந் திருக்குலத்தில்
வந்து மனுகுலத்தை வாழ்வித்த—பைந்தளிர்க்கை

31. மாதர்ப் பிடிபெற்ற வாரணமவ் வாரணத்தின்
காதற் பெயரன் கனகளபன்—யாதினும்

32. தீட்டற் கரிய திருவே திருமாலை
சூட்டத் திருமகுடஞ் சூடியபின்—நாட்டு

(ப - ரை) 29-32. மாதர்ப்பிடி - பெண் சக்கரவர்த்தி. வாரணம் - பெண் சக்கரவர்த்தியின் பிதா [வான பாண்டியன் முதலியாரைக் கும்பிட]; அவர் யோகீசரான காலையிற் பேர், வாரணவாசித் தேவர். திருவின்செல்வி மாலை சூட்ட அபிஷேகஞ் சூடிய பின்னராக.

(கு - ரை) 29. கொற்றம் - அரசுரிமை; "ஒருவன் மேற் கொற்றம் வைப்பின்" (சீவக. 204); 'கொற்றங் கொண்டது' (பெருங். 4 : 11.) முகில்வண்ணன்: இதனால் குலோத்துங்க சோழன் கரிய நிறமுடையவன் என்று தெரிகின்றது; "தடமுகில், அஞ்சன சைலத் தபிடேகஞ் செய்வதென, மஞ்சனமாடி" (61-2); "மைம்முகில் வண்ணத்து வானவன்" (193.) துவரை-துவார சமுத்திரம்; "உவரா வீகைத் துவரை யாண்டு" (புறநா. 201 : 10.) மனுகுலம் - சோழர் குலம். 30. இந்து மரபில்...... பிடி: "விதுகுலநாயகி சேயென்பார்" (112.) பெண் சக்கரவர்த்தி: விக்கிரம. 40; "பெண் சக்கரவர்த்தி முகத்திரண்டு, விழியும் புருவமு மாகியிப் போதுனை வெல்கின்றவே" (தமிழ் நா. 42.) திரு - திருவின் செல்வி; குலோத்துங்கன் மனைவி (61.) (உரை) வாரணவாசி: இப்பெயருள்ள ஊரொன்று அரியிலூருக்குத் தென்பாலுள்ளது.

விக்கிரம சோழன் மனைவியருள் ஒருத்தி விதுகுலநாயகி என்றும் பெண் சக்கரவர்த்தி என்றும் சிறப்பிக்கப் பெறுவள். இவள் துவராபதி ஆண்ட ஒரு வேளிர்கோமான் மகளாவள். இவளே இந்து மரபில் வந்து சோழ குலமாகிய மனுகுலத்து விக்கிரம சோழனை மணந்தவள். இவள் பெயர் தியாகவல்லி, புவனமுழுதுடையாள் என்று சாஸனங்கள் கூறும். வாரணம்—அம்மாதர் மடப்பிடிபெற்ற யானைபோன்ற இரண்டாங் குலோத்துங்கனை உலாத்தலைவன். 'இவன், விதுகுலநாயகி சேய்' எனப்படுவது காண்க; 112. வாரணத்தின் காதற் பெயரன் கனகளபன்—யானைக்கு உரிய சிறப்புப் பெயராகிய கனகளபம் என்னும் பெயரினையும் உடையவன்; கனகளபன் - மேக நிறத்து யானை போன்றவன்; இது இவனது கரிய நிறம்பற்றி வந்த பெயர். கனகளபன் என்ற பெயர் இவன் மகனான இராசராசனுக்கும் உண்டு; இராசராசனுலா. 38.

(பி - ம்) 30. 'மரபிலிருந்து' 'மனுமரபை' 31. 'டெயரான்' 'கனகள்வன்' 'கனகளவன்' 'யாதானும்', (உரை) 'பெண் சக்கரவர்த்திகள் பிதா.'

33. முறைவிட்ட வேற்று முடிமன்னர் தத்தம்
சிறைவிட் டரசருளிச் செய்து—கறைவிட்டு

(கு - ரை) நாட்டு (32) முறை விட்ட - தாம் ஆளும் நாட்டின் முறைமையை இழந்த. சிறைவிட்டு - சிறையிலிருந்து விடுவித்து. கறை - கப்பம். சிறைவிடுதலும், கறைவிடுதலும் : சீவக. 306, 2372, அடிக்.

(பி - ம்) 'முறைவிட்டு' 'கறைவிட்ட'

34. மைஞ்ஞாக மெட்டு மதநாக மோரெட்டும்
பைஞ்ஞாக மெட்டும் பரந்தீர—இஞ்ஞாலம்

(கு - ரை) மைஞ்ஞாகம் - மேகங்களையுடைய மலை ; மை நாகம் எட்டும் மதநாகம்—மேகம் படிந்த ஆகாயத்தை எட்டும் உயரமுள்ள மதங்கொண்ட யானைகள் என்றும் பொருள் கொள்ளலும் ஒன்றும். எட்டு மலைகள் : இமயம், மந்தரம், கைலாசம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம். மதநாகம் - திக்கயங்கள் ; எட்டு யானைகள் : அயிராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீகம். பைஞ்ஞாகம் - படத்தையுடைய பாம்புகள் ; வாசுகி, அனந்தன், தக்ஷன், சங்கன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன். இம்மூவகை நாகங்களும் உலகைத் தாங்குவன ; இராசராச. 237.

(பி - ம்) 'மைந்நாக' 'பைந்நாக' 'பரந்தீர்த்து', 'பரங்கெடுத்து', 'பரந்தீர்ப்பித்-திஞ்'

35. தாதைக்குப் பின்பு தபனற்குந் தோலாத
போதத் திமிரப் பொறைநீக்கி—மாதரில்

(ப - ரை) போத......நீக்கி - ஞானவுபதேசம் பெற்று.

(கு - ரை) தபனற்கும் - சூரியனுக்கும். தோலாத - தோல்வியடையாத. போதத்திமிரம் - ஞானத்தை யழிக்கின்ற அஞ்ஞானம் ; "மங்குல் ஞாயிறு" (பரி. 13 : 1, உரை.) சூரியனுக்குந் தோலாத அஞ்ஞானம் : "வெங்கதிர்க்குஞ் செந்தீ விரிசுடர்க்கு நீங்காது, பொங்கு மதியொளிக்கும் போகாது - தங்கும், வளமையான் வந்த மதிமருட்சி மாந்தர்க், கிளமையான் வந்த விருள்" (தண்டி. 48. மேற்.)

(பி - ம்) 'தாதைக்குந் தங்கள்' 'தபனர்க்குங் கேளாத' 'பொறை தீர்த்து'

36. ஒக்க வபிடேகஞ் சூடு முரிமைக்கண்
தக்க தலைமைத் தனித்தேவி—மிக்க

(கு - ரை) ஒக்க அபிடேகம் சூடுதல்; அபிடேகம்-கிரீடம்; இராசராச. 89. அரசனுடன் பட்டத்துத் தேவியும் மகுடம் சூடுதல்: "மடமயிலொக்க மகுடங் கவித்தாள்" (61); "திருமகள்போல வொருமையி னெட்டி, உடன்முடி கவித்த கடனறி கற்பின், இயற்பெருந்தேவி" (பெருங். 2. 4: 22-4.)

(பி - ம்) 'செய்யு முரிமைக்கண்' 'நிலைமைத் தனித்', 'தனிமைத் தனித்'

37. புவனி முழுதுடைய பொற்றொடியுந் தானும்
அவனி சுரர்சுருதி யார்ப்ப—நவநிதிதூய்

(ப - ரை) நவநிதிதூய் - புதுமையான தானம்; கற்பகதரு தானம், சுவேமாப்பிர தானம், விசுவசக்கர தானம், மகாதானம், சுரபிதானம்.

(கு - ரை) புவனி முழுதுடைய பொற்றொடி: இவள் தியாகவல்லி என்றும் வழங்கப்படுவாள்; 32. குறிப்.; திருமழபாடிச்சாஸனம்; 85 of 1895. அவனிசுரர் - பிராமணர். சுருதியார்ப்ப - வேதங்களை யோத.

(பி - ம்) 'புவன முழுதுடைய' 'பொற்கொடியுந் தானும்'

[தில்லையிற் செய்த திருப்பணிகள்]

38. ஏத்துத் தருங்கடவு ளெல்லையி லானந்தக்
கூத்துக் களிகூரக் கும்பிட்டுப்—போத்தின்மேல்

39. தில்லைத் திருமன்ற முன்றிற் சிறுதெய்வத்
தொல்லைக் குறும்பு தொலைத்தெடுத்து—மல்லல்

40. தசும்பு வளர்கனித் தண்பெரு நாவல்
அசும்பு பசும்பொ னடுக்கிப்—பசும்பொன்

(ப - ரை) 38-40. அடியாருக்கு ஏத்துதலைத் தரும் கடவுளது இறுதியில்லாத ஆனந்தக் கூத்தைக் கண்ணும் மனமும் களிகூரக் கும்பிட்டு, ஆங்கதும் காட்டிடென்று தில்லையம்பல முன்றிலின் வரங்கிடந்த போத்தின் மேலான் றனது மமதையாகிய குறும்பைக் கீழ்ப்படுத்தி அருளாலே யெடுத்த மன்றத்துச் சிவனேவலிலே வளப்பாடுண்டாகச் சம்புத்தீவிற் பெருநாவற் றண்கனி ஒழுகு பசும்பொன்னாற்செய்த பூரணகும்பம் நிறைத்து; தசும்பு - குடம்.

(கு - ரை) இது முதல் 58-ம் கண்ணிமுடியத் தலைவன் சிதம்பரத்திற் செய்த திருப்பணிகள் கூறப்படும்; இராசராச. 30-33. 38. எத்துதலைத் தருங்கடவுள்: "ஆரத் தழையராப் பூண்டம் பலத்தன லாடியன்பர்க், காரத் தழையன் பருளிநின்றோன்" (சிற். 91.) ஆனந்தக் கூத்து - பரமானந்த தாண்டவம். கண்ணும் மனமுங் களிகூரக் கும்பிட்டு: "ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள வளப்பருங் கரணங்க ணான்கும், சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமே யாக, இந்துவாழ் சடையா னாடுமா னந்த வெல்லையி றனிப்பெருங் கூத்தின், வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந் தார்" (பெரிய. தடுத்தாட். 106.) போத்து - கருடன்; 'மயிற்போத்து' என்றாற்போல. 39. குறும்பு தொலைத்தெடுத்தது; இராசராச. 33; "முன்றிற் கிடந்த தடங்கடல்போய் முன்னைக் கடல்புகப் பின்னைத் தில்லை, மன்றிற் கிடங்கண்ட கொண்டல்" (தக்க. 777) என்னுந் தாழிசையாலும், அதன் உரையாலும், "அம்பொற் கொடைச்சகர ளுயிரத்தின் மேனூற்பத், தொன்பதாம் வர்ஷத் துயர்தில்லைத் - தென்பாலிற், சென்னி குலோத்துங்கன் சித்திரகூ டத்திருமால், தன்னை யலையெறிநா டான்" (இராமானுஜ திவ்ய சரிதை) என்னுஞ் செய்யுளாலும் இச்செய்தி யறியப் படும்.

உரை. ஆங்கது.........வரங்கிடந்த: "ஆங்கதுங் காட்டிடென்று, வரங்கிடந் தான்றில்லை யம்பல முன்றிலம் மாயவனே" (சிற். 86.) நாவற் பசும்பொன்: "நாவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழை" (முருகு. 18.)

(பி - ம்) 38. 'எத்தல்தருங்', 'எத்தற்கருங்', 'எத்தைத்தருங்' 'கூத்தைக்' 'போற்றின்மேல்', 'போத்துமேல்', 'போற்றிமேல்', 'சோத்தின்மேல்' 39. 'மன்றின்முன்னிற்', 'தொகுத்தெடுத்த' 'தொகுத்தெடுத்து'. 40. 'விசும்போர்'

41. அலகை யிகந்த வசலகுல வச்ரப்
பலகை ததும்பப் பதித்து—மலர்கவிகைக்

42. காக்குங் கடலேழின் முத்தும் வரகங்கை
தூக்கு மருவியிற் சூழ்போக்கி—நோக்கம்

(ப - ரை) 41-2. எண்ணிறந்த பசும்பொன்னால் நிலஞ்செய்து மலையிடத்துள்ள குலவச்சிரப் பலகை ஆதனமாக நிறையப்பதித்து மலர்ந்த கவிகையாற் காக்கும் கடலேழின் உள்ளதாகிய முத்தைச் சிரேட்டமான கங்கையினின்றுந் தூக்கப்பட்ட அருவியினுங் காட்டிற் சிறப்பச் சூழத் தூக்கி.

(கு - ரை) முத்துமாலைக்குக் கங்கையிற் சேரும் அருவி உவமை.

(பி - ம்) 41. 'மலர் கவிகை காக்கும்' 42. நோக்கும்'

43. தொடுக்குஞ் சிரச்சேடன் சூடா மணிகொண்
டெடுக்குந் திருத்தீப மேற்றி—அடுக்கிய

44. தூய வயிரத்தால் வாவியாய்ச் சூழ்கிடந்த
பாய மரகதத்தாற் பாசடையாய்த்—தூய

45. பருமுத்தா லாலியாய்ப் பற்பரா கத்தால்
திருமிக்க செந்தா மரையாய்ப்—பெருவர்க்க

46. நீலத்தால் வண்டி னிரையா யுரையிகந்த
கோலத்தாற் கோயிற் பணிகுயிற்றிச்—சூலத்தான்

(ப - ரை) 43-6. அடுக்கிய வயிரவொளியால் வாவியாய்ச் (காவிற்) சூழக்கிடந்த மரகதத்தாலே பாசடையாய்த் தூய்தான பருமுத்தாலே இலை நடுவு சாற்காலத்து ஆலியாய்ப் பதுமராக மணியாலே அழகுமிக்க செந் தாமரையாய்ப் பெருவர்க்கமான நீலத்தாலே மலர்ந்த தாமரையை மொய்த்த வண்டு நிரையாய் உரையிகந்த கோலத்துடனே கோயிற்பணி யான பதுமபீடம் சமைத்து.

(கு - ரை) 43. நோக்கம் தொடுக்கும்-பார்ப்பவருடைய பார்வையைக் கவரும். சூடாமணி - தலையிலுள்ள மணி; தொடுக்கும் சிரச்சேடன் சூடாமணி - தொடுத்தாற்போற் பல சிரங்களையுடைய ஆதிசேடனது சூடா மணிகளை. திருத்தீபம் - அழகிய சேட வடிவமான தீபம். 44. பாய - பரவிய. பாசடை - பசிய இலை. 45. பற்பராகம் - பதுமராகம்; பற்ப நாபன் என்பது போல, (திருவாய்மொழி, 2. 7 : 11.) 46. கோலத்தால்: ஆல், ஒடு உருபின் பொருளில் வந்தது. கண்ணிகள் 44-46 கோயிலைத் தடாகமாக உவமித்தது.

(உரை) பதுமபீடம் சமைத்து : ஸ்ரீ பீடங் கண்டதைக் கூறியது; தக்க. 773.

(பி - ம்) 43. 'சூளாமணி' 44. 'பாசடையாய்ப் போய' 45. 'பத்மராகத்தால்' 'பெருவற்க' 46. 'உரையிறந்த'

47. ஆடுந் திருப்பெரும்பே ரம்பலமுங் கோபுர
மாடம் பரந்தோங்கு மாளிகையும்—கூடிப்

48. பொலங்கோட்டு மாமேருப் பூதரமும் போய
வலங்கோட் டிகிரியு மானத்—தலங்கொள்

(ப - ரை) 47-8. சூலத்தானுடும் திருப்பெரும்பேரம்பலமும் கோபுர மாடம் பரந்தோங்கு மாளிகையும் என்போலு மென்னிற் பொற்கோட்டினையுடைய மகாமேருவும் இடவிதாய்ச் சூழ்ந்த சக்கரவாளகிரியுங் கூடியது மான ; வினையில் பொருட்கண் வினைசெயலுவமம்.

(கு - ரை) பெரும்பேரம்பலமென்றது சிற்றம்பலத்தை ; ஐவகைச் சபைகளிலொன்ருகிய பேரம்பலமென்பதுமாம். சிற்றம்பலத்தைச் சூழ்ந்த மதிலும் பத்தியும் குலோத்துங்கசோழன் திருமாளிகை என்றும், அதற்கு வெளியேயுள்ள மதிலும் பத்தியும் விக்கிரமசோழன் திருமாளிகை என்றும் பெயர் பெறும்; சாஸனங்கள், 282, 284, 287 of 1913. கோபுரமாடம்: "கூடமெடுத்த குளத்தொடு கோபுர, மாட மெடுத்த பிரான்மகன் வாழியே" (தக்க. 808.) 48. கோடு - சிகரம். பூதரம் - மலை. போய - மிக்க. வலங்கோள் - வலங்கொள்ளுதலையுடைய. தலம் கோள் - இடங்கொண்ட.

(உரை) வினையில்......உவமம்: "வந்த என்றதனுல் இல்லாத வினை வருவித்தும் சொல்லப்படும்; அவை 'விசும்புரிவது போல்', 'மணி வாழ்பாவை நடைகற்றன்ன', 'வான்ருேய் வன்னகுடிமையும்', இவை உவமையும் பொருளுமாகிய வினை வந்தில வாகலின் அதன் வகை யெனப்பட்டன" (தொல். உவம. 1) என்னும் பேராசிரியர் உரையாலும் இது விளங்கும்.

(பி - ம்) 47. 'கோபுரமும்' 48. 'போன', 'பொன்போல்'

49. நிலையேழு கோபுரங்க ணேரே நெருங்க
மலையேழு மென்ன வகுத்துத்—தலையில்

(ப - ரை) தலமிடமாக நிற்கும் (48) நிலைமையையுடைய ஏழு கோபுரங்கள் ஒன்ருேடொன்று அடுக்க நின்றது என்போலுமென்னில், சத்தகுல பர்வதங்களும் தம்மிற் செறிந்த வென வகுத்து.

(கு - ரை) நிலை யேழு கோபுரங்கள் - நிலையை யுடைய ஏழு கோபுரங்கள் ; "கோயின்மு னேழ்நிலை கொண்டதொர் கோபுர, வாயில் வகுத்த பிரான்மகன் வாழியே" (தக்க. 809) ; "எண்ணிறைந்த தில்லை யெழுகோ புரந்திகழக், கண்ணிறைந்து நின்றருளுங் கற்பகமே" (சிற் காப்பு.) இதனுல் சிதம்பரத்தில் ஏழு கோபுரங்கள் இருந்தன வென்பதும். அவை பிற்காலத்து மாற்றப்பட்டிருக்க வேண்டுமென்பதும் அறியப்படுகின்றன.

(பி - ம்) 'கோபுரமுங் கண்மே னெருங்கு', 'கோபுரங்கண் மேன் மேனெருங்க', 'கோபுரமும் விண்மே னெருங்கு'

50. மகரங்கொள் கோபுரங்கண் மாக விமானச்
சிகரங்க ளாகித் திகழ—நிகரில்

(ப - ரை) தலையிலே மகரங் கொள்ளப்பட்ட கோபுரம் வானிடத்து உலாவும் விமான சிகரங்களாக விளங்க.

38-50. இக்கண்ணிகளில் திருச்சிற்றம்பலத்தில் செய்த திருப்பணிகள் கூறப்பட்டன.

(பி - ம்) 'கோபுரம் வான விமானச்', 'கோபுரமும் வானவிமானச்'

51. எரிபொற் படர்பாறை யென்னலா யெங்கும்
விரிபொற் றிருமுற்ற மின்னச்—சொரிபொற்

(ப - ரை) சுடர் செம்பொன்னாற் செய்த படர்பாறை யென்று கூறும்படி விரிந்த பொலிவுடைத்தாய்த் திருமுற்றம் விளங்க.

(கு - ரை) திருமுற்றம் - அம்பிகை கோயிலின் முற்றம்; சிற்சபையின் முன் உள்ளமுற்றம் என்றலும் ஒன்றும்.

52. கடாரப் பனிநீர் கவினிக் கனபொற்
றடாகங்க ளாகித் ததும்ப—விடாதுநின்

(ப - ரை) பொற்கடாரங்களில் சொரியப்பட்ட (51) பனிநீர் மேருவில் பொற்றடாகங்களாகி நிறைவெய்த.

(கு - ரை) கடாரம் - ஒருவகைப் பெரிய பாத்திரம்; "காக்குங் கடலேழு மாடுங் கடாரமோ" (150.)

53. றற்பக லாக வனந்த சதகோடி
கற்பக சாதி கதிர்கதுவப்—பொற்பூண்

(ப - ரை) இரவு பகலாம்படியாக எண்ணிறந்த கற்பக வருக்கத்தின் கிரணம் முறுக.

(கு - ரை) கற்பகம்: கோயில் வாகன விசேடம்; "செம்பொற் கற்பகத் தொடுபரிச் சின்னமும், அளவிலாதன வொளிபெற வமைத்து" (விக்கிரம சோழன் மெய்க்கீர்த்தி.)

(பி - ம்) 'சாதிக் கதிர்', 'சோதி கதிர்த்து வரப்', 'கதிர் தோன்ற'

54. வரமகளிர் தத்தம் பணிமுறைக்கு வந்த
சுரமகளி ராகித் துறும—ஒருதான்

(ப - ரை) உத்தமமான மகளிர் பொற்பூணாலே (53) சுரர்மகளிர் தத்தம் பணிமுறைக்கு வந்ததுபோல நெருங்க.

(பி - ம்) 'பரமகளிர்', 'வந்து' 'மகளிராகத்' 'துவள,' துவன்ற'

55. பிறக்கு மிமயப் பெருங்கடவுட் குன்றம்
மறக்கும் படிச்செல்வ மல்கச்—சிறக்கும்

(ப - ரை) ஒப்பில்லாத தான் (54) பிறத்தற்கிடமான பெரிய இமவானென்னுங் கடவுட்குன்றந்தன்னை மறக்கும்படி பெருஞ்செல்வம் நிறைய.

(பி - ம்) 'கடவுள் வெற்பை'

56. இருக்காதி யெம்மறையு மெவ்வுலகு மீன்றாள்
திருக்காமக் கோட்டந் திகழ்வித்—தருக்கர்

(ப - ரை) திகிரியும்மான (48) மலையேழுமென்னச் (49) சிகரங்களாகித் திகழத் (50) திருமுற்றம் மின்னக் (51) தடாகங்களாகித் ததும்பக் (52) கற்பகசாதி கதிர்கதுவச் (53) சுரமகளிராகித் துறும (54) மறக்கும்படி செல்வம் மல்கத் (55) திருக்காமக் கோட்டந் திகழ்வித்து (56) எனக் கூட்டுக;

கோயிற்பணி குயிற்றி (46) என்றும், திருக்காமக் கோட்டந் திகழ்வித்து (56) என்றும் தில்லைமன்றமும் திருக்காமக்கோட்டமும் வருணனை செய்தவாறு காண்க. திருக்காமக்கோட்டம் - தில்லைச்சிவகாம வல்லி கோயில்; இராசராச. 32.

(கு - ரை) 55-56. சிறக்கும் என்ற அடையால் சிறப்பில்லாத அதர்வமும் கொள்ளப்படும்; தொல். புறத். 20, ந.; மதுரைக். 468, ந. அடிக்; சிறக்கும் எம்மறையும் என்று கூட்டலும் ஒன்றும். எவ்வுலகு மீன்றாள்: "அகிலலோக மாதாவே" (தக்க. 103.)

(பி - ம்) 'திகழ்த்தி யருக்கன்', 'திகழ்த்தி வருக்கப்'

57. புனையா மணியாலும் பொன்னாலு மின்ன
மனையாலோ ரோர்தேர் வகுத்து—முனைவன்

58. திருவீதி யீரிரண்டுந் தேவர்கோன் மூதூர்ப்
பெருவீதி நாணப் பிறக்கி—வருநாளிற்

(ப - ரை) 57-8. அருக்கர் புனையாம் மணி - துவாதசாதித்தரையும் ஒப்பாம் என்ன மணியாலும்.

வருநாளில் - திருமகுடஞ்சூட்டியபின் (32) பைந்நாக மெட்டும் பரந்தீர்த்துப் (34) போதத்திமிரப்பொறை நீக்கிப் (35) பொற்றொடியுந் தானும் நவநிதி தூய்க் (37) கூத்துக் களிகூரக் கும்பிட்டுக் (38) கோயிற் பணிகுயிற்றித் (46) திருக்காமக்கோட்டந் திகழ்வித்து (56) மனையாலோரோர் தேர் வகுத்துப் (57) பெருவீதி நாணப்பிறக்கி (58) வருகிறநாளில்.

(கு - ரை) 57. மணிக்குச் சூரியனுவமை: "வாளிரவி-பொன்னகலம், தங்கு கவுத்துவம்போ லுந்தித் தடமலர்போல், அங்க ணுலகளந் தாற் காம்" (தண்டி. 40 மேற்.) மனையால் - வீடுதோறும்; ஆல் தோறும் என்னும் பொருளில் வந்தது: 'ஊரானோர் தேவகுலம்' என்றாற்போல. தேர் - நிலைத்தேர்; நாகூர்ப். திருவிழாப். 26. மனையால் ஓர் ஓர் தேர் பொன்னாலும் மணியாலும் வகுத்து; அதாவது ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு தேர் போலப் பொன்னாலும் மணியாலும் வகுத்து என்க. இதனால், தில்லை நகரில் இவன் முன்னோனான சோழன் செங்கணானைப் போல இக் குலோத்துங்கனும் வீதிகளில் பல தேர்போன்ற அழகிய மாளிகைகளைக் கட்டி அவற்றை வழங்கினான் என்பது அறியக்கிடக்கும். இதற்கு விக்கிரமசோழன் திருவீதி யென்பது பண்டைப் பெயர்; சாஸனம் 312 of 1913. இது விக்கிரமசோழன் அமைத்ததை அவன் மைந்தனான இக் குலோத்துங்கன் புதுப்பித்தான் போலும். முனைவன் - கடவுள். 58. பிறக்கி - விளங்கச்செய்து.

(பி - ம்) 57. 'புனைவா மணியாலும்' 'பொன்னானுமென்ன' மனையாலொருதேர்' 58. 'வீதியோரிரண்டும்' 'பெருவீதி காணப்' 'நாணப் பெருக்கி'

59. பொங்கார் கலிசூழ் புவனம் பதினாலும்
கங்கா புரிபுகுந்து கண்டுவப்பத்—தங்கள்

60. புவனி பெறவந்த பூபாலர்க் கெல்லாம்
பவனி யெழுச்சி பணித்துக்—கவினும்

61. மடமயி லொக்க மகுடங் கவித்தாள்
உடனுறை பள்ளி யுணர்ந்து—தடமுகில்

(ப - ரை) 59-61. கங்கைகொண்ட சோழபுரம் படைவீடு செய்து புகுந்து பவனியெழுச்சி பணித்து உடனுறை பள்ளியுணர்ந்து. கவினு மடமயில் - திருவின் செல்வி.

(கு - ரை) 59. பொங்கு ஆர்கலி - அலைகள் பொங்குகின்ற கடல். புவனம் பதினாலும் புகுந்து என்றது இவனைத் திருமாலாக நினைந்து கூறியது; 90. 60. புவனி - தாங்கள் இழந்த நாட்டை. பவனியெழுச்சி - உலாவிற்கு எழுதலை. பணித்து - கட்டளையிட்டு. 61. ஒக்க மகுடங் கவித்தாள்: புவன முழுதுடையாள் என்னும் தியாகவல்லி; 36. தடமுகில் - பெரியமேகம்.

(உரை) படைவீடு - இராசதானி. படைவீடு செய்து - படைகளைப் போரினின்று விடுவித்து என்றலும் ஆம். திருவின்செல்வி: 32, 36, குறிப்.

62. அஞ்சன சைலத் தபிடேகஞ் செய்வதென
மஞ்சன மாடி வழிமுதற்—செஞ்சடை

63. வானவன் பொற்றாள் வணங்கி மறையவர்க்குத்
தான மனைத்துந் தகைபெறுத்தி—வானிற்

64. கிளைக்குஞ் சுடரிந்த்ர நீலக் கிரியை
வளைக்கு மிளநிலா மானத்—திளைக்கும்

65. உருவுடை யாடை தவிர்த்தொரு வெள்ளைத்
திருவுடை யாடை திகழ்த்தி—ஒருபுடைப்

66. பச்சை யுடைவாள் விசித்த தொருபசும்பொற்
கச்சை நவரத்னக் கட்டெறிப்ப—வச்ர

67. வெருவுதர வெல்லா விரவிகளும் வீழத்
திருவுதர பந்தனஞ் சேர்த்தித்—திருமார்பிற்

68. கார்க்கடன் மீதே கதிர்முத்தத் தாமங்கள்
பாற்கடல் போர்த்த தெனப்பரப்பிப்—பாற்கடல்

69. வந்த வனச மகளேபோன் மற்றது
தந்த கடவுண் மணிதயங்கப்—பந்தச்

12500

(ப - ரை) 64. ஒளிபொருந்திக் கிளைக்குமிந்திர நீலக்கிரி. இல்பொருளுவமம்.

(கு - ரை) 62. அஞ்சன சைலத்து - கரிய மலையில். மஞ்சனமாடி - நீராடி. குலோத்துங்கன் கரியநிறமுடையவனாதலின் அஞ்சன சைலத்தை உவமை கூறினார்; 64, 68, 193; தக்க. 777, உரை. 62-3. வழிமுதற் செஞ்சடை வானவன் - தம் குலத்திற்கு வழிபடு கடவுளாகிய சிவந்த சடையுடைய சிவபெருமான். வானவன் பொற்றாள் வணங்கி: விக்கிரம.

42-3 ; இராசராச. 47. தகை பெறுத்தி - பொருத்தமுறச் செய்து. தானம் புரிதல் : " மிக்குயர்ந்த, தானத்துறை முடித்து " (விக்கிரம. 43-4.)

64. இந்திரநீலகிரி குலோத்துங்கனுக்கு உவமை ; 62, குறிப் ; கண்ணி 68.இல், கார்க்கடலுக்கு ஒப்பிட்டதும் காண்க. இள நிலா ஆடைக்கு : " திங்கள் சொரிநிலவு......காந்தர் முயக்கொழிந்தார் கைவறிதே நீட்டுவரால், ஏந்திழையார் பூந்துகிலா மென்று " (தண்டி. 54, மேற்.) மான - ஒப்ப ; மான : ஓர் உவமைச்சொல். திளைக்கும் - இடைவிடாது சூழும்.

65. உரு - நிறம். உடையாகிய ஆடையை. தவிர்த்து - களைந்து. திகழ்த்தி - விளங்க உடுத்தி. மானத் (64) திகழ்த்தி என இயைக்க. ஒரு புடை - ஒரு பக்கத்தில்.

66. பச்சை உடைவாள் - தோலுறையோடு கூடிய உடையிலணியும் வாளை. விசித்தது - கட்டியது. நவரத்னக்கட்டு - ஒன்பதுவகை மணிகளின் மிகுதி ; இவை கச்சையில் பதிக்கப்பட்டுள்ளவை. எறிப்ப - ஒளியை வீச.

67-8. வெருவு தர - அச்சந்தரும்படி. எல்லா இரவிகளும் வீழ- பன்னிரண்டு சூரியர்களும் தோற்கும்படி. வச்சிரத் திருவுதரபந்தனமென இயைக்க.

மார்பிற்குக் கரியகடலும், அதன்மீது அணியப்பட்ட முத்துமாலைகட்குப் பாற்கடலும் உவமை.

69. வனசமகள் - தாமரைப்பூவிலுள்ள திருமகள். அது - அப்பாற் கடல். கடவுள் மணி - தெய்வமணியாகிய கௌஸ்துபம். கார்க்கடல் வந்த வசனமகள் என்ற பாடத்திற்குக் கரிய உப்புக்கடலிற்றோன்றிய திருமகள் எனப் பொருள் கொள்க ; " அமிர்தம் வந்தது பாற்கடலிலல்ல ; அமிர்து கடைந்தது லவண சமுத்திரத்தெனவுணர்க " (தக்க. 284, உரை.) பந்தம்-கால் மூட்டு; " கொடிப் பவள பந்தத்தின் முத்துப் பொதியுச்சி முச்சியாள் " (விக்கிரம. 141.)

(பி - ம்) 62. 'அஞ்சனக்குன்றத்' 63. 'வானவர்ப்' 'மறையவர்கைத்' 64. 'வானத் திளைக்கும்' 65, 'தரித்தொரு' 'திகழ', 'திருத்தி' 66. 'வச்ச' 'அச்சம்' 67. 'இரவுதர' 'எல்லார் விழிகளும் வீழத்', 'எல்லாவிழிகளும் வீழத்' 'எல்லா விரவிகளும் போலத்', 'எல்லா விரவிகளும் போய்வீழ்', 'வெருவுதரவொல்லாரிரவிகளும்' 'திருவுதரபந்தனமுஞ்' 68. 'சேர்த்ததெனப்', 'கோத்ததெனப்', 'போர்ததெனப்' 'பரப்பப் பாற்கடல்', 'பரப்பக்

கார்க்கயல் ', ' பரப்பக் கார்க்கடல் ', ' பரப்பக் கார்க்கடலில் ' 69. 'வனச பதிபோல ', ' வனசமதிபோல '

70. சுரகனகத் தோள்வலேயச் சூட்டுக் கவித்த
உரக பணாமணி யொப்ப—விரவி

(ப - ரை) இது சினையோடு முதலே யுவமித்தது.

(கு - ரை) சுரகனகம் : பொன் வகையுள் சிறந்தது. இது மென்மையும் சிவப்பும் மஞ்சளுங்கலந்த ஒளியுடன் விளங்கும். இதனைத் தேவகனகம் என்றும் கூறுவதுண்டு. இவ்விஷயம் ராஜ நிகண்டுவில் உள்ளதாகச் சப்தகல்பத்ருமம் என்னும் வடமொழி அகராதி கூறும். சூட்டு - உச்சி அல்லது முகப்பு. கவித்த உரக பணாமணி - கவித்ததுபோலுள்ள பாம்பின் படத்தின்மீது விளங்கும் மணியை. அதாவது தோள் வளை பாம்புக்கும், அதன் முகப்பு அப் பாம்பின் தலை உச்சியில் உள்ள மணிக்கும் உவமை. இது பாப்புச் சுருள் என்றும், பாப்புத் தொடி என்றும் பெயர் பெறும்; 281, இராசராச. 61, 95, 219.

(உரை) சினை...உவமித்தது : "முதலுஞ் சினையுமென் றாயிரு பொருட்கும் நுதலிய மரபி னுரியவை யுரிய" (தொல். உவம. 6.)

(பி - ம்) 'பணாமணியு மொப்ப'

71. மகரக் குழைதோண்மேல் வந்தசைவ மேருச்
சிகரச் சுடர்போற் றிகழ—நிகரில்

(ப - ரை) இது சினை யிரண்டடுத்து முதலிரண்டோடு உவமித்தது.

(கு - ரை) மகரக்குழை - சுறாமீன் வடிவமாகச் செய்யப்பட்ட குழைகள். அசைவ - அசைவன. சுடர்போல் - சூரிய சந்திரர்களான இருசுடர்கள் போல.

(பி - ம்) 'குழைதிருத்தோள் வந்தசைதல் ' ' திருத்தோண் மேல்வந் தசையச் சிகர ' ' மேல்வந் ததன்மேல் '

72. முடியின் மணிவெயிலும் முத்தக் குடையில்
வடியு நிலவு மலையப்—படியில்

(ப - ரை) வடிதல் - அதனிடத்து நின்றும் போதுதல். படியில் - ஒப்பில்லாத.

(கு - ரை) முடியின் மணி - கிரீடத்திலுள்ள ரத்தினங்களின். முத்தக்குடை - முத்து மாலையை யணிந்த வெண்கொற்றக்குடை. மலைய -

தம்மிற் போர் செய்ய; வெயிலும் நிலவும் மாறுபட்டு ஒன்றோடொன்று மலைதல் போன்றது. படி; 'ப்ரதி' என்னும் வடமொழித்திரிவு; "படிச்சந்தமென்பது பிரதிச்சந்தமென்னும் வடமொழிச்சிதைவு" (சிறு. 78, பேர்.); 'படியோரென்றது பிரதியோரென்னும் வடமொழித்திரிவு' (அகநா. 22 : 5, உரை); படியில் - ஒப்பில்லாத; இராசராச. 154.

(பி - ம்) 'நிலவை மலைய', 'நிலவை மலைப்ப'

73. வயங்கு கடக மகுடாதி மின்னத்
தயங்கு பெரும்போதி சாத்தி—முயங்கிய

(ப - ரை) போதி - அரசந்தளிர்.

(கு - ரை) வயங்குதல் - விளங்குதல். கடகம் மகுடாதி - முன் கையிலணியும் கடகத்திலும் கிரீடம் முதலியவற்றிலும். போதி - அரசிலைகள் போல அமைந்த பொன்னாலாகிய மாலை; பெருங். 2. 7 : 23.

(பி - ம்) 'போது சாத்தி வயங்கிய'

74. செவ்வி நுதலிற் றிருநீற்றுப் புண்டரம்
வவ்வி மகளிர் மனங்கவற்ற—நொவ்விய

(ப - ரை) பொன்னுருவம் முயங்கிய செவ்வி நுதலிற் றிருநீற்றுத் திரிபுண்டரம் வவ்வி மகளிர் மனங்கவற்ற. நொவ்விய - நொய்ய.

(கு - ரை) செவ்வி - அழகு. திருநீற்றுப் புண்டரம் - விபூதியால் மூன்று வரிகளாக நெற்றியின் நெடுக இடும் திரிபுண்டரம். வவ்வி - மகளிர் மனத்தைக் கவர்ந்து. கவற்ற - கவலையுறும்படி செய்ய. மயக்கத்தை நீக்குந்திருநீறு மகளிருக்கு மயக்கத்தை அளித்தது; "இனத்தியல் பாமறி வென்ப துண்மையே, மனத்துயர் செயுமயன் மாற்று நீறுதா, னனிச்சமெல் லாடியினர் நுதல டுத்தலும், பனித்துடல் வெதும்புமால் படுத்த லாலென்பார்" (பிரபு. மாயைபூசை. 34.) நொவ்விய - நுட்பமான.

(பி - ம்) 'நுதற்றிரு நீற்று த்ரிபுண்ட்ரம்'

75. நாவியு மான்மதச் சாந்து நறையகில்
ஆவியு மாகண் டமுமளப்பத்—தீவிய

(ப - ரை) ஆகண்டமும் - அகண்டமளவும்.

(கு - ரை) நாவி - புழுகு; 'கண்டத்தி னாவியார் - கண்டத்திலே புழுகையுடையார்" (சீவக. 1434. ந.) மான்மதச்சாந்து - கஸ்தூரிக்

குழம்பு ; "மான்மதச் சாந்தொடு" (சிலப். 2 : 68.) நறை அகில் ஆவி - தேனைத் தன்னிடத்தேயுடைய அகிலின் புகை ; "தேக்கண்ணின்னகில்", "தேக்கணின்னகிலின்றாவி" (சீவக. 534, 2495.) ஆகண்டமும் - கழுத்து வரையிலும். தீவிய - இனிய ; கலி. 19 : 1.

(பி - ம்) 'மான்மதமுஞ் சாந்து' 'ஆகண்டமும் வளைப்ப'

76. தோண்மாலை வாசக் கழுநீர் சுழல்சோதிக்
கோண்மாலை கூசக் குளிர்கொடுப்ப—நாண்மாலை

(ப - ரை) கோண்மாலை கூசுதல் பெரும்போதியிற் பன்மணியும், கழுநீர் மாலையும் விளங்குமாறு பருதியுடன் நின்ற கோள்விளங்காமையின்.

(கு -ரை) தோண்மாலை - தோளில் அணியும் பெரியமாலை ; தோண் மாலை என்பது தோமாலை எனச் சிதைந்தும் வழங்கும் ; தோமாலை சேவை என்ற தெரிசன விசேஷம் திருமலை திருப்பதியில் நடைபெறுவது அறிக. கழுநீர் - கழுநீர்மாலை ; "கண்ணும் மனமுங் கழுநீர்க் குலமுழுது, நண்ணுந் தொடையன் மேனாட்செய்ய" (விக்கிரம. 129.) சுழல் சோதிக்கோண்மாலை- ஒளியை யுடைய சுழல்கின்ற கிரகங்களின் வரிசை. நாண்மாலை - அன்று அலர்ந்த பூவாலாகிய மாலையை அணிந்த.

(பி - ம்) 'குழல் சேர்த்தி'

77. வேந்தர் தொழுதிறைஞ்ச வேதிய ரேத்தெடுப்பப்
போந்து புறநின்ற போர்க்களிற்றை—வேந்தரில்

78. மாக்காதல் யாதவனும் மாறழிந்த மீனவனும்
வீக்காம லெங்குள்ள மெய்ம்முகிற்கும்-கோக்கடவுட்

(ப - ரை) 77-8. கோயிற்புறத்து நின்ற போர்க்களிற்றை (77), வேந்தரில்வைத்து இலக்குமி காதலிக்கப்பட்ட யாதவகுலத்திலுள்ளோனும், மாறுபாடழிந்த மீனவனுங் கட்டாமல் எத்தீபத்தினும் பொழியுந் தப்பாத முகிற்கும். மாக்காதல் யாதவன் - ஸ்ரீகிருஷ்ணன்.

(கு - ரை) 77. ஏத்தெடுத்தல் - புகழ்களை யெடுத்துக் கூறுதல். போந்து ; இது குலோத்துங்கன் தொழில். புறம் நின்ற போர்களிறு - அரண்மனையின் வெளியே நின்ற போரைச்செய்யும் பட்டத்துயானை ; "கோயிற் புறநின்று, காலத் ததிருங் கடாக்களிறு" (விக்கிரம. 52) ; "புறங்கடைய, கந்துகொல் பூட்கைக் களிறு" (நீதிநெறி. 26.) 78. மீன வன் - பாண்டியன். வீக்குதல் - கட்டுதல். மெய்ம்முகில் - தான் பெய் யும் பருவம் பொய்யாமையை யுடைய மேகம்.

(உரை) இது காண்டவ வனம் எரித்த காலை கண்ணன் அருச்சுனனோடு கூட இருந்து மேகங்களைக் கட்டியதைக் குறிப்பிட்டதாகக் கொள்ளல் பொருந்தும். பாண்டியன் மேகத்தை விலங்கிட்ட செய்தி, " இடியுடைப் பெருமழை யெய்தா தேகப், பிழையா விளையுட் பெருவளஞ் சுரப்ப, மழை பிணித்தாண்ட மன்னவன் வாழ்கெனத், தீதுதீர் சிறப்பிற் றென்னனை வாழ்த்தி " (சிலப். 11 : 27-30) என்னும் அடிகளாலும், திருவிளையாடற் புராணம், இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம் முதலியவற்றாலும் விளங்கும்.

(பி - ம்) 77. 'முடி வணங்க' 78. 'மாளுவரும்' 'யாதவரும்' 'மீனவரும்' உரை. 'குலத்திலுள்ளோரும்' 'மீனவரும்'

79. கெட்டாத வச்சிரமு மெல்லா வுருமேறும்
வெட்டாம லெங்குள்ள வெற்பினுக்கும்--முட்டா

(ப - ரை) (78) கோக்கடவுளான இந்திரனுக்கு எட்டுதற்கரிய (சக்கிரதனுவினுடைய வமைதியாற் செய்த) வச்சிராயுதமும் எல்லாமுகிலி னுடைய உருமேறும் வெட்டாதபடி எவ்விடத்தினுமுள்ள வெற்பினுக்கும்.

(கு - ரை) இந்திரன் வச்சிரத்தால் மலைகளின் சிறகை வெட்டிய செய்தி, " மலைச்சிற கரிந்த வச்சிர வேந்தற்கு " (சிலப். 14 : 94) என்பத னால் அறியப்படும். உருமேறு - சிறந்த இடி. இடி மலைகளை வெட்டுதல் : " மாந்தின் னூஉ வரையுதிர்க்கும், நரையுருமி னேறனையை " (மதுரைக். 62-3.) வெற்பு - மலை. முட்டா - நிறைவாக.

(பி - ம்) 78-9. 'கோக்கடவு ளெட்டாத'

80. முதுவாய் வடவையு முந்நான்கு கோளும்
கதுவாம லெல்லாக் கடற்கும்—பொதுவாய்

(ப - ரை) முதிய வாயையுடைய வடவையும் முந்நான்கு கோளான துவாதசாதித்தரும் கொள்ளாமல் முட்டாம்படி எல்லாக் கடல் களுக்கும்.

(கு - ரை) வடவை - பெண் குதிரையின் வடிவமான நெருப்பு ; " விரிமு கக்கட லேழ்பெரு வெள்ளமும், பரிமுகத் தொரு செந்தீப் பருகவே " (தக்க. 587) ; 'வடவாமுகாக்கினி யென்பது பெட்டைக் குதிரையின் முகம் போலும் ஓரக்னி குண்டத்திலிருத்தலாற் பெற்றபெயர்' (தக்க. 475, உரை) ; 'உலகம் கடல் கொண்டு கிடந்த காலத்து அக் கடல் நீரெல்லாம் வற்ற எறித்தற்குத் தோன்றும் ஆதித்தர் பலவான

மரியத்தோடே கூடி அந்நீர் வற்றும்படி திரிதரு வடவைத்தீ', 'ஞாயிறு பட்ட அகன்று வரு கூட்டத்து மடங்கற்றீ என மாறிக்கூட்டி அவ்வெள்ளத்தை மாய்த்தற்கு ஆதித்தர் பன்னிருவரும் தோற்றின பெரிய கூட்டத்தையுடைய வடவைத் தீயென வுரைக்க' (பதிற். 62, 72, உரை.) மூந்நான்கு கோள் - பன்னிரண்டு சூரியர்.

(பி - ம்) 'கதுவாய வெல்லாக்'

81. அபயங் கொடுக்கு மயிரா பதத்தை
உபய வயக்கோட் டுருமை—விபவ

(ப - ரை) தான் பொதுவாய் நின்று (80) அபயப்பிரதானம் பண்ணும் அயிராபதத்தை; அயிராபதமாயிருக்கச் செய்தே இரண்டு வெற்றிக் கோட்டையுடைய உருமேற்றை.

(கு - ரை) அயிராபதம் : ஐராவதமென்பது தமிழில் அயிராபதம் என்றும் வழங்கும்; 'வரகாத்திரமென்பதனைத் தலையென்றும், அவரகாத்திர மென்பதனைக் காலென்றும் வடநூலார் கூறுவராதலின் தேவர் அதனைச் சிதைத்து அபராகாத்திரமென்றார்; ஐராவதம் அயிராபதமென்றாற்போல' (சீவக. 806, ந.); 'பாழி யயிரா பதப்பகடு', 'பரிக்கு மயிரா பதமே' (விக்கிரம. 272, 289.) வய - வன்மை: தொல். உரி. 68. இந்திரனுடைய ஐராவதத்திற்கு நான்கு கோடு உண்டாகலின் இதனை இரண்டு கோடுடையது என்றார்; "ஈரிரு மருப்புடைய வாரண முகைத்தே யிந்திர னெதிர்ந்தவரை வென்று வருமே" (கலிங்கத். 245.) விபவம் - செல்வம்.

(உரை) இருக்கச் செய்தே: 'அசுரரும் பிரம புத்திரராயிருக்கச் செய்தே தேவர்களே மக்களாகியார் எனச்சொல்லியது வேதஞ்சொன்ன படி அசுரர் செய்திலர் என்பதனால்' (தக்க. 260, உரை); 'செல்வத்துக்கு அவன் மகனாயிருக்கச் செய்தே, செல்வம் வேண்டி' (சிலப். 20 : 58-9, அரும்பத.); இச்சொல் உலக வழக்கில் 'இருக்கச்சே' எனவழங்கும்.

(பி - ம்) 'உரிமை' 'ப்ரபையின்'

82. நிருத்தந் தருமோர் நிதிப்பொருப்பைக் கண்ணுற்
றெருத்தந் திருக்கவின வேறித்—திருத்தக்க

(ப - ரை) பகைவர் விபவந்தருதற்குக் களித்தாடும் ஒப்பற்ற மேருவாகிய பொருப்பைக் கண்ணுற்று: இஃது இல்பொருள் உவமை. எருத்தத்திலே அழகு பெறப்போந்தேறி யெனக்கூட்டுக.

(கு - ரை) நிருத்தம் - கூத்து. எருத்தம் - புறக்கழுத்து; "யானை யெருத்தம் பொலிய" (நாலடி. 3.)

(உரை) மலைக்கு ஆடும் தொழில் கூறப்பட்டமையின் இல்பொருளுவமை.

(பி - ம்) 'விருத்தர் தருமொரு மேருப்', 'பொருத்தந் தருமொரு மேருப்' 'திருத்தகு'

83. பள்ளித் திருத்தொங்கற் சோலை பகல்விலக்க
வெள்ளிக் கவிகை மிசையோங்க—ஒள்ளிய

(ப - ரை) பள்ளித்திருத்தொங்கற்சோலை - சேருடி வகை.

(கு - ரை) பள்ளித்திருத்தொங்கற்சோலை: "கோவைத் திருப்பள்ளித் தொங்கற் குழாங்கிளிக்கும், பூவைக்கும் நல்ல பொழிலென்னும்" (132); "கொடியும் பதாகையுங் கொற்றக் குடையும், வடிவுடைய தொங்கலுஞ் சூழ" (ஆதியுலா, 57); "தழைகளுந் தொங்கலுந் ததும்பி யெங்கும்" (பெரியாழ். 3. 4 : 1.) வெள்ளிக் கவிகை - வெண்கொற்றக்குடை. மிசை ஓங்க - யானையின் மேலே விளங்க; "மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத், தலைமிசைக் கொண்ட குடையர் (நாலடி. 21.) சேருடி: "பொன்னெழுத் தெழுதுசே ருடி பொற்புற" (திருக்காளத்திப். 7. 66.); சேருடி : ஒருவகை விருது; 132, குறிப்.

(பி - ம்) 'பள்ளிப் பலதொங்கற்'

84. ஒற்றை வலம்புரி யூத வதன்பின்பு
மற்றை யலகில் வளைகலிப்பக்—கற்றைக்

(ப - ரை) கற்றை - திறள்.

(கு - ரை) ஒற்றை வலம்புரி - சோழனுக்குரிய ஒன்றாகிய வலம்புரிச்சங்கம். வலம்புரி முன் ஊதப்படுதலும் மற்றச் சங்கங்கள் அதன் பின்னே ஊதப்படுதலும்மரபு; "ஒற்றை, வலம்புரி யூத வளைக்குல மார்ப்ப" (விக்கிரம. 65-6); "ஒற்றையோ டிரட்டை வலம்புரி மிழற்ற", "முன்னொற்றை யிருசங்க முடனூத", "மீதூது வளைக்குலமும் வலம்புரியும் மிகமுழங்க" (வி. பா. இந்திரப் பிரத்தச். 6, நிரைமீட்சிச். 5, கிருட்டிணன் தூது. 10.) அலகில் - கணக்கில்லாத. கலிப்ப - ஒலிக்க.

(பி - ம்) 'வதன் பின்னர்' 'மற்றையுலகில்'

85. கவரி யிரட்டக் கடவுண் முரசார்த்
துவரி யுவாவாடி யொப்ப—அவிர்வாளும்

(ப - ரை) உவரி உவாவாடி : உவாவில் உவரி ஆர்ப்பது திங்கட்கு அடை.

(கு - ரை) இரட்ட - மாறியசைய. கடவுள் முரசு. தெய்வம் உறையும் முரசு; பதிற். 30, 34, உரை. உவரி - கடல். உவா ஆடியொப்ப - பௌர்ணமியில் ஆடினுலொப்ப.

(பி - ம்) 'கவின் முரசார்ப்ப' 'யுவாவாடலொப்ப'

86. சங்குந் திகிரியுஞ் சார்ங்கமுந் தண்டமும்
எங்குஞ் சுடர்விட் டிருள்களையக்—கொங்கத்து

(கு - ரை) வாள் முதலியன பாட்டுடைத் தலைவனுக்கு உரிய ஐம் படைகள்: இங்ஙனங் கூறியது இவனைத் திருமாலாக நினைத்து; 'திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்'' (திருவாய். 4. 4:8) சார்ங்கம். திருமாலின் வில்லுக்குப் பெயர். இருள் களைய - இருளைப் போக்க. கொங்கத்து - மலைநாட்டிலுள்ள.

(பி - ம்.) 'விட்டிடர்'

87. விற்கொடியு மீனக் கொடியுங் கொடுவரிப்
பொற்கொடி யொன்றின் புடைபோதத்—தெற்கின்

(ப - ரை) விற்கொடியும் மீனக்கொடியுந் தனது கொடியாகிய புலிக் கொடியுடன் நிலைபெற.

(கு - ரை) விற்கொடி - சேரர்க்குரியது. மீனக்கொடி-பாண்டியர்க் குரியது. கொடுவரிப் பொற்கொடி - வளைந்த வரிகளையுடைய அழகிய புலிக்கொடி; சோழனுக்குரியது. புடை - பக்கத்தே; என்றதனுல் புலிக்கொடியினுயர்வு கூறப்பட்டது; "கயலெழுதிய விமயநெற்றியின், அயலெழுதிய புலியும் வில்லும்'' (சிலப். 17 : 1-2); "கேழன் மேழிகலை யாளி வீணை சிலை கெண்டை யென்றினைய பல்கொடி, தாழ மேருவிலுயர்த்த செம்பியர் தனிப்புலிக்கொடி தழைக்கவே'' (கலிங்கத். 18). "நககோடி பலகோடி புலியேறு தனியேற'' (தக்க. 4); 'புலியேறு தனியேற என்றதனுல் பராராட்டிரத்து இராசாக்களுடைய அனேக கொடிகள் சேவிக்கும் முறையில் அயற்கண்ணே தாழ வரையப்பட்டிருப்பச் சோழ சக்கரவர்த்தியின் புலிக்கொடி மேலே தனியே வரையப்பட்டிருக்கு மென வுணர்க' (தக்க. 4 உரை.)

88. மலையா னிலம்வரவே வார்பூங் கருப்புச்
சிலையான் வரவு தெரியத்—தொலையாது

(கு - ரை) மலையானிலம் - தென்றற் காற்று. வார்தல் - நீளுதல். கருப்புச்சிலையான் - மன்மதன். தொலையாது - அழியாமல்.

89. வீசுந் திவலை விசும்புகூர் மங்குலால்
வாசவன் வந்த வரவறியக்—கூசாதே

(கு - ரை) திவலையையுடைய மங்குல், விசும்பிலே கூர்ந்த மங்குல் என வியைக்க. விசும்பு - ஆகாயம். கூர்தல் - மிகுதல். மங்குல் - மேகம். வாசவன் - இந்திரன். மேகம் இந்திரனுக்கு வாகனமென்பது இங்கே அறியற்பாலது.

(பி - ம்) 'வீசுங்கடவுள்' 'விசும்புதோய்'

90. யாவ ரொழிவா ரிவன்வரவே மற்றுள்ள
தேவர் வருவ ரெனத்தெளிய—யாவர்க்கும்

(ப - ரை) கூசாதே (89) யாவரொழி வாரென்றார்இவன் நாராயண னாதலின்.

(கு - ரை) தெளிய - யாவருமறிந்து கொள்ள.

(பி - ம்) 'யாவர் வருவா ரினம்' 'தெரிய'

91. பின்னர் வழங்கு முழங்கு பெருங்களிற்றுத்
தென்னர் முதலானோர் சேவிப்ப—முன்னர்ப்

(ப - ரை) யாவர்க்கும் (90) பின்னர்க் கொடுத்த களிற்றில் தென்னன் சேரன் முதலானோர் சேவிப்ப.

(கு - ரை) வழங்குதல் சோழன் தொழில். தன்னோடு ஒத்த குடியினராதலின் தென்னர் முதலானோர் தன்னை யொப்பக் களிற்றிலேறிச் சேவிப்ப என்றார்.

(பி - ம்) 'பெருங்களிற்றில்'

92. பரவி யுலகிற் பலமண்ட லீகர்
புரவி மிசைகொண்டு போத—அருவிபோல்

(கு - ரை) பரவி - சோழன் புகழைச் சொல்லி. மண்டலீகர்-மண்டலங்களையாளும் சிற்றரசர். புரவி - குதிரை.

(பி - ம்) 'பரமண்டலீகர்' 'போக' 'அருவிபோய்'

93. விட்டு மதம்பொழியும் வேழந் திசைவேழம்
எட்டு மொழியப் புகுந்தீண்டக்—கட்டி

(கு - ரை) அருவி மதத்திற்கு உவமை. திக்கு யானைகள் எட்டும் அல்லாத மற்ற யானைகளெல்லாம் வந்து நெருங்க. ஒப்பு: "போரி யைந்

தன தோற்றவென் றிகழ்தலிற் புறம்போய், நேரி யன்றவன் றிசைதொறு நின்றமா நிற்க, ஆரி யன்றனி யைங்கரக் களிறுமோ ராழிச், சூரி யன்ற னித் தேருமே யிந்நகர்த் தொகாத" (கம்ப. 5. ஊர்தேடு: 11.) கட்டி- தேரிலே கட்டப்பட்டு.

(பி - ம்) 'விட்டு மதம் பொழிய' 'புகுந்தீண்டிக்'

94. இரவிக்கு நிற்பன வேழு மொழியப்
புரவிக் குலமுழுதும் போத—விரவி

(கு - ரை) இரவி - சூரியன். ஏழும் - ஏழு குதிரைகளும். புரவிக் குலம் முழுதும் - குதிரையின் தொகுதி முழுவதும்; "ஆழி யண்டத்தி னருக்கன்ற னலங்குதேர்ப் புரவி, ஏழு மல்லன வீண்டுள குதிரையு மெல்லாம்" (கம்ப. 5. ஊர்தேடு. 9.) விரவி - கலந்து.

95. உடைய நிதிக்கடவு ளூர்தி யொழிய
அடைய நரவெள்ள மார்ப்ப—விடையே

(கு - ரை) நிதிக்கடவுள் - குபேரன்; நிதி - பத்ம நிதியும், சங்க நிதியும். ஊர்தி - நரன் என்னும் பெயருடைய யக்ஷன்; தக்க. 462, உரை; இதனால் குபேரனுக்கு நரவாகனன் என்னும் பெயர் உண்டாயிற்று. நர வெள்ளம் அடைய - மனிதருடைய கூட்டம் முழுவதும்.

96. எழுந்த துகளுருவ வேறியுஞ் சுண்ணம்
விழுந்த துகளுருவ வீழ்ந்துந்—தொழுந்தகைய

97. விண்ணுலகு மண்ணுல காகி விளங்கவிம்
மண்ணுலகு பொன்னுலகாய் மாற—எண்ணரிய

(ப - ரை) 96-7. எழுந்த துகள் - அண்ட கோள மளவும் உருவ ஏறி விண்ணுலகு மண்ணுலகாகி விளங்க, நாகதலமளவாக உருவப் பொற் சுண்ணம் வீழ்தலின் மண்ணுலகு பொன்னுலகாய்ப் பரிவர்த்தனையாக வென நகரிவருணனை கூறினர்.

(கு - ரை) எழுந்த துகள் - பூமியிலிருந்து எழுந்த தூசி. சுண்ணம் - உடன் வருவோர் சிதறிய பொற் சுண்ணம். தொழுந்தகைய - தொழத் தக்க பெருமையையுடைய. நிரல் நிறை.

(பி - ம்) 'எழுந்து' 'விழுந்து துகளுருவம்' 'விண்ணுலகு மண் ணுலகாக விளங்கிய', 'விண்ணுலகாய்'

98. மாகதரும் மங்கலப் பாடகரும் விஞ்சையர்
பூகத ராயினர் போற்பரவ—நாகர்

99. கொழுந்தெழு கற்பக சாதி குவித்துத்
தொழுந்தொறும் மன்னர் சொரிய—எழுந்துள

100. கைம்மழை யென்னக் கனகப் பெயறூர்த்து
மைம்மழை மாட மறுகணைந்தான்—தம்முடைய

(ப-ரை) 98-100. மாகதர் - இருந்தேத்துவார். மங்கலப் பாடகர் - பாணர். வித்தியாதர லோகத்தில் இருந்தேத்தும் மாகதரும் மங்கலப் பாடகரும் பூலோகத்தா ராயினர்போற் பரவ. நாகர்கொழுந்து, இது தலைவர்க்கு ஓர் ஆகுபெயர். எழுகற்பக சாதியைக் குவித்துக் கற்பகதரு தானங்கொள்ளக் கொடுத்து முனிவரைத் தொழுந்தொறும் மன்னர் சொரியத் திறையாகக் குவித்தெழுந்த பொருளைக் கை புயலென்னும்படி தூளிதானமாகச் சிந்தி நிலத்தை மறைத்து மேகம் பொருந்திக் குளிர்ந்த மாடம் பொருந்திய மறுகு அணைந்தான்.

மண்ணுலகு பொன்னுலகாய் மாறூடப் (97) பூகதராயினர்போற் பரவக் (98) கற்பக சாதி குவித்துத் தொழுந்தொறும் மன்னர் சொரிதர எழுந்துள (99) கனகப் பெயல் யோலத் தூர்த்து (100) நாகர் கொழுந்து (98-9) எருத்தந்திருக்கவினவேறிப் (82) பொற்றொடியார் (102) மைம் மழை மாடமறுகணைந்தான் (100) எனக் கூட்டுக.

(கு-ரை) 98. மாகதர்: "சூதர் வாழ்த்த மாகதர் நுவல" (மதுரைக். 670.) பூகதர் - பூமியை அடைந்தவர்; "பூகதனு கியவன்றே பகைவரெல்லாம் போற்ற வளர்ந்து" (வி. பா. திரௌபதி மாலையிட்ட. 52.) 99. நாகர் கொழுந்து: "ஆயர்தங் கொழுந்தே" (திருமாலை, 2.) நாகர் - தேவர்: இவனே நாராயணன் என்றூர் முன்னும்; 100. மைம் மழை மாடம் - மேகத்தைப் போன்ற குளிர்ச்சியானமாடம்; "மழை யென மாடமோங்கி" (மலைபடு. 484); "மழைநிரைத் தன்ன மாடந் தோறும்" (பெருங். 3. 16 : 27); "மழை மருண் மாடம்" (சீவக. 2116.); மழைமாடம் - மேகங்கள் வந்துபடியும் மாடம் என்றலும் ஆம்.

(உரை) தூளிதானம் - 'தூளிபர்யந்ததானம். பஹுவாக ஜநங்களுக்கு வஸ்துக்களைக் கொடுக்கும்போது அதில் உதிர்ந்த ரேணுக்களையும் கூட உதறிக் கொடுக்கை' (திருப்பாவை, 24, அரும்பத.)

(பி-ம்) 98. 'விஞ்சையரும்' 99. 'தொழுதெழு' 'சொரிந்த தெழுந்து தன்', 'சொரிந்த தெழுந்தன' 100. 'கைம்மழை பெய்து', 'பெயல் தூற்று', 'பெயல்தூர்ந்த'

[குழாங்கள்]

101. சாலை தொறுந்திரள்வார் சாளரங்கள் கைக்கொள்வா
மேலை நிலாமுற்ற மேற்றொகுவார்—மாலைதாழ்

102. தெற்றி யடைய மிடைவார் சிலர்பலர்
நெற்றி சுருங்க நெருங்குவார்—பொற்றொடியார்

103. மாளிகையி லேறுவார் மண்டபத்தின் மண்டுவார்
சூளிகை மாடந் தொறுந்துறுவார்—நீளும்

104. இரண்டு மருங்கினு மிப்படி மொய்ப்பத்
திரண்டு பலரெதிரே சென்று—புரண்ட

(ப-ரை) 101-4. சாலை - நெடுந்தளம். தெற்றி - புறவறை. நெற்றி - தெருத்தலை. மாளிகை - விடுதளம். மண்டுதல் - நெருங்க ஏறுதல். சூளிகை - விமானத்தலை. துறுதல் - செறிதல். மொய்ப்ப - செறிய.

பொற்றொடியார் (102) துறுவாராய் இரண்டு மருங்கினும் இவ்வாறு மொய்ப்ப (104) என வினையெச்சமுற்றாக்குக. இவர் இவ்வாறு நிற்க.

(கு-ரை) சாலை : இராசராச. 80. சாளரங்களில் மகளிர் தொகுதல் : "வாளரம் பொருத வேலு மன்மதன் சிலையும் வண்டின், கேளொடு கிடந்த நீலச் சுருளுஞ்செங் கிடையுங் கொண்டு, நீளிருங் களங்க நீக்கி நிரைமணி மாட நெற்றிச், சாளரந் தோறுந் தோன்றுஞ் சந்திர வுதயங் கண்டார்" (கம்ப. 1. மிதிலைக் காட்சிப். 14); "நீளெ ழுத்தொடர் வாயினுங் குழையொடு நெகிழ்ந்த, ஆள கத்தினோ டரமியத் தலத்தினு மலர்ந்த, வாள ரத்தவேல் வண்டொடு கெண்டைகண்மயங்கச், சாள ரத்தினும் பூத்தன தாமரை மலர்கள்" (கம்ப. 2. மந்திரப். 54.) நிலாமுற்றம்; சிலப். 2 : 27; "நிலவுப்பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்து" (நெடுநல். 95); "சுடர்வெண் ணிலவின் றொழிற் பயன்கொண்ட, மிசை நீண் முற்றத்து" (பெருங். 1. 33 : 61-2.) 102. தெற்றி :' ' கூடசாலைகள் கோபுரந் தெற்றிகள்" (பெரிய. திருவாரூர்ச். 4.) மாலை தாழ்தெற்றி : "கள்ளருமலர் நாற்றிய சுருங்கை" (நைடதம், நகரப் 8.) தெற்றி-திண்ணையும்ஆம். நெற்றி - உச்சியில் உள்ள அறை; போதிய இடமின்மையின் நெற்றி யென்னும் வீட்டுறுப்பு சுருங்கியது; நெற்றி : நுதலுமாம். 103. மாளிகை : இதனை வேயா மாடமென்பர் ; சிலப். 5 : 7.

(உரை.) வினையெச்சமுற்று என்றது திரள்வார், கைக்கொளவார், தொகுவார், மிடைவார், நெருங்குவார், ஏறுவார், துறுவார் என்பன வற்றை.

(பி - ம்) 101. 'தொறுந் தொகுவார்' 'நிலாமுன்றின் மேற்செறிவார்' 102. 'சில மாதர்' 'பொற்கொடியார்' 103. 'ஆடரங்கின் மண்டுவார்' 'சூளிகைசூழ் மாடந் தொறுந்தொகுவார்' 104. 'மருங்கிலுமிப்படி யொப்ப'

105. கரும்புருவ வல்வில்லுங் கண்மல ரம்பும்
பெரும்புவன வெல்லை பிடிப்பச்—சுரும்பு

106. நிரைக்கு நிரைமுரல நீலக் குழாங்கள்
இரைப்பின் மொகுமொகு வென்ன—விரைச்சுருள்

107. மேகா ளகங்கள் மிஞிறுவாய் வைத்தூதக்
காகாள மென்னும் படிகலிப்பப்—போகத்

108. தகரங் கமழ்கதுப்பிற் ருழ்குழை தோடாழ்
மகரம் பிறழ்கொடியின் வாய்ப்ப—இகலனங்கன்

109. சேனு சமுகந் தெரிப்ப வதனெதிர்
சேனு பராக மெனத்திகழப்—பூநாறும்

(ப - ரை) 105-9. நெற்றி சுருங்க வருவார் (102) பலராகத் திரண்டு சென்று (104) கரிய புருவமாகிய வலிய வில்லும் கண்ணுகிய மலரம்பும் பெரிய புவனத்தவர் உணர்ச்சியைச் சிறைபிடிப்பச் சுரும்பினங்கள் நிரைக்கு நிரை முரல அது நீலக்குழாங்கள் ஆரவாரிக்குமதுபோல மொகு மொகுவென்ன ; நீலக்குழாங்கள் யானைக்குங் குழலுக்கும் பொதுப்பட்டுப் பிரிபொருட்டொடராய் நின்றது. மணம் பொருந்திச் சுருட்டப்பட்ட மேகவளகங்களில். மிஞிறு ஊத அது வாய்வைத்தூதும் காகளமென்னும் படி ஆரவாரிப்ப ; காகாளமென்பது விகாரம். இது மெய்யுவமமும் ஓசையுவமமும் ஆயிற்று. போகச்சார்ந்தமான தகரமணங்கமழும் கபோலப் புறத்துத் தாழ்ந்த மகரக்குழை தோள்மிசையே தாழ, அப்போது அசையும் மகரக்கொடியும், அக்கொடித்தண்டமும் ஒப்புவாய்ப்ப (107-8) ; இது மெய்யுவமம். இவையிற்ருலே அனங்கன் வினைக்குவந்த சேனுசமுகந் தெரிப்பச் சேனையாகிய அதற்கு எதிரெழும் சேனுபராகமென விளங்க.

(கு - ரை) 105. வல்வில் - பல இலக்குக்களை ஊடுருவிச் செல்ல எய்யும் வில்; "வேழம் வீழ்த்த" (புறநா. 152) என்னும் பாட்டாலும் அதனடிக் குறிப்பாலும் இது விளங்கும். புருவவில், கண்ணம்பு : "புருவச் சிலைகுனித்துக் கண்ணம்பெ னுள்ளம், உருவத் துரந்தா ரொருவர்" (தண்டி. 36, மேற்.) 106. மொகுமொகுவென்ன என்பது இரட்டைக்

ளைவி ; "மொகுமொகென்றகில லோகமும் முழங்குவனவே" (தக்க. 90); "நிரைத்த தெண்டிரை மொகுமொகு மொகுவென" (திருப்புகழ்) ; "அடர்ந்தளிகள் மொகுமொகெனு மாமோத வலம்புரித்தா ரண்ணல்" (வி. பா. பதினெட்டாம் போர். 236.) சுருள் - கூந்தலின் ஐவகைப் பிரிவுகளுள் ஒன்று ; பு. வெ. 223, உரை. 107. மேகாளகங்கள் - மேகத்தைப் போன்ற முன்னுச்சிமயிர் ; "அளக வாணுதல்" (கம்ப. 2. மந்தரைச்: 86.) காகாளம் - காகளம் ; நீட்டல் விகாரம். 108. தகரம் - மயிர்ச்சாந்து. கதுப்பின் தாழ்குழை - கூந்தலினின்றும் தாழ்கின்ற காதணி ; 'கதுப்பின்-கன்னத்தினிடத்து' என்றுங் கொள்ளலாம் ; பரி. 19 : 30. குழைக்கு மகரக்கொடி உவமை ; "இளமயி லனைய சாய லேந்திழை குழைகொள் காது, வளமிகு வனப்பி னாலும் வடிந்ததா ளுடைமை யாலும், கிளரொளி மகர வேறு கெழுமிய தன்மை யாலும், அளவில்சீ ரனங்கன் வென்றிக் கொடியிரண் டனைய வாக" (பெரிய. திருஞான. 1100) ; "ஒது, மகரக் கொடியின் மணிக்குழைகள் வாய்ப்ப" (சொக்கநாதருலா, 444-5.) 109. சேனு சமுகம் - சேனையின் கூட்டம். சேனுபராகம் - சேனை செல்லும்போது உண்டாகும் தூளி. திகழ - விளங்கும்படி. இவ்வாறு திகழ்ந்தது மகளிர் தூவிய சுண்ணம். மகளிர் சுண்ணத்தைத் தூவுதல் : "தோதக மாக வெங்குஞ் சுண்ணமேற் சொரிந்து" (சீவக. 463.)

உரை. பிரிபொருட்டொடர் ; தொல். எச்ச. 64, ந. நீலக்குழாங்களென்றது நீலமணியைப் போன்ற கூந்தலுக்கும், கரிய நிறத்தையுடைய யானைகளுக்கும் பொதுவாக நின்றது. மெய்யுவமம் - வடிவுபற்றிய உவமம். ஓசையுவமம்-ஓசைபற்றி வந்தவுவமம்.123-7 உரை. 'எனவே, கட்புலனல்லாதனவும் உள என்றவாறும். அவை செவியினானும், நாவினானும், மூக்கினானும், மெய்யினானும், மனத்தினானும் அறியப்படுவன. இவ்விரு வகையும் பாகுபடவந்த உவமையாம்...... ; "இனிச் செவிப்புலனாவது ஓசை. நாவி னறியப்படுவது கைப்பு, காழ்ப்பு முதலிய சுவை. மெய்யினானறியப்படுவன வெம்மை, தண்மை முதலாயின. மூக்காலறியப்படுவன நன்னாற்றம், தீநாற்றம். மனத்தா னறியப்படுவன இன்ப துன்பம் முதலியன' (தொல். உவம. 1, இளம்.) என்னும் உரையும், 'குயில் போன்ற மொழி' என்ற உதாரணமும் இங்கே அறிதற்பாலன.

(பி - ம்) 106. 'முரலும்' 'நீலக்குழல்கள்' 'இரைக்குமுரை மொகுமொகென்ன', 'மொகுமொகென்ன' 107. 'ஞிமிறுவாய் வைத்தூதும்' 107-8. 'மோகத், தகரம்' 108, 'தோடோய்', தோடொய்ய' 109. 'சேனு பராகந் தெறிப்ப'

110. சுண்ண மெதிர்தூ யுடனே தொடியுந்தூஉய்
வண்ண மிழப்பார் மனமிழப்பார்—மண்ணுலகில்

(ப - ரை) பொற் சுண்ணத்தைத் தலைவர்க்கெதிரே தூய்க், காமன் சேனை மூவரையும் வென்ற சேனை. அந்தச் சேனையையும் இத்தலைவன் வென்றான் என்னும்படி அவதியற, உடனே கைவளையுஞ்சிந்தி, தம் நிற மிழப்பார், மனமிழப்பாராக இரண்டு மருங்கினும் நின்றாரிற் சிலர்.

(கு - ரை.) சுண்ணத்தையும் தொடியையும் இடையீடில்லா திழத்தல்; "கண்ண கண்ண வெம்மிதழ், உண்ண வாவென் றோதியே, வண்ண மேவு கைவளை, சுண்ண மோடு தூவுவார்" (பாகவதம். 1. 4 : 20.) வண்ணம் - மாமைநிறம்.

உரை. காமன் சேனை - மகளிர்; "செல்வப்போர் காமன் சேனை" (சீவக. 458.) மூவர் - திரிமூர்த்திகள். அவதியற-இடையீடில்லாமல்.

111. இன்னற் பகைவ னிவன்கா ணகளங்கன்
மன்னர்க்கு மன்னன் மகனென்பார்—முன்னர்

112. முதுகுல மன்னர் முடிவணங்க வந்த
விதுகுல நாயகிசே யென்பார்—குதுகலத்தாற்

113. கண்மருஞ் செவ்விக் கடவுட் டிசாதேவர்
எண்மருங் காணு மிவனென்பார்—மண்ணவர்க்கும்

114. தேவர்க்கு நாகர்க்குந் தெய்வ முனிவர்க்கும்
யாவர்க்குங் காவ லிவனென்பார்—தீவிய

115. மாதவியுஞ் செங்கழு நீரும் வலம்புரியும்
தாதகியுங் கொள்ளத் தரினென்பார்—மாதை

116. ஒறுக்கும் மிதிலை யொருவில்லைத் தொல்லை
இறுக்கு மவனிவ னென்பார்—மறுக்காமற்

(ப - ரை) 111-6. குதுகலம் - ஆசை. மீதே கிடந்து தம்மை ஒறுக்கும் மாதவியும், செங்கழுநீரும், நந்தியாவர்த்தமும், தாதகியும் கொள்ளை கொள்ளத் தரின் நன்றென்பார்; இவ்வாறுகூற, ஒருபுறத்து நின்றார் கூறுவார்.

(கு - ரை) 111. இன்னற் பகைவன் : இது "பசிப்பிணி மருத்துவன்" (புறநா. 173 : 11) என்பது போன்றது. அகளங்கன் - விக்கிரம சோழன். அகளங்கனாகிய மன்னர்க்கு மன்னன்; மன்னர்க்கு மன்னன் - சக்கரவர்த்தி. 112. விதுகுலநாயகி : சந்திரகுலத்தில் தோன்றிய பெண்

சக்கரவர்த்தி : விக்கிரம. 40. 113. கண்மருஞ் செவ்வி - கண்ணிற்குப் பொருந்திய அழகையுடைய. திசாதேவரெண்மரும் காணும் இவன்: அரசன் திக்குப்பாலகர் எண்மரும் ஒரு வடிவாக நின்று உலகத்தைக் காக்கின்றானென்பது நூற்கொள்கை: 'உலக பாலருருவாய் நின்று உலகம் காத்தலின் இறையென்றார்' (குறள், பொருட்பால், அவதாரிகை); "இந்திரன் முதற் றிசாபால ரெண்மருமொரு வடிவாகி, வந்தபடி தரைநின்று மனுவாணை தனிநடாத்தி" (இரண்டா மிராசராசன் மெய்க்கீர்த்தி) ; உலோக பாலரென்பதற்கு இந்திரன் முதலான திக்கிற்றேவர் எண்மரையுங் கொள்ளாதே பூமியிலுள்ள இராசாக்களெனக் கொள்க' (நக்க. 17, உரை.) 114. நாகர் - பாதாளவுலகத்திலுள்ள பாம்புகள். 'தெய்வமுனிவர் - தேவரிஷிகள். இவர்கள் அகஸ்தியர் நாரதர் முதலானோர்; 'தேவ இருடியாகிய குறுமுனி' (சிலப். அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரம்) ; "அமர முனிவ னகத்தியன் றனுஅது" (மணி: பதிகம், 11 ; 22 : 35.) தீவிய-இனியன. 115. மாதவி முதலியன தலைவனணிந்த மாலைகள் ; தரின் தீவிய என வியைக்க. மாதவி - குருக்கத்தி. வலம்புரி - நந்தியாவர்த்தம். தாதகி-ஆத்தி. மாது - சீதை. 116: ஒறுக்கும் - துன்பப்படுத்தும். தொல்லை - இராமாவதாரத்தில் ; என்றது இவனைத் திருமாலாக நினைந்து கூறியது. வலம்புரி தாதகி : 136-9.

(பி - ம்) 111. 'பகைஞன்' 113. "கண்வருஞ் செவ்விக்' 'திசைத் தேவர்' 'எண்வரும்', 'விண்வரும்' 114. 'தேவர்க்குந் தானவர்க்கும்' 115. 'கொள்ளை தரினென்பார்' 116. 'மீதே' 'அவனிவனே யென்பார்'

117. சென்று கனைகட றூர்த்துத் திருக்குலத்து
நின்ற பழிதுடைப்பாய் நீயென்பார்—இன்றளவும்

(ப - ரை) மறுக்காமல் (116) - கலங்காமல் : அரிதென்று மீளாமலென்றுமாம். ஒருவன் தன் காதலியைச் சிறைசெய்யக் கொடுத்தானென்று திருக்குலத்துநின்ற பழியைத் துடைக்க வந்தவன் காண் நீயென்பார் ; என்ற கருத்து இருந்துவந்தேம் ; இறந்துபடுவேம் என்பது குறிப்பாற்கொள்ளக் கூறினார்.

(கு - ரை) காதல்நோய் கொண்டார்க்குக் கடலொலி துன்புறுத்துமாதலின் கடல் தூர்க்கத்தாம் வேண்டியதை நேரிற் வெளிப்படையாகக் கூறாமல், நீ உன் திருக்குலத்துப் பழி துடைப்பாயாக என்றார்.

உரை. இருந்து வருந்தேம் இறந்துபடுவேம்: இருந்து வருந்தல் சீதையின் செயல் ; "பொறையிருந் தாற்றியென் னுயிரும் போற்றி

னேன், அறையிருங் கழலவற் காணு மாசையாய்'' (கம்ப. 5. உருக்காட்டு : 11-)

118. துஞ்சுந் துயிலிழந்த தண்டர் குழற்றுளையில்
நஞ்சுங் குமிழியெழு நாளென்பார்—பஞ்சவனே

119. வாடையினுந் தண்ணென்னும் மந்தா நிலமெமக்குக்
கோடையினுந் தீது கொடிதென்பார்—கூடி

(ப - ரை) 118-9. இன்றளவும் (117) எமது கண் துயிலும் ; இன்றுடனே துயிலிழந்தது. அதுவுமன்றி அண்டர் குழற்றுளைதோறும் இசையென்னும் நஞ்சும் குமிழியாகவே யெழும் இனியுள்ள நாளென்பார். அஞ்சு நிலம் உடையோனே, நுண்டுளி விரவிவரும் வாடையினுங் காட்டிற்றண்ணென வீசும் மந்தாநிலம் எமக்குக் கோடைக் காற்றினுந் தீது. குதுகலத்தால் (112) கொடிதென்பாராய் (119) கூடி - இங்ஙனே சிலர்கூடி.

(கு - ரை) 118. அண்டர் - ஆயர். பஞ்சவன் - ஐந்து நிலமுடையவன் ; "வியன்றமிழ்நா டைந்தின், குலங்காவல் கொண்டொழுகுங் கோ" (நண்டி. 73, மேற்.); இனி, பஞ்சவனே என்றது இவன் பாண்டிநாட்டையும் கைக்கொண்டமைபற்றி. இவ்வாறே சேர பாண்டியர் பெயர்களால் இவ்வுலாக் கொண்ட சோழர்களை நூலாசிரியர் பல இடங்களில் குறித்துச் சொல்வது நோக்கத்தக்கது ; 286 ; விக்கிரம. 164 ; வாடை - வடகாற்று. மந்தாநிலம் - தென்றற்காற்று. கோடை மேல்காற்று. 119. வாடை, தென்றல், கோடை : "சேணுலாம், வாடையனைய மலயா நிலந்தனையும், கோடை யிதுவென்றே கூறினள்" (விக்கிரம. 279-80.) கொடிதென்பார்; பஞ்சவனே என்று (118) குறிப்பிட்டமையால் உன் ஆட்சிக்கு உட்பட்ட அப்பாண்டி நாட்டிலிருந்துவரும் மந்தாநிலம் எங்கட்குத் தீது செய்கின்றதே. அத்தீமையைப் போக்கி எங்களை ஆளாதிருத்தல் கொடிதென்பார் என்று பொருள் கொள்ளலும் தகும்.

(பி - ம்) 118. 'துயிலிழந்தோங் கண்டாய்', 'துயிலிழந்தோ மண்டர்' 'நாடென்பார்', 'நாட்டென்பார்' 'பஞ்சவரென்'

120. முருகுவார் கூந்தலார் மொய்த்தலர்ந்த கண்ணாற்
பருகுவார் போல்வீழ்ந்து பார்ப்பார்—பொருமதனன்

(ப - ரை) மணத்துக்குக் காரணமான மாலையும், விடுபோதும், அவிழப்பட்ட கூந்தலினராய் நாயகன் மேற்செறிந்து இமையாமல் மலர்ந்த கண்ணாலே அவனழகைப் பருகுவார்போல விரும்பிப் பார்ப்பாராய்.

இளைத்தார் இளையர் பலர் நிகழ (123) வண்ணம் இழப்பார், மன மிழப்பாராய் (110), இளைத்தார் பலர்நிகழ (123) இளையாமல் மன்னர்க்கு மன்னன் மகனென்பார் (111), கொள்ளத்தரின் நன்றென்பாராய்ப் (115) பலர்நிகழ நின்ற பழி துடைப்பாய் நீயென்பார் (117); குமிழியெழும் நாளென்பார் (118); தீது கொடிதென்பார் (119) இளையர் பலர் நிகழ.

(கு - ரை) பருகுவார்போலப் பார்த்தல்: "பருகு வன்ன வருகா நோக்கமொடு" [பொருந. 77.); 'இருந்தகுலக் குமரர்தமை யிருக்கண் ணுன் முகத்தழகு பருகநோக்கி' (கம்ப. 1. குலமுறை. 2); 'பருகுவனள் போல......மதரரி நெடுங்கண் வேற்படைகான்ற' (பெருங். 33 : 121-3.) 111-20. இளையாமல் இருப்பவர்கள் செயல்.

உரை. விடுபோது: 'சிவந்த காலையுடைய வெட்சியுடைய சிறிய பூக்களை விடுபூவாகத்தூவி' (முருகு. 21, ந.); 'விடுபூ, தொடைப்பூ, கட்டுப்பூ வென்னும் மூவுகைப் பூவகையும்' (சிலப். 5 : 14, அடியார்.)

(பி - ம்) 120. 'போல்விழுந்து பார்ப்பார்'

121. பார்த்தானோ புங்கானு புங்கம் படப்பகழி
தூர்த்தானோ யாதென்று சொல்லுகேம்—ஆர்த்தான்

122. உளைத்தான் சிலையிக் கொருகோடி கோடி
வளைத்தா னரும்புலகின் மாய்த்தான்—இளைத்தார்

[பேதை]

123. இளையர் பலர்நிகழ வீங்கொருத்தி முத்திற்
புனையுஞ் சிறுதொடிக்கைப் பூவை—கனைமுகினேர்

(ப - ரை) 121-3. சிலர் இளைப்பச் சிலர் தலைமை கூறச் சிலர் இறந்து பாடுகூற, இவரைக்கூடிப் பொருமதனன் புங்கானுபுங்கமாகக் கடவதென்று தானுங் கடவுளாதலின் கடவுட்கண்ணாலே பார்த்தானோ, எய்து முடித்தானோ, யாது செய்தானென்று தெரிந்ததில்லை. தெரியாத காரியத்தை எப்படிச் சொல்லுகேம். வெற்றி தோன்ற ஆர்த்துக்கொண்டான்; உலகிற் கரும்பால் மூவகை மாதரையும் நெஞ்சு உளைவித்தான்; சிலையாகிய இக்கினைப் புங்கானுபுங்கமாக எய்யவேண்டுதலின், வில்லின் மென்காலான கோடியை ஒரு கோடி பரியாயமாக வளைத்தான். அரும்பு உள்ளது மாய்த்தானென, "ஊரொடு தோற்றமு முரித்து" என்னுஞ் சூத்திர விதிக்கேற்பப் பவனிகண்ட வாயில் வகையோர் கூறியவாறு காண்க. புங்கானுபுங்கம்: அம்பினது பலவாயைப் பகழிவாய் பொருந்தி இலக்கு எல்லையாக மாலையான எவு. அதற்கு முட்டி சிலையிக்கு ஒருகோடி

வளைத்தல். அபிஷேகஞ் சூட்டியபின் (32) போதத்திமிரப் பொறை நீக்கலாகிய ஞானவுபதேசம் பெற்றுத் (35) திருவம்பலமும் (47) திருக் காமக் கோட்டமும் திகழ்வித்துத் (56) தில்லை மூவாயிரவர்க்கும் வேண்டு வன செய்து பிறக்கிக் (58) கங்காபுரிபுகுந்து (59) பவனியெழுச்சி பணித்து (60) எருத்தந் திருக்கவின ஏறி (82) மண்ணுலகு பொன்னுல காய் மாறுடப் (97) பொற்றொடியார் மைம்மழை மாடமறுகணைந்தான் (100); உலகிற் கரும்புளைவித்தான் (122); இளைத்தாரிணையர் பலராய் நிகழப் (122-3) பொருமதனன் (120) சிலையிக்கொரு கோடி கோடி வளைத்தா னெனவும் அரும்புலகின் மாய்த்தானெனவும் (122) இவ் விடத்து இத்தன்மையான பலர் விளங்க; "கைக்கிளை வகையோ டுளப் பட" (தொல். புறத். 35) என்னும் விதிக்கேற்பக் கைக்கிளை யொழுக்க மொன்பதும் எய்திக் கையகலா மையலார் பேரலராய் மன்றேறப். (386-7) பாரேழும் பேணும் ஒரு குடையான் உலாப்போந்தானெனக் கூட் டுக. மூவகை மாதர்: அத்தினி, சங்கினி, சித்தினி யென்பார்: பற்பனி தெய்வயோனி.

(கு - ரை) 121. புங்கானு புங்கம்: ஒன்றன்மேலொன்று கிளைகிளை யாகத் தொடர்ந்து தோன்றுதல்; "அங்குலிக மொன்றுபுன லாழ் தரு கிணற்றில்விழ வந்தமுனி தேடுமினென, புங்கமொடு புங்கமுற வெய் திவனெடுத்தமை" (வி. பா. வாரணவதச். 51.) 122. உளைத்தான்-வருத் தினான். சிலை இக்கு - வில்லாகிய கரும்பு: இக்கு = இக்ஷு. ஒரு கோடி- ஒருகால். கோடிவில்லை வளைத்தல், "ஆயிரம்வில்லை யனங்க னிறுத்தான்" (கம்ப. 1. கார்முகப்: 28.) என்றதுபோல. அரும்பு உலகின் மாய்த்தது - உலகில் உள்ள அரும்புகளை எல்லாம் கணையாகப் பறித்து இவர்கண்மீது எய்தமையால். மன்மதனுடைய பாணம் அரும்பு என்பது நூற்கொள்கை; "சுருப்புநாண் கருப்புவில் லருப்புக்கணை தூவ", "கருப்பு வில்லியை யருப்புக்கணை மைந்தனை" "கருப்பு வில்லி யருப்புக்கணை தூவ" (மணி. 18 : 105, 20 : 92,25 : 90); 'பொருப்பு வில்லைப் பொடிசெய்த புண் ணியா, கருப்புவில்லிறுத் தாட்கொண்டு காவென்றாள்' (கம்ப. 1 உலா வரு. 22.) 123. முத்திற் புனையுந்தொடி - முத்தாற் செய்த தொடி; "ஏற்றுப் பணைபணைக்கு மென்றோ ளிரண்டுக்கும், தோற்றுச் சொரிமுத் தின் சூழ்தொடியும்" (230.)

உரை. மூவகை மாதர்: இளைப்பார், தலைமை கூறுவார், இறந்து பாடு கூறுவார் என்னும் மூவகையா ரெனினுமாம். வெற்றி தோன்ற ஆர்த் தல்; "வென்றிகொள் வீர ரார்ப்பினும் பெரிதே" (அகநா. 36 : 23); மலைபடு. 386, அடிக். பரியாயம் - முறை. ஊரொடு தோற்றம்: தொல். புறத். 30. பவனி - உலா.

(பி - ம்) 121. 'சொல்லுகேன்' 122. 'இளைத்தான்' 'சிலைக ளொருகோடி' 'வளைத்தான் கரும்புலகில்' 123. இனைய பலநிகழ'

124. ஆடாத தோகை யலராத புண்டரிகம்
பாடாத பிள்ளைப் பசுங்கிள்ளை—கூடத்

125. தளிராத சூதந் தழையாத வஞ்சி
குளிராத திங்கட் குழவி—அளிகள்

126. இயங்காத தண்கா விறக்காத தேறல்
வயங்காத கற்பக வல்லி—தயங்கிணர்க்

127. கூழைச் சுருண்முடிக்கக் கூடுவதுங் கூடாதாம்
ஏழைப் பருவத் திளம்பேதை—சூழும்

(ப - ரை) 124-7. இப்பருவத்துக் கைக்கிளை காண்டலாகலின் அது கைக்கிளைத் திணையாயவாறு யாதோவெனின், பவனிகாண்டல் வேட்கை, தலைவிக்கு உளதாய்த் தலைவர்க்குத் தலைவிமேற் காட்சி விருப்ப மின்மையின் ஒருதலைக்காம மானமையானும், பெண்பாற் கைக்கிளைக்கு அமைந்தமையானும் கூறினாரென்பது. இத்தலைவிக்கு அவயவ பரிணாமமும், மனவுணர்ச்சியு மின்மையின் பூவை முதலாகக் கூறியவை உவமப் பொருளாதலின், உவமைக்கு அமையாப் பருவத்துக் கூறிய கருத்து யாதெனின், முத்தினாற் புனையும் சிறு தொடியையுடைய கைப்பூவை. இது கண்டோர் நகைப்ப வண்ட லிழைக்கையும் கழங்கு முதலிய ஆடலும் நிகழ்தலின் பூவைக்குப் பிறரை நகுவித்தலே தொழிலாகக்கூறின வினை யுவமத்திற்குப் பேதை யெனவும், மனக்களிப்புக்குக் காரணமான முகில் முழங்கினும் நேர்நின்று ஆடாத தோகையெனவே மன அறிவு உவமத்தினால் பேதை யெனவும், முகைமலராத புண்டரிகமெனவே தனது நாயகனை இரவியைக் கண்டாலும் முகம் மலராமையின் காட்சி யுவமைக்குப் பேதையெனவும், வார்த்தையினது பாகுபாடு பாடிப் பயிலாத செவ்வி மொழி கூறும் இளைய கிள்ளை யெனவே ஓசை யுவமத்திற்குப் பேதையென வும், சூடும்படி முறிதளிராத சூதமெனவே வேனிற்காலத்து இளமாங் கன்றுந் தளிர்க்கும் தன்கால மறியாததால் பரிசவுவமைக்குப் பேதையென வும், நிழலில் வஞ்சி பரிணாமம் நீட்டித்தலின் தழைத்தல் கூடாத வஞ்சி யெனவே இடனறியாத மெய்யுவமத்திற்குப் பேதையெனவும், குளிர்ச்சி கூடாத திங்கட் குழவி யெனவே உருவுவமைக்குப் பேதையெனவும், விளைந்திறக்காத தேறலெனவே பயனுவமைக்குப் பேதையெனவும், விளக்கமில்லாத கற்பகக் கொடியெனவே ஓரையிலே ஒளிமழுங்கத் துகளேற லறியாமையின் பண்புவமைக்குப் பேதையெனவும், ஒரு பொருளுதலிக் கூறினமையின் பேதை யென்பது இறுதி விளக்கம்.

கொத்துப் போலசைந்து வளர்ச்சி யமையாது தலைசுருண்டு முடிக்கு மளவில் சில கூடுவதும், சில கூடாததுமாய், எளிய பருவத்து இளைய பேதையெனக் கூட்டுக. பூவை முதலாகக்கூறிய பத்துப் பெயரும் வினை நிலையுரைத்தல்; வினைநிலை யுரைத்தல் - தன் தொழில் நிகழ்தல். இடமும் காலமும் மெய்யுவமத்திற்கு ஏறப்பத்தின் மேற்று.

(கு - ரை) பேதைப் பருவத்துக் கைக்கிளை காண்டல்: பு. வெ. 15. மாந்தளிர் சூடுதற்குரியது; "கச்சியிற்சுர சூதசீதள பல்லவங்கன விற்க வித், துச்சியிற்பனி வீசுகண்ணியின் வெண்ணிலாவை யொதுக்கவே" (தக்க. 625); "கலிகெழு கடற்கச்சிக் கமழிளந் தேமாவின், ஒலிதளிரும் முலைச்சுவடு முடன்சிறப்ப வுலவுங்கால்" (தொல். செய். 146, பேர். மேற்.) அளிகள் இயங்காத தண்கா என்பதற்குப் பழையவுரை இல்லை; வண்டுகள் சஞ்சரியாத குளிர்ந்த சோலை. 126. தயங்கு இணர் - விளங்குகின்ற பூங்கொத்துக்களை யணிந்த. 127. கூழைச்சுருள் - வளர்ச்சி குறைந்த சுருண்ட கூந்தல். கூடுவதும் கூடாதாங் கூந்தல்; "பெருந் துறைப் பிள்ளைகள்ளார், முருகு தலைச்சென்ற கூழைமுடியா" (சிற். 104.)

உரை. பூவைக்குப் பிறரை நகுவித்தலே பொருள்: 274. உரை. ஓரை - மகளிர் விளையாட்டு; "ஓரை யாயத் தொண்டொடி மகளிர்" (புறநா. 176 : 1.) ஒரு பொருள் நுதலிக் கூறினமை: "ஒரு பொருளுதலிய வெள்ளடி யியலாற், றிரிபின்றி வருவது கலிவெண் பாட்டே" (தொல். செய். 153.) மெய்யுவமத்திற்கு இடமும் காலமுங் கூறியது மாங்கன்றையும், வஞ்சியையுங் கருதி. வினைநிலை யுரைத்தல்: தொல். வேற். 5.

(பி - ம்) 127. 'சூழ'

128. நிலைத்தாய வெள்ள நெருங்க மருங்கே
முலைத்தாயர் கைத்தாயர் மொய்ப்பத்—தலைத்தாமம்

129. தொக்க கவிகைக் குலோத்துங்க சோழனை
மிக்க பராந்தகனை மீனவனைப்—புக்கார்

130. வணங்க வணங்கி வழுத்த வழுத்தி
அணங்க வணங்கா ளகலாள்—குணங்காவல்

(ப - ரை) 128-30. இத்தன்மையளாய பேதையாயினும் விசாரிக்கும் (127) நிலைமையையுடைத்து; ஆயவெள்ளம் தம்மில் நெருங்க முலைத்தாயரும், கைத்தாயரும் இருபுறத்துஞ் செறியநின்று பவனி வந்த குலோத்துங்க சோழனை, பராந்தகனை, மீனவனை ஆயமுந் தாயரும்

வணங்கப் புகுந்தாரென்று அதுகண்டு தானும் வணங்கி, வழுத்தப் புகுந்தாரென்று அதுகேட்டுத் தானும் வழுத்தி, 'இவள் இந்த அரசனுக்குத் தலைவியாவது என்றோ' என்று அவர் அணங்கத் தான் அதுக்கு அணங்காளாய்.

(கு - ரை) மூலைத்தாயர், கைத்தாயர் : ஐவகைச் செவிலிமார்களுள் இருவர்; 'ஆட்டுவாள், ஊட்டுவாள், ஓலுறுத்துவாள், நொடிபயிற்றுவாள், கைத்தாய்' (சீவக. 363, உரை.) தலைத்தாமந்தொக்க கவிகை - தன்னிடத்தே மாலைகள் கூடிய வெண்கொற்றக் குடையையுடைய; "பூத்தாம வெண்குடையான்" (நளவெண்பா, 366.) பராந்தகன் - மற்ற அரசர்களுக்கு யமன் போன்றவன். மீனவன் - பாண்டியன்; இவன் பாண்டிநாட்டையும் ஆண்டமைபற்றி இங்ஙனங் கூறினர். புக்காரென்றது செவிலித்தாயரையும் ஆய மகளிரையும். வழுத்த - புகழ. அணங்க - வருந்த. அகலாள் - அவ்விடத்தைவிட்டு நீங்காளாய்.

(உரை.) தலைவி யென்றது இங்கே மனைவி யென்னும் பொருளது.

(பி - ம்) 128. 'மருங்கின்' 'தலைத்தந்த', 'தலைத்தடா' 129. 'பரந்தபனை'

131. மன்னன் புனையுந் திருமுத்த மாலையை
அன்னம் படிந்தாட வாறென்னும்—பின்னவன்
132. கோவைத் திருப்பள்ளித் தொங்கற் குழாங்கிளிக்கும்
பூவைக்கு நல்ல பொழிலென்னும்—பாவை
133. அயிர்க்கு மிருகோட் டயிரா பதத்தை
மயிற்கு மலையென்று மன்னும்—குயிற்கிளவி

(ப - ரை) 131-3. தான் காக்கும் உலகத்தவர்க்குத் துர்க்குணம் ஆகாமலும் நற்குணம் போகாமலும் காவல் செய்யும் (30) மன்னவன் புனைதற்கு அமைந்த திருமுத்தமாலையைத் தன்னுடன் விளையாடும் அன்னம் படிந்தாட ஆறென்று கூறும். அதன் பின்னராகக் கோவை செய்த திருப்பள்ளித் தொங்கற்றிரளினைக் கண்டு தன்னுடைய கிளிக்கும் பூவைக்கும் விளையாடுதற்கு நல்ல பொழிலென்று கூறும். அதன் பின்னராகப் பாவை (மேற்செல்ல) ஐயப்படும் இருகோட்டையுடைய அயிராபதத்தை மயில் வாழுதற்கு மலையாம் என்று பொருந்தும். யானைக்கு அயிராபதத்தோடு வினை முதலான உவமை நான்கும் ஒத்துக்கோடு ஒவ்வாமையின் விசேடித்தார்.

பாவையென்று தலைவிக்குப் பெயராக்கி மலையென்று ஐயப்பட்டுப் பொருந்துமெனினுமாம்.

(கு - ரை) 131. முத்துமாலை ஆற்றிற்கு உவமை; "நதிக்குப் போத வொழுகு முத்தாரமும்" (நைட. 280.) 132. கோவையாகிய திருப் பள்ளித் தொங்கல்: இது சேருடி என்னும் ஒருவகை விருது; மயிலிற காற் செய்யப்படுவது; 83; "குடையொடு களிறுந் தொங்கற் குழாங் களுங் கொடியின் காடும், இடையிடை மயங்கி யெங்கும் வெளிகரந் திருளைச் செய்ய", "தொங்கலுங் குடையுந் தோகைப் பிச்சமுஞ் சுடரை யோட்ட", "தொங்கல்வெண் குடைதொகைப் பிச்சமுட் படவிராய், எங்கும்விண் புதைதரப் பகன்மறைந் திருளெழ" (கம்ப. I. எழுச்சிப். 56, 78; எதிர்கோட். 7.) பாவை - பேதையின் விளையாட்டுப் பொருள்களுள் ஒன்று. மகளிருக்குப் பாவையினிடத்துள்ள அன்பு, "சிறுபசும் பாவையு மெம்மு முள்ளார்" (குறுந். 278: 3); "பாவையும் யானும் பண்புளிச் சூடுகம்" (பெருங். 2. 15: 112); 'புல்லிக்கொண்டு பாவை யைத் தந்தாள் என்றியைத்துப் பாவை மேலுள்ள அன்பால் அதனைத் தருவுழிப் புல்லிக்கொண்டு தந்தாள் என்றுரைப்பாருமுளர்' (சிறு. 200, பேர்.) என்பவற்றுல் விளங்கும்.

பாவை அயிர்க்குமென்றது, தலைவி பேதையாதலின்; பாவை என்பது தலைவியையே குறிப்பதாகவும் கொள்ளலாம்.

உரை. அயிராபதம் மயிற்கு மலை என்றது: மயில் மலையிடம் உறை வதாலும் அயிராபதம் மலை போன்ற வடிவுடைமை பற்றியும். தலைவ னேறிய யானை நிறம் அயிராபதத்தோடு உரு ஒத்தலாவது வெண்டுகில் பூட்டியிருத்தல்: "வெண்டுகில் பூட்டிய வேழக் குழவியும்", "மறுவில் வெண்டுகில் மருங்கணி பெறீஇ, அணைமிசை யமர்தந் தஞ்சுவரு வேழத்து" (பெருங். 1.39; 74, 2. 2: 36-37.)

(பி - ம்) 131. 'புனைந்த' 'திருமுத்தின் மாலையை' 'பின்னரும்' 132. 'லென்றும்', இவ்வாறே பின்னும் (134—9) உள்ளது.

134. தேன்வாழுந் தாமஞ்சூழ் தெய்வக் கவிகையை
மான்வாழ மாசின் மதியென்னும்—கோனுடைப்

135. பாங்குவளை யாழிப் பார்மடந்தை தன்னுடைய
பூங்குவளை மாலை புனைகென்னும்—தேங்கமலத்

136. தற்புத வல்லி யவளே பிறந்துடைய
கற்பக மாலையைக் காதலிக்கும்—பொற்பார்

137. பொலம்புரி காஞ்சிப் புகழ்மகட்கே தக்க
வலம்புரி மாலைக்கு மாழ்கும்—பொலன்முடி

138. போரார வாரப் பொலன்கொடி பெற்றுடைய
பேரார மாலைக்குப் பேதுறும்—நேரியன்

139. ஏந்திழை மாத ரெவர்க்கும் பொதுவாய
பூந்துழாய் மாலை புனைகென்னும்—வேந்தன்முன்

140. இவ்வகை யல்ல திலங்கிழையார் மால்கூரும்
அவ்வகை கூரா ளயலொருத்தி—எவ்வுலகும்

(ப - ரை) 134-40. குயில்போலும் மொழியினையுடையாள் (133) தேன்வாழும் தாமஞ்சூழும் தெய்வக் கவிகையைத் தனது மான் வாழு தற்கு மாசில்லாத மதியென்று கூறும். அரசனுடைய பகுதியாய் வளைந்த கடலைத் தனக்கு உடையாகவுடைய பார்மடந்தைதனக்கு உடைமையாய பூங்குவளைமாலை என்னுடைய மாலை; இக்குவளை மாலையை எனக்குப் புனைக என்று கூறும். தேங்கமலத்துக்கு அற்புதமாம் திருவின் செல்வி தன்னோடு பிறந்துடைய கற்பகமாலை என்னுடைய மாலையென்று காதல் கூரும். அழகு பொருந்திய சாம்பூநதத்தாற்செய்த காஞ்சியினையுடைய புகழ்மகளுக்கே தக்க வலம்புரிமாலைக்கு வருந்தும்; பொன்னினாற்செய்த தொடியினையுடைய விசயமகள் தனது போராரவாரத்தால் பெற்றுடைய பெருமையினையுடைய ஆத்திமாலைக்கு மயக்குறும்; தன் உடைமை யென் பது அறியாளாதலின், பேதைமையுறும் என்றுமாம். நேரிமலையை உடை யோனிடத்துப் பார்மடந்தை, பூமடந்தை, புகழ்மடந்தை, போர்மடந்தை யாகிய கடவுண்மகளிர்க்கும், கோவியுமகளிர்க்கும் பொதுவாகத் தனக்கு உடைமையாகப் புனைந்த துழாய் மாலையை, என்னுடைய மாலை இம்மாலை வாங்கிப் புனைகென்று கூறும் இவ்வகையல்லது வேந்தன் திருமுன்பு வணங்கி வாழ்த்தும் இலங்கிழையார் மால்கூரும் வதுவைக்குத் தான் காதல் கூராளாதலின், இவள் கருத்துச் சூழும் நிலைமையுடைத்தெனப் பவனி கண்டோர் கூறினரென்பது. சூழும் நிலைமை யாதெனில் உவமைப் பொருளுக்கு அமையாத பேதையாயிருந்து செல்வமகளாய் வேண்டிய வாறு கூறாமல் தலைவனுடைய முத்தமாலை, பள்ளித்தொங்கல், அயிரா பதம், தவளசத்திரம் ஆகிய இவையிற்றைத் தன்னுடன் வளரும் அன்னம், கிளி, பூவை, மயில், மான் என்னும் இவையிற்றுக்கு இடமாகக் கூறியும் அவனுடைய கடவுட்டேவிமார்க்கு உரிய மாலைகளைத் தன்னுடைய மாலை யெனப் புனைகவென்றும் கூறிய இதனால், இவனிடத்து இவளுக்கு உழுவ லன்பு உண்டென்ன விசாரிக்கும் தன்மையு (மு)டைத்தென (ப் பருவத் தன்மையும் பாவையுங்கருதி)க் காண்டற் கைக்கிளை முற்றுறக் கூறியவாறு காண்க. பேதை முற்றும்.

(கு - ரை) 134. தேன் - வண்டுகள். தாமம் - பூமாலை. தெய்வக் கவிகையென்றது அது தொழப்படும் தகுதியுடையதென்பதுபற்றிக் கூறியது; 'வளவன் வெண்குடையைக் காட்டித் தொழுமின் என்றூர்க்கு நிறைமதி தொழப்படாதாயினும் குடையோடு ஒப்புமைகண்டு தொழுத யாம் குடை தன்னைக் கண்டால் தொழுதல் சொல்லவேண்டுமோவென அதன் சிறப்புக் கூறியவாறு' (புறநா. 60, உரை.) 135. பாங்கு - பகுதி. பூமி தேவிக்குக் குவளைமாலை உரியது. 136. திருமகளுக்குக் கற்பக மாலையை யுரிமையாகக் கூறியது திருப்பாற்கடலில் கற்பகம் அவளுடன் பிறந்தமைபற்றி. 137. பொலம்புரி காஞ்சி - பொன்னாற் செய்யப்பட்ட காஞ்சியென்னும் ஆபரணம். வலம்புரிமாலை வெண்ணிறமுடையதாதலின் புகழ்மகளுக்கு உரியதாயிற்று; வலம்புரிமாலை - நந்தியாவர்த்தமாலை. போர் ஆரவாரப் பொலன் கொடி - துர்க்கை. 138. பேராரமாலை - பெரிய ஆத்திமாலை; இது சோழன் போர்க்களத்தே சூடும் மாலை; "விறற்படை மறவர் வெஞ்சமங்காணின், மறப்போர்ச் செம்பியன் மலைபூ வுரைத் தன்று", "மல்கும், கலங்க லொலிபுனற் காவிரி நாடன், அலங்க லமராழுவத் தார்" (பு. வெ. 242); "இளவரிக் கவட்டிலை யாரொ டேர்பெறத், துளவிய றும்பையின் சுழியஞ் சூடினான்" (கம்ப. 6. முதற்போர். 115.)

உரை. திருவின் செல்வி: குலோத்துங்கனுடைய தேவி. சாம்பூநதம் - நால்வகைப் பொன்னுள் உயர்ந்தது; "பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்பூநதம்" (திருவள்ளுவமாலை.) விசயமகள் - துர்க்கை. கோவியமகளிர் - ஆய்ச்சியர். செல்வமகள்: கலி. 50 : 14. தவள சத்திரம் - வெண்கொற்றக்குடை. உழுவலன்பு : எழு பிறப்பிலும் தொடர்ந்துவந்த அன்பு; பெருங். 1. 32 : 42. 133-40. பார்மகள் முதலியோர் : கம்ப. 6. இராவணன் வதை. 226.

(பி - ம்) 134. 'மான் வாழும்' 138. 'பேழ்கணிக்கும்'

[நயப்பு] [பெதும்பை]

141. முற்ற முடிக்க முடிக்காம வேள்சூட்டும்
கொற்ற முடியனைய கொண்டையாள்—அற்றைநாள்

(ப - ரை) அயல் ஒருத்தி (140) - பேதைப் பருவத்துக்கு அயலாகிய பெதும்பைப் பருவத்து ஒப்பிலாள்; அவள் தன்மை யாதெனின்.

உலகமென்பது உயர்ந்தோர் மாட்டாகலின், எவ்வுலகுமென்றது உலோகாயதனை யொழிந்த ஐவகைச் சமயகுரவரை; அவர் காமனே கடவுளென்ற கருத்துமுற்ற, அவர்கொண்ட வேறுபாடற எடுத்தவினை முடிக்கக்

காமவேள் விசயமகட்குச் சூட்டும் கொற்றமுடிபோலும் முடிக்கொண்டையாள்; கொற்றமுடி - வீராபிஷேகம். முடிக்கொண்டை - உச்சிக்கொண்டைமேற் கோளகை.

(கு - ரை) ஐவகைச் சமயங்கள்: பௌத்தம், ஆருகதம், மீமாஞ்சம், மாயாவாதம், பாஞ்சராத்திரமென்பதும் ஒருவகை; சூடா. 12 : 59. வீராபிஷேகம் - வீரமுடி. உச்சிக்கொண்டை மேற்கோளகை - உச்சிக்கொண்டை யென்னும் ஆபரணத்தின் மேலிடப்படும் பூண்.

(பி - ம்) 'கொங்கையாள்' 'இற்றைநாள்'

142. சாத்து மபிடேகத் தாரைபோற் றாழ்கின்ற
கோத்த பருமுத்தக் கோவையாள்—தேத்து

(ப - ரை) வீர விசய வபிஷேகஞ் சூட்டிய அந்நாளில் (141) சகசிர தாரையாற் செய்த தாராவபிஷேகம் போலும் பருமுத்தாற் கோத்துத் தாழவிடப்பட்ட தலைப்பாளையாள். இவ்விரண்டும் உவமையும் பொருளும் ஒத்த மெய்யுவமம். தேத்து - இவ்விடத்து.

(பி - ம்) 'கோத்த'

143. விடம்போற் பணிகட்கு வேழங்கட் கெல்லாம்
கடம்போற் கொலையூறுங் கண்ணாள்—அடங்கா

(ப - ரை) திகாந்தத்தில் நிற்கும் பணிகட்கெல்லாம் வேழங்கட்கெல்லாம், விடமூறுதற்கும், கடமூறுதற்கும் நிலைக்களமானவிடத்து வந்தூறும் விடம்போலவும், கடம்போலவும், கொலையூறுதற்கிடமாகிய கண்ணாள். வினைவிளைவிற்கு இடங்கூறலின் இது மெய்யுவமத்தின் பாற்படும்.

(கு - ரை) 142-3. சகசிர தாரைபோலும் முத்தக்கோவை; 'மாலை - சகசிர தாரையென்னும் முத்தக்கோவை' (தக்க. 106, உரை.) இவ்விரண்டுமென்றது அபிஷேகத் தாரையையும் முத்தக்கோவையையும். தலைப்பாளை: இது தொய்யகமென்றும் வழங்கும்; சிலப். 6 : 107, அரும்பத. உவமையும் பொருளும் ஒத்த மெய்யுவமம்; "உவமையும் பொருளு மொத்தல் வேண்டும்" (தொல். உவம. 8.) பணி - பாம்பு. திகந்தத்தில் நிற்கும் பாம்புகள்; 34. வேழம் - திக்கஜம். கடம்: 'இரண்டு மதம் கடத்திற் பிறத்தலிற் பன்மை பற்றிக் கடம் என்றார்' (சிற். 55, பேர்.)

144. வயிர்ப்பான் மறலி மகளுருக்கொ லீதென்
றயிர்ப்பா ரயிர்க்கு மழகாள்—உயிர்ப்பாவை

(ப - ரை) மறலி அடங்காத வயிர்ப்புடையானென்று, அவன் வினையைக் குறித்து ஐயப்படுவார், அவ்வினை மறுத்து ஐயப்படும் அழகாள். இதன் கருத்து மக்கள் செய்த வினைமுடிவு அறிந்து உயிர்கோடல் இயல்பாகவுடைய மறலி, சோழேசனுக்கு வழக்காலும் வலியாலும் தோற்று மக்கள்மேல் உயிர்கோடல் வினை மாறித், தன்வினை செல்லுமளவும் அடங்காத வயிர்ப்பானுதலின் அவன் தன் உருவை மறைத்துக்கொண்ட பெண்ணுருவங் கொல்லோ என்று ஐயப்படுவார், அவன் தென்றிசைக் கடவுளாதலின் தன் தன்மையொழியப் பெண்ணுருவங் கொள்ளானென்று மறுத்து ஐயப்படுமழகாள். அழகு - மெய்யழகும், உருவழகும்; இஃது ஐயவுவமை. அடங்க வயிர்ப்பான் என்று பாடமோதின் மறலி அரசனுக்குச் செல்லும் உலகம் அடங்க வயிர்ப்பானென்றுமாம். மறலி உருக்கொல், மகளுருக்கொல் என்று அயிர்ப்பார் இரண்டுமல்லவென்று தன்னை ஐயப்படும் அழகாள் என்றுமாம். மக்கள் உயிர் கோடற்கே எமதூதியென்னும் மகள் கொண்ட உருக்கொல் இதுவென்று ஐயப்படுவார், எமதூதி தன்னுருவந் தெரியாமலடங்கிநின்று கொல்லும்; இது வெளிநின்று கொல்லும் என்று மறுத்து ஐயப்படும் அழகாளென்றும் ஒரு பொருள். மறலி என்றும் மக்கள் உயிர்கோடல் இயல்பாகலின் அயிர்ப்பு வேண்டாமையின் முன்னதே பொருளென்பது பெற்றும். ஐயப்படுவாரென்றது நுண்ணுணர்வின் ஆராய்ச்சியுடையாரை. கொண்டையாள், கோவையாள், கண்ணுள், அழகாள்.

(கு - ரை) வயிர்ப்பு - வயிரம்; "வயிர்த்தன ணிலத்தினுயர் வானமினிதென்பாள்", "நனிவர வயிர்த்த போது நவியமு மடியு மன்றே" (வி. பா. சம்பவச். 102, சூதுபோர். 11.)

உரை. மறலி சோழேசனுக்கு வழக்கால் தோற்றது: 6. யமன் சோழனுக்கு அஞ்சிப் பெண்ணுருவங் கொண்டது; "மன்னவன் செங்கோன் மறுத்த லஞ்சிப் பல்லுயிர் பருகும் பகுவாய்க் கூற்றம், ஆண்மையிற் றிரிந்துதன் னருந்தொழி றிரியாது, நாணுடைக் கோலத்து நகைமுகங் கோட்டிப், பண்மொழி நரம்பிற் றிவவியாழ் மிழற்றிப், பெண்மையிற் றிரியும் பெற்றியு முண்டென", "வேண்டுருவங் கொண்டு வேறோர், கொலைவே னெடுங்கட் கொடுங்கூற்றம் வாழ்வது" (சிலப். 5 : 218-23, 7 : 10); "வெறுப்பினால், வேண்டுருவங்கொண்டதோர் கூற்றங்கொல்" (கலி. 56 : 8-9); "கன்னி ஞாழல் கமழ்பூங் கானல் யான்கண்ட, பொன்னங் கொடியை யீன்றோ ரில்லை போலுமால், மன்னன் காக்கும் மண்மேற் கூற்றம் வரவஞ்சி, இன்ன தொன்று படைத்த தாயி னெவன்செய்கோ" (தொல். செய். 155, பேர். மேற்.) உரு - நிறம். ஐயவுவமை: உவமையையும் பொருளையும் ஐயுற்றுரைப்பது; தண்டி. 31.

145. கொல்லிக்கு முண்டுயி ருண்மைத்ரி கூடத்துச்
சொல்லிக் கிடக்குந் துணைமணிக்கும்—வல்லி
146. இதற்கு நடைவாய்த் துயிர்வாய்த்த தென்ன
மதர்க்கு மொருதிரு மாது—முதற்றன்

(ப - ரை) 145-6. மெய்யழகாலும், உருவழகாலும் வேறு சொல்வது எதெனவினவின் உயிரில் பாவை கொல்லிக்குமுண்டு. அதற்கு மெய்யழகால் உயிருண்ணுந் தன்மை சொல்லிக் கிடக்கும்; திரிகூடத்துத் துணைமணிக்கும் உருவழகால் உயிருண்ணுந் தன்மை சொல்லிக் கிடக்கும். இவை கண்டறிவாறில்லை. வல்லிசாதிக் கொடியாகிய இதற்கெனக் கொலைக்கு ஆதாரமாக நடையும் உயிரும் வாய்த்தனவாதலால் இது கொலைக்குக் காரணமாக உலகங்கூறும் மூவகையினுமல்ல; இவ்வல்லி, "நல்கூர்ந்தார் செல்வ மகள்" என்று அயிர்ப்பார் துணியும்படி மதர்க்கும் தன்மையையுடைய ஓர் மாது.

இஃது உவமை மறுத்துப் பொருளைப் புகழ்ந்தது. உயிர்ப்பாவை உலகோரறியக் கொல்லும்பாவை யென்றுமாம். மூவகை-காலம், வினை, இடம். இவ்வாறு காமஞ் சாலா இளமைப் பருவத்துக் கைக்கிளையான நயப்பு விளங்க.

(கு - ரை) 144. உயிர்ப்பாவை - உயிரையுடைய பாவை. 145. உண்மை - உண்ணுந்தன்மை. திரிகூடம் - இலங்கையிலுள்ள திரிகூட மென்னும் மலை. துணைமணி: இது தன் உருவழகால் உயிரைக் கொல்லும்; "செம்மணிச், செஞ்சோதி சிங்களத்தை மாற்றினுஞ் செக்கரிளம், வெஞ்சோதி கண்டால் விலக்காயால்" (375-6) என்பர் பின்னும்; "மாணிக்கக், கோவையான் முக்குவட்டுக் குன்றூ யொருதிருப், பாவையாற் கொல்லிப் பனிவரையாய்" (இராசராச. 65-6); "காவ விலங்கை விலங்கல் கிழித்திருள் கான்மணி கைப்படவும்" (குலோத். பிள்ளைத். சப்பாணி. 10.)

உரை. மெய்யழகுக்குக் கொல்லிப்பாவையும் உருவழகிற்குத் திரிகூடத்துத் துணைமணியும் வேறு வேறு சொல்லப்பட்டன. கொல்லிப் பாவை தன் சிரிப்பால் உயிரை உண்ணுமென்பர்; "திரிபுரத்தைச் செற்றவனுங் கொல்லிச் செழும்பாவை யுஞ்சிரிக்கக், கற்றதுவு முன்னகையைக் கண்டன்றோ" (சித்திரமடல், 90-91); "மேனகையுங் கொல்லி மலை மேனகை செய்தாளும் வெட்க" (குறுங்குடி நம்பியுலா, 145.) திரிகூடத்துத் துணைமணி இசைக்கு உருகுமென்பர்; "வாவிய பொற்பரியாவூரில் வீரையன் மைந்தபஞ்ச, காவியர் தேர்கின்ற தீத்தாணின் கீதத் திற் காவலர்தம், ஓவிய சாலையெயல் லாங்கொல்லி யாவுள் ளுருகும்ரத்ன,

மேவிய கூடமெல் லாந்திரி கூடத்தின் மேற்படுமே" (தமிழ்நா. 249.) வல்லி சாதிக்கொடி யென்றது, கொடியென்னுஞ் சொல் துவசத்தையுங் குறித்து வருவதால் அதனினின்றும் வேறுபடுத்துவதற்கு. கொலைக்குக் காரணமாக உலகங்கூறும் மூன்று பொருள் யமன், கொல்லிப்பாவை, திரிகூடத்துமணி. நல்கூர்ந்தார் செல்வமகள்: கலி. 56 : 12. உவமை மறுத்துப் பொருளைப் புகழ்ந்தது: இதனை உண்மையுவமை யென்பர் தண்டியாசிரியர்; 31. காலம், வினை, இடம் என்ற மூன்றும் முறையே யமனுக்கும் கொல்லிப்பாவைக்கும் திரிகூடத்து மணிக்கும் உரியன. காமஞ் சாலா இளமைப்பருவம்: தொல். அகத். 50. கைக்கிளையான நயப்பு: பு. வெ. 15.

(பி - ம்) 145. 'த்ரிகூடத்தில்' 146. 'உயிர் பெற்றதென்ன'

147\. பணிவாயி லாயம் பரந்தகலக் கிள்ளைக்
கணிவாயின் முத்த மருளி—மணிவாயாற்

148\. சொல்லா யெனக்கன்னை சொல்லாயோ நீயன்றே
வல்லாய் பிறவறிய வல்லவோ—கல்லரணக்

(ப - ரை) 147-8. முதற்பாடு தன் (146) பணிவிடையிலே ஆயவெள்ளம் பரந்து செல்லக் கற்பித்து அதன் பின்னராகத் தான் வளர்த்த கிள்ளையை யெடுத்து அதற்குத் தன் அழகிய வாயில் முத்தமருளிப் 'பவள மணிபோலும் வாயாற் சொல்லாய்; எனக்கு ஆத்தாள்' என, அது கூறியது கூறுங் கிளியாதலின் இவள் கருத்து அறியாதிருப்ப 'யான் கேட்டதற்கு ஒன்று சொல்லாயோ' என்று அதற்கு அச்சமுறீஇ 'நீ காண் அறிந்து சொல்லவல்லாய்; பிறவல்லவோ' என்று எதிர்மறுத்துப் பறவைப் பிறப்பில் வைத்துக்கொண்டு 'நம்மரசன் அசுர நிரசன காரணத்தால் சண்டிகள (?) மூர்த்தியான காலையில் அவர்க்குத் திவ்விய தேவராசியமாகத் தெய்வவுலகத்துக்குக் கூறுமவை அவ்வுலகத்துச் சென்று நெற்கொணர்ந்த நீ அசுரரைச் சீந்து போராழித் தடக்கை யபயற்கு (149); வாழியாய் - அவன் செல்வமே; கிளிக்கு ஆகுபேர்; வாழியாய் - வாழ்வாயாக வென்றுமாம்; தேவவுலகத்து நெற்கொணர்ந்து இவ்வுலகத்து உயிர் வாழுந் தன்மை செய்தலின்.

(கு - ரை) 147, மணிவாய் - பவளத்தைப் போன்ற வாய்; "மாசிலங்கை மணிமரு ளவ்வாய்" (அகநா. 16 : 3.)

உரை. முதற்பாடு-முதல்; இது பிற்பாடு என்பது போல்வதோர் சொல்: 'பிற்பாடு: ஒரு சொல்' (சிலப். 13 : 1, அடியார்.) ஆத்தாள் - தாய். கூறியது கூறுங்கிளி: "கிளிப்பிள்ளை, சொன்

னத்தைச் சொல்லுமென்று சொல்லப் பெயர்கொண்டாய்'' (அழகர் கிள்ளை விடுதூது, 46-7.) அசுரநிரசனம் - அசுரர்களை யழித்தல், தேவராசியம் - தேவரகசியம்; ''செவிராசி யங்கடந்த சேறைக் கவி ராசன்'' (சேயூர் முருகனுலா, 152-3) சீந்து - கோபிக்கின்ற; ''சீந்தா நின்ற தீமுக வேலான்'' (சீவக. 1055.) சோழன் கிளிவடிவமாகச்சென்று நெற்கொணர்ந்தது: 201, உரை; இவ்வரலாறு இன்னதென்று தெரிய வில்லை. முசுகுந்த சோழன் கிளி வடிவுடன் தேவலோகஞ் சென்று பின் சிவபிரான் அருள்பெற்று மீண்ட வரலாறு ஒன்று ஈட்டியெழுபது என் னும் நூலால் அறியப்படுகின்றது. ஈட்டி. 52. உரை.

(பி - ம்) 148. 'நீயன்றி' 'வல்லரணக்'

149. கோழித் திருநகரக் கொற்றவற்கு வெற்றிப்போர்
ஆழித் தடக்கை யபயற்கு—வாழியாய்

150. காக்குங் கடலேழு மாடுங் கடாரமோ
ஆக்கு நதியேழு மாரமோ—தேக்கிய

151. பண்ணேழுங் கன்னுவ தங்கிசமோ பண்டளந்த
மண்ணேழும் வாகு வலயமோ — தண்ணறுந்

152. தூவ னறவப் பொழிலேழுந் தொங்கலோ
காவன் மலையேழுங் கந்துகமோ—ஏவலால்

153. செய்யு நலனுடைய கோளேழுந் தீபமோ
பெய்யு முகிலேழும் பேரியமோ—வையகம்

154. கூறு மவையிவை யென்று குறுந்தொடி
வேறு தனிவினவும் வேலைக்கண்—சீறும்

(ப - ரை) 149-54. நின்னை வாழியாகவுடைய ஆழித்தடக்கை யப யற்கு அந்த மூர்த்தத்திற்குத் திருமஞ்சனஞ் செய்தற்குக் கடாரம் காவ லான கடலேழுமோ? திருமார்பிற்கு ஆரமாக்கப்பட்டவை நதியேழுமோ? செவிப்பூ தேக்கப்பட்ட இசையேழுமோ?; செவிப்பூ - செவித்தார். தேக்குதல் - நிறைதல். வாகுவலயம் முன்பு அளந்த மண்ணேழுமோ? தண்ணென்று நறுவியவாய தூய மாலை தருவன பொழிலேழுமோ? ஆடு கந்துகம் காவல்மலை யேழுமோ? நெறிமுறையில்தான் ஏவலால் ஏவல் செய்யுங் கோளேழும் நலனுடைய தீபமோ? காலம் பிழையாமற் பெய் யும் முகிலேழும் பெரிய வாச்சியமோ? இவையென்று வையங் கூறு மவையோ, நீ நெற் கொணரச் சென்ற காலையிலே தேவவுலகத்துக் கூறு மவையோ வேறு சில வுளவோவென்று குறுந்தொடி ஆயமுந் தாயருங்

கேளாமல் (154) அவன் புகழும் வீரமும் உழுவற்றன்மை தோன்ற நயப் புற்றுத் தனியிருந்து வினவும் எல்லையிடத்து.

(கு - ரை) கல்லரணம் (148) - கன்மதிலாகிய அரணையுடைய. 149. கோழி - உறையூர்; இப்பெயரின் காரணம், சிலப். 10 : 247-8-ஆம் அடிக ளின் உரைகளால் விளங்கும். 150. கடாரம் - பாத்திர விசேடம்; 52. நதிக்கு ஆரம் : தக்க. 280. 151. பண்களைக் கன்னவதங்கிசமாகக் கூறி யது காதாற் கேட்கப்படுதலின்; கன்னவதங்கிசம்: "மணிக்குழை சேர், காதின் மிகை நீலங் கைபுனைவீர்'! (தண்டி. 42, மேற்.) மண்ணேழென்றது ஏழு தீவுகளை. அவற்றை வாகுவலயமாகக் கூறி யது அவற்றைத் தோளிற் சுமத்தல்பற்றி; "சிறந்தநன் னாடு செகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப" (பொருந. 137-8); "பூசக்ர கேயூரன்" (158) என்பர்பின் (152). பொழிலேழு : தக்க. 70, 404, 571. மலையேழு : "ஒருநின், சிலம்புக ளோரேழுஞ் சென்றடைந்து நோலேன்" (363-4.) கந்துகம் - பந்து. கோள்கள் ஏவல் செய்தல் இவனுடைய செங்கோன்மைபற்றி; மதுரைக். 6-9; பதிற். 69 : 13-5; "கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியும்" (மணி. 7 : 8.) குறுந்தொடி - சிறிய தொடியணிந்த பெதும்பை: அன்மொழித்தொகை.

கண்ணிகள் : 150 - 152 இல் உள்ளன.

கடலேழு:—உப்புக் கடல், கருப்பஞ்சாற்றுக் கடல், மதுக்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், சுத்தநீர்க்கடல். நதியேழு :—கங்கை, யமுனை, நருமதை, சரஸ்வதி, கோதாவரி, காவேரி, ஸிந்து, பண் ணேழு :—குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம். பொழிலேழு :—நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், இலவம், தெங்கம், புட்சரம். மலையேழு :—இமயம், மந்தரம், கைலாசம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம் கந்தமாதனம். முகிலேழு :—புட்கலம், ஆவர்த்தம், சங் காரம், ஆசவனம், நீர்க்காரி, சொற்காரி, சிலாவருடம்.

(பி - ம்) 149. 'ஆழித்திருக்கை' 154, 'வினவுமேல்வைக்கண்' 'வினவுமெல்லைக்கண்'

155. ஒருத னடியின் மடிய வுபய
மருது பொருத வயவன்—விருதன்
156. விலையி லமுத மதன விமலை
முலையின் முழுகு முருகன்—வலைய
157. கனக சயில வெயிலி கணவன்
அனக னதுல னமலன்—தினகரன்

158. வாசவன் றென்னன் வருண னளகேசன்
கேசவன் பூசக்ர கேயூரன்—வாசிகை

159. ஆழிப் பெருமா னபய னனபாயன்
சூழிக் கடாயானை தோன்றுதலும்—தாழாது

(ப-ரை) 155. விருதன் - விபூருதன். 156. முருகன் - புதுமண வாளன். 157. அனகன் - பாபரஹிதன். 158-9. தருமநேமியைத் திருவாசிகையாகவுடைய பெருமான். சூழி - முகபடாம். வினவுக்கு உத்தரமாம் முன்னே அரசனுடைய யானை தோன்றுதலும்.

(கு-ரை) 155. உபயமருது - இரண்டு மருத மரங்கள்; பாகவதம், 10 : 4; இவனைக் கண்ணபிரானாக நினைந்து கூறியது. விருதன் - வீரன்; கலிங்கத். போர் பாடியது 43. 156. அமுதமதன விமலை - திருமகள்; மதனம்-கடைதல். 156-7. முருகன் - இளையோன்; அழகனுமாம். வலைய கனகசயில எயிலி - வட்டமான பொன் மலையாகிய மதிலையுடைய பூமி; கனகசயிலமென்றது சக்ரவாளகிரி பொன்னிறமுடையது என்பதுபற்றி; தக்க. 2, உரை. அதுலன் - ஒப்பற்றவன். தினகரன் - சூரியன். 158. வாசவன் - இந்திரன். தென்னன் - கூற்றுவன்; தக்க. 684. உரை. ஈகையால் வருணனையும், செல்வத்தால் அளகேசனையும் ஒப்பான். அளகேசன் - குபேரன். பூசக்ரகேயூரன்: "பண்டளந்த, மண்ணேழும் வாகுவலயமோ" (151.) ஆழி வாசிகை யென மாற்றுக; வாசிகை - செறியத் தொடுத்த மாலை; திருவாசியுமாம். 159. ஆழி - ஆக்ஞாசக்கரம்; "அடலாழி தனியேவு குலதீப ந்ருபதீபன்" (தக்க. 6.) அபயன் - பய மில்லாதவன். அனபாயன் - பகைவர்களிடமிருந்து அபாயமில்லாதவன்; இவனுக்கு இப்பெயர் பெரியபுராணத்திற் பலவிடங்களிற் காணப்படும்.

உரை. புதுமணவாளன்; சீவக. 420, ந. பாபரஹிதன் - பாபங்களி னின்று நீங்கியவன். உத்தரம் - விடை.

(பி-ம்) 156. 'முதல்வன்' 159. 'ஆழிப் பெருமாள்'

160. சென்று டிருமுன்பு செந்தளிர்க் கைகுவித்து
நின்று ளினிவறிதே நிற்குமே—என்றுலும்

(ப-ரை) யானை தோன்றிய வளவிலே தரிகொடாமற் றிருமுன்பு சென்றாள். சிவந்த தளிர்போலும் கைகுவித்து நின்றாள். அதுகொண்டு அருத்தி அறிவார் (177) முற்பட்ட பேதைப் பருவம்போல் அணங்காளாய் இவ்விடத்தே நில்லாளெனத் தம்மிற்கூறி. ஏகாரம் எதிர்மறை.

(கு - ரை) உரை. தரிகொடாமல் - நில்லாமல். எதிர்மறை யேகாரம் ‘ நிற்குமே’ யென்பதிலுள்ளது.

161. கோடு கழல்கண்டல் கொண்டற்கு மாலதி
ஒடு நகாதே யுடையாதே—பீடுற

(ப - ரை) நில்லாமைக்குக் காரணங் கூறுவார்போல மங்கைப் பருவத்தே தலைப்பட்டாள் என்பது குறிப்பாற் கூறினர். மங்கைப் பருவத்தொழிந்து விரகமில்லையென்ன வேண்டா; இப்பருவத்திலே அங்குரித்து அப்பருவத்திலே நிரம்புமென்பது இவர் குறிப்பாயிற்று. பின்பனிப் பருவத்துக் கொண்டற்காற்று நாயகமாக மலரும் கண்டலும் மாலதியும். கிளியுடன் நயப்புக் கூறியது உணராத ஆயமுந் தாயரும் மாலதி காலை மலராகாமை தேற்றங்கூறக், கிளியுடன் நயப்புக் கூறியது சிறைப்புறமாக அறிந்த அருத்தியறிவார், கொண்டற் காற்றுக்கு அரும்பிய மாலதி காலைப் பூவான கண்டலுடனே மலராதொழியினும் மாலைப் பொழுதின் மலரா மென்பது தோன்ற முகையாது ஒழியுமேயென்று அவர் தேற்றத்தைப் பிரிநிலை செய்தது.

(கு - ரை) கண்டல் - தாழை. கொண்டல் - கீழ்காற்று. மாலதி - மல்லிகை வகையுள் ஒன்று. ஒடு - புறவிதழ்.

உரை. விரகம் - இங்கே காமம் என்னும் பொருளது. அங்குரித்து - முளைத்து. பெதும்பைப் பருவத்தில் காமம் தோன்றி மங்கைப் பருவத்தில் வெளிப்படுதல்; “ காதலெனும், வித்தங் குரித்துவளர் மென்பூஞ் சிறு கொடிக்குச், சித்தங் கொழுகொம்பாஞ் செய்கையினுள் ” (கடம்பர் கோயிலுலா, 172-3.) கொண்டற்காற்று நாயகம். ‘ நாயகவாசி ’ என்பர் பின் ; 163, உரை. சிறைப்புறமாக - வேலிப் பக்கமாக. பிரிநிலை செய்தது என்றது உடையாதே என்பதிலுள்ள ஏகாரத்தை நோக்கி.

(பி - ம்) ‘ நெகாதே ’

162. வந்து தொடுங்குன்ற வாடைக் கிளங்கொன்றை
கொந்து தொடாதே குழையாதே—செந்தமிழ்த்

(ப ரை) பருவப் பொருண்மைக் கேற்பக் கிளியுடன் தலைவன் வீரமும் புகழும் வினவினள். இனி இந்தப் பவனியில் குழையாதே : அரும்பின காமம் மலர்தற்குப் பொழுது வேண்டுதலின். பெருங்காற்றாக வந்து தீண்டும் குன்றவாடைக்கு இளைய கொன்றை பூங்கொத்துத் தொடாதே யெனத் தேற்றங்கூற, அக்காற்றுக்குக் கொந்து தொடாதொழிந்தாலும் குழையாது ஒழியுமோ என அவர் தேற்றத்தைப் பிரிநிலைசெய்தது.

(கு - ரை) பருவப் பொருண்மை நயப்பு. அரும்பின காமம்: "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்" (குறள், 1227.) குன்றவாடை; குன்று - இமயமலை. கொந்து - கொத்து.

(பி - ம்) 'வந்த கொடுங்குன்ற', 'வந்து கொழுங்குன்ற' 'கொடாதே'

163. தென்ற லெதிர்கொண்ட தேமாங் கொழுங்கன்று
மன்றல் கமழாதே வாழாதே—என்றுபோய்

(ப - ரை) செந்தமிழை யளைந்த தென்றலென்று நாயகவாசி யறிந்து தேமாவின் கொழுவிய கன்று மணத்தை முகிழாதேயெனத் தலைவி செவ்வி யெளிமை கொண்டு தேற்றஞ்செய்ய, நாயகவாசி யறியாதாயிற் றென்றலுக்குத் தழைத்து வாழாதே; தழைத்தது நாயகவாசி யறிந் தன்றேவென நயப்புக் கூறியது குறிப்பாற்கூறி அவர் தேற்றத்தைப் பிரிநிலை செய்து, இனி வறிதே நில்லாளென்று நயப்பைத் தேற்றஞ் செய் தது. போய்க் கொண்டற்கும் குன்றவாடைக்கும் தென்றற்கும், மாலதி யொளி முகையும் இளங்கொன்றையும் தேமாவும் தழைத்து வாழுமது போல நின்றாள்; இனி வறிதே நிற்குமே. தலைவன் புகழும் வீரமும் நயந்து கிள்ளையுடன் கூறியது ஆயத்துள்ளாரும் தாயரும் அறியார்; தலைவனுமறியான்; பயின்ற ஆயத்தையும், தாயரையும் மறைத்துக் கிளியுடன் கூறலால் தனது நயப்புப் பயன்கொள்ளாமல் இனி இவள் ஒரு சார்பற்று வறிதே நிற்குமே என்று அருத்தியறிவார் (177) நொந்தா ரென்றாலும் கோடு கமழ்கண்டல் கொண்டற்கு மாலதி ஓடு நகாதே, உடையாதே யென்றாலும், கோடுதோறுங் கமழுங் கண்டல், மாலதி இரண்டும், கொண்டற் காற்றுக்குப் புறவிதழ் ஒளி பெறாதே மலராதே. என்றுபோய் - என்று கூறித் தலைவியருகே சென்று. குன்ற வாடைக்கும் தென்றற்கும் கொன்றையும் தேமாவும் பூத்தொழிந்து தழைத்து வாழாதே யென்றருகு சென்று என்றும் ஒரு பொருள்.

(கு - ரை) உரை. செந்தமிழ்த் தென்றல்: "தென்னந் தமிழி னுடன் பிறந்த சிறுகால்" (மீனாட்சியம்மை பிள்ளைத். தாலப். 1); "தோடு கமழ் சந்தன வனத்திடை துளைந்தே, நீடுதமி ழின்சுவை யளைந்து... வாடைமிசை தென்றல்புகும் வையை வளநாடு" (அருணாசல புராணம்.) நாயகவாசி: 160-61. உரை. நயப்பு பயன் கொள்ளாமை; நயப்பு இப் பருவத்திற்குரிய கைக்கிளை.

164. கூதள வல்ல துணைமுலை தூயகண்
காதள வல்ல கடந்தனபோய்—மாதர்

165. உருவத் தளவன் றொளியோக்க மாக்கம்
பருவத் தளவன்று பாவம்—தெருவத்

(ப - ரை) நயப்புடனும் காட்சியுடனும் சூதளவல்லவாய துணைமுலை விரகு அறியாது தூயவாயின; கண் காதளவல்லவாய் அவ்வெல்லையை விட்டுக் கடந்தன. இப்பெதும்பைப் பருவத்து மாதர் உருவத்தின் அள வன்று, ஒளியினது மிகுதியும் வளர்ச்சியும்; பருவத்தினளவல்ல மெய்ப் பாடென இருவகைப் பொருட்கும் ஒப்பமுடிந்தது. மெய்ப்பாடு விளக்கு வார்.

(கு - ரை) சூது - சூதாடுதற்குரிய கருவி. துணை - இரண்டு. ஒக் கம் - மிகுதி. ஒப்பு "சூதள வளவெனு மிளமுலைத் துடியள வளவெனு துண்ணிடைக்; காதள வளவெனு மதர்விழிக் கடலமு தனையவர்" கலிங்கத். கடைதிறப்பு. 21.)

உரை. விரகு - சூது. இரு வகைப்பொருள் நயப்பும் காட்சியும்.

(பி - ம்) 165. 'யூக்க மாக்கம்' 'தளவல்ல பாவம்'

166. துடைவ துடையாதா முள்ள முறவோர்ந்
தடைவ தடையாதா மச்சம்—கடைகடந்து

167. சேயினு நல்ல பெருமா டிருத்தடந்தோள்
தோயினுந் தோய மனந்துணியும்—ஆயினும்

(ப - ரை) புகுமுகம் புரிதல் விளங்கக் கண் காதளவகன்று கடந்தன. சிதைவு பிறர்க்கின்மை தோன்றத் தெருவிடத்து உடைவதும் உடையாது மாமுள்ளம் பொறி நுதல் வியர்த்தல் தோன்ற அச்சம் அடைவதும் அடையாததுமாம். இம்மெய்ப்பாடு பிறத்தலின் சேயினும் நல்ல பெரு மாள் திருத்தடந்தோள் தன்னிடத்து வந்து தோயினும் உங்கள் காவற் கடையைக் கடந்து தோய மனந்துணியும்.

(கு - ரை) சேயினும் நல்ல பெருமான் - முருகனிலும் அழகிற் சிறந்த பெருமான். விக்கிரம. 122.

உரை. புகுமுகம் புரிதல் - தலைமகன் காண்டலைத் தலைமகள் வேட்டல். சிதைவு பிறர்க்கின்மை - உள்ளம் சிதைந்து நிறை அழியு மாகலின் அச்சிதைவு புறத்தார்க்குப் புலனாகாமை நெஞ்சினை நிறுத் தல். பொறிநுதல் வியர்த்தல் - தலைமகன் தன்னை நோக்கியவழி உட் கும் நாணும் ஒருங்குவந்து அடைதலின் வியர்பொறிக்கும் நுதலளாதல்.

(பி - ம்) 166. 'முடைய துடையாதாம்' 'உமவோர்த்' 'தடை கடந்து', 'கடல் கடைந்து'

168. ஏந்து தடந்தோ ளிணைப்பணைப்புக் கண்டிலன்
காந்து தனதடங் கண்டிலன்—பூந்தடந்

169. தேரி னகலுந் திருந்தல்குல் கண்டிலன்
காரி னெகிழளகங் கண்டிலன்—மாரவேள்

170. எய்யு மொருகருப்பு வல்வில் லெடுத்தானே
கொய்யு மலரம்பு கோத்தானே—தையன்மால்

(ப-ரை) 168-70. முதல் மெய்ப்பாடு தோற்றுவாய் செய்ததாயினும் புணர்ச்சி நிமித்தமான தடந்தோளிற் பணைப்புடன் ஏந்துந் தன்மையான இருகையு மெடுத்தல் கண்டிலன்; தனதடத்து அழகான புளகமும், ஊழணிதைவரலும் கண்டிலன். காரின் நெகிழளகமெனக் கூழை விரித்தல் கண்டிலன். மாரவேள் மனவிஜனான காமன் அது காணாமையாலே எய்தற்றொழில் கருதி ஒப்பற்ற வல்வில்லை யெடுத்தானோ; அதுவுமில்லை; கொய்யும் மலரம்பு கோத்து ஆவமான தூணியைக் கட்டினானோ வென்னில் அதுவுமில்லை.

(கு-ரை) 168. பணைப்பு-பெருத்தல். காந்து-ஒளி விடுகின்ற. தனதடம்: "தனதடங்கண் மிசை நகநடந்த குறி" (கலிங்கத். கடைதிறப்பு 26); தடம்-உயர்ந்த இடம்; (சிற். 4, பேர்.) 169. தடந்தேரின்-பெரிய தேரைப்போல. காரின் நெகிழ்-கரிய மேகத்தைப்போல அவிழ்ந்த. 170. கருப்பு வல்வில்-பல இலக்குக்களையும் ஊடுருவிச் செல்லும் கரும்பாகிய வில். வல்வில்லின் தன்மை, புறநா. 152 : 1-6-ஆம் அடிகளாலும் அவற்றின் அடிக்குறிப்பாலும் விளங்கும்; வல்வில்லிராமன் என்பது புள்ளம் பூதங்குடித் திருமால் பெயர்.

உரை. முதல் மெய்ப்பாடு: 'ஒருவனு மொருத்தியு மெதிர்ப்பட்டவழி அவ்வெதிர்ப்பாடு தொடங்கிப் புணர்ச்சியளவும் மூன்று பகுதியவாம் மெய்ப்பாடெனவும், புணர்ச்சிப் பின்னர்க்களவு வெளிப்படுந் துணையும் மூன்று பகுதியவா மவையெனவும் அவையாறும் ஒரோவொன்று நந்நான்கு பகுதியான், ஒன்றன்பினொன்று பிறக்குமெனவும் கூறுகின்றான்' (தொல். மெய்ப். 13, பேர்.) இருகையுமெடுத்தல் - படைத்துக்கொண்ட வலியானுந் தடுக்கப்படாது நிறையழிதலின் கைகள் தாமே முயங்கல் விருப்பத்தான் எழுவனபோல்வதோர் குறிப்பு. தனதடத்துப் புளகம்: "புதிய கச்சணி குரும்பைக ளரும்பின புளகம்" (வி. பா. அருச்சுனன் தீர்த்தயாத்திரைச். 69.) ஊழணி தைவரல் - கூழையுந் தோடும்போலப் பெய்யப்படும் முறைமையவாகிய வளைகளை முன்கைமேல் இறுகச் செறித்தலும் விரற்செறியினைத் திருத்தலும் முதலாயின. கூழை விரித்தல்;

'மெய்யும் மெய்யுந் தீண்டிய வழி மெல்லியல் மகளிர்க்கு வரும் வேறுபாடு நான்கனுள் முதற்கண்ணது தெனப்படும். என்னை ? தன்னுள்ளத்தில் நிகழ்ந்த வேறுபாட்டினை அக்காலத்தில் தலைமகள் நிறையுடையளாதலால் கரந்தொழுகற்பாலளே ; அங்ஙனம் கரக்குங்கால் தன் வயத்ததாகிய உடம்புபற்றி வரும் வேறுபாட்டினைத் தாங்கும் ; அங்ஙனந் தாங்குங்கால் உடம்பொடு தொடர்புடைய வேறுபட்ட தலைமயிரினது முடி உள்ள நெகிழ்ச்சியானே தன் வயத்தன்றி நெகிழும்' (தொல், மெய். 14, பேர்.)

(பி - ம்.) 168, 'காந்தி மதிவதனம்' 169. 'காரி ளிருளளகம்' 170. 'தையலும்'

171. மந்தா கினிக்கோன் றிருப்புருவ வார்சிலையும்
செந்தா மரைக்கண்ணுஞ் செய்ததென—நொந்தார்

(ப - ரை) தையலிடத்து முதல் மெய்ப்பாடு தோன்றுதற்குக் காரணம் யாதெனின் மந்தாகினிக்கோன் திருப்புருவ வார்சிலையும், "மோகமரவிந்தம்" என்றலின் தாமரை யிதழ்போலுங் கண்ணும் செய்வித்ததே இதுவென்று தேற்றமுறக் கூறி நொந்தார் எனக் கூட்டுக.

(கு - ரை) மந்தாகினிக்கோன் - இரண்டாங் குலோத்துங்கன் ; 8; விக்கிரம. 82.

உரை. மோகம் அரவிந்தம் : இச்செய்யுள் இன்ன நூலிலுள்ளதென்று தெரியவில்லை. மன்மதனுடைய பாணங்கள் திரவியபாணம் என்றும், பாவபாணமென்றும் இருவகைப்படுமென்பர் ; சீவக. 706, ந.

(பி - ம்.) 'செய்தவென', 'செய்தவே'

172. வளைத்தளிர்ச் செங்கை மடுத்தெடுத்து வாசக்
கிளைத்தளிர்ப் பாயற் கிடத்தித்—துளைத்தொகை

173. ஆய்க்குழ லென்று லதுவு மவனூதும்
வேய்க்குழ லென்று விளம்பியும்—தீக்கோள்

174. நிகழ்நிலா வன்று நிருபகுல துங்கன்
புகழ்நிலா வென்று புகழ்ந்தும்—இகலிய

175. பல்லிய மன்று பரராச கேசரி
வல்லிய மென்று மருட்டியும்—மெல்லிய

176. கல்லார மன்று கதிரோன் றிருமருமான்
மெல்லார மென்று விளம்பியும்—நல்லார்

177. அருத்தி யறிவா ரவையிவை யென்று
திருத்தி விடவிடாய் தீர்ந்தாள்—ஒருத்தி

(ப - ரை) 172-7. உழுவற்றன்மையாலே நயப்புத் தோன்றி நயப்பாலே முதல் மெய்ப்பாடு சிறப்ப ஆயமுந்தாயரும் தலைவனுமறியாமல் தலைவிக்குண்டான அருத்தியறிந்து அருத்தியறிவார் வளையையுடைய தளிர்போலுஞ் செங்கையைப் பூட்டியெடுத்து வாசக்கிளைபோலுந் தளிராற் செய்த பாயலிலே வளர்த்தி, ஆயர்குழலிற் றுளையைத் தொகை செய்தாற்போல அதிலெழுமிசையும் துளைத்தொகை யாயிற்றென்று தலைவி கூறினால், அதுவும் ஆறறிவுடையனவும், ஓரறிவுடையனவு மொக்க மயங்கும்படி நம் தலைவனூதிய குழலென்று சொல்லியும், தீக்கோளான ஆதித்தன் வெயில் நிகழ்கின்றது ; நிலா அன்றென்று மறுத்துக்கூறினால், அது நிலா அன்று ; உயர்ந்த அரசில் உயர்ந்தோன் புகழ் நிலா ; அதிலே பிரதாபாக்கினியுண்டு ; அரசிலுயர்ந்தாரால் உயர்ச்சி கூறப்படும் அரசாலுயர்ந்தோன் புகழாகிய நிலாவென்று புகழ்ந்து கூறியும், தம்மில் மாறுபட்டனவென்று கூறில் அது வாத்தியமன்று ; பரராசகேசரி வரவு கருதினான் போலும் என்றும், முழக்கம் அவனது கொடிப்புலி முழக்கமென்றும் மருளக் கூறியும், கல்லாரம் மெல்லியவென்று குறிப்பான் இகழ்ந்துகூற, அது கல்லாரமன்று ; கதிரோன் மரபிலுள்ளோன் போர்க்கண்ணியான ஆத்தி மாலையென்று வன்மைக் குறிப்புத் தோன்றக் கூறியும் இவ்வாறு அவள் வேறுபடக் கூறியவை யெல்லாம் அவையல்ல : இவை தலைவர்க்குள்ளனவென்று அருத்தி யறிவாரான நல்லார் திருத்திவிட விடாய் தீர்ந்தாளெனப் பவனி கண்டோர் கூறினாரென்பது. அருத்தி யறிவாரென்றது பல்லவை யுணர்ந்தோர் முது பெண்டிரை.

கடல்முதல் முகில் ஈறான (150-53) எண்வகை ஓகாரமும் வினா ; சிறப்பென்றுமாம். நிற்குமேயென்ற ஏகாரம் (166) பிரிநிலை ; தேற்றமுமாம். கண்டல் மாலதி கொன்றை தேமா எனவந்த ஏகாரம் (161–3) ஒன்று தேற்றம் ; ஒன்று பிரிநிலை. என்று போய் (163) கொந்தார் (171) என்னும் வினை அருத்தியறிவார் (177) என்னும் பேர்கொண்டு முடிந்தது. மதர்க்கும் ஒரு திருமாது (146) திருத்திவிட விடாய் தீர்ந்தாள் (177) எனக் கூட்டுக. பெதும்பை முற்றும்.

(கு - ரை) உரை. உழுவற்றன்மை - எழு பிறப்பிலுந்தொடர்ந்த அன்பு. அருத்தி - ஆசை. தளிர்ப்பாயல் - தளிராலாகிய படுக்கை. ஆறறிவுடைய உயிர்கள் மக்கள் ; ஓரறிவுடையன தாவரங்கள். பிரதாபம் செந்நிறமுடையதென்பது கவிமதம் ; " தனது கீர்த்தியுந் திறற்பிர தாபமுந் தரைமேல், அனல்செய் கோபமு முல்லையு மெனவெங்கு மயைத்துப்,

புனித மாமலை தன்னையும் பொதிந்துகொண் டென்னப், பனிவி சும்பி னிற் சிவந்துவெண் ணிறம்படைத் தன்றே" (காஞ்சிப். திருநாட்டுப். 10.) 174. நிருபகுலதுங்கன் - அரசர்களுள் மேம்பட்டவன். 175. பல்லியம்-பல வகை வாத்தியங்கள். பரராசகேசரி: இது சோழர்கள் கொண்ட பட்டப் பெயர்களுளொன்று; "இராசகேசரி புரந்து பரகேசரிகளா மிருவராணை புலியாணையென நின்ற விதுவும்" கலிங்கத். இராச பாரம், 191.) வல்லியம் - புலி. 176. கல்லாரம் - செங்கழுநீர்ப்பூ; இது குலோத்துங்கனுக்கு உரிய மாலை. கதிரோன் - சூரியன். மருமான் - வழித்தோன்றல். மெல்லாரம் - மெல்லிய ஆத்தி மாலை. போர்க் கண்ணி யான ஆத்திமாலை; 138; "நின்னொடு, பொருவோன் கண்ணியு மார்மிடைந் தன்றே" (புறநா. 45 : 3-5.) 177. அருத்தி - ஆசை.

(பி - ம்) 172. 'துளைத்தொகையால்' 173. 'ஆய்க்குழ லன்றூல்' 'ஆய்க்குழலன் றங்கதுவும்' 174. 'புகன்றும்' 177. 'விடர்தீர்ந்தாள்'

[உட்கோள்] **[மங்கை]**

178\. உருவ வரிக்க ணொழுக வொழுகப்
புருவ முடன்போதப் போத—வெருவி

179\. வனமுலை விம்மி வளர வளரப்
புனைந்தோள் புடைபோதப் போத—வினைவர்

180\. அருங்கலை யல்கு லகல வகல
மருங்குபோ யுள்வாங்க வாங்க—நெருங்கு

181\. பரவர ராச பயங்கரன்மேல் வேட்கை
வரவர வாற்றுத மங்கை—பொரவரு

(ப - ரை) 178-81. இப்பருவத்துக்குக் கைக்கிளை உட்கோளாத லின் "ஒரு பொருள் நுதலிய" என்னும் விதிகேற்பப் பரராஜ பயங்கரன் மேல் வேட்கை வரவர ஆற்றுத மங்கை. உருவ - விடாமல்; உட்கோள்: இது முதனிலைத் தீவகம். செவ்வரி பொருந்திய கண் உட்கொண்டொழு குந் தன்மைபோல நெடுகவர, உட்கொண்டு புருவங் கண்ணுடனே போதும் தன்மைபோல வளர்ச்சி போதவர, உட்கொண்டு பருவங்கண்டு அஞ்சி வளருந் தன்மைபோல முலைபெருமை வளரவளர, உட்கொண்டு வளருந் தன்மைபோலப் பூண்புனை தோள் வளர்ச்சி வரவர, உட்கொண்டு வினைவர் ஏற்கவே இடங்கொள்ளுந்தன்மைபோல வளர்ச்சிபோத அருங்கலை புனையல்குல் இடவிதாக வினையறிந்தோடி ஒளிப்பார்தன்மைபோல வர உட் கொண்டு மருங்குல் உள்ளே கரப்ப, மருங்குற்கு அழகு நுண்மையாதலின்

வரராசரான பரராசருள்ளம் பயம் நெருங்கும்படி பயத்தைச் செய்யுஞ் சோழேசன் மேலே தனது உட்கோள் வேட்கைவர, அதனைப் பொறுத் தாற்றாதவாறு விளங்கும் மங்கை. வினையில்லனவற்றுக்கு வினையுள்ளன போல உவமஞ்செய்யலாமென்னும் உவமவியல் விதிக்கேற்பக் கண் முத லான அவயவங்கள் இறந்து பரிணமங் கூறியவாறு காண்க. பரிணமம் கண்ணுக்குக் குறிப்பும், புருவத்துக்கு முரிவும், முலைக்குப் பெருமையும், தோளுக்குப் பணைப்பும், அல்குற்குப் பரப்பும், மருங்குற்கு நுடக்கமுமாம். இதனைப் பொருட்டொடராக்கிக் கண்டோருள்ளம் உட்குதல்வரக் கண் நெடிதாக அதுகண்டு புருவம் அதனுடனே போகக்கண்ணும் புருவமும் போதுந் தன்மைகண்டு முலைவெருவிப் பெருமையும் போரும் வளர, முலை வளர இடங்கொடுத்துப் பூண்புனைதோள் பக்கத்துப்போத, அதுகண்டு தோளுக்கும் முலைக்கும் ஆதாரம் நாம் என்று பொன்செய் கொல்லர் அரிதிற்செய்த மேகலையையுடைய அல்குல் இடவிதாக அதுகண்டு மருங் குல்போய் உள்ளே குடிவாங்கத் தும்பைப் போர்க்கு எதிரேன்ற தெவ்வர் வகுப்பு அழியாமல் வாங்கி நொச்சிப்போர் கருதிச் சென்று நெருங்குபவ ரான பரவரசருக்குப் பயங்கரனை சோளேசன் மேற்றனது வேட்கைவர, அவன் பவனிவருந் துணையும் வேட்கை பொறுத்தாற்றாத மங்கையென் பது மொருபொருள். வரரான பரவரசருக்குப் பயங்கரனென்று தலைவ னைக் கூறுதலின், தும்பைப் போருக்கு எதிரேன்ற தெவ்வரைக்கெடுத்தல் பிடித்தல் செய்யாமல், நொச்சிப் போருக்கு இடங் கொடுத்தவன் இவன்; பயங்கரஞ் செய்யும் பரவரசர் போர்க்கு வாரானல்லன் என்னும் பொருள் தந்தது. முன்னர்ப் பொருள் பருவக் கைக்கிளைக்கும், "ஒரு பொருணுத லிய" என்னும் விதிக்கு மேற்றது.

(கு - ரை) உரை. உட்கோள் : பு. வெ. 15. ஒரு பொருள் நுதலிய வென்னும் விதி : தொல். செய். 153. உருவ - உட்குவர. முதனிலைத் தீவ கம் ; "குணந்தொழில் சாதி பொருள்குறித் தொருசொல், ஒருவயி னின்றும் பல வயிற் பொருடரின், தீவகஞ் செய்யுண் மூவிடத் தியலும்" (தண்டி. 39.) உருவ வரிக்கண் - அழகிய செவ்வரிபடர்ந்த கண்கள் என்ற லும் ஆம். மருங்குற்கு அழகு நுண்மை: "நுதலடி நுசுப்பென மூவழிச் சிறுகி" (கலி. 108 : 3.). சோளேசன் : "துங்க பத்திரைச் செங்க ளத் திடைச் சோளசேகரன் வாளெ றிந்தபோர்" (கலிங்கத். 103.) வினை இல்லனவற்றிற்கு வினையுள்ளனபோல உவமஞ் செய்தல் : 'வந்த வென் றதனான் இல்லாதவினை வருவித்தும் சொல்லப்படும் ;......இவை உவமை யும் பொருளுமாகிய வினைபற்றி வந்திலவாகலின் அதன் வகை யெனப் பட்டன' (தொல். உவம. 1, பேர்.) பரிணமம் - மாறுதல். முரிவு-வளைதல்.

பணைப்பு - பெருத்தல். நடக்கம் - அசைதல். நொச்சிப்போர்-மதிலைக் காத்தற்குச் செய்யும் போர். பருவக் கைக்கிளை : உட்கோள். வினைவர் - தொழிலில் வல்லோர். வரராச பயங்கரன் - சோழன்.

(பி - ம்) 179. 'இனைய', 'வினையார்' 180. 'வாங்க' 'வாங்கி' 181. 'பொரவரும்'

182. தேமிரைக்குங் காலையின் ஞாயிற் றிளஞ்செவ்வி
தாமரைக்கே சாலுந் தரத்ததோ—காமர்

183' அமுத மதியத் தலர்நிலா முற்றும்
குமுத நறுமுகைக்கே கூறோ—நமதுகார்

184. கானின் மடமயிற்கே காணியோ தண்ணிள
வேனில் குயிற்கே விதித்ததோ—தேனிமிர்

185. தண்டா மரையா டலைவனை யாமும்போய்
கண்டாலென் னென்னுங் கடைப்பிடியாள்-பண்டை

186. ஒளியா ரணங்காத றம்மைத்தா மொன்றும்
தெளியாத வாறே தெளிந்தும்—களியன்னம்

(ப - ரை.) 182-6. நிசாசரரைப் பொரவரும் செஞ்ஞாயிற்றிளஞ் செவ்வியானது இனிமைபெற வண்டு இரைக்குங் காலையில்முகையவிழ்ந்த தாமரைக்கே நமதென்று பொருந்துந் தன்மைத்தோ : செவ்வந்தி, செண்பகம், செங்கழுநீர் என்னும் மலரும் காலைமலராதலின் அவையும் தமதெனத் தகாதோ? அழகு பொருந்திய வடிவுடைய மதிமலரும் நிலாவானது முற்றும் நறுவிய குமுத முகைக்கே நமதென்று தன் கூறாகக் கொள்ளும் தகைத்தோ? மௌவல், பித்திகை, சிறுசண்பகம் முதலான மாலைமலர்களும் நமதென்று பயன்கொள்ளத் தகாதோ? பருவத்து எழு காரானது நமதென்று ஆளுதற்குக் கானமடமயிற்கே காணியாக விட்டதோ? சாதகம் முதலான பல்லுயிரும் நமதென்று பயன்கொள்ளாதோ? தண்ணென்ற இளைய வேனிற் பயன் குயில் நமதென்று ஆளுதற்கே விதித்ததோ? மாமரமும் கொடியும் வண்டும் முதலியன நமதென்று பயன் கொள்ளாவோ? இயல்பு மணத்தால் வண்டானது விடாமல் முரலும் தண்ணென்ற தாமரையாள் தலைவனை சோளேசனை யாமுஞ்சென்று கண்டால் என் செய்யுமென்னும் கடைப்பிடியை உடையாளாயிரா நின்றாள். சோளேசன் தொல்லொளியான நாராயணன் (185-6); தான் அவனை நீங்காத ஆரவாரத்தையுடைய அணங்காகுந் தன்மையைத் தங்களைத் தாங்கள் தெளியாமை யிருக்கும்படியே யெனத்தலைவி

உட்கோள் கூறித் தெளிந்தும். இவற்றுள் ஓகாரம் பிரிநிலை ஓகாரம். நமதென்பது ஓர் வினைக் குறிப்பு.

(கு-ரை) 182. தேம் - வண்டு. 'தேம்பாய் கடாத்தொடு' (பதிற். 53 : 17.)

உரை. நிசாசரர் - மந்தேகர்; வி. பா. கிருட்டிணன் தூது. 87. தாமரை சூரியனைக்கண்டு மலர்வது : 'செந்தழலே வந்தழலைச் செய்திடினுஞ் செங்கமலம், அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லா லலராவால்' (பெருமாள் திருமொழி, 5 : 6.) பித்திகை - பிச்சி. காணி - உரிமை.

(பி-ம்) 183. 'தணிநிலா' 'கூற்றோ' 184. 'தேனிமிரும்'

187. வாவிக் கரையில் வரநீ ரரமகளிர்
சேவிக்க நின்றாடுஞ் செவ்வியாள்—காவிற்

188. புகுதில் வனதெய்வப் பூங்குழை யாயத்
தொகுதி புடைபரந்து சூழ்வாள்—மிகுதே

189. னிரையர வந்தரு செய்குன்ற நீங்கா
வரையர மாதரின் வாய்ப்பாள்—பெருவிலைய

(ப-ரை) 187-9. தெளியாதமயக்கத்தையுடைய அன்னம் (186) வாவிக்கரையில்வரின் நீரரமகளிர் பண்டையொளியாரணங்கென்று தெளிந்து நின்று சேவிக்க நின்றாடுஞ் செவ்வியாள். காவிற் பூக்கொய்யப்புகில் அவ்வன துர்க்கையான பூங்குழை தனதாயத்துடனே ஒளியாரணங்கென்று தெளிந்துநின்று பரந்து சூழ்போதச் செவ்வி போதுவாள்; பரத்தல்-விடநிற்றல். மிகு தேனிரை யரவந்தருஞ் செய்குன்றில் நீங்காத காலையில் வரை யரமகளிர் ஒளியாரணங்கென்று தெளிந்து செவ்வி மிகுத்துக் கூறுதல் வாய்ப்பாள் என இயற்கை நலம்கூறியது.

(கு-ரை) மங்கையைக் களி அன்னம்கண்டு நடை அழகு இவற்றால் ஒத்திருப்பது கண்டு அவள் அருகணையவும், நீரரமகளிர், இம்மங்கையின் அழகிலும் சிறப்பிலும் ஈடுபட்டு இவர் தம்மினும் மேம்பட்ட ஒரு தெய்வ மாது என்று எண்ணிச் சேவிக்கவும் வந்து அங்கு ஆடும் செவ்வியாள் என்க. இக்கண்ணிகளில் மங்கையை நீரரமகளாகவும், வனதேவதையாகவும், வரையரமகளாகவும் கூறினர். இவற்றால் நீராடுதல், பூக்கொய்தல், செய்குன்றில் விளையாடுதல் முதலிய மங்கைப் பருவத்துக்குரிய நிகழ்ச்சிகள் குறிப்பாகக் கூறப்பட்டன. புகுதில் - புகுந்தால். விட-மிக. 'விடக்களி யாநம் விழுநக ரார்க்கும் வியன்முரசே' (சிற். 297.) இயற்கை நலம் - ஆபரணங்களைக்கொண்டு அலங்கரியாத அழகு.

(பி - ம்.) 188. 'புகுதிலவன்றெய்வப்' 'பூங்குழையா ராயத்' 'புடைபெயர்ந்து' 189. 'நிரையயர வந்தங்குஞ்', 'நிரையவரந்தரும்,' 'நிரையயரவந்தேரும்', நிரையவரந்தந்து' 'செய்குன்றினீங்கா'

190. முத்தில் விளங்கின் முளரித் தவளப்பூங்
கொத்தி னணங்கனைய கோலத்தாள்—பத்திய

191. பச்சை மரகதம் பூணிற் பணைமுலைசூழ்
கச்சை நிலமகள்போற் காட்சியாள்—நிச்சம்

192. உரக பணமணிகொண் டொப்பிக்கி லொப்பில்
வரகமலை யன்ன வனப்பாள்—நரபதி

(ப - ரை) 190-92. எனச் செய்கை நலம் உருவுவமையால் ஒப்பக் கூறி உவமையைப் புகழ்ந்தது. இத்தன்மையானவள்.

(கு - ரை) 190. தவளமுளரி - வெண்டாமரை. அணங்கு-கலைமகள். பத்தி - வரிசை. 191. கச்சை - கச்சு. நிலமகள் - பூமிதேவி; 'மரகதப் பணி பூணில் வசுந்தரை யாவோம்' (224-7, உரை.) நிச்சம் - நாள் தோறும். 192. உரக பணமணி - பாம்பினுடைய படத்திலுள்ள மணி. ஒப்பிக்கில் - அலங்காரம் செய்தால். வர கமலை-மேன்மையான திருமகள். நரபதி: சோழனுடைய பட்டப்பெயர்; 'நரபதியென்பது சோழன் பெயராதலால் சிறப்புடைத்து', 'எனவே மனுஷ்யருடைய வரம்பழியா மற் காப்பவன் சோழன் என்பது; இதற்குக் காரணம் நரபதியென்னும் பெயருடையனுதல்', 'மனுஷ்ய லோகத்திலுள்ளா ரெல்லாரும் சோழனைப் போலிருப்பார். அவன் நரபதியாதலால்' (தக்க. 9. 246, 275. உரை); "நரபதி நன்னிலத்துப் பெருங்கோயி னயந்தவனே' (தே, சுந்தர.)

193. மைம்முகில் வண்ணத்து வானவன் மீனவன்
கைம்முகில் மேல்வரக் கண்டதற்பின்-மொய்ம்மலர்

194. நீலமே வேய்ந்தடுக்க நீலமே பூண்டுடுக்க
நீலமே யன்றி நினையாதாள்—நீலமே

(ப - ரை) 193-4. உட்கோள்: அதற்குக் காரணம் கூறுகின்றார். சனநாதன், மைம்முகில் போலும் வண்ணத்து வானவன், மீனவன் கையுடையதோர் முகில்போலும் யானைமிசையே பெதும்பைப் பருவத்துப் பவனியில் வரக்கண்டு அதற்குப் பின்பு நயந்து உட்கொண்டவாறு தோன்ற நீலநிறம் செறிந்த மலர்வேய்ந்து, நீலவர்க்கமான மணியே பூண்டு உடுக்க நீலநிறத்திற் றுகிலேயன்றி நினையாதாளாய்,

(கு - ரை) முகில் வண்ணத்து - மேகம்போன்ற நிறத்தையுடைய; குலோத்துங்க சோழன் நிறம் கறுப்பென்பது 62-ஆம் கண்ணியுரையா லும், நக்க 777-ஆம் தாழிசையின் விசேடக் குறிப்பாலும் அறியப்படும். வானவன் மீனவன் என்றது சேரநாட்டையும் பாண்டிய நாட்டையும் இவன் ஆண்டமைபற்றி. கைம்முகில் - இல்பொருளுவமையாய் யானை யைக் குறித்தது. நீலம் மொய்ம்மலர் - நீலநிறம் நெருங்கிய பூ. அடுக்க நீலம் - வர்க்கமாகிய நீலமணிகள். தலைவனுடைய நிறம் கரியநிறமாத லால் அதனைப் போன்றவற்றையே தலைவி அணிய விரும்பினாள்; "மானேர் நோக்கின் வளைக்கை யாய்ச்சியர், கான முல்லை சூடார் கதுப்பிற், பூவைப் புதுமலர் சூடித் தாந்தம், அடங்காப் பணைமுலை யிழைவளர் முற் றத்துச், சுணங்கின் செவ்வி மறைப்பினும் மலர்ந்த, பூவைப் புதுமலர் படப்புவர் பூவயின், ஆனிரை வருத்தம்வீ டமலை யெடுத்து, மாரி காத்த காளை, நீல மேனி நிகர்க்குமா லெனவே" (நண்டி. 19, மேற்.) என்னும் பழைய செய்யுளிலும் இச் செய்தி அமைந்திருத்தல் அறியத்தக்கது. சன நாதன்: நரபதியென்னும் பொருளது; "தண்டே னலைசையாற் சன நாதன் றொண்டியின்வாய், வண்டே மகிழ்ந்தேறல் வந்து" (நம்பி. 127, மேற்.); "பண்சிலம்ப வண்டாடும் பைந்தார்ச் சனநாதன்" (களவியற். மேற்.)

(பி - ம்) 193. 'கைம்மலை' 194. 'வேய்ந்தடுக்கி', 'வேய்ந் தடுக்க' 'பூண்டுடுக்கை'

195. முன்னுடைய செங்கே ழெறிக்கு முறிக்கோலம்
தன்னுடைய மாமை தழீஇக்கொள்ளப்—பின்னர்

196. நெருங்கு கழுநீரும் நீலோற் பலமும்
ஒருங்கு மலர்தட மொத்தும்—மருங்கே

197. இறங்கிய கற்பக வல்லியு மேறி
உறங்கிய தும்பியு மொத்தும்—பிறங்க

198. வயங்கு தளிரீனு மாங்கொம்பர் பூக்கொண்
டுயங்கு கருவிளை யொத்தும்—தயங்குவாள்

(ப - ரை) 195-8. அவள் உட்கொண்ட நீல உருவமே, ஒளியாபர ணங்காய் (186) முன்பு தானுடைய சிவந்த நிறத்தை விளக்கும் தளிர் முறிபோலும் தன்னுடைய நிறம் பத்தி பாய்ந்து தழுவிக்கொள்ள, ஒன்று பின்னரும் ஒன்று முன்னருமாக நெருங்கு கழுநீரும் நீலோற்பலமுமாக ஒருகாலத்துமலர் தடத்தை ஒப்பாயும், கையும் தோளும் இறைத்தொடி முதலாக வூருகுபுரி யளவாக அணிந்த நீலப்பூணும் தனது சிவந்த நிறமும்

புற்கென்ற நிறத்தை யுடைத்தாய்ப் பூலோகத்தில் இறங்கிய கற்பகக் கொடியும் அதன் செவ்விகண்டு வாவியும் சோலையும் மறந்து கொடியிலே ஏறிப் பயன்கொண்டு துயிலும் தும்பியென்னும் சாதிவண்டும் ஒப்பாயும், விளக்கமுண்டாகத் தளிர்த்து அசைவதோர் மாங்கொம்பர் கருவிளம் முதல் நடு இறுதிபூத்து அசையுமாறு ஒப்பாயும் பரிவர்த்தனைக்கும் இல் பொருளுவமைக்கும் ஏற்ப விளங்குவாள்.

(கு - ரை) ஒப்பு: "அவர்தம், நீலநிறத்தை யெல்லோரும் நினைக்க வதுவாய் நிரம்பியதோ" (கம்ப. 1. மிதிலைக்: 67.) கேழ் - நிறம். மாமை - அழகு. கழுநீர் சிவப்பு: "செக்கச் சிவந்த கழுநீரும்" (கலிங்கத். 74.) நீலமும் செந்நிறமும் என்றது பரிவர்த்தனை. கருவிளை - காக்கணம்பூ. ஏனையவை இல்பொருளுவமை.

(பி . ம்) 197. 'வல்லியையும்' 'தும்பியையும்' 'பிறங்கி', 'பிறங்கு' 198. 'தளிரிள' 'கருவிளையும்'

199. கோலத்தார் மௌலிக் குலோத்துங்க சோழற்கு
ஞாலத்தா ரெல்லார்க்கு நாயகற்கு—நீலத்தின்

200. காசுங் கலாபமும் மேகலையுங் காஞ்சியும்
தூசுந் துகிலுந் தொடியுநான்—கூசேன்

201. வெளியே தருவேன் விரையாரத் தொங்கல்
கிளியே தருமேனீ கேளாய்—அளியேநீ

202. தாது கடிகமழ் தாதகித் தாமத்தின்
போது கொழுதப் புறப்படாய்—ஓதிமமே

203. எங்கள் பெருமானை யிங்கே தருவானீ
உங்கள் பெருமா னுழைச்செல்லாய்—பைங்கழற்காற்

204. சேயை நினைந்தேகி னம்முடைய சேக்கையான்
சாயன் மயிலே தலைப்படாய்—பாயும்

205. கடமானே போல்வார்க்கு நீநின்னைக் காட்டின்
மடமானே தானே வருங்காண்—கடிதென்று

206. கொள்ளைகொள் காமன் கொடும்பகைக்குக் கூசித்தன்
பிள்ளைக ளோடிருந்து பேசுவாள்—உள்ள

(ப - ரை) 199-206. எல்லா அரசருக்கும் நாயகமாகவுள்ளவன் தனது நிறத்திற் கேற்றபடியாகப் புனைந்த காசு முதல் தொடியிறுதியாக நீலப்படியாற் புனைந்தவை யெல்லாம் திறையாக மறையாமல் தருவேன்;

பூணணியின்றி நிற்பதற்குக் கூசுவதும் செய்யேன்; மணம் பொருந்திய ஆத்திமாலையொன்றும் தருமாகில் நீ சென்று கேளாய்; கிளியே, நீ கேளாய் என்றாள். கிளி அவன் வடிவாதல்கொண்டு. தலைவன் நிறத்துக்கு அமைந்த அணிகொண்டு உயிர் புரந்திருந்தாள் எனவும், இனி வரவு தாழ்த்தது கொண்டு ஆற்றாளாயினாள் எனவும் தன் உட்கோளை விளக்குதல் கருதிக் கூறியவாறு காண்க. வண்டே, நீ தாதும் விளக்கமுமுள்ள மணங்கமழும் தாதகித் தாமத்தின் இனிய போதில் உண்டான தாது கொழுதி அதன் மணம் கமழும்படி இருக்கிறவரை விட்டுப் புறப்படாய். அன்னமே, எங்கள் பெருமானை இவ்விடத்திலே கொண்டுவந்து தர உங்கள் பெருமானை ஸ்ரீ கருடாழ்வானிடத்து ஏறச்செல்லாய்; உங்கள் பெருமானென்றாள் பறவைக்கரசென்பதும், வழிபட்டோர்க்குக் காலம் செல்லாமல் விரைய வரம் கொடுக்கும் என்பதும் நோக்கி. மயிலே, அழகிய வீரக்கழற்காற் சேயை நினைந்து செல்வையாகில் நீயே வாயிலாக நம்முடைய சேக்கை யான் ஆவன்; விரையச்சென்று தலைப்படாய்; சேக்கையான் ஆவன் என்ற கருத்து பரிபாடலிலே முருகனைப் பாடப் பிரிந்தோரைக் கூட்டுவன் என்றமையின். மடப்பத்தையுடைய மானே, கடம்பாயும் வேழம் போல்வார்க்கு நீ நின்னைக் காட்டுவையாகில் யானிருந்த இடத்தைத் தேடித் தானே விரைய வருங்காண்; (விரைய என்றது மாயமான் பிடித்துக் கொடாத குறை கருதிப்போலும். என்று நாண் முதலாகிய நாற்குணங்களையும் கொள்ளை கொள்ளுகிற காமனது கொடிய பகைக்குக் கூசித் தன் பிள்ளைகளோடிருந்து பேசுவாளாய். பகல் முனிவுரைத்தல்.

(கு - ரை) 199. கோலத்தார் - அழகிய மாலையை அணிந்த. காசு முதல் தொடியிறுதியாகவுள்ளவை நீலத்தாற் செய்யப்பட்டவை. 200. காசு - அச்சுத்தாலி: இஃது இப்பொழுது காசுமாலை எனவழங்கும். கலாபம்: இருபத்தொரு வடமுடையது. மேகலை: இருவடமாய்த் துகிலுக்குள்ளே அணியப்படுவது. காஞ்சி: எட்டுவடமுடையதாய்த் துகிலின் புறத்தே அணிவது. தூசு - பட்டாடை. துகில் - பருத்தியாடை. 201. ஆரத்தொங்கல் - சோழனுக்குரிய ஆத்திமாலை. 202. கடி - விளக்கம். தாதகித் தாமம் - ஆத்திமாலை. கொழுதல் - குடைதல்; விக்கிரம. 265. 203. உங்கள் பெருமான் என்றது பிரமனையும் குறிக்கும்; பிரமன் அன்ன ஊர்தி ஆதலின். உழை - அருகு. 204. சேய் - முருகக் கடவுள். சேக்கையான் - பள்ளியிடத்தான்; சேய் - தலைவனான சோழன். நம்முடைய சேக்கையான் - நம்மிடம் வந்து தங்குபவனாவன். தலைப்படாய் - நீ இக்காரியத்தில் ஊக்கங்கொண்டு செல்வாயாக! என்று பொருள் கொள்ளலும் ஆம். 205, கடமான் - யானை; கடம் = மதம். யானை போல்வாரென்றது பகையை மதியாமைபற்றி; "தரணி காவலன்

சச்சந்த னென்பவன், பரணி நாட்பிறந் தான்பகை யரவையும், அரணிலான்" (சீவக. 1813) என்பதும் 'பரணி யானை பிறந்த நாளாதலின் அதுபோலப் பகையை மதியான் என்றுள்' என்னும் அதன் உரையும் இங்கே அறியற்பாலன"; பாயுங் கடமான் - பாய்ந்தோடும் கடமான்: கடமான் மான் வகையில் ஒன்று; இது, 'மானைக் காட்டி மானைப் பிடிக்கும் வழி என்றலும் ஒன்றும். 206. பிள்ளைகள்: கிளி வண்டு முதலியவற்றின் இளமைப் பெயர்.

உரை. முருகனைப்பாடப் பிரிந்தோரைக் கூட்டுதல்: "கெழீ இக்கேளிர் சுற்ற நின்னை, எழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே" (பரி. 14: 23-4) என்பதும், 'பிரிந்த கேளிர் வந்து புணர்ந்து பின் நீங்காமைப் பொருட்டு மகளிர் யாழை எழுவி நின்னைப் பாடுகின்ற பாட்டை விரும்பினோய்' என்னும் அதன் உரையும் இங்கே அறிதற்பாலன. பகல் முனிவுரைத்தல் - பகற்பொழுதை வெறுத்தபடியைச் சொல்லுதல்; பு. வெ. 15.

(பி - ம்) 199. 'நாயகற்குஞ் சீலத்தின்' 202. 'தாதகித்தண்ணறும்' 203. 'பெருமானை' 204. 'தலைப்பட்டாய்' 205. 'வருமே கொடிதென்று' 206. 'உள்ளி'

207. அலகில் குலநீல ரத்ந பரணம்
விலகி வெயிலை விலக்க—உலகிற்

208. பெரிய பெருமாள் பெரும்பவனி வீதி
இரிய வெதிரேற் றிழந்தாள்—வரிவளை

(ப - ரை) 207-8. அவ்வெல்லையிலே உலகிற் பெரிய பெருமாள் பெரும்பவனியிலே போத மீதணிந்து விளங்கிய குல நீலரத்நாபரணம் பெரும்பவனி வீதியிலே வெயிலை மறுத்துவிலக்க எதிரே சென்று நாண் முதலிய நாற்குணமும் இரிய வளைமுதலானவை இழந்தாள்.

(கு - ரை) உள்ள (206) - தன்னிடமுள்ள. 207. அலகில் - கணக்கில்லாத. நீலரத்நாபரணத்தை அணிந்தது குலோத்துங்க சோழன் நிறத்தோடு ஒப்புடைமைபற்றி; (194.) 208. பெரிய பெருமாள்: குலோத்துங்க சோழன் பெயர்; "நீடிய எண்டிசை நீழல் வாய்ப்ப நேரிய தெக்கிண மேரு வென்னப், பீடிகை தில்லை வனத்த மைத்த பெரிய பெருமாளை வாழ்த்தினவே" (தக்க 773.) இரிய என்பதற்கு எழுவாய் வருவிக்கப் பட்டது.

(பி - ம்) 208. 'எதிரேற் றெழுந்தாள்'

209. ஆயத்தா ரென்னி லளியத்தா ரெல்லாரும்
நேயத்தா ரல்லரே நிற்பரே—தேயத்தார்

210. மன்னனை யஞ்சாதே வாரணத்தை யஞ்சாதே
மின்னனை யாளையு மீதூரா—முன்னர்க்

211. கடமாக்குந் தெய்வக் களிறு விரும்பும்
இடமாதும் யாமென்பார் போலப்—படமாய்

(ப-ரை) 209-11. இத்தன்மைகண்டு ஆயவெள்ளத்தார் யாது செய்தாரோ வெனில் எல்லாரும் தலைவியாலே தலையளி பெறத்தக்கார். தலைவியளவில் எல்லாரும் ஒரு தன்மைத்தாய நேயத்தா ராகையாலே தேயத்தார் மன்னனை அஞ்சாதே வாரணத்தையும் அஞ்சாதே மின்போல் நுடங்கிக் கிடந்த தலைவியையும் தோள்மீது அணைத்துக்கொண்டு பெருமான் முன்னர்ச் சென்று கடத்தைத் தன்னிடத்து உண்டாக்கும் தெய்வக் களிறு விரும்புமிடம் யாம் ஆதும் என்று கருதுமவர்போல.

(கு-ரை) 209. அல்லரே; ஏகாரம் எதிர்மறை. நிற்பரே: ஏகாரம் வினா. 210. வாரணம் - குலோத்துங்கன் பவனிவந்த யானை. 211. தெய்வக் களிறு - குலோத்துங்கன் பட்டத்து யானை.

212. இரைப்பச் சுரும்போ டிருளளக பாரம்
நிரைத்து வனமாகி நிற்பார்—விரைப்பூண்

213. முலையாய் வளரு முரட்குவடு கொண்டு
மலையாய் நெருங்க வருவார்—தொலையாத

214. பாய பருமுத்தின் மாலை பலதூக்கித்
தூய வருவியாய்த் தோன்றுவார்—சாயற்

215. கொடியா யடிசுற்றிக் கொள்வார் புரக்கும்
பிடியாய் நறுந்துகள் பெய்வார்—விடுதுமோ

216. யாழாய் மிடற்றால் வணக்குதும் யாமென்பார்
தோழாய் வளைத்தெங்குஞ் சூழ்போவார்-ஆழிக்கைத்

(ப-ரை) 212-6. காட்டிலே படாம் வளைத்து நிரையாக நின்று ஆரவாரிக்கும் தன்மைபோல வண்டாகிய படாம் வளைத்தவை இரைப்ப நிரைத்து அளகத்தால் வனமாகப் பாவித்து நிற்பாராய், மணம் பொருந்திய பூண் முலையாகிய குவடுகளைக்கொண்டு மலையாகப் பாவித்துத் தம்மில் நெருங்க வருவாராய், ஒளிபரந்த பருமுத்தாகிய மாலையாலே மலையும் அருவியுமாகப் பாவித்துத் தோன்றுவாராய், அழகிய கொடியாகப்

பாவித்து யானையினது அடியைச் சூழ்ந்து கொள்வாராய், அதனால் அளி பெறும் பிடியாகப் பாவித்துச் சுண்ணத்துகளை வீசுவாராய், எளிதாக விடுவோமோ என்றுகூறி யாழாகப் பாவித்துக் கண்டக்கருவிப் பாடலாலே வணக்குதும் யாமென்று துணிவாராய், தொழு வளைத்ததாகப் பாவித்துச் சூழ வளைத்துக் கொள்வாராய் இடமும் வினையும் கருதி மயிலனையார் (217) வளைத்துக் கொள்ளுவதாக.

(கு - ரை) 212. அளகவனம்: வனம் என்றது அடர்ந்து மிகுந்தமைபற்றி; 'வாளின்வனம் வேலின்வனம் வார்சிலை வனந்திண், தோளின்வன மென்றிவை துவன்றிநிரு தப்பேர், ஆளின்வன நின்றதனையம்பின்வன மென்னும், கோளின்வன வன்குழுவி னிற்குறை படுத்தான்' (கம்ப. 3. கரன்வதை. 166.) விரை - வாசனை. 213. முலையாய் வளரும் முரட்குவடு: "முலையென விரண்டு முரட்குவடு மரீஇ" (கல். முருகன்துதி.) முத்துமாலைக்கு அருவி: 150, குறிப். 214. சாயல் - மென்மை. 215. கொடி, யானையின் காலைப் பிணிப்பது. களிற்றின்மீது துகள் பெய்தல் இயல்பு: "நீறாடிய களிறுபோல" (பட்டினப். 48.) 216. யாழாவென்றது தாம் சாரீரவீணை என்பது கருதி. மிடற்றால் வணக்குதும் என்றது யானை இசைக்கு வசமாதல் கருதி; "வகையுடை நல்யாழ் வரத்திற் பெற்றதூஉம், விசையுடை வேழம் வணக்கும் விச்சையும்" (பெருங். 2. 11 : 154-5); "இசையினி லிவட்குத் தோற்றும் யானையால் வேறு மென்னின், இசைவதொன் றன்று கண்டீர்" (சீவக. 748); 'யானை நாதத்தில் தோற்றுதலின் அதற்கு வணங்குதல் இயல்பு' (சீவக. 748, உரை.) தோழ் - தொழுவம்; "ஊழிதொ றூவுந் தோழும் போன்றுடன் மூக்க வென்று" (சீவக. 487.) இக் கண்ணிகளில் வனசரம், கிரிசரம், நதிசரம் என்னும் மூவகை யானைகள் குறிப்பாகக் கூறப்பட்டன; இராசராச. 242; "முத்திறத்தன.........யானை", "மூவகை யானையர்" (வி. பா. சூது போர். 79, 13-ஆம் போர். 6.)

உரை. படாம் - ஓடை. அளகம் - கூந்தல், கூந்தற்காடு என்பது மரபாதலின் அளகத்தால் தம்மை வனமாகப் பாவித்தார். யாழாகப் பாவித்துக் கண்டக் கருவிப்பாடலால் வணக்குதும் என்றது யாழும் மிடறும் வேறுபாடின்மைபற்றி; "இருங்கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடி ஞளோ, நரம்பொடு வீணை நாவி னவின்றதோ வென்று நைந்தார்" (சீவக. 658); 'சாட்ட வீணையும் சரீர வீணையும் ஒக்கக் காட்டின சில பட்சிகள்' (தக்க. 610, உரை.) இடம் என்றது வனம், மலை, நதி என்ற மூன்றையும் கருதி. வினையென்றது கொடியாய் அடிசுற்றல், சுண்ணம் தூவுதல், யாழாற் பாடல்' தோழாய் வளைத்தல் என்பனவற்றை.

(பி - ம்) 212. 'இரைப்பச் சுருளோடு', 'இரைத்துச் சுருளோடு' 'நிரைப்ப' 213. 'நெருக்கி', 'நெருக்க' 215. 'அடிச்சுற்றிக்' 216. 'யாழால்' 'தோழால்'

217. தியாகனை மானதனைத் திக்கானை யெட்டுக்கும்
பாகனையே பின்சென்று பற்றுவார்—தோகையர்

218. நற்றுகில் கொண்ட நறுந்துழாய் மார்பநின்
பொற்றுகி றந்தருளிப் போதென்பார்—மற்றிவள்

219. தன்சங்கங் கொண்ட தடந்தா மரைக்கண்ணு
நின்சங்கந் தந்தருள னேரென்பார்—மின்கொள்ளும்

220. இன்றுயிற் கெல்லா மெறிபாற் கடற்கொள்ளும்
நின்றுயி றந்தரு ணீயென்பார்—என்றென்று

221. மானு மயிலு மனையார் வளைத்துளைப்பத்
தானுங் களிறுந் தடையுண்ட—கோனும்

222. தடுத்த கொடிக்குச் சதமடங்கு வேட்கை
அடுத்த திருநோக் கருளாக்—கொடுத்த

223. திருநகை மூர றிகழ்ந்தா னணங்கும்
ஒருநகை கூர்ந்தொருவா றுய்ந்தாள்—பெருநகை

224. எய்தி யனங்க னெழப்போனுன் மாதரும்
உய்து சிறந்தா ளுழைச்சென்றார்—நொய்தில்

(ப - ரை) 217-24. என்றென்று மானனையார் உளையக்கூறி வளைப்ப, களிறும் தானுமாக இவர்கள் வளைப்பப் போகாது நின்ற அரசனும் முற்பருவத்துவேட்கை ஒன்று பத்து நூறாக அடுத்ததெனத் தலைவி தன்மையை ஆயவெள்ளத்தார் குறிப்பானும், அவர் கூறிய கூற்றானும் அறிந்து தனது அகமகிழ்ச்சி முகத்தால் அறியும்படி மெத்தென்ற திருநகை முகத்தாலே விளக்கினன்.

வளையிழந்த அணங்கும் உழையர் குறிப்பாலும் கூற்றாலும் விளைந்த அபராதம் உட்கொள்ளாமல் எமது உட்கோள் அறிந்தருளினன். உழையராலே நமக்கு இப்பேறு கிடைத்ததென்று ஒப்பற்ற ஒளிகூர்ந்து ஒருவழியால் காமன் வினைக்குப் பிழைத்தாள். காமனும் இவர்கள் குறிப்புணர்ந்து உழையர் பெருக நகைப்பத் திருநோக்கு அருளி அதனுடன் கொடுத்தாற் போலும் குறுமுறுவலும் திகழ்ந்தான். அது பயனாக வீதி விடப் போனான். வளைத்தும் உளைத்தும் தன் நேயம் உணர்த்திய ஆய

வெள்ளமாதரும் மனவியாகுலம் தீர்ந்து உய்ந்து சிறந்தாளான தலைவி யருகே செறிந்தார்.

(கு - ரை) ஆழிக்கை (216) - சக்கரத்தை ஏந்திய கையையுடைய; இது திருமாலாக நினைந்து கூறியபடி. 217. தியாகன் - கொடுப்பவன்; "சென்னிநாட் டெரியல் வீரன் றியாகமா விநோதன் தெய்வப், பொன்னி நாட் டுவமை வைப்பை" (கம்ப.6. மருத்துமலை: 58.) மானதன் - மானத்தைக் கொடுப்பவன்; மானம் - பெருமை, கௌரவம்; அரசன் என்றலும் ஆம்; இறை. 23 உரை; "தண்கொடை மானதன் மார்புதோய்" (கலிங்க. 31); "மானதன் மூரிக்களிறு", "மானதன் மெல்லென் கவரிக்கால்", "வயிரா கரமெறிந்த மானதன்" (இராசராச. 162, 166, 260.) திக்கானை எட்டுக்கும் பாகன் என்றது அவை நிற்குமிடமளவும் இவன் ஆட்சி சென்றது என்பது கருத்து. தோகையர் - ஆய்ச்சியரது. 218. துகில் கொண்டது கண்ணபிரானாக அவதரித்தபொழுது. 219. இவள் தன் சங்கம் - இத்தலைவியின் வளையல்களை. நின் சங்கம் - நினது சேர்க்கை. 221. உளைப்ப - வருத்த. 222. தடுத்த கொடி என்றது "சாயற்கொடியா யடிசூற்றிக் கொள்வார்" (215) என்பதை நினைந்து கூறியது. கொடிக்கு - கொடிபோன்ற மங்கைக்கு. நோக்கு அருளா - பார்வையைக் கொடுத்து. 223. அணங்கு - மங்கை. 224. அனங்கன் - மன்மதன். உய்து: உய்ந்து என்பதன் விகாரம்.

உரை. முற்பருவத்து வேட்கை: நயப்பு. கூற்றும் குறிப்பும்: "சொல்லொடுங் குறிப்பொடும் முடிவுகொ ளியற்கை, புல்லிய கிளவி யெச்சமாகும்" (தொல். செய். 206.) உழையர் - பக்கத்துள்ள மகளிர். அபராதம் - குற்றம். பெருக நகைத்தல்: 'நகை என்பது சிரிப்பு; அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலுமென மூன்றென்ப' (தொல். மெய்ப், 3, பேர்.) விடப்போனன்-அகலப்போனன்; இது 'விடநிற்றல்' என்பது போன்ற வழக்கு. வளைத்து - தடுத்து. உளைத்து - மனம் வருந்தும்படி.

(பி - ம்) 217. 'தோகைதன்', 'தோகையை' 218. 'பொற்றுகி லின்றருளிப் போகென்பார்' 'உற்றவள்', 'உற்றிவள்! 219, 'தந் தருள்க நீயென்பார்' 'முன்கொள்ளும்' 220. 'றந்தருளு நீ', 'றந் தருளாய் நீ' 221. 'வளைந்திளைப்ப' 'தகையுண்ட' 222. 'தசமடங்கு' 'அருளித் தொடுத்த' 223. 'கூர்ந்தொருகால்' 224. 'எய்தவனங்கன்' 'உய்தி'

225. தொடுக்கும் புறஞ்சொற் றொடாமே முலைமீ
தடுக்கும் பசலை யடாமே—உடுக்கும்

226. துகிலுஞ் சரியாமே சுற்றத்தா ரெல்லாம்
புகிலும் புகாமே பொராமே—அகிறாறும்

227. பள்ளியிற் செல்லாள் பருவ முருகற்றோய்
வள்ளியிற் சால வயங்கினாள்—ஒள்ளிழை

(ப - ரை) 225-7. நொய்தாகத் தொடுக்கும் (224) புறங்கூற்றுமொழி தொடாமல் முலைமிசையே அடுக்கும் பசலை அடாமல், உடுக்கும் துகிலும் சரிதல் கூடாமல் சுற்றத்தா ரெல்லாம் தாம் புகும் இல்லிற்புகாமே நின்று போர் செய்யாமல், அகிற்புகை மணக்கும் தலைவனது பள்ளியிடத்துச் செல்லாளாய் அருள் பெற்று ஆயமும் தானும் நின்ற செவ்வி கூறில் பரு வந்தோறும் பிரியாமல் முருகன் தோள் தோய்ந்த அகத்திணை இன்பம் நயந்த வள்ளியினும் மிக விளங்கினாளென வாயில்வகையிற் பவனி கண் டோர் கூறினார் எனக் கூட்டுக.

அணங்கு மென்றது (223) முதலான உம்மை எண்ணும்மை. ஏகாரம் அடங்கலும் (225 - 7) ஈற்றசை. அருத்தி யறிவார் திருத்திவிட விடாய் தீர்ந்தாள் ஒருத்தி (177) கண்ணும் புருவமும் (178) முலையும் தோளும் (179) அல்குலும் மருங்கும் (180) முதலான அவயவ பரிணமம் கூடின பருவத்தாளாய் மங்கைப் பருவக் கைக்கிளை விளங்கத் தாமரையும் குமுதமும் மயிலும் குயிலும் கொண்டு கூறித் (182 - 4) தான் திருவின் செல்வி யென்பது நீரரமகளிர், கானரமகளிர், வரையரமகளிர் தெளிந்து சேவிக்கும் செவ்வியாளாய் இருக்கவும் தன்னைத் தெளியாம லிருக்கும்படியே என்று அதிசயித்து, பெதும்பைப் பருவத்துப் பவனிக் காட்சி கொண்டு தலைவனை நாராயணன் என்று தெளிந்து (186 - 9) அவன் நிறத்துக்கேற்ப உடுப்பதும் முடிப்பதும் பூண்பதும் அடங்கலும் நீலமாக (193 - 4) அவன் நீலமும் தனது சிவந்த நிறமும் தம்மிற் பருவத் திணைக்கும் இல்பொருளுவமைக்கும் ஏற்பித்துக் (195 - 8) கிளியுடனே உட்கோள் கூறி (200 - 201), வண்டு முதலியன கொண்டு பகல் முனி வுரைத்தல் கூறிய எல்லையில் (202 - 6) தலைவனை வரவு எதிரேற்றுக் கொண்டு சென்று வளையிழந்தாள் (208.) அதுகண்டு ஆயவெள்ளத்தார் தம் அன்பு தோன்ற வளைத்தும் உளைத்தும் கூறத் (209 - 21) தலைவி குறிப்புணர்ந்து திருநகை மூரல் நிகழ்ந்தான் (222-3) அதுகொண்டு அணங்கு மகிழ்ந்து உய்ந்தாள் (223.) காமனும் போனான் (224.) உழைய ரும் தலைவியைச் சென்று கூடினார் (224.) அருள்பெற்ற தலைவி முருக னுடனே கூடி விளங்கிய வள்ளியிற் சாலவயங்கினாளென வாயில் வகை

யாரிற் பவனிகண்டோர் கூறினர் எனக் கூட்டுக. நீலமேயன்றி நினையர் தாள் என்றார் (194), முத்தின் பணி பூணின் நாமகள் ஆவோம் ; மரகதப் பணி பூணில் வசுந்தரை ஆவோம் ; மாணிக்கப்பணி பூணில் வர கமலை யாவோம் ; அப்பணிகள் பூணுமல் மறுத்து நாயகன் நிறத்துக்கேற்ற பூண ணிதலை உட்கொண்டாள் என 'ஒரு பொருள் நுதலிய' (தொல். செய். 183) என்ற விதிக்கு ஏற்றது. மங்கை முற்றும்.

(கு - ரை) 224. நொய்து - அற்பம். 225. புறஞ்சொல் - அலர் மொழி. அடாமே - பொருந்தாமல். 226. சரியாமே - நழுவாதபடி. புகிலும் - புகும் இல்லும். 227 வள்ளியின் - வள்ளி நாச்சியாரைப்போல.

உரை. அகத்திணை யின்பம் நயந்த வள்ளி : 'இனி அக்களவிற் புணர்ச்சியை யுடைமையான் வள்ளி சிறந்தவாறும், அத்தமிழை ஆய்ந்த மையான் முருகன் சிறந்தவாறும் கூறுகின்றார்' (பரி. 9 : 16 - 26, பரிமேல்.) ; வள்ளி முருகனது போக சக்தி என்று கூறப்பெறுவதும் நோக்குக.

(பி - ம்) 227. 'செல்வாள் பருவ முருகற்கோர்' 'சாயல் வழங்கினள்'

[மடந்தை]

228. பின்ன ரொருத்தி பெருமைக் கரமகளிர்
முன்ன ருரைக்கும் முதன்மையாள்—சென்னியில்

(ப - ரை) முன்னர் வள்ளியிற் சால வயங்கிய ஒள்ளிய ஆபரணத்தை யுடையாள் (227) அதற்குப்பின்னர்ப்பருவமான மடந்தைப் பருவத்தாள் ; அப்பருவத்து மாதரில் ஒப்பிலாள் ; உருவானும் திருவானும் நலத்தானும் குலத்தானும் உலகிற் கூறும் பெருமைக்கு அரமகளிர் முன்னர்ச் சென்று தொழும் இந்திராணி போல்வாள் ; இதுமேல் உயர்ந்ததன் மேற்றாக உவமையும் பொருளும் ஒப்பாகக் கூறிற்று.

(கு - ரை) முன்னர் உரைக்கும் - முதலில் வைத்து எடுத்துக்கூறும். முதன்மையாள் - தலைவியாவாள்.

உரை. உரு, திரு, நலன், குலன் : தொல். மெய்ப். 25. உயர்ந்ததன் மேற்று : "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை" (தொல். உவம. 3.) என்பதும், 'உவமை யெனப்பட்டது உயர்ந்த பொருளாகல் வேண்டும்' என்னும் பேராசிரியர் உரையும் இங்கே அறிதற்பாலன.

229. வண்ட லிடுநாவி வார்குழற்கு மாறுடைந்து
கொண்டல் சொரிமுத்தின் கொண்டையும்-பண்டுவெந்

230. தேற்றுப் பணைபணைக்கு மென்றே ளிரண்டுக்கும்
தோற்றுச் சொரிமுத்தின் சூழ்தொடியும் - ஆற்றற்

231. கலம்புரி செல்வக் கழுத்திற்குத் தோற்ற
வலம்புரி முத்தின் வடமும் - பொலம்பூண்

232. எதிர்க்கு முலைக்கிரிந்த திக்கயக்கோ டிட்ட
கதிர்க்கு நகைமுத்தின் கச்சும் - அதிர்க்கும்

233. அடல்விடு மல்குற் பரவைக் குடைந்து
கடல்விடு முத்தின் கலையும் - உடலிமேல்

234. ஏந்து மிளைய விளநிலா விட்டெறிப்பப்
போந்து மறுகு புகுந்தொழிந்தாள் - வேந்தனும்

(ப - ரை) 229-34. உச்சியிலே (228) வண்டலிடும்படி நாவி செறிந்த குழலுக்கு ஒப்புத் தோற்று மேகம் திறையாகச் சொரிந்த முத்தாற் செய்த தலைக்கோலமும் கொண்டையும், முற்பட்ட பருவத்து வந்து மாறேற்று மூங்கிலானது பணைக்கும் தன்மை தோளுக்கு மிகுதல் கண்டு தோற்றுச் சொரியும் முத்தாற்செய்த சூழ் தொடியும், ஆபரணங்களுக்கெல்லாம் பிராணனுன வலியையுடைய பூண்புனைதல் கண்டு செல்வக் கழுத்துக்குத் தோற்று வலம்புரி திறையிட்ட முத்தாற் செய்த கட்டுவடமும், பொன் பிதிர்த்தாற் போலும் சுணங்கு பூணுடனே மாறுபாடு படும் முலைக்கு மாறுபாடு கெடத் திக்கயங்களின் கோடுகள் திறையிட்ட கதிர்த்த ஒளிபொருந்திய முத்தினுற் செய்த கச்சும், கடலரவத்தைத் தனது கலாபத்தாலாகிய இசையாலே அதிர்விக்கும் அல்குலாகிய பரவைக்கு உள்ளுடைந்து மாறுபடுகை விடும் கடல் திறையாக இட்ட முத்தாற் செய்த மேகலையும் தம்மில் மாறுபட்டு ஏறிமேனி யுருவின்மேல் ஏந்தும் இத்தன்மையாயின, செக்கர் வானமடுத்த திங்களிற் பிறந்த இளைய நிலாவை விட்டு விளங்கப் பூணணி மண்டபத்தினின்றும் போந்து மறுகிலே புகுந்து பருவக் கைக்கிளையான மெலிதலை மேவி உட்கோள் ஒழிந்தாள். பொருட்கு ஒரு மிகுதி கூறி உவமையைப் பழித்து ஓசை உருவுவமமும் பரிவர்த்தனையும் கூறியமையும் ஒருபொருள் நுதலியவாறும் காண்க.

(கு - ரை) 229. வண்டல் இடும் நாவி - சேறாகப் பூசிய புழுகு செய்; நாவி - புழுகு; கத்தூரியும் ஆம். நாவியைக் குழலில் அணிதல்; 'நாவிவிரி கூழையிள நவ்வியர் துயின்றார்' (கம்ப. 2. தைலமாட்டுப்: 10);

"நாவியுங் காரகி லாவியுந் தோய்குழல்" (நந்தை. 20.) வார்குழல் - நீண்ட கூந்தல். மாறு - ஒப்பு. கொண்டல் - மேகம். இது முதல் 233-ஆம் கண்ணி முடிய முத்துப் பிறக்குமிடங்களும் அவை தலைவி உறுப்புக்களுக்குத் தோற்றவாறும் கூறப்படும். பண்டு - மங்கைப் பருவத்தில். பணை - மூங்கில். பணைக்கும் - பெருக்கும். முத்தின் தொடி : " முத்திற் புனையுஞ் சிறுதொடிக்கைப் பூவை " (123.) 230-31. ஆற்றற்கலம் - மற்ற ஆபரணங்களுக்கு வன்மையைத் தரும் மங்கலநாண். 232. முத்தின் கச்சு : "நீர்மங்கை கொங்கைக்கு நித்திலக்கச் சொக்குமால்" (சிதம்பரச் செய்யுட் கோவை, 49.) 233. உடலி - மாறுபட்டு. மேல் - மேம்பட்டவைகளாக. ஏந்தும் - தரித்துள்ள. இனைய - இத்தகைய சிறப்புமிக்க முத்துக்கள் என்று கூட்டுக கலை - மேகலை ; " திரிந்தாள் கலைநிலையும் " (251.)

உரை. தலைக்கோலம் - சீதேவி யென்னும் ஆபரணம் ; முருகு. 23, ந. முத்துக்கொண்டை : 141. பொன் பிதிர்த்தாற் போலும் சுணங்கு என்பது வருவிக்கப்பட்டது. முறிமேனிஉரு - தளிரைப் போன்ற நிறத்தையுடைய உடம்பு. செக்கர் வானமடுத்த திங்கள் என்பது வருவித்துரைக்கப்பட்டது. தலைவியின் உடம்புக்குச் செக்கர் வானமும் முத்தின் ஆபரணங்களுக்குத் திங்களும் அவற்றின் ஒளிக்கு நிலாவும் உவமை. பருவக்கைக் கிளையான மெலிதல் : பு. வெ. 15. உட்கோள் - மங்கைப் பருவத்துக் கைக்கிளை. பொருள் - உபமேயம், ஓசை யுவமம் என்றது அல்குற்குக் கடலை உவமை கூறியது. ஏனையவை உருவுவமம். பரிவர்த்தனை - கொண்டல் முதலியன கொடுத்த முத்துக்கள்.

(பி - ம்) 229. 'தார்குழற்கு' 'தருமுத்தின்' 230. 'தோற்று' 232. 'யானைக்கோ டிட்ட'

235. சட்கோடி மாணிக்க மொன்றுஞ் சமந்தகமும்
உட்கோடு கேயூரத் தூடெறிப்பக்—கொட்கும்
236. கடல்சேப்ப வந்த கவுத்துவ மொன்றும்
அடல்சேக்கு மார்பிற் கமைய—உடலி
237. அனந்த பணுமவுலி யாயிரமு மொற்றை
நனந்தலை மௌலிக்கு நாண—இனங்கொள்
238. முறுகு கதிரின் முகந்திரிய வேற்று
மறுகு திருமலர வந்தான்—குறுகும்
239. நடையாய வெள்ளமும் நாணிரம்பு திங்கட்
குடையாய வெள்ளமுங் கூடி—அடைய

240. மதியுதய மென்று வணங்க வனச
பதியுதய மென்று பணிய—துதியில்

241. ஒருவரு மொவ்வா வுருவமீக் கூறும்
இருவரு மெய்திய வெல்லைத்—தெருவில்

(ப-ரை) 235-41. சோளேசனும், ஆறு கோடியையுடைய நன் மாணிக்கத்துடன் பொருந்தும் சமந்தக மென்கிற தெய்வமணி ஒளி உள் ளேயும்படி கேயூரத்தூடே விளங்க, கடல் வளைந்த எல்லை முற்றும் சிவக் கும்படி பிறந்த கவுத்துவமணி யொன்றுமே வெற்றியைப் பொருந்தச் சிவக்கும் திருமறுமார்பிற்கு மறுவொளி மயங்கப் பொருந்த, அனந்தபணு மௌலிமணி ஆயிரமும் மாறுபட்டு ஏகபணுமவுலியான தொல்லணிக்கு நாணமுற; மாறுபடுதல் - ஒளி வேறுபடுதல். இப்படி இனமான ஆபரண ஒளிகண்டு பவனி சேவிக்க வந்த பன்னிரு கதிரும் முகம் மாறி முறுக மாறுபாடு ஏற்று வீதி அழகுபெற வந்தான். மெத்தென்ற நடையை யுடைய ஆயவெள்ளமும் நாள் நிரம்பும் திங்கள் போலும் குடையை யுடைய அரசவெள்ளமும் இருபாலும் வந்துகூடி இரண்டாய வெள்ளமும் நினையும் நினைவு ஒரு தன்மையையடையத் தலைவியை மதியுதயம் என்று மதியை வணங்கும் அடைவிலே வணங்கத் தலைவனை வனசபதி உதய மென்று பருதியைப் பணியும் அடைவிலே பணியத் துதியுடனே உலகம் உவந்து துதிக்கும் கடவுளரின் ஒருவரும் உவமையில்லா உருவம் இவ் வுருவமென்ன மிகுத்துக் கூறும் உருவம்; இருவரும் காட்சிபெற்ற அக் காலத்திலே.

(கு-ரை) 235. சட்கோடி - ஆறு முனைகளையுடைய. சமந்தகம்: சத்திராஜித்து சூரியனை வழிபட்டுப் பெற்ற மணி; இவனிடமிருந்து கண்ணபிரான் பின்னர் இம்மணியை அடைந்தனர்; பாகவதம், 10. 25:3. கேயூரத்தூடு - வாகுவலயத்தில். கொட்கும் - சூழும். 236. கடல் சேப்ப வந்த கவுத்துவம்: "செங்கலங்கல் பரந்தெனப் பாற்கடல் சேப்ப வந்த கவுத்துவஞ் சேர்த்தியே" (தக்க. 277.) அடல் சேக்கும் - வன்மை தங்கிய. 237. நனந்தலை - பரந்த இடத்தையுடைய.

உரை. ஏகபணுமவுலியான தொல்லணி: "பவித்ர விசயப் படைப் பரசு ராமன், கவித்த வபிடேகங் காணீர் - தவித்துலகில், மூவெழுகா லெக்கோக் களையு முடித்தவனி, மூவெழுகாற் கொண்ட முடிபாரீர்" (இராசராச. 89-90.) நாள் நிரம்பு திங்கள் - பூர்ண சந்திரன். வனசபதி - தாமரைக்கு நாயகனுகிய சூரியன். மதியை உதயத்தில் வணங்குதல்: "அப்பிறை பதினெண் கணனு மேத்தவும் படுமே" (புறநா. 1); "அந்தி யாரண மந்திரத் தன்புட னிவனை, வந்தி யாதவர் மண்ணினும் வானினு

மில்லை" (வி. பா. குருகுலச். 6.) சூரியன் வணங்கப் படுதல்: "முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி, ஏமுற விளங்கிய சுடர்" (நற். 283 : 6-7); "(ஞாயிறு போற்றுது ஞாயிறு போற்றுதும்)"; (சிலப். 1 : 4); "பேராழி யுலகனைத்தும் பிறங்கவளர் இருணீங்க, ஓராழி தனைநடந்து மொண் சுடரைப் பரவுதுமே" (கலிங்கத். கடவுள் : 7.) தலைவிக்கு மதியும் தலைவனுக்குச் சூரியனும் உவமை; "மதியமும் ஞாயிறுங் கதிர்விரிந் தோடிக், கடனிற விசும்பி னுடனின் றுங்குப், பைந்தொடிச் சுற்றமொடு தந்தை தலைத்தாள், ஆயத் திடையோள் பாசிழைப் பாவை, யானை மிசை யோன் மாமுடிக் குரிசில், இருவரு மவ்வழிப் பருகுவனர் நிகழ" (பெருங். 1. 32 : 22-7); 'வெங்கதிர்க் கனலியும் தண்கதிர் மதியமும் தம்கதி வழுவித் தலைப்பெய்தாற் போலவும் தலைப்பெய்து' (இறை. 2, உரை.)

(பி - ம்) 236. 'உடலில்' 237. 'பணைமணி' 'பணைமோலி' 238. 'திமிர' 241. 'கூர விருவரும்'

242. நெருங்க மகளிர் நிறந்திறக்க வெய்து
மருங்கு வருகின்ற மாரன்—திருந்திய

(ப - ரை) மகளிர் தெருவிலே ஒருவரை யொருவர் நெருங்கும்படியாக அக நிலைகளிலே குளிப்ப எய்து பக்கம் சேவித்து வருகின்ற மாரன் யாது செய்தான் என்னில்.

(கு - ரை) நிறம் - உயிர்நிலை; "சிலைமாண் கடுவிசைக் கலைநிறத் தழுத்தி" (குறுந். 272 : 5.)

(பி - ம்) 'திருந்திழை'

243. பாய பகட்டல்குல் பாரா வதன்பரப்பிற்
போய மருங்குற் புறநோக்காச்—சாயா

244. முலையின் கதிர்ப்பு முருகு கெழுதோள்
நிலையின் பணைப்பு நினையாக்—கொலையால்

245. உடைக்கு முலகடைய வூடாடு கண்ணின்
கடைக்கு முடிவின்மை காணுக்—கிடைக்கும்

246. பருவக் கொடிவதன பங்கே ருகத்தின்
புருவக் கொடிமுடியப் போகா—உருவக்

247. களிக்கும் புடவி சதகோடி கற்பம்
அளிக்கும் பெருமானை யஞ்சா—குளிர்க்கும்

248. கடுங்காற் கொடுந்தேரை முட்டக் கடாவிக்
கொடுங்காற் சிலையைக் குனித்து—நடுங்கா

249. முகுந்த னிவனென்று முன்பெய்த வேவிற்
புகுந்த திதுவென்று போனான்—திகந்த

(ப - ரை) 243-9. இதனுள் பாய பகட்டல்குல் முதல் புருவக்கொடி யளவும் புடவி சதகோடிகற்பம் அளிக்கும் பெருமான் வினையாக்கி மாரன் அவ்வினைகண்டு அஞ்சித் தேரை முடுகக் கடாவிச் சிலையைக் குனித்தான். முன்பு எய்த ஏவில் புகுந்தது இதுவென்று போனானெனப் பொருளுரைக்க.

முற்பருவம் போலன்றித் திருந்தியவெனப் பரந்துயர்ந்த அல்குலதிசயம் பார்த்துக் காணாத மருங்குலை அல்குலின் பரப்பெல்லை முற்றப் பார்த்து ஆராய்ந்து திருந்தியவாய இடைகாணாததற்கு அஞ்சாமல் வளரும் முலையின் கதிர்ப்பையும் மணம் கெழுமிய தோள் நின்ற நிலையின் பெருமையையும் உணர்ந்து இதனாலே போயதனை நினைந்து கொலைத் தொழில் திருந்தியவாய் உலகடையக் கொலையாலே உடைக்குமென்று கருதும்படி மகரத்தைப் புறங்கண்டு குமிழுடன் மாறுபட்டு ஊடுலாவு கண்ணின் கடைக்குச் சிறக்கணிப்பு மாறாத் தன்மை கண்டு திருந்திய மடந்தைப்பருவம் கிடைக்கும் வல்லிசாதிக் கொடியினது வதனபங்கேருகத்தின் புருவமாகிய கொடியானது ஒரு காலின்கண் கண்ணின் கடையை விட்டு மீண்டு போதாதெனை இடைவிடாமல் அகமும் புறமும் ஒரு தன்மையாகக் கண்டு களிக்கும் பெருமானை, புடவியைச் சதகோடி கற்பமளிக்கும் பெருமானைக் கண்டு அஞ்சி, கண்ணுக்குத் தோற்றா மந்தக்கால்தேரினை வாடைக்காற்றென விரையக் கடாவித் தோன்றாத எல்லையிலே நின்று நிறம்திறக்க எய்ததில் (242) வளைந்த காலையுடைய சிலையைக் குனித்தான்; நாண் இறக்கினான்; அதன் பின்னராக நடுங்கினான். ‘இவன் அரசன் அல்லன்; அரவணைச் செல்வனும்; இவள் திருவின் செல்வியாம்; மானிட மகளல்லள்; முன்னர் உமாதேவி காரணமாக வினை செய்து பெற்ற பயன் இது’ எனத் தனது வடிவின்மையைச் சுட்டித் தனதிடமே போனான்.

(கு - ரை) 243. அல்குல் முதல் புருவக்கொடி: 178-9-ஆம் கண்ணிகளில் இம்முறை மாறிக் கூறப்பட்டுள்ளன. பாய - பரவிய. பகடு - பெருமை. பாரா முதலியன செய்யா என்னும் வாய்பாட்டு எச்சங்கள். 244. கதிர்ப்பு: காமக் களிப்பாலுண்டாகிய மதம். பணைப்பு - பெருத்தல். 245. உடைக்கும்: முற்று. அடைய - முழுவதும். 246. பருவக்கொடியென்றது மடந்தையை. வதனபங்கேருகம் - முகமாகிய தாமரையை,

உருவ - இடைவிடாமல். 247. புடவி - உலகம். சதகோடி : பல என்னும் பொருளது; இவ்வாறு வருவதனை 'அனந்தவாசி' என்ப; தக்க. 73, உரை. பெருமானை அஞ்சாமை: "தேயத்தார், மன்னனை யஞ்சாதே" (209-10). 248. முட்ட - விரைய. கடாவி - செலுத்தி. கொடுங்கால் - வளைந்த வில்லின் முனை; "வரையன் றொருகா லிருகால் வளைய நிமிர்த்து" (சிற். 152.) (249) எ - அம்பு. திகந்தம் - திக்குக்களின் முடிவு.

உரை. மகரத்தை......மாறுபட்டு: "குழைபொருது நீண்டு குமிழ் மேன் மறியா......கருநெடுங்கண் போலுங் கயல்" (தண்டி. 32, மேற்.) சிறக்கணிப்பு - சுருங்குதல்; குறள், 1095. வல்லிசாதிக்கொடி: நெடுநல். 113, ந. அகம் - நெஞ்சு. மந்தக்கால் - தென்றல். அரவணைச் செல்வன் - திருமால். உமாதேவி காரணமாகச் செய்த வினை: சிவபெருமான் உமாதேவியை மணம் செய்து கொள்ளும் பொருட்டு அவர்மீது அம்பு எய்தமை. மன்மதன் தனது வடிவின்மையைச் சுட்டி வருந்திச் சென்றது: "உழந்த யோகத் தொருமுதல் கோபத்தால், இழந்த மேனியு மெண்ணி யிரங்கினன், கெழுந்த கைக்கொரு வன்மை கிடைக்குமேல், பழந்து யர்க்குப் பரிவுறும் பான்மையால்" (கம்ப. 3. அயோமுகி. 26.)

(பி - ம்) 243. 'மருங்குல் புடைநோக்கா' 244. 'பரப்பு முருகெழுதோள் நிற்கும்' 'கொலையின்' 246. 'போதா' 247. 'அஞ்சான்' 248. 'கொடித்தேரை' 'குனித்தான்' 249. 'பெய்த வேள்பிற்', 'பெய்தவாறே'

250\. முழுதா ளபயன் முகிணகையுந் தோளும்
தொழுதா ளொருதானே தோற்ருள் — அழுதாள்

251\. திரிந்தாள் கலைநிலையுஞ் செம்பொற் றுகிலும்
சரிந்தா டுணைவியர்மேற் சாய்ந்தாள் — பரிந்தார்

(ப - ரை) 250-51. இனித் தலைவி நிலை யாதென்னின் திகந்தமுழுதாள் அபயன் நகைபுரிந்தானாகக் கருதிப் பவனியிடத்திலே அந்நகையையும் தோளையும் வணங்கினாள். தீரா உய்க்கத்தால் தன் பருவக் கைக்கிளைத்திணை தோன்றத் தலைவன் உருவின்றன்மையால் காமன் வினையற்றிருக்கவும் தன்னைத் தானேதோற்ருள்; மெய்ப்பாட்டில் கருணையென்னும் மெய்ப்பாடு தோன்ற அழுதாள்; கலையும் நிலையும் திரிந்தாள்; சிவந்த பொற்றுகிலும் சரிந்தாள்; துணைவியர் தோள்மேற் சாய்ந்தாள்; முற்பருவத்து வளைத்தும் உளைத்தும் (221) பரிந்த புரிக்குழலார் (261) இப்பருவத்துங் கூடி யாது செய்தாரென்னில்,

(கு - ரை) 250. முகிழ்நகை - புன்சிரிப்பு. 251. கலை - மேகலை. நிலை - மனநிலை.

உரை. உயக்கம் - வருத்தம். பருவக் கைக்கிளை : இங்கே மெலிதல். துகில் சரிதல் காம விகாரத்தால் ; 'சரிந்தபூந் துகில்கள் தாங்கார்' ; (கம்ப. I. உலாவியற். 2.) கருணையென்னும் மெய்ப்பாடு தோன்ற அழுதல் : 'அழுகையென்பது அவலம் ; அஃது இருவகைப்படும் ; தானே அவலித்தலும் பிறரவலம் கண்டு அவலித்தலும் என ; இவற்றுள் ஒன்று கருணையெனவும் ஒன்று அவலமெனவும் பட்டுச் சுவை ஒன்பதாகலு முடைய வென்பது' (தொல். மெய்ப். 3, பேர்.)

(பி - ம்) 250. 'எபயனை மூர னகையும்'

252. முடைக்கை யெதிர்க்குரவை கோத்தாய் முரல்யாழ்
நடைக்கை தொடுக்கை நகையோ—விடைப்பேர்

253. இனந்தழுவிப் பின்னையைக் கொள்வா யிவளைத்
தனந்தழுவிக் கொள்கை தவறோ—அனந்தம்

254. கருந்துகிலக் கோவியரைக் கொள்வாய் கமலை
தருந்துகி லேகத் தகா தோ விருந்து

255. துளவ முகிற்கிது வந்தது தூய
வளவர் திருக்குலத்து வந்தோ—அளவிறந்த

256. வன்கண் ணிவளளவுங் கண்டே மடவரல்
புன்க ணடியேம் பொறேமென்று—மின்கண்

(ப - ரை) 252-6. 'குரவைக் கூத்துக்குப் பால்முடை நாறும் கோவியர் கையோடு கைகோவை செய்தாய் முன்னம் ; அது நகையோ? யாழுடனே எப்பொழுதும் பயிலும் ஒழுக்கத்தினையுடையாள் கையோடு கைகோவை செய்தல் நகையோ ? கோவியர் மெல்லியர் அல்லரென்பது விளக்க இனமாக விடையாமவையிற்றின் கோட்டைத் தழுவித், தழுவுதற்குப் பின்னைப் பிராட்டியைக் கொள்வாய் என்று உலகம் கூறுதல் தவறோ ? மென்மைக்கு வடிவமான இவள் தனத்தைத் தழுவிக் கோடல் தவறோ ? கோவியரைப் பலநாளும் முடைமாசு மூசிய பல கருந்துகிலை நீ விரும்பிக் கோடல் தக்கதோ ? இவள் தான் விரும்பித் தரும் துகில் கோடல் தகாதோ ? நோக்கித் திருவுள்ளத்துடனே விசாரித்துப் பார்க்க ; ஆயினும் புதிது, துளவ மாலையையுடைய முகிலே ! உனக்கு மாதரளவில் பராமுகம் வந்தது. மீன், ஆமை, பன்றி, விறலரி, வினைவறியாக் கோவரிடத்தன்றி இருமரபுந் தூயவளவர் திருக்குலத்தில் வந்து அவதரித்ததில்

வந்ததோ? அளவிறந்த வன்கண்மை மடவரலான இவளளவிலே கண்டேம். அடியோங்கள் இவள் புன்கண் கண்டு பொறேம்; வந்தபடி சொல்வேம்' என்று இவை சொல்லிப் பரிந்தார்.

(கு - ரை) 252. முடை - பால்முடை; "தடாநிறை வெண்ணெயுந் தயிருங் கொண்டெதிர், அடாமுடை நாறுதோ ளாயர்" (வி. பா. சூது போர். 94.) குரவை - கைகோத்து ஆடும் கூத்து. யாழ் நடைக்கை யென்றது மடந்தையாகிய தலைவியின் யாழ் பயிலுங் கையை. விடைப்பேரினம் தழுவியது: பாகவதம், 10 : 29-ஆம் அத்தியாயத்தால் அறியப்படும். நகையோ - பரிகாசத்திற்கிடமோ, எளனமோ. 253. பின்னை; "நிலமகட் குக் கேள்வனு நீணிரைநப் பின்னை, இலவலர்வா யின்னமிர்த மெய்தினு னன்றே" (சீவக. 482); இவள் பெயர் சத்தியை யென்று பாகவதம் கூறும். அனந்தம் - பல. 254. கருந்துகில் - கரியநிறத்து ஆடையணிந்த. கோவியர்-ஆய்ச்சியர். கமலையென்றது மடந்தையை; இவளைத் திருவின் செல்வி என்பர். விருந்து - புதுமை. 256. வன்கண் - கொடுமை. புன்கண் - துன்பத்தை.

உரை. இருமரபும் தூய வளவர் திருக்குலம்: 'தாயும் தந்தையுமாகிய இருவர் குலத்தையும் உலகத்தார் நன்றென்று மதித்த பலவாய் வேறுபட்ட பழைய குடி' (முருகு. 178, ந.); 'இருமரபுந் தூய மறையோனுக்கு' (சிலப். 9 : 28-32, அடியார்.)

(பி - ம்) 252. 'முதல் யாழ்' 'கொடுக்கை.' 254. 'கருந்துகில் கோவியரைக்' 'கோடல்' 'பொருந்து', 'திருந்து' 256. புன்கண் டமியோம் போறேமென்று' 'மன்கண்.'

257. இவையிவை சொல்லிப்போ யின்னமளி யேற்றிக்
கவிரிதழ் பின்னுங் கலங்கத்—துவரின்

(ப - ரை) அதன் பின்னராக ஒருதானே தோற்ற மின்னிடத்துச் சென்று அவளை இனிய அமளியேற்றி உருவினுக்கு உருவம் தானே தோற்றதும் போதாமற் பின்னும் கலக்க மெய்த.

(கு - ரை) கவிரிதழ் - முள்ளு முருங்கையின் பூவைப்போன்ற இதழையுடைய தலைவியான மடந்தை.

258. வியக்குந் துகிரியைய மேம்பட் டுலகை
மயக்குந் திருவாய் மலர்க்கும்—நயக்கும்

259. பொருப்புருவத் தோளின் புதுமைக்கு நேரே
திருப்புருவஞ் செய்த செயற்கும்—பரப்புடையச்

260. செங்கே ழெறித்து மறிக்குந் திருநயன
பங்கே ருகஞ்சூழ் படுகொலைக்கும்—அங்கே

261. தரிக்குமே தென்றலுஞ் சந்த்ரோ தயமும்
பரிக்குமே கண்கள் படுமே—புரிக்குழலார்

262. பாலிருத்தி மம்மர் படப்படப் பையப்போய்
மாலிருத்தி யுள்ள மயங்கினுள்—மேலொருத்தி

(Red)

(ப - ரை) 258-62. புரிக்குழலார் துவர்ப்பு நிறத்தில் உலகம் வியக்கும் பவளத்தைப் பொருந்துதலையுடையவாய் அவ்வுலகை மயக்கஞ் செய்யும் தன்மையவாய (பகட்டல்குல் திருந்தியதென்னும் உட்கோள் விளக்கும்) திருவாய் மலர்க்கும், தோளும் முலையும் மருங்கின்றி நிற்கும் நிலை உட்கொண்டு பொருப்பினது உருவொத்த தோள் செய்த புதுமைக்கும், கண்ணின் கடைக்கு முடிவின்மைகண்டு திருப்புருவம் செய்த செயற்கும், புருவக்கொடி முடியப் போதாத திருநயன பங்கேருகஞ் சூழ்ந்த படுகொலைக்கும் சென்று தென்றலரசனை வினை செய்யாமல் உயிர் தரிக்குமோ? சந்திரோதயமும் வினை செய்யாமல் உயிர் சுமந்து வாழுமோ? அவை அப்படிச் செய்தாலும் கண்ட கண்களிற் றுயிலுண்டாமே யென்று இவை சொல்லி இருவர்க்கும் உழுவலன்பு உண்டென்னும் தன்மை பதிவித்து மயக்கம் படப்படப் பரிந்தார்; படுதல் - உண்டாதல். ஆசையெழ, புரிக்குழலார் பரிந்த வாசகம் பற்றுக்கோடாகத் தெளிந்து இவர் அருகு நின்று மெத்தென எழுந்து, பாயலிடத்துப் போய், தனது நாயகனான மாலை உள்ளத்துக்கொண்டு மயங்கினுளென மெலிதற் கைக்கிளை மற்றப் பவனிகண்டோர் கூறியவாறு காண்க. இவை யிவை என்ற முன்னிலைவினை ஒன்று தலைவன் மேற்று; ஒன்று தலைவி மேற்று.

(கு - ரை) (257) துவர் - செந்நிறம். 259. பொருப்பு - மலை. புருவம் செய்த செயல் - நெறிப்பு; இது நன்றாக நோக்கும்போது உண்டாகும் மெய்ப்பாடு. 260. செங்கேழ் - செந்நிறம். நயன......படுகொலை: "புங்கப் படைவிழிக் கடையிலன் றிவர்புரூஉப், பங்கத் தகிலமும் படுகொலைப் படுவதே" (தக்க. 82.) 261. சந்த்ரோதயம்: "சந்த்ராதவரும் இந்த்ராதியரும்" (தக்க. 183.) 262. மம்மர் - மயக்க நோய். மால் - திருமாலாகிய சோழனை.

உரை. உழுவலன்பு - எழு பிறப்பிலும் தொடர்ந்த அன்பு. முன்னிலை வினையென்றது 252-4 ஆம் கண்ணிகளில் உள்ளனவற்றை. அவற்றுள் முன்னது தலைவன் தொழில்; பின்னது தலைவியின் தொழில்.

(பி - ம்) 258. 'தகிரிணைய' 259. 'பொருப்பவர்மெய்த் தோளிற் புதுமைக்கும் போந்து' 260. 'எறிக்கு முறிக்குந்' 262. 'பைபயப் போய்'

[அரிவை]

263. தாளை யரவிந்தச் சாதி தலைவணங்கத்
தோளை யுரகர் தொழவிருப்பாள்—நாளை

264. வளவர் பெருமான் வரும்பவனி யென்று
கிளவி விறலியர்வாய்க் கேட்டாள்—அளவுடைத்

(ப - ரை) 263-4. மடந்தைப் பருவத்துக்கு மேற்பருவமான அரிவைப் பருவத்தாளொருத்தி (262) இவள் மக்களுள்ளா ளாயினும் திருவின் செல்வி யென்பது தோன்றத் தாளை அரவிந்தச் சாதி தலைவணங்க, தோளை அது கண்டு உரகர் தொழத்தக இருப்பாள்; இது செல்வம் பற்றிய பெருமிதத்தது. மாலை மங்கலம் பாடிய விறலியர் வந்து, 'வளவர் பெருமான் பவனிவரும் நாளை' என்று கூறக் கேட்டாள்.

(கு - ரை) 263. அரவிந்தச் சாதி - தாமரைப் பூவாகிய இனம் முழுவதும். அரிவையின் தோளுக்குப் பாம்பு உவமை.

உரை. செல்வம் பற்றிய பெருமிதம்: செல்வம் உவகை தோன்றுதற்குரிய காரணங்கள் நான்கனுள் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது; தொல். மெய்ப். 11. மாலைமங்கலம் பாடிய விறலியர்: இதனால் காலையில் மங்கலம் பாடுவோர் பாணர் என்பது அறியப்படும்; "நாளீண்டிய நல்லகவர்க்கு", 'விடியற்காலத்தே வந்து திரண்ட அரசர் விரும்பப்பட்ட சூதர்க்கு; இனி வைகறை பாடும் பாணர் என்பாரும் உளர்' (மதுரைக். 223, ந.) என்பதும் இதனை வலியுறுத்தும்.

265. தோரிரா வன்றம்ம விவ்விரா வோதிமத்தோன்
பேரிரா வென்று பிணங்கினாள்—பேரிரா

266. என்று விடியுங்கொ லென்றாள் விடிவளவும்
நின்று சுடுங்கொ னிலவென்றாள்—நின்றார்

(ப - ரை) 265-6. அவர் கிளவி கேட்டுக் கலக்கமென்னும் மெய்ப்பாடு நிகழ இரவுநீடு பருவர லொழுக்கத்தினளாய் உழையர் கேட்ப, 'கேளீர்! இவ்விரவு முன்போன இராவின் அளவை உடைத்தன்று (264); இஃது இற்றைக்கு ஓதிமத்தோன் பேரிராவின் அளவையுடைத்து' என்று வெறுத்தாள், 'இப்பேரிரா என்றுகாண் விடிவது' என்று ஐயுற்றாள்; 'இவ்விரவு விடியுமளவும் நாடோறும் இரண்டு நாழிகை நிறைவு குறைவான தன்மை யொழிந்து நிலவு நிலைநின்று சுடும்போலே இருந்தது' என்றாள்; இம்மூவகையும் கலக்க மெய்ப்பாடு.

(கு - ரை) 265. ஓதிமத்தோன் இரா: இது 2000 சதுர்யுகங்கள் கொண்ட காலம், "மூல மாமலர் முன்னவன் முற்றும், கால மாமெனக் கங்குல் கழிந்ததே" (கம்ப. 3. அயோமுகி. 27.) ஓதிமத்தோன் - அன்ன வாகனத்தையுடைய பிரமதேவன்.

உரை. இரவு நீடுபருவரல் - இராப்பொழுது நீடுதலாலுண்டான துன்பம்; பு. வெ. 301. கலக்கமென்னும் மெய்ப்பாடு: 'கலக்கமென்பது சொல்லத்தகாதன சொல்லுதல்' (தொல். மெய்ப். 22, பேர்.) நாடோறும் இரண்டு நாழிகை நிறைதல் வளர்பிறையிலும், குறைதல் தேய்பிறையிலும் நிகழும். இம்மூவகையும் என்றது இரவு நீடுதலும், என்று விடியுமென்றலும், நிலாச்சுடும் என்பதுமாகிய மூன்றையும். நிலவு சுடுதல்; நள. I. 104, 107, 108, 111.

(பி - ம்) 264-5 'அளவிறந்த தோரிரா', 'அளவுடைய தோரிரா' 266. 'சுடுமே' 'நன்ருய்'

267. அடுத்தடுத் தேந்திய திவ்யா பரணம்
எடுத்தெடுத் தொப்பித் தெழுந்து—சுடர்க்கதிரோன்

268. மாலைப் பகைவியைப் போக்கி வருவித்த
காலைத் துணைவியைக் கண்டெழுந்தாள்—காலையோன்

(ப - ரை) 267-8. இவள் கலக்கங் கண்டு கதிரோன் தலைவனது மரபோனுதலின் அவள் மெலிவொடு வைகல் அமையாதெனக் கருதி இவளுக்கு மாலையாகிய பகைவியைப்போக்கித் தனது துணையான காலையை வருவிக்க அவளைத் துணைவியாகக் கண்டு எழுந்தாள். அற்றைப் பணிமுறைக்கு நின்றார் (266) திவ்வியாபரணங்களைக் கொண்டுவந்து நிற்ப அவற்றிலே தனக்கு அணிதற்கெடுத்தவை எடுத்துப் புனைந்து அவ் விடத்தை விட்டுப் போந்து.

(கு - ரை) 267. ஒப்பித்து - ஒப்பனை செய்துகொண்டு, அலங்கரித்துக்கொண்டு; "மரகதத்தைக் கடைந்தொப்பித்த தொத்தன" (திருவேங் கடத்தந். 93.) கதிரோன் - சூரியன். 268. மாலைப் பகைவி - இராப் பொழுதாகிய விரோதியை; காலை, மாலை, இரவு முதலிய பொழுதுகளைப் பெண்பாலராகக் கூறும் கவிமரபுபற்றிப் பகைவி என்ருர்; பகைவி - பகைவன் என்பதன் பெண்பால். 'மாலையைப் பகைவி' யென்றது, "காதல ரில்வழி மாலை கொலைக்களத், தேதிலர் போல வரும்" (குறள், 1224) என்பது பற்றி.

உரை. மெலிவொடு வைகல் - தளர்ச்சியொடு தங்குதல்; பு. வெ. 298. அற்றைப் பணிமுறைக்கு நின்றார் என்பதனால் நாடோறும் வெவ்வேறு மகளிர் பணி செய்வாரென்பது அறியப்படும்.

(பி - ம்) 267. 'அடுத்தடுத் தீர்தன' 'சுடர்ப்ரபையோன்', 'சுடர்ப் பகலோன்' 268. 'வருகின்ற'

269. சேமித்த பூங்கோயி லெல்லாந் திருவென்று
காமித் திதழின் கடைதிறப்ப—நேமி

270. மணக்கத் துணையன்றில் வாயலகு வாங்கித்
தணக்கக் கடிகாவிற் சார்ந்தாள்—கணக்கதிர்

(ப - ரை) 269-70. காலையோன் (268) மாலைக்காலத்துச் சேமித்த பூங்கோயிலெல்லாம் தாமரை; வினை, பயன், மெய், உரு எல்லாம் திரு வென்று காமித்தலையுற்று இதழாலே அடைத்த வாசல் திறப்ப; ஈது வினையில் பொருட்கண் மன அறிவுவமத்தால் பொருளே உவமஞ் செய்தல். இரவிற்கூடப் பெறாது தன்போல் வருந்திய நேமிப்புள்ளானது பேடையுடனே மணஞ்செய்ய இரவு மணப்பதும் புலர்ந்ததும் கூப்பிடுவதுமான அன்றில் வாயிடத்து அலகுவாங்கி இரைமேற் பிரிய மணம் பொருந்திய காவிற் புகுந்தாள்.

(கு - ரை) 269. பூங்கோயில் - தாமரை. காமித்து - விருப்பமுற்று. நேமி - சக்கரவாகப் பறவை. 270. மணக்க - பெடையோடு கலந்து மகிழ; மணத்தல் - கலத்தல் "அறையும் பொறையும் மணந்த தலைய" (புறநா. 118 : 1); "நிரை மணந்த காலையே" (சீவக. 418.) அன்றில் அலகோடலகு சேர்த்து இரவில் துயிலும்; "எனைப்பார்ப்ப ரன்றி லலகோடலகுற் றிடுங்கலவி, தனைப் பார்ப்பர்" (மதுரைக் கோவை. 151.) தணக்க-பிரிய.

உரை. மன அறிவு உவமம்: தொல். உவம. 1, இளம். பொருளே உவமஞ் செய்தல்: அரிவைப் பருவத் தலைவியைத் திருமகளாகக் கூறியது: "பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும், மருளறு சிறப்பினஃ துவம மாகும்" (தொல். உவம. 9.)

(பி - ம்) 269. 'காமத் திதழின்' 270. 'தணப்பக் கடிகாவுட்'

271. வந்து பொருவதொரு மாணிக்கச் செய்குன்றில்
இந்து சிலாதலத்தி லேறினாள்—குந்திக்

(ப - ரை) பல கதிர் (270) கூடி வளைந்துகொண்டு மலையரண் அழித்தற்குப் பற்றியேறும் தன்மைபோலக் கிரணங்களை விடாநின்ற மாணிக்கப் பாறையாற் செய்த செய்குன்றிடத்தினது பக்கத்தில் சந்திரகாந்தச்

சிலையாற் செய்த நிலாமுற்றத்திற் சென்று ஏறினள். அந்தச் செய்குன்றில் வளரும் மான் முதலிய நிலாவால் என்செய்த வென்று அறியவும், தனது வெம்மை மாற்றவும் போலும் என மெலிவொடு வைகலொழுக்கம் இரவு நீடு பருவரலாற் கைம்மிக அதற்கு ஆற்றலளாய் இந்து சிலாதலத்தில் ஏறினள்.

எழுந்திருந்து (268) ஒப்பித்த இடத்தினின்றும் எழுந்து (267) கடிகாவிற் புகுந்து (270) இந்து சிலாதலத்தி லேறினள் (271) எனக் கூட்டுக.

(கு - ரை) கணக்கதிர் - கூட்டமான கிரணம். பொருவது - போர் செய்வது. இந்து சிலாதலம் - சந்திரகாந்தக் கல்லாற் செய்யப்பட்ட நிலா முற்றம்.

உரை. செய்குன்றில் மான் முதலியன இருத்தல்: "மென்றினைப் பிறங்கலும் மிளிர்ந்துவீ ழருவியும், குன்ற யன்ம ணிச்சுனைக் குவளை கண் விழிப்பவும், நின்று நோக்கும் மான்பிணை நீல யானை மன்னவன், கன்று காமம் வெஃகிய காமர் காம பூமியே" (சீவக. 148); 'இவற்றைச் சித்திர மெனிற் கோயிற்கு அங்கமாகிய செய்குன்று கூறிற்றிலாராவர்" (சீவக. 148, ந.); பெருங். 1. 46 : 265-285.

(பி - ம்) 'பொருதவொரு' 'சூந்தம்'

272. கடப்பன கன்னிமா னோக்கியு மன்னம்
நடப்பன பார்த்து நயந்தும்—தொடக்கிக்

273. களிக்கு மயிற்குலங் கூத்தாடக் கண்டும்
கிளிக்குலம் பாட்டெடுப்பக் கேட்டும்—பளிக்குருவப்

274. பாவை மணக்கோலம் பார்த்தும் பலநகை
பூவை பகரப் புறஞ்சாய்த்தும்—கோவை

275. அளிக்களி யாட்ட மயர்ந்துங் கபோத
விளிக்களி கூர்ந்து வியந்தும்—களிக்கப்

276. பழிச்சி வணங்கிப் பெருமாள் பவனி
எழுச்சி முரசோர்ந் திருந்தாள்—கழற்செழியர்

(ப - ரை) 272-6. ஆயவெள்ளமும் தலைவியும் வருவதுகண்டு மருண்டு குதித்தலைக்கொண்டு கடப்பனவான இளைய மானினத்தை நோக்கியும், அன்னமும் சேவலும் தம்மிற் பிரணயகலகம் தொடக்கி நடத்துவனபார்த்து நயப்புற்றும், இன்பச் செவ்வி பெற்றுத் தம்மிற்

களிக்கும் மயிலினங்கள் ஆடும் கூத்தாடல் கண்டும், ஆடற்கு இசையக் கிளிக்குலம் பாடல் எடுப்பன கேட்டும், பளிக்குச்சுவரில் உருவாகத் திறந்து செய்த பாவைக்கு மணக்கோலமான கரணபேதம் பார்த்தும், பல வாகப் பூவையும் சேவலும் நகைத்த மொழிகூற அதற்கு உழையர் முகம்பாராமல் புறத்திலே முகஞ் சாய்த்தும், வண்டு மதுவுண்டு தம்மில் மயங்கிக் கோவை செய்யும் களியாட்டம் கண்டு விரும்பியும், அதற்கேற்பக் கபோதப் பேடும் சேவலும் தம்மிலே விளிக்கும் தன்மை கண்டு வியந்தும், இவை களிப்பக் கண்டும் எம்மைப்போல மெலிவொடு வைகாது சுகமே இருப்பீராக வென்று வாழ்த்தித் தளர்ந்து, முரசொலி ஓர்ந்திருப்பாளான எல்லையிலே பெருமாள் பவனி யெழுச்சி முரசொலி விளங்க.

(கு - ரை) 272. தொடக்கி நடப்பன என்க. 274. பூவை - நாகணவாய்ப்புள்; இது சிரிப்புண்டாகப் பேசும். 275. கபோத விளி - புறாக்களின் குரல். 276. பழிச்சி - வாழ்த்தி. பவனியெழுச்சி முரசு: "மேதினியில், ஊன்று கலிகடிந்த வுத்துங்க துங்கன்றன், மூன்று முரசு முழங்குதலும்", "யாம முரசா விழந்த நிறைநினது, தாம முரசு தரப் பெற்றேன்" (விக்கிரம. 120-21, 294.) செழியர் - பாண்டியர்.

உரை. பிரணய கலகம் - ஊடல். மணக்கோலப்பாவை: 284. பூவை நகைத்த மொழி கூறல்: 'பூவைக்குப் பிறரை நகுவித்தலே பொருள்' (124, உரை.)

(பி - ம்) 273. 'கண்டு' 274. 'பலகாதை', பலவகைப்' 275. 'அளிக்கள வாட்டம்' 'கூர்த்தும் வியந்தும்' 'களிப்பப்' 276. 'கழற் செழியன்'

277. தென்சங்கங் கொண்டான் றிருச்சங்கஞ் செய்குன்றில்
தன்சங்க மாகி யெதிர்தழங்க—மின்சங்கம்

278. போல விழுந்து மெழுந்தும் புடையாயம்
கோல மறுகு குறுகுவாள்—ஞாலம்

(ப - ரை) 277-8. வீரக் கழற்காற் செழியர் (276) தென்மதுரையை யழித்துச் சங்கத் தமிழைக் கொண்டான் திருமுன்பு முழங்கும் சங்கம் செய்குன்றின்கண் எதிரொலியாலே தனது முன்பு முழங்கும் சங்கமாக அதனெதிர் தழங்க மின்னின் திரள்போல உடனெழுந்து தம் இனம் நெருங்க விழுந்தும் எழுந்தும் ஆயவெள்ளம் புறஞ்சூழ மறுகிடம் குறுகுவா ளாயினள். முன்னர் அவலச்சுவை மாற மான் முதலாயவற்றினது விளையாடல் கண்டு விளையாடற் பொருளாகிய உவகை மெய்ப்பாடு நிகழ,

சங்கம் முழங்க, 'என்பேறு பெறுது ஒழிவீர்' என்று அவையிற்றுக்கு அருள் செய்து கோல மறுகு குறுகுவாளாயினள் எனக் கூட்டுக.

(கு - ரை) 277. செய்குன்று : 271. மின்சங்கம் - மின்னலின் தொகுதி.

உரை. அவலச் சுவையை உவகை மாற்றியது : 'வீரத்தாற் காமம் கெட்டதென்று இரண்டன் சிறப்புங் கூறினர்' (சீவக. 758, ந.); "காமன், தன்றிறத்தையுங் கடந்தது சீற்றத்தின் றகைமை", "சீற்றமென் றொன்று தானே மேனிமிர் செலவிற் ருகித், தோற்றிய துன்ப நோயை யுள்ளுறத் துரந்த தம்மா" (கம்ப. 5. சிந்தனைப், 60, பாசப். 23.) மான் முதலாயின செய்குன்றில் உள்ளவை. விளையாடற் பொருளாகிய உவகை : "செல்வம் புலனே புணர்வு விளையாட்டென், றல்ல னீத்த வுவகை நான்கே" (தொல். மெய்ப். 11.)

(பி - ம்) 277. 'முன்சங்க மாகி முழங்குதலும்' 278. 'புடையாகும்'

279. எடுக்கும் பணிமன்னன் மின்னென் றிறைஞ்சிக்
கொடுக்குஞ் சுடிகைக் குதம்பை—கடுக்கும்
280 மயில்வேண்டுஞ் சாயல் வதனும் புயத்து
வெயில்வேண்ட வேண்டி விளப்ப—பயில்கதிர்

(ப - ரை) 279-80. எடுத்தெடுத்து ஒப்பித்த ஆபரணமும் (267) இன்ன ஆபரணமும் என்று கூருமை இஞ்ஞாலத்தைத் (278) தலையாலே சுமக்கும் நாகராசன் நமது பாரத்தைத் தோளாற் பரிக்கும் சோழேசனுக்குத் தோட்டுணையான மின்னென்றிறைஞ்சி முன்கொடுத்த சிகாமணி குண்டலம் வதன தாமரையிடத்து இளவெயிலை ஆக்கும்படி வேண்டுமளவாக இருபுறத்தும் அசையுந்தோறும் விருப்பமுற விளைப்பவெனச் சினையொடு சினையுவமத்தால் உருவுவமம் கூறிற்று. ஞாலத்தை முடிமேலெடுக்கும் பணிமன்னனான சேடன் நம் உயிர் இறுதிசெய்யும் மின்னென்று இறைஞ்சி வணங்கித் தன் சுடிகைமணியாற் செய்து கொடுக்கும் குண்டலமணி ஒளி முகத்துப் பாடஞ்செய்தல் என்போலும் என்னில் மயில் விரும்பும் சாயலை யுடையாள் தனது முகத்தாமரை விளக்கம்பெறக் கிரணம் விடுகவென்று வெயிலை விரும்பி மிகாமே குறையாமே பாலாதாப கிரணம் கொடுப்பது போலுமென முதலொடு முதலாகச் சாயல் மயிலும் ஆதபனுமாகப் பொருளே உவமஞ்செய்தும் அதனை வினையில் பொருட்கண் வினையுவம மாக்கியும் உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டுமென்னும் விதிக்கேற்பச் சினையும் சினையும் உவமித்தும் தலைவன் வனசபதியாகலின் மிக்க தலையளிக்கு ஆற்றுளென அறிந்து அருள் செய்தல் போலும். தலைவன் அருள்

பெற்ற தலைவிக்கும் இன்பத்தால் ஆராமை மீதூரலின் உட்கோள், மெலி தல், மெலிவொடு வைகல், காண்டல் விரும்பல், பகல் முனிவுரைத்தல், இரவு நீடு பருவரல், கனவின் அரற்றல் என ஆசைக்கு அவதி நிகழ்தலின் தலைவனது விருப்பம் அமையாமை மெலிவொடு வைகல் எனவும் உள்ளுறையுவமம் ஆயிற்று.

(கு - ரை) 279. பணிமன்னன் - ஆதிசேடன். பாம்பு மின்னலுக்கு அஞ்சும்; "மின்னுலயர் வுறும்வாளர வெனவெய்துற லுற்றான்" (கம்ப. I. பரசுராமப். 24.) குதம்பை-மகளிர் காதணி. 280. மயில்வேண்டும் சாயல்-மயிலும் விரும்பத்தக்க மென்மை. வதனம்புயத்து—முகமாகிய தாமரையில்.

உரை. சோழன் ஆதிசேடனுடைய பாரத்தைப் பரித்தல்: "கறை விட்டு, மைஞ்ஞாக மெட்டும் மதநாக மோரெட்டும், பைஞ்ஞாக மெட்டும் பராந்திர" (33-4.) தோட்டுணையான மின் என்றது அரிவையை. சினையொடு சினையுவமம் என்றது ஆதிசேடனுடைய சுடிகைமணியை அரிவையின் குதம்பைக்கு உவமையாகக் கூறியதுபற்றி. உருவுவமம்—நிறம்பற்றிய வுவமம். பாடஞ்செய்தல் - ஒளிவிடுதல்; "பல்லா யிரமா மணிபா டமுறும்" (கம்ப. 3. சரபங்கர். 11.) முதலொடு முதலாக உவமஞ் செய்தல்: "முதலுஞ் சினையுமென் றாயிரு பொருட்கும், நுதலிய மரபி னுரியவை யுரிய" (தொல். உவம. 6.) பொருள் - உபமேயம். உவமையும் பொருளும் ஒத்தல்: தொல். உவம. 8. வனசபதி - சூரியன். ஆராமை - தெவிட்டாமை. உட்கோள் முதலியன முன்னர்ப் பருவங்களில் நிகழ்ந்த கைக்கிளைப் பொருள்கள். உட்கோள்......கனவினரற்றல்: பு. வெ. 15. அவதி - எல்லை.

(பி - ம்) 280. 'வெயில்வேண்டி வேண்ட' 'பயில்கதிரால்'

281. வெல்லாது தோட்சுடிகை மேகா ளகவிருண்மேல்
எல்லாப் பருதியும் போலெறிப்ப—கொல்குயத்து

(ப - ரை) இப்பொழுது பயின்றுபோதும் கதிர் (280) வெல்லாதெனத் தோளெடுக்கும் பாப்புத்தொடிச் சுடிகைமணி மேக அளகம் இடமான விருளை யாம் ஒரு தன்மையாக எழுந்து அழிக்கவேண்டுமென்று எழுதல் போலும். பாப்புத்தொடிச் சுடிகைப் பன்மணி ஒளிபெறிப்பவென்றது பெருமையும் சிறுமையும் சிறப்பிற் றீராமற் சினையுவமித்தது.

(கு - ரை) குயம் - நகில்.

உரை. பாப்புத்தொடி - பாம்பின் வடிவமாகச் செய்யப்பட்ட தோள்வளை. மேக அளகம் - மேகத்தைப்போன்ற கூந்தல். எல்லாப் பருதியுமென்றது ஊழிக்காலத்தே தோன்றும் துவாத சாதித்தரையும். பெருமை

யும்......உவமித்தது : "பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பிற் றீராக், குறிப் பின் வரூஉம் நெறிப்பா டுடைய" (தொல். உவம. 10.) தொடியிலுள்ள மணிக்குச் சூரியனை யுவமை கூறியது இறப்ப உயர்ந்த வுவமையாகும்; ஆயினும் கேட்போர் மனங்கொள்ளுமாற்றான் வருதலையுடைய தென்பது கருத்து. (பி - ம்) 'வெல்லா தொடிச்சுடிகை'

282. வீழ்சோதி சூழ்கச்சு மேரு கிரிச்சிகரம்
சூழ்சோதிச் சக்ரந் தொலைவிப்பக்—கேழொளிய

(ப - ரை) கொலையினையுடைய குயத்துக் கச்சும் (281) முகமணியும் சூழ்பன்மணியும் விடுகிற சோதியும், அந்த வமயத்து மேருகிரிச் சிகரம் சூழும் கோளும் ஒப்புத் தொலைவிப்பென எனப் பருதிக்கோளையும் நின்ற பல்கோளையும் உவமித்துச் சிறியதும் பெரியதும் சிறப்பில் தீராமல் வினை யடுத்த பொருளான முகமணியையும் பன்மணியையும் இல்பொருளுவமங் கொண்டு உவமித்தது. பருதி வீழ்காலத்துச் சிலகோள் ஒழிந்து எல்லாக் கோளும் விளங்காமையின் உவமையைப் பழித்துப் பொருளை உயர்த்தது.

(கு - ரை) சோதிச்சக்ரம் - நட்சத்திர தாரகாகணங்களைக் கோத்து நிற்பதொரு மகாசோதி மண்டலம்; நக்க. 254, உரை. கேழொளிய - மிக்க ஒளியையுடைய.

உரை. முகமணி என்றது கச்சிலுள்ள நாயகமணியை. உவமையைப் பழித்துப் பொருளை உயர்த்ததென்றது சூரியனையும் ஏனைய கோள்களை யும் கச்சிலுள்ள முகமணியும் அதனைச் சூழ்ந்த பன்மணியும் விடுகின்ற சோதியால் வென்றன என்பதுபற்றி.

(பி - ம்) 'சூழ்கச்சை' 'கேழினிய'

283. பைம்பொற் கடிதடஞ்சூழ் மேகலை பாார்சூழ்ந்த
செம்பொற் றிகிரி யெனத்திகழ—அம்பொற

(ப - ரை) சிறக்கும் சிவந்த செம்பொன்னாற் செய்த மேகலைக் கடி தடம் பசும்பொன்னாற் சிறந்த சக்ரவாளகிரி சூழ்ந்த பாரென விளங்க; இது வினையொடு முதலை உவமித்தது.

(கு - ரை) பைம்பொன் மேகலைசூழ் கடிதடம் எனவும், செம்பொற் றிகிரி சூழ்ந்த பார் எனவும் மாறிக் கூட்டுக; செம்பொற் றிகிரி - சக்கர வாளகிரி. கடிதடத்துக்குப் பூமியும் அதனைச் சூழ்ந்த மேகலைக்குச் சக்ர வாளகிரியும் உவமைகள். வினை: கடிதடம். முதல்: பூமி. சக்கரவாளம் பொன்னிறமுடையது; "பொன்னேமி யளவுந் தன்னேமி நடப்ப" (முதற் குலோத்துங்கன் மெய்க்கீர்த்தி.) பொன் - பொலிவு.

(பி - ம்) 'அம்பொற்கடி' 'யா ரஞ்சூழ்ந்த', 'யார் சூழ்ந்த', 'யாழி சூழ்', 'பா ரஞ்சூழ்ந்த'

284. புறவுஞ் சகோரமும் பூவையு மானும்
பிறவு மினமென்று பெட்ப—உறவாய்

285. அடர்ந்த பொலன்கே முடிச்சிலம்புக் கன்னம்
தொடர்ந்து மறுமாற்றஞ் சொல்ல—நடந்துபோய்

(ப - ரை) 284-5. அழகும் பொலிவுமுடைய (283) புறவும் சகோரப் புள்ளும் பூவையும் மானும் மணக்கோலப் பாவை யொழிந்த பிறவும் தம் இனமென்று உடன்வருதலை விரும்ப; தமக்குப் பகையென்று கருதாது உறவென்று தொடர்ந்துபோய் அடியிற் சிலம் பாற்றுந்தோறும் அன்னமானது எதிர்மொழிகூற; ஓசையுவமம்.

(கு - ரை) 284. சகோரம் - நிலவுண்ணும் புள். பெட்ப என்பதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. 285. சிலம்பின் ஓசைக்கு அன்னத்தின் குரல் உவமை: "மின்னார் சிலம்பிற் சிலம்பும் குரலன்னம்" (சீவக. 2890) என்பதனையும் அதன் அடிக்குறிப்பினையும் பார்க்க. மணக்கோலப்பாவை: 274. உரை. ஓசையுவமம் என்றது சிலம்பின் ஓசைக்கு அன்னத்தின் குரலை உவமை கூறியதுபற்றி.

(பி - ம்) 285. 'அடைந்து பொலங்கேழ்'

286. மானவற்குப் புக்கதுறை வல்லவற்கு வில்லவற்கு
மீனவற்குச் சென்று வெளிப்பட்டாள்—தானே

(ப - ரை) நடந்துபோய் மெலிவொடு வைகிய தன்மை தோன்ற மீனவற்குச் சென்று வெளிப்பட்டாள், நாணம் முதலிய நாற்குணங்களும் அறைபோகத் தானே என்க.

(கு - ரை) மானவன் - மானத்தை யுடையவன்; "அறனிழுக்கா, மான முடைய தரசு" (குறள், 384); மனுகுலத்தில் உதித்தவன் என்றலும் ஆம். புக்கதுறைவல்லவன் - தான் கற்கப் புக்க கல்வித் துறைகளிலெல்லாம் வல்லவன். வில்லவன் - சேரன். மீனவன் - பாண்டியன்; என்று இங்ஙனம் கூறியது இவன் சேரநாட்டையும் பாண்டிய நாட்டையும் ஆண்டமைபற்றி.

உரை. அறைபோக - கீழற்றுப்போக; "அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து" (சிலப். 20 : 25.) தானே என்பதற்கு இங்கு எழுதிய உரையோடு, "விளிநிலை கொள்ளா டமியண் மென்மெல"

(அகநா. 5 : 2.) என்பதற்கு, தமியள் - நாண் முதலான குணங்கள் ஒழியத் தானே யாதல்' என்றெழுதிய உரை ஒப்பிடற்குரியது.

(பி - ம்) 'வானவர்க்கும்' 'வல்லவர்க்கும்' 'மீனவர்க்கும்'

287. அலரு முகமுங் குவிகையு மாகி
மலரு முகுளமு மானப்—பலர்காணத்

288. தேனு மமுதுங் கலந்தனைய தீங்கிளவி
மானு மடைய மனங்கொடுத்தாள்—கோனும்

289. தடாதே தடுத்தாளைத் தன்கடைக்கண் சாத்தி
விடாதே களிறகல விட்டான்—படாமுலைமேல்

(ப - ரை) 287-9. அரசனும் முன்புபோல உழையரைக்கொண்டு தடாதே தனது மெலிவுகாட்டித் தடுத்தாளைத் தனதருளை விளக்கும் கடைக்கணருளைச் சாத்தி அதனைத் திளைத்து அமைதி பெறவிடாதே விரையக் களிற்றை அகலவிட்டான்.

(கு - ரை) 287. அலர்ந்த முகத்திற்கு மலரும் குவித்த கைக்கு முகுளமும் உவமை; முகுளம் - அரும்பு; இது நிரனிறை 288. தீங்கிளவி மானும் - இனிய சொற்களையுடைய மான்போன்ற தலைவியும். அடைய - முழுவதும். 289. படாமுலை - சாயாத முலை எனினும் ஆம்.

(பி - ம்) 287. 'பலர்காணும்'

290. ஒத்திலங்கு வேர்வந் துறைப்ப நறைக்கழுத்து
நித்திலங்கால் சங்க நிதிநிகர்த்தாள்—எத்திசையும்

291. சோர்கின்ற சூழ்தொடிக்கைச் செம்பொற் றொடிவலயம்
நேர்கின்ற பற்ப நிதிநிகர்த்தாள்—தேரின்

292. அரிவை துகிலெகிழ வல்கு லரவின்
உரிவை விடும்பட மொத்தாள்—சொரிதளிர்

293. மாங்கொம்ப ரென்ன வருவாள் சுரமரப்
பூங்கொம்ப ரென்னப் புறங்கொடுத்தாள்—பாங்கியரும்

(ப - ரை) 290-93. அருளானுகிக் களிறு அகலவிடுதற்குக் காரணம் யாதெனக் கருதிய அச்சக்குறிப்புத் தோன்ற முகபடாம் அணிந்த முலை மீதே (289) கழுத்தின்கண் வேர் வந்து உறைப்ப நித்திலத்தை ஈனும் சங்கநிதியை நிகர்த்தாள். மருட்கை மெய்ப்பாடு நிகழ எத்திசையும் விலை நேர்கின்ற மாணிக்கத்தொடி கையினின்றும் சொரிகின்ற பொழுதின்

மாணிக்கச் செம்பொற்றொடி வழங்கும் பதுமநிதியை நிகர்த்தாள். விசாரிக்குமளவில் அரிவை துகில்நெகிழ அல்குல் தோல்விடும் அரவினது படமொத்தாள். தளிரைச் சொரிதலையுடைய மாங்கொம்பரென்ன மறுகில் வருவாளானவள் முதுவேனிற்பாலையில் பூங்கொம்பரென்னப் புறங்கூறுமதற்கு இடங்கொடுத்தாள். இதனுள் வினை, பயன், மெய், உரு என்னும் நான்கு உவமையும் வந்தவாறு காண்க.

(கு - ரை) 290. வேர் - வியர்வை. உறைப்ப - துளிக்க. நறைக் கழுத்து - புழுகு பூசிய கழுத்து; நித்திலம் - முத்து. வேர்வைக்கு முத்தும் கழுத்துக்குச் சங்கநிதியும் உவமை. 291. கைக்குப் பதுமநிதி உவமை: "செந்நெ லார்வயற் கட்டசெந் தாமரை, முன்னர் நந்துமிழ் முத்தஞ் சொரிந்திடத், துன்னு மள்ளர்கைம் மேற்கொண்டு தோன்றுவார், மன்னு பங்கய மாநிதி போன்றுளார்" (பெரிய. அரிவாட்டாய. 2.) 292. அரவின் உரிவை - பாம்பின் சட்டை. 293. சுரம் - பாலைநிலம். சுரமரப் பூங்கொம்பரெனப் புறங்கொடுத்தாள் - பாலைநிலத்து மரத்தின் கொம்பு, இலையுதிர்ந்து வாடிநிற்றல் போல் இவ்வரிவை தனது, துகில் அணிகலம் யாவும் நெகிழ்ந்தொழிய எல்லாவற்றையும் தோற்றொளென்றலும் ஆம்.

உரை. அச்சக் குறிப்பு இறைபற்றிப் பிறந்தது: தொல். மெய்ப். 8; பெண்பாலுக்கு உரிய இயல்பான அச்சமுமாம்; அச்சம் - அன்பு காரணத்தால் தோன்றிய உட்கு; தொல். களவு. 8, ந. மருட்கை மெய்ப்பாடு புதுமை பற்றித் தோன்றியது. வினை, பயன், மெய், உரு என்பவற்றைச் சங்க நிதி, பதுமநிதி, அரவின்படம், சுரமரம் என்பவற்றிற்கு முறையே கொள்க.

(பி - ம்) 290. 'ஒத்திலங்க' 'உறைக்க', 'உரைக்கும்' 291. 'சேர்கின்ற' 'பைம்பொற் சுடர்வலயம்' 292. 'ஆடலரவின்' 'விடுபடமும்' 293. 'பாங்கியும்'

294. ஒற்றை யுடைவா ளொருபுடையாள் கொற்றவையேல்
மற்றை யருகிவளை வைத்திலனே—பெற்றுடைய

295. வாரத் தரணியாள் வாழ்தோ ளெதிர்மற்றை
ஆரத் திருத்தோ ளளித்திலனே—நேரொத்த

296. பூந்தா மரையா ளெதிரேயிப் பொற்றொடிக்கும்
ஏந்தார மார்ப மிசைந்திலனே—வேந்தர்கோன்

(ப - ரை) 294 - 6. அடையத் தனதாகப் பொரவந்தா ளொருத்திக்கு இராசராசனானவன் ஒப்பற்ற உடைவா ளப்பாகத்திலே கொற்றவையே

குடியிருந்தாள் மற்றைப் புறத்திலே இவளை வைக்கலாமே! அது செய்தி லன் : மண வாரத்தைப் பெற்றுடைய தரணியாள் வாழும் தோளுக்கு எதி ரான ஆரத்திருத்தோள் அளிக்கலாம்! அது செய்திலன் ; இவளுக்கு இம் மயக்கப் பருவத்துக்கு ஒப்புக் கூறலான பூந்தாமரையாளெதிரே அவளிருப் பிடமான மார்பையொழிய அப்புறத்து ஆரமேந்திய மார்பம் கொடுத்தற் கிசையலாமே! அது செய்திலன் ; விரும்பி வந்தோர்க்குக் கொடுக்க இட முண்டாயிருக்க வேந்தர்கோனுயிருந்தும் கொடாமற் போமது போதுமோ என்று.

(கு - ரை) 294. உடைவாளில் கொற்றவை இருத்தல்: "அருங் கொற்ற மாக்கு மணங்கி னுடனே, மருங்கிற் றிருவுடைவாள் வாய்ப்ப" (விக்கிரம. 49.) கொற்றவை - துர்க்கை. 295. வாரம் - அன்பு ; "ஆத்த வாரமோ டவனவ ளொழிய" (பெருங். உ. 8 : 190) ; "வாரம் பட்டுழித் தீயவு நல்லவாம்" (சீவக. 888.) தரணியாள் - பூமிதேவி. ஆரத்திருத் தோள் - ஆத்திமாலையை யணிந்த தோள். பூந்தாமரையாள் - திருமகள் ; அரசர் மார்பில் திருமகள் இருப்பதாகக் கூறுதல் : "மாமறுத்த மலர் மார்பு" (புறநா. 7.: 5.) 296. வேந்தர்கோன் - சக்கரவர்த்தி.

உரை. அடைய - முழுவதும். போதுமோ - தக்கதோ.

(பி - ம்) 294. 'வைத்திலன்' 295. 'அளித்திலன்' 296. 'இசைந் திலன்'

297. அன்னங்கா ணீர்சென் றரற்றீர் கபோதங்காள்
இன்ன மபயம்புக் கெய்திடீர்—நன்னுதற்

298. பாவைகாள் கொல்யானைப் பாவடிக் கீழ்ப்பணியீர்
பூவைகாள் செங்கோன்மை போற்றிசெய்யீர் - [தாவிப்போய்ப்

299. பேதை மடமான் பிணைகாள் வளைத்துளையீர்
கோதை மதுகரங்காள் கூப்பிடீர்—யாதெல்லை

300. என்று விதற்கென் றிரங்கி யிலங்கிழை
தன்னுர்வ மாற்றெதிர் சாற்றினுர்—பின்னர்ப்

(ப - ரை) 297 - 300. அன்னங்காள்! நீர் சென்று அரற்றீர். கபோதங்காள்! முன்னே உம்மை அறிவன் ; இன்னமும் சென்று அபயம் புக்கு எய்திடீர். நறிய நுதலினையுடைய பாவைகாள்! எம்மைப்போல் உயிரில் பாவை ஆகின்றுள் என்னும் குறிப்புணரக் கொல்யானை போகாமல் பரந்த அடி முன்னே பணியீர், பூவைகாள்! செங்கோன்மையை வளவிப்

போற்றீர். விரையத் தாவிப்போய் மடப்பத்தையுடைய மான்பிணைகாள்! வளைத்துக்கொண்டு பேதமை உனக்கு உளதாமோ வென்று உளையீர். கோதையைத் தா என்று மதுகரங்காள்! கூப்பிடீர்; எங்களாலானது தடுத்துப் பார்த்தோம்; வேந்தர்க்கு அரசனுயிருந்து இவை யொன்றற்கும் அஞ்சான்; இதற்கு எல்லை யாதுகொல் என்று விளங்கிய ஆபரணத்தை யுடையாள் ஆர்வத்துக்கு மாற்ருக அவனெதிரே இவை சாற்றினுரென்க. வாயில் வகையில் பவனிகண்டோர் கூறினுரென்க.

அரிவைப் பருவத்தாளொருத்தி (262) மாலைமங்கலம் பாடிவந்த விறலியர் (264) பெருமாள் பவனிவரும் நாள் நாளையென (262—3) இரவு நீடு பருவரல் எய்திய வைகறைக் காலத்திலே ஒப்பித்தெழுந்து (267) செய்குன்றிலிருந்து சிலாதலத்திலிருந்து பொழுதுபோக்கி (271—5) அணி, ஆடை முதலியன தலைவனுக்கு உவமை கோடற்றன்மையாக அப் பவனியிலே வெளிப்பட்டு (279—86) அவன் அருள் செய்யாமல் களிறு அகலவிட்டது கண்டு (289) மெலிவொடு வைகல் முற்றப் புறங்கொடுத் தாள் (293); பாங்கியரும் (292) அன்னமுதலானவை யுடனே கூறுவார் போல (297—9) ‘ஒரு பருவத்துத் தடுத்தோம் (211—6); ஒரு பருவத்து உளையக் கூறினேம். (221); வேந்தர் கோனுயிருந்தும் இவையிற்றுக்கு அஞ்சான் (296); இதற்கு எல்லை யாது’ என (299) ஆர்வத்துக்கு மாற் ருக இளிவரல் வரக் கூறினுர் (300) எனக் கூட்டுக. பொற்ருேடிக்கும் (296); உம்மை, இழிவு சிறப்பு. அன்னங்காள் நீர் சென்று அரற்றீர் என்ற கருத்து, நீ முன்பு கூறிய வேத நெறிக்குப் பிழைகாண் இது என்றவாறு. வண்டைக் கூறினுர், பாஞ்சாலி குழல்முடிப்பித்த வினை முடிவு கருதி; கன்னனுக்குப் பரசுராமன் சாபமுற வண்டாய்த் துளைத் தலிற்போலும்.

(கு - ரை) 297. கபோதம் - புரு; இது அபயம் புக்கது 17-ஆம் கண்ணியினுரையாலும் அடிக்குறிப்பாலும் விளங்கும். இன்னம்: “இன் னம் பாலிக்கு மோவிப் பிறவியே” (தே. திருநா.) 298. பாவடி - பரந்த அடி. 299. உளையீர் - வருந்தும்படி கூறீர். மதுகரம் - வண்டு. வளவி - கலந்து; “கிளவி தேனினு மமிழ்தினுங் கிளைத்தவள் வளைத் தோள், வளவியுண்டவன் வருந்துமென் ருலது வருத்தோ” (கம்ப. 4. கார்காலப். 50.)

உரை. திருமால் அன்னவடிவமாகி வேதங்களை அருளியது: “அன்னமாய் முன்ஞெருகா லறம்பயந்த வறனும் நீ” (தொல். செய். 146. பேர். மேற்.); “அன்ன மாகி யருமறைக ளருளிச் செய்த வமலனிடம்”, “அன்ன மாகியன் றருமறை பயந்தவனே”(பெரிய திருமொழி, 5. 1: 9, 3: 8.)

வண்டைக் கூறியது: கங்கையின் நீரினுள்ளே நாட்டிய கழுவை வீமனுக்குக் குறிப்பித்தற் பொருட்டுக் கண்ணபிரான் அதன்மேல் வண்டாக இருந்து சுற்றிய கதையைக் கூறினுமாம்; "வேறொரு பகற்கழு நிரைத்து வீமனோ, டாறுபாய்ந் திருவரு மாடும் வேலையில், தேறலான் வஞ்சகந் தேறி வண்டினால், எறினன் கடந்தரி யேறு போன்றுளான்", "பொங்கழற் சிந்தைச் சுயோதனன் கங்கைப் புனல்விளை யாட்டிடைப் புதைத்த, வெங்கழு முனையில் விழாமலோ ரளியாய் வீமனுக் காருயி ரளித்தாய்" (வி. பா. வாரணவதச். 10, 17-ஆம் போர். 9); "தண்டுஞ் சிவிகையும் பாய்மாவும் பொன்னுந் தமிழ்க்குதவும், கண்டன் புகார்வரைக் காரிகை யேகழு நீரின் முனம், உண்டுண் டெனக்குறி காட்டியன் றைவர்க் குயிரளித்த, வண்டுண் டுமிழ்ந்ததன் றேவணங் கேயிந்த வையகமே" (குலோந். கோவை, 390.) கன்னனுக்குச் சாபமுற வண்டாய்த்துளைத்த வரலாறு மஹாபாரதம், கர்ணபர்வம் 36-ஆம் அத்தியாயத்திற் காணப்படும்.

(பி-ம்) 297. 'சென்றறையீர்' 298. 'மால்யானைப்' 'வாவிப் போய்ப்' 299. 'வரவழையீர்' 300. 'என்னோ'.'.தன்னோ வவற்றெதிர் சாற்றினள்'

[தெரிவை]

301\. பொருவி லொருத்தி புறங்காக்கு மாதர்
இருவி லிடைநின் றிறைஞ்சித்—திருவுலாப்

302\. போதும் பெருமாள் புகுது மளவுமிங்
கியாதும் பயிலா திருத்துமோ—சூதாடேம்

(ப-ரை) 301—2. அரிவைப் பருவத்துக்குப் பின்னராகிய (300) தெரிவைப் பருவத்தாளொருத்தி புறங்காவலான மாதரிலே சிலர் இரண்டு விற்கிடைக்கு அப்பாலாக நின்றிறைஞ்சி, 'திருவுலாப்போதும் பெருமாள் நம்மறுகு புகுதுமளவும் இவ்விடத்து யாதொன்றுடனே பொழுது போக்காமல் இருக்கக்கடவேமோ' என்று வினவச் 'சூதாடேம்' என்று அவ்வினவிற்கு உத்தரம் கொடுப்ப.

(கு-ரை) 301. பொருவு இல்-ஒப்பு இல்லாத. வில்லிடை நின் றிறைஞ்சுதல்: "ஒளித்தறை தாழ்கோத் துள்ளகத் திரீஇ, ஆங்கது தனக்கோ ரைவிலின் கிடக்கை, நீங்காது நின்ற நேரிழை தன்னை" (மணி. 4: 88-90); "ஐவிலி னகல நின்றுங் கடிதொழு திறைஞ்சி னோர்க்கு", "இருவிற்கண், பொங்க விடுதவிசி லிருந்தான் போரே றனையானே" (சீவக 1704, 2608.) 302. சூதாடுதல் மகளிர் பொழுதுபோக்குள் ஒன்று;

"தொடையலங் கோதை சோரப் பளிக்குநாய் சிவப்பத் தொட்டுப், படை நெடுங் கண்ணார் வட்டாட் டாடிடம் பலவுங் கண்டார்" (கம்ப. 1. மிதிலைக். 17.)

(பி - ம்) 301. 'நிறைஞ்சத்'

303. பந்தா டுதுநாம் பசும்பொற் குழைசென்று
வந்தாடு கண்ணாய் வருகென்று—சந்தாடும்
304. கொம்மை வருமுலையுந் தோளுங் குறியாதே
அம்மென் மருங்குல்பார்த் தஞ்சாதே—தம்முடனே
305. கொண்டா ரருகிருந்த பாணருங் கோடியரும்
கண்டா ரெவருங் கடுகினார்—மண்டி

(ப - ரை) 303-5. 'பசும்பொற் குழையளவும் சென்று வந்து காம நாடகம் ஆடுங்கண்ணாய்! சூதாட வேண்டா; பந்தாடக் கடவோம்' என்று அவர் கூறப், பந்தெடுத்து வருகவென்று தலைவி குறிப்பாற்கூற நிலைமை கருதினார் அருகிருந்த பாடற்பாணரும் ஆடற்கோடியரும் சந்தனச் சேறு டும் அழகிய பெரிய முலையும் தோளும் பாரமென்று குறியாதே அழகிய மெல்லிய மருங்குலைப் பார்த்து அதன் மென்மைக்கு அஞ்சாதே தம்மு டனே பந்தாடுதலை உட்கொண்டாளென்று கருதினார். பந்தாடுதுமென்ற யாவரும் பந்தாடுதலிலே விரைந்தார்.

(கு - ரை) 304. கொம்மை - வட்டமெனினுமாம். கோடியர் - கூத் தர்; விக்கிரம. 199. 305. மண்டி - விரைந்து.

(பி - ம்) 304. 'வனமுலையுங்'

306. எடுத்தா ரெடுத்தன யாவு மெவரும்
கொடுத்தா ரொருதானே கொண்டாள்-அடுத்தடுத்து

(ப - ரை) விரைவாலே முத்தின் பந்தும் அம்மனையும் கலந்தெடுத் தார்; எடுத்தன யாவும் யாவர்க்குங் கொடுத்தார். பந்தாடல், அம்மானை யாடல் என்ற இரண்டுக்கும் இவள் ஒருத்தி; இவளுக்கு நிகருண்டோ வென்னில் மீண்டும் இவள்தானேயென்று முன்னர்ப் பாவைக் கூத்தில் வருத்த தன்மை தெரியக்கொண்டாள்.

(கு - ரை) அம்மனையையும் உரையில் வருவித்துக் கூறியது இனம் பற்றி.

உரை. ஒருத்தி - இணையற்றவள். இவளுக்கு..... இவள் தானே: இதுபொது நீங்குவமை; தண்டி. 32. பாவைக்கூத்து: திருமகள் அவுணர்

போர்க்கோலம் நீங்கும்படி பாவை வடிவங்கொண்டு ஆடியது ; "செரு வெங்கோல மவுணர் நீங்கத், திருவின் செய்யோ ளாடிய பாவையும்" (சிலப். 6: 60—61.) முன்னரென்றது இவள் திருமகளாக இருந்த காலத்தை.

(பி - ம்) 'யாவையும் யாரும்', 'யாவு மெவர்க்கும்' 'கொடுத்தாள்'

307. முன்ன மெறிபந்தின் மும்மடங்கு நான்மடங்
இன்ன மெறிய வருகென்றாள்—அன்னம்

(ப - ரை) 'பந்தைப் பந்தடைவிலே யெடுத்து அம்மனையை அம்மனை அடைவிலெ எடுத்து முதற்பாடெறிந்து ஆடுவதாகச் சொன்ன பந்து நீங்கள் விரகு செய்து எறிந்த மும்மடங்கான அம்மனை நான்மடங்கும் இன்னம் எறிய எறியக் கொண்டுவருக' என்றாள்.

உரை. முதற்பாடு - முதலில் ; இது பிற்பாடு என்பதுபோன்ற தோர் சொல் ; சிலப். 13 : 1.

308. அடியு மிருகையு மம்புய மென்று
படியு மொழுங்கிற் பயில—முடியும்

309. தொடையிடை போய சுழல்கூந்தற் பந்தர்க்
கிடையிடை நின்றகா லேய்ப்ப—அடைய

310. விழுந்தன பார்கடவா வாறுபோன் மேற்போய்
எழுந்தன கைகடவா வென்னக்—கொழுந்தளிரால்

(ப - ரை) 308-10. அம்மனையும் பந்தும் ஆடியநெறி கூறுகின்றார். பலபந்து ஆடுவான் கையெல்லையும் காலெல்லையும் கடவாமல் ஆடியது என்போலு மென்னில் அன்னங்கள் (307), ஒழுங்காக உயரமலர்ந்த தாமரையிரண்டினும், தாழ மலர்ந்த தாமரை யிரண்டினும் படியுந் தன்மை போலப் பயிலத், தழைய முடிந்த கழுநீர்ப் பூந்தொடை இடையிடையே கால்போலத் தூங்கப், பவுரியிற் சுழலும் கூந்தல் பந்தரையொப்ப, குழலெல்லையுஞ் சென்ற முத்தின் அம்மனையும் பந்தும் பந்தர்க்கு இடையே முத்தின்கால் கொடுத்தை யொப்பக் கலந்துதோன்ற விடுத்த பந்து அடைய விழுந்தன பாரெல்லை கடவாத நெறிபோல, விண்கொளா வம்மனை (311) மேற்போய் எழுந்தன கூந்தற் பந்தரெல்லையைக் கடவா வென்ன,

(கு - ரை) 308. பந்துக்கும் அம்மனைக்கும் அன்னம் உவமை. அம்புயம் - தாமரை. 309. தொடை - மாலை. கால் - பந்தற்கால். கூந்தலுக்குப் பந்தலும் மாலைக்குக் காலும் உவமை. அடைய - முழுவதும். பந்தாட்டத்தின் சிறப்புக்களை ; பெருங்கதை. 4. 12. பந்தடி கண்டது என்னும் பகுதியிற் காண்க.

உரை. பவுரி - கூத்து.

(பி - ம்) 309. 'தொடையு மிடைபோய்ச் சுழல்கூந்தற்'

311. ஏற்றுதி விண்கொளா வம்மனை யெம்மனை
ஆற்றுதி யீதிங் கரிதென்னப்—போற்றரும்

312. கையோ பதயுகமோ கண்ணோ கடுகினவை
ஐயோ வறித லரிதென்னப்—பொய்யோ

313. திலக நுதலிற் றிருவேயென் றோதி
உலகு வியப்பவென் றோத—அலகிறந்த

(ப - ரை) 311—3. கொழுவிய தளிர்போலுங் கையாலே (310) விண்கொளா அம்மனை ஏற்றுதி ; மண்கொள்ளாத பந்து ஆற்றுதி ; இந்த ஆடல் தேவவுலகத்து உண்டாயின் தெரியாய். இவ்வுலகிற் காட்சி அரிதென்னப் பாணர் போற்ற, ஆடற்பொருநர் கொழுவிய தளிராலே அரிதாகச்செய்த கையோ, பதயுகமோ, கண்ணோ தம்மில் விரைந்தவை இன்னவென்று தெரியாது ; விடாமல் ஆடலிற்பயின்று போதுகிற தன்மை ஆடற்றுறை வல்லோர்க்கும் அறிகை அரிதென்னப் போற்ற, பந்தாடுதுமென்று மாறுபட்ட புறங்காவல் மாதரெல்லாரும் பாவைக்கூத்துக்குத் திலகநுதலையுடைய திருவே யுள்ளது ; வேறில்லையெனப் பதினோராடல் வகுத்தவன்றே தேறினர் வியப்பது பொய்யன்றே என்று கூற. ஐயோ வென்பது மூவகையோர் தீராக் குறிப்பு.

(கு - ரை) 310. தளிர் - தளிர்போன்ற கை. இங்கே கூறிய அம்மனையை 305-ஆம் கண்ணியில் வருவித்துரைத்தார். எம்மனை - எம்முடைய தாய் ; விளி. 312. பதயுகம் - இரண்டு கால்கள். ஐயோ : வியப்பின்கண் குறிப்பு என்னலுமாம் ; 'ஐயோவென்றது உவகைக்கண் வந்தது' (சிற். 384, பேர்) ; "ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்" (கம்ப. 2. கங்கைப். 1.)

உரை. பாணர் முதலிய மூவரும் தாம் அறிந்தவற்றைப் புகழ்தல்; சிறுபாண். 207-18-ஆம் அடிகளை நினைப்பிக்கின்றது. பதினோ ராடல் : "தடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன், குடைதுடிமா லல்லியமல்

கும்பம் - சுடர்விழியாற், பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங் கம், கொட்டியிவை காண்பதிஞேர் கூத்து” (சிலப். 3: 14, அடியார். மேற்.) மூவகைபோ ரென்றது பாடற்பாணர், ஆடற்பொருநர், புறங் காவல் மாதர் என்னும் மூவகையாரையும்.

(பி - ம்) 311. ‘ஏற்றுதை; ‘ஆற்றுதை யீதென் றரிதென்ன’, ‘ஆற்றுத லீதிங்’ 313, ‘யென்றுன்னே’ ‘உலகு வியப்பரிதென் ருேதி’

314. பந்தாட் டயர்ந்து பணைமுலையார் பாராட்ட
வந்தாட்டு நீராட்டு மண்டபத்து—விந்தை

(ப - ரை) அம்மனை உழையர் அறிந்து செய்ததல்லவென்பதும் இரு திறத்தாரும் ஆடலில் அமைந்ததும் தோன்ற, ‘பந்தாட்டயர்ந்து’ என் ருர். ஆட்டு நீராட்டும் மண்டபத்திற் பணைமுலையார் பாராட்டவந்து; ஆட்டுநீர் என்பது பத்துத்துவரினும், ஐந்து விரையினும், முப்பத்திரு வகை ஓமாலிகையினும் ஊறிய நீர்; “நாற்பான் மரநாவன் மாந்தளிர் முப் பழம், சீர்த்தமுத்தக் காசு துவர்”, “கொட்டங் துருக்கங் தகர மகிலாரம், ஒட்டிய வைந்தும் விரை”, “ஏல மிலவங்கஞ் சாதிக்காய் கற்பூரம் வேலி யிரண்டு புழுகிரண்டு - தக்கோலம், சாலுநா கப்பூ விலாமிச்சஞ் சந்தனம் - காாம்பு கத்தூரி குங்குமம் பச்சிலே, ஆர நிரியாசம் நாகணம் புன்னே, நற் கோட்ட நறும்பிசின் மாஞ்சில் அறுகு கச்சோலங் தாரம் மஞ்சள் நற்றேவ தாரம், நறுங்குழ லோமா லிகை” இதனுல் உணர்க. இதனுள் இரண்டு வகைபுணர்ந்து முப்பத்திரண்டு வகையுங் காண்க. இவ்வகை ஆட்டு நீராட்டு மெல்லேயில்.

(கு - ரை) பணைத்தல் - பெருத்தல்.

உரை. இருதிறத்தார்: தெரிவையும் அவளுடைய பரிசனமாகிய ஏனேயோரும். ‘ஏலமில வங்கம்’ என்னும் மேற்கோள் பிழைபட்டுள்ளது.

(பி - ம்) ‘மண்டபத்துள்’

315. பெருமா னனபாயன் பேரிய மூன்றும்
தருமார வாரந் தழங்க—ஒருமாதர்

316. ஏந்து துகிலொன் றுடுத்தாளோ வில்லேயோ
போந்து மறுகு புகுந்தொழிந்தாள்—மாந்தளிரும்

(ப - ரை) 315-6. பேரியமான மும்முரசு முழக்கம் செவியுறலும் அணி, ஆடை, அலங்கல் முதலியன பல மாதரும் ஏந்திநிற்ப ஒரு மாதர்

ஏந்தின துகிலை வாங்கி உடுத்தாளோ இல்லையோ என்று கண்டார் கூறும் படி விரைவுடன் உடுத்து மண்டபத்தை விட்டுப்போந்து மறுகிலே புகுந்து மெலிவொடு வைகல் மாறிக் காண்டல் வலித்தலின் ஒழிந்தாள்.

(கு - ரை) 314. விந்தை - துர்க்கை. 315. அனபாயன் - குலோத்துங்க சோழன் பெயர் : சேக்கிழார் இப்பெயரை மிகவும் எடுத்தாண்டுள்ளார். பேரியம் மூன்று - பெரிய மூன்று முரசுகள் ; விக்கிரம. 28, 121, 272 ; குலோத். உலா. 315 ; இராசராச. 161 ; 'வீரமுரசு, நியாயமுரசு, தியாகமுரசு ; மணமுரசுடனே என்னை இரண்டு முரசு என்பாரும் உளர் ; (புறநா. 58 : 12, உரை.) ஒரு மாதர் என்றது எடுத்துக் கை நீட்டுவாளை ; 'அவர்கள் திருக்கோயிலில் திருப்பணி யெடுத்துக் கை நீட்டுவார்', 'சித்திரசேனன் எடுத்துக் கை நீட்டுவான்' (நக்க. 88, 505, உரை) ; "எடுத்துக்கை நீட்டு வாளா மெழிற்பெருந் திருவாஞ் செல்வி" (திருக்குற்றாலப். தக்கன் வேள்வி. 80.) காண்டல் வலித்தல் : பு. வெ. 15.

317. தாதுந் தமனிய மாலையுந் தண்கழுநீர்ப்
போதும் பிறவும் புறம்புதையா—ஓதிக்குச்

318. சென்னி யமுனைத் தரங்கமுந் தீம்புனற்
பொன்னி யறலும் புறங்கொடுப்பப்—பின்னர்

319. ஒழுங்காய சேயரிக்கண் ணூடொட்டும் மையால்
மழுங்காது கைபோய் மதர்ப்பச்—செழுங்கழுத்

320. தொன்று புனைந்த தொருசங்க மாணிக்கம்
இன்று பயந்த தெனவிளங்க—நின்றிலங்கும்

321. உச்சக் கலனணியாத் தோளிணைக் கோரிரண்டு
பச்சைப் பசுங்காம்பு பாடழிய—நிச்சம்

322. அசும்பு பொலன்கச்சி னற்றத்தே கொங்கை
விசும்பு குடிவாங்க வீங்கப்—பசுஞ்சுடர்க்

323. கோல வயிறுதர பந்தனக் கோணீங்கி
ஆலின் வளர்தளிரி னைதாகி—மேலோர்

324. இழியு மொருசாம ரேகையு முந்திச்
சுழியும் வெளிவந்து தோன்றக்—கெழிய

325. இசையின் கலாபாரம் யாப்புறு வல்குல்
திசையின் புடையடையச் செல்ல—மிசையே

326. பொறைபுரி கிம்புரி பூட்டாத் துடைதூ
சுறையின் மரகத மொப்ப—அறையும்

327. சிலம்பு சுமவாத செந்தா மரைபோய்
உலம்பு குரலஞ்சா தோடக்—கலம்பல

328. தாங்கி யுலகந் தரிப்பத் தரியென்று
பாங்கிய ரெம்மருங்கும் பாராட்டப்—பூங்கேழ்

329. உருவி லொளிபோ யுலகடையக் கோப்பத்
தெருவி லெதிர்கொண்டு சென்றாள்—பெருமாளும்

(ப-ரை) 317-29. தலைவியை ஒப்பனை செய்யாத காலையில் இயல்பு நலம் கூறுவார் 'ஒப்பியா மாலை' என்றார்; 'மாலை இயல்பு' என்றலின். மாந்தளிரும், பலபூந்தாதும், தமனிய மாலையும், கழுநீர்ப்போதும், பலவாகிய உத்தி வலம்புரி சூடாரத்தினம் தொய்யகம் புல்லகம் பிறவாகிய தலைக் கோலமுமாகப் புறம் மறையாத ஓதிக்குச் சென்னிவிரும்பும் யமுனை யாற்றில் ஓடும் நீர்த்தரங்கமும் பொன்னியாற்று வறண்டகாலை அறலும் ஒப்புத் தோற்றுப் புறங்கொடுப்ப; உவமையும் பொருளும் ஒப்பச் சினையொடு சினையாக மெய்யும் உருவும் கூறினார். அதன் பின்னராக ஒழுங்காகிய இயற்கை நலத்தால் தங்கள் மநுநீதி தாழ் ஒழுங்காகிய செவ்வரிக்கண் தனதூடே மையாலே அழகு மழுங்காமல் கைவளர்ந்து களிப்ப; இஃது இயல்பாகவுள்ள தொழிற்றன்மை கூறினார். ஒன்று புனைந்த வளவிய கழுத்து ஒப்பில்லாத சலஞ்சலம் என்னும் சங்கம் தனக்கு இயல்பாகிய முத்தைப் பயவாமல் புதுமையாக ஒரு மாணிக்கத்தை இன்று ஈன்றதென விளங்க; இதற்கு இல்பொருளுவமங்கொண்டு மெய்யுவமங் கூறினார். இயல்புநலம் நின்றுவிளங்க அந்நலம் மறையாத தோளணிவர்க்கம் அணியாத தோளிணைக்கு ஓர்தலுற்ற இரண்டு பசுமூங்கில் பசுமைநிறச் செவ்வியழிய நிச்சயமாக என்றார்; மூங்கிலினது நிறம் வேறுபடப் புலர்தலின் இஃது உவமையும் பொருளும் ஒத்த உவமையைப் பழித்துக் கூறினார். சாம்பூநதமென்னும் பொன்னாற்செய்த கச்சும் பிரிவான காலத்திலே முன்பே வான்வடிவான மருந்தல் ஈடேற்றமாவுள்ளதும் குடிவாங்க முலை வீங்க; இதற்கு வினையுவமங் கூறினார் வினையில் பொருட்கு வினை கூறும் என்னும் விதியால். அழகிய வயிறு உதரபந்தனமென்னும் கோள் நீங்கிப் பசுஞ்சுடர்க் கோல முடையவாய ஆலினது தளிரினும் மெல்லிதாக;

இதற்குப் பண்புகொண்டு தொழிலுவமங் கூறிற்று. தேவவுலகத்து உள்ளா ரும் தங்கள் பதத்தைவிட்டுப் பூலோகத்திலே இறங்குவமென்று சொல்லுவ போல ஒப்பில்லாத சாமரேகையும் உந்திச்சுழியுங் காட்டிக் கெழீஇ வந்து தோன்ற என்றார்; காட்சி விருப்பத்தால் நடைவிரைந்து துகில் தழை தலின் உந்தி தோன்றிய தன்மை நோக்கி; இல்பொருளுவமம் கொண்டு தன்மை கூறினர். நிறவிய கலாபாரத்தாற் கட்டப்படாத அல்குல் திசை யெல்லையை முடிவுகாணக் கருதிச் செல்லுந்தன்மைபோல வளர்ந்து செல்ல; மன அறிவு உவமத் தற்குறிப்பேற்றம் கூறிற்று. மீதே சுமை யாகக் கிம்புரி பூட்டாத துடை வெள்ளிய உறையின்கட் கிடந்த மரகதம் ஒப்ப; திருவின் செல்வியென்றும் நிறம் செய்மையென்றும் முற்கூறுவார் தூசுறையின் மரகதம் என்றார், மன அறிவு உவமத்தாலே செலவும் விரை வினாற் செறியும் உருவும் நோக்கி. உடுத்த ஒரு துகிலும் மெல்லிய துகி லாக்கி உரோம ஒளி நிகழ்ச்சியென்று பொருள் கூறின் உந்திச் சுழியும் வெளிவந்து தோன்ற என்பார் "இடக்க ரடக்க ரெவ்விடத்துங் கூறார், இளமையே பகருமொழி மாதர்" என மேற்கோள் கூறலின்; இது உருவு வமம். சிலம்பென்னும் சுமையைச் சுமக்கும் செந்தாமரையானது அந்தச் சுமை போனதென்றல்ல, அரிந்த குரலைக்கொண்டு விரைந்து செல்கிறா ளென்று புறங்கூறு மென்னும் அச்சமின்றி ஓடுந்தன்மைபோல விரைந்து செல்ல; பொருளைப் புகழ்ந்து சுமை ஒழிந்ததற்கு மல்ல; புறங்கூறுமை யும் போனதென இல்குணமடுத்து அநியம வுவமம் கொண்டு வினையுவமம் கூறிற்று. பாங்கியர் ஆபரணம் பலவுங்கொண்டு உலகம் உயிர்தாங்கி மறு முறை தரிப்பத் தரித்தருளென்று எம்மருங்கும் பாராட்டத் தெருவில் எதிர்கொண்டு, நின்ற உயர்ந்தோர் உள்ளம் அடைய ஒரு தன்மையாகக் கேசாதி பாதத்து எல்லையளவுங் கூறிய உவமை சென்று கோப்ப வழிச் சென்றாள். (உம்மை 329) சிறப்பு.

(கு - ரை) 317. தாது - மகரந்தப்பொடி; இதனைக் கூந்தலில் அணிதல் இயல்பு; "அலமரு திருமுகத் தளகத் தப்பிய, செம்பொற் சுண் ணஞ் சிதர்ந்த திருநுதல்" (பெருங். 1. 33 : 119-20); "அளிநீ டள கத்தி னப்பிய தாதும்" (சிற். 122.) தமனியமாலை - பொன்னரிமாலை; "செண்ணச் சிகழிகைப் பின்னிடை சேர்ந்த, பொன்னரி மாலை", "மின் னிருங் கூந்தன் மேதகப் புனைந்த, பொன்னரி மாலையை", "நன்னுதன் மாதர் பின்னிருங் கூந்தற், பொன்னரி மாலாய் பொருளிலை யென்றும்" (பெருங். 1. 40: 39-40, 349-50, 2. 19; 75-6.); சீவக. 2528, 2663. 318. ஓதி - கூந்தல். சென்னி - சோழன். யமுனைத்தரங்கம் - யமுனை யாற்றின் அலை; இது கரிய நிறமுடைய தாதலின் கூந்தலுக்கு உவமை கூறப்பட்டது; சென்னி யமுனை; சோழன் கங்கை கொண்டான்

ஆதலின் அக்கங்கையின் உப நதியாகிய யமுனையையும் அவன் கொண்டதாகக் கருதியது. பொன்னி - காவிரி. அறல் - கரிய நுண்மணல்; காவிரி சோழனுக்குரிய ஆறு ஆதலின் அதன் மணலைக் கூந்தலுக்கு உவமை கூறினார். "யானயங் துறைவோ டேம்பாய் கூந்தல், வளங்கெழு சோழ ருறந்தைப் பெருந்துறை, நுண்மண லறல்வார்ந் தன்ன" (குறுந். 116 : 1-3.) 319. சேயரியக்கண் - சிவந்த அரிகளையுடைய கண். மையால் மழுங்காது என்றது மைதீட்டப் படாமையைக் கூறியது. கைபோய் - இடமகன்று. 320. ஒன்று - மாணிக்க அணி. 321. உச்சக்கலன் - உயர்ந்த ஆபரணங்கள். பச்சைப் பசுங்காம்பு - மிகப் பசுமையான மூங்கில். பாடு - பெருமை. நிச்சம் அழிய என இயைக்க. 322. அசும்புதல் - துளித்தல். அற்றம் - நீக்கம். விசும்பு: இடைக்கு உவமை யாகுபெயர். 323. கோள் - குற்றம். ஐதாகி - மெல்லியதாகி. 324. சாம ரேகையென்றது உரோமாவலியை; சாமம் - கருமை நிறம்; குணவாகு பெயராய் உரோமத்தைக் குறித்தது. இசையின் - ஓசையுடைய (232-3.) 325. கலாபாரம் - மேகலாபாரம். அல்குல்.........செல்ல : "மிசையகன்றுயரும் நகின்மருங்குல்குடி யடிபறிந் ததழ விடுமெனத், திசையகன்றளவு மகனிதம்பதட முடையமாதர்கடை திறமினோ" (நக்க. 29.) 326. பொறை - பாரம். கிம்புரி - குறங்குசெறி யென்னும் ஆபரணம்; சிலப். 6 : 86. தூசு உறை - தூசாகிய உறை. அறையும் - ஒலிக்கும். 328-9. பூங்கே ழுரு - பூவையொத்த நிறத்தையுடைய வடிவம்.

உரை. ஒப்பினை - அலங்காரம். "மாலையியல்பு" (தொல். உரி. 15.) உத்தி - சீதேவி. வலம்புரி - வலம்புரிச்சங்கு வடிவாகச்செய்த தலைக்கோலம். சூடாரத்தினம் - முடிமணி; "முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி" (முருகு. 84); "வான்கதிர்த் திருமணி விளங்குஞ் சென்னி" (புறநா. 150 : 6.) தொய்யகம் - தலைப்பாளை. புல்லகம் - தென்பல்லி வடபல்லி யென்பன; உத்தி......புல்லகம்: சிலப். 6 : 106-8. சென்னி விரும்பும் யமுனையென்றது சோழனைக் கண்ணபிரானாக நினைந்து கூறியது. சினையொடு சினை என்றது கூந்தலுக்கு யமுனையின் அலையையும் காவிரியின் அறலையும் உவமை கூறியதுபற்றி. மெய்யும் உருவுமென்றது நெறிப்பும் கருநிறமும்பற்றி; மெய் - வடிவு; உரு - நிறம். தொழிற்றன்மை: தன்மையணியின் வகையுள் ஒன்று; தண்டி. 29. இல்பொருளுவம மென்றது சங்கு மாணிக்கத்தை ஈன்ற தென்பதுபற்றி. மெய்யுவமம் - வடிவுபற்றிய உவமம். சாம்பூநதம் - நால்வகைப் பொன்னுள் உயர்ந்தது; "பொன்னுக்குச் சாம்புநதம்" (திருவள்ளுவமாலை, 36.) வான் - ஆகாயம். வினையுவமமென்றது விலக்குதற்றொழில் கூறியதுபற்றி. வினையில் பொருட்கு வினை கூறுதல்: தொல். உவம. 2, பேர். பண்பு -

பசுமைநிறம். தொழிலுவமம் என்றது மெல்லியதாதல்பற்றி. சாமரேகை - கரிய மயிரொழுங்கு. நிறவிய - நிறத்தையுடைய. தற்குறிப்பேற்றமென்றது இயல்பாக வளரும் அல்குலைத் திசையெல்லை முடிவு காணக்கருதிச் செல்லுவதாகக் கூறியதுபற்றி. "இடக்கரடக்கர்" என்னும் மேற்கோள் இன்ன நூலில் உள்ளதென்று தெரியவில்லை. அநியமவுவமை - நியமித்த வுவமையை விலக்கிப் பிறிதும் இப்பெற்றியன ஆம் என்றல்; தண்டி. 32.

(பி - ம்) 319. 'ஊடேட்டும்', 'ஊடொழுகும்' 321. 'உச்சங் கலனணிமாத்' 'புதுக்காம்பு' 323. 'ஆல விளந்தளிரி னைதாக' 324. 'மொருகாம', 'மொருரோம' 'சுழியு மெளிவந்து' 'கெழீஇய' 326. 'பூட்டா துறைதூ சுறையில்', 'தூ சுறையுண் மரகத', 'தூசுறையு மரகத' 327. 'புனையாச்' 'மரைப்போ துலம்பு' 328. 'இனியாந் தரிப்ப தரிதென்று' 328-9. பூங்கோ ளுருவில்'

330. கொற்றக் குடைக்கீழ் வடமேருக் குன்றனைய
வெற்றிக் களியானை மேல்வந்தான்—பற்றி

(கு - ரை) யானைக்கு மேருக்குன்று உவமை: 82.

331. இருவருந் தம்மி லெதிரெதிர் நோக்கா
ஒருவ ரெனவேட்கை யொத்தார்—குருசில்

(ப - ரை) 331. தலைவிமேல் தலைவன் நோக்கம்பற்றி, தலைவன் மேல் தலைவி நோக்கம்பற்றி நோக்கிய காலையில் பெண்பாற் கைக்கிளை கூறிய காண்டல் வலித்தல் ஆண்பாற்கும் ஏற்று ஒரு தன்மையர் ஆயினரென்று கண்டோர் கூறும்படி வேட்கை யொத்தார். வேட்கை யென்றது பருவக் கைக்கிளையை; இங்ஙனமன்றி அநுராகமெனில் திணை வழுவாம்.

(கு - ரை) நோக்கா - நோக்கி. வேட்கை யொத்தார் என்றது இருவயின் ஒத்தல் என்னும் துறை கூறியபடி. "ஒருவயிற் போல வுள்ளழி நோக்கமோ, டிருவயி னொத்தலீ திறந்த பின்னர்", "இருவயி னொத்த வியற்கை நோக்கமொ, டொருவயி னொத்த வுள்ள நோயர்" (பெருங். 1. 32: 48-9, 3. 7: 90-91.) அநுராகம் - ஒத்த அன்பு; இஃது ஐந்திணைக்கு உரியது; அதனைக் கைக்கிளைப் பொருளதாகிய உலாவிற் கூறின் திணை வழுவாம்.

(பி - ம்) 'நோக்கி'

332. 'மறந்த கடல்கடைய வந்தாண்மே லன்பு
சிறந்த திருவுள்ளஞ் செல்லச்—சிறந்தவள்

333. ஆக நகத்திருந்தா ளாகத் திருவுள்ளக்
கோக னகத்திற் கொடுசென்றான்—நாகிள

(ப - ரை) 332-3. குருசில் (331) மனுகுலத்தில் மறந்த திருப்பாற் கடலை முன்பு கடைய் வந்தவள் இவளென்க்கருதிச் சிறந்த திருவுள்ளம் இவள்மேற்செல்ல இயற்கை நலம் சிறந்தவள் தனது ஆகமாகிய மலை யிலேயிருந்து உவமையற்றாளெனக் கருதித் திருவுள்ளமாகிய கோகனகம் இருப்பாகக் கொடுத்து உட்கொண்டு போனான்.

(கு - ரை) 332. மறந்த பாற்கடல் என்றது இவன் திருமாலான காலையிற் பள்ளிகொண்டதை நினைந்து கூறியது; "எறிபாற் கடற்கொள் ளும் நின்றுயி றந்தரு ணீயென்பார்" (220); பாற்கடலைக் கடைந்தவன் முன்பிருந்த ஒரு சோழன்; "தோளிணையாற், கோழியிற் சோழ குலத் தொருவன் முன்கடைந்த, ஆழியிற் கொண்ட வரம்பையரும்" (இராச ராச. :71-2.) 333. ஆகம் நகம் - மார்பாகிய மலை. கோகநகம் - தாமரை.

உரை. உவமையற்றாள் என்றது மலையில் இருந்த தன்மையால் பிற மகளிர்க்கு உவமிக்கப்படுதல் நீங்கினாள் என்பது கருத்து.

(பி - ம்) 332. 'திருநோக்கம்' 'செய்து' 333. 'ஆக நகத் திருப்பா ளாக' கொடு வந்தான்'

334. நவ்வி மடநோக்கான் ஞாலத்தை யோரடியால்
வவ்வி யிருதோளில் வைத்தமால்—செவ்வி

335. முருகு கமழ முகந்து முகந்து
பருகு மடமகளைப் பாரா—அருகு

336. மடுத்து முயங்கி மயங்கிய தாயர்
எடுத்து மலரணைமே லிட்டார்—அடுத்தொருவர்

(ப - ரை) 334-6. இளைய (333) பெடைமான்போல மருண்ட நோக்கத்தால், முன்னர் ஞாலத்தை ஓரடியாலே வளைவிக்கொண்டு இரு தோளில் வைத்த மாலுடைய செவ்வியைப் பருவக் கைக்கிளைக்கு ஏற்ப மணங்கமழ முகந்துகொண்டு முகந்துகொண்டு பருகும் மடப்பத்தையுடைய

மகளைப் பார்த்து இவள் கண்ணுற் செவ்வி பருகும் தன்மையும் தலைவன் தலையளி செய்த தன்மையும் உணர்ந்து அருகுசென்று முயங்கினுலொ ழிந்து இவள் வேட்கைதெளியாதெனக் கருதித் தாயர் மயங்கிய மகளை யெடுத்து மலராற் செய்த அணைமேலிட்டார். இட்டாரென்றூர் ஒருணர் வின்மை நோக்கி.

(கு-ரை) 334. நோக்கால் பருகும் என இயைக்க. நோக்கினுல் அழகைப் பருகுதல்: "முருகுவார் கூந்தலார் மொய்த்தலர்ந்த கண்ணுற், பருகுவார் போல்வீழ்ந்து பார்ப்பார்" (120.) 335. முகந்து முகந்து என்ற அடுக்கு இடைவிடாமைபற்றி வந்தது. பாரா - பார்த்து. 336. மடுத்து முயங்கி - சேர்த்துத் தழுவி.

(பி-ம்) 335. 'மடமானைப்' 336. 'மடுத்து மயங்க முயங்கிய'

337. கொய்யாத கற்பகப் பூமாலை கொண்டைக்கும்
நெய்யாத பொற்றுகி னீவிக்கும்—செய்யாத

338. தொங்கற் றுளைக்கோவை யல்குற்குஞ் சூழ்கனகத்
துங்கப் பணிவலையந் தோளுக்கும்—கொங்கைக்குப்

339. பொன்னிப் புகாரிற் பொலன்குழம்பும் வல்லத்திற்
கன்னிப் பனந்தோடு காதிற்கும்—சென்னி

340. அளிப்பக் கொணர்ந்தனம்யா மன்னமே யென்று
தெளிப்பச் சிறிதே தெளிந்தாள்—கிளிக்கிளவி

(ப-ரை) 337-40. அடுத்து ஒருவர் (336) கொய்தற்கு அரிதான கற்பகப்பூவாற் செய்தமாலை கொண்டைக்கும், நெய்தற்றொழில் கூடாத பொன்னுற் செய்த துகில் (இளிவந்த தன்மை) துடைக்கும், துளையும் கோவையுஞ் செய்யாத தெய்வவுடை அல்குற்கும், அத்தன்மையாகச் சூழ்ந்த பாப்புச் சுருள் தோளிற்கும், புனிதமான காவிரியாற்று அகிலும் சந்தும் தம்மிற் றேய்ந்து புகார் முகத்திற் செறிந்த குழம்பு கொங்கைக்கும், வல்லத்தில் இளைய பொற்பனைக் குருத்தாற் செய்த தோடு காதிற்கும், சோளேசன் அளிப்ப யாங்கள் வழிபாடு கூறிக்கொண்டு வந்தேம், அன் னமே என்று பாணரும் கோடியரும் தெளிவிப்ப அதுகொண்டு நிகழ்ந்த பெருமயக்கம் சிறிது ஒழியத் தெளிந்தாள் கிளிபோலும் கிளவியென்று வாயில் வகையோர் கூறியதென்க.

கோடியரும் பாணரும் யாம் கொணர்ந்தனம் என்னும் குறிப்பு நமக்கு இன்றியமையாத ஆயவெள்ளத்தார் இராசராசனை ஒரு பவனியிலே தடுத்தும், ஒரு பவனியிலே நம்மை இகழ்ந்து கூறியும் நமக்கு உறவுபோல் பகைசெய்தாரெனத் தம் வழிபாடு இறைச்சிப் பொருள் கொண்டது காண்க. பாணரும் கோடியரும் என்ற உம்மை (305) எச்சவும்மை. சிறிதொழியத் தெளிந்தாள் என்ற குறிப்பு (340) வந்த வகையில் ஆரமாலை பெறுமை நோக்கிப்போலும். திருவுள்ளக் கோகனகத்திற் கொடுசென்றுன் என்ற வினை, கற்பகமாலையும் பொற்றுகிலும் துளைக்கோவையும் பணிவலயமு மென்னும் பெயரொடு முடிந்து தலைவன் குறிப்பு விளக்கிய வாறு காண்க. மெலிவொடு வைகிய தன்மை உணர்த்துவிப்பார் புறங்காவல் மாதரிலே சிலர் பவனி வருமளவும் ஒன்றுடனே பொழுது போக, குறை என்னென்று வினவிச்சூதை மறுத்துப் (301) பந்தாட்டில் ஏற்பித்து (304) விரைவினுலே முத்தின் பந்தும் அம்மனையும் கலந்தெடுத்துக் கொடுப்ப (307) இவள் மெலிவறிந்த பாணருங் கோடியரும் அவர் வினைகண்டு கலந்து (306) அம்மனையும் பந்தும் ஆடிய பகுதியும் வியந்து (314) புறங்காக்கும் மாதர் ஆட்டுநீர் ஆட்டிய எல்லையிலே (315) தலைவன் பவனிவரக் (316) கைக்கிளை விளங்க விரைவுடன் வருகாலையில் (317) ஒப்பியா இயல்பிற்குக் சண்டோர் உவமைகூற மறுகிற் புகுந்து காண்டல் வலித்தல் ஒழிந்து (316) உள்ளப் புணர்ச்சி நிகழ்ந்து மெய்யுறு புணர்ச்சி பெறுமை யுணர்ந்து (335) தாயர் மலரணைமேல் இட்டார் (336); பாணரும் கோடியரும் (305) கற்பக மாலைமுதல் தோடு இறுதியாக (337-8) அரசுரிமைக்கு வேண்டுவன நமது ஆய வெள்ளம் போலப் பெறுதவழிக் கூறுமல் தழையக் கூறிக் கொண்டு வந்தோமென்று அரசுரிமையான ஆத்திமாலை பெறுததுகொண்டு சிறிதொழியத் தெளிந்தாள் என (340) வாயில் வகையோர் பவனிகண்டு கூறினர் எனக் கூட்டுக. "அத்தொழிற் கிடையிடை யம்மனை யாடியும், அவ்வகைக் கழங்காடியும்" என்று கொங்கவேள் கூறலின் அம்மனை உடனுடல் ஆயிற்று. ஒப்பியா மாலையான தெரிவை முற்றிற்று.

(கு - ரை) 337. கொய்யாத கற்பகமாலை யென்றது மாலையாகவே பூத்தலின்; "பாடுவெண் டிமிரா பன்மரம் யாவையும், வாடா மாமலர் மாலைக டேக்கலின்" (மணி. 3: 49-50); இனி, கொய்யாத கற்பகமாலை: ஓர் அணியாகக் கொள்ளலும் ஆம். நெய்யாத பொற்றுகில்: தெய்வத் தன்மையால் நிருமிக்கப்படுதலின் இவ்வாறு கூறினர்'; நெய்வது இன்றி உயரிய பொன்னுல் ஆக்கப்படுவதால் என்றலும் ஆம். 338. துளை செய்யாத என மாறிக் கூட்டுக. பணிவலையம் - பாம்பு வடிவமாகச் செய்யப்படும் தோள்வளை, 339. பொலன் குழம்பு - பொன் போன்ற நிறமுடைய

சந்தனக் குழம்பு; காவிரி நதியில் படிந்துள்ள நுண்ணிய பொற்றுகள் களாலாகிய குழம்பு எனினு மொன்றும். வல்லம்; தஞ்சாவூருக்கு அருகிலுள்ளது; இது பழைய காலத்தில் பெரிய நகரமாக இருந்தது; "மாரியம்பின் மழைத்தோற் சோழர், வில்லீண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை" (அகநா. 336: 20-21-) "வல்லத்தேற்ற தெவ்வர்", "தெவ்வர் வானக மேற வல்லத்துவென்றான்" "வல்லத்து வென்ற துணிசிற வேன்மன்னன்", "உலம்புரிதோண் மன்ன ரோட வல்லத் தட்டவருரிமை, நலம்புனை கோதையர்க் கல்லல் கண்டான்", "அணிசிற மால்பகடுந்திவந் தார்வல்லத் தன்றவியத், துணிசிறவேல் கொண்டகோன்", "வல்லத் தமரழித்த, கறையா ரிலங்கிலை வேன்மன்னன்", "வல்லத்துப் புல்லாக், கோவுந் துமிய வைவேல் கொண்டகோன்", "வல்லத்துத் தென்னற்கு மாறெதிர்ந்து, விண்டார்" (பாண்டிக் கோவை); "சுடர்தோய் புரிசை, வல்லத்தமர் வென்றவாணன்" (தஞ்சை. 251.) கன்னி - இளமை.

உரை. 'அத்தொழிற்கு......ஆடியும்' என்ற பகுதி கிடைத்த பெருங்கதைப் பகுதியுள் காணப்படவில்லை.

(பி - ம்) 338. 'கொங்கைத் துணைக்கோவை'

[பேரிளம்பெண்]

341\. மற்றொருத்தி செந்தா மரைமலர்மே லென்னுடனே
செற்றொருத்தி வாழு மெனச்செறுவாள் - சுற்றவும்

(ப-ரை) தெரிவைப் பருவ வினைமாற்றுகிய பேரிளம்பெண் என்னும் பருவத்தொருத்தி, உலகப் பெண்தன்மைக்கு ஒப்பிலாளொருத்தியென்று கூறும் திருமகளென்னும் பெண் தன் தன்மை யுணர்ந்து தாமரை மேலிருந்து யாம் என்ன பயன் பெறுகின்றோம் எனத் தன் நெஞ்சுடனே வெறுத்து வாழுமெனச் சிலர் முகமன் கூற அதற்குப் பொருள் ஆராய்ந்து கூறினீர் என்று அவரை முனிவாள்; முனிந்த கருத்து யாதெனின் தாமரை மலர்மேலிருந்து முயன்ற தவப்பயனன்றே மநுகுலேசனை சோழேசன் அரசுரிமையை அடைய நாம்பெற்றதென்பதும் இருவர் திருமாதர் இல்லை யென்பதும் குறித்தறியாது கூறினீர் என்பது. முகமன் ஒழியச் செந்தாமரைமேல் ஒருத்தி செய்கை இயற்கையாக அணிகலத்தாளாய் ஒரு பருவத்துக்கு அடைத்த ஒழுக்கமொன்று மறிவாள் எழ்பருவத்து ஒழுக்கமும் அறியாளென்று பொறாமல் முகமன் கூறினாரைச் செறுவாள், உவமையை இழித்துப் பொருளை யுயர்த்தது.

(கு - ரை) மலர்மேல் என் - மலர்மேலிருந்து என்ன பயன்? உடனே என்பதற்கு நெஞ்சு என்ற சொல் வருவித்துரைத்தார்.

உரை. மற்று : வினைமாற்றுப் பொருளது; தொல். இடை. 14. உவமை : திருமகள். பொருள் : பேரிளம் பெண்.

342. தெட்டுத் தசும்பசும்பு தெங்கி னிளம்பாளை
மட்டுத் தமனிய வள்ளத்து—விட்டு
343. மறித்து வயிர மடலொன்றின் வாக்கித்
தெறித்து ஞிமிறோப்பிச் செவ்வி—குறித்துக்கொண்
344. டேந்தி முகம னியம்பி யிருந்தொரு
காந்தி மதிவதனி கைக்கொடுப்ப—மாந்தி
345. குதலை குழறிக் குயிற்குங் கிளிக்கும்
விதலை யுலகில் விளைத்து—நுதலை
346. வியரா லலங்கரியா வேந்தன் கொடுமை
அயரா வெளிவிடா வஞ்சாப்—பெயரா

(ப-ரை) 342-6. தெங்கிற் சூழக்கட்டிய தசும்புதோறும் மாறுநீர் இளம்பாளை மட்டு முற்றின பருவத்தே தசும்பினின்றும் பொன் வள்ளத்திலே விட்டு வள்ளத்தினின்றும் மீள வைர மடலிலே வடித்து மதுத்தான் விரும்பும் கடவுட்கு நிவேதித்து வண்டு வீழாமலோட்டிச் செவ்வி முதிராமற் குறித்துக்கொண்டு காட்சிக் கினியாளொருத்தி, தனது கரத்தேந்தி முகமன் கூறி இரந்துகொண்டு மதிபோலும் வதனிகையிற் கொடுப்ப வாங்கி அருந்தி மது மயக்கத்தாலே யாழும் குழலு மியையா மொழி குதலையுமாய் அதிலே குழறுதலு முடைத்தாய்க் குயிற்கும் கிளிக்கும் யாம் இவை கற்கவேண்டுமென்னும் விருப்பத்தினை விளைத்து வியராலே நுதலை அலங்கரித்து. குதலை - எழுத்தில் களவி. குழறுதல் - சொல்லில் களவி. மதுமயக்கம் வாக்கினும் மனத்தினும் காயத்தினும் ஒக்க நிகழ்ந்தவாறு காண்க.

(கு - ரை) 342. தசும்புதெட்டு - கலயங்கள் கட்டிய. அசும்புதல் - துளித்தல். மட்டு - கள். தென்னம்பாளைக் கள்ளையுண்ணல்: "ஊறலிளம் பாளை யுச்சிப் படுகடுந், தேறல் வழிந்திழுந்த செவ்விக்கண்" (விக்கிரம. 312); "கொலையு முண்டோ கொழுமடற் றெங்கின், விளைபூந் தேறலின் மெய்த்தவத் தீரே" (மணி. 3: 98-9.) தமனிய வள்ளத்து - பொற்கிண்ணத்து. 343. மறித்து - மறுபடியும். வயிரமடல் - வைரத்தாற்

செய்யப்பட்ட கள்ளுண்ணும் கருவி ; " வாக்கி மடனிறைத்து வண்டு மதி னுரையும், போக்கி " (விக்கிரம. 313.) தெறித்து - நகத்தால் தெறித்து ; " வருந்திச் சிறு துள்ளி வள்ளுகிரா லெற்றி, அருந்தித் தமர்மே லயர்ந் தாள் " (விக்கிரம 314.) ஞிமிறு ஒப்பி - வண்டுகளை ஓட்டி ; " தேன்கவர் வோப்பித் திருநுதல் சுருக்கிப், பூநறுந் தேறல் பொலன்வள்ளத் தேந்தி " (பெருங். 1. 35 : 176-7.) 344. முகமன் - உபசார வார்த்தைகள். காந்தி - காட்சிக்கினியா ளொருத்தி. மதிவதனி யென்றது பேரிளம் பெண்ணை ; 'காந்தி மதிவதனி - ஒளியுள்ள சந்திரன் போன்ற முகத்தை யுடைய ஒருத்தி : இவள் பேரிளம் பெண்ணின் தோழியாவள். கொடுப்ப - அத்தோழிகொடுக்க. மாந்தி - தலைவியாகிய பேரிளம்பெண் பருகி' என்று பொருள் கொள்ளலும் ஒன்றும். 345. விதலை - நடுக்கம் ; விக்கிரம. 213. கள்ளுண்டலால் நுதல் வியர்த்தல் : "வெவ்வா ணுதலும் வெயரரும்ப" (விக்கிரம. 320) ; "வடித்தவெங் குருதிவேல் விழிக்கு மாதர்மெய், பொடித்தவேர் புறத்துகு நறவம் போன்றவே " (கம்ப. 1. உண் டாட்டு. 22.)

உரை. மது விரும்பும் கடவுள் : வாருணித் தெய்வம். குதலை : சீவக. 181, உரை.

(பி - ம்) 343. 'ஞிமிறேச்சி' 344. 'டேந்து முகமன்' 346 'வெளியிடா'

347. அருகிருந்த பாணனை நோக்க வவனும்
குருசில் வருதமரங் கூறப்—பரிபுரக்

(ப - ரை) 347. பருவக் கைக்கிளை கனவின் அரற்றலாதலின் அதற் கொப்ப வேந்தன் கொடுமைச் செய்தியை நினைந்திருந்தமை தோன்ற முகமன் கூறினுரை முனிந்து மதுமயக்கத்தா லயர்த்து வெளிவிட்டு அஞ்சி யென வினையெச்ச முற்றாக்கி அந்நினைவைப் பெயர்த்தளிப்பக் கொணர்ந்த பாணனை முகம் பார்ப்ப அவனும் ஆத்திமாலை பெருதது உணர்ந்து 'பெருமாள் பவனி எழுந்தருளுகின்றார் ; அத் தமரம் இத் தமரம்' எனக் கூற.

(கு - ரை) தமரம் - முழக்கம். பரிபுரம் - சிலம்பு.

உரை. கனவி னரற்றல் : பு. வெ. 15. வினையெச்சமுற்று என்றது அயுரா என்பது முதலியவற்றை.

348. காலு நிதம்பமுங் கையுந் திருக்கழுத்தும்
கோலு மதாணிக் குலமெல்லாம்—மேலோன்

349. குரகத மேழு முழுகிக் குளிப்ப,
மரகத சோதி வயங்கப்—புருவ

350. இடைபோய்க் குமிழின் மலர்வந் திறங்கப்
புடைபோய்க் கருவிளை பூப்ப—விடையாக

351. ஏக முருக்கு மலர விளம்பாளைப்
பூக மிடறு வரப்பொதிய—போகப்

352. பெரும்பெருந் தெங்கிளநீர் தாழ்ந்து பிறங்கப்
பரும்பெருங் காம்பு பணைப்ப—விரும்பும்

353. நறுந்துணர் மாந்தளிர் வார்ந்து நளியக்
குறுந்தொடிக் காந்தள் குலைப்பச்—செறிந்து

354. சலித்துத் தனியிள வஞ்சி தளரக்
கலித்துக் கதலி கவின—ஒலித்தே

355. அளிக்குஞ் சகோரமு மன்னமு மானும்
களிக்கு மயூர கணமும்—விளிக்கும்

356. புறவுந் தொடர்ந்துடனே போத வவையே
பிறவு மினமென்று பெட்பச்—சுறவுயர்த்தோன்

357. காலை புகுந்து கரப்ப தொருபசும்பொற்
சோலை யெனவந்து தோன்றினாள்—ஞாலத்தோர்

(ப-ரை) 348.-57. தலைவன் பவனி வரவுக்குப் பாணன் வாயிலாக மயக்கந் தெளிந்து உருவுவமைக்கு ஏற்பவந்து மறுகிற் றோன்றினாளெனக் கூட்டுக. பரிபுரத்தையுடைய (347) காலும் நிதம்பமும் கையுந் திருக் கழுத்தும் கோலிக்கொண்ட பேராபரணமெல்லாம் தேர்மேலானான பருதி தேரிற் பூண்ட குரகதமேழின் உருவமும் புதையும்படியான மரகதமணி ஒளி நிறம்பெற விளங்க; இதனால் உருவுவமம் வந்தது. சோலைக்கொடி களிலே நிற்கும் குமிழிடத்து மலர் வந்து உண்டாக, அதன் புறத்திலே கருவிளை படர்ந்தது தொடுப்பக், கருவிளை படர்ந்த குமிழுக்கு நடுவாக நிறத்துக்கு ஒப்பற்ற முருக்கு மலர, இளம்பசுங்காய் தொடுத்த பாளையைப் பூகமிடற்றிலே வரப்பொதிய, உயர வளர்ந்த பெருந்தெங்கினிடத்திலே பருவ விளநீர் தழைந்து விளங்கப், பருமையும் பெருமையும் உளதாக மூங் கில் கிளையெழ, மாக்கள் வண்டு விரும்பும்படி பூங்கொத்தும் தளிரும்

ஒழுங்குபடச் செறியக், குறிய தொடிகளையுடைய காந்தளம்போது கட்டவிழத், தனித்தனியே இளைய வஞ்சிக்கோடு தழைத்த மெல்லிய தென்றற் காற்றிலே அசைந்து தளர்வெய்தக், கெழுமுதல் உற்றுக் கதலி அழகு பெற, ஆரவாரத்துடனே புறவும் சகோரப்புள்ளும் பூவையும் மானும் மயூர கணமும் தம் துணையுடனே தொடர்ந்துகூட உலாவப் பொழிலிற் சோர்வான புள்ளும் மாவுமாகிய பிறவும் பொழிலின் நிலைமைகண்டு தம் இனமானவை தருதலை விரும்பிச் சுறவுக்கொடியை யுயர்த்த காமன் காலையான வசந்த காலம் புகுந்து கரந்திருப்பதொரு சோலை ; இவையிற்றாலே காலம் வெளிப்படுத்தின தன்மைபோல மரகதமணியினது பசுத்த நிறஞ் சிவப்பக், குமிழினது மலர் இரு புருவநடுவே வந்து தாழப், புறவிதழ் பற்றுவிட்ட கருவிளம்பூப் போலும் கண்கள் இருபுறமும்போய் மலர்ச்சி தர, மேற் கூறுவதான கழுத்துக்கும் கண்ணுக்கும் நடுப்பட்டவிடத்திலே ஒப்பற்ற முருக்கிதழ் போலும் அதரம் மலர்ச்சிபெற, இளம்பசுங்காய் தொடுத்த பூகம் மிடறு ஒப்புவர மரகத உட்கட்டுடனே கழுத்து விளங்கப், பெரிய தெங்கினது பரிய இளநீர் ஒப்புத் தாழ முலைதழைந்து விளங்கப், பெருமைக்கும் வளர்ச்சிக்கும் இளமூங்கில் ஒப்பழியத் தோள்கள் பணைப்பெய்த, வண்டு விரும்பும் பூங்கொத்தும் மாவினது தளிரும் ஒழுங்குபடக் குழலிற் செறியக், காந்தள்போலும் அங்குலிகளின் இறைத்தொடி நிலை குலையப் பூரிப்ப, முலையுந் தோளும் பாரம் செறிந்து தனிமையுற்று வஞ்சி போலும் இடைதளரக், கன்னிக் கதலிபோலும் குறங்கு அழகுபோதக், கூட்டக் குறிப்புணர்ந்த சகோரமும் அன்னமும் மானும் களிக்கும் மயூரத் திரளும் தமது துணையை அளிக்கும் தன்மையவாயும் ஒன்றையொன்று தொடர்ந்து உடன் போத எண்ணி எண்ணாத பிறவுமான வண்டுங் குயிலும் மாடப்புறாவும் முதலாயின தமக்கு இனமென்று விரும்ப நடந்துவந்து தோன்றினாளெனக் கூட்டுக.

(கு - ரை) 348. மதாணி - பதக்கம் ; "படலசூடி காகோடி பணி மதாணி மார்பாளே" (தக்க. 105.) மேலோன் - சூரியன். குரகதம் எழு - சூரியன் குதிரைகள் எழு. முழுகிக் குளிப்ப என்றது குதிரைகளின் நிறம் பச்சையாதலின். தலைவியின் அவயவங்களை உருவகத்தாற் கூறுகின்றார். 351. இளம்பாளைப் பூகத்தைச் சொல்லியது கழுத்தில் மரகதத்தாலான ஆபரணத்தை அணிந்தமைபற்றி. 352. பணைப்ப - பெருக்க. 353. நளிய - செறிய ; உரிச்சொல். 354. கதலி : துடை. 355. சகோரம் - நிலவுண் பறவை ; 284. மயூரகணம் - மயிலின் தொகுதி. விளிக்கும் - தம் இனத்தை அழைக்கும். 356. சுறவுயர்த்தோன் - சுறா மீனைக் கொடியிலே மேம்படுத்திய மன்மதன் ; "மீனே றுயர்த்த கொடி வேந்தனே" (சீவக. 6.) 357. காலை என்றது இங்கே பொழுது என்

னும் பொருளது. 348 முதல் 357 முடியப் பேரிளம் பெண்ணின் அங்க இலக்கணங்களையும், உருவின் சிறப்பையும் ஒரு சோலைக்கு ஒப்பிடப் பட்டது காண்க.

உரை. மரகத உட்கட்டு - கழுத்திலணியும் ஆபரணம்.

(பி - ம்) 349-50. 'புருவத் திடைபோய்க்' 350. 'திலங்க' 'திறங்கி', 'திறைஞ்சி' 351. 'மோகப்' 352. 'பெருந்தெங் கிளநீர் தழைந்து', 'தெங்கிள நீர்கள்' 'விரும்பி' 353. 'வந்து நலியக்' 'குலையச்' 354. 'தளிர்ப்பக்' 356. 'முறவென்று' 357. 'தொரு பசுஞ்'

358. தெய்வப் பெருமாளுஞ் சேவடி முன்குவித்துக்
கைவைத்து நின்றவளைக் கண்ணுற்றான்—தையல்

(ப - ரை) குவித்த ஒருகைதன்மேல் ஒருகை வைத்தல் தலைமகளிர் தொழும் பகுதி. தொழுது நின்ற தலைவியைக் கருதிப் பார்த்தலையுற்றான்.

(கு - ரை) தெய்வப் பெருமாள் - சோழன்; இராசரரச. 363.

(பி - ம்) 'சேவடிமுன் கைகுவித்துக்'

359. வெருவமுன் சூர்தடிந்த வேளே நயக்கும்
பருவமு மார்பிற் பணைப்பும்—புருவமும்

360. செந்தா மரைக்கண்ணும் மாமேரு வைச்சிறிய
பந்தாகக் கொள்ளும் பணைத்தோளும்—உந்தியும்

361. உய்ய விருகாது மூக்கு முடுபதியை
நைய வெறிக்கு நகைநிலவும்—செய்ய

362. பவளத் துவர்வாயும் பாதாம் புயமும்
கவளக் களிற்றெளிதிற் கண்டு—குவளைக்

(ப - ரை) 359-62. கண்ணுற்ற தலைவனைக் கவளக்களிற்றிலே எளிதாகக் கண்டு அரிதாகக் கனவிற் கண்டு அவன் செய்த கொடுமையைக் கருதித் தையல் வெருவுதலுற்று எளியவனே என நயக்கும் பருவச் செவ்விறமும் ஊழிமுடிவில் பூமகளையும் நாமகளையும் உய்தற்கு இடமாகக் கொடுக்கும் உந்தியும் காதும் முதலான அவயவச் செவ்வியைக் களிற்றின் எளிதிற் கண்டெனக் கூட்டுக.

(கு - ரை) 359. சூர்தடிந்த - சூரபதுமனைக் கொன்ற; தடிந்த என்றூர் அவன் மாமரமாக நின்றமைபற்றி. வேளே: ஏகாரம் சிறப்பு. 360. மேரு பந்தாதல்: "காவன் மலையேழுங் கந்துகமோ" (152.) 361. உடுபதி - சந்திரன். 362. கவளக்களிறு - தான் விரும்பும் கவளம் பெற்று வளர்ந்த களிறு; சிற். 33, பேர்.

உரை. அரிதாகக் கனவிற் கண்டவனென்றது இப்பருவத்துக்கைக்கிளை கனவினரற்றுதல் என்பதனை நோக்கி. பூமகளையும் நாமகளையும் உய்விக்கும் உந்தி என்றது பூமிதேவியையும் அவளைப் படைக்கும் பிரமதேவனையும் தன்னுள் அடக்கிக் கொள்ளுதல்பற்றி.

(பி - ம்.) 359. 'வியக்கும்' 'மார்பும்' 360. 'பணைக்கரமும்' 361. 'வடிகாதும்', 'வருள்காதும்' 362. 'பாரர்ள் புயமும்' 'கவளக்களிற்றெதிர்', 'களிற்றினெதிர் கண்டாள்'

363. கருநெடுங் கண்களிப்ப வுள்ளங் களிப்பப்
பருநெடுந் தோளும் பணைப்ப—ஒருநின்

364. சிலம்புக ளோரேழுஞ் சென்றடைந்து நோலேன்
அலம்பு கடலேழு மாடேன்—வலம்புவனம்

365. ஏழுஞ் செலவயரே னெங்கோவே நின்குடைக்கீழ்
வாழுந் திருவெனக்கு வாய்க்குமே—தாழி

(ப - ரை) 363-5. மது மயக்கத்தால் உண்கண்ணும் உள்ளமும் களிப்பத் தோளும் பணைப்பெய்த வேந்தன் கொடுமையைப் பார்த்துச் சிலம்புகளோரேழும் விசயமடந்தையைப்போற் சென்று தவஞ் செய்யேன்; திருவின் செல்வியைப்போல எழுகடலுஞ் சென்று நீராடேன்; நிலமகள் போல நின்மரபிற் றலைவனை வெய்யோற்கு இடமாய எழு புவனமும் வலஞ்செய்ய விரும்பேன்; எம்முடைய கோவே! நின்குடை நிழற்கீழ் வாழும்படியாக நின்மாலை புனை செல்வம் வாய்க்குமேயாமாகில் யானது செய்யவல்லேன்; அது செய்தால் இவளுக்கு ஆத்திமாலை கொடுக்க வேண்டுமென்கிறதைப் பற்றறச் செய்கின்றூ யல்லவே என்றென்று கூறி அது வாய்க்குதல் அல்லவென்று கனவிற் செய்த கொடுமையை நினைத்து.

(கு - ரை) 364. சிலம்பு - மலை. நோலேன் - தவஞ்செய்யேன். அலம்புதல் - ஒலித்தல். மலைகளில் தவஞ்செய்தலும் கடலாடுதலும் சோழனை யடைதற்குரிய உபாயங்கள்; "மலையி னலைகடலின் வாளரவின் வெய்ய, தலையிற் பயின்ற தவத்தால் - தலைமைசேர், அம்மாதர் புல்லு மப

யன் புயம்புணர, எம்மா தவம்புரிந்தோம் யாம்'' (தண்டி. 58, மேற்.) 365. புவனமேழும் வலமாக வருதல்; "குணகடல் பின்ன தாகக் குடகடல், வெண்டலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப, வலமுறை வருதலு முண்டென்று" (புறநா. 31 : 13-5.) எழுமலை, எழுகடல், எழுபுவனம். 150-52; "எழுகட லெழுகிரி யெழுபொழி லெனவிவை சுற்றிய பற்றுளா'' (குலோத். பிள்ளைத். 36.) தாழி - தயிர்த்தாழி.

உரை. விசயமடந்தை - துர்க்கை. நின்மாலை என்றது ஆத்தி மாலையை.

(பி-ம்) 363. 'கருநெடுங் கண்ணு முளமும் களிப்ப' 365. 'தாழ்வின்', 'தாழும்'

366. முடைதழுவு தோளும் முலையுந் தழுவ
விடைதழுவு தாமரைக்கை வீரா—கடகரியைக்

367. கைதழுவிக் கோரத்தைக் காறழுவி நின்புலியை
மெய்தழுவிக் கொள்ள விடுவாயோ—மொய்திரைசூழ்

(ப-ரை) 365-7. 'தாழிபோல' (365) முடைமணம் தழுவும் தோளும் முலையுமுடைய கோவியமாதரைத் தழுவுதற்கு விடையைத் தழுவிய தாமரைக் கைவீரனே' என்று விளித்து 'நினது எற்றுனையாய்க் கைவலியையுடைய யானையைக் கைதழுவி, நின்குலமுதற் றுரகமாய்க் கால்வலியையுடைய கோரத்தைக் காலைத்தழுவி, நின்மாற்றார் மனமழியத் தாவும் மெய்வலியையுடைய புலியை மெய்யைத்தழுவி நின்குடைக்கீழ் வாழும் செல்வம் கைக்கொள்ளக் கடவேன்; இவையிற்றை எவிக் காண வல்லையோ; அது செய்கின்றுயல்லவே.'

(கு-ரை) 366. முடை-பாலின் நாற்றம்; "முடைக்கை யெதிர்க் குரவை கோத்தாய்" (252.) விடை தழுவியது நப்பின்னையின் பொருட்டு; 252-3. கடம்-மதம். கரி-சோழனது அயிராபதம். 367. கோரம்-சோழனது குதிரையின் பெயர்; "ஆரந் தழுவுந் தடந்தோளகளங்கன், கோரந் தொழுத கொடிக்கு" (தண்டி. 39,மேற்.) புலி-சோழன் கொடியிலுள்ள புலி.

(பி-ம்) 366. 'முடைதவழும்', 'முடைதழுவு நாடன்' 367. 'விடுவையோ'

368. ஞால மறிக்கவும் நாயக நின்புகல்விற்
கால வுததி கலக்கவும்—சால

369. வருந்தா வகைவருந்த வாழி பெயரும்
பெருந்தேவி யார்க்குப் பெறலாம்—திருந்திய

370. குந்த மொசித்ததுவுங் கொற்றத் திருத்தோளால்
வந்த விடையேழு மாய்த்ததுவும்—முந்துறக்

371. கோவிய மாதர்க்கே யுள்ளங் குறைகிடந்த
ஆவியே மாதாக வஞ்சுமே—ஓவிய

(ப - ரை) 368-71. நீ நாயகமானபடியாலே ஊழிவெள்ளஞ் செறியப்பட்டு வசுந்தரைக்கு ஆதாரமான ஞாலத்தை எதிர்முகமாக்குதற்கு மச்சாவதாரமாய் வெள்ளத்தைத் தடுக்கவும், நினது புகலாய் ஒளிகாலப்பட்ட திருப்பாற்கடலென்னும் அவ்வுததியை மலையும் பாம்பும் மதியும் கொண்டு கலக்கவும், திருவின் செல்வியும் வசுந்தரையும் நின்னைப் பிரிந்து வருந்தாவகை அவ்வாழியிலே புரியும்படி நீ வருந்தலால் அவர் நினக்குப் பெருந்தேவியராதலின் அத்தன்மையரானவர் தோளினும் மார்பினுங் கண்டிருப்பக் குருந்தமேறி அதன் கோடுகளை முறித்ததும், வலிபொருந்திய திருத்தோளாலே விடையேழுந்தழுவி மாய்த்ததும், திருந்திய கோவிய மாதர்க்கே யல்லவோ? எப்பிறப்பினும் நின்மேல் அன்புசென்று அந்தக் குறை முடிக்கக்கிடந்த ஆவி எம்மளவு இன்னுதாக அழுந்துற அஞ்சுமேயென்று அவன் கொடுமை வெளியிட்டு, திருந்திய கோவிய மாதர் என்றூர், நீர் மண் காவாமை குறித்தென்க. கோவிய மாதர்க்கே யென்றும் நின்னைக் கருணாகரன் என்றும் கூறியது விரகத்தாரிடத்து அருள் செய்வை யென்றுாயிருக்கும். அவர்கள் பெண்தன்மைக்குப் பிழைசெய்தார் என்பது நோக்கியும். பெருந்தேவியர் தம்மளவிற் செய்த நன்றி மறவாராதலின் இது செய்யலாயிற்றென்று இறைச்சிப் பொருண்மை சுட்டிற்று.

(கு - ரை) 368. ஞாலம் - பூமிதேவியை. மறிக்க - வெள்ளங் கொள்ளாமல் தடுக்க. புகல் - இருப்பிடம். வில் கால் அ உததி - ஒளியை வீசுகின்ற அந்தப் பாற்கடல். 369. பெயரும் - நினக்குத் தேவியரென்ற பெயரையும். பெருந்தேவியாரென்றது பூமிதேவியையும் திருமகளையும். 370. குந்தம் - குருந்தமரம்; இடைக்குறை; "மாதர்புடை, வைகுந்தமேற் கொண்டிருந்தோர்", "சாகைக் குந்தத்துக் துகிறாக்கி மாதர் தமை நகைத்தாய்" (திருவரங்கத்தந்தாதி, 62, 80); "குருந்த மொசித்தஞான்

றுண்டால்" (தொல். புறத். 5, ந. மேற்.); "குருந்த மொன்றொசித் தானொடு" (பெரியாழ்வார். 4. 4 : 7.) விடை எழு மாய்த்தது - கன்யா சுல்கமாக வைத்த எழு விடைகளைக் கண்ணன் மாய்த்து நப்பின்னையை மணந்த செய்தி. குருந்தம் ஒசிக்கச்செய்தும், விடையேழு தழுவச்செய் தும் உன்னை யடைய ஒருப்பட்டார் ஆதலின் கோவியர் பெணதன்மைக்கு இயல்பான அன்பின்றிக் கொடுமைக்கிடமாய் நின்று பிழை செய்தவராவர் ஆதலின் அன்னோர் செய்த பிழை இனம்பற்றிப் பெண்பாலாகிய தன்னை யுஞ் சாருமே என்று அஞ்சினாள் பேரிளம்பெண் என்று பொருள் கொள்க. 371. கோவிய மாதர்க்கே; எகாரம் பிரிநிலை. ஓவிய - ஒழியும் பொருட்டு; வினையெச்சம்; நினக்குத் தோற்றொழிந்த எனினும் ஆம்.

உரை. மலையும் பாம்பும் மதியும் முறையே மத்தும் கடைகயிறும் தம்பமுமாகக் கொள்ளப்பட்டன; "வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக், கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே" (சிலப். ஆய்ச்சியர் குரவை); "பைம்பொன் மால்வரை மத்தினிற் பணி வடம் பிணித்திட், டும்ப ரானவர் தானவ ருடன்கடைந் திடவே, தம்ப மானது மன்றியத் தழல்விடந் தணிய, அம்பு ராசியி னாரமு துடனவ தரித் தோன்" (வி. பா. குருகுலச். 4.) தோளினும் மார்பினும் என்றது பூமி தேவி தோளிலும் திருமகள் மார்பிலும் இருத்தல்பற்றி. விரகத்தார் - பிரி வுடையவர். அவர்களென்றது கோவிய மாதரை. இறைச்சிப்பொருள்: "இறைச்சி தானே பொருட்புறத் ததுவே" (தொல். பொருள். 35.)

(பி - ம்) 368. 'ஞால மடக்கவும் நாயகநீ நின்புலரிக்' 371. 'கோவியர் மாதர்க்கே யென்றும்' 'ஆவியே மாதர வஞ்சுமே', 'ஆவி யமர்தர வஞ்சுமே'

372 சேரன் சிலையினுஞ் சீரிதே சென்றொசிய
மாரன் சிலையை வணக்காயால்—சேரன்றன்

373. முன்றிற் பனைதடிந்தாய் முட்டா திரவொறுக்கும்
அன்றிற் பனைதடித லாகாதோ—கன்றி

374. மலைக்குஞ் செழியர் படைக்கடலை மாய்த்தாய்
அலைக்குங் கடன்மாய்த் தருளாய்—மலைத்தவர்

375. தங்கள் புகழ்நிலவை மாய்த்தா யரிமரபிற்
றிங்களின் றண்ணிலவு தீராயால்—பொங்கொலிநீர்த

376. தெம்முனை யாழ்தடிந்தா யெங்கள் செவிகவரும்
எம்முனை யாழ்தடிந்தா லென்செய்யும்—செம்
மணியின்

377. செஞ்சோதி சிங்களத்து மாற்றுவாய் செக்கரின்
வெஞ்சோதி கண்டால் விலக்காயால்-வெஞ்சமத்துக்

378. காதி விடைபண்டு காடவன் முன்றடிந்தாய்
வீதி விடைதடிய வேண்டாவோ—யாதுகொல்

(ப - ரை) 372-8. பதினெட்டு மலையரணையுடைய சேரன் போர்த்தொழிலொழிய அவன் கொடியில் வில் முறிந்து போய்விட்டது; நின் நிழல் வாழும் எங்களை வினைசெய்கின்ற மாரன் சிலையைத் தாழ்வியாய்; நீ முறித்த வில்லினும் சீருடைத்தேயென்று கருதின் சீரிதும் அல்லவாகையால் இதற்குக் காரணம் யாதுகொல்? சேரனுக்குப் போர்க்கண்ணியொடு மலைதற்கு முன்றிலில் நின்ற பனையைத் தறித்தாய்; நின்மாட்டு அன்பு நீங்காத எம்மை இரவில் ஒரு மாத்திரைப்பொழுதும் ஒழியாமல் ஒறுக்கும் அன்றிற்கு இடமான பனையைத் தறிக்கலாகாது என்றிருக்கிற காரணம் யாது கொல்? கன்றி மாறுபட்ட செழியர் படைக்கடலை மாய்வித்தாய்; எம்மை அலைக்கும் கடலை மாய்த்தருளாய்; இதற்குக் காரணம் யாது கொல்? மாறுபட்ட அரசர் புகழ்நிலவை மாய்த்தாய்; நினக்குப் பகைவனவன் மரபிற்றிங்களிடத்துக் குளிர்ந்த நிலவை மாய்வியாமையது காரணம் யாது கொல்? தண்ணிலாவென்றது இகழ்ச்சிக் குறிப்பு. பொங்கி ஆரவாரிக்கிற கடலிடத்து உளதாய் நிற்குப் பகையாகிய யுத்தம் செய்யும் சிங்கள ராசாக்களுடைய வெம்மையும் முனையுமுடைய யாழைக் கெடுத்தாயே; எங்கள் செவிப்பயனைக் கவர்ந்துகொள்ளும் யாழை எம்முன் தடிந்தால் என்ன செய்யும்? தான் அது செய்யாத காரணம் யாது கொல்? சிங்களதேசத்துச் சிவந்த செம்மணியின் சிவந்த சோதிகொண்டு கண்டோர் உயிருண்டலை மாற்றினாய்! செக்கரிடத்து வெஞ்சோதி எம்மைக் கொலை செய்தல் கண்டால் விலக்காயால். அதற்குக் காரணம் யாது கொல்? வெய்ய போர்க்களத்திலே காடவர் கொடியாடையில் விடையை மாறுபட்டுக் கெடுத்தாய். எம்மைக் கருதி வினைசெய்கிற வீதி விடையைத் தடிய வேண்டாதது காரியமோவென்னில் அல்ல. அது செய்யாத காரணம் யாது கொல்? பொங்கொலி நீர்த் தெம்முனை : இராவணனுக்கோ ராகுபெயர்.

(கு - ரை) 372.சேரன் சிலையை வணக்கியது: "ஏறடர்த்து வின் முருக்கி" (தண்டி. 49, மேற்.) சீரியதே - சிறப்புடையதாகுமோ: ஏகா

ரம் எதிர்மறை வினைப் பொருளில் வந்தது. மாரன்சிலை - மன்மதனுடைய வில்லாகிய கரும்பு. 373. முன்றிற் பனை - முற்றத்தேயுள்ள காவல் மரமாகிய பனை. பகையரசருடைய காவல் மரத்தை வெட்டுதலும் அதனால் முரசு முதலியன செய்தலும் புறத்திணை மரபு ; "பலர்மொசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின், கடியுடை முழுமுத றுமிய வேஎய், வென்றெறி முழங்கு பணை செய்த", "கடம்பறுத் தியற்றிய வலம்படு வியன்பணை" (பதிற். 11 : 12 - 4, 17 : 5) ; "பழையன் காக்குங் கருஞ்சினை வேம்பின், முழாரை முழுமுத றுமியப் பண்ணி" (பதிற். 5-ஆம் பதிகம். 13-4) ; "கடம்பறுத் தியற்றிய பண்ணமை முரசு" (அகநா. 347 : 4-5.) முட்டாது - குறையாமல். அன்றிற்பனை - அன்றிலையுடைய பனைமரம் ; "பெண்ணைமேல், பின்னுமவ் வன்றிற் பெடைவாய்ச் சிறுகுரலுக், குன்னி யுடலுருகி நையாதார்" (பெரியதிருமடல், 42-3.) ; "பனைமே லுறைவாய் பழிபூ ணுதியோ" (கம்ப. I. கடிமணப். 5.) கன்றி - விரோதத்திலே அடிப்பட்டு. 374. செழியர் - பாண்டியர். கடலோசை பிரிந்த மகளிருக்குத் துன்பந்தரும் ; "அறை கடலி னிசையுடனே யண்டர் வேயி னும்பலிசை செவிகவர வந்தி மாலை, நிறைமதியி னிலவென்னும் நெருப்புப் பட்டா னேரிழைநின் றுற்று வளோ" (சிலாசாஸனப் பாட்டு.) மலைத்தவர் - மாறுபட்ட பகைவர். 375. அரிமரபு - பகைவனாகிய பாண்டியன் மரபு. பாண்டியர் குலமுதல்வன் சந்திரனென்பது : "செருமாண் டென்னர் குலமுத லாகலின்", "தென்னவன் குலமுதற் செல்வன் றோன்றி", "மாலைத் திங்கள் வழியோ னேறினன்" (சிலப். 4 : 22, 13 : 18, 27 : 138.) 376. தெம்முனை யாழ்தடிந்தாய் - கொடிய இலங்கையரசனது வீணைக்கொடியை அழித்தாய் ; "காண்டகு நீண்ட வீணைக், கொடிப்பற்றி யொடித்துபர் வானவ ராசிகொண்டான்" (கம்ப. 3. சடாயு வுயிர்நீத்த. 107) ; "ஊழிபல வந்துபகை மேழியையும் வீணையையு முற்றுமிடை சுற்று மொருவால்" (குலோத். பிள்ளைத். 64.) எம்முனை யாழ் - எம்மைச் சினந்து எழும் யாழ் ; யாழொலி விரகதாபத்தினரை வருத்தும். 377. சிங்களத்திலுள்ள மணியை அழித்தது : "காவ லிலங்கை விலங்கல் கிழித்திருள் கான்மணி கைப்படவும்" (குலோத். பிள்ளைத். 43.) செக்கர் - செவ்வானம். 378. காதி - மாறுபட்டு. விடை - காளை எழுதிய கொடி. காடவன் - பல்லவன். "விடை வெல்கொடி வேல்படை முன்னுபர்த்த, பண்புடைப் பல்லவர்கோன்" (பெரியதிரு. 2. 9 : 6) ; "மீளிவன் கொடிவிடை வேந்தர் மார்பினும், தோளினுந் தீட்டிய தொண்டை மன்னவா" (சிலாசாஸனப் பாட்டு.) வீதிவிடை - வீதியிலே செல்லும் காளை ; அதனுடைய மணியோசை பிரிந்த மகளிருக்குத் துன்பம் செய்யும் ; "உரவுரு முரறு மரைபிரு ணடுநாள், நல்லே றியங்குதோ றியம்பும், பல்லான் றொழுவத் தொருமணிக் குரலே" (குறுந். 190 : 5-7);

" விடைமணி யோசை விளைத்தசெவிப் புண்ணின், புடைமணி யோசைப் புலர்ந்தேன் " (விக்கிரம. 295.)

உரை. பதினெட்டு மலையரண்: விக்கிரம. 17; இராசராச. 21; "மகோதை மதிற்கதவம் பறிப்ப வெழிற்பதி னெண்சுர மும்பொடி யாமடி யப்பெயரும், பண்டித சோழன் மகற்கு மகன்பெறு மன்னவர் மன்ன வனே " (குலோத். பிள்ளைத். 42.) நீ முறித்த வில்லென்றது சீதையின் பொருட்டு முறித்த வில்லை; " மாதை, ஒறுக்கு மிதிலை யொருவில்லைத் தொல்லை, இறுத்த மவனிவ னென்பார் " (116) போர்க்கண்ணியோடு தமக்குரிய அடையாளப் பூவையும் சூடுதல்: " குடுமி களைந்த நுதல் வேம்பி னொண்டளிர், நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிலைந்து " (புறநா. 77 : 2-3.) கண்டோர் உயிருண்ணும் மணி: 145.

(பி-ம்) 372. 'திண்ணிதே' 'வணக்காயோ' 373. 'இராவொறுக்கும்' 'பனைகடிய லாகாதோ', 'பனைதடிந்தா லாகாதோ' 374. 'மலைத் தலைவர்' 375. 'தீர்த்தாய் தனிமரபில்' 'யரிமார்பிற்' 'றண்ணில வைத்' 'பொங்குதிரை வெம்முனை' 376. 'யாழ்தடிய வேண்டாவோ' 376-7 'செம்மையின் செஞ்சோரிச்' 'மாற்றினுய்' 378. 'விடை முன்பு' 'கடிய'

379. வன்பல் லவந்துகைத்த வாட்டானை யின்றிந்த
மென்பல் லவந்துகையா மேம்பாடு—தன்பூங்

380. கருப்புச் சிலைகொண்டு மோதுங் கழுத்திற்
சுருப்புநாண் புக்கழுந்தத் தூக்கும்—நெருப்புமிழ்

(ப-ரை) 379-80. வலிய பல்லவ தேசத்தை அழகழிய நெருங்கும் வாட்படையையுடைய தானை வந்து காமன் வில்லான இக்குவின் மெல்லிய பல்லவத்தைத் துகையாத மேம்பாடு யாது கொல்? காமன்றன் வினை யறியாமை போலும்; காமன் தனது கருப்புச்சிலைகொண்டு எம்முயிர் அழியமோதும்; கழுத்திற் சுருப்புநாண் உட்புக்கு அழுந்தக்கட்டித் தூக்கும்.

(கு-ரை) 379. பல்லவந்துகைத்த - பல்லவதேயத்தைச் சிதைத்த. வாட்டானை - வாட்படை வீரர்கள் கொண்ட சேனை. மென்பல்லவம் - மிருதுவான புஷ்பங்களாகிய அம்புகள்; பல்லவம் - அம்பு;

உரை. காமன் வினையறியாமை தலைவன் தொழில். மோதும்: முற்று. சுருப்புநாண் - வண்டாகிய நாண்.

(பி - ம்) 379. 'வன்பல்லவன் றொலைத்த', 'வன்பல்லவன் றுகைத்த', 'வன்பல்லவம் பகைத்த' 'மேம்பாடென்' 'மென்பூங்', 'தண்பூங்' 380. 'புக்கழுத்தித்'

381. அப்புக் கழுவேற்று மாறுப் பெருங்கோப
வெப்புப் படுத்தெங்கண் மெய்யுருக்கும்--தப்பா

382. உடல்பிள வோட வொருதேரிட் டூரும்
அடன்மகர போசன மாக்கும்—விடுதூதால்

383. அக்கால தண்ட மகற்றி யுலகளித்தாய்
இக்காம தண்ட மெளிதன்றே—மைக்கோல

384. வண்ணு வளர்ந்த மகரா லயமறந்த
கண்ணு வநங்கன்போர் காவாயேல்—மண்ணுலகில்

385. எப்படி யாவா ரிளம்பிடியா ரென்றென்று
மைப்படியுங் கண்ணுள் வருந்தினுள்—இப்படியே

(ப - ரை) 381-5. காமக் கனலிலே பொறியைச் சிந்தும் (380) அம்பாகிய கழுவை மருமத்துச் செருகும்; ஆறாத கோபமாகிற நெருப்பை விளைத்து எங்கள் மனத்திண்மையையும் உருக்கா நிற்கும்; தப்பாமல் உடலம் பிளவோடும்படி ஒப்பற்ற தென்றற் றேரிட்டு ஊரும்; வெற்றிபொருந்திய கொடி மகரத்துக்கு எமது ஆவியைப் போசனமாக்கும்; ஏவ விடப்பட்ட தூதாலே அக்கால தண்டத்தை அகற்றி முன்னம் உலகளித்தாய்; எம்மளவில் காமதண்டம் அகற்றி எம்மை அளித்தல் உனக்கு எளிய காரியமல்லவே' என்று வேந்தன் கொடுமை கருதி அஞ்சி, 'மைத்த மேகம் போலும் வண்ணனே! கண்வளர்ந்த மகராலயம் மறந்த கண்ணனே! அநங்கன்போர் நீ காவாயாகில் இளைய பிடிபோல்வார் மண்ணுலகில் எப்படித் தான் ஆவிபுரந்து ஈடேறுவார் இவ்வினைக்கு' என்று மைப்படியுங் கண்ணுள் வருந்தினுளெனக் கூட்டுக.

(கு - ரை) 381. அப்புக்கழு - பாணமாகிய கழுக்கள். மெய் - மனத்திண்மை; உடலுமாம். 182. உடல் பிளவோட - உடலைப் பிளக்கும்படி; "வெற்பும் பிளவோட வொலித்தனவால்" (தக்க. 213.) தூதால் காலதண்டம் அகற்றியது: இவ்வாறு தூது அனுப்பியவன் சுரகுரு; "சுரகுருவின் றூதாகி யமன்பாற் செல்வோன்" (கலிங்கத். 157); "மாகத்துக், கூற வரிய மனுக்கொணர்ந்து கூற்றுக்குத், தேற வழக்குரைத்த செம்பியனும்" (விக்கிரம. 6-7.) "கௌவை, எழக்குரைக்கும்

பேழ்வா யிருங்கூற்றுக் கேற்ப' வழக்குரைக்குஞ் செங்கோல் வளவன்" (5-6.) 383. காமதண்டம் - மன்மதனால் விளையும் தண்டனை. மை - மேகம். 384. வளர்ந்த மகராலயம் - பள்ளிகொண்ட திருப்பாற்கடல். (பி - ம்) இளம்படியார் : "இளம்படி யிவளுக் கென்னினைந் திருந்தா யிடவெந்தை யெந்தை பிரானே" (பெரியதிரு. 2. 7 : 2); "நன்மணி யிழந்தநாகர் நல்லிளம் படியர்போல" (சீவக. 1098.)

உரை. மருமம் - உயிர்நிலை.

(பி - ம்) 381. 'மாறா வருங்கோப' 382. 'பிளவாக', 'பிளவேற' 'வொருதே ருருட்டும்' 385. 'இளம்படியார்' 'கண்ணார் வருந்தினார்'

386. தையலார் பொற்றேரைகைச் சாயலார் கையகலா
மையலார் பேரலராய் மன்றேற—வையம்

387. பெருகுடையா நீரேழும் பாரேழும் பேணும்
ஒருகுடையான் போந்தா னுலா.

(ப - ரை) 386-7. பருவந்தோறும் கூறிய இப்படியிலே அழகான பொன்னாற் செய்த மயில்போலும் சாயலார் கையகலா மையலையுடைய பெருந்திணையாரைப் போலே பிறர் அலர் கூறுந் தன்மைத்தாகக் கூறி மன்றேறக் காட்சியே கைம்முதலாகக் கலவியின்றி ஒருதலை வேட்கையிற் புலம்பும் மடவார் பலர், இளைத்து வருந்துவார் பலர் விளங்க வையத்துக் குப் பெருகு உடையா நீரேழும் உடுத்தற்கமைந்த பாரேழும் பேணும் ஒரு குடையான் உலாப் போந்தானென வாயில் வகையிற் பவனி கண்டோர் கூறினாரென்பது. கனவு இப்பருவத்துக் கூறாதிருக்க, கனவிற் செய்த கொடுமை என்று உரையிற் கூறியது யாதென்னில் மது மயக்கத்திலே கனவு நிகழுமென்பது முன்னர்க் கூறிய உலாவிற் கூறினாராதலின். வெளிப்படக் கூறாமல் கூட்டம் நிகழ்ந்தவாறு தோன்றவும் பருவப் பொருண்மை பற்றியும் குதலை குழறியெனக் (345) குறிப்பாற் கூறுத லின் கொடுமை யென்னும் ஒரு பொருள் நுதலிப் பருவத்துப் பொருண்மை முற்ற முடித்தவாறு காண்க.

தெரிவைப் பருவத்துக்கு அயற்பருவமாகிய பேரிளம்பெண் ஒருத்தி பெண்தன்மை கண்டு பொருளொடு பொருளுவமம் செய்து மறுத்து

முகமன் கூற அவரை முனிந்து முற்பருவத்து ஆத்திமாலே கொடாத கொடு மையும் ஒரு காலத்து மறந்து உடனே நினைந்து அவன் கொடுமையை வெளியிட்டுக் காமன் வினைக்குப் பரிகாரமில்லாமை கூறி அஞ்சி 'அவன் வினை நீ காவாயாகில் இளம்பிடி போல்வார் எப்படி யாவார்?' எனத் தன் னைப் பிறர்போற் கூறி மைப்படியுங் கண்ணுள் வருந்தினுளென்க.

(கு - ரை) 386. தோகைச் சாயலார் - மயில்போன்ற மென்மையை யுடைய மகளிர். மன்று - ஊர்ப்பொதுவிடம்; "மன்றத்து மடலேறி" (கலி. 58 : 22); "தென்றிக்கே வானுக்குந் தேசிகன்வாழ் தென்சேந்தை, மன்றிற்கே யூர்வன் மடல்" (தத்துவ. அடங்கன் முறை.) பெருகு உடையா - பெருகிய உடையாக. அலர் - பலர் அறியத் தூற்றும் பழி. "அம் பலு மலருங்களவு" இறை. 22. 387. நீரேழும் - கடல்கள் ஏழையும்.

உரை. கைமுதல் - கைமேல் கிடைத்த ஊதியம். கலவி - மெய்யுறு புணர்ச்சி. ஒருதலே வேட்கை - கைக்கிளே. முன்னர்க் கூறிய உலா - விக்கிரம சோழனுலா. அவ்வுலாவில் மதுமயக்கத்தால் கனவு நிகழ்ந்த தாகக் கூறியது; "இவ்வாறு, கண்டு மகிழ்ந்த கனவை நனவாகக், கொண்டு பலர்க்குங் குலாவுதலும்" (விக்கிரம. 320-21.)

(பி - ம்) 386. 'மையலான் மெய்சோர்ந்து மால்கொள்ள' 'போலலராய்' 387. 'பொருகுடையா னீரேழு பாரும் புரக்கும்' 'போற்றும்'

குலோத்துங்க சோழனுலா உரை முற்றிற்று.

(வெண்பா)

1. [1]என்றினி மீள்வ [2]தரிதி னிரணியனே
அன்றிரு கூறு யடர்த்தருளிக் — கன்றுடனே
ஆவின்பின் போன வனக னனபாயன்
மாவின்பின் போன மனம்.

மா - இங்கே யானே. மனம் இனி மீள்வது என்று?

(பி - ம்) 1. 'இன்றின மீள்வ தரிதின்' 2. 'தறியே னிரணியனே'

(கட்டளைக் கலித்துறை)

2\. ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெல்லாம்
நீடுங் குடையிற் றரித்த [1] பிரானென்பர் நித்தநித்தம்
பாடுங் கவிப்பெரு மாளொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேயெமைச் சொல்லுவரே.

கடைமணி - அரண்மனை வாயிலிற்கட்டிய ஆராய்ச்சிமணி; இச் செய்யுள் 'ஒட்டக்கூத்தன் பாதி சோழன் பாதி பாடியது' என்னும் தலைப் பின்கீழ் "என்று நித்தம் நவம்" என்ற பாடபேதத்துடன் தமிழ் நாவலர் சரிதையிற் (128) காணப்படுகின்றது.

(பி - ம்) [1] 'பிரானித்த நித்த நலம்'

*இராச ராச சோழனுலா

1. புயல்வண்ணன் பொற்பதுமப் போதிற் புவனச்
செயல்வண்ணங் காட்டிய சேயோன்—உயிரனைத்தும்
2. காட்டும் பதின்மரினுங் காசிப னேழ்புரவி
பூட்டுந் தனியாழிப் பொற்றேரோன்—ஒட்டி
3. அறவாழி மைந்தன்மே லூர்ந்தோ னவனி
புறவாழி முட்டப் புறந்தோன்—மறையோற்குப்
4. பூவிற் கிழத்தியையும் பூமிக் கிழத்தியையும்
நாவிற் பழுதஞ்சி நல்கினோன்—வாவியிற்

குறிப்புரை

(கு - ரை) 1. புயல் வண்ணன் - திருமால். பொற்பதுமப்போதில் - அழகிய உந்தியாகிய தாமரைப்பூவில்; பொற்றாமரைப் பூவில் என்றலுமாம். புவனச்செயல் வண்ணம் - உலகங்களின் படைப்பின் தன்மையை; கலிங்கத். கடவுள் வாழ்த்து. சேயோன் - சிவந்த நிறமுடைய பிரமதேவன்; கலிங்கத்.; 1.; அத்திருமாலின் சேயாகிய பிரமதேவன் என்றலுமொன்றும்; சேய் - மகன்.

(பி - ம்) *'இராசேந்திர சோழனுலா', இராசராச சோழ தேவருலா'

1-2. உயிரனைத்தும் காட்டும் - உயிர்களின் வகைகள் அவ்வளவையும் படைத்த. பதின்மர் - தசப்பிரஜாபதிகள்; இவர்கள்; மரீசி, அத்ரி, ஆங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், க்ருது, தக்ஷன், வஸிஷ்டர், ப்ருகு, நாரதர் என்போர்; பாகவதம், 3. 5 : 9. தனியாழி - ஒற்றைச் சக்கரமுடைய. தேரோன் : சூரியன்; விக்கிரம. 3; குலோத். உலா. 1.

(பி - ம்) 2. 'காட்டொன் பதின்மரினும்'

2-3. அறவாழி ஒட்டி - தரும சக்கரத்தைச் செலுத்தி. ஊர்ந்தோன் - தேரை ஊர்ந்தவனாகிய மனு நீதிச்சோழன்; விக்கிரம. 4; குலோத். உலா. 2. அவனி - பூமியை. புறவாழிமுட்ட - பெரும்புறக்கடல் முடிய. அவனி புறவாழி முட்டப் புரந்தோன் : திலீபன் என்பர். மறையோற்கு - விசுவாமித்திர முனிவனுக்கு.

4. பூவிற்கிழத்தி - திருமகள். பூமிக்கிழத்தி - பூமிதேவி. நாவிற் பழுது - பொய். நல்கினோன் : அரிச்சந்திரன். வாவி - குளம்.

(பி - ம்) 'பழுதஞ்ச'

5. புக்க துறையிற் பகைப்புலியும் புல்வாயும்
ஒக்க வொருகாலத் தூட்டினோன்—புக்கால்

6. மருனிறை யென்று சரணடைந்த வஞ்சப்
புருநிறை புக்க புகழோன்—அருநீர்த்

7. தரங்கக் கடலேழுந் தன்பெயரே யாகத்
துரங்கப் பசுநாடித் தொட்டோன்—வரங்கொள்

8. சுரநதி தன்பெய ராகச் சுருதி
வரநதி சாபத்தை மாய்த்தோன்—தரணிபர்

---

5. புல்வாய் - மான். ஒக்க - ஒன்றுசேர. ஊட்டினோன் : மாந்தாதா ; விக்கிரம. 5 ; குலோத். உலா. 7, குறிப். புக்கால் - அடைக்கல மடைந்தால்.

(பி - ம்) 'புக்குத்'

6. இறைமருனென்று - சிறிதும் மறக்கமாட்டானென்று ; இறையும் என்னும் இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது ; இறை - அரசன் எனினுமாம். சரணடைந்த - அடைக்கலமடைந்த. வஞ்சப் புரு நிறை - வஞ்சனையையுடைய புருவினது நிறைக்காக ; இயமனும், அக்னி தேவனும், வேடனும் புருவுமாக வந்து இவனைப் பரீக்ஷித்தனராதலின் 'வஞ்சப்புரு' என்றார். புக்க - தராசிலே புகுந்த. புகழோன் : சிபி ; விக்கிரம. 11 ; குலோத். உலா. 17. அருநீர் - வற்றாத நீரையுடைய.

7. தன் பெயரேயாக - 'ஸாகரம்' என்னும் பெயரையுடையனவாக ; "சகரர் தொட்டலாற் சாகர மெனப்பெயர் தழைப்ப, மகர வாரிதி சிறந்தது" (கம்ப. 1. அகலிகைப். 43.) துரங்கப் பசு - குதிரையாகிய யாகப் பசுவை. தொட்டோன் - தோண்டினவன் ; சகரன். வரம்கொள் - மேன்மையைக் கொண்ட.

8. சுரநதி - கங்கை. தன் பெயர் ஆக - பாகீரதி எனத் தன் பெயரால் விளங்க ; "சகரர் தம்பொருட் டருந்தவம் பெரும்பகற் றள்ளிப் பகிர தன்கொணர்ந் திடுதலாற் பகீரதி யாகி" (கம்ப. 1. அகலிகைப். 61.) சுருதிவரன் - கபிலமுனிவர். அதி சாபத்தை - மிகக் கொடிய சாபத்தை. மாய்த்தோன் : பகீரதன் ; குலோத். உலா. 8. தரணிபர் - அரசருடைய.

(பி - ம்) 'வன்பெயரே யாக', 'வரனதி'

9. மல்லன் மரபை ரகுவின் மரபென்று
சொல்ல வுலகளித்த தொல்லையோன்—செல்லலால்

10. வந்திரந்த வானவர்க்குத் தானவர்தம் போர்மாய
இந்திரனை யேருக்கி யேறினோன்—முந்தும்

11. ஒருதேரா லையிரண்டு தேரோட்டி யும்பர்
வருதேரால் வான்பகையை மாய்த்தோன்—பொருது

12. சிலையால் வழிபடு தெண்டிரையைப் பண்டு
மலையால் வழிபட வைத்தோன்—நிலையாமே

---

9. மல்லல் மரபை - வளப்பத்தையுடைய வம்சத்தை. தொல்லையோன் - ரகு; அம்மரபு இவனை முதல் வைத்து எண்ணப்படும் பழமையைக் கருதி; "தொல்லை - பழமை; "தொல்லைக்கண் ணின்றார் தொடர்பு" (குறள், 806.) செல்லலால் - துன்பத்தால்.

(பி - ம்) 'சொல்லலால்', 'சொல்லதனால்', 'சொல்லாமல்'

10. வந்து - பூமிக்கு வந்து. வானவர்க்கு - தேவர்கள் பொருட்டு. தானவர்-அசுரர். எருக்கி - காளையாக்கி. ஏறினோன் : ககுத்தன்; குலோத். உலா. 3: கலிங்கத். 188; "தான்றனக்கு வெலற்கரிய தானவரைத் தலைதுமித்தென், வான்றரக்கிற் றிகொலென்று குறையிரப்ப வரங்கொடுத்தாங், கேன்றெடுத்த சிலையினொ யிகல்புரிந்த விவர்குலத்தோர், தோன்றலைப்பண் டிந்திரன்காண் விடையேறாய்ச் சுமந்தானும்" (கம்ப. I. குலமுறை. 3.) முந்தும் - முற்பட்டுச் செல்லும்.

(பி - ம்) 'போர்மாள'

11. ஐயிரண்டுதேர் - சம்பரனுடைய பத்துத் தேர்களை; கம்ப. மந்திரப்; 19. உம்பர்வரு தேரால் - தேவலோகத்திலிருந்து வந்த தேரால். வான்பகை : சம்பரனை. மாய்த்தோன் : தசரதன்; குலோத். உலா. 9. குறிப்.

(பி - ம்) 'பொருத'

12. சிலையால் - வில்லின் ஆற்றலால். வழிபடுதெண்டிரை - வணங்கிய கடலை. வழிபட - வழியுண்டாகும்படி; இறுதி வெண்பா நோக்குக. வைத்தோன் : இராமன்.

(பி - ம்) 'வழிபடாத்'

13. வாங்குந் திருக்கொற்ற வாளொன்றின் வாய்வாய்ப்பத்
தூங்கும் புரிசை துணித்தகோன்—வீங்கு

14. குடகடற்குச் சார்பு குணகடலே யாக்கும்
வடகடற்குந் தென்கடற்கு மன்னன்—முடுகிக்

15. கரையெறிந்த பொன்னி கடலேழுங் கோப்ப
வரையெறிந்த மன்னர்க்கு மன்னன்—தரையின்

16. பெருமகளைத் தீவேட்ட பின்னருஞ் சேடன்
திருமகளைக் கல்யாணஞ் செய்தோன்—பரநிருபர்

---

13. தூங்கும் புரிசை - ஆகாயத்திற் சஞ்சரிக்கும் மதில்களை. கோன் - தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்; விக்கிரம. 9; குலோத். உலா. 13.

(பி - ம்) 'வாங்கு' 'தூங்கு'

14. குடகடல்-மேல்கடல். குணகடல்-கீழ்கடல். ஆக்கியவன்: ஸம்ஹார்ஷண சக்கரவர்த்தி; விக்கிரம. 9; குலோத். உலா. 14. முடுகி-விரைந்து.

15. பொன்னி - காவிரியாறு. கடலேழும் கோப்ப - ஏழு கடல்களிலும் கலக்கும்படி. வரைஎறிந்த - நடுவேயுள்ள மலைகளை வெட்டிய. மன்னன்: சிஹுகன்; விக்கிரம. 12; குலோத். உலா. 15; "ஒழுகு பெருநதி யுவரி சிறிதென வுமிழவொருபனை வெட்டினன்", "ஒருபனை கிழித்ததனி லுவரிசிறுகப் பெருக வொருநதி வகுத்த தறிவோம்" (குலோத். பிள்ளைத். 48, 53) என்பவற்றிற் குறிப்பிடும் வரலாறு இதுபோலும்.

(பி - ம்) 'கடலெழுந்தோர் காப்ப' 'மன்னன் திரையின்'

16. தரையின் பெருமகளை - பூமிதேவியை. தீவேட்ட பின்னரும் - நெருப்பின் முன்னே மணஞ் செய்துகொண்ட பின்பும். சேடன் திருமகளை - நாககன்னியை. செய்தோன்: இவன் சூரவாதித்த சோழன்; விக்கிரம. 10. குறிப்; குலோத். உலா. 19; கலிங்கத். 195. பரநிருபர் - மற்ற அரசருடைய.

(பி - ம்) 'பொரு நிருபர்'

17. கன்மலை மார்புங் கடவுள் வடமேருப்
பொன்மலை மார்பும் புலிபொறித்தோன்-சொன்மலைய

18. நல்லவன் பொய்கை களவழி நாற்பதுக்கு
வில்லவன் காற்றளையை விட்டகோன்—புல்லார்

---

17. கன்மலை மார்பும் - கற்களையுடைய மலையைப் போன்ற மார்பிலும், சிற்றரசர்களுடைய மார்பில், பேரரசர் தம் கொடி முதலியவற்றைப் பொறித்துப் பணிவைப் புலப்படுத்தல் மரபு: "இடுகொடி யணிந்த மார்பர்" (சீவக. 2145); "மீளிவன் கொடிவிடை வேந்தர் மார்பினும், தோளினுந் தீட்டிய தொண்டை மன்னவா" (சாஸனப்பாடல்); "தாரு முடியு முரசுந் தமக்குரிய, பாரு முடன்பெறுவர் பார்வேந்தர்-வீரப், பெருமான் மகதேசன் பேரெழுதித் தத்தம், திருமார்பி லாளோலை செய்து", "பேரரசர் தேவிமார் பெற்ற மதலையர்தம், மார்பகலங் கண்டு மகிழ்வரே - போர்புரிய, வல்லா னகளங்கன் வாணன் றிருநாமம், எல்லா மெழுதலாமென்று", "மேவலர் மார்பினுந் திண்டோ ளினுஞ்செம்பொன் மேருவினும், சேவெழு தும்பெருமாள்" (பெருந்தொகை, 1158, 1182, 1205;) "சென்னிதிரு மார்பிற்சேல் தீட்டினன்" (புதுக்கோட்டைச் சாஸனப் பாடல்.) கடவுள் வடமேரு - தெய்வத் தன்மையுள்ள வடக்கேயுள்ள மேருவாகிய. மலைமார்பும் - மலையினது நடுவிடத்திலும்; மார்பு - நடுவிடம்; "குன்றின், நெஞ்சு பகவெறிந்த வஞ்சுடர் நெடுவேல்" (குறுந். கடவுள்); "விஞ்சையம் பெருமலை நெஞ்சகம் பிளந்து" (பெருங். 1. 51: 8.) புலி பொறித்தோன் - கரிகாலன்; விக்கிரம. 13. குறிப். சொன்மலைய - சொற்களின் தொகுதியையுடைய; புகழைச் சூட எனினும் ஆம்.

(பி - ம்) 'சொன்மலை'

18. பொய்கை: பொய்கையாரென்னும் புலவர். வில்லவன் - சேரமான் கணைக்காலிரும்பொறை. காற்றளை - கால்விலங்கை. கோன் - செங்கணான்; விக்கிரம. 14; குலோத். உலா, 20. புல்லார் - பகைவர்.

19. தொழும்புடைய வாகத்துத் தொண்ணூறு மாறும்
தழும்புடைய சண்டப்ர சண்டன்—எழும்பகல்

20. ஈழ மெழுநூற்றுக் காதமுஞ் சென்றெறிந்து
வேழந் திறைகொண்டு மீண்டகோன்—சூழி

21. மதகயத்தா லீரொன் பதுசுரமு மட்டித்
துதகையைத் தீத்த வுரவோன்—முதுவானக்

---

19. தொழும்பு உடைய - பகைவராகிய இழிந்த குறுநில மன்னர் சிதறியோட. ஆகத்து - மார்பில். தொண்ணூறும் ஆறும் தழும்புடைய - தொண்ணூற்ருறு தழும்புகளைப்பெற்ற. தழும்புகளே வீரத்திற்குரிய அடையாளமாதலின் அதனை எடுத்துக்கூறினர்; விக்கிரம. 15; குலோத். உலா. 21; "அலகில் வெற்றியு முரிமையு மிவையென அவயவத்தினிலெழுதிய வறிகுறி, அவையெனப்பல வடுநிரை யுடையவர்" (கலிங்கந். 353.) சண்டப்ரசண்டன் - வீரருக்குள்ளே சிறந்த வீரன்; இவன் விசயாலய சோழன்.

(பி - ம்) 'தொழும்புடை யாகத்துத்' 'எழும்புகலி', 'எழுபகலில்'

20. ஈழம் - இலங்கை. எழுநூற்றுக் காதம்: "குறுகுகழல் வீரர் பொருதுபடு மீழ முடையவெழு நூறு மடையமீக் குடமுதிரை நீரின் முதிய கடலூடு புதியகடல் காணு மிரவி" (குலோத். பிள்ளைத். 63.) வேழம் - யானைகளை. ஈழம் யானையில் சிறந்ததென்பது "கொங்க ருடல்கிழிய... ...ஈழத்தானிட்ட விறை" (பெருந். 924) என்னும் பாடலாலும் அறியப் படும். கோன்: இவன் முதலாம் பராந்தகன். இவனை மதுரையும் ஈழமுங் கொண்ட கோப்பர கேசரிவர்மன் எனச் சாஸனங்கள் குறிப்பிடும்; குலோத். உலா: 23. சூழி - முகபடாத்தையுடைய.

21. ஈரொன்பது சுரம் - பதினெட்டுப் பாலை நிலங்கள். மட்டித்து - அழித்து, "மணிகொள் குட்டி மட்டித்து", (கம்ப. 5. பொழிலிறுத்: 24.) உதகை: சேரன் அரணமைந்த நகர்; விக்கிரம. 17. குறிப்; குலோத். உலா. 24. தீத்த - சுட்ட; இஃது எரிபரந் தெடுத்தலென்னும் துறை. உதகையைத் தீத்தமை: குலோத். உலா. 24; கலிங்கத். இராசபாரம் 24; (குலோத். பிள்ளைத். 58.) இவன் முதல் இராஜராஜன்.

(பி - ம்) 'தீர்க்க', 'தீய்த்த' 'முதுவடிவாம்', 'முதுவாவிற்', 'முதுவறற்'

22. கங்கையு நன்மதையுங் கௌதமியுங் காவிரியும்
மங்கையுட னூடு மரபினோன்—பொங்கி

23. அலைவீசு வேலை யனைத்தினும்போய்த் தெம்மீன்
வலைவீசி வாரிய மன்னன்—கொலையானை

24. பப்பத் தொருபசிப்பேய் பற்ற வொருபரணி
கொப்பத் தொருகளிற்றாற் கொண்டகோன்
—ஒப்பொருவர்

25. பாட வரிய பரணி பகடொன்றின்
கூடல சங்கமத்துக் கொண்டகோன்—நாடும்

---

22. மங்கையுடன் - தன் தேவியோடு. மரபினோன் : இராசேந்திர சோழன்; இவனே கங்கை கொண்ட சோழன் என்னும் பெயருடையவன்.

(பி - ம்) 'காவிரியுஞ் சிந்துவும்'

23. வேலை - கடல். தெம்மீன் - பகைவர்களாகிய மீன்களை. வலை வீசி வாரிய - போராகிய வலையை வீசிப்பிடித்த. மன்னன் : இராசேந்திர சோழன். 1. இவனை விஜயராஜேந்திரன் எனக் கொள்வாரும் உளர்.

(பி - ம்) 'அகத்தினும் போய்' 'நிலையானை'

23-4 கொலையானை பப்பத்து - கொலைசெய்யும் யானைகள் பத்துப் பத்தை. பற்ற - தன் உணவுக்காகக் கொள்ள. ஒரு பரணி - ஒப்பற்ற பரணியை. கொப்பம் : விக்கிரம. 20, குறிப்; கலிங்கந். இராசபாரம். 27, இவன் இராசேந்திரன் II. இவன் கொண்ட பரணிநூல் இப்பொழுது கிடைக்கவில்லை. ஒப்பொருவர் - ஒப்பாக வேறொருவர்.

(பி - ம்) 'வெப்பொருவர்'

25. பாடவரிய - பாடுதற்கு முடியாத; பகடொன்றின் - ஒரு யானையால். கூடலசங்கமம் : விக்கிரம. 21-2, குறிப். இவன் வீர ராசேந்திரன். இவனும் கூடல் சங்கமத்துப் போரில் அடைந்த வெற்றிகாரணமாக ஒரு பரணி நூல் கொண்டானெனத் தெரிகிறது; விக்கிரம. 22. அந்நூல் விவரம் ஒன்றும் புலப்படவில்லை.

(பி - ம்) 'பரணி பகட்டணி வீழ்' 'கூடலார் சங்கமத்து';

26. கலகமுஞ் சுங்கமுங் காய்கலியு மாற்றி
உலகை முன்காத்த வுரவோன்—பலவும்

27. தரணி யொருகவிகை தங்கக் கலிங்கப்
பரணி புனைந்த பருதி—முரணில்

28. புரந்தர னேமி பொருவு மகில
துரந்தரன் விக்கிரம சோழன்—பரந்தபனென்

29. றூய பெயர்கொண் டகிலாண் டமும்புரந்து
சேய பெரிய திருக்குலத்து—நாயகன்

26. கலகம்-சோழநாட்டில் ஏற்பட்ட குழப்பம்; கலிங்கத். 258-60. சுங்கம்: விக்கிரம. 26, குறிப்; குலோத். உலா. 26. காய்கலி–மக்களை வருத்துகின்ற வறுமையாகிய துன்பம்; விக்கிரம. 26. உரவோன் - முதற் குலோத்துங்க சோழன்.

(பி - ம்) 'மக்கலியும்' 'உலகமுன்'

26-7. பலதரணியும் என உம்மையை மாறிக் கூட்டுக. கலிங்கப் பரணி: இப்பெயருடைய ஒரு நூல் விக்கிரம சோழன்மீது ஒட்டக் கூத்த ரால் இயற்றப்பெற்றது; "செருத்தந் தரித்துக் கலிங்க ரோடத் தென் றமிழ்த் தெய்வப் பரணிகொண்டு, வருத்தந் தவிர்த்துல காண்ட பிரான் மைந்தற்கு மைந்தனை வாழ்த்தினவே" (தக்க. 776); 'இப்பரணி பாடி னூர் ஒட்டக்கூத்தரான கவிச்சக்கரவர்த்திகள்; இப் பரணி பாட்டுண்டார் விக்கிரமசோழ தேவர்' (ஷை, உரை); குலோத். உலா. 28-9. பருதி: விக்கிரம சோழன். முரண் இல் - மாறுபாடில்லாத.

(பி - ம்) 'தாங்கக் கலிங்கப்' 'பருதி - வரத'

28. புரந்தரன் நேமி பொருவும்-இந்திரனையும் திருமாலையும் ஒத்த; நேமி-திருமால்; "நீரிடைக் கண்டுயி னெடிய நேமியும்", "நேமியோ குலிசியோ நெடுங்க ணிச்சியோ" (கம்ப. 5. பிணிவீட். 17, 70.) துரந் தரன் - பொறுப்பை மேற்கொண்டு நடத்துபவன். பரந்தபன் - பகைவரை வருத்துபவன்.

(பி - ம்) 'பொருத வகில', 'பொருவ வகில' 'துரந்தரன் ராசேந்த்ர' 'பரந்தம னென்', 'பரந்தக னென்'

29. சேய - படைப்புக் காலந்தொட்டுத் தொன்மையாக வந்த. நாயகன் - இரண்டாங் குலோத்துங்கன்; பின்னர்ச் சென்னி என்பர்; 33.

(பி - ம்) 'றூய பெயரன்' 'புரந்த'

30. சிற்றம் பலமுந் திருப்பெரும்பே ரம்பலமும்
மற்றும் பலபல மண்டபமும்—சுற்றிய
31. மாளிகையும் பீடிகையு மாடமுங் கோபுரமும்
சூளிகையு மெத்தெருவுந் தோரணமும்
—ஆளுடையான்
32. கோயிற் றிருக்காமக் கோட்டமு மக்கோயில்
வாயிற் றிருச்சுற்று மாளிகையும்—தூயசெம்
33. பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பெறிந்து
முன்னிற் கடலகழின் மூழ்குவித்த—சென்னித்
34. திருமகன் சீராச ராசன் கதிரோன்
மருமக னாகி மறித்தும்—திருநெடுமால்.

30-33. இக்கண்ணிகளில் இரண்டாம் குலோத்துங்கன் தில்லையில் செய்த திருப்பணிகள் கூறப்படும். சிற்றம்பலம்: தில்லையில் நடராஜப் பெருமான் எழுந்தருளியுள்ள பொன்னோடு வேய்ந்த சிற்சபை. பேரம்பலம்: ஸோமா ஸ்கந்த மூர்த்தி எழுந்தருளியுள்ள சபை.

31. மாளிகை - திருமாளிகைப் பத்தி. பீடிகை - ஸ்ரீபீடம்; மணி. 3. 66; தக்க. 773. சூளிகை - மேலறை. தோரணம் - வாசிகை வடிவாக அமைத்த மகரதோரணம்; சிலப். 5. 152, உரை; தோரணக் கம்பமுமாம். பெருங். 2. 2: 58. ஆளுடையான் - எம்மை அடிமையாகக் கொண்ட ஸ்ரீ நடராசப்பெருமானது.

32. திருக்காமக் கோட்டம் - சிவகாம வல்லி என்னும் அம்பிகை கோயில்; குலோத். உலா. 56. திருச்சுற்று மாளிகை - கோயிற் பிராகாரத்தைச் சுற்றியமைந்த மண்டபம்.

33. புறம்பிற் குறும்பு என்றது திருமாலை; சிற்றம்பலத்திற்குப் புறத்தே உள்ளமைபற்றிப் புறம்பில் என்றார். கடலாகிய அகழிலே; குலோத். உலா. 39; "முன்றிற் கிடந்த தடங்கடல்போய் முன்னைக் கடல் புகப் பின்னைத்தில்லை, மன்றிற் கிடங்கண்ட கொண்டல்" (தக்க. 777.) சென்னி - இரண்டாம் குலோத்துங்க சோழனுடைய. தில்லைத் திருப்பணி: குலோத். உலா. 33-58.

(பி - ம்) 'குறும் பனைத்தும்', 'குறும்பறுத்து' 'குயிற்றிப் புறத்தாற் பொதுநீக்கி' 'முன்னர்க்கட', 'முன்னைப் புவன முழுதாண்ட'

34. கதிரோன் மருமகனாகி - சூரியனுடைய வழித்தோன்றலாகி, மறித்தும் - திரும்பவும்.

(பி - ம்) 'மருமகனாக'

35. ஆதிப் பிறவி யனைத்தினு மும்பர்க்குப்
பாதிப் பகைதடிந்து பாதிக்கு—மேதினியிற்
36. செந்தா மரையா டிருமார்பில் வீற்றிருக்க
வந்தான் மனுவங்க்ச மாமேரு—முந்தி
37. உடுத்த திகிரிப் பதினு லுலகும்
அடுத்த வரராச ராசன்—அடற்றிகிரிக்
38. கண்ணன் கனகளபன் கண்டன் கதிரோனும்
தண்ணென் கவிகைச் சனநாதன்—எண்ணும்

---

35. ஆதிப்பிறவி - பத்து அவதாரங்கள். உம்பர்க்கு - தேவருக்கு. பகை தடிந்து - பகைவர்களை அழித்து. பாதிக்கு - அழிக்கப்படாமல் நின்ற பாதியை அழித்ததற்கு,

(பி - ம்) 'அனைத்தினும்போ யும்பர்க்குப்' 'தடிந்த'

36, செந்தாமரையாள் - திருமகள். மனுவங்க்ச மாமேரு - மனு குலத்தரசர்களுள் பெரிய மேரு போன்றவன்.

37. திகிரி - சக்கர வாளகிரி. அடுத்த - பொருந்திய. வரராச ராசன் - சிறந்த அரசர்க்கரசன் : பாட்டுடைத் தலைவன் பெயர்; "வரராச ராசன் கை வாளென்ன வந்தே", "வாழி வரராச ராசனே" (தக்க. 549, 812.) அடல்திகிரி - பகைவரை அடுதலையுடைய சக்கரத்தை ஏந்திய.

(பி - ம்) 'தடத்திகிரிக் கண்ணன்'

38. கண்ணன் : திருமால். கனகளபன் : "கருமாமுகிற் றிருநிறத்துக் கனகளப ராசராசன்" (இரண்டா மிராசராசன் மெய்க்கீர்த்தி) ; இப்பெயர் இரண்டாங் குலோத்துங்கனுக்கும் உண்டு; குலோத். உலா. 31. கண்டன்: இரண்டாம் இராசராசனுடைய சிறப்புப் பெயர் ; 257, 260, 317, 373; 'கண்டனென்றது சிறப்புப் பெயர்; இதனை இயற்பெயரென்று மயங்கா தொழிக; இராசராசனென்பது இயற்பெயர்' (தக்க. 549, உரை); வீரன் என்னும் பொருள்பற்றி வந்தபெயர்; "தெவ்வர் புரமெரி கண்டா"; (கோயிற்பு. நடராச: 26.) கண்டன் என்ற பெயர் இவ் வேந்தனுக்கு உண்டென்பது, தமிழ் நாவலர் சரிதையாலும் அறியலாம். 'கண்டனலங்காரம்' என்னும் நூல் இவன் பெயரால் இயற்றப்பட்டது போலும். கதிரோனும் தண்ணென் - சூரியனும் குளிர்கின்ற. சனநாதன் : இஃது இரண்டாம் ராஜராஜனுடைய சிறப்புப் பெயர்களுள் ஒன்று; "பண்சிலம்ப வண்டாடும் பைந்தார்ச் சனநாதன்" (கண்டனலங்காரம்.) எண்ணும் - மதிக்கப்படும்.

(பி - ம்) 'கண்ண னகளங்கன்', 'கண்ணன் கலைகள்வன்' 'கதிரோன்மன்' 'சனராசன்'

39. தவன குலதிலகன் றன்பெருந் தேவி
புவன முழுதுடைய பூவை—அவனியில்

40. எண்பெரு மாதிரத்து மேறு முடனுணைப்
பெண்பெருமா ளந்தப் புரப்பெருமாள்—மண்பரவ

41. ஓகை விளக்கு முபய குலரத்னத்
தோகை யுடனே துயிலெழுந்—தாகிய

42. மூர்த்தத் தனந்த முரசார்ப்பக் காவிரித்
தீர்த்தத் தபிடேகஞ் செய்தருளிப்—போர்த்திகிரி

43. மேலைக் குரவர்க்கும் விண்ணவர்க்கும் வேதியர்க்கும்
காலைக் கடவ கடன்கழித்து—மூலப்

---

39. தவனகுலம் - சூரியகுலம். புவன முழுதுடைய பூவை: இவள் பெயர் மெய்க்கீர்த்தியில் அவனி முழுதுடையாளென்று காணப்படுகின்றது.

40. மாதிரத்தும் - திசைகளிலும். உடனுணைப் பெண் பெருமாள் - உடன் ஆணை செலுத்தும் தேவி; பெண் பெருமாள்: 'பெண் பெருமாளுக்குப் பிள்ளையார் அருளிச் செய்வார்' (நக். 184, உரை.); "நஞ்சிலே தோய்ந்த நளினவிழிப் பெண்பெருமாள், நெஞ்சிலே யிட்ட நெருப்பு" (தனிப்பாடல்.)

41. ஓகை - மகிழ்ச்சியை. உபயகுலம் - பிறந்ததும் புகுந்ததுமான இருகுலம். தோகை - மயில் போன்றவள்; இவள் இராசராசனது பட்டத்துத் தேவி. இவள் பெயர் உலகுடை முக்கோக்கிழானடி என்று சாஸனங்கள் கூறும்: S. I. I. vol IV. Page 822: 9 of 893.

42. மூர்த்தத்து - முகூர்த்தத்தில். அனந்த முரசு - பல முரசுகள். காவிரித் தீர்த்தத்து - காவிரி நீரால். போர்த்திகிரி - போரைச் செய்யும் ஆக்ஞா சக்கரத்தையுடைய.

(பி-ம்) 'காவேரித்'. 'காவிரியிற் றீர்த்த மபிடேகஞ்'

43. மேலைக்குரவர்க்கும் - தன் குலத்திலிருந்து பிதுர்க்களான முன்னோருக்கும். விண்ணவர்க்கும் - தேவர்களுக்கும். வேதியர்க்கும் - அந்தணர்க்கும்; முனிவர்களுக்கும் என்றலும் ஆம். காலைக்கடவ கடன் - காலையில் செய்யவேண்டிய கடன்களை. இவை முறையே பிதிரர் கடன், தேவர் கடன், முனிவர் கடன் என்பன.

(பி-ம்) 'மேலைக் குருசிற்கும்'

44\. பெரும்பே ரணிதம் பிதாமகன் காலை
வரும்பே ரணியென்ன வாய்ப்ப—நிரம்பப்

45\. பவளச் சடையோன் பணித்த படியே
தவளத்ரி புண்டரஞ் சாத்திக்—குவளைப்பூங்

46\. கார்க்கோல மாடியிற் காண்பான் மகன்காமன்
போர்க்கோலங் காண்பானே போற்கண்டு
—பார்த்திபர்தம்

47\. தொல்லைத் திருமரபுக் கெல்லாந் தொழுகுலமாம்
தில்லைத் திருநடனஞ் சிந்தித்து—வல்லவர்

44\. மூலப் பெரும் பேரணி - கிரீடம். தம் பிதாமகன் என்றது சூரியனை. பேரணியென்ன - பெரிய அழகைப் போல.

(பி - ம்) 'தன் பிதாமகன்' 'பெரும் பேரணிகள்'

45\. பவளச் சடையோன் - பவளம் போன்ற செந்நிறச் சடையுடைய சிவபெருமான். பணித்தபடி - ஆகமங்களில் விதித்தபடி. தவளத்ரி புண்டரம் - வெள்ளிய திருநீற்றாலாகிய மூன்று கீற்றை.

45-6. குவளைப்பூங் கார்க்கோலம் - குவளைப் பூவைப்போன்ற அழகிய கரிய நிறத்தை; பாட்டுடை நாயகன் நிறம் கருமை யென்பது பெறப்படும்.

(பி - ம்) 'பணித்த பணியே'

46\. ஆடியில் - கண்ணாடியில். மகன் என்றது - சோழனைத் திருமாலாகக் கொண்டு. காமன் போர்க்கோலம் - மன்மதனுடைய போருக்குரிய அலங்காரத்தை. கார்க்கோலத்தை ஆடியிற் கண்டு என இயைக்க.

46-7. பார்த்திபர்தம் தொல்லைத் திருமரபுக்கு - சோழ அரசருடைய பழைய குலத்தில் தோன்றியவர்க் கெல்லாம்; தொல்லை - படைப்புக்காலந் தொட்டுத் தொடர்ந்து வரும்; 29. குறிப். தொழுகுலம் - தெய்வம்; "யாவர்க்குந் தொழுகுலமா மிராமன்" (கம்ப. 2. குகப் : 63.)

47\. தில்லைத் திருநடனம் சிந்தித்து: குலோத். உலா. 38; "எல்லையிலனந்த பல வேதசுர கீதத் திசைத்தபல தாளவழி யிட்டுமெழ விட்டும், தில்லையினடஞ் செய்கம லங்களை வளைக்குஞ் சிந்தையபயா" (குலோத். பிள்ளைத். 87) என்று இரண்டாங் குலோத்துங்கனைப்பற்றிக் கூறியிருப்பதும் இங்கே யறியத் தக்கது.

(பி - ம்) 'திருநடமும்'

48. சூழச் சுருதி யனைத்துந் தொகுத்தெடுப்ப
வேழப் பெருமானை மேல்கொண்டு—வாழி

49. அரச வலம்புரி யார்ப்ப வதன்பின்
முரசொரு மூன்று முழங்கத்—திரையின்

50. சுடர்பொற் கவரி யெழப்பொங்கத் தொங்கற்
கடவுட் கவிகை கவிப்ப—புடவியின்

51. மீட்டுங் குறையவுணர் போர்கருதி விண்ணவர்கோன்
தீட்டுங் கொடிப்புலியாய்ச் சேவிப்ப—வாட்டானைத்

---

48. எடுப்ப - எடுத்து ஓத. வேழப் பெருமான் - பட்டத்து யானையாகிய அயிராபதம்; 283, 300; இது 'குதிரை நம்பிரான்' (சீவக. 2157, ந.) என்பது போன்ற ஒரு வழக்கு. மேல்கொண்டு - ஏறி.

(பி - ம்) 'எடுத்த வேழப் பெருமானை'

49. அரசவலம்புரி - அரசனுக்குரிய ஒற்றை வலம்புரிச்சங்கு; சங்குகளுக்கு அரசாகிய வலம்புரி என்னலுமாம். முரசு மூன்று: விக்கிரம. 28. குறிப். திரையின் - பாற்கடலின் திரையைப்போல; கவரிக் குத்திரை: "திருப்பாற் கடற்றிரையிரண்டு வந்தென வெங்கும் விடாவெனவிரு மருங்குங்கவரி யிரட்டவே" (தக்க. 284); "பாலின் வெண் பரவைத் திரைகருங் கிரிமேற் பரந்தெனச் சாமரை பதைப்ப" (கம்ப: 5. சிந்தனை.ப் 16.)

(பி - ம்) 'வலம்புரி யூத'

50. தொங்கல் - மாலைகளையணிந்த: பொங்கர்த் தொங்கல் என்ற பாடத்துக்குச் சோலையைப்போன்ற மயிற்பீலிக்குடை என்று கொள்க. கடவுட் கவிகை - தெய்வத்தன்மையையுடைய வெண்கொற்றக்குடை. புடவி - பூமி.

(பி - ம்) 'பொங்கர்த் தொங்கற்'

51. குறையவுணர் - முன்புகொல்லப்படாமல் குறையாகவுள்ள அசுரரது. விண்ணவர் கோன் - இந்திரன்; 91.; "புலியெனக் கொடியி லிந்திரனைவைத்தவனும்" (கலிங்கத். இராசபாரம்: 16.) இந்திரனுக்கும் புலிக்கொடிக்கும் உள்ள சம்பந்தம் விளங்கவில்லை;

52. தென்னருஞ் சேரலருஞ் சிங்களருங் கொங்கணத்து
மன்னரு மாளவரு மாகதரும்—பின்னரும்

53. காந்தாரர் காலிங்கர் கௌசல ருள்ளிட்ட
பூந்தார் நரபாலர் முன்போத—வேந்தர்

54. பொருவாத பூபால கோபால னென்னும்
திருநாம நின்று சிறக்க—வருநாளில்

55. தென்மாடக் கூடற் சிறைவிட்ட கார்புகார்ப்
பொன்மாட வீதிப் பொடியடக்கத்—தன்மீது

---

52. சிங்களர் - இலங்கையரசர். கொங்கணத்து மன்னர் - கொண் கானத்திலுள்ள சிற்றரசர். மாகதர் - மகத நாட்டரசர்.

53. காந்தாரர் - காந்தார நாட்டரசர். காலிங்கர் - கலிங்க அரசர். கௌசலர் - கோசல தேசத்தரசர். பூந்தார் - தமக்குரிய அழகிய மாலை. நரபாலர் - அரசர்.

(பி - ம்) 'கோசலரு முள்ளிட்ட'

54. பொருவாத - ஒப்பாகாத. பூபால கோபாலன் : மற்ற அரசர்களாகிய ஆக்களைக்காப்பவன் ; இப்பொருள், "கோலெடுத்துக் கோத்துரத்துங் கோகனகச் செங்கைவடி, வேலெடுத்துங் கோத்துரத்தல் விட்டிலனே - சால்படுத்த, பூபால னானும் போமோ பார்த்தகற்குக், கோபாலனான குணம்" (தனிப்பாடல்) என்னும் பாடலிலும் அமைந்துள்ளது.

(பி - ம்) 'பொருதாத பூபாலர்' 'சிறக்க வருளினால்'

55. கூடற்சிறை விட்ட - மதுரையிலே சிறையிலிருந்து விடுவித்த ; குலோத். உலா. 78 ; சிலப். 11 : 26-9 ; திருவிளை. இந்திரன் முடிமேல் ; 57. கார் - மேகம். புகார்ப்பொன் மாடவீதி - காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள பொன்னாற் செய்த மாடங்களையுடைய வீதிகளினது. தன்மீது - கண்ணபிரானாக அவதரித்த தன்மேல்.

(பி - ம்) 'சிறைமீட்ட' 'பொடியடங்க'

56. கன்மாரி பெய்யும் பிழையாற் கடவுளர்கோன்
பொன்மாரி பெய்யும் புயலேவப்—பின்னரும்

57. காமாரி சேயென்றே காக்கு மெழுவரினும்
பூமாரி கௌமாரி முன்பொழிய—யாமந்தீர்

58. காலை வெயிலொதுங்கக் கார்களாற் கார்களும்போய்
மாலை வெயிலால் மறித்தொதுங்கக்—கோலப்

59. பெருங்குற் றுடைவாளப் பேரொளி மேரு
மருங்கிற் பெரும்புலி மான—நெருங்கிய

---

56. கல்மாரி - கல்போன்ற மழையை. கன்மாரி பெய்தது கண்ணன் கோவர்த்தனகிரி எடுத்துக்காத்த செய்தி. இது பாட்டுடைத் தலைவனைக் கண்ணனாகக் கொண்டு கூறியது. பெய்யும் பிழையால் - பெய்த குற்றத்தால். கடவுளர்கோன் - இந்திரன். பொன் மாரி பெய்யும் புயல் - பொன் மழையைப் பொழியும் புட்கலாவர்த்தம் என்னும் மேகத்தை.

(பி - ம்) 'புயலேய்ப்ப' 'பின்வரும்'

57. காமாரி சேய் - முருகக் கடவுள். எழுவரினும் - ஸப்தமாதர்களிலும். பூமாரி - பூமழையை. கௌமாரி - ஸப்தமாதர்களில் ஒருத்தி.

57-8. யாமந்தீர்காலை - இரவு நீங்கிய காலையில்; யாமம் - இரவு; "யாம மும்பக லும்மறி யாமையால்" (சீவக. 135.)

58. கார்களால் காலை வெயில் ஒதுங்க. மாலை வெயிலால் - மாலைகளிலுள்ள மணியின் ஒளியால். கார்களும் மறித்து ஒதுங்க - மேகங்களும் திரும்பி ஒளி மழுங்கிச் செல்ல.

59. உடைவாளுக்குப் புலி உவமை. மேருமருங்கிற் புலி யென்றது சோழர் மேருவில் தீட்டிய புலிக்கொடியை.

60. கோளி னொழுங்கு மழுங்கக் குலரத்ன
ஒளி மகர வொளியெறிப்பத்—தோளில்

61. இருபொறை தீரு மிருபாப் பரசும்
இருதொடி யாயகொல் லென்ன—வரரத்னம்

62. தாமே குயின்று தடங்கோளு நாளுஞ்சூழ்
மாமேரு வென்ன முடிவயங்கப்—பூமேற்

---

60. கோளின் ஒழுங்கு - ஒன்பது கோள்களின் ஒழுங்கும். மழுங்க - ஒளி கெடும்படி. ஒளி - வரிசை; "உம்பர்க் கேயு மாளிகை யோளி நிழல் பாய" (கம்ப. I. மிதிலைக்காட்சி. 22.) மகரவொளி - மகரவடிவமான காதணியின் ஒளி. நவமணிகளாற் செய்த காதணியின் ஒளியால் ஒன்பது கோள்களும் ஒளி மழுங்கின; "அன்புறு பதும ராக மாதியா மரத னங்கள், ஒன்பதுங் கதிரோ ளுதி யொன்பது கோளு மேற்றி" (திருவிளை. மாணிக்கம் விற்ற. 52.)

(பி - ம்) 'மலர்ந்த குலரத்னத், தோளி'

61. இருபொறை தீரும் - இரண்டு பாரங்கள் நீங்கிய; இருபொறை: உலகத்தைத் தாங்குதல், கடல் கடைய மலையிற் பிணித்தல். இரு பாப்பரசு: ஆதிசேடன், வாசுகி. தொடிக்குப் பாம்பு உவமை; 95. வரரத்னம் - மேலான மணிகள்.

(பி - ம்) 'இருந்தொடி' 'வரகனகம்'

62. குயின்று - அமைக்கப் பெற்று. கோள் - கிரகம். நாள் - நட்சத்திரம். முடி - கிரீடம். கிரீடத்திலுள்ள இரத்தினங்களுக்குக் கோளும் நாளும் உவமை; கம்ப. 3: மாரீசன் வதை. 5. பூமேல் - பூமியில்.

(பி - ம்) 'பூமிப்'

63. புடைநிலவுந் தங்கள் புகழ்நிலவின் மேலே
குடைநிலவுஞ் சக்ரகிரி கோல—உடையதன்

64. கைவைத் தருளாமே தாமே கடன்கழிக்கும்
தெய்வப் படையைந்துஞ் சேவிப்பப் பெய்கணைத்

65. தூணிப் புறத்தோடுந் தோளிற் சிலையோடும்
பூணித் தனங்கவேள் முன்போத—மாணிக்கக்

---

63. புடை நிலவும் - சுற்றிலும் விளங்குகின்ற; என்றது சோழருடைய புகழ் பூமி முழுதும் பரவி அஃது இடங்கொள்ளாமையால் அதனைச் சுற்றிலும் நின்றது என்பது கருத்து; "சுழலுமிசை வேண்டி" (குறள், 777, பரிமேல்.); "மண்டேய்த்த புகழினான்" (சிலப். 1 : 36) என்பதும் 'பூமி சிறுகும்படி வளர்ந்த புகழ்' (அரும்பதவுரை) 'மண்தேய்த்த' என்றார் புகழ்வளரப் பூமி சிறுகலான்; மண் இடத்திற் சிறிது என்றார் வள்ளுவனாரும்' (அடியார்க்கு நல்லார்) என்னும் அதன் உரைகளும் இக்கருத்துப்பற்றியன. புகழாகிய நிலவு. குடை நிலவும் - குடையினுடைய வெண்மையான ஒளியும். சக்ரகிரி கோல - சக்ரவாளகிரியைத் தனக்குள்ளே அகப்படுத்த.

(பி - ம்) 'புகழ்நிலவின் மீதே'

64. படை ஐந்து - சக்கரம் முதலிய ஐந்து ஆயுதங்கள்; குலோத். உலா. 85-6. இக்கண்ணி, "சக்கர முதற் படைகளைந்து முதனாளே தன்னுடைய வானவதனு லவை நமக்குத், திக்கு விசயத்தின் வருமென்றவை பயிற்றிச் செங்கை மலர் நொந்தில சுமந்தில தனக்கே" (கலிங்கத். 247) என்னும் தாழிசையை நினைப்பிக்கின்றது. பெய்கணை - இடப்பட்ட அம்புகளை யுடைய.

(பி - ம்) 'வெய்யகணைத்'

65. தூணிப்புறத்தோடும் - அம்புப்புட்டிலையிட்ட முதுகோடும். சிலையோடும் - கரும்பு வில்லோடும். பூணித்து - தன் கடமையை மேற்கொண்டு; சூளுரைத்து என்றலும் ஆம். அனங்கவேள் - மன்மதன். மன்மதன் மெய்காவலனாகச் சென்றான்; "மல்லிகையே வெண்சங்கா வண்டூதவான்கருப்பு, வில்லி கணைதெரிந்து மெய்காப்ப" (நளவெண்பா, 99).

(பி - ம்) 'தொட்ட சிலையோடும்'

66. கோவையான் முக்குவட்டுக் குன்ருயொருதிருப்
பாவையாற் கொல்லிப் பனிவரையாய்—ஓவாது

67. செய்ய தமிழ்முழங்கத் தெய்வப் பொதியிலாய்
வெய்ய புலிமுழங்க மேருவாய்—வையகஞ்சூழ்

68. கோர முடன்போத நேமிப் பொலன்குன்ருய்
வார்கவரி யாலிமய மால்வரையாய்—வேரி

---

66. முக்குவட்டுக்குன்ருய் - இலங்கையிலுள்ள திரிகூடமென்னும் மலையாகி. திரிகூடம் மாணிக்கத்தை யுடையது; குலோத். உலா. 145, 376-7. திருப்பாவையால் - திருவாகிய பாவையால். கொல்லி மலையில் பூதத்தா லெழுதப்பட்ட பாவையின் வடிவம் உண்டென்பது நூல்வழக்கு; கொல்லிக் குடவரைப், பூதம் புணர்த்த புதிதியல் பாவை", "கொல்லி... ...குடவரை யகத்துக், கால்பொரு திடிப்பினுங் கதழுறை கடுகினும், உரு முடன் றெறியினு மூறுபல தோன்றினும், பெருநிலங் கிளரினுந் திருநல வுருவின், மாயா வியற்கைப் பாவையின்" (நற். 192 : 8-9, 201 : 5-11.)

67. புலி - கொடியாகிய புலி. மேருவில் புலிக்கொடி எழுதப்பட்டது இங்கே அறியற் பாலது; 59.

68. கோரம் : சோழனுடைய குதிரை. நேமிப்பொலன் குன்று - சக்ரவாளகிரி; சக்ரவாளகிரி பொன்னிறமுடையதாதலின் 'பொலன் குன்று' என்ருர்; தக்க. 2, உரை; சோழன் குதிரையேறி உலகு முழுதும் சுற்றி வென்றவன்; புறநா. 31 : 13-15; வி - பா. 17ஆம் போர்: 66. கவரி - சாமரை. இமயமலை கவரிமான்களை மிகுதியாகவுடையது; "கவிர் ததை சிலம்பிற் றுஞ்சும் கவரி, பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவும், ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்" (பதிற் 11 : 21-3); "நரந்த நறும்புன் மேய்ந்த கவரி, குவளைப் பைஞ்சுனை பருகி யயல, தகரத் தண் ணிழற் பிணையொடு வதியும், வடதிசை யதுவே வான்றோ யிமயம்" (புறநா. 132 : 4-7.) வேரி - தேன்.

68-9. வேரி விடும் - தேனைத்துளிக்கின்ற.

(பி - ம்) 'நேமிப் பெருங்குன்ருய்'

69. விடுங்குழையார் சென்னி மிலேச்சிய சென்னி
கொடுங்குழையார் வீதி குறுக—நடுங்காமல்

[குழாங்கள்]

70. விண்ணாடு காத்து முசுகுந்தன் மீண்டநாள்
மண்ணாடு கண்ட மடந்தையரும்—நண்ணார்மேல்

71. சோளன் பரிசார்ந்தே சூழ வருஞ்சக்ர
வாள கிரியர மங்கையரும்—தோளிணையால்

72. கோழியிற் சோழ குலத்தொருவன் முன்கடைந்த
ஆழியிற் கொண்ட வரம்பையரும்—ஊழியின்

---

69. குழை ஆர்-தழையையுடைய ஆத்திப்பூவை. சென்னிமிலேச்சிய சென்னி - தலையில் சூடிய சோழன். கொடுங்குழையார் வீதி - வளைந்த குழையை யணிந்த மகளிரது வீதியை.

(பி - ம்) 'நடுங்கிய'

70. விண்ணாட்டை நடுங்காமல் (69) காத்து. முசுகுந்தன் விண்ணாடு காத்தமை: குலோத். உலா. 43; "கடுவிசை யவுணர் கணங்கொண் டண்டிக் கொடுவரி யூக்கத்துக் கோநகர் காத்த, தொடுகழன் மன்னற்கு" (சிலப். 6: 7-9); "இவர் குலத்தோன் விற்பிடித்த, அறமென்ன வொரு தனியே திரிந்தமரா பதிகாத்தோன்" கம்ப. I. குலமுறை: 6. நண்ணார் மேல் - பகைவர் மேல்.

(பி - ம்) 'மீண்டவர்நாள்'

71. பரி சார்ந்து - குதிரையின் மேலேறி. சூழவரும் - வலமாக வருகின்ற; 68 குறிப்; "வேற்றுப்புலத் திறுத்துக், குணகடல் பின்ன தாகக் குடகடல், வெண்டலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப, வலமுறை வருதலு முண்டென் றலமந்து......துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே" (புறநா. 31: 12-7.) சக்ரவாளகிரியர மங்கையர்: "திகிரிவரையி லரமகளிர்கடை திறமினோ" (தக்க. 37.)

(பி - ம்) 'பரிசான்றே', 'பரிசாந்தேர்' 'சோளன் பொருஞான்றே', 'சோளன் பரிகரஞ் சூழ' 'கிரியிலர'

72. கோழியில் - உறையூரில். தோளிணையால் முன்கடைந்த; சோழன் கடல்கடைந்தது: விக்கிரம. 183. குறிப். ஊழியின் - முறைமையால்; ஊழி: ஊழ் என்பதன் திரிபு; சீவக. 149, 2974, ந.

73. சீத்த வரையிற் றிருக்கொற்ற வில்லொன்றால்
வாய்த்த வரையர மாதரும்—போய்த்தனியே

74. கோதண்டங் கொண்டிரு சேடி யுடன்கொண்ட
வேதண்ட லோக விமலையரும்—காதலால்

75. தந்த பணிபதி தன்மகளைச் சேவித்து
வந்த கடவுண் மடந்தையரும்—பந்தாடும்

76. மேரு வரையிற் புலிபொறித்து மீண்டநாள்
வாரும் வரையர மாதரும்—வீரவேள்

77. வாங்கயிலிற் கூரிய கண்ணு ரொருவளவன்
தூங்கெயிலிற் கைக்கொண்ட தோகையரும்-பாங்கின்

---

73. சீத்தவரை என்றது உதயகிரியை; சீத்தல் - இருளைப் போக்கல். தனியேபோய் என மாற்றுக.

(பி - ம்) 'றிருக்சோல வில்'

74. கோதண்டங் கொண்டு - வில்லைக் கையிற் கொண்டு; இரு சேடி - வடசேடி தென்சேடி; தக்க. 19. வேதண்டலோகம் - வெள்ளி மலையையுடைய வித்தியாதர வுலகம்.

75. பணிபதி - நாகர்களுக்கு அரசன்; சோழனொருவன் நாககன்னிகையை மணந்தமை இக்கண்ணியிற் குறிக்கப்படுகிறது; 16; விக்கிரம. 10; குலோத். உலா. 19. சேவித்து வந்த மடந்தையர்: 'ஆயம் - தோழிமார்; சேவிக்கும் தோழிமாருமாம்' (சிலப். 16; 85, அரும்பத.) பந்தாடும் - பந்தைப் போல ஆடிய; இது, கரிகாலன் செண்டுகொண்டு திரித்ததால் மேரு ஆடியதை இச்சோழன் செயலாகக் கூறியது. வீரவேள் - குமாரக் கடவுள்.

76. புலிபொறித்தவன்: கரிகாலன். வரை - மலை. வேள் - மன்மதனுடைய.

(பி - ம்) 'புலியெழுதி'

77. வாங்கு அயிலில் கூரிய - உமாதேவி அருள வாங்கிக்கொண்ட வேலைப்போல் கூர்மையான கண்ணுராகிய தோகையர். தூங்கு எயிலில் - ஆகாயத்தில் சஞ்சரிக்கும் மதில்களில்; 13, 70. பாங்கின் - நன்மையையுடைய.

78. நிதியோடுங் கூட நிதியோ னளகைப்
பதியோடுங் கொண்டார் பலரும்—முதலாய
79. சாய லரமகளிர் தத்தந் திருமரபில்
கோயி லுரிமைக் குழாநெருங்கி—வாயிலும்
80. மாளிகையுஞ் சாலையு மாலயமு மண்டபமும்
சூளிகையு மெம்மருங்குந் தோரணமும்—சாளரமும்
81. தெற்றியு மாடமு மாடரங்குஞ் செய்குன்றும்
சுற்றிய பாங்கருந் தோன்றுமே—பற்றி

---

78. நிதியோன் - குபேரனது. அளகைப்பதி - அளகாபுரி.

(பி - ம்) 'கூட னிதியோன்'

79. சாயல் அரமகளிர் - அழகுடைய தெய்வமகளிர்; சாயல் - அழகு; பரி. 11 : 54. கோயில் உரிமைக்குழாம் - கோயிற்பணிக்கு உரிமையையுடைய மகளிர் கூட்டம்; கோயில் - அரண்மனை; தோல்வியுற்ற பகைவருடைய மனைவியரைக் கோயிற் பணிக்கு அமைத்தல் வழக்கம்; "கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி, அந்தி மாட்டிய நந்தா விளக்கின், மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ, வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியில்" (பட்டினப். 246-9.); 'பகைவர் மனையோராய்ப் பிடித்து வந்த மகளிர் பலரும் நீருண்ணுந் துறையிலே சென்று முழுகி மெழுகும் மெழுக்கத்தினையும், அவர்கள் அந்திக் காலத்தே கொளுத்தின அவியாத விளக்கினையுமுடைய பூக்களைச் சூட்டின தறியினையுடைய அம்பலம்' (ஷை. உரை.); "கொற்ற மன்ன மங்கையர், ஏத்தல் சான்ற கோயிலும்" (சீவக. 154.)

(பி - ம்) 'குழாமீண்டி'

80. சாலை - பெரிய பொதுமண்டபம்; யானை, குதிரை, பசு முதலியன கட்டுமிடமுமாம். சூளிகை - மாளிகையின் மேலேயுள்ள அறை. தோரணம் - தோரணக் கம்பம்; "இந்திர தனுவிற் றோன்றுந் தோரண மிவர்ந்து நின்றான்", "இந்திர சாப மென்ன நின்றதோ ரணத்தினும்பர்" (கம்ப. 5. சம்புமாலி. 15, அட்சகுமாரன். 21.) சாளரம் - பலகணி.

(பி - ம்) 'மாளிகையுங் கோயிலும்' 'சூளிகையு மெத்தெருவும்'

81. தெற்றி - திண்ணை. பாங்கரும் - பக்கத்திலுள்ள இடங்களும். தோன்றுமே - அவ்விடங்களில் தோன்றுதபடி.

(பி - ம்) 'தெற்றியு மாடரங்குஞ் செய்குன்றுஞ் சேரவே' 'தோன் றுமற்'

82. மயங்கி மறுகிற் பிணங்கி வணங்கி
உயங்கி யொருவர்க் கொருவர்—தயங்கிழையீர்

[குழாங்களின் கூற்று]

83. தற்கோடி யோரிரண்டு கொண்டு சதகோடி
கற்கோடி செற்ற சிலைகாணீர்—முற்கோலி

84. வட்ட மகோததி வேவ வொருவாளி
விட்ட திருக்கொற்ற விற்காணீர்—வெட்டிச்

85. சுழியிட்ட காவிரிக்குச் சோணாடு வாழ
வழிவிட்ட வாள்காண வாரீர்—ஒழிய

86. மதியெறிந்து வல்லேற்று வானெறிந்து தூங்கும்
பதியெறிந்த கொற்றவாள் பாரீர்—உதியர்

---

82. மறுகில் - வீதியிலே. பிணங்கி - மாறுபட்டு. உயங்கி - வாடி. தயங்கிழை - விளங்குகின்ற ஆபரணம்.

(பி - ம்) 'வணங்கிப் பிணங்கி'

83. தற்கோடி ஓரிரண்டு - தன்னுடைய முனைகள் இரண்டை; தன் என்றது வில்லை. சதகோடி - இந்திரனுடைய வச்சிராயுதம். கற்கோடி - கோடியளவான கற்களை; மலைகளை. இந்திரன் தன் வச்சிராயுதத்தால் மலைகளை வெட்டியது; "மால்வரையை வச்சிரத்தா லீர்ந்தானும்" (நள. I. 73.) 56. முற்கோலி - முன்னே வளைத்து.

(பி - ம்) 'கலைகாணீர்' 'முற்கோடி'

84. மகோததி - கடல். வாளிவிட்டது இராமாவதாரத்தில். வெட்டி - மலையை வெட்டி; 310.

85. சோணாடு வாழக் காவிரிக்கு வழிவிட்ட வாள்: 15; விக்கிரம. 12; குலோத் உலா. 15; "மலைகொன்று பொன்னிக்கு வழிகண்ட கண்டன், வரராச ராசன்கை வாளென்ன வந்தே" (தக்க. 549); "சைய மலைச்சிறைதீர் வாட்கண்டன்" (தொல். புறத். 36, ந. மேற்.)

86. மதியெறிந்து - சந்திரனை வீசி; சந்திரனை வென்றவன்; கம்ப. I. குலமுறை. 11. வல்லேற்று வான் - வலிய இடியையுடைய மேகத்தை. தூங்கும்பதி - ஆகாயத்தில் சஞ்சரிக்கும் ஊர்களை. உதியர் - சேரர்.

(பி - ம்) 'வாளெறிந்த மாறன்'

87. இடப்புண்ட பேரிஞ்சி வஞ்சியி லிட்ட
கடப்ப முதுமுரசங் காணீர்—கொடுப்பத்

88. தரைகொண்ட வேற்றரசர் தஞ்சென்னிப் பொன்னிக்
கரைகண்ட போர்முரசங் காணீர்—சரதப்

89. பவித்ர விசயப் படைப்பரசு ராமன்
கவித்த வபிடேகங் காணீர்—தவித் துலகில்

---

87. இடப்புண்ட - பெயர்க்கப்பட்ட. பேரிஞ்சி வஞ்சியில் - பெரிய மதிலையுடைய வஞ்சி யென்னும் தம் ஊரில். கடப்ப முதுமுரசம் - கடம்ப மரத்தால் செய்யப்பட்ட பழைய முரசம்; இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் கடலிற் சென்று தன் பகைவரது காவல் மரமாகிய கடம்ப மரத்தை வெட்டிச் செய்த முரசு இது; பதிற். 11 : 12-4, 12: 3, 17 : 5, 20 : 4; அகநா. 127 : 4, 347 : 4-5; சிலப். 25 : 11. "இஞ்சியின் வல்லுரு மேறு கிடந்த, வஞ்சியின் வாகை புனைந்தவன் வாழியே" (தக்க. 800.) என்பதனாற் சோழன் சேரநாட்டின்மேல் படையெடுத்து வென்றமை யறியப்படும். கொடுப்ப - இவன் கொடுத்தலால்.

(பி - ம்) 'இடிப்புண்ட' 'கடிப்பு முதுமுரசம்'

88. தரைகொண்ட - தம் நாட்டை மீட்டும் பெற்றுக்கொண்ட. தம் சென்னி - தம் தலையால். பொன்னிக்கரை கண்ட - காவிரிக்குக் கரை கட்டிய; விக்கிரம. 13; குலோத். உலா. 18. சோழனுக்குத் தோற்ற அரசர் தம் தலைமீது மண்சுமந்து காவிரிக்குக் கரைகட்டினரென்பது கருத்து.

(பி - ம்) 'சென்னிமேற் பொன்னிக் கரைகொண்ட' 'காணீர் - அரசர்'

88-9. சரதப்பவித்ர விசயப் படை - உண்மையையும் தூய்மையையுமுடைய வெற்றியைத்தரும் மழுவாகிய ஆயுதம்.

89. கவித்த அபிடேகம் - சூட்டிய கிரீடத்தை. தவித்துலகில் : தவித்த உலகில், தொகுத்தல் விகாரம்;. இதனால் அரசருடைய கொடுமையால் உலகம் வருந்தியதென்பது கருத்து.

(பி - ம்) 'கவித்துலகில்', 'கவிற்றுலகில்'

90. மூவெழுகா லெக்கோக் களையு முடித்தவனி
மூவெழுகாற் கொண்ட முடிபாரீர்—தாவி

91. வரப்பு மலைசூழ் வரவா யிரங்கண்
பரப்பு மொருவேங்கை பாரீர்—புரக்கநின்

92. றூடம் பரமடங்க வோங்கி யுயரண்ட
கூடம் பொருவுங் குடைபாரீர்—கூடற்

---

90. மூவெழுகால் - இருபத்தொரு தலைமுறை. எக்கோக்களையும் - எவ்வளவு பெரிய அரசர்களையும். பரசுராமன் தான் வென்ற நாடுகளையும் அந்நாட்டு அரசர் முடிகளையும் காசிபருக்குக் கொடுப்ப, பின்னர் அவை அந்நாட்டை ஆண்ட சேரர் பரம்பரையில் இருந்து பின் சோழர் சேர நாட்டை வென்று அவற்றைக் கைக்கொண்டதால் உள்ள முடிகள். பரசுராமன் இருபத்தொரு தலைமுறை அரசரை வென்றது : "ஒரு மழுவாள் வேந்த னொருமூ வெழுகால், அரசடு வென்றி யளவோ" (தொல். புறத். 20. ந. மேற்.) ; "செருவிற் சினவி யிருபத் தொருகால், அரசு களைகட்ட பரசு ராமன், மேவரு சாந்திமத் தீவரண் கருதி, இருத்திய செம்பொற் றிருத்தகு முடியும்" (பெருங். 782) ; கம்ப. I. பரசுராமப் : 12.

91. வரப்புமலை - எல்லையாகிய சக்கரவாளகிரியை ; 71. தாவிச்சூழ் வர - தாவிச்சுற்றி வருதற்கு. ஆயிரங்கண் பரப்புமொரு வேங்கை என்றது இந்திரனுகிய புலிக்கொடியை ; 51 ; "புலியெனக் கொடியி லிந்திரனை வைத்த வவனும்" (கலிங்கத். 193.) நின்று புரக்க - நிலைபெற்றுக் காக்க : "நின்றளிக்குந் தனிக்குடைக் கீழ்" (கம்ப. I. கையடைப். 8.)

(பி - ம்) 'புரக்கணின்'

92. ஊடு அம்பரம் அடங்க - இடையேயுள்ள ஆகாயம் அடங்கும்படி. அண்டகூடம் - அண்டகோளகை. பொருவும் - ஒத்திருக்கும் ; "மந்தரங் காம்பா மணிவிசும் போலையா, திங்க ளதற்கோர் திலகமா - எங்கணும், முற்றுநீர் வைய முழுது நிழற்றுமே, கொற்றப்போர்க் கிள்ளி குடை" (முத். 35.) கூடல் - புகார்ப் பட்டினம் ; "கூடல், நராதிபன் கூத்த னெதிர் நண்ணியோர் கண்ணிக், கொராயிரம்பொன் னீந்த வுலாவும்" (தமிழ்விடு. 58-9.)

(பி - ம்) 'கூடம் பரவுங் கொடைபாரீர்'

93. பெரும்பெருமா ளெவ்வேந்து முன்போதப் பின்பு
வரும்பெருமாள் வந்தனன் வாரீர்—இருங்கடல்

94. தோன்றருக்க மண்டலமுந் தோற்க வுலகங்கள்
மூன்றுக்குஞ் சூடு முடிபாரீர்—தோன்ற

95. அணைத்தரு காயிர மாயிர மாகப்
பணைத்த பணிவலயம் பாரீர்—அணைக்கண்

96. சிரித்த சுரேசனை வென்றொரு தென்னன்
பரித்த மணியாரம் பாரீர்—தரித்தருள

---

93. பெருமாள் - இராசராச சோழன். சிற்றரசர் முன் போதப் பின் போதல் : 53-4. இருங்கடல் - பெரிய கடலில்.

(பி - ம்) 'பொரும்பெருமாள்' 'அருங்கடல்'

94. அருக்க மண்டலம் - சூரிய மண்டலம். உலகங்கள் மூன்று என்றது தமிழ்நாடு மூன்றையும்; உலகத்தின் கூறுகளையும் உலக மென்றல் மரபு; "சேயோன் மேய மைவரை யுலகமும்" (தொல். அகத். 5.) மும்முடிச் சோழன் என்று ஒரு சோழன் (முதல் இராசராசன்) பெயர் கொண்டமையும், முதற் குலோத்துங்கன் முதலாகப் பின் வந்த சோழ மன்னர்கள் திரிபுவன சக்கரவர்த்திகள் எனப் பெயர் கொண்டமையும் நோக்குக. கிரீடத்துக்குச் சூரியமண்டலம் உவமை. இக்கண்ணி சில பிரதிகளில் இல்லை.

(பி - ம்) 'மூன்றர்க்க'

95. பணைத்த - பெருத்த. பணிவலயம் - பாம்புகளாலாகிய வாகு வலயம் : என்றது சேடன் வாசுகியாகிய இரண்டு பாம்புகளையும்; 61. அணைக்கண் - சிம்மாசனத்தில்.

(பி - ம்) 'இணைக்கண்'

96. சுரேசனை - இந்திரனை. தென்னன் - உக்கிர குமார பாண்டியன். பரித்த - தாங்கிய. பாண்டியன் இந்திரன் ஆரத்தைத் தாங்கியது; "செங்கணா யிரத்தோன் றிறல்விளங் காரம், பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி", "தேவர்கோன் பூணாரந் தென்னர்கோன் மார்பி னவே" (சிலப். 11: 24-5, 17, உள்வரி வாழ்த்து.); இதன் விரிவைத் திருவிளையாடற் புராணம் இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலத்திற் காண்க. பின் சோழன் பாண்டியனை வென்று அம்மணியாரத்தைக் கவர்ந்து வந்தான் போலும்.

(பி - ம்) 'சிரித்த வசுரனை'

97. வேண்டிய நாளின் முனிவுண்டு வெட்டுண்ட
பாண்டியன் கட்டு வடம்பாரீர்—மீண்டும்

98. திருந்து மதனன் றிருத்தாதை செவ்வி
இருந்த படிபாரீ ரென்பார்—பெருந்தேவர்

99. முக்கொடி முப்பத்து மூவர்க்கு முன்னுயர்த்த
எக்கொடியு முன்ன ரெடுத்துளவால்—அக்கொடியால்

100. தொல்லா ரணமனைத்துஞ் சொல்லுஞ் சுரவரசர்
எல்லாருங் காணு மிவனென்பார்—புல்லிய

---

97. முனிவுண்டு - சோழனால் கோபிக்கப்பட்டு. பாண்டியன் : வீர பாண்டியன். இவ்வீர பாண்டியன் முடித்தலையைப் பந்தாக உருட்டினவன் ஆதித்த கரிகாலன். கட்டு வடம் - ஒரு வகைக் காலணி; "கட்டு வடக் கழலினர்" (பரி. 12: 24); "வட்ட வாழியும் கட்டு வட விணையும்" (பெருங். 2. 19: 181.)

(பி - ம்) 'ஈண்டும்'

98. திருந்து மதனன் - சிவபெருமான்பால் தான்செய்த பிழை உணர்ந்து திருந்திய மதனன். மதனன் திருத்தாதை - திருமால்; என்றது சோழனை. செவ்வி - அழகு. மதனன் தாதை யாதலால் அழகைப்பற்றிச் சொல்லவேண்டா என்பது கருத்து; "காமனார் தாதை" (பெரியதிரு. 1. 1: 2.) படி - விதம். பெருந்தேவர் : படைத்தல் முதலிய முத்தொழிற்கும் உரிய மூவர்.

99. முக்கொடி முப்பத்துமூவர் - முப்பத்து மூன்று கோடி தேவர்கள்; கொடி : கோடி என்றசொல் எதுகை நோக்கிக் குறைந்தது.

(பி - ம்) 'முக்கோடி' 'எக்கோடி மன்னர்', 'எக்கோடி தேவர்', 'அக்கோடி'

100. தொல் லாரணம் - பழைய வேதம். சுரவரசர் - தேவர்களுக்கு அரசர். புல்லிய - அற்பமான.

(பி - ம்) 'சுரவசுரர்', 'சுரவல்லர்'

101. நீர்ப்பூ புதற்பூ முடியன்றி நேராதார்
போர்ப்பூ முடிதடிந்து போக்கியபின்—போர்ப்பூவில்

102. மேதகு கொற்றவைக்கு வேந்தர் பிரானுவந்த
தாதகி யொன்றுமே சார்பென்பார்—மீது

103. பரந்த வவுணர் சிறைப்படும தெண்ணி
இரந்தன கொண்டன வென்று—புரந்து

104. தனிச்சே வகம்பூமி தன்னதே யாக
இனிச்சே வடிவிடா ளென்பார்—பனிச்சாரல்

---

101. நேராதார் - பகைவருடைய. முடியைத் தடிந்து போர்ப்பூவைப் போக்கிய பின்; போர்ப்பூ - போர்க்களத்தில் அடையாளமாகச் சூடும் பூ. போர்ப்பூவில் - போர்ப்பூக்களில்,

(பி - ம்) 'நீர்ப்பூ முதற்பூ' 'முடிகடிந்து' 'மேற்பூவின்'

102. கொற்றவைக்கு - துர்க்கைக்கு. வேந்தர் பிரான் - இராசராசன். தாதகி - ஆத்தி மாலை. இவனால் வெல்லப்பட்ட அரசர் வீரமிழந்தமையின் அவர்களது போர்ப்பூக்களை விட்டு, சோழனுடைய ஆத்தி மாலையொன்றையே கொற்றவை தனக்கு இருப்பிடமாகக் கொண்டாள். ஆத்தி சோழன் போர்ப்பூ என்பது; "கலங்க லொலிபுனற் காவிரி நாடன், அலங்க லமராழுவத் தார்" (பு. வெ. 242.)

(பி - ம்) 'வேந்தர் பிரானிவன்', 'வேந்தர் பிரானணிந்த'

103, அவுணர் - அசுரர். இரந்தன கொண்டன என்று - யாசித்துக் கொள்ளப்பட்டன வென்று.

(பி - ம்) 'சிறைப்படு மென்ன', 'சிறைப்படு மென்னை' 'இரந்தன சோறுடை' 'புரந்த'

104. தனிச் சேவகம் - ஒப்பில்லாத வீரச் செயல். தன்னதேயாக - தன்னுடையதே ஆக. சேவடி விடாள் - இனி உலகை அளக்கும்படி சோழனுடைய பாதங்களை விடமாட்டாள்; இதிலடங்கிய வரலாறு திருமால் மகாபலியிடம் பூமியையாசித்து அதனை அளந்த கதை. பனிச்சாரல் மண்டும் மலை - குளிர்ச்சியையுடைய சாரல்கள் மிக்க மந்தரமலை.

(பி - ம்) 'இனிச்சே வகம்விடாள்'

105. மண்டு மலையால் வருந்தா வகைவருந்திப்
பண்டு கலக்கிய பாற்கடலுட்—கொண்டதோர்

106. செங்கோ கனகை திருமார்பி லன்றியே
எங்கோ விருப்பா ளினியென்பார்—நங்காய்

107. திருப்பது மாபதி யித்திரு மார்பில்
இருப்பது காட்டுமி னென்பார்—சிரித்தெதிரே

108. அங்கட் கமலை யமலன் பெருந்தேவி
நங்கட் புலனுயி னன்றென்பார்—நங்கைமீர்

109. கண்ணுகுந் தாமரையுங் கைதொழுதே மெம்மறையும்
பண்ணுகுஞ் செந்தா மரைபணிந்தேம்—வண்ணத்

---

105. வருந்தா வகை - அசுரரால் துன்ப மடையாதபடி. பண்டு கலக்கிய - சோழன் முற்காலத்தில் கடைந்த. மலையால் வருந்திக் கலக்கிய என இயைக்க.

(பி - ம்) 'பாற்கடலிற்'

106. செங்கோகனகை - சிவந்த தாமரைப் பூவிலுள்ள திருமகள். நங்காய் : விளி.

(பி - ம்) 'திருமார் பினிலன்றி' 'மிவளென்பார்'

107. திருப்பதுமாபதி - திருமகள்.

108. அம்கண் கமலை - அழகிய கண்களையுடைய திருமகள். கமலையாகிய பெருந்தேவி. நம் கண் புலனுகில் - நம்முடைய கண்ணுக்குத் தோற்றினுல்.

(பி - ம்) 'மங்கைமீர்', 'மங்கையர்'

109. எம்மறையும் பண்ணுகும் செந்தாமரை : வாய்; என்றது அன்னமாக இருந்து வேதங்களை வெளிப்படுத்தினமை பற்றி; "அன்னமாய் முன்னெருகா லறம்பயந்த வறவனுநீ" (பெருந்தொகை, 14); "அன்னமாகி யருமறைக ளருளிச் செய்த வமலனிடம்", "அன்னமாகியன் றருமறை பயந்தவனே" (பெரிய திருமொழி, 5 : 1 ; 9, 3 : 8.) 'எம்மருங்கும் பண்ணுருஞ் செந்தாமரை' என்ற பாடங்கொண்டு, எப்புறமும் அழகு பொருந்திய சிவந்த தாமரை போன்ற பாதம்' எனப் பொருள் கொள்ளல் ஒன்றும்.

(பி - ம்) 'கண்ணுருங்' 'எம் மருங்கும் பண்ணுரும்' 'எம்முறையும்'

110. தொடித்தா மரையுந் தொழுதன நாபிக்
கடித்தா மரைதொழுவேங் காட்டீர்—பிடித்தென்ன

111. அத்தா மரைதன் னடித்தா மரைக்கன்றி
மைத்தா மரைக்கெளிதோ மற்றென்பார்—உய்த்தால்

112. ஒருபெருந் தாதகி தோய்சுரும்பை யோட்டற்
கிருபெருஞ் சாமரையு மென்பார்—அருவி

113. அருகெய்த வொட்டா வயிரா பதத்தின்
இருகன்ன சாமரையு மென்பார்—தெருவத்துத்

---

110. தொடித்தாமரை : கைகள். நாபிக் கடித்தாமரை - நாபியாகிய வாசனையையுடைய தாமரை; கடித்தாமரை - கடிதடத்தில் உள்ள தாமரை என்றலும் ஆம். பிடித்துக் காட்டீரென்ன.

(பி - ம்) 'பிடித்தன'

111. மைத்தாமரை - மை எழுதப்பட்ட கண்கள்.

(பி - ம்) 'வந்தென்பார்' 'உய்த்தார்'

112. தாதகி - ஆத்தி மாலையில். சுரும்பை ஓட்டற்கு - வண்டுகளை ஓட்டும்பொருட்டு. இருபெருஞ் சாமரை என்றது சோழனுக்குப் பக்கத்தில் வீசப்படும் கவரிகளை; 84-5. அருவி - மத அருவியினது.

(பி - ம்) 'தோய் சுரும்பை யோட்டா விருபெருஞ் சாமரமு மென்பார் பெருகி'

113. அயிராபதம் - சோழன் ஏறிய யானை. இரு கன்ன சாமரை - இரண்டு காதுகளிலும் அணிந்த சாமரைகள். யானையின் காதில் கவரிகளை யணிதல்; "நினையானைச் சென்னி நிறங்குங் குமத்தால், புனையாப்பூ நீரூட்டிப் புனைகவரி சார்த்தா" (பரி. 19 : 85-6.) இரு கன்ன சாமரைகள் அருவி அருகெய்த வொட்டா எனக்கூட்டுக. தெருவத்து - வீதியில்.

(பி - ம்) 'தெருவகத்துத்', 'தெருமந்து'

114. தங்களின் மாறுடி யுள்ளந் தடுமாறித்
திங்க ணுதலார் தெருமரலும்—அங்கவரில்

[பேதை]

115. பேதைக் குழாத்தொரு பேதை சிலபழங்
காதற் குழாத்தோர்தங் கையடையாள்—மீது
116. பிறந்தணிய கிள்ளை பெறுத்தாயர் கொங்கை
மறந்தணிய செவ்வி மடமான்—புறந்தணியத்
117. தோகைதொடாமஞ்ஞை தோற்றத்தாற் சுற்றத்தார்க்
கோகை விளக்கு மொருகரும்பு—பாகைத்

---

114. தங்களின் மாறுடி - தமக்குள் ஒருவர்க்கொருவர் மாறுகப் பேசி. திங்கள்நுதலார் - பிறைபோன்ற நெற்றியையுடைய மகளிர். தெருமரலும் - மனஞ் சுழன்றவுடன்.

(பி - ம்) 'தெருமர - வங்கவரில்', 'தெருவயர - வங்கவரில்'

115. ஒரு பேதை - ஒப்பற்ற பேதை. பழங்காதற் குழாத்தோர் - முதிர்ந்த அன்பையுடைய செவிலித் தாயர். கையடையாள் - அடைக் கலமாக வுள்ளவள்.

(பி - ம்) 'பேதைக் குழாத் தொருத்தி' 'முதுபெருங் காதைக் குழாத்தோர்தம்'

116. பிறந்தணிய - அணிமையிலே பிறந்த; "பிறந்தணிய கிள்ளை" (விக்கிரம. 115.) பெறுத் தாயர் - செவிலித் தாயரது. புறந்தணிய - புறத்தே தாழும்படி. கொங்கை மறந்தணிய - தாய்ப்பால் அருந்துவதை அண்மைக் காலத்தே மறந்த.

(பி - ம்) 'திங்கள் பெறுத்' 'மடமான் பிறந்தணிய' 'மடமான் சிறந்தணிய'

117. தோகை தொடா மஞ்ஞை: விக்கிரம. 114. ஓகை - ஆரவாரத்தை; "பொருதோகை சுரராச புரமேற விடுகாளை புகழ்பாடுவாம்" (தக்க. 5); உவகை யென்பதன் மரூஉ வெனினுமாம். கரும்பு: விக்கிரம. 114; குலோத். உலா. 124. சுவைத்தலால் இன்பம் விளைக்கும் கரும்பு போலன்றிக் கண்டமாத்திரத்தில் தன் அழகால் இனிய சுவையளிக்கும் அழகுடைமை பற்றி ஒரு கரும்பென்றார்; ஒரு கரும்பு - ஒப்பற்ற கரும்பு.

(பி - ம்) 'தோற்றத்தே' 'ஒரு திருப்பாகைத்'

118. தொடைபோய முல்லைத் தொடையலே போல
இடைபோய தூய வெயிற்ருள்— உடையோன்

119. செறிந்து விடாத திருத்தோற்ற முற்றும்
அறிந்து பிறந்த வறிவோ—நெறிந்தகுழல்

120. எம்பாவை யெங்கொல்லிப் பாவை யெனப்பாடும்
அம்பாவை பாடும் படியறிவாள்—உம்பர்

121. வெருவக் கரையை மிகும்பொன்னி யன்றிப்
பருவத்து வேறு படியாள்—உருவக்

117-8. பாகைத்தொடை - இரு பிளவாகத் தொடுத்தல்; "மிக்க கோடு கோடிபல வெற்பனேக பாகைபட" (நக்க. 466.)

118. முல்லைத் தொடையலே போல - முல்லைமாலையைப் போல. இடைபோய - இடைவெளிகள் மிக்க. விழுந்தபல் மறுபடியும் முளையாத பேதைப் பருவமாதலின் 'இடைபோய எயிறு' என்ருர்; "செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின" (குறுந். 337.)

119. திருத்தோற்றம் - அவதாரங்கள். அறிவோ - அறிவினலோ. நெறிந்தகுழல் - வளைந்த கூந்தலையுடைய பேதை.

(பி - ம்) 'பிறந்தோ வறிவோ' 'செறிந்த குழல்'

120. அம்பாவை - அழகிய திருவெம்பாவை போன்ற பாவைப் பாட்டை. உம்பர் - வான் உலகத்தவரும்.

(பி - ம்) 'அறியாள்'

121. வெருவ - அஞ்சும்படி. கரையை மிகும் - வெள்ளம் கரையைக் கடந்து செல்கின்ற. பொன்னியன்றி - காவிரியாற்றி லல்லாமல். வேறு படியாள் - வேறு ஆறுகளில் நீராடாள். நீராடல் மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று; பெண்பாற் பிள்ளைத் தமிழில் இஃது ஓர் அங்கமாக உள்ளதும் நோக்குக.

(பி - ம்) 'பருவத்தும் வேறும்'

122. குறைவனை யென்றெழுதுங் கோலத்து ஞாலத்
திறைவனை யல்லா லெழுதாள்—இறைவன்

123. முழங்கேழ் கடல்கொடுத்த முத்தேழு மல்லால்
கழங்கேழ மாடக் கருதாள்—வழங்கிய

124. முற்றி லெடுத்துக் கொழித்து முழுமுத்தால்
சிற்றி லிழைக்கின்ற செவ்விக்கண்—சுற்றும்

125. பனிநீங்கத் தோன்றும் பகலவன்போல் வையம்
துனிநீங்கத் தோன்றிய தோன்றல்—முனியும்

---

122. உருவக் குறைவனை - உருவமாகிய குறையையுடைய மன்மதனை; அதாவது, உருவம் அழிந்த குறையையுடைய மன்மதனை; உருவமாகிய குறைவுபட்ட காரியத்தை வனைதலெனினுமாம். கோலத்து - சித்திரத்தில். ஞாலத்து இறைவனை - சோழனை. உத்தம அங்க லக்ஷணமமைந்த மன்மதனைச் சித்திரத்து எழுதியது சோழன் உருவாய் அமைந்தது என்க; ஒப்பு. "ஓவியத் துறைகை போய வொருவனை யுருவின் மிக்க, காவலனொருவன் மற்றோர் கன்னிநீ தீட்டுகென்னத், தாவரு மெழிலிற் கோட்டத் தானுமந் நளனு மாக, மேவர வினிது நோக்கி மெய்ம்மயிர் பொடிக்கு மன்றே" (நைடத. அன்னத்தைக். 6.)

(பி - ம்) 'வேறெழுதும்' 'இறைவனை யன்றி', 'இறைவனை யல்லது'

123. இறைவனுக்குரிய எழுகடல்; குலோத். உலா. 150; இறைவன் - சோழன். கழங்கு எழும் - எழுகழங்குகளையும் கொண்டு. கழங்காடல்: மகளிர் விளையாட்டு; கடம்பர் கோயிலுலா, 183-190.

(பி - ம்) 'கழங்கெழுங் கொள்கை' 'முழங்கிய'

124. முற்றில் - சிறு சுளகு; "முற்றிலார முகந்துதம் முன்றிலிற், சிற்றில் கோலிச் சிதறிய முத்தமே" (கம்ப. 1. நாட்டுப்: 29); "முற்றிலைப் பந்தைக் கழங்கைக்கொண் டோடினை" திருவேங்கடத் தந்தாதி, 97.) முழு முத்தால் - பெரிய முத்துக்களால். சிற்றில் - சிறு வீடு; சிற்றிலிழைத்தல் மகளிர் விளையாட்டு.

124-5. சுற்றும் பனி - உலகத்தைச் சுற்றிய பனி.

125. பகலவன் - சூரியன். துனி - துன்பம்.

125-6. முனியும் பொறை - தன்னொடு பகைத்த சேரமான் கணைக்காலிரும் பொறையை,

126. பொறைவிட் டெயில்விட்டுப் பொய்கை கவிக்குச்
சிறைவிட்ட சோளேந்த்ர சிங்கம்—நறைவிட்ட

127. அந்தாமச் செங்கழுநீர் மார்ப னழகிய
செந்தா மரைக்கட் டிருநெடுமால்—வந்தானை

128. ஓகைய ராகி யுலப்பில் பலகோடித்
தோகைய ரோடத் தொடர்ந்தோடித்—தாகம்

129. தணியத் தணியத் தமரும் பிறரும்
பணியப் பணியப் பணிந்தாள்—மணிமார்பில்

130. ஆரந்தான் கண்டா ளயிரா பதந்தொழுதாள்
கோரந் தெரியவுங் கும்பிட்டாள்—வீரன்

---

126. எயில் விட்டு-அவனுக்குரிய மதிலையும் கொடுத்து, எயில் ஆகு பெயராய் நகரைக் குறித்தது. பொய்கை கவிக்கு - பொய்கையார் பாடிய 'களவழி நாற்பது' என்னும் நூலுக்கு. நறை விட்ட - தேனைவிட்ட. சோளேந்த்ர சிங்கம் - சோழ அரசனான சிங்கம்; சோழ அரசர்களுள் சிங்கம் போன்றவன் என்றுங் கொள்ளலாம். இது சோழன் செங்கணான் செய்கையை இவ்விராசராசன் மேலேற்றிக் கூறியது.

127. கழுநீர் மார்பன்: விக்கிரம. 129; குலோத். உலா. 115. திரு நெடுமாலாகிய வந்த சோழனை.

(பி - ம்) 'அந்தாமஞ் செங்கழுநீர்'

128. ஓகையராகி - உவகையை யுடையவராகி. உலப்பில் - அழி வில்லாத. தோகையர் - மகளிர். தாகம் - சோழனைக் காணவேண்டு மென்னும் வேட்கை.

(பி - ம்) 'தோகைய ரோடு', 'தோகைய ரொட்டத்'

129. தமர் - சுற்றத்தார். பணிந்தவள் பேதை. மணி மார்பில் - கௌஸ்துபமென்னும் மணியையுடைய மார்பில்; அழகிய மார்பில் என்ற லும் ஆம்.

(பி - ம்) 'அணி மார்பில்'

130. ஆரம் - ஆத்திமாலையை. அயிராபதம்: பட்டத்து யானை. கோரம்: சோழனுக்குரிய குதிரை.

131. படாகைப் பெரும்புலியும் பார்த்தொழிந்தா ளண்ட
கடாகத் ததிர்முரசுங் கண்டாள்—அடாதனவும்

132. சொல்லி யறியா தொழிந்தாள் சுருப்புநாண்
வில்லி யறியாது விட்டதே—நல்லார்சூழ்

[பெதும்பை]

133 மற்று மொருத்தி வலம்புரி யாயிரம்
சுற்றுஞ் சலஞ்சலம்போற் றோன்றுவாள்—கற்றுடன்

134. அன்ன நடக்க நடந்தா ளருங்கிள்ளை
பின்ன ருடன்பேசப் பேசினாள்—இன்னிசையாழ்

135. பாட வதனுடனே பாடினாள் பைந்தோகை
ஆட வதனுடனே யாடினாள்—கூடிய

---

131. படாகைப் பெரும்புலி - பெருங்கொடியிலுள்ள பெரிய புலியையும்; படாகை; 305; சிலப். 14: 216. அண்டகடாகத்து - அண்ட கோளகை யெங்கும்; கடாகம்-கோளகை; பிங்கல நிகண்டு. அதிர்முரசு - ஒலிக்கின்ற முரசு.

131-2. அடாதனவும் சொல்லி - தன் பருவத்துக்குப் பொருந்தாத வார்த்தைகளையும் சொல்லி.

132. அறியா தொழிந்தாள் - உணர்வற்றாள். சுருப்பு நாண்வில்லி - மன்மதன்.

(பி - ம்) 'சுரும்புறு நாண்', 'சுரும்புரு நாண்'

132-3. நல்லார் - மகளிர். வலம்புரி ஆயிரம் சுற்றும் சலஞ்சலம்: "இப்பியா யிரமே சூழ்ந்த திடம்புரி யென்று கூறும், ஒப்பில்சங் காயிரஞ்சூ ழுறுவலம் புரியென் றோதும், அப்படி யதுவுஞ் சூழ்ந்த சலஞ்சலமாகும்" (சூடாமணி நிகண்டு.) கற்று - தன்னுடைய நடையைக் கற்று.

(பி - ம்) 'கற்றுடனே'.

134. கற்று அன்னம் உடன் நடக்க - இவள் நடையைப் பார்த்து அதனைக் கற்றுக்கொண்டு இவள் பின்னே தொடர்ந்து அன்னம் நடந்து வர; ஒப்பு: "பைந்தொடியாள் பாத நடைகற்பான் வந்தடைந்தேம் யாம்" (நள. I: 37.) கிள்ளை - கிளி. பேச - பேசும்படி.

(பி - ம்) 'அன்ன நடப்ப'

135. பைந்தோகை - பசிய மயில். கூடிய - தன்னைச் சேர்ந்த.

136. நல்லிள மானேக்க நோக்கிஞ ணிரம்பி
முல்லை முகிழ்க்க நகைமுகிழ்த்தாள்—கொல்லும்

137. மழகளிற்றின் கோடெழுச்சி யென்று மரவின்
குழவி யெயிறெழுச்சி யென்றும்—பழகி

138. எறியு முகிலெழுச்சி யென்று முலகம்
அறியு முலையெழுச்சி யன்னம்—செறியும்

139. வரையேழி லுள்ள வயிரமும் வாங்கும்
திரையேழின் முத்தின் றிரளும்—தரையேழிற்

140. பொன்னும் பிலனேழிற் போகா விருள்போக
மின்னுஞ் சூடிகை வெயின்மணியும்—பின்னும்

---

136. மான் நோக்க - மான் தன்னைப் போல மருண்டு பார்க்கும்படி. நாள் நிரம்பி - பருவம் நிறைந்து. முல்லை முகிழ்க்க - முல்லைக்கொடி அரும்பும்படி. நகை முகிழ்த்தாள் - புன்சிரிப்பு உடையவளானாள்.

(பி - ம்) 'நாணிரம்பு'

137. மழகளிற்றின் கோடெழுச்சி - இளைய யானையின் கொம்பினது எழுச்சி; "மதமா, மருப்பேந்திய வெனலாமுலை மழையேந்திய குழலாள்" (கம்ப. 2: கங்கைப்: 6. அரவின் குழவி - பாம்பின் குட்டியினது. எயிறெழுச்சி - பல்லினது தோற்றம்.

(பி - ம்) 'மழகளிற்றுக்' 'அரவக் குழவி.'

138. எறியும் - இடியினால் எறியும். முகில் எழுச்சி - மேகத்தின் புறப்பாடு; முன் தோன்றாமல் பின்பு சிறிது சிறிதாகத் தோன்றுதல் பற்றி உவமை.

(பி - ம்) 'மழையெழுச்சி யென்று'

139. வாங்கும் திரை - சுருளும் அலைகளையுடைய கடல். தரை ஏழு - ஏழு தீவுகள்.

140. பிலன் ஏழு - அதல முதலிய ஏழு பாதாள உலகங்கள். சூடிகை - உச்சிக்கொண்டை.

141. பொழிலேழிற் போதும் புனையப் புனைவாட்
கெழிலேறும் நாளையே யென்னுக்—கழிய

142. உழப்போ மினியென் றுடலுள்ள போழ்தே
எழப்போக வெண்ணு மிடையாள்—மழைத்துப்

143. புடைபோ யளகம் பொதுக்குவதன் முன்னே
கடைபோ யுலகளக்குங் கண்ணாள்—உடையதன்

144. சேரிச் சிறிசோறுஞ் சிற்றிலும்போய்ச் சில்லணி
போய்ப்
பேரிற் பெருஞ்சோற்றுப் பேரணியாள்—ஓரையில்

---

141. பொழில் எழு - எழு தீவிலுள்ள எழு சோலைகள். புனைய - தன்னை அலங்கரித்துக்கொள்ள. எழில் ஏறும் - அழகு மிகும். என்னு - என்று கருதி.

(பி - ம்) 'புனையும் புனைநாட்கு', 'புனையும் புனனாட்டு' 'எழிலே னும்' 'என்னுக் கழல'

141-2. இனி கழிய உழப்போம் - இனிமேல் மிகவும் வருந்துவோம். எழப்போக - தூரத்தே போக. எண்ணும் - நினைக்கும். மழைத்து - மேகத்தின் தன்மையை யுடையதாய்.

(பி - ம்) 'எழப்போக வென்னும்'

143. புடைபோய் - பக்கத்தே பரவி. அளகம் - கூந்தல். பொதுக் குவதன் முன்னே - இளைஞருடைய உயிரைத் துளைப்பதற்கு முன். கடை போய் - கண்ணின் கடைப்பக்கத்திற் சென்று.

(பி - ம்) 'போ மளகம்' 'புதுக்குவதன் முன்னே' 'உடைய தம்'

144. பேரில் - பெரிய வீட்டையும். பெருஞ்சோற்றுப் பேரணி யாள் - பெருஞ் சோறு அடுதலையும் பெரிய ஆபரணங்களை அணிதலையும் உடையவள்; பேரில் - பெரியவீட்டில். பெருஞ்சோற்றுப் பேரணியாள் - பெருஞ்சோறளித்தல் என்னும் விழாவுக்குப் பெரிய அணிகலம் போன்ற வள் என்றுங் கொள்ளலாம். ஓரையில் - விளையாடுமிடத்தில்; ஓரை - மக ளிர் விளையாட்டு; புறநா. 176: 1.

(பி - ம்) 'ஓர்வயின்'

145. தன்னுய நிற்பத் தனிநா யகன்கொடுத்த
மின்னுயஞ் சேவிப்ப வீற்றிருப்பாள்—மென்மலர்

146. மேய சிறுமுல்லைப் பந்தர் விடவெடுக்கும்
பாய பருமுத்தின் பந்தராள்—நாயக

147. உச்சியிற் கொண்டை முடிப்பி னுலகுடையோன்
முச்சியிற் சூட்டு முடிக்குரியாள்—நிச்சமும்

148. நல்லுயிர்ப் பாவை துணைபெற நாயகன்
கொல்லியிற் பாவை கொளவிருப்பாள்—மெல்லியற்

---

145. தனிநாயகன் - சோழன். மின் ஆயம் - மின்னலைப் போன்ற மகளிர்திரள். சேவிப்ப - தன்னை வணங்கும்படி.

(பி - ம்) 'தனிநா யகனளிக்கும்' 'வீற்றிருந்தாள்'

146. முல்லைப் பந்தர்விட - முல்லைக் கொடியின் பந்தலில் விளையாடு வதை விடும்படி. எடுக்கும் - தாங்கும். பாய - பரவிய. முத்தின் பந்த ராள் - முத்துப்பந்தரின் நிழலில் தங்குதலையுடையவள்.

146-7. நாயகவுச்சியில் - சிறந்த தன் தலையில்.

(பி - ம்) 'திருமுல்லைப்' 'விடமெடுத்த', 'விடமெடுக்கும்', 'வட மெடுக்கும்' 'பந்தான' 'நாயகன்', 'நாயகி'

147. கொண்டை முடிப்பின் - தன்னுடைய கூந்தலை முடித்தால்; அதாவது இப்பெதும்பைப் பருவம் நீங்கி மங்கைப் பருவத்தில் கொண்டை முடித்தால். உலகுடையோன் - சோழன். முச்சியிற் சூட்டும் - தன்னு டையை தலையிலே சூட்டுகின்ற. முடி - கிரீடம். நிச்சமும் - நாள்தோறும்.

(பி - ம்) 'உச்சியிற் சூட்டு முடியில்'.

148. நல்லுயிர்ப்பாவை - தான் உயிர்போற் கருதிப் பாதுகாத்து வரும் தன்பாவை. துணைபெற - அதற்குத் துணையாக அடைய. நாயகன் கொல்லியிற்பாவை - சோழனுக்குரிய கொல்லி மலையில் உள்ள பாவையை. மெல்லியல் - மென்மையான தன்மையுடைய. நம்கோமான் - சோழ னுடைய.

(பி - ம்) 'மெல்லியல்'

149. பாங்கிக்கு நங்கோமான் விந்தைப் பசுங்கிளியை
வாங்கித் தரப்போய் வணங்கென்பாள்-ஆங்கொருத்தி

150. மாயமான் வேண்ட மருதானை வான்மதியின்
மேயமான் வேண்டி விடப்பெறுவாள்—சேயவொளி

151. தென்பா லிலங்கைவாழ் தெய்வ மணிபணிப்பீர்
என்பாவை பூண வினிதென்பாள்—அன்பால்

152. உயிர்த்துணைப் பாங்கி யொருநோன் புணர்த்த
எயிற்புறத் தெல்லாருஞ் சூழ—அயிற்படை

---

149. விந்தைப் பசுங்கிளியை - வியப்பைத் தரும் பசுமையான கிளியை; விந்தமலையில் வாழும் துர்க்கையிடமுள்ள பசுங்கிளி யெனினும் ஆம். பாங்கிக்கு என்பாள் என இயைக்க. ஆங்கொருத்தி : சீதை.

(பி - ம்) 'பாங்குத்தன் கோபமான் விந்தைப்' 'பசுங்கிளிக்கு'

150. மாயமான் வேண்ட - மாரீசனாகிய வஞ்சனையையுடைய மானைத் தனக்குப் பிடித்துத் தரும்படி வேண்ட. வான் மதியின் மேய மான் - ஆகாயத்திலுள்ள சந்திரனிடத்தில் பொருந்திய மானை; மதியில் மான் இருப்பதென்பது கவிமதம்; "அஞ்சுமோ மண்ணிற் புலியை மதி மான்" நன்னெறி. 29.) விடப்பெறுவாள் - தலைவியால் தூதுவிடப் பெறுவாள். ஆங்கொருத்தி விடப்பெறுவாள் என்று கூட்டலும்ஆம்.

(பி - ம்) 'வண்மதியின்', 'மாமதியின்' 'விடப்பொருவாள்' 'சேயவன்', 'சேயதோர்'

151. இலங்கை வாழ் - இலங்கையிலுள்ள திரிகூடமலையில் வாழும். சேய ஒளித் தெய்வமணி - சிவந்த ஒளியையும் தெய்வத் தன்மையையு முடைய மணியை; "செம்மணிச் செஞ்சோதி சிங்களத்தை மாற்றினாய்" (குலோத். உலா. 376-7.) என்பாவை இனிது பூணப் பணிப்பீர் - என்னு டைய விளையாட்டுப்பாவை இனிமையாகப் பூணும்படி கட்டளையிடுவீர்;

(பி - ம்) 'தென்பா ரிலங்கை' 'பணிப்பாய்' 'இனியென்பாள்'

152. ஒரு நோன்பு - மன்மதனைக் குறித்துச் செய்யும் விரதம்; 167. எயிற்புறத்து - மதிலின் வெளியே.

152-3. அயிற்படை வீரனை - வேற்படையையுடைய முருகக்கடவுள் போன்ற) சோழனை,

153. வீரனை யெய்த வியன்காவிற் சென்றெய்தி
மாரனை நோக்கி வழிபட—மாரன்

154. படியில் கடவுட் பணைமுழங்க வென்றிக்
கொடியின் மகரங் குமுற—நெடிய

155. அலகி லசோக நிழற்ற வடைய
உலகின் மதுகர மூதக்—கலகித்

156. தலங்க லடவிக் குயிற்குல மார்ப்ப
விலங்கன் மலயக்கால் வீசக்—கலந்தெழும்

157. ஆவி யகிலொடு நீரோ டரமகளிர்
தூவிய தண்ணறுஞ் சுண்ணமும்—காவில்

---

153. எய்த - அடையும் பொருட்டு. வியன்காவில் - பரந்த சோலையில். மாரனை - மன்மதனை. வழிபட - வணங்க. தாம் விரும்பிய கணவரையடையும் பொருட்டு மகளிர் மன்மதனை நோக்கி வழிபடுதல் நாச்சியார் திருமொழியாலும், சீவக. 2057-ஆம் பாடலாலும், பெருங். 3 : 9-ஆம் பகுதியினாலும் அறியப்படும்.

(பி - ம்) 'வியன்தாவிற்' 'மாரனை நோற்று'

154. படியில் - ஒப்பில்லாத ; குலோத். உலா. 72. பணை - முரசு ; என்றது கடலை. மன்மதக் கடவுளின் முரசமாகிய கடல் ; மன்மதனுக்குக் கடல்முரசு ; விக்கிரம. 161 ; சூடாமணி நிகண்டு, 1-26. குமுற - முழங்க.

(பி - ம்) 'படியிற்' 'குமிற'

155. அலகு - அளவு, அசோகம் - அசோக மரங்கள். நிழற்ற - நிழலைச் செய்ய. மதுகரம் அடைய - வண்டுகள் முழுதும். கலகித்து - கலகம் செய்து ; 'உடன்று - கலகித்து' (தக்க. 473. உரை.)

156. அலங்கல் - அசைதலையுடைய. அடவிக்குயிற்குலம் - சோலையிலுள்ள குயிலின் தொகுதி. விலங்கல் மலயக்கால் - பொதிய மலையிலிருந்து வரும் தென்றற்காற்று ; 166 ; விக்கிரம. 296. குறிப்.

குறிப்பு :—கண்ணி 154-6 முடியக் கூறியவை மாரனுக்குரிய துணைப் பொருள்கள்.

(பி - ம்) 'அடைவிற் குயிற்குலம்' 'விலங்கு மலயக்'

157. ஆவி அகிலொடு - அகிற்புகையோடு. நீரோடு - சிவிறியால் வீசிய நீர்த்துளிகளோடு. அரமகளிர் - தெய்வப் பெண்கள். காவில் - சோலையில்.

158. விடவிட வந்துயிர் மீதடுத்துப் போன
வடிவும் பழம்படியே வாய்ப்பக்—கொடியிடை

159. எண்ணிய வெண்ண முடிப்ப வவளெய்தும்
புண்ணியம் போலப் பொழில்புகுந்தான்—அண்ணல்

160. சரம்போலுங் கண்ணி தனக்கனங்கன் றந்த
வரம்போல் வளமறுகில் வந்தான்—வரும்போதில்

161 ஏன்று மதன னியமியம்ப வேயனகன்
மூன்று முரசு முழங்கின—தோன்றாத

---

158. மீதடுத்து-மேலே பொருந்துதலால்; அடுத்து: அடுக்கவெனத் திரிக்க. போனவடிவும் - முன்பு சிவபெருமானால் இழந்த வடிவமும். கொடியிடை: பெதும்பை.

(பி-ம்) 'மீதெடுத்துப்' 'வாய்ப்பத் துடியிடை'

159. எண்ணம் - சோழனை நாயகனாக அடைதல். அவள் எய்தும் - அவளையடையும். புண்ணியம் - நல்வினை. மாரன் (153) குமுற, கிழற்ற, ஊத, வீச, வாய்ப்ப, எண்ணிய எண்ண முடிப்பப் பொழில் புகுந்தான் என முடிக்க. அண்ணல்: சோழன்.

(பி-ம்) 'முடிப்ப வளெய்தும்', 'முடிப்ப னிவனெய்தும்', 'முடிப்ப விவரெய்தும்'

160. சரம் - அம்பு. கண்ணிதனக்கு - கண்களையுடைய பெதும்பைக்கு. அனங்கன் - மன்மதன். வளமறுகு - வளத்தையுடைய வீதியில், அண்ணல் சரம் போலுங் கண்ணி; ஒப்பு: "ஐயன்றன தலகம்பையு மளவா... .....நயனங்களை யுடையாள்" (கம்ப. 2: கங்கைப். 3.) அண்ணல் (159) வரம்போல் வந்தான். வரும்போதில் - வருஞ்சமயத்தில்.

(பி-ம்) 'போல வன்மறுகில்', 'வண்மறுகில்', 'போலிவன் மறுகில்.'

161. மதனன் இயம் - மன்மதனுடைய முரசாகிய கடல்; 153-4. இயம்ப - ஒலிக்க. அனகன் - சோழனுடைய. முரசம் மூன்று; விக்கிரம. 28, 121, 272; குலோத். உலா. 315. தோன்றாத-கண்ணுக்குப் புலப்படாத.

(பி-ம்) 'இயம்பவே வேந்தன்' 'தோன்றாது'

162. வாரிக் களிறு முழங்கவே மானதன்
மூரிக் களிறு முழங்கியது—வேரித்தார்

163. கற்கு மசோக நிழற்றவே பார்கவித்து
நிற்குங் கவிகை நிழற்றியது—முற்கொண்டு

164. மற்றை யலகின் மதுகர மூதவே
ஒற்றை வலம்புரி யூதியது—முற்றாத

165. சொற்குதலைக் கோகுலங்க ளார்க்கவே சோளேசன்
அற்கமணிக் காகளங்க ளார்த்தன—தெற்கெழுந்த

---

162. வாரி - யானைக் கொட்டாரம்; சீவக. 81. களிறு - இராப் பொழுது; இரவு மன்மதன் களிறு; கம்ப. 1. எழுச்சிப்: 81. மானதன் - சோழனுடைய; 166. மூரிக்களிறு - வன்மையையுடைய பட்டத்து யானையிய அயிராபதம்.

162-3. வேரித்தார் கற்கும் - மாலையாகப் பூக்கும் அசோகம் இப் பொழுது விடுபூவாகப் பூக்கும்படி கற்கும்; தார் - பூ; அசோகம் மாலை யாகப் பூத்தல்; "கோதைதாழ் பூம்பிண்டிக் கோமான்", "குழாத்திரண் மொய்ம்மலர்த்தாமந் தாழ்ந்து......விரிந்தது வீரன் பிண்டியே" (சீவக.) 1420, 3012.) கற்கும் என்றது மாலையாகப் பூத்தலே அதற்கு இயல்பு என்ற கருத்து; 'துவலை கற்ப என்றார்; மிகப்பெய்தலே தனக்கு இயல்பு என்பது தோன்ற' (நெடுநல். 20, ந.)

163. கவிகை - சோழனுடைய குடை.

(பி - ம்) 'முற்கொண்ட'

164. அலகில் - கணக்கில்லாத. மதுகரம் - வண்டுகள். ஒற்றை வலம்புரி; விக்கிரம. 65-6; குலோத். உலா. 84. முற்றாத - முதிராத.

(பி - ம்) 'மற்றையுலகில்'

165. குதலைச் சொல்லையுடைய கோகுலங்கள்: கோகுலம் - கோகிலம்; "கோகுலமாய்க் கூவுநரும், ஆகுல மாகுநரும்" (பரி. 9: 65-6.) அற்கமணி (அர்க்கமணி) - சூரியனைப் போன்ற ஒளியுள்ள மணிகளை யுடைய; இக் கண்ணி சில பிரதிகளில் இல்லை; அற்கமணி: எதுகை நோக்கி வலிந்தது.

166. மல்லன் மலயக்கால் வீசவே மானதன்
மெல்லென் கவரிக்கால் வீசியது—மெல்லியலும்

167. காமன் பெருநோன்பு கைவந்த தென்றெதிரே
கோமைந்தன் வேழங் குறுகினாள்—கோமகனும்

168. மல்கு முவகைக் கலுழி வரவரப்
பில்கு மதர்வைப் பெரும்பரப்—பல்குலும்

169. கொங்கைப் புதுவரவுந் தோளுங் குறைநிரம்ப
மங்கைப் பருவத்தை வாங்கினாள்—மங்கை

170. திருக்கொள்ளு மார்பற்குக் காமவேள் செவ்வே
வெருக்கொள்ளுஞ் செவ்வி விளைத்தாள்—பெருக்க

---

166. மல்லல் - வளப்பத்தையுடைய. மலயக்கால்; 156. கவரிக் கால் - கவரியின் காற்று. மெல்லியலும் - பெதும்பையும். 161 முதல் 166 முடிய, மன்மதனது பொருள்களுடன் சோழனது பொருள்களும் உடனிகழ்ச்சியாகக் கூறப்பெற்றன.

167. நோன்பு - நோன்பின் பயன். கைவந்தது-பலித்தது. கோமைந்தன் வேழம் - சோழனுடைய யானையாகிய அயிராபதத்தை. கோமகனும் - சோழனும்.

168. உவகைக்கலுழி - உவகையின் பெருக்கு. பில்கும் - துளிக்கும். மதர்வை - செருக்குதலையுடைய.

(பி - ம்) 'பெரும்பரப்பா மல்குலும்'

169. புதுவரவு என்றது முன்பு இல்லாமை பற்றி. 168-9: விக்கிரம. 175-7; குலோத். உலா. 179-80. மங்கைப் பருவத்தைப் பெதும்பைப் பருவத்திலேயே வாங்கினாள். மங்கை என்றது இங்கே பெதும்பையை.

(பி - ம்) 'கொங்கைப் புதுவனப்பும்'

170. திரு - திருமகள். காமவேள் - மன்மதன். செவ்வே - நேரே; "செவ்வே, பாரிற் செல்கின்ற வறுமையை நோக்கினன்" (கம்ப. 6. முதற் போர். 216.) வெருக்கொள்ளும் செவ்வி - அச்சம் கொள்ளும் அழகை. பெருக்க - மிக.

(பி - ம்) 'பருவத்தை வாங்கின மங்கை'

171. ஒருவ ரொருவர்க் குருகி யுருகி
இருவரு மீடழிய நோக்கி—வருகாமன்

172. செஞ்சாயல் வல்லியையுஞ் செந்தா மரைத்தடங்கண்
மஞ்சாய கோல மணாளனையும்—அஞ்சாதே

173. கொய்யும் பகழி கரும்பிற் சுரும்பிற்கோத்
தெய்யுந் தரமே யெழப்போனான்—தையல்

[மங்கை]

174. ஒருத்தி தரள மிருநிரைகொண் டொப்பித்
திருத்தி யனைய வெயிற்றாள்—கருத்தின்

175. நிலையிற் சிறந்த நிகரிலா மேரு
மலையிற் பிறந்த வயிரம்—அலையிற்

---

171. இருவரும் - சோழனும் பெதும்பையும். ஈடழிய - தம்மன வன்மை அழிய. நோக்கி வருகாமன் - அதனைப்பார்த்து வருகின்ற மன் மதன்.

172. செஞ்சாயல் வல்லி - சிவந்த சாயலையுடைய கொடி போன்ற பெதும்பை. மஞ்சாய கோலம் - மேகத்தைப் போன்ற கரிய நிறத்தை யுடைய. மணாளன் - சோழன்; இதனால் குலோத்துங்கனைப்போல அவன் மைந்தன் இராசராசனும் கருமை நிறத்தினன் என்பது விளங்கும்.

(பி - ம்) 'மஞ்சாய சேலையையும் வள்ளையையும்'

173. கொய்யும் பகழி என்றது பூவாகிய அம்பை. கரும்பில்-கரும்பு வில்லில். சுரும்பிற்கோத்து - வண்டுகளாகிய நாணில் வைத்துக் கோத்து. எய்யுந்தரமே - எய்யுமளவா? எழப்போனான் - தூரத்தே போனான்; 142. தையல் - இளம்பெண்.

(பி - ம்) 'எனப்போனான்', 'தெனப்போனான்'

174. தரளம் - முத்துக்களை. இருநிரை கொண்டு - இரண்டு வரிசைகளாகக் கொண்டு. ஒப்பித்து - அலங்கரித்து. எயிறு - பல்; தரளமிருத்தியனைய வெயிறு; "முத்திருத்தியவ் விருந்தனைய மொய்ந்நகை யொடும்" (கம்ப. 3. விராதன். 2.)

(பி - ம்) 'கொண் டொர்க்க' 'கருத்து'

174-5. கருத்தின் நிலையில் சிறந்த - மதிப்பிலும் நிலையிலும் சிறந்த. அலையில்- கடலில்.

176. பழக்கச் சலஞ்சலம் பாற்கடலே போல
முழக்கக் கருவுயிர்த்த முத்தம்—தொழத்தகும்
177. முன்னை யுலக முழுதுந் தருமுரக
மன்ன னபிடேக மாணிக்கம்—முன்னவன்
178. பாற்கட னீங்குநா ணீங்கிப் பழம்படியே
நாற்கட னாயகனை நண்ணுவாள்—மேற்கவின
179. பண்டு கடல்கடைந்தும் பாரெடுத்தும் வில்லிறுத்தும்
கொண்ட துணைவியருங் கூசுவாள்—புண்டரிகத்
180. தாடும் பொழுதினு மன்னப் பெடையயிர்ப்பப்
பாடு மழலைப் பரிபுரத்தாள்—நீடிய

---

176. பழக்கச் சலஞ்சலம் - பழக்கத்தையுடைய சலஞ்சல மென்னும் சங்கு : 133. கருவுயிர்த்த - பெற்ற. சங்கு கருவுயிர்க்கும்போது முழக்கம் மிகுந்து ஒலிக்கும்; 'சங்கு சூலுளைந் தலறிநெ் தடம்பணை'; (நைடத. நாட்டுப். 5.)

(பி - ம்) 'பாற்கடலூர' 'பாற்கடன்மீ தூர' 'பாற்கடலே தூர' 'திருவுயிர்த்த'

177. உலக முழுதும் தரும் - உலகம் முழுவதையும் விலையாகத் தரக்கூடிய. தொழத்தகும் மாணிக்கம், தரும் மாணிக்கம் என இயைக்க. உரக மன்னன்-பாம்புகளுக் கரசனாகிய ஆதிசேடன். அபிடேக மாணிக்கம்- கிரீடத்திலுள்ள மாணிக்கம். முன் அவன் ; அவன் என்றது சோழனை.

(பி - ம்) 'முன்ன ருலகம்' 'மன்னவன்'

178. நீங்கி - தானும் நீங்கி. பழம்படியே - முன்னிருந்த படியே. நாற்கடல் நாயகனை - சோழனை. கவின - அழகுபெறும்படி.

(பி - ம்) 'நீங்கிய நாள்' 'மேற்கவினால்'

179. கடல்கடைந்து கொண்டது திருமகளை. பாரெடுத்துக்கொண்டது என்பது பூமி தேவியை. வில்லிறுத்துக் கொண்டது சீதையை. துணைவியர் - தேவியர். கூசுவாள் - தன்னைக்கண்டு கூசத்தக்கவள். புண்டரிகத்து - தாமரைப் பூவில்.

180. அயிர்ப்ப - ஆண் அன்னத்தின் குரலென்று ஐயப்படும்படி. பாடும் - ஒலிக்கும். மழலைப் பரிபுரம் - மழலை வார்த்தையைச் சொல்லும் சிலம்பு ; "புள்வாய் மணிமழலைப் பொற்சிலம்பி னிக்கொடியை" (சீவக. 638.)

(பி - ம்) 'பெடையுயிர்ப்ப'

181. தூசுகள் வெள்ளென்று தூயன சேயன
கோசிக மாக்குங் குறங்கினாள்—கூசிப்

182. பணியு மரசுப் பணிச்சுடிகை யேகோத்
தணியு மரைப்பட் டிகையாள்—துணியுங்கால்

183. அற்றுண் டிலதென்று மம்மருங்கு லின்றெமக்குப்
பற்றுண் டெனுமுதர பந்தனத்தாள்—கொற்றவன்

184. சங்க நிதிமுத்தத் தாமத்தாள் பத்மநிதி
துங்க நவரத்னத் தோள்வளையாள்—புங்கம்

185. தொடுக்கு மலரோன் சுறவுக் குறவு
கொடுக்கு மகரக் குழையாள்—அடுத்துப்

12500

---

181. வெள்ளென்று தூயனவாகிய தூசுகள்; தூசு - ஆடை. சேயன கோசிக மாக்கும் - தன் நிறத்தால் சிவந்தனவாகிய பட்டாடையாக்கும்: "பைங்கூற் பாதிரிப் போதுபிரித் தன்ன, அங்கோ சிகமும்" (பெருங். 1. 42 : 204-5.) குறங்கினாள் - தொடைகளையுடையாள்.

(பி - ம்) 'தூயன செய்யன்' 'மூசிப்'

182. அரசுப்பணி - பாம்புகளுக்கு அரசனுடைய. சுடிகை - உச்சியிலுள்ள மாணிக்கங்களை. அரைப் பட்டிகை - இடையிலணியும் ஓர் ஆபரணம்; அரைக்கச்சையும் ஆம்.

183. அற்றுண்டு - அவ்வளவு உண்டோ. இலதென்னும் - இல்லையோவென்று ஐயப்படும். மருங்குல் - இடை. பற்று - ஆதாரம். எனும் - என்று கருதுதற்குக் காரணமான. உதர பந்தனம் - வயிற்றின் மேற்கட்டப்படும் பட்டிகை போன்ற ஓர் அணி; குலோத். உலா. : 67, 323.

184. சங்க நிதியில் தோன்றிய முத்துக்களால் செய்த மாலையை அணிந்தவள். துங்கம் - மேன்மை. சங்கநிதி பத்மநிதிகள்; குலோத். உலா. : 290-291. புங்கம் - அம்பாக.

(பி ம்) 'பற்பநிதித்'

185. மலரோன் - மலர்களையுடைய மன்மதன். சுறவுக்கு - கொடியிலுள்ள சுறா மீனுக்கு. மகரக்குழை - மகரகுண்டலம்.

(பி - ம்) 'அடுக்கப்'

186. பணிதந் தலகில் பராவெடுத்துச் சிந்தா
மணிதந்த சூளா மணியாள்—அணியே

187. பரவி விறலியரும் பாணருந் தற்சூழ்ந்
திரவி புகார்பாடு மெல்லை—வரவரக்

188. கொங்கைக்குந் தோளிணைக்கு மாற்றாக் கொடிமருங்
நங்கைக்கு வந்தொருத்தி நாயகியே—கங்கைத் [குல்

189. துறைவன் பொறையன் றமிழ்நாடன் சோணாட்
டிறைவன் றிருப்பவனி யென்றாள்—பிறைநுதலும்

190. வேனிற் கணிய குயில்போன் றும் வீழ்தாரை
வானிற் கணிய மயில்போன் றும்—தானே

---

186. பணிதந்து - ஆபரணங்களைக் கொடுத்து. அலகில் - கணக்கில்லாத. பராவு - புகழ்தல். சூளாமணி - முடிமணி; இது சிந்தாமணி, சூளாமணி என்னும் இரு நூல்களை நினைப்பூட்டுகின்றது.

(பி - ம்) 'பணிதந் தலகிலம் பார்மடுத்துச்' 'அலகிறந்த பாரெடுத்துச்' 'மணியான், அணிவ'

187. இரவி - சோழனுடைய. புகார் - தலைநகரமாகிய காவிரிப் பூம்பட்டினத்தை.

188. ஆற்றா - பொருத. மருங்குலையுடைய நங்கைக்கு.

(பி - ம்) 'அங்கைக்குந் தோளிணைக்கும்'

188–9. கங்கைத் துறைவன் என்றது கங்கைக்கரையிலுள்ள நாட்டை ஆண்டமைபற்றி; "மந்தா கினிக்கோன்" (குலோத். உலா. 171.) நங்கைக்கு : உருபு மயக்கம்.

189. பொறையன் - சேரன். தமிழ் நாடன் - பாண்டியன்; சேர நாடும் பாண்டியநாடும் சோழன் வென்றமைபற்றி அவனைப் பொறையன், தமிழ்நாடன் என்றார். ஒருத்தி என்றாள் எனமுடிக்க. பிறைநுதல் : மங்கை.

190. அணிய - அண்மையிலுள்ள. வீழ்தாரை வானிற்கு - கீழே விழும் தாரைகளையுடைய மேகத்திற்கு.

(பி - ம்) 'தானும்'

191. வரவே நினையு மனக்களியா லிற்றை
இரவே நமக்கிடையூ றென்றாள்—இரவில்

192. செயிர்க்கரங்கள் வேண்டா டிருக்குலத்து
வெய்யோன்
வெயிற்கரங்க ளூடாட வேண்டும்-உயிர்க்கொலைசூழ்

193. தென்மலயத் தென்றலை யோட்டிப் புலியிருந்த
பொன்மலைய வாடாய் புகுதென்னும்—முன்மலைந்த

194. கார்க்கடல் வாயடங்க நாயகன் கண்வளர்ந்த
பாற்கடல் வாராய் பரந்தென்னும்—மேற்பரந்து

---

191. இற்றை இரவு இடையூறென்றது மறுநாள் சோழன் பவனி வருதல் பற்றி.

(பி-ம்) 'எனக்கிடையூ'

192. செயிர்க்கரங்கள்-குற்றத்தைச் செய்யும் சந்திரன் கிரணங்கள். வெய்யோன்-சூரியனுடைய. ஊடாடல்-கலந்து பழகுதல்; கம்ப. 3. மாரீசன் வதைப்: 79.

193. கொலைசூழ் தென்றல் என இயைக்க. புலியிருந்த பொன்மலைய-சோழனது புலியுரு பொறித்திருந்த மேருமலையிலுள்ள. வாடாய்: விளி. சோழன் புலிக்கொடியிருந்த மேருமலையினின்றும் வருதலின் வாடை தென்றலைக் காட்டிலும் இனியதாயிற்று; தென்றலைப் புலியாகக் கூறுவது கவிமதமாதலின், அப்புலியை ஓட்டி, தான் விரும்பும் தலைவனை சோழன் கொடியாகிய புலி பொறிக்கப் பெற்றிருக்கும் மேருமலையிற் பிறந்து வரும் வாடையே நீ புகுதுவாய் என்றாள். தென்றலைப் புலி என்பது; "தென்றற் புலியே இரைதேடுதியோ". (கம்ப. I. கடிமணப்: 7.) மலைந்த-போர் செய்த.

(பி-ம்) 'புகாயென்னும்'

194. கார்க்கடல்-கரிய நிறத்தையுடைய கடல். வாயடங்க-அதன் ஓசையடங்க; கடலொலி பிரிந்தோர்தம் துயரத்தை அதிகரிக்கச் செய்யும் ஆதலின்; கம்ப 3. சூர்ப்பணகைப்: 75; நள. I.: 108. கண்வளர்ந்த-பள்ளிகொண்ட. பரந்து வாராய் என்னும். மேற்பரந்து-மேலே பாவி.

195. கார்பாடும் புள்வாய்க் கடுப்பெய் தமுதிறைவன்
பேர்பாடும் புள்வாயிற் பெய்கென்னும்—ஈர்குரல்

196. அன்றிற் கொழிய மகன்றிற்கே யாக்குமிம்
முன்றிற் பனையு மெனமொழியும்—இன்றிரவை

197. ஊழிக் குயில்காய்ந் தொருபுலரி கூவிய
கோழிக்கே சோலை கொடூரென்னும்—வாழிய

---

195. கார்பாடும் - மேகத்தைப்பாடுகின்ற; "தற்பாடிய தளியுணவிற்புள்", (பட்டினப். 2.) புள்வாய் - வானம்பாடியின்வாயில். கடுப்பெய்து - நஞ்சைச் சொரிந்து; கார்வரவு தனக்கு வருத்தந்தருமாதலின். இறைவன் பேர்பாடும் புள்: கிளி, பூவை முதலியன. அமுதைப் பெய்க என்னும். ஈர்குரல் - பிரிந்தவரைப் பிளப்பது போன்ற குரலையுடைய.

*(பி - ம்) 'கடுப்பெய் தமிழ்க்கிறைவன்'

196. மகன்றிற்கே - நீரில்வாழும் மகன்றிலென்னும் பறவைக்கு. மகன்றில்: "பூவிடைப் படினு மியாண்டுகழிந் தன்ன, நீருறை மகன்றிற் புணர்ச்சி போல" (குறுந். 57: 1-2), "குறுங்கான் மகன்றி லன்ன, உடன்புணர் கொள்கைக் காத லோரே" (ஐங். 381: 4-5); "அலர் ஞெமன் மகன்றி னன்னர்ப் புணர்ச்சி" (பரி. 8: 44) என்பவற்றால் இப்பறவையின் இயல்பு விளங்கும். முன்றிற்பனை - வீட்டின் முன்னிடத்தேயுள்ள பனை; சேரனுடைய காவன் மரமாகிய பனையை வெட்டிச்சோழன் தன் முன்றிலில் வைத்துள்ளானாதலின். அந்தப் பனையைக் குறிப்பிட்டது ஆகும். சோழன் சேரன் பனை தடிந்தது குலோத். உலா. 373. அன்றில் பனைமேல் வாழ்வது; "பனைமே லுறைவாய் பழிபூ ணுதியோ" (கம்ப. I. கடிமணப்: 5.)

(பி - ம்) 'இன்றிர வூழிக்'

197. ஊழிக்குயில் - யுகம்போல ஆக்கும் குயிலை. புலரி - விடியற் காலத்தை. கோழிக்கே: ஏகாரம் பிரிநிலை. இக்கண்ணி, "ஊழி பல வோ ரிரவாயிற் றோவென்னும்" (நள. I.: 108) என்ற வெண்பாவை நினைப்பூட்டுகின்றது.

(பி - ம்) 'வாழியெம்'

---

* 'கடுப்பெய் தமிழ்திறைவன்' என்று இருக்கலாம் என ஐயரவர்கள் குறிப்பிற் காணப்படுகிறது.

198. பள்ளி யெழுச்சி பவனி யெழுச்சிதரும்
வெள்ளி யெழுச்சி யெனவிளம்பும்—நள்ளிருட்

199. கங்குற் கடற்கெல்லை யிவ்வாறு கண்டுவந்த
மங்கைப் பருவத்து வாணுதலும்—பொங்கொலிநீர்

200. வையகங் காவலற்குப் பெய்யு மலர்மழைக்குக்
கொய்பொழில் சென்று குறுகினாள்—செய்ய

201. கொடுங்குழை மின்னக் குயில்கொழுதக் கோத
விடுங்குழை தேமாவின் மின்ன—நெடுங்குழை

202. வல்லிக் கொடியு முறுவலிப்ப வந்தெதிர்
முல்லைக் கொடியு முறுவலிப்ப—மெல்லியற்

---

198. வெள்ளி யெழுச்சி - சுக்கிரோதயம். விளம்பும் - சொல்லுவாள். நள்ளிருள் - செறிந்த இருளையுடைய.

199. கங்குற்கடற்கு - இரவாகிய கடலுக்கு; கங்குலைக் கடலாகக் கூறுதல்: "கங்குல் வெள்ளங் கடலினும் பெரிதே" (குறுந். 377 : 5.)

(பி - ம்) 'கடியெல்லை'

200. காவலற்கு-அரசனான சோழனுக்கு. பெய்யும் மலர் மழைக்கு-மலர் மழை பெய்வதற்கு. கொய்பொழில் - கொய்யப்படும் மலர்களையுடைய சோலையில்.

201. கொடுங்குழை - வளைந்த காதணி. கொழுத - குடைய. விக்கிரம. 265. குயில் கொழுதல்: "மாநனை கொழுதி மகிழ்குயி லாலும்" (நற். 9 : 10); கோத: கொழுத என்பதன் மரூஉ. விடுங்குழை - தோற்றுகின்ற தளிர். நெடுங்குழை - நீண்ட காதணியை அணிந்த.

(பி - ம்) 'குயில் கோதிக் கோதி' 'கோதப் போத'

202. வல்லிக்கொடி: மங்கை. முறுவலிப்ப - சிரிப்ப. முறுவலிப்ப-பற்கள் போன்ற அரும்புகளைத் தோற்றுவிக்க; "எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த, முற்றிழையாள் வாட முறுவலிக்கும்" (தண்டி. 48, மேற்.)

(பி - ம்) 'மெல்லிய'

203. பாந்தளுந் தோற்கும் பகட்டல்குல் கைம்மலரக்
காந்தளு நின்றெதிர் கைம்மலரப்—போந்தார்

204. பரவு மரப்பாவை கொள்ளப் பயந்த
குரவு மரப்பாவை கொள்ளப்—புரிகுழற்

205. சோலையின் மான்மதஞ் சூழ்வர வேழிலைப்
பாலையின் பான்மதம் பாரிப்பச்—சோலையின்

206. வாங்கும் புதுமது வாணுதல் கொப்புளிப்பக்
கோங்கு மதுவெதிர் கொப்புளிப்ப—ஆங்குத்

---

203. பகடு - பெருமை. கைம்மலர - இடம் வளர; கைம்மலர - கையைப்போல் மலர; காந்தளுக்குக்கை: "கைவி ரிந்தன காந்தளும்" (சூளா. நாட்டுச். 11); "காந்த ளிரவலர்போற் கையேற்ப" (திருவேங்கட மாலை: 45.) போந்தார் - தன்னுடன் வந்த ஆயத்தார்.

(பி - ம்) 'போந்தாள்'

204. மரப்பாவை - மரத்தாற் செய்யப்பட்ட பாவையை. பயந்த - பெற்ற. குராவினது பூவைப் பாவையென்றல் மரபு; "நாறு பூங் குரவம் பயந்த, செய்யாப் பாவை கொய்யும் பொழுதே" (ஐங். 344.)

(பி - ம்) 'மலர்ப்பாவை' 'பயந்து'

204-5. புரிகுழற் சோலையின் - முறுக்குண்ட கூந்தலாகிய சோலையில்; கூந்தலுக்குச் சோலையை உவமையாகக் கூறுதல்: விக்கிரம. 239; "தண்டலையுங் கார்மணலும்......தன்குழலையொப்பாம்" (உவமான சங்கிரகம், 1.)

205. மான்மதம் - கஸ்தூரி. ஏழிலைப் பாலை - ஒவ்வொரு காம்பிலும் எவ்வேழு இலைகளையுடைய மரம். பான்மதம் - பாலாகியமதம். பாரிப்ப - பரவச் செய்ய; ஏழிலைப்பாலையின் பால் யானைமத நாற்றமுடையது; காளிதாஸர். ரகுவம். 5 : 48; "பாத்த யானையிற் பதங்களிற் படுமத நாற, காத்த வங்குச நிமிர்ந்திடக் கால்பிடித் தோடிப், பூத்த வேழிலைம் பாலையைப் பொடிப்பொடி யாகக், காத்தி ரங்களாற் றலத் தொடுந் தேய்த்ததோர் களிறு" (கம்ப. I. வரைக்காட்சி: 6).

(பி - ம்) 'மான்மதம் பாரிப்பச்'

206. புதுமது - புதிய தேனை. வாணுதல்: மங்கை. கோங்கு - கோங்க மரம்.

207. திருவஞ்சு கோலத்தாள் செவ்வியா லெல்லாம்
பருவஞ்செய் சோலை பயப்பப்—பெருவஞ்சி
208. கொய்தன கொய்தன யாவும் பலகூறு
செய்தனர் செய்தனர் பின்செல்லக்—கொய்யாத
209. பொன்மல ராயம் பொழியப் பொழிற்கொண்ட
மென்மலர் கொண்டு வெளிப்பட்டாள்—மன்னனும்
210. எப்போதிற் போது மொருபோதி லேந்திழை
கைப்போதிற் பெய்தன கண்டருளா—அப்போதே
211. செங்கை தடவந்துஞ் சீறடி தீண்டியும்
கொங்கை சுணங்கெறிந்து பொப்புளித்தும்—மங்கை

---

207. திருஅஞ்சு கோலத்தாள் - திருமகளும் எதிர்வர அஞ்சத்தக்க அழகையுடைய மங்கையினது. செவ்வியால் - அழகால். எல்லாம் - எல்லாவற்றையும். பருவம் - வேனிற் பருவம். பெருவஞ்சி - பெருமையை யுடைய வஞ்சிக் கொடிபோல்வாள்.

(பி - ம்) 'செல்லவே யெல்லாம்', 'செவ்வியை யெல்லாம்'

208. அடுக்குகள் மிகுதிபற்றி வந்தன. பொன்மலராதலின் கொய்யாத என்ற அடை கொடுத்தார்.

(பி - ம்) 'பின்செல்லப் பொய்யாத'

209. பொன்மலரை ஆயம்பொழிய. பொழிற்கொண்ட - சோலையிற் பறித்துக் கொண்ட.

210. எப்போதில் போதும் - எல்லாப் பருவங்களிலும் உண்டாகும் பூக்களையும். ஒருபோதில் - ஒரே சமயத்தில். ஏந்திழை - மங்கை. கைப்போதில் பெய்தன - கையாகிய மலர்களால் சொரிந்தவற்றை. கண்டருளா - கண்டருளி.

(பி - ம்) 'பெய்வன'

211. தடவந்தும் - தடவியும். கொங்கை சுணங்கெறிந்து கொப்புளித்தும் என்றது, மங்கையால் மரங்கள் தழுவப்படுதலை; "இரு நுசுப்பினர் நலாரேந்து வள்ளத்தேந்திய, நறவங் கொப்புளித்தலி னருகு புன்னை பூத்தன"; (சீவக. 74); "நித்தில முலையி னார்த நெடுங்கணு ணோக்கப் பெற்றுங், கைத்தலந் தீண்டப் பெற்றுங் கனிந்தன மலர்ந்த" (சீவக. 1907:) "ஏடவிழ் மகிழசு வைக்க வெழிற்பாலை நண்பு கூடப், பாடல நிந்திக் கத்தேம் படிமுல்லை நகைக்கப் புன்னை, ஆடநீள் குராவணைக்க வசோகுதைத் திடவா சந்தி, பாடமாப் பார்க்க வார்சண் பகநிழல் படத்த ளிர்க்கும்" (சூடாமணி நிகண்டு.)

212. பரிசி லுருவம் பயந்தன வென்று
குரிசி லெதிர்கவர்ந்து கொண்டான்—தெரிவரிய

213. தூசுந் துகிலுந் தொடியுங் கடிதடஞ்சூழ்
காசும் பலகாற் கவர்ந்ததற்குக்—கூசி

214. இலகுஞ் சுடர்முடியு மியானையு மீரேழ்
உலகுங் கொடுப்பானே யொப்பப்—பலகாற்

215. கொடாத திருநோக்க முற்றுங் கொடுத்து
விடாது களிறகல விட்டான்—அடாதான்பால்

[மடந்தை]

216. ஈரடியான்மூவுலகுங் கொண்டானை யெப்பிறப்பும்
ஓரடியு நீங்காதா ளோரணங்கு—சீருடைய

---

212. பரிசில் மங்கை உருவம் பயந்தன - இவளுடைய செயலுக்குப் பரிசிலாக மங்கையின் வடிவத்தைப் பெற்றன. குரிசில் : சோழன். தெரிவரிய - இழைகள் தெரிவதற்கு முடியாத.

(பி - ம்) 'குரிசில் கவர்ந்தணிந்து' 'பொருவரிய'

213. தூசு - பட்டாடை. துகில் - பருத்தியாடை. காசு - மேகலையிலுள்ளவை. கவர்ந்ததற்குக் கூசி - தான் மங்கையிடமிருந்து கவர்ந்து கொண்டதற்கு நாணி; கவர்ந்தது என்றது மங்கை, தான்கொண்ட காதலால் தளர்ந்து இழந்தமையைத் தலைவன்பா லேற்றிக் கூறியது.

214. இலகும் - விளங்குகின்ற.

(பி - ம்) 'ஒத்துப் பலகால்'

215. திருநோக்கம் - தன்னுடைய அருட்பார்வையை. முற்றும் கொடுத்துவிடாது என்றபடி. களிறு அகலவிட்டான் - தன் யானையை அத்தெருவை விட்டு நீங்கும்படிச் செலுத்தினான். அடாதான்பால் - பொருந்தாதவனாகிய மகாபலியினிடத்தில்.

(பி - ம்) 'திருநோக்கு முட்டக் கொடுத்து' 'விடாத'

216. அணங்கு - மடந்தை. சீர் - சிறப்பு.

217. மானுங் கலையும் வளர வுடன்வளர்ந்து
தானு மதிய மெனத்தருவாள்—பானின்

218. றனலுங் குழைமகர மஞ்சப் புடைபோய்க்
கனலுங் கயலனைய கண்ணாள்—மினலால்

219. இருளுடைய மேனின் றெறிசுடிகைப் பாப்புச்
சுருளுடைய வீங்கிய தோளாள்—அருளொடும்

220. தம்புறஞ் சூழ்போதத் தாயரே வீக்கிய
வம்பற வீங்கும் வனமுலையாள்—பைம்பொனின்

221. பண்ணிறக் காஞ்சியுங் கட்டிய பட்டிகையும்
கண்ணிறப் போய கடிதடத்தாள்—தண்ணறுந்தார்

---

217. மானும் கலையும் - தான் வளர்க்கும் பெண்மானும் ஆண் மானும். மதிக்கும் மானும் கலையும் உண்மையால் மதியமெனத் தருவாள் என்றார். பால்நின்று - பக்கத்தே நின்று.

218. அனலும் குழை மகரம் - கோபிக்கும் காதணியாகிய மகரமீன். 'படைபோய்' என்னும் பாடத்துக்குப் படையாய்ப் போய் எனப் பொருள் கொள்க. கனலும் - மகரத்தைக் கோபிக்கும். மினலால் - மின்னுதலால்.

(பி - ம்) 'சினமகரம்', 'சிலமகரம்' 'படைபோய்க்', 'கடைபோய்க்'

219. இருள் உடைய - இருள் தோற்றுப்போகும்படி. சுடிகை - உச்சி. பாப்புச் சுருள் - பாம்பு வடிவமாகிய தொடி; இது இப்பொழுது நாகவொத்து என்பது போலும்; 61, 95.

220. தம்புறம் - தம் என்றது கொங்கைகளை. தாயரே - தன்பால் அன்புள்ள தாயர்களே: ஏகாரம் சிறப்பு. அருளொடும் (219) வீக்கிய என இயைக்க. வம்பு - கச்சு. வீங்குதல் : தலைவனைக் காணப்போகும் மகிழ்ச்சியால் தோன்றிய மெய்ப்பாடு.

(பி - ம்) 'செம்பொனின்'

221. பண் - ஒலியையுடைய. பட்டிகை - அரைப்பட்டிகை; 182. கண் இற - மூட்டுக்கள் சிதறும்படி. போய - கைகடந்து வளர்ந்த; வளர்ந்தமை மேற்கூறிய மகிழ்ச்சியால். தார் : இங்கே ஆத்திமாலை.

222. மின்மணி மோலியான் வீதி வரவேற்றுத்
தன்மணி மாளிகைத் தாழ்வரையிற்-பொன்னுருவில்

223. தைத்துத் துகிரு மரகதமுந் தாருக
வைத்துக் கமுக வனஞ்செய்து—முத்தின்

224. பொலன்றோ ரணநிரைத்துப் பொன்னடுத்த மேக
தலந்தோய் விசால தலத்து—மலர்ந்தபூங்

225. கற்ப தருநிரைக் கற்ப லதைபடர்ந்து
பொற்ப மிசையடுத்த பூம்பந்தர்—நிற்பப்

226. புகரற்ற ரத்ன விதானமேற் போக்கி
நகைவச்ர மாலையே நாற்றிப்—பகல்விளங்கா

---

222. மோலியான்: சோழன். எற்று - எதிர்கொண்டு. தன் மணிக ளிழைத்த வீட்டின் கீழ்ப்பக்கத்தே; தாழ்வரை என்றமையால் மாளி கைக்கு மலையுவமை யென்பது பெறப்படும். பொன்னுருவில் - பொன்னு கிய வடிவத்தில்.

(பி - ம்) 'மௌலியான்' 'மாளிகையிற் ருழ்வரையில்' 'பொன் னுருவத்', 'பொன்னுருவைத்'

223. தைத்து - பொருத்தி. துகிர் - பவழம்; இது கமுகம் பழத் துக்கு உவமை. மரகதம் பசுங்காய்க்கு உவமை: "கருங்கமுகு பசும்பாளை வெண்முத் தீன்று காபெல்லா மரகதமாய்ப் பவளங் காட்ட" (பெரிய திருமொழி, 2. 10: 7.) தாறு - குலை. முத்தின் - முத்தினுல் ஆகிய.

224. பொலன் தோரணம் - அழகிய தோரணத்தை; முத்தின் பொலன் தோரணம் - முத்துக்கள் கோக்கப் பெற்ற பொற்ரோரணம் என் னலும் ஆம். நிரைத்து - வரிசையாக அமைத்து.

(பி - ம்) 'பொன்னெடுத்து' 'மலர்ந்தன'

225. கற்பலதை - கற்பகமரத்தில் படரும் காமவல்லியென்னும் கொடி. படர்ந்த பந்தரென இயைக்க. பொற்ப - அழகு பெற. மிசை யடுத்த - மேலே பொருந்திய.

(பி - ம்) 'கற்ப தருநிரைக் காற்பல கைபடர்ந்து', 'கற்பலகை தந்து' 'மிசைபடுத்த'

226. புகர்-இரத்தினங்களுக்குக் கூறப்பட்ட குற்றங்கள். விதானம்- மேற்கட்டியை. நகை - ஒளியையுடைய. நாற்றி - தொங்கவிட்டு.

(பி - ம்) 'புகரத்ன முத்த விதான' 'பகல் விளக்கா', 'பகலவுன்'

227. மைவிளக்கு வையாதே மாணிக்க வர்க்கமே
எவ்விளக்கு மாக வெதிரெடுத்து—நொவ்விய

228. பூநறுஞ் சுண்ணப் பொடியடங்க வீசிய
நான நறுநீர் நளிநளிர்ப்ப—மேனிலையிற்

229. கங்கையி னீர்முகந்தோ காவிரியி னீர்கொணர்ந்தோ
கொங்கை யிணைநீர்க் குடநிரைத்—தெங்கும்

230. அசும்பு பொலன்கொடியா லவ்வெல்லை யுள்ள
விசும்பு தவிர விலக்கிப்—பசும்பொன்யாழ்

231. முட்ட முயன்ற விறலியர் முன்னிருப்ப
இட்ட தவிசின் மிசையிருந்து—பட்டினஞ்சூழ்

---

227. மை விளக்கு - புகையினால் ஒளி மழுங்கிக் கருமையையுடைய **விளக்கை.** வர்க்கம் - தொகுதி. நொவ்விய - மென்மையான.

228. வீசிய - **சிவிறியினுல்** வீசிய. **நானநறுநீர் நளிநளிர்ப்ப** - கஸ்தூரியின் மணமுடைய நீர்த்துளிகள் பெரிதுங்குளிரைச் செய்ய. **தளிநளிய** (பி - ம்) - துளிகள் செறிய. மேல் நிலையில் - **தன்னுடைய** மாளிகையின் மேல் நிலையிலுள்ள.

(பி - ம்) '**நறுநீர்த் துளி**', '**நறுநீர்த்தளி நளிய**'

229. கொங்கையிணையாகிய நீர்க்குடங்களை.

(பி - ம்) 'கங்கையினீர் கொணர்ந்தோ' 'கொங்கை யிளநீர்க்', '**கொங்கையி னன்னீர்க்**'

230. அசும்பு பொலன் கொடியால் - துளிப்பதுபோன்ற பொன்னாற் செய்த கொடிகளால். **அவ்வெல்லை உள்ள விசும்பு தவிர விலக்கி - அவ்விடத்தில்** உள்ள வானம் மறையும்படி விலக்கி.

(பி - ம்) '**அவ்வேலை யுள்ள**'

231. முட்ட - முற்ற. விறலியர் - பாண்மகளிர். முன்னிருப்ப - தன் முன்னிருந்து கேட்டு மகிழ; விறலியர் யாழிசையில் வல்லவரெனினும், மடந்தையின் யாழிசையிற் கொண்ட ஈடுபாட்டால் கேட்க முன்னிருந்தன ரென்க. **இட்ட தவிசின்**-பணிமகளிரால் இடப்பட்ட **ஆசனத்தில். மிசை - மேலே.** பட்டினம் - காவிரிப்பூம்பட்டினம்.

232. பொன்னிக்குங் கோதா விரிக்கும் பொருநைக்கும்
கன்னிக்குங் கங்கைக்குங் காவலனைச்—சென்னியைத்

233. தானைப் பெருமானை நல்ல சகோடங்கொண்
டியானைப் பெருமானை யேத்தெடுப்பாள்—மேனாள்

[யானையின் பெருமை]

234. உகந்த பிடியுடனே யோரெண் பிடியும்
திகந்த களிறெட்டுஞ் சென்று—முகந்து

235. துறக்குங் கடலமுத லேழுஞ் சொரியச்
சிறக்கு மபிடேகஞ் செய்து—விறக்கும்

236. உயிர்காவன் மேற்கொண் டுலகைவலஞ் செய்யும்
அயிரா பதமத யானை—உயரும்

---

232. பொருநை - தாம்ரபர்ணி. கன்னி - குமரியாறு; விக்கிரம. 215. குறிப். சென்னி - சோழன்.

233. சகோடம் - சகோட யாழ். சகோடயாழ்: பதினான்கு நரம்புகளைக் கொண்ட ஒருவகை யாழ்: "ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி" (சிலப். 3: 70); "ஈரேழ் சகோடம்" (சிலப். 10: 14.) சகோட யாழைக் கொண்டது யானைப் பெருமானை வசமாக்குதற்கு; "யாழாய் மிடற்றால் வளைக்குதும் யாமென்பார்" (குலோத். உலா. 216). யானையை யாழால் வசமாக்குவது உதயணன் சரிதையால் விளங்கும். யானைப் பெருமான் - சோழன் ஏறிவரும் யானை; 300. ஏத்தெடுப்பாள்; புகழத் தொடங்குவாள்.

(பி - ம்) 'பெருமானை நல்கச் சதகோடி'

234. உகந்த பிடி - தான் விரும்பிய பெண் யானை. எட்டுப்பிடியும் திசையானை எட்டுக்கும் உரியன. திகந்தக்களிறு எட்டும் - திக்குகள் முடிவில் நின்று உலகைத் தாங்கும் களிறுகள் எட்டும். துறக்கும் - தம்மிடமிருந்து கடல்நீரை விடும். முகந்து சொரிய (235) என இயைக்க.

(பி - ம்) 'களிறெனவும்'

235. பிடியுடனே (234) அபிடேகம் செய்து. விறக்கும் - அஞ்சுகின்ற; "விறப்பே வெரூஉப் பொருட்டு மாகும்" (தொல். உரி. 50.)

(பி - ம்) 'செய்து பிறக்கும்'

237. கடநாக மெட்டுங் கடநாக மெட்டும்
படநாக மெட்டும் பரந்தீர்த்—துடனுகத்

238. தென்னர் வலம்புரியுஞ் சேரலர் சாமரையும்
கன்னுவ தங்கிசமாக் கைக்கொண்டு—பின்னவர்

239. வாளகை மௌலி யிரண்டு மிருகோட்டுக்
கோளகையா கக்கொண்ட கோக்களிறு—மாளிகை

240. தாக்குண்ட வாயில்க டோறுந் தனிதூங்கித்
தூக்குண்ட கண்டை தொடருடனே—வீக்குண்டங்

241. காராத நாளேக்குப் போதக் கிடந்தார்ப்பத்
தாராகக் கொண்ட மதாசலநீர்—வாரா

---

237. கடநாகம் - மதத்தையுடைய யானைகள். கடநாகம் - காட்டையுடைய மலைகள்; மலைகள் உலகைத் தாங்குவன; பூதரம் என்ற பெயர் உடைமையாலறிக. படத்தையுடைய நாகம்; நாகம்-பாம்பு: குலோத். உலா. 34. பரம்தீர்த்து - தாங்குகின்ற பாரத்தைப் போக்கி. உடனுக - சேர. நாகம்: "நாகமது நாகமுற நாகமென நின்ருன்" (கம்ப. 3. அகத்தியப். 39.)

(பி - ம்) 'கதநாகம்' 'படந்தீர் துடனுக'

238. தென்னர் - பாண்டியருடைய, வலம்புரி - வலம்புரிச் சங்கு. கன்னுவதங்கிசம் - காதிலணியும் ஓர் ஆபரணம்; அவதம்சம் - ஆபரணம்; காதில் அணியும் மலருமாம். அவர் - அவ்விரண்டு அரசருடைய.

(பி - ம்) 'மன்னவர்'

239. வாள் அகைமௌலி - ஒளி மலர்ந்த கிரீடங்கள்; "அகை மத்தத்து" தக்க. 98.) கோளகை - யானைத் தந்தத்திலிடும் பூண்; சீவக. 83, 645, 2275. கோக்களிறு - யானைக்கரசு.

(பி - ம்) 'மோலி'

240. கண்டை - மணி. தொடர் - சங்கிலி. வீக்குண்டு - கட்டுண்டு.
(பி - ம்) 'தனிதூங்கத்' 'தண்டைத்'

241. அங்கு ஆராத நாளேக்கும் - அப்பகையரசர் அரண்மனைவாயிலில் ஒலியாத நாட்களுக்கும் ஈடுசெய்யும்படி. போத - மிக. கிடந்து ஆர்ப்ப - தன்மேலே கிடந்து ஒலிக்கும்படி. தார் - கண்டை மாலை. மதாசலம் - யானை. நீர் வாரா - தண்ணீர் வராமல் வற்றிய.

(பி - ம்) 'மதசலதி வாரி'

242. நதிக்கு மலைக்கு மடவிக்கு நாளும்
குதிக்கு மதச்சுவடு கோத்து—மதிக்கும்

243. பிடிவிடாக் காதற் பெருங்களிறுங் கன்றும்
அடிவிடா தவ்வா றடையப்—படிவிடா

244. நீட்டும் பெருவாரி யேழென்பா ரெட்டென்னக்
கூட்டும் பெருங்கடவுட் கொல்யானை—நாட்டில்

245. பணிகொண்ட பூதம் படைநான்கும் பற்றப்
பணிகொண்ட பௌவம் பரக்கப்—பணிகொண்ட

---

242. நதி, மலை, அடவி என்றது நதிசரம், கிரிசரம், வனசரம் என்னும் மூவகை யானைகளைக் குறிப்பித்தது : குலோத். உலா. 212-14. கோத்து - ஒன்றாகக் கூட்டி.

(பி - ம்) 'மதச்சுவடு கொண்டு'

243. பிடிவிடா - பெண்யானை நீங்காத. அவ்வாறு அடைய - அந்த மதச் சுவட்டின் வழியே தன்னையடைய. படிவிடாது - பூமியை விடாமல்.

244. பெருவாரி - பெரிய கடல்கள். கடலேழு; 150. எட்டென்ன - மத நீரோடு எட்டுக் கடல்களென்று சொல்லும்படி. கடவுள் - தெய்வத் தன்மையையுடைய.

(பி - ம்) 'ஈட்டுங் கரிவாரி' 'நாட்டிப்'

245. பணிகொண்ட-ஏவலைக்கொண்ட. பாண்டியன் ஒரு பூதத்தை ஏவல்கொண்டது ; "பூதம் பணிகொண்ட பூழியன் மாறன்" (பாண்டிக் கோவை) ; "தடம்பூதம் பணிகொண்டு', (சின்னமனூர்ச் சாஸனம்) : "பூதம் பணிகொண்டாய்", "பிணிகொண்ட காரையு முந்நீரை யும்பெரும் பூதத்தையும், பணிகொண்ட செண்பகத் தென்ன பராக்ரம பாண்டியனே" (பெருந்தொகை, 913, 943) ; "போயபரு வம்பணிகொள் பூதங்களேயன்றிப், பேயுமரும் பணிசெய்ய" (பெரிய. நின்றசீர் நெடுமாற. 6.) பணிகொண்ட - பணிதலைக் கொண்ட- பௌவம் - கடல் ; கடல் பணிந்தது உக்கிரபாண்டியனை ; திருவிளையாடற், கடல்சுவற வேல்விட்ட. 'பணிகொண்டகார்' என்றது மேகங்களை விலங்கிட்டதை.

246. கார்முற்றும் பேரிடி வீழ்ப்பக் கவுரியர்
ஊர்முற்றுஞ் செற்ற தொருகூற்றம்—சேரர்
247. கனக்கு மனீகக் களந்தொறுங் கைக்கொண்
டினக்கு மரசுவா வெல்லாம்—தனக்குத்
248. துணிக்குங் கழைக்கரும்பு நெல்லுஞ் சுமக்கப்
பணிக்குங் கடவுட் பகடு—தணிப்பரிய
249. பூகங்கை தாடோயச் செங்கை புயல்வானின்
மாகங்கை தோயப்போய் மாமேரு—நாகங்கைக்
250. கொண்டு தனித்தங்கள் கோள்வேங்கை வீற்றிருப்பக்
கண்டு களிக்குங் களியானை—வண்டலம்ப
251. நின்று குதிக்கு மதத்தி னிலநெகிழ்ந்தெக்
குன்று மொளித்துக் குளிப்பமுன்—சென்றழுத்திப்

---

246. கார் முற்றும் - மேகங்கள் முழுவதும். கவுரியர் - பாண்டியர்களுடைய. கூற்றம் - கூற்றுப் போன்ற அயிராபதம்.

(பி-ம்) 'பேரணி', 'பேரடி' 'தொரு களிறு' 'சேரார்', 'வாரிற்', 'தீரக்'

247. கனக்கும் அனீகக்களம் - மிகுதியான சேனைகளையுடைய போர்க்களம்; கனத்தல் - மிகுதியாதல்; "சனத்தெழு விலங்கற்றிண்டேர்" இரகு. இரகுவுற். 59. இனக்கும் - ஒன்றுகூட்டும். அரசுவா - பட்டத்துயானை; களவழி. 35.

(பி-ம்) 'கனக்கும் விசயக்'

248. கழைக்கரும்பு - கழையாகிய கரும்பு : இருபெயரொட்டு. பணிக்கும் - ஆணையிடும். கடவுட் பகடு - தெய்வத்தன்மை வாய்ந்த யானை : அயிராபதம்.

249. பூகங்கை - பூமியிலுள்ள கங்கை. வானின் மாகங்கை - ஆகாய கங்கை. நாகம் - மலை.

250. களியானை - மதங்கொண்ட யானை.

251. நின்று குதிக்கும் - நிலைபெற்றுக் குதிக்கும்; குதிக்கு மென்றதனால் மதத்தின் மிகுதி பெறப்பட்டது; "முகபாகை குதிபாய் கடாம்" (நக்க. 3.) நிலநெகிழ்ந்து - தரை வல்லென்ற தன்மை நீங்கி. குன்று ஒளித்தல் : விக்கிரம. 290.

(பி-ம்) 'மதத்து நிலநெகிழ்த்தெக்' 'மொளிப்பக் குளிப்பப்பின்', 'குளித்ததற்பின்' 'சென்றெழுதிப்'

252. பண்டு வெளியின் மகதத்தைப் பாவடியால்
செண்டு வெளிகண்ட செங்கைமாக்—கண்ட
253 மதிலே யகழாக வாங்கி யகழே
மதிலா வெழாநிற்க வைத்துப்—புதுமலர்செய்
254. வாவியைச் செய்குன்ற மாக்கியச் செய்குன்றை
வாவிய தாக வெனவகுத்துத்—தாவுமான்
255. வெள்ளிடை கோநக ராக்கியக் கோநகர்
வெள்ளிடை யாக வுடன்விதித்துத்—தெள்ளிப்
256. புரப்பா ரிரப்பாராய்ப் போக விரப்பார்ப்
புரப்பாரே யாக்கும் புகர்மா—திருக்குலத்துக்

---

252. வெளிஇல்-வெற்றிடம் இல்லாத. மகதத்தை-மகதேசத்தை. பாவடி - பரந்த அடி. செண்டுவெளி - யானைச் செண்டென்னும் விளையாட்டைச் செய்யுமிடம்; சீவக. 275, 277, ந. செங்கைமா - யானை.

(பி - ம்) 'பண்டு கையின்மதத்தைப் பாவடியாற் ரூவடிபோய்ச்' 'செய்த செங்கண்மா'

253. (பி - ம்) 'மதிலே பெழா' 'புதுமைசெய்'

254. வாவி - தடாகம்.

(பி - ம்) 'வாவிகள் செய்குன்ற மாகவச் செய்குன்றம்' 'வாவிகளாக வெழ'

254-5. மான்தாவும் வெள்ளிடை - மான்கள் துள்ளி விளையாடும் திறந்த வெளிகளை; என்றது காடுகளை; தாவுமான்-குதிரை எனலும் ஆம்.

255. கோநகர் - அரசன் வாழு நகரம்.

(பி - ம்) 'வெழவிதித்து'

256. புரப்பார் - பகையரசர். புகர்மா - யானை; புகர் - புள்ளி. திருக்குலத்து-படைப்புக் காலந்தொட்டுச் சிறப்புற்று விளங்குஞ் சோழர்குலத்து.

251-6. இக்கண்ணிகளின் பொருளமைதியோடு பின்வரும் செய்யுட்கள் ஒப்புநோக்கத் தக்கன; "ஊரு மரவமுந் தாமரைக் காடு முழவரம்பும், தேரு முடைத்தென்பர் சீருத நாணந்தி சீறியநாள், ஊரு மரவமுந் தாமரைக் காடு முழவரம்பும், தேரு முடைத்தென்ப ரேதெவ்வர் வாழுஞ் செழும்பதியே", "கோட்டை யிடித்தகழ் குன்றாக்கிக் குன்றக ழாக்கித் தெவ்வர், நாட்டை மிதிக்குங் கடாக்களிற் ரூனந்தி" (நந்திக்கலம்பகம்); "தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய, எள்ளா வரிமா னிடர்மிகுப்ப - உள்வாழ்தேம், சிந்துந் தகைமைத்தே யெங்கோன் றிருவள்ளம், நந்துந் தொழில்புரிந்தார் நாடு" (தண்டி. 77, மேற்.)

257. கண்ட னயிரா பதமதங்கால் காலத்துக்
கொண்ட தொருசுவடு மேல்கொண்டு—வண்டு

258. கடியுங் களிறுங் களிறுமே காதற்
பிடியும் பிடியாமே பின்னர்க்—கடிமதில்

259. மாற்று மருமணம் வங்காள பாகத்து
வேற்று மதமா ம்ருகமதத்தைப்—போற்றார்

260. வயிரா கரமெறிந்த மானதன் கண்டன்
அயிரா பதமதமே யாக்கிச்—செயிர்தீர்ந்த

261. காதற் பிடிதேற்றத் தேறாக் கடாக்களிறென்
றோதப் பெயரு மொருபொருப்பு—பாதையிற்

---

257. கண்டன் - இராசராசன்; 33, 260. அயிராபதம் - பட்டத்து யானை. மதம்கால் - மதத்தைச் சொரிகின்ற. வண்டு - மதத்திற் படியவரும் வண்டை. 'களிறுமே' 'பிடியாமே' என்பனவற்றில் ஈற்று ஏகார வினைக்கள் எதிர்மறைப் பொருளில் வந்தன.

(பி - ம்) 'சுவடு கொள்ளுமே'

258. கடியும் - ஓட்டும். களிறு - ஆண் யானை. பிடி - பெண் யானை. கடிமதில் - காவலையுடைய மதிலை.

259. அருமணம் - ஒரு தீவு; இஃது யானையிற் சிறந்தது; 'அருமணவன்' (நன். 209, 275, மயிலை மேற்.), "சாவக மெறிந்தரு மணம் பொருது" (குலோத். பிள்ளைத். 92;) 'அருமணவனுனை யென்னுமாபோலே" திவ். திருநெடுந் தாண்டகம், 4, பெரிய வாச்சான். வங்காளத்து யானை: "வங்காளர் வேழவணி" (குலோத். பிள்ளைத். 13.) வேற்று மதமா - வேற்று யானைகளுடைய. போற்றார் - பகைவருடைய.

(பி - ம்) 'மாற்று வருவன'

260. வயிராகரம்: "வயிராகரத்துக் குஞ்சரக் குழாம்பல வாரி". "மதவரை யீட்டம், வயிரா கரத்து வாரி" S. I. I. Vol III. (பெருந்தொகை, 798-9.) ம்ருக மதத்தை (259) அயிராபத மதமே யாக்கி யென இயைக்க. செயிர் - கோபம்.

(பி - ம்) 'செயிர் தீர்த்தக் காதற்'

261. பிடிதேற்ற - பெண் யானை தெளிவிக்க. தேறா - தெளியாத. பொருப்பு - மலை; இங்குயானை. பாதை: வாதாபி என்பதன் சிதைவு.

(பி - ம்) 'பிடித்தேறாத் தேறா'

262. கச்சியிற் கற்றளியிற் கல்லிற் கலிங்கத்திற்
கொச்சியிற் கோதா விரிக்குளத்தில்—விச்சியில்

263. வல்லூரிற் கொல்லா புரத்தின் மணலூரில்
நெல்லூரிற் புத்தூரி னெட்டூரிற்—செல்லூரில்

264. கோட்டாற்றிற் கொங்கிற் குடக்கூரிற் கொப்பத்தில்
வாட்டாற்றிற் காம்பிலியின் மண்ணையில்—வேட்டுத்

265. தரணி கவர்ந்து தமிழ்வேந்தர் பாடும்
பரணி புனைந்த பகடு—சரணென்று

---

262. **கச்சியிற் கற்றளி** - காஞ்சீபுரத்திலுள்ள கைலாஸநாதர் கோயில்; கற்றளி: இது காற்றளை என்னும் பாடபேதப்படி ஓர் இடமாக இருக்கலாம்; காற்றளை எவ்விடத்தது என்பது புலப்படவில்லை. **கல்**-மலை. **விச்சி** - ஒரு மலை; குறுந். 328 : 5; பதிற். 9-ஆம் பதிகம்; புறநா. 200:8.

(பி - ம்) 'காற்றளையிற்' 'கொச்சியில் வாதா வியிற்' 'விச்சையில்'

263. **கொல்லாபுரம்** - இப்பொழுது 'கொல்ஹாப்பூர்' என்று வழங்கும் ஊர்; 'கொல்லாபுரம் பொருது' (குலோத். பிள்ளைத். 12) **மணலூர்** - பாண்டியருடைய பழைய தலைநகரம். **புத்தூர், நெட்டூர்**; "அரசொடு முரசொடு முட்டிய நெட்டூரில், இறைபட வவனெயி லெழுவிடு முனைமதில் குத்திய புத்தூரை யெரியிட" (குலோத். பிள்ளைத். 40.)

264. **கோட்டாறு**: இஃது இக்காலத்தில் நாகர் கோயில் என வழங்கும். **கொங்கிற் குடக்கூர்** - கொங்குநாட்டிலுள்ள குடக்கூர். **கொப்பம்** - கிருஷ்ணாநதிக் கரையிலுள்ளது; 24; விக்கிரம. 20. **வாட்டாறு** - நாகர் கோயிலுக்குப் பக்கத்திலுள்ளது. **சாம்பிலி** - சாளுக்கியருக்கு உரிய நகரம்; "வடகம்பிலியு மன்று" (குலோத்- பிள்ளைத். 89.) **மண்ணை** - மண்ணைக்கடக்கம் என்னும் ஊர்: "மசோதையெயி லன்றுமதின் மண்ணைநக ரன்று" (குலோத். பிள்ளைத். 89); இது 'மான்யகேதம்' என இக்காலத்து வழங்கும். விக்கிரம. 83. **வேட்டு** - களவேள்விகளைச் செய்து.

(பி - ம்) 'கொங்குலவு கூடூரில்' 'கம்பணையின்', 'கம்பலையின்'

265. **தரணிகவர்ந்து** - பகையரசருடைய நாடுகளைக் கவர்ந்து. **பரணி**: ஒருவகைப் பிரபந்தம். **பகடு** - யானையை. **சரணென்று**-தனக்குப் புகலென்று.

(பி - ம்) 'தரணி புனைந்து'

266. வாடா மதுரயாழ் வாங்கி மடவரல்
பாடா விருந்த பருவத்து—நீடாப்

267. பரிசி லுடனே பணிப்பதுபோல் யானை
குரிசி லுடன்வந்து கூடத்—தெருவில்

268. வரவந்தான் மன்னர் பிரானென்று மாரன்
பொரவந்தான் கைவாங்கிப் போனான்—விரல்கவரும்

269. வீணைக் ககப்பட வேழ மிடற்றுக்கும்
ஆணைப் பெருமா ளகப்பட—வாணுதல்

270. ஐந்து சுரர்தருவு மைந்து திருமாலை
தந்து தொழவெழுந்து சாத்தினாள்—மைந்தனும்

---

266. மதுரயாழ் - இனிய இசையையுடைய சகோடயாழை; 233. மடவரல் - மடந்தை. பாடாவிருந்த - பாடிக்கொண்டிருந்த. நீடா - தாமதியாமல்.

267. பரிசிலை உடனே பணிப்பதுபோல்; பணிப்பது - கட்டளையிடுவது. குரிசிலுடன் - சோழனோடு.

268. வர - சோழன் வர. மாரன் - மன்மதன். கைவாங்கி - இடம் விட்டு நீங்கி. விரல் கவரும் - விரல்களால் விரும்பி வாசிக்கப்படும்; விக்கிரம. 101-2.

(பி - ம்) 'விரல்கவர'

269. வீணைக்கு வேழம் அகப்பட - வீணை யிசைக்கு யானைவசமாக; யானை இசைக்கு வசமாதல். குலோத். உலா. 216; "வகையுடை நல்யாழ் வாத்திற் பெற்றதூஉம், விசையுடை வேழம்வணக்கும் விச்சையும்" (பெருங். 2. 11 : 154 - 5): "ஐம்புல வேழத்தின் வெந்தொழில் வீயக், கருணை வீணை காமுறத் தழீஇ" (ஞானாமிர்தம், 4 : 10 - 11.) மிடற்றுக்கும்-கண்டப் பாடலுக்கும், ஆணைப் பெருமாள் - ஆக்ஞா சக்கரத்தைச் செலுத்தும் சோழன். அகப்பட - வசமாக; 271. வாணுதல் - மடந்தை.

(பி - ம்) 'ஆணைப் பெருமான்'

270. சுரர்தரு ஐந்தும் - சுவர்க்கத்திலுள்ள கற்பகம் முதலிய ஐந்து மரங்களும். மாலைகளைத் தந்து தொழ, மடந்தை அவற்றைச் சோழனுக்குச் சாத்தினாள். மைந்தன் - சோழன்.

271. பண்ணுக்கே தோற்பான் பணைமுலைக்கு மல்குலுக்கும்
கண்ணுக்குந் தோலானே கைக்கொண்டான்—
[வண்ணமும்

272. வெண்டுகிலுங் காஞ்சியு மேகலையுந் தோள்வளையும்
கொண்டவற்றின் மாறு கொடுப்பான்போற்-பண்டை

273. முடியுஞ்சிங் காதனமு முத்தக் குடையும்
படியு மரசும் பணித்தான்—பிடியும்

274. சிவிகையு நிற்பவச் சேயிழை வீதி
கவிகையுந் தானுங் கடந்தான்—குவிமுலை

[அரிவை]

275. ஏனை யரிவை யொருத்தி யிகன்மாரன்
சேனை திரண்டனைய செவ்வியாள்—வானில்

---

271. பண்ணுக்கே - இசைக்கே. பணைத்தல் - பெருத்தல். தோலானே - தோல்வியடையாமல். 271 - ஆம் கண்ணியின் பொருளோடு, 'பாடினளாய் வரினென்ற கருத்து: அவட்கும் அவ்வாறன்றித் தன் பெண்மையால் மயக்கி வென்று கோடல் அரிதென்பதாம்' (புறநா. 111 : 3 - 4, விசேடவுரை) என்பது ஒப்பிடற்குரியது. கைக்கொண்டான்-மாலைகளைக் கையிற் கொண்டான். வண்ணமும் - மாமை நிறமும்.

272. தோள்வளை - வாகுவலையம். கொண்டவற்றின் மாறு - மடந்தையிடமிருந்துதான் கொண்டவற்றிற்குப் பிரதியாக.

(பி - ம்) 'பல்வளையும்'

272-3. பண்டைமுடி - பண்டைக் காலத்திருந்து வருகின்ற கிரீடம்.

273. முத்தக்குடை - முத்துக்களால் ஆன குடை. படி-பூமி. பணித்தான் - கட்டளையிட்டான்,

(பி - ம்) 'பணிப்பான்'

274. சேயிழை - மடந்தையினது. கவிகை - குடை. வீதியைக கடந்தான்.

275. ஏனை - மற்றைய. இகல்மாரன் சேனை - மாறுபாட்டையுடைய மன்மதனது சேனையாகிய மகளிர்.

276. விடுசுடர்ச் செக்கர் வியாழமுந் தோற்கும்
படுசுடர்ச் செம்பொற் படியாள்—வடிவு

277. நெடிதோர்க்கி லொக்கு நிறைமதிய நேரே
படிதோற்கும் முத்தின் படியாள்—முடிவில்

278. குலபதும ராக பதிகுதி கொள்ளும்
பலபதும ராகப் படியாள்—அலைகடலில்

279. முற்று மரையாண் முகத்தா மரையாளப்
பொற்று மரையாளப் போதுவாள்—அற்றைநாள்

[நீர் விளையாட்டு]

280. தண்ணென் கழுநீர்த் தடம்பொய்கை நாமெலாம்
அண்ணல் வருமளவு மாடுதுமென்—றெண்ணிப்

---

276. செக்கர்ச்சுடர்விடு - சிவந்த ஒளியைவிடும். படுசுடர் - மிக்க ஒளியையுடைய.

(பி - ம்) 'படிசுடர்ப் பைம்பொற்'

277. நெடிது ஓர்க்கில் - நெடுநேரம் ஆராய்ந்தால்; ஓற்கில் (பி-ம்): ஓர்க்கில் என்பது எதுகை நோக்கித் திரிந்ததுஆகும். நிறைமதியம்-பூர்ண சந்திரன். படிதோற்கும் - ஒப்புக்குத் தோற்கும். முத்தின்படி - முத்தாற் செய்யப் பெற்ற ஆபரணம்; "முத்தின், படிக்குச் சலாபம் பணித் தான்" (333)

(பி - ம்) 'நெடிதோற்கில்' 'படிநோக்கும்', 'படிதொக்கு'

278. பதுமராகபதி - சூரியன். குதிகொள்ளும் - மகிழ்ச்சியால் குதித்தலைக்கொள்ளும். பதுமராகப்படி - பதுமராகத்தாற் செய்யப்பட்ட ஆபரணங்கள். கடல் - பாற்கடல்.

279. முன்தாமரையாள் - முன்னே தாமரையில் இருப்பவளான திருப்போன்றவள். முகத்தாமரையாள் - முகமாகிய தாமரையை உடையவள். அப்பொற்றாமரை - அந்தப் பொன்னாலாகிய தாமரையை; அ: உலகறிசுட்டு. 'ஆளப் போதுவாள்' என்பது ஆடப் போதுவாள் என்று இருப்பின் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமாய் இருக்கும்.

280. தண்ணென் - குளிர்ந்த. கழுநீர்த்தடம் பொய்கை - கழுநீர்ப் பூக்களையுடைய அகன்ற பொய்கையில்: பொய்கை - மானிடர் ஆக்காத நீர்நிலை; சீவக. 338. நாம் என்றது தோழியரையும் உட்படுத்தி.

281. புணைக்கும் மொருதன் புறங்காவ லாயத்
துணைக்குந் தடஞ்சுருங்கத் தோயப்—பணைத்துப்

282. புடைக்கும் விசும்பிடம் போதா முலைக்கும்
நடைக்கு முதற்பகை நாமென்—றுடைப்புண்டு

283. பின்னர்ப் பெருஞ்சக்ர வாகப் பெருங்குலமும்
அன்னக் குலமு மலம்வரப்—பின்னரும்

284. காற்குங் கருங்கட்கு முட்காதே கைவகுத்
தேற்குந் தரமேநா மென்றுபோய்த்—தோற்கின்ற

285. வாவியி லுள்ள வரால்களுஞ் சேல்களும்
தாவி விழுந்து தடுமாறத்—தீவிய

---

281. புணைக்கும் - தெப்பத்திற்கும். புறங்காவல் ஆயத்துணை - தன் பக்கத்தே காவலாகவுள்ள மகளிர் தொகுதி ; "பொருவி லொருத்தி புறங் காக்கும் மாதர், இருவி லிடைநின் றிறைஞ்சி" (குலோத். உலா. 300.) தடம் சுருங்க - தடாகம் நீர் குறையும்படி. தோய - படிய. பணைத்து - பெருத்து.

(பி - ம்) 'மொருவன்' 'பணைக்கும்'

282. புடைக்கும் - அகலுகின்ற. விசும்பு - ஆகாயமும் ; உம்மை விகாரத்தால் தொக்கது. இடம் போதா - இடம்பற்றாத. உடைப்புண்டு - தோல்வி யடைந்து.

(பி - ம்) 'றடைப்புண்டு'

283. முலைக்குச் சக்ரவாகப் பறவையும், நடைக்கு அன்னப்பறவையும் உவமை ; திரல்நிறை; பின்வருவனவற்றையும், இங்ஙனமே கொள்க. அலம்வர - மனம் கலங்கிவருந்த ; வருந்துதல் தாம் தோற்றமையால்.

(பி - ம்) 'படுஞ்சக்ர'

284. காலுக்கு உவமை வரால். கண்ணுக்கு உவமை சேல். உட்காதே - அஞ்சாமல். கைவகுத்து-சேனையை வகுத்து. ஏற்குந்தரமே. போரிடும் தகுதியுடையதா ? போரிடும் தகுதியுடையோமோ ?

(பி - ம்) 'கைவகுத்த' 'போய்த் தோற்றது'

285. வாவி - தடாகம். வரால் கணைக்காலுக்கும் சேல் கண்ணுக்கும் உவமை. தடுமாற - தாம் உவமையாகோம் என ஏங்கித் தடுமாற. தீவிய - இனிய ஒலியையுடைய.

(பி - ம்) 'தடுமாறத்'

286. பொம்மென் சிலம்பு புலம்பு புறவடிக்கும்
அம்மென் கழுத்துக்கு மாற்றுது—மம்மர்ப்பட்

287. டெங்குந் தரியா திரியல்போ யாமையும்
சங்குந் தடத்தை விடத்தவழ—நங்கைதன்

288. செவ்வாயுங் காதுஞ் செயிர்த்தன வென்றொதுங்கி
எவ்வாயுங் காணு தெதிரேநின்—றவ்வாய

289. கொள்ளைக் குமுத மலருங் குழையிள
வள்ளைக் கொடியு முடன்மயங்க—வெள்ளம்போல்

290. பெய்யு மதயானைக் கோடும் பெருநெடுங்
கையும் புடைப்பக் கலுழ்ந்தனபோல்-தொய்யில்சூழ்

---

286. பொம் என் - பொம் என்று ஒலிக்கும்; பொம் - அனுகரணம். சிலம்பு - காலணி. புலம்பு புறவடிக்கும் - ஒலிக்கின்ற புறவடியென்னும் உறுப்புக்கும். மம்மர்ப்பட்டு - மயக்கத்தி லகப்பட்டு.

(பி - ம்) 'சிலம்பும்' 'கழுத்திற்கும்'

287. தரியாது - நிலைத்திராமல். இரியல்போய் - நிலைகெட்டோடி. புறவடிக்கு ஆமையும், கழுத்துக்குச் சங்கும் உவமைகள். தடத்தை - பொய்கையை. விட - நீங்கும் பொருட்டு. தவழ - தவழ்ந்து செல்ல. நங்கை - அரிவை.

(பி - ம்) 'தரியா விரியல்போய்'

288. செயிர்த்தன - நம்மைக் கோபித்தன. எவ்வாயும் - செல்லுதற்குரிய வேறு எந்த இடத்தையும். எதிரே நின்று - வாய்க்கும் காதுக்கும் எதிரே நின்று. அவ்வாய - அவ்விடத்திலுள்ள.

(பி - ம்) 'செயிர்த்தபின் சென்றொதுங்கி' 'எதிர்நின்ற வவ்வாய'

289. கொள்ளை - மிகுதி. குழை - குழைந்த; வாய் குமுதத்திற்கும், வள்ளைக்கொடி காதிற்கும் உவமை.

290. யானையின் மதத்திற்கு வெள்ளம் உவமை. கோடு - கொம்பு. நெடுங்கை - நீண்ட துதிக்கை. புடைப்ப - புடைத்தலால். கலுழ்ந்தனபோல் - கலங்கியதைப்போல. தொய்யில் : விக்கிரம. 176.

(பி - ம்) 'கலுழ்வது போற்'

291. தாம முலையாலுந் தோளாலுந் தாக்குண்டு
காமர் தடமுங் கரைகடப்பக்—கோமகன்

292. உள்ளம் பெருகப் பெருக வுலாக்கொண்டு
கள்ளம் பெருகுங் கருநெடுங்கண்—வெள்ளம்

293. படிய வருஞ்சிவப்பு வள்ளப் பசுந்தேன்
வடிய வருஞ்சிவப்பின் வாய்ப்ப—நெடிது

294. திளைக்குந் திருமகளை வாவியிற் சேவித்
திளைக்குங் கொடியிடையா ரேத்தித்-திளைத்துழித்

---

291. தாமம் - மாலையை யணிந்த; ஒளியையுடைய எனலுமாம். யானைக் கொம்பு நகிலுக்கும், துதிக்கை தோளுக்கும் உவமை. காமர் தடமும் - விருப்பத்தை உண்டாக்கும் பொய்கையும், கரைகடப்ப - கரையின்மேற் கிளம்பி வழிந்தோட. கோமகன் - சோழன்.

292. உலாக் கொண்டு - உலாவுதலைக் கொண்டு; உலாவுதல் கண்களின் தொழில்; "கைபரந்து, வண்டிசைக்கும் கூந்தன் மதர்விழிகள் சென்றுலவ, எண்டிசைக்கும் போதா திடம்" (தண்டி. 23, மேற்.) கள்ளம் பெருகும் - கள்ளத்தன்மை வளர்கின்ற.

(பி - ம்) 'பருகப் பெருக'

292-3. வெள்ளம் படிய - நீராடுதலால்.

293. நீராடுவார்க்குக் கண்சிவத்தல் இயல்பு; "நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கும்" (குறுந். 354 : 1.) வள்ளப் பசுந்தேன் - கிண்ணத்திலுள்ள செவ்வித்தேன். வடியவருஞ் சிவப்பின் - வடிதலால் வருகின்ற செந்நிறத்தைப்போல. நெடிது - நெடுநேரம்.

(பி - ம்) 'வன்னப் பசுந்தேன்'

294. திளைக்கும் - இடைவிடாமல் ஆடும். திருமகளை - அரிவையை. சேவித்து - வணங்கி. இளைக்கும் - வருந்தும். கொடியிடையார் - பூங்கொடி போன்ற இடையை யுடைய மகளிர். எத்தி - புகழ்ந்து. திளைத் துழி - நீராடிய காலத்தில்.

295. தம்மைக் கமல மலர்க்களித்துத் தாமவற்றின்
செம்மை கவர்ந்த திருக்கண்ணும்—மெய்ம்மையே

296. மெய்போய வைய மருங்குலு மேகலைபோய்க்
கைபோ யகன்ற கடிதடமும்—பைபோய்

297. நெறிக்கும் பணிவலைய நீங்கிய வேய்த்தோள்
எறிக்கும் பெரும்பே ரெழிலும்—நெறிப்படக்

298. கொண்டுபோந் தேறிய கோமகள் பேரழகு
பண்டுபோ னோக்கப் பயப்படுவார்—கண்டு

---

295. தம்மை - தம்மிட முள்ள வெண்மையை. **அவற்றின் - அத் தாமரை** மலர்களின். செம்மை - செந்நிறத்தை. **மெய்ம்மையே - உண்மையாக.**

(பி - ம்) 'மலர்க்கருளித்'

296. மெய்போய - உண்மைத்தன்மை நீங்கிய. ஐய மருங்குலும் - சந்தேகத்திற்கிடமான இடையும். மேகலை போய் - மேகலைகள் நீங்கி. **கைபோய் அகன்ற - இடம் மிகவும் அகன்ற. கடிதடம் - அல்குல்.**

(பி - ம்) 'பொய்போய' 'பைபோல்'

297. நெறிக்கும் - நெளியும். பணி வலையம் - பாப்புச் சுருள் என்னும் ஆபரணம். வேய்த்தோள் - பசியமூங்கிலைப் போன்ற தோள்; என்றது அலங்கரியாத இயற்கையழகைக் கூறியபடி. **எறிக்கும் - ஒளி வீசுகின்ற. பெரும்பேரெழிலும் - மிகப்பெரியஅழகையும். நெறிப்பட - முறைமைப்பட.**

(பி - ம்) 'வெறிக்கும்' 'நீவிய', 'வீங்கிய'

298. ஏறிய - கரையில் ஏறிய. கோமகள் பேரழகு-அரிவையினது பேரழகை. பண்டுபோல் நோக்க - முன்பு நோக்கியதைப்போல இப்பொழுது நோக்க; என்றது இதுவரையிலும் தாம் பாராத புதிய அழகாதலின் அச்சம் விளைத்தது. புதுமை அச்சத்தை உண்டாக்குதல்: "மிடையும் புதுவனப்பு விண்ணோரும் வீழ, அடையுந் தனதுருக்கண் டஞ்சி" (விக்கிரம. 178); "வெதிர்பொரு தோளினு ளொருத்தி வேந்தன்வந், தெதிர்தலுந் தன்மன மெழுந்து முன்செல, மதிமுகங் கதுமென வணங்கி னளது, புதுமையா தலினவற் கச்சம் பூத்ததே" (கம்ப. 1. உண்டாட்டுப். 49.)

(பி - ம்-) 'கொண்டு பிறிதேறிக்'

299. கலன்கலன் கண்ணெச்சிற் கென்று கடிதிற்
பொலன்கலன் கொண்டு பொதிந்தார்—இலங்கிழை

300. யானைப் பெருமா ளயிரா பதத்திருந்த
தானைப் பெருமானைச் சந்தித்தாள்—மேனி

301. பொருவிற்கே யெல்லா வரம்பையரும் போதாத்
திருவிற்கே குற்றேவல் செய்வான்—பொருவிற்கை

302. வானிற்கோ னஞ்ச வருவானை யஞ்சாதே
வேனிற்கோ னேபரவ மேற்செல்வான்—வானத்

---

299. கலன்கலன் என்று - ஆபரணம் கொண்டுவருக என்று விரைந்துசொல்லி; அடுக்கு விரைவுபற்றி வந்தது. கண்ணெச்சிற்கு - திருஷ்டி தோஷம் படுமென்று அஞ்சி அதனை நீக்குதற்கு. கடிதின்-விரைவில். பொலன் கலன்கொண்டு - பொன்னுபரணங்களைக்கொண்டு. பொதிந்தார் - அரிவையின் இயற்கையழகை மறைத்தார்; "உமிழ்சுடர்க் கலன்கணங்கை யுருவினை மறைப்ப நோரார், அமிழ்தினைச் சுவைசெய் தென்ன வழகினுக் கழகு செய்தார்" (கம்ப. 1. கோலங்காண். 3.), இலங்கிழை - அரிவை.

(பி - ம்) 'கலங்கலங்' 'பொலங்கலன் கண்டு'

300. யானைப் பெருமாள்: உத்தம இலக்கணமுடைய யானையை இங்ஙனம் கூறுதல் மரபு; இது குதிரை நம்பிரான் என்பது போன்றதோர் வழக்கு; சீவக. 2157. ந; அழகர் கிள்ளை. 152. தானைப் பெருமாள் - சேனையையுடைய சோழனை. சந்தித்தாள் - எதிரே கண்டாள்.

(பி - ம்) 'யானைப் பெருமான்' 'தானைப் பெருமானைச்'

301. பொருவிற்கே - ஒப்புக்கே. போதா - பற்றாத. திருவிற்கே - திருமகள் போன்ற அரிவைக்கே. செய்வான் - செய்யும்பொருட்டு. பொருவில் கை - போர் செய்கின்ற வில்லைப்பிடித்த கையையுடைய.

(பி - ம்) 'செய்வாள்'

302. வானிற்கோன் - இந்திரன். வருவானை-வருகின்ற சோழனை. வேனிற்கோன் - மன்மதன்; சிறப்புப்பற்றி ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது.

(பி - ம்) 'கோனஞ்சி வதிவானை'

303. தெடுக்குங் கொடிமகர ராசித் தொடையில்
தொடுக்கு மகரம்போற் றேற்ற—வடுத்தெய்யும்

304. மன்றன் மலரம்பு விற்கரும்பு வண்டுநாண்
தென்றற்றே ராலனங்கன் செற்றதென-மென்றோளி

305. பாங்கி யெடுத்த படாகைப் பசும்பொற்பூ
வாங்கி யெதிர்தூய் வணங்கினாள்—தாங்கி

306. எடுப்ப வெழுவா ளிருதிருத்தோண் மாலை
கொடுப்ப விறையவனுங் கொண்டான்—கொடுத்தவற்றுட்

307. பொன்மாலை போதகத்தைச் சூட்டிப் பொலன்குவளை
நன்மாலை சாத்தினா னாயகனும்—தன்மார்பில்

---

303. கொடி - ஒழுங்கு. மகர ராசித் தொடை - மகர தோரணங்கள்; ராசி - கூட்டம்.

(பி - ம்) 'கொடிமாத ராசிற் றொடையிற்' 'போற்றேன்று - தடுத்தெய்யும்'

304. மன்றல் - மணத்தையுடைய. மன்றல்.........அனங்கன்: "யானையிரதம் பரியா ளிவையில்லை, தானு மனங்கன் றனுக்கரும்பு - தேனார், மலரைந்தி னல்வென் றடிப்படுத்தான் மாரன், உலகங்கண் மூன்று மொருங்கு" (தண்டி. 79, மேற்.) மென்றோளி - அரிவை.

(பி - ம்) 'தென்றறேர்தானனங்கன் 'தென்றற்றேர் கொண்டனங்கன்'

305. படாகைப் பசும் பொற்பூ - கொடியைப் போன்ற பசும் பொன்னாலாகிய பூவை; படாகை - கொடி: 131. தூய் - தூவி. வணங்கினாள் - சோழனை வணங்கினாள்.

305-6. தாங்கியெடுப்ப - தோழியர்கையில் முகந்து எடுப்ப.

306. எழுவாள் - எழுகின்ற அரிவை. கொடுத்தவற்றுள் - அரிவை கொடுத்த மாலைகளுள்.

307. போதகத்தைச் சூட்டி - தான் ஏறிவந்த யானைக்குச் சூட்டி. குவளைமாலையைத் தான்சூடிக் கொண்டான். நாயகன் - சோழன்.

(பி - ம்) 'சாத்தினாள் நாயகனும்'

308. ஆர்மாலை கோமா னருளினு னம்மாலை
கார்மாலை யுட்கொண்டு கைக்கொண்டாள்-பார்மாலே

[அரிவையின் முறையீடு]

309. மூதண்டங் காக்கு முதுதண்ட மாரவேள்
கோதண்டத் தீஞ்சாறு கொள்ளாதோ—மாதண்ட

310. முற்றக் கடல்கிடந்து வேவ முனிந்தின்னம்
சொற்றத் தனிவிற் குனியாதோ—நற்றடத்துள்

311. ஏறு முதலை யெறிதிகிரி வேண்மகர
வேறு முறிய வெறியாதோ—மாறுது

---

308. ஆர்மாலை - ஆத்திமாலையை. கார்மாலை - கரியமாலைப்பொழுது வருவதை; "தனிமை பொறுக்குமோ, கார்மாலை கண்கூடும் போது" (நண்டி- 16, மேற்.) உட்கொண்டு - வருத்தும் என்பதை மனத்தினுட் கொண்டு. பார்மாலே - பூமியைக் காக்கும் திருமாலே; பூமியிற் றிருமால் போன்றவனே என்றலுமாம்.

309-16. ஆம் கண்ணிகளில் சோழனைத்திருமாலாகப் பாவித்து அவனுடைய பஞ்சாயுதங்களும் தனக்குச் செய்ய வேண்டும் உதவிகளைக் கூறுகின்றாள்.

309. மூதண்டம் - பழமையான உலகை. முதுதண்டம் - பழமையான கதையென்னும் ஆயுதம். மாரவேள் - மன்மதனுடைய. கோதண்டத் தீஞ்சாறு - வில்லாகிய கரும்பின் இனிய சாற்றை. மாதண்டம் - பெரிய தண்டனை.

(பி - ம்) 'முழுத்தண்டம்' 'கோதண்டத் தின்சாறு'

310. முற்ற - முற்றும்படி. கடல் கடந்து வேவ என்றது இராமாவதாரத்தில் கடல் வற்றும்படி அம்பெய்ததைக் கூறியது. குனியாதோ - வளையாதோ. நற்றடத்துள் - நல்ல தடாகத்துள்.

(பி - ம்) 'நற்றடத்தில்'

311. முதலையேறு - கஜேந்திரனைத் துன்புறுத்திய சிறந்த முதலையை. எறிதிகிரி - கொன்ற சக்கரம். வேள் மகரவேறு - மன்மதனுடைய சிறந்த சுறாமீன் கொடியை; "மீனே றுயர்த்த கொடி வேந்தனே" (சீவக. 6.) முறிய - முறிபட்டழிய. மாறுது - தன் தன்மை வேறுபடாமல்.

(பி - ம்) 'வாறுது'

312. காந்து முழுமதியை யோரோர் கலையாக
ஏந்து சுடர்வடிவா ளீராதோ—பாந்தண்மேல்

313. வைய முடையான் வலம்புரியிவ் வைகறைவாய்
உய்ய வொருகுரல்வந் தூதாதோ—வையம்

314. தணியுந் தகைத்தோ தமியன்மா லென்று
பணியு மடக்கொடியைப் பாரா—வணிய

315. உருத்தந்த தோற்றங்க ளொன்றினுந் தப்பா
வருத்தந் திருமனத்து வைத்தே—திருத்தடந்

316. தோளுந் திருமார்பு நீங்காத் துணைவியரில்
நாளும் பிரியாமை நல்கினன்—மீள

317. ஒருமகள் கண்ட னொருபெரும்பே ராகம்
திருமகள் போலத் திளைப்பாள்—இருநிலம்

---

312. காந்தும் - சுடுகின்ற. முழுமதி - பூர்ண சந்திரன். வடிவாள் - கூரியவாள். ஈர்தல் - பிளத்தல். பாந்தள்மேல் - ஆதிசேடன் மேலுள்ள.

313. வையம் - பூமியை. வைகறைவாய் - விடியற்காலையில். உய்ய - யான் பிழைக்கும்படி.

314. தணியும் தகைத்தோ - குறையும் தன்மையை உடையதோ. தமியன் மால் என்று - வேறு துணையில்லாத என்னுடைய காமமயக்கம் என்று சொல்லி. பாரா - பார்த்து. அணிய — அண்மையில் தோன்றிய.

(பி - ம்) 'பணியுங் கொடியிடையை'

315. உரு தந்த - அச்சத்தைத் தந்த. தப்பா வருத்தம் - நீங்காத வருத்தத்தை.

(பி - ம்) 'ளொன்றினையுந் தப்பா' 'திருத்தந்த'

315-6. தடந்தோளும் - விசாலமான தோளையும்.

316. துணைவியரில் - தேவியரைப்போல; தேவியர் பூமிதேவியும் திருமகளும். நாளும் பிரியாமை - ஒருநாளும் பிரியாத தன்மையை. நல்கினன் - கொடுத்தான். மீள - வேறு.

317. கண்டன் - சோழன். திளைப்பாள் - இடைவிடாது அனுபவிப்பாள்.

(பி - ம்) 'பேராகத் திருமகள்' 'இருநிலமும்'

318. தாளா லளந்து தரும்பெரியோன் ருதகித்
தோளா லளந்த துணைமுலையா—ளுளும்

319. திரையர மாதருஞ் சேவிப்பாண் மேரு
வரையர மாதரின் வாய்ப்பாள்—கரையில்

320. விருப்பவனி கூர வருகின்ற மீளி
திருப்பவனி முன்விரைந்து செல்வா—ளுருப்ப

321. அணந்த பணிவலைய வண்ணன் முதனுள்
மணந்த மணச்செவ்வி வாய்ப்பக்—கொணர்ந்தணிந்த

322. சூடா மணியும் பணிவளையுஞ் சூடகமும்
கோடா மணிமகர குண்டலமும்—ஆடிய

323. சச்சையு மாலையு மாரமுந் தாமமும்
கச்சையு மேகலையுங் காஞ்சியும்—பச்சென்ற

---

318. தாதகித் தோளால் - ஆத்திமாலையை யணிந்த தோள்களால்.

(பி - ம்) 'ஞங்கிய' 'தோளால் வளர்ந்த'

319. திரையரமாதர் — நீரரமகளிர். கரையில் - எல்லையில்லாத.

(பி - ம்) 'மாதரும்' 'மாதருள்'

320. விருப்பு - விருப்பம். அவனி கூர - பூமியிலுள்ள மக்கள் மிக அடையும்படி. மீளி - தலைவன். உருப்ப - கோபிப்ப.

321. அணந்த -'மேல் நோக்கிய ; படத்தையுடைய. பணிவலைய அண்ணல் — பாம்பைப் போன்ற வாகுவலயத்தை யணிந்த சோழன். செவ்வி - அழகு.

(பி - ம்) 'ளுருப்ப தணந்த' 'அணிந்தபணி'

322. சூடாமணி - தலையிலணியும் மணி. பணிவளை - பாப்புச்சுருள் என்னும் ஆபரணம் ; 219. சூடகம் - கைவளை.

(பி - ம்) 'கோடாழ் முதுமகர'

323. சச்சை — சந்தனம். ஆரம் - முத்துமாலை. காஞ்சி - மகளிர் இடையிலணியும் எழுவடமான ஓரணி.

(பி - ம்) 'பச்சை நிறப்'

324. பட்டுங் குறங்கணியும் பட்டிகையு நூபுரமும்
கட்டுங் கனவயிரக் காறையும்—இட்ட

325. திலகமும் மான்மதமுஞ் செஞ்சாந்து மெல்லா
உலகமுந் தோற்ற முருவும்—கலகமும்

326. மாரனுந் தானும் வருவாளை மன்னரில்
வீரனுங் காணு வெருவராப்—பாரனைத்தும்

327. தேறுந் திருவைத் திருவவ தாரங்கள்
தோறும் பிரியாத் தொடர்பாலும்—ஏறுங்கண்

328. வாளாலும் வார்புருவ வில்லாலும் வாங்கமைத்
தோளாலு மீளத் துவக்குண்டு—நீளிய

329. மைவிடா நோக்கி திருக்கைம் மலரணைக்
கைவிடா வார்வங் கடைப்பிடித்துத்—தெய்வப்

---

324. குறங்கணி - குறங்குசெறியென்னும் ஆபரணம். பட்டிகை - அரைப்பட்டிகை. நூபுரம் - சிலம்பு. காறை - ஒருவகைக் கழுத்தணி.

325. திலகம் - நெற்றிப் பொட்டு. மான்மதம் - கஸ்தூரி.

325-6. கலகமும் மாரனும்: "கலக மாரன்வெறு மொருவ னுலகு களவு போக" (தக்க. 25.)

326. காணு - கண்டு. வெருவரா - அச்சங்கொண்டு.

327. தேறும் - தெளிகின்ற.

(பி - ம்) 'தொடர்பாலும் வேறுங்கண்'

328. வார் - நீட்சி. வாங்கு அமைத்தோள் - வளைந்த மூங்கிலைப் போன்ற தோள். மீளத் துவக்குண்டு - மறுபடியும் கட்டப்பட்டு. நீளிய - நீண்ட.

329. நோக்கி - நோக்கத்தையுடைய தெரிவை. திருக்கை மலரணை - திருக்கைம் மலராகிய அணையை. கைவிடா - நீங்காத. ஆர்வம் - ஆசை.

(பி - ம்) 'வைவிடா நோக்கி' 'மலரிணைக்' 'கடைபிடித்துச் செய்ய'

330. புவனி விலையாய பொற்றுகிற் கெல்லாம்
அவனி முழுதுமளித் தான்போற்—கவினிய

331. அற்புத மாலை யணியப் பணிசெய்யுங்
கற்பக மொன்று கடைக்கணித்தான்—பொற்படிக்குப்

332. பாதங்க ளாதி முடியளவும் பாரிப்ப
மாதங்க ராசிதிரு வாய்மலர்ந்தான்—ஓதி

333. முடிக்குத் தலைக்கோலம் போல்வன முத்தின்
படிக்குச் சலாபம் பணித்தான்—வடிப்பலகை

334. அச்சிரா பரண மனைத்திற்குந் தன்வட
வச்சிரா கரமே வழங்கினான்—பச்சை

335. மணிக்குத் தலையாய மாணிக்க ரத்னப்
பணிக்கு த்ரிகூடம் பணித்தான்—தணிப்பில்

329-30. தெய்வப் புவனி - தெய்வத்தன்மையுள்ள பூமி; "தெய்வப் பூதலந் தன்னில்", "தெய்வப் பொன்னி நாட்டுவமை வைப்பை" (கம்ப. I. நாட்டுப். 20; 6. மருத்துமலை. 58.) அவனி - பூமி.

(பி - ம்) 'புயவ னயவிலையன் போற்றுகின்ற தெல்லாம்'

331. பணி செய்யும் - கட்டளைகளைச் செய்யும். பொற்படிக்கு - பொன் ஆபரணங்களுக்கு.

332. பாரிப்ப - நிறைய அணிந்து கொள்ள. மாதங்கராசி - பொற் குவியலை. ஓதி - கூந்தலையுடைய.

333. முடிக்கு - தலைக்கு. தலைக்கோலம் - ஸ்ரீதேவி என்னும் ஆபரணம். முத்தின்படி - முத்தால் செய்யப்பட்ட ஆபரணம். சலாபம் - முத்துக் குளிக்குமிடம்; "முத்துச், சலாப முழுதும் பொறையர் சாலையொடு கொண்டாய்" (குலோத். பிள்ளைத். 91.)

334. சிராபரணம் - தலையிலணியும் ஆபரணங்கள். வட வச்சிராகரம் - வடக்கேயுள்ள வயிராகர மென்னும் மலை; இங்கு வயிரச் சுரங்கம் இருந்தது. இதைச் சோழன் வென்றது; கலிங்கத். அவதாரம்: 21.

335. த்ரிகூடம் - இலங்கையிலுள்ள ஒரு மலை; குலோத். உலா. 145, 377.

(பி - ம்) 'பிணிப்பில்'

336. பெரும்பே ருவகைய ளாகிப் பெருமாள்
விரும்பேர் மலர்க்கண்ணி மீண்டாள்—பெரும்போர்

337. வெருவரும் பார்வேந்தர் வேந்தனைப் போற்றும்
பொருநரும் பாணரும் புக்கார்—தெரிவைகருப்

338. பாடிக் குழலூதிப் பாம்பின் படக்கூத்தும்
ஆடிக் குடக்கூத்து மாடினர்—பாடியில்

339. ஆனிரையு மாமா னிரையும்போ லானுலகிற்
கோநிரையு மீளக் குழாங்கொண்டு—மீனிரையின்

